# எழுநா

மே
2025




இதழ் 34

# எழுநா

இதழ் 34

## ஆசிரியர் குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**விஜயதர்சினி தினேஸ்**
முகாமைத்துவம்/ கற்கைவட்டம்/ நிகழ்வுகள்/ விநியோகம்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
சஞ்சிகை/நகல் திருத்தம்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம்/ பரவலாக்கம்

**தனுஜன் சுந்தரலிங்கம்**
ஆவணப்படத் திரையொளி ஆக்கம்

**கௌரிகாந்தன் சித்தாந்தன்**
நூல்/ மெய்ப்புப்பார்ப்பு

## தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**றினோசன் சுசிமன்**
அட்டை வடிவமைப்பு

**பழனிவேலன் ஞானேசகர்**
அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புபார்ப்பு

**பவித்ரா இரமணீகரசர்மா**
குரல் வடிவம்

**மதுஹரி சத்தியலோகநாதன்**
குரல் வடிவம்

## வளவாளர்கள்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு

**தங்கராஜா பிரபாகரன்**
மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**சிவகுமார் சிவகஜன்**
கற்கை வட்டம்

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள்

**கணபதிப்பிள்ளை சர்வானந்தா**
விநியோகம்

## நிதிப்பங்களிப்பாளர்கள்

**கனக சுகுமார்**
நூல் தயாரிப்பு / உசாத்துணை சேவை

**கதிர் சயந்தன்**
ஆவணப்படம்

**நடராஜா முரளிதரன்**
ஆவணப்படம்

## ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு

**தமிழ் ஊடகத் திரட்டு**
ஆவணப்படம்

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

## கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**நடராஜா முரளிதரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

## அச்சுப்பதித்து விநியோகிப்போர்

**நாளை வெளியீடு**
கனடா

## கொற்றம் ஆய்வு துறைசார் ஆலோசகர் குழு

**ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

## அட்டைப்படம்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்: காயமடைந்த சிறுவனைப் பராமரிக்கும் பெண்.

Artist: Sahithyan Thilipkumar

## தொடர்பிற்கு

**மின்னஞ்சல்:**
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

**முகவரி:**
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி

## FOLLOW

எழுநா

- https://ezhunaonline.com/
- https://youtube.com/user/Ezhuna
- https://www.facebook.com/Ezhunax/
- https://twitter.com/Ezhuna
- https://www.instagram.com/ezhunaa/
- https://www.tiktok.com/@ezhuna
- https://open.spotify.com/show/4Xn
- https://tinyurl.com/ykj8ru3f
- https://tinyurl.com/3zfkzxme
- https://tinyurl.com/2p83m8zj
- https://pca.st/swr6zomk
- https://radiopublic.com/6rX3L4
- https://tinyurl.com/bdeky92h
- https://anchor.fm/ezhuna
- https://www.clubhouse.com/club/ezhuna
- https://www.magzter.com/publishers/

# உள்ளே...


சுதந்திரத்திற்கு முந்திய அரை நூற்றாண்டு வரலாற்றில் (1900–1948) இலங்கையின் சட்ட சபைகளில் அரசியல் பிரதிநிதித்துவம்– பகுதி 1,2 — 03
- ஆங்கில மூலம்: குமாரி ஜெயவர்த்தன
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

கரும்புக்காரன் எனும் தெய்வமும் வழிபாட்டுமுறைகளும் — 17
- தி. செல்வமனோகரன்

இந்தியா – இலங்கை ஒப்பந்தம்: தோல்வியடைந்த ஒப்பந்தமும் கற்றுக்கொள்ளாத பாடமும் — 26
- எம். எம். ஜெயசீலன்

பேரரசும் பெண் விடுதலையும் — 37
- கார்த்திகேசு இந்திரபாலா

வரலாறு மற்றும் இலக்கியப் பதிவுகளில் நாகநாடும் நாகர்களும் – பகுதி 1,2 — 42
- சிவ தியாகராஜா

பௌத்தமத மறுமலர்ச்சியின் இரண்டாம் காலகட்டம்: 1883 – 1897 — 61
- பி. ஏ. காதர்

தமிழர்களும் தேசமும்: இந்திய – இலங்கைத் தமிழர்களின் தேசிய அடையாள அரசியல் மீதான ஒப்பீட்டு ஆய்வு – பகுதி 2 — 71
-சிவராஜா ரூபன்

அரைகுறை மனித உரிமை நடவடிக்கைகள்: போருக்குப் பிந்தையகாலத்தில் பொறுப்புக்கூறலைத் தவிர்த்தல் – இலங்கை – பகுதி 1 — 80
-ஆங்கிலமூலம்: கேட் குரோனின் - ஃபர்மான்
தமிழில்: வின்சென்ட் போல் சந்தியாப்பிள்ளை

காலாவதியாகும் கல்வி : சாண் ஏறி முழஞ் சறுக்குதல் — 87
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

இலங்கையில் பௌத்தம்: தத்துவமும் நடைமுறையும் — 97
- கந்தையா சண்முகலிங்கம்

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண நடைமுறைகள் – பகுதி 3 — 102
- எம். ஐ. எம். சாக்கீர்

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் – பண்டத்தரிப்பு — 108
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அரசியல் மறுசீரமைப்புகளும்: சிறுபான்மை மக்களை மையப்படுத்தி ஒரு சில குறிப்புகள் — 113
- இராமசாமி ரமேஷ்

தமிழ்ச் சமூகத்தின் அடிக்கட்டுமானங்களும் கருத்தியலும் — 121
- சின்னையா மௌனகுரு

சென்ற காலத்தின் மீதான நாட்டமும் தேடலும் — 128
- நடேசன் இரவீந்திரன்

1833 – 1921 வரையான காலகட்டம்: தமிழ்த் தலைவர்களும் இலங்கை தேசிய காங்கிரசும் — 136
- சி. அ. யோதிலிங்கம்

'வன்னி' (Vanni: A Family Struggle through the Sri Lankan Conflict): கிராபிக் நாவலை முன்வைத்து — 141
- இளங்கோ

BBK: உலகிற்குக் கணக்கெழுதும் யாழ்ப்பாணத்துக் கணக்காளர்கள் — 145
- ஆங்கில மூலம்: ஜெகன் அருளையா
தமிழில்: த. சிவதாசன்

காமன்கூத்து: பன்முக நோக்கில் ஓர் ஆய்வு — 151
- அருணாசலம் லெட்சுமணன்

மூலோபாயப் பகுதி பற்றிய அடிப்படைத் தகவல்கள் – பகுதி 1,2 — 161
- சுப்ரமணியம் சிவகுமார்

இலங்கையில் தமிழ்க்குயர் சமூகத்தால் எதிர்கொள்ளப்படும் மருத்துவ மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் — 176
- அனுதர்சி கபிலன்

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பொதுவசதிச் சேவைகளில் குடிநீர் வழங்கல் சேவை — 180
- அமரசிங்கம் கேதீஸ்வரன்

**கந்தையா சண்முகலிங்கம்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# சுதந்திரத்திற்கு முந்திய அரைநூற்றாண்டு வரலாற்றில் (1900–1948) இலங்கையின் சட்டசபைகளில் அரசியல் பிரதிநிதித்துவம்

பகுதி 1

*ஆங்கில மூலம்: குமாரி ஜெயவர்த்தன*

'இலங்கையின் அரசியல் 1981 – 1900: பன்முகநோக்கு' என்னும் இத்தொடர் 1981 முதல் 1900 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

இத்தமிழ்க்கட்டுரை குமாரி ஜயவர்த்தன அவர்களின் ‘*Nobodies to Somebodies: The Rise of the Colonial Bourgeoisie in Sri Lanka*’ என்னும் நூலின் 19 ஆவது அத்தியாயமாக அமையும் கட்டுரையின் தமிழாக்கமாகும். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலத்தில் சட்டசபைப் பிரதிநிதித்துவம் இன அடிப்படையிலான நியமனமுறைப் பிரதிநிதித்துவமாக (Communal Representation) இருந்தது. 1911 ஆம் ஆண்டில் தேர்தல் மூலம் சட்ட சபைக்கு ஓர் உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார். இத்தெரிவு மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை அடிப்படையில் இடம்பெற்றது. 1920 க்கும் 1931 க்கும் இடைப்பட்ட காலத்தில் சட்ட சபைகளில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டது. 1931 இல் சர்வசன வாக்குரிமை புகுத்தப்பட்டது. அவ்வாண்டில் பிரதேச அடிப்படையிலான பிரதிநிதித்துவமுறை (Territorial Representation) இலங்கையில் அறிமுகமாயிற்று. இன அடிப்படையிலான நியமனப் பிரதிநிதித்துவ முறையிலிருந்து, சர்வசன வாக்குரிமையின் அடிப்படையிலான தேர்தல் முறைக்கு இலங்கை மாற்றம்பெற்றது. பிரதேச (Territory) அடிப்படையில் அமைந்த தேர்தல் அரசியல் (Electoral Politics) இலங்கை அரசியலில் பெருமாற்றங்களை ஏற்படுத்தியது. சட்டசபைகளின் அரசியல் பிரதிநிதித்துவ முறையில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்புலத்தில் 1900-1948 காலத்தின் இலங்கை அரசியலில் புகுந்த மாறுதல்களை குமாரி ஜயவர்த்தன அவர்கள் இக்கட்டுரையில் விரிவாக ஆராய்கிறார்.




**Image Source - www.goodreads.com**

## தேர்தல் சீர்திருத்தங்கள்

1920 ஆம் ஆண்டிலும் பின்னர் 1931 ஆம் ஆண்டிலும் இலங்கையில் சட்ட சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1920 இல் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையே இருந்தது. ஆனால் 1931 இல் சர்வசன வாக்குரிமை புகுத்தப்பட்டது. இவ்விரு தேர்தல் சீர்திருத்தங்களையும் இக்கட்டுரையில் ஆராயவுள்ளோம். 1930 களில் சர்வசன வாக்குரிமை புகுத்தப்பட்டதன் விளைவாக ஜனநாயக நடைமுறைகள் பரவலாக்கப்பட்டன. ஒருவரின் பொருளாதார அந்தஸ்து, அவரின் இனக்குழுமம், கல்வி, சாதி, சமயம், பால் ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளாது; சமத்துவ அடிப்படையில் அரசியல் அரங்கில் பங்கேற்பதற்கு சர்வசன வாக்குரிமை வழிவகுக்கும் எனக் கருதப்பட்டது. ஆயினும் ஜனநாயகமயமாதல் செயல்முறை, சிறுபான்மை இனக்குழுமங்களையும் கொவிகம சாதியில்லாத பிற சாதியினரையும் அரசியல் விளிம்புநிலைக்குத் தள்ளுவதற்குக் காரணமாயிற்று. இவ்வாறான எதிர்மறை விளைவு ஏற்பட்டபோதும், சில முற்போக்காளர்களும், பெண்கள் சிலரும் சட்ட சபைக்குத் தெரிவு செய்யப்படும் நல்விளைவும் சர்வசன வாக்குரிமையின் பயனால் விளைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1919 ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரஸும், 1920 களின் சட்ட சபைகளும் இலங்கையின் பல இனக்குழுமங்களையும், பல்வேறு சாதிகளையும் பிரதிநிதித்துவம் செய்தன. ஆனால் 1931 இல் சர்வசன வாக்குரிமை புகுத்தப்பட்டபின் உருவான சட்டசபைகளின் பிரதிநிதித்துவம் முக்கியமான வேறுபாட்டை

உடையதாக இருந்தது. 1931 இன் பிந்திய சட்டசபைகளிலும் மந்திரிசபையிலும் சிங்கள கொய்கம சாதியினரின் ஆதிக்கம் மேலோங்கியது.

1917 ஆம் ஆண்டின் மந்திரிசபையிலும் கொய்கம சாதி மேலாதிக்கம் வெளிப்பட்டது. நில உடைமை, முதலாளித்துவம் ஆகிய இரு தளங்களில் தம் பொருளாதார வேர்களைக் கொண்டிருந்த நபர்கள் 19 ஆம் நூற்றாண்டு முதலாக காலனித்துவ அரசியல் களத்தில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டதோடு, 20 ஆம் நூற்றாண்டிலும், பின்காலனித்துவ அரசியல் கட்டத்திலும் தம் பலத்தை உறுதிப்படுத்தினர். இதனை அடுத்து விளக்குவோம்.

19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் அரசியல் பிரதிநிதித்துவம் விசாலமடையலாயிற்று. இலங்கைத் தேசியக் கழகம் போன்ற பல அரசியல் அமைப்புகள் செயற்பட்டன. சிலாபம் கழகம் (Chilaw Association) என்ற பிராந்திய அரசியல் கழகம் ஒன்றும் சிலாபம் பகுதியை மையமாகக் கொண்டு இயங்கியது. சிலாபம் கழகத்தில் சி.ஈ. கொறயா, விக்டர் கொறயா என்ற இரு சகோதரர்கள் முக்கிய பங்கேற்றனர். இவர்கள் இருவரும் பெரும் செல்வந்தர்களாவர். சிலாபம் கழகத்தைச் சேர்ந்த செல்வாக்குமிக்க குழுவினர் பல கோரிக்கைகளை முன்வைத்துப் பிரசார இயக்கம் நடத்தினர். 1877 ஆம் ஆண்டின் தரிசு நிலச் சட்டத்திற்கு எதிர்ப்பு, புத்தளம் வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல், சட்டசபைக்கு ஆட்களைத் தேர்தல் முறைப்படி தெரிவு செய்தல் என்பன இவர்களின் பிரசார நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்ற முக்கிய விடயங்களாகும் (றொபேர்ட்ஸ், 1979:149 - 233). இவ்வாறாக அரசியல் சீர்திருத்தப் பிரசாரத்தில் ஈடுபட்ட கழகங்களும் அமைப்புகளும் 1919 ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரஸில் ஒன்று சேர்ந்தன.

அரசியல் சீர்திருத்தம் கோரிய இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைவராகப் பொன்னம்பலம் அருணாசலம் விளங்கினார். காங்கிரஸ் 50 உறுப்பினர் கொண்ட சட்டசபை அமைக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. சட்டசபை உறுப்பினர்களில் ஐந்தில் நான்கு பங்கினர் தெரிவு செய்யப்பட்டோராயும், மீதி ஐந்தில் ஒரு பங்கினர் நியமனம் செய்யப்பட்டோராயும் இருக்க வேண்டும் எனக் காங்கிரஸ் கோரியது (வாக்குரிமை விரிவாக்கப்பட வேண்டும். பெண்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வாக்குரிமை வேண்டும் என்று காங்கிரஸ் கருதியது). நிறைவேற்றுச் சபையில் (Executive Council) அரைப்பங்கினர், சட்டசபையின் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்பட வேண்டும், இலங்கையின் ஆளுநர் பிரித்தானிய பாராளுமன்ற அனுபவத்தை உடையவராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கைகளையும் காங்கிரஸ் முன்வைத்தது. பிரித்தானிய ஆட்சியாளர்கள் 1920 ஆம் ஆண்டில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பற்றி அறிவித்தனர். இதன்படி 37 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் 16 பேர் தெரிவு செய்யப்பட்டோராய் இருப்பர் என்றும், 14 உத்தியோகத்தர்களும், 7 நியமன உறுப்பினர்களும் இச்சபையில் இடம்பெறுவர் என்றும் அறிவிக்கப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையின்படி (ஆண்கள் மட்டும்), தேர்தல் மூலம் 16 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். ஆளுநர் நியமிக்கும் 7 உறுப்பினர்களும் சிறுபான்மையினரதும், ஐரோப்பியர்களதும் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வர் என்றும் கூறப்பட்டது. இவ்விதமாக சட்டசபையில் அரசாங்கத்திற்குப் பெரும்பான்மை பலம் இருப்பதற்கு வழி செய்யப்பட்டது. அத்தோடு நிர்வாக சபையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இடம் பெறமாட்டார்கள் என்பதையும் 1920 இன் அரசியல் யாப்பு உறுதி செய்தது.

இலங்கைத் தேசிய காங்கிரஸ், யாப்புச் சீர்திருத்தம் பிற்போக்கானது, அது போதியதல்ல என்று கூறியது. அருணாசலம் தலைமையிலான காங்கிரஸின் தீவிரவாதிகள் புதிய சட்டசபையைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கூறினர். ஆளுநர் மனிங் பழமைவாதிகளான காங்கிரஸ்காரர்களை சட்ட சபைச் சீர்திருத்தத்தை ஏற்க வேண்டும், ஒத்துழைக்க வேண்டும் எனத் தூண்டுதல் கொடுத்தார். குறிப்பாக ஜேம்ஸ் பீரிஸை ஆளுநர் தம்வசமாக்கிக் கொண்டார். சில ஆண்டுகளுக்குள் மேலும் பல சீர்திருத்தங்கள் செய்யப்படும் என்றும், ஆளுநர்

நம்பிக்கையளித்தார். 192-324 ஆம் ஆண்டுகளில் ஆளுநர் குறிப்பிட்ட மேலதிக சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 37 பேர் கொண்ட சட்டசபையில் 23 பேர் தெரிவு செய்யப்பட்டோராய் இருப்பர் என்பதே பிரதான சீர்திருத்தம். வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்டதாய் பழைய முறைப்படி அமைந்தது. சில தொகுதிகள் இன அடிப்படையில் அமைந்தன. நியமன உறுப்பினர்களும் சட்டசபையில் இடம்பெற்றனர். சட்ட சபையில் அங்கம் வகிக்கும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 12 ஆகக் குறைக்கப்பட்டது. இருப்பினும் ஆளுநருக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் (Reserved Powers) இருந்தன. அதனைவிட ஏதாவது ஒரு விடயத்தை அதிமுக்கியத்துவம் உடையது என ஆளுநர் கருதும்போது, உத்தியோகத்தர்களின் வாக்குகளை மட்டுமே அவ்விடயத்தினை முடிவு செய்வதற்குக் கணக்கில் கொள்ளலாம் என்ற விதி புகுத்தப்பட்டது.

மேலே குறிப்பிட்டவாறு சட்டசபையின் மீது அரசாங்கம் இறுக்கமான பிடியை வைத்துக்கொண்டது. ஆயினும் மனிங் சீர்திருத்தங்கள் இலங்கை அரசியலில் இரு போக்குகள் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தன. அரசியலில் தீவிரவாதிகளாய் இருந்தோர் விளிம்புநிலைக்குத் தள்ளப்படுதல் இச்சீர்திருத்தங்களின் முதலாவது விளைவாகும்.

இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்த தீவிரவாதப் போக்குடையோர் தோற்கடிக்கப்பட்டனர். 1920ஆம் ஆண்டில் காங்கிரஸின் பழமைவாதிகளோடு சமரசம் செய்து கொள்ளப்பட்டது. இதனால் காங்கிரஸ், சுதந்திரத்திற்கான வெகுஜன இயக்கம் ஒன்றை முன்னெடுப்பதற்கு முயற்சி செய்யவில்லை. இந்தியாவைப் போன்று வெகுஜனங்களை அணிதிரட்டி ஒரு தேசிய இயக்கத்தை வழிநடத்துவதை காங்கிரஸ் கைவிட்டது. சட்ட சபையில் தீவரவாதப் பிரிவினரின் குரல் கேட்கவில்லை. அவர்கள் சிறுபான்மையினராகச் செயலிழந்தனர். இரண்டாவது விளைவு, சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் குறைந்ததாகும். கொழும்பு நகரின் ஏதாவது ஒரு தொகுதியில் பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்று அருணாசலம் எதிர்பார்த்தார். காங்கிரஸ் அதனை அவருக்கு வழங்கவில்லை. அதனால் அருணாசலம் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொண்டார். அத்தோடு 1924 இல் அவரது மரணமும் சம்பவித்தது.[1]

1920 இன் அரசியல் யாப்பு மாற்றங்கள், வாக்குரிமையை ஒரு குறுகிய பிரிவினருக்கு வழங்குவதை அடிப்படையாகக் கொண்டது. இக்காரணத்தால் முதலாளித்துவ வகுப்பு, சட்டசபையில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்தி உள்ளூர் அரசியலில் செல்வாக்குப்பெற்றது. முதலாளித்துவ வகுப்பு தனது அதிகாரத்தை நிலைபேறுடையதாக வலுப்படுத்திக் கொண்டதுமல்லாது, அதன் பிரதிநிதிகள் தாமே நாட்டு மக்களின் தலைவர்கள் என்ற தோரணையில் நடந்து கொண்டனர். 1931 ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டபோது இலங்கையின் தொழிற்கட்சியும், அக்கட்சிக்கு ஆதரவு கொடுத்த பிரித்தானிய தொழிற்கட்சியும், இலங்கை அரசியலில் ஆதிக்கம் பெற்ற சிறிய குழுவின் அதிகாரத்தளத்தை உடைக்க முடியும் என எதிர்பார்த்தன. ஆனால் நிலைமை சிறிதேனும் மாற்றமடையவில்லை. ஆழவேரூன்றிய நலன்களையுடைய குடும்பங்கள் 1930 களின் மந்தகாலப் பொருளாதார நிலையிலும் நலிந்து போகாமல் தப்பிப்பிழைத்து, இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் தம் நிலையை மேலும் உயர்த்திக்கொண்டு முன்னேறின. சர்வசன வாக்குரிமையை நன்கு பயன்படுத்திக்கொண்ட இந்தக் குடும்பங்கள் 1947 வரையான சட்டசபை அரசியலில் தமது அதிகாரத்தைச் செலுத்தியதோடு, அதற்குப் பின்னரும் அரசியல் அதிகாரம் உடையனவாய் விளங்கின. 19 ஆம் நூற்றாண்டில் எக்குடும்பங்கள் செல்வத்தில் உயர்ந்து, புகழின் உச்சத்திற்குச் சென்றனவோ, அக்குடும்பங்கள் அரசியல் அதிகாரத்தைத் தமதாக்கிக் கொண்டன. இதற்குச் சில விதிவிலக்கான உதாரணங்களும் உள்ளன என்பது உண்மையே. 19 ஆம் நூற்றாண்டின் அறியப்பட்டோரும் (Somebodies), 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அநாமதேயங்களாக இருந்து பின்னர் அறியப்பட்டோர் ஆனவர்களும், முன்னையோருடன் சேர்ந்து தாமும் மக்கள் தலைவர்களே என்று கூறிக் கொள்வதையும் காணமுடிந்தது.
தீவிரவாதிகளான அநாமதேயர்கள் 1930 களில் இடதுசாரிக் கட்சிகள் ஊடாக அரசியல் அரங்கிற்குள் நுழைவதையும் காண்கிறோம் (அமரசிங்க, 1999).

### நில உடைமை வர்க்கத்தினதும் வர்த்தக வர்க்கத்தினதும் ஆதிக்கம் மேலோங்குதல்

*1921 - 24 சட்டசபையிலும், 1925 - 30 சட்டசபையிலும், 19 ஆம் நூற்றாண்டில் எழுச்சிபெற்ற பணக்காரக் குடும்பங்களதும் நில உடைமையாளர்களதும் வாரிசுகள் தமது அரசியல் ஆதிக்கத்தைப் பலப்படுத்தினர். இக்குடும்பங்களின் பிரமுகர்களது மகன்மாரதும், மருமக்கள்மாரதும் குரல் சட்டசபையில் ஓங்கி ஒலிக்கலாயிற்று. இவர்களில் பலர் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாக இருந்தனர்.[2] ஜேம்ஸ் பீரிஸ் (கொழும்பு நகரம்), யாக்கோப் டி மெல் அவர்களின் மருமகனாவார். சி.எச்.ஸட். பெர்னாண்டோ (வடமேற்கு பிரிவு), சி.எம். பெர்னாண்டோவின் மகன் ஆவார். அத்தோடு இவர் சாள்ஸ் டி சொய்சாவின் பேரனும், பஸ்ரியன் பெர்னாண்டோவின் மருமகனும் என்பதும் குறிப்பிடத்தக்கது. டி.எஸ். சேனநாயக்க (நீர்கொழும்பு), டொன் ஸ்பேட்டர் சேனநாயக்கவின் புத்திரராவர். டாக்டர் டபிள்யூ.ஏ.டி. சில்வா (மத்திய மாகாணம்), சைமன் பெர்னாண்டோ சந்திரசேகரவின் மருமகனாவார். ஏ.சி.(ஜெராட்) விஜயக்கோன் (மத்திய மாகாணம்), என்.டி.பி. சில்வாவின் மருமகனாவார். சி.ஈ. கொறயாவும் (வடமேற்கு மாகாணம்), அவரது சகோதரர் விக்டர் கொறயாவும் (கொழும்பு வடக்கு), செல்வாக்குமிக்க கொறயா குடும்ப வழித்தோன்றல்கள்.*

*டபிள்யூ.எம். ராஜபக்ச (மேற்கு மாகாணம்), ஜே.டி.எஸ். ராஜபக்ச என்ற நில உடைமையாளரின் புதல்வராவார். டி.எச். கொத்தலாவல (ஊவா மாகாணம்), முகாந்திரம் டி.சி. கொத்தலாவலவின் மகன் ஆவார். பி.டி. எஸ். விக்கிரமநாயக்க (ஹம்பாந்தோட்ட), பெரும் நில உடைமையாளராக விளங்கியவர். மேற்குறித்த தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை விட, சாள்ஸ் டி. சொய்சாவின் மருமகனான மார்க்கஸ் பெர்னாண்டோ, யாக்கோப் டி மெல் அவர்களின் மகனான எச். எல் (ஹென்றி) டி மெல் என்ற இருவர் சட்ட சபையின் நியமன உறுப்பினர்கள் ஆயினர் (டி சில்வா, 1979). 1930 - 31 காலத்தில் சட்ட சபையின் உறுப்பினராக இருந்த டாக்டர் ஈ.ஏ. குரே (கொழும்பு தெற்கு), புகழ்மிக்க ஒரு குடும்பத்தில் திருமணம் செய்துகொண்டார். இவரின் மனைவி பேர்ணிஸ் பீரிஸ், 19 ஆம் நூற்றாண்டில் பிரசித்திபெற்ற சாராயக் குத்தகைச் சிண்டிகேட்டின் பங்காளரும், இலங்கையின் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவருமான ஹன்வடுகே எச்.ஜே. பீரிஸ் அவர்களின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது. ஹன்வடுகே எச்.ஜே. பீரிஸ் அவர்களின் விதவை மனைவி 1927 இல் 4,234 ஏக்கர் தென்னந் தோட்டங்களின் உடைமையாளராக இருந்தார் (றொபேர்ட்ஸ், 1979). 1930 களில் தமது அரசியல் பிரசாரங்களின் போது குரே தமக்குக் கிடைத்த சீதனத்தைக்கொண்டு ஆடம்பரமாகச் செலவு செய்தார்.*

*மேற்குறித்த சட்டசபை உறுப்பினர்களில் பலர் பெரும் நில உடைமையாளர்கள் என்பதும், அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் தமது பொருளாதார வளங்களையும் நலன்களையும் வைத்திருந்தார்களோ, அந்தந்தப் பகுதிகளின் பிரதிநிதிகளாகச் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்ததும் கவனிக்கப்பட வேண்டிய விடயம். உதாரணமாக சி.எச்.ஸட். பெர்னாண்டோவின் குடும்பம், வடமேற்கு மாகாணத்தில் பெரும் தென்னந் தோட்டங்களை உடைமையாகக் கொண்டிருந்தது. டி.எஸ். சேனநாயக்கவின் தந்தையார் நீர்கொழும்பில் குத்தகைக்காரராகவும், அப்பகுதியின் நில உடைமையாராகவும் இருந்தார்.*

*சி.ரி. கொறயாவிற்கு சிலாபம் பகுதியில் தென்னந் தோட்டங்கள் இருந்தன. நீர்கொழும்பைச் சேர்ந்த டபிள்யூ.எம். ராஜபக்ச அப்பகுதியில் பெரும் தென்னந் தோட்டங்களையும் கறுவாத் தோட்டங்களையும் வைத்திருந்தார். டி.எச். கொத்தலாவல (ஊவா பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்தவர்) ஊவா பகுதியின் மிகப்பெரிய நில உடைமையாளராவார். அவரின் தந்தையார் அப்பகுதியில் ஆயக் குத்தகை மூலம் பெரும் செல்வம் சேர்த்தவர்.[3]*

*1920 சட்டசபையின் முக்கிய உறுப்பினர்களின் சொத்துடைமை விவரம் கீழே தரப்பட்டுள்ளது. பெருந்தோட்டங்கள், பயிர்ச்செய்கைக் காணிகள், தரிசு நிலங்கள் என்ற வகையில் இச்சொத்துகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வட்டவணை றொபர்ட்ஸ் (1979), பதிவு செய்துள்ள தரவுகளில் இருந்து தயாரிக்கப்பட்டது.*

| | மொத்த விஸ்தீரணம் (ஏக்கரில்) | தெங்கு | ரப்பர் | தேயிலை | ஏனைய நெற்காணி நிலங்கள் |
|---|---|---|---|---|---|
| என்.எச்.எம். அப்துல் காதர் | 521 | – | – | 149 | - |
| சி.ஈ. கொறயா | 659 | 530 | – | – | - |
| ஹென்றி டி மெல் | 7254 | 3973 | 895 | – | 83 |
| டாக்டர்டபிள்யூ.ஏ.டி. சில்வா | 3687 | 1131 | 500 | 275 | 600 |
| சி.எச்.ஸட். பெர்ணாண்டோ | 600 | 300 | 300 | – | – |
| மார்கஸ் பெர்ணாண்டோ | 3942 | 1545 | 1399 | – | 15 |
| ஓ.ஐ.எம். மாக்கன் மாக்கர் | 731 | 246 | 390 | – | – |
| டி.எஸ். சேனநாயக்க | 1414 | 751 | 317 | – | 95 |
| ஜேம்ஸ் பீரிஸ் | 1163 | 538 | 380 | 55 | – |
| டபிள்யூ.எம். ராஜபக்ச | 1664 | 1664 | – | – | – |
| ஏ.சி. ஜெராட் விஜயக்கோன் | 596 | 429 | 126 | – | 29 |
| வி.டி.எஸ். விக்கிரமநாயக்க | 525 | 350 | – | – | – |

றொபேட்ஸ் அவர்களின் பட்டியலில் இடம்பெறாத நில உடைமையாளர்கள் பலரும் சட்டசபையில் உறுப்பினர்கள் ஆயினர். அவர்களின் பெயர்கள் வருமாறு: டாக்டர் ஈ.ஏ. குரே, டி.எச். கொத்தலாவல, ஜி.ஈ. மடவெல, பி.பி. ரம்புக்வெல, ஏ.எவ். மொலமுரே, ஏ.எச்.ஈ. மொலமுரே, ரி.பி. பானபொக்க (இளையவர்), பொராஸ்டர் ஒபயசேகர. இவர்களுள் இறுதியாகக் குறிப்பிட்ட பொராஸ்டர் ஒபயசேகரவின் தந்தை எஸ்.சி. ஒபயசேகர (1927 இல்) 2,276 ஏக்கர் காணியின் சொந்தக்காரராக இருந்தார் (மேலது).

சட்டசபையில் 1920 களில் உறுப்பினராகப் பதவி வகித்தோரில் பலர் பெரும் தனவந்தர்களான கராவ சாதிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். 19 ஆம் நூற்றாண்டில் சாமான்யர்களாக இருந்தவர்கள், சாராயக் குத்தகை, காரீயச் சுரங்கத் தொழில், பெருந்தோட்டங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்து உயர்நிலைக்கு வந்தனர். சாராயக் குத்தகையாளர்கள் வர்த்தகக் 'கார்ட்டல்'களை உருவாக்கினர். அத்தோடு திருமணத் தொடர்புகள் மூலம் குடும்ப கார்ட்டல்களையும் உருவாக்கினர். இருப்பினும் பல ஆண்டுகாலமாக இவர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் எட்டாக் கனியாகவே இருந்தது. இக்குறை இக்குடும்பங்களிலிருந்து தோன்றிய மகன்மாரும், மருமகன்மாரும் அடைந்த அரசியல் வெற்றியூடாக நிவர்த்தி செய்யப்பட்டது.

உதாரணங்கள் வருமாறு:

| சட்டசபை உறுப்பினர் | பெண் கொடுத்த நபர் |
|---|---|
| சி.எச். பெர்னாண்டோ | ஹெடிட்டிகன்டகே பெர்னாண்டோ |
| டாக்டர் டபிள்யூ.ஏ.டி. சில்வா | முத்துதந்திரிகே பெர்னாண்டோ |
| ஜேம்ஸ் பீரிஸ் | விதானலாகே டி மெல் |
| மார்க்கஸ் பெர்னாண்டோ | வறுஸகென்னடிகே சொய்சா |
| டாக்டர் ஈ.ஏ. குரே | ஹன்வடுகே பீரிஸ் |

இதனைவிட சாள்ஸ் டி சொய்சாவின் மருமகனும், அவரது பேரனும் சட்டசபை உறுப்பினர்களாய் இருந்தனர். யாக்கோப் டி மெல்லின் மகனும், மருமகனும் சட்டசபையில் இருந்தனர். சட்ட சபை உறுப்பினர்களாக இருந்த கராவ சாதிப் பிரமுகர்களில் பலர், ஒருவருக்கு ஒருவர் கிட்டிய உறவுக்காரர்களாயும் இருந்தனர். சி.எச்.ஸட். பெர்னாண்டோ, மார்க்கஸ் பெர்னாண்டோவின் சகோதரரின்

புதல்வராவார். ஜேம்ஸ் பீரிஸ், எச்.எல். டி மெல் என்ற இருவரும் திருமண வழியில் மைத்துனர்களாவர். கொய்கம சாதியின் புதுப்பணக்காரார்களும் இவ்வாறே 1920 களில் கிடைத்த ஆரம்ப வெற்றிகள் மூலம் அரசியல் பிரவேசம் செய்தனர். ஆட்டிகல, சேனநாயக்க, கொறயா, கொத்தலாவல, நாணயக்காரகே சில்வா என்பன இப்புதுப் பணக்காரக் குடும்பங்களாகும். ஒன்றோடொன்று உறவுப் பிணைப்புகளை உடைய இக்குடும்பங்களின் மகன்மாரும், மருமகன்மாரும் அரசியலில் பிரகாசிக்கத் தொடங்கினர். புகழ் பெற்ற முதலியார்கள் குழுமத்தின் அரசியல் அதிகாரமும் எஸ்.சி. ஒபயசேகரவின் மகன் பொரஸ்டர் ஒபயசேகர (தென்மாகாணம் - மத்தி), ஓ.சி. திலகரட்ண (தென் மாகாணம்) ஆகியோர் வழி தொடரலாயிற்று. சலாகமச் சாதியில் இருந்து டபிள்யூ.எம். ராஜபக்ச என்பவர் மட்டும் சட்ட சபையில் உறுப்புரிமை பெற்றார். இவர் நீர்கொழும்பின் புகழ்பெற்ற கத்தோலிக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர். கண்டியின் நிலப்பிரபுக் குடும்பங்களும் பிரதிநிதித்துவத்தைத் தேடிக்கொண்டன. அந்நிய வர்த்தக சமூகத்தினருக்கும், பெருந்தோட்ட உடைமையாளர்களுக்கும், ஆளுநர் உத்தியோக முறையிலான நியமனங்கள் மூலம் சட்டசபை உறுப்பினர் பதவிகளை வழங்கினார்.[4]



ரி.பி. ஜாயா
Image Source - www.flickr.com

1920 களின் சட்டசபையில் உயர்தொழில்களில் (Professions) இருந்தோர் பலர் முதற்தடவையாக உறுப்பினராவதையும், அவ்வழி அரசியலில் பிரவேசிப்பதையும் காண்கிறோம். 1927 ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைவராக இருந்தவரும் சட்டவாதியுமான ஈ. டபிள்யூ. பெரேரா, சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினரான சாதிகளின் உயர்வுக்காக உழைத்தவரும், கண்டியில் சட்டவாதியாகப் பணிபுரிந்தவரும், 1920 களில் தொழிற்சங்க இயக்கத் தலைவருமாக இருந்த ஜோர்ஜ். ஈ.டி. சில்வா, மலே சமூகத்தவரைச் சேர்ந்த கல்வியாளரும், முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்தியில் அக்கறைகொண்டு உழைத்தவருமான ரி.பி. ஜயா, தஞ்சாவூரில் இருந்து வந்தவரும், பத்திரிகையாளரும், 1920 களில் பெருந்தோட்டப் பகுதிகளிலும் நகரப் பகுதியிலும் தொழிற்சங்கங்களை ஒழுங்கமைத்தவருமான கோ. நடேசய்யர், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மதுவிலக்கு இயக்கத்தில் ஈடுபட்டவரும், பௌத்தர்களின் கல்வியில் காட்டிய ஈடுபாட்டால் புகழ்பெற்றவருமான டி.பி. ஜயதிலக, கல்வியாளரும், பின்னர் இலவசக் கல்வித்திட்டத்தை முன்னெடுத்தவருமான சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா ஆகியோர் சட்டசபை உறுப்பினர்களாக அரசியலுக்குள் நுழைந்த உயர்தொழில் வகுப்பினராவர். வடமத்திய மாகாணத்தில் அரசரங்க அதிபராக இருந்து அப்பகுதியின் ஏழை மக்களின் நன்மைக்காக உழைத்த முன்னாள் சிவில் சேவை அதிகாரியான எச்.ஆர். பிரீமன் என்ற பிரித்தானியரும் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். இவர்கள் சட்ட சபையில் சிறுபான்மையினராக இருந்தபோதும், அதில் அங்கம் வகித்த பழமைவாத நில உடைமையாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் மாறுபட்ட ஒரு போக்கைப் பிரதிநிதித்துவம் செய்தனர். நில உடைமையாளர் வகுப்பின் நலன்கள் அரசியல் பழமைவாதத்தோடு நெருங்கிய உறவுடையதாய் இருத்தல் இயல்பே. ஆயினும் இவ்விதிக்கு விலக்கான சில தனிநபர்களும் இருந்தனர். சி.எச்.ஸட். பெர்னாண்டோவும், விக்டர் கொறயாவும் நகரத் தொழிலாளர் இயக்கத்தோடும், இலங்கைத் தொழிற்கட்சியோடும் 1920 களில் சம்பந்தப்பட்டிருந்தனர். சி.ஈ. கொறயா விவசாயிகளின் உரிமைகளுக்காக உழைத்தவர் (ஜயவர்த்தன, 1972). இத்தனிநபர்கள் 1920 களில் சட்டசபையில் உறுப்பினர்களாய் இருந்த

கிளர்ச்சிச் சிந்தனைப் போக்குடையவர்களில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர்கள்.

## குறிப்புகள்

1. 1908 முதல் 1920 வரை சட்டசபையில் சிறுபான்மையினருக்கு கூடிய பிரதிநிதித்துவம் இருந்து வந்தது. முக்கியமாக உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள்: 1908-11 சட்ட சபையில் 8 அங்கத்தவர்களில் சிங்களவர் 2, சிங்களவர் அல்லாதவர் 3 (தமிழர் 1, முஸ்லிம் 1, பறங்கியர் 1), பிரித்தானியர் 3 என்ற வகையில் நியமனங்கள் இடம்பெற்றன. 1917 அளவில் 10 உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களில் சிங்களவர் 3, தமிழர் 3, முஸ்லிம் 1, பறங்கியர் 1, பிரித்தானியர் 2 என்ற வகையில் நியமனங்கள் இடம்பெற்றன. 1920 இன் சீர்திருத்தங்களின் பயனால் சிங்களவர்களின் விகிதாசாரம் அதிகரிக்கும் என்பதை அருணாசலம் உணர்ந்து கொண்டார். வடக்குக் கிழக்கில் தமிழர்களுக்குக் கிடைக்கவுள்ள ஆசனங்களுக்கு மேலதிகமாக, கொழும்பு நகரில் தெரிவு செய்யப்படுவோருக்கான 2 ஆசனங்களில் ஒன்றைத் தமிழர்களுக்கு ஒதுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். 1920-24 சட்டசபையில் மொத்தம் 37 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களுள் 9 பேர் தமிழர்களாவர். 1931 சட்டசபையில் 5 தமிழர்களும், 1936 இல் 10 தமிழர்களும் இருந்தனர்.

2. 1920-1947 காலப்பகுதியில் சட்டசபையில் உறுப்பினர்களாய் இருந்தோர் விபரம் ‘G.P.S.H. De Silva, Statistical Survey of Election to the Legislature of Sri Lanka, 1911 - 1977’ என்ற நூலிலிருந்து பெறப்பட்டது. வெளியீடு: மார்க்கா நிறுவனம், கொழும்பு (1979).

3. சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட கண்டியின் நில உடைமையாளர்கள் வருமாறு: (1) ஜோர்ஜ் எட்வர்ட் மடவெல (வடமேற்கு மாகாணம் - கிழக்கு); இவரின் தந்தை மடவெல திஸ்ஸநாயக்க நிலமே ஆவார். திஸ்ஸநாயக்க நிலமே பெரும் நில உடைமையாளர்; அவரது மனைவி, சி.ஈ. தென்னக்கோன் றட்டே மஹமத்தயாவின் மகளாவார் (றைட், 1907: 720). (2) பி.பி. றம்புக்வெல (மத்திய மாகாணம் - கிராமப்புறம்). (3) ஏ.எல். மொலமுரே (கேகாலை), டி.ஏ.எச்.ஈ. மொலமுரே (அனுராதபுரம்) ஆகியோர் உறுப்பினர்களாயினர். இவர்களைவிட ரி.பி. பானபொக்கே (இளையவர்) சட்ட சபைக்கு நியமிக்கப்பட்டார். நியமனம் பெற்ற முதலாவது கண்டியரான இவர் டிக்கிரி பண்டா பானபொக்கேயின் மகனாவார். இளைய பானபொக்கே இன்னொரு நிலப்பிரபுக் குடும்பத்தினைச் சேர்ந்த மொறவில்ல கெப்பிட்டிபொல றட்டே மஹாமத்தயாவின் மகளை விவாகம் செய்தார்.



கோ. நடேசய்யர்
Image Source - tamil.wiki

4. நியமனம் பெற்றவர்கள் விபரம் வருமாறு: பிரித்தானியர் 2; ரி.வை. றைட் என்பவர் தோட்டத்துறைப் பிரதிநிதியாக, தோமஸ் வில்லியர்ஸ் என்பவர் வர்த்தக நலன்களின் பிரதிநிதியாக. ஈ.ஜி. ஆதம்மலி கொழும்பில் முன்னணியில் திகழ்ந்த ‘போறா’ வர்த்தகர், ஐ.எக்ஸ். பெரேரா பரதவ வர்த்தகர். இவர் இந்திய வர்த்தக நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்தார். இந்த நியமனங்களில் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் வர்த்தக நலன்களுடன் ஒன்றுபடுவதைக் காணலாம். இதேபோன்று உள்ளூர் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்தோர், பிரபல மாணிக்கக்கல் வியாபாரியான எச்.எம். மாக்கான் மாக்கார், என்.எச்.எம். அப்துல் காதர் ஆகியோராவர். இவர்கள் நில உடைமையாளர்களாகவும் இருந்தனர் (G.P.S.H. De Silva, 1979).

## சர்வசன வாக்குரிமையும் கராவ சாதியினரின் வீழ்ச்சியும்

பகுதி 2

1920களில் சட்டசபை உறுப்பினர்கள், இலங்கையின் அப்போதைய சனத்தொகையின் 4 வீதத்தினரான எண்ணிக்கையுடைய வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களோடு நியமன உறுப்பினர்களும் சட்ட சபையில் அங்கம் வகித்தனர். 1920கள் உண்மையில் கராவ சாதியினரின் பொற்காலம் ஆகும். 1925 இல் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகமானதும், சட்டசபையில் அவர்களின் விகிதாசாரம் குறைந்தது. 1930களில் சர்வசன வாக்குரிமை அறிமுகமானதும் கராவ சாதியினரின் சட்டசபை பிரதிநிதித்துவம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது. இப்போக்கு சுதந்திரத்தின் பின்னரும் நீடித்தது (குமாரசுவாமி, 1988). 1927 ஆம் ஆண்டில் டொனமூர் ஆணைக்குழுவினர் இலங்கைக்கு வந்தனர். அரசியல் சீர்திருத்தம் பற்றி பலதரப்பினர்களுடன் அவர்கள் விவாதித்தனர். அதன் முடிவாக 50 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும், ஆளுநரால் நியமிக்கப்படும் 6 உறுப்பினர்களையும் கொண்ட சட்டசபையை ஆணைக்குழு சிபார்சு செய்தது. இலங்கைத் தேசிய காங்கிரஸ் தலைவர்கள் சர்வசன வாக்குரிமையை எதிர்த்துக் குரல் கொடுத்தனர். அப்போது பிரித்தானியத் தொழிற்கட்சியின் தலைவரான ராம்சே மக்டொனால்ட் சர்வசன வாக்குரிமையை எதிர்க்கும் ‘முதலாளித்துவ நில உடைமையாளர்கள்’ என்று காங்கிரஸ்காரர்களைக் கண்டனம் செய்தார். ‘பணக்காரர்களான சுதேசி வர்த்தகர்களின் தேசியவாதக் கூச்சல்’ என்று தொழிற்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எலன் வில்கின்சனும் கண்டித்தார் (ஜயவர்த்தன, 1972: 275). சர்வசன வாக்குரிமையின்கீழ் நடத்தப்பட்ட முதலாவது தேர்தலில் பணக்காரக் குடும்பங்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் என்று தொழிற்கட்சி எதிர்பார்த்தது. அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சிக் காலகட்டத்தில், பணக்காரக் குடும்பங்களில் இருந்து தோன்றிய நபர்கள், தாமே நாட்டின் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் நிலை உருவானது. 1932 ஆம் ஆண்டின் சட்டசபை பற்றி எச்.ஏ.ஜே. குலுகல்ல என்ற எழுத்தாளர் இவ்வாறு கூறினார்:

“வயதுவந்த யாவருக்கும் வாக்குரிமை என்பதைக் கொண்டு வந்தபோதும், சட்டசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் வசதி படைத்த வகுப்பினைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். நியாயதுரந்தரர்கள், மருத்துவர்கள், தோட்டத்துரைமார், வர்த்தகர்கள், பொறியியலாளர்கள், கண்டியினதும் கரைநாட்டினதும் பிரதானிகள், முன்னாள் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோர் சட்டசபை உறுப்பினர்களாய் இருந்தனர். இவர்களில் ஒருவர் சுப்பீரிம் கோர்ட்டின் முன்னாள் நீதிபதியாக இருந்தார். இச்சட்டசபை உறுப்பினர்களில் பலர் பின்னர் ‘சேர்’ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர் (குலுகல்ல, 1975:101).”

அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவதற்கு முன்னரான 1930களில் தேர்தல்களில் போட்டியிட்ட தனிநபர்கள் தம் தேர்தல் பிரசாரத்தின்போது பணத்தை வாரியிறைத்தனர். தாம் சேர்த்த பெருஞ் செல்வமும், சீதனமாகப் பெற்ற சொத்துகளும் இப்படியாகச் செலவுசெய்ய அவர்களுக்கு உதவின. கொய்கம பணக்காரக் குடும்பங்கள் சர்வசன வாக்குரிமையைப் பயன்படுத்தி 1931 முதல் 1947 வரை சட்டசபை அரசியலில் ஆதிக்கம் செலுத்தின. 1920களின் சட்ட சபை உறுப்பினர்களான நிலப்பிரபுகளும், ‘புதுப்பணக்காரர்களும்’, ‘உயர்தொழில்களில் இருந்தோருமான’ பலர் 1931 இன் சட்ட சபையையும் அலங்கரித்தனர்.[5]

ஏ.ஆர். வெயின்மன் என்பவர் கூறியதுபோல் “ஒவ்வொரு சட்ட சபை உறுப்பினரதும் இலக்கு தமது குடும்ப நிலையைத் தளரவிடாது பாதுகாப்பதாகவே இருந்தது (மேலது: 11, வெயின்மன் மேற்கோள் காட்டப்பட்டுள்ளார்.)”

1931 இன் புதுமுகங்களில் பலர் பிரபலமான குடும்பங்களைச் சேர்ந்தோராவர். ஜி.சி.எஸ். கொறயா (சிலாபம்), சி.ஈ. கொறயா, விக்டர் கொறயா ஆகிய இருவரதும் மருமகன் ஆவார். மதேஸ் சல்காடோ, சாராயக் குத்தகையாளர்; பல பேக்கறிகளின் உரிமையாளர். சுசந்தா டி பொன்சேக (பாணந்துறை), இவரது மருமகன் ஆவார். டி.சி.ஜி. கொத்தலாவல பெரும் நில உடைமையாளர். இவரது பேரன் ஜோன்.எல். கொத்தலாவலவும் (குருணாகல), 1933

இடைத்தேர்தலில் பலாங்கொடவில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவரது மருமகன்களில் ஒருவருமான ரி.ஜி. ஜயவர்தனவும் சட்டசபையை அலங்கரித்தனர். காலிப் பகுதியின் முன்னோடியான முதலாளி தோமஸ் சில்வா அமரசூரியவின் பேரன் ஹென்றி டபிள்யூ. அமரசூரியவும், மஹா முதலியார் சொலமன் டயஸ் பண்டாரநாயக்கவின் மகனும், எஸ்.சி. ஒபயசேகரவின் பேரனுமாகிய எஸ்.டபிள்யூ.ஆர். டி. பண்டாரநாயக்கவும் சட்டசபை உறுப்பினர்களாயினர்.

கிளர்ச்சிவாதத் தலைவர்கள் சிலரே சட்டசபைக்குள் புக முடிந்தது. சர்வசன வாக்குரிமைக்காகத் தீவிரமாகப் பிரசாரம் செய்தவர்களில் பலர் தேர்தலில் தோற்றுப்போயினர். உதாரணமாக 1920களில் கொழும்பு நகரத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் முன்னின்று உழைத்த இலங்கைத் தொழிளாளர் கட்சி, கொழும்பில் இரு ஆசனங்களைப் பெற்றது (கொழும்பு மத்தியில் ஏ.ஈ. குணசிங்கவும், கொழும்பு தெற்கில் எஸ். டபிள்யூ. திஸநாயக்கவும்). மொரவாக்க தொகுதியில் இடதுசாரித் தலைவர் (தனி அங்கத்தவராக), டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க வெற்றிபெற்றார். சர்வசன வாக்குரிமை சில கிளர்ச்சிச் சிந்தனை உடையோர் சட்டசபைக்கு வருவதற்கு உதவியபோதும், கண்டியின் நிலப்பிரபுகளான பழமைவாதக் குடும்பங்களின் பிரதிநிதிகளை சட்டசபைக்குள் புகுவதற்கு இடமளித்தது. ஜே.எச். மீதெனிய (றுவான்வெல), ஜி.சி. றம்புக்பொத (பிபிலை), பி.பி. நுகவெல திசாவ (கலகெதர), ஜே.சி. ரத்வத்த (பலாங்கொட), ஆர்.எஸ். தென்னக்கோன் (கட்டுகம்பொல), ஏ.எவ். மொலமுரே (டெடிகம), ஜி.ஈ. மடவல (நாரம்மல), ரி.பி. பானபொக்க (கம்பளை) என்பவர்கள் சட்டசபையில் இடம்பெற்ற கண்டிய நிலப்பிரபுகளாவர்.

தமிழர் பிரதிநிதித்துவம் ஐந்து ஆசனங்களாகக் (மொத்த ஆசனங்களில் 10 வீதம்) குறைந்தது. டாக்டர் ஆர். சரவணமுத்து (கொழும்பு வடக்கு), என். செல்லதுரை (யாழ்ப்பாணம்), எஸ்.எம். ஆனந்தன் (மன்னார்), எம்.எம். சுப்பிரமணியம் (திருகோணமலையும் மட்டக்களப்பும்) ஆகியோர் தெரிவாகினர்.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸில் இருந்த தமிழர்களான தேசியவாதிகள், தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற இயக்கத்தைத் தொடங்கியதால் காங்கேசன்துறை, ஊர்காவற்துறை, பருத்தித்துறை ஆகிய மூன்று தொகுதிகளில் எவரும் போட்டியிடவில்லை. பெருந்தோட்டப் பகுதிகளில் இருந்து எஸ்.பி. வைத்தியலிங்கம் (தலவாக்கலை), பெரி. சுந்தரம் (ஹட்டன்) என்போரும் ஏ. கோக்டன் பெல்லோஸ் (பண்டாரவல) என்ற பிரித்தானிய தோட்டச் சொந்தக்காரரும் தெரிவு செய்யப்பட்டனர்.

1931 இன் சட்டசபை 50 தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாய் இருந்தது. இவர்களுள் 38 பேர் (76 வீதம்) சிங்களவராவர். அரசியல் வெளியின் பெரும்பான்மை இடத்தைத் தமதாக்கிக்கொள்ளும் சிங்களவர் முயற்சியின் தொடக்கம் இதுவாகும் (விக்கிரமசிங்க, 1995). 38 சிங்கள உறுப்பினர்களில் கொய்கம சாதியினர் 79 வீதத்தினராவர். இது மக்கள்தொகையில் அச்சாதியினரின் வீதாசாரத்தைவிட மிகவும் கூடியதாக இருந்தது (குமாரசுவாமி, 1988). டாக்டர் ஈ.ஏ. குரே, கென்றி டபிள்யு. அமரசூரிய, சுசந்தடி பொன்சேக, டாக்டர் டபிள்யூ.ஏ.டி. சில்வா என்போர் மட்டுமே கராவ சாதியைச் சேர்ந்தோராய் இருந்தனர். சிங்கள உறுப்பினர்களின் 10.5 வீதமாக இத்தொகை இருந்தது. சட்டசபை ஏழு மந்திரிகள்கொண்ட மந்திரி சபையைத் தெரிவு செய்தது.

டி.பி. ஜயதிலக – உள்நாட்டு அலுவல்கள்

சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா – கல்வி

டி.எஸ். சேனநாயக்க – விவசாயம், காணி

சி. பத்துவன்துடாவ – உள்ளூர், நிர்வாகம்

பெரி. சுந்தரம் – தொழில், கைத்தொழில், வர்த்தகம்

ஜே.பி. பானபொக்கே – சுகாதாரம்

எச்.எம். மாக்கான் மாக்கார் – தொடர்பாடல், பொதுவேலைகள்

மேலே குறித்த ஏழுபேர் கொண்ட மந்திரி சபையில் ஐந்து சிங்களவர் இருந்தனர். அவர்கள் அனைவரும் ஆண்களாயும் கொய்கம சாதியினராயும் இருந்தனர். ஒரு முஸ்லிம் மந்திரியும், மலைநாட்டின் நியாயதுரந்தரான தமிழர் ஒருவரும் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள். இம்மந்திரி சபையில் கொய்கம

அல்லாத சாதிகளுக்கும், யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதித் தமிழர்களுக்கும், பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. பெண்கள் முதற் தடவையாக 1931 இல் வாக்களித்தனரேனும் அவர்கள் எவரும் அவ்வாண்டுத் தேர்தலில் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்படவில்லை. ஆயினும் ஒருவருடம் கழிந்தபின் ஜே.எச். மீதெனிய என்பவர் இறந்தபடியாலும், டாக்டர் ஆர். சரவணமுத்துவின் தேர்தல் செல்லுபடியாகாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டபடியாலும் இரண்டு தொகுதியிலும் இடைத்தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தல்களில் மேற்குறித்த உறுப்பினர்களின் இடங்களிற்கு அடலின் மொலமுரே (மீதெனியவின் மகள்), நேசம் சரவணமுத்து (டாக்டர் சரவணமுத்துவின் மனைவி) ஆகிய இரு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர்.



ஏ.ஈ. குணசிங்க
Image Source - www.dailymirror.lk

இந்த மாற்றங்கள் இருந்தபோதும் 1931இன் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.[6] டாக்டர் குரே தோற்கடிக்கப்பட்டதனால் கராவ பிரதிநிதித்துவம் மேலும் குறைவடைந்தது. ஹென்றி அமரசூரிய, டாக்டர் டபிள்யூ.ஏ.டி. சில்வா, சுசந்த டி பொன்சேக என்ற மூன்று பேர் கராவ சாதியின் பிரதிநிதிகளாய் எஞ்சியிருந்தனர். இக்காலத்தில் அநகாரிக தர்மபாலவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அரசியலில் புகுந்தனர். இக்குடும்பத்தின் பிரதிநிதிகளாக நீல் ஹேவ விதாரண (உடுகம), ராஜா ஹேவ விதாரண (மாத்தறை) என்போர் சட்டசபை உறுப்பினர்களாயினர்.[7] இவர்களின் சட்டசபைப் பிரவேசத்தினால் கொய்கம சாதிக் குடும்பம் ஒன்று அரசியலில் நுழைந்தது.

1936 ஆம் ஆண்டுத் தேர்தலில் 39 சிங்கள உறுப்பினர்கள் (78 வீதம்) தெரிவு செய்யப்பட்டனர். இத்தேர்தலின் முடிவுகள் சில, ஆச்சரியம் தருவன. உயர்ச்சாதி நிலப்பிரபுகளும், பணக்காரருமான சிலர் கிளர்ச்சிச் சிந்தனை உடையோராலும், மார்க்சிஸ்ட் லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினர்களாலும் தோற்கடிக்கப்பட்டனர். இவ்விதம் தோற்கடிக்கப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கோர்:

ரி.பி. பானபொக்க - கம்பளைத் தொகுதியில் ஆர்.எஸ்.எஸ். குணவர்த்தன இவரைத் தோற்கடித்தார்.

டாக்டர் ஈ.ஏ. குரே - கொழும்பு தெற்குத் தொகுதியில் டாக்டர் ஏ.பி.டி சொய்சா இவரைத் தோற்கடித்தார்.

பொரஸ்டர் ஒபயசேகர - அவிசாவல தொகுதியில் பிலிப் குணவர்தன (சமசமாஜக்கட்சி) இவரைத் தோற்கடித்தார்.

அடெலின் மொலமுரே - றுவான்வெல தொகுதியில் டாக்டர் என்.எம். பெரேரா இவரைத் தோற்கடித்தார்.

1936 இல் சட்டசபையில் இருந்த தமிழ்ப்பிரதிநிதிகள் 10 பேரில் இருவர் இராமநாதன் - அருணாசலம் வம்சத்தைச் சேர்ந்தோராவர். இக்காலத்து மந்திரி சபையின் அனைத்து மந்திரிகளும் சிங்களவர்களாயும், ஆண்களாயும் இருந்தனர். 1942இல், அம்மந்திரிசபையில் அ. மகாதேவ சேர்த்துக்கொள்ளப்படும் வரை, சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. இம்மந்திரி சபையில் ஜி.சி.எஸ். கொறயாவைத் தவிர்ந்த அனைவரும் பௌத்தர்களாக இருந்தனர். அவ்வாறே டபிள்யூ.ஏ.டி. சில்வா தவிர்ந்த பிற யாவரும் கொய்கம சாதியினராய் இருந்தனர். இதனால் மந்திரி சபை பௌத்த, கொய்கம பெரும்பான்மை உடையதாயும் இருந்தது. 1931 இன் மந்திரி சபையில் இருந்த டி.பி. ஜயதிலக்க, டி.எஸ். சேனநாயக்க, சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா ஆகியோர் 1936 இன் மந்திரி சபையிலும் தொடர்ந்து பதவி வகித்தனர்.[8] புதியவர்களாகச் சேர்ந்துகொண்டவர்கள் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க (உள்ளூராட்சி), ஜி.சி.எஸ். கொறயா (தொழில், கைத்தொழில், வர்த்தகம்), ஜே.எல். கொத்தலாவல (தொடர்பாடல், பொது

வேலைகள்), டாக்டர் டபிள்யூ.ஏ.டி. சில்வா (சுகாதாரம்) ஆகிய நால்வராவர். டபிள்யூ.ஏ.டி. சில்வா இறந்ததனால் ஏற்பட்ட மந்திரிசபை வெற்றிடத்திற்கு ஜோர்ஜ்.ஈ.டி. சில்வா தெரிவு செய்யப்பட்டார். இவரும் கொய்கம அல்லாதவராவார். 1942 முதல் 1947 வரை 'அநாமதேயமாக' இருந்து பின்னர் புகழ்மிக்கதாகமாறிய குடும்பத்தின் டி.எஸ். சேனநாயக்க சட்டசபையின் தலைவராக இருந்தார். 1943 முதல் 1947 வரை கராவ சாதியினர் எவரும் மந்திரிசபையில் இடம்பெறவில்லை. 1947 இன் முதலாவது பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகான மந்திரிசபையில்கூட கராவ எவரும் இடம்பெறவில்லை.



நேசம் சரவணமுத்து
Image Source - ta.wikipedia.org

1948 இல் ஹென்றி அமரசூரிய மந்திரிசபையில் சேர்க்கப்பட்டபோது இந்நிலை மாறியது.[9] இன அடிப்படையில் பாகுபாடு உடையதும், சாதிப்பிரிவினைகளைக் கொண்டதுமான இலங்கைச் சமூகத்தில் சர்வசனவாக்குரிமை புகுத்தப்பட்டபோது பெரும்பான்மை இனத்தினது மேலாதிக்கத்திற்கும், பெரும்பான்மைச்சாதியின் மேலாதிக்கத்திற்கும் அது காரணமாயிற்று. இருந்தபோதும் அரசியலின் முதன்மையான விடயம் முதலாளித்துவத்தினது ஆதிக்கம் ஆகும். சட்டசபை ஊடாக முதலாளித்துவ ஆதிக்கம் தொடரலாயிற்று.

### குடும்ப சாம்ராஜ்ஜிய ஜனநாயம் கட்டமைக்கப்படுதல்

பின்காலனித்துவகட்டத்தில் நீண்டகாலமாக 'சாம்ராஜ்ஜிய' அரசியல் குடும்பங்கள், மக்களின் தலைவர்களாகத் தம்மைக் கருதின. இக்குடும்பங்கள் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. இவற்றுள் சேனநாயக்க, ஆட்டிகல, கொத்தலாவல, கொறயா, ஜயவர்த்தன, விஜயவர்த்தன ஆகிய குடும்பங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவற்றில் இருந்து 'அறியப்பட்டோர்' பலர் தோன்றினர். இவர்களுள் டி.சி.ஜி. ஆட்டிகல முக்கியமானவராக இருந்தார். பணக்காரரான ஆட்டிகலவின் மூன்று புத்திரிகள் ரி.ஜி. ஜயவர்த்தன, யோன் கொத்தலாவல (மூத்தவர்) எவ்.ஆர். சேனநாயக்க ஆகியோரை விவாகம் செய்தனர்.[10] ரி.ஜி. ஜயவர்த்தன, ஜே. ஆர். ஜயவர்த்தனவின் மாமன். அத்தோடு பத்திரிகை உடைமையாளரான டி.ஆர். விஜயவர்த்தன, ஜே.ஆர். ஜயவர்த்தனவின் தாய் மாமனாவார். டி.ஆர். விஜயவர்த்தனவின் மகன், ரஞ்சித் டி.எஸ். சேனநாயக்கவின் பேர்த்தியை விவாகம் செய்தார். கொத்தலாவலவின் மகன் யோன் கொத்தலாவல, அரசியலில் புகுந்தார். கொத்தலாவலவின் மகன், விக்டர் கொறயாவின் மகன் ஜி.சி.எஸ். கொறயாவிற்கு ஒன்றுவிட்ட சகோதரன் (கசின்) உறவுடையவர். 1947 ஆம் ஆண்டின் மந்திரிசபையில் இருந்த 14 மந்திரிகளில் டி.எஸ். சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, யோன் கொத்தலாவல, ஜே.ஆர். ஜயவர்த்தன என்ற நான்கு பேரும் இந்த உறவுக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். இக்குடும்பங்களில் இருந்து பல பிரமுகர்கள் தோன்றினர். சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்க (1948 - 52), அவரது மகன் டட்லி சேனநாயக்க (1952- 53), யோன். கொத்தலாவல (இளையவர்) (1953-56), 1977 இல் பிரதமராகவும் பின்னர் நாட்டின் ஜனாதிபதியாகவும் (1978-89) இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன, 1993 - 94 காலத்திலும் பின்னர் 2001 - 2004 காலத்திலும் பிரதமராக இருந்தவரும், ஜே.ஆர். ஜயவர்த்தனவின் மைத்துனி நளினியினது மகனும் டி.ஆர். ஜயவர்த்தனவினது பேரனுமாகிய ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இக்குடும்பங்களில் இருந்து தோன்றியோராவர்.

ஐக்கிய தேசியக்கட்சி அல்லாது பிற கட்சிகளின் அரசாங்கங்கள் பதவி வகித்தபோது பண்டாரநாயக்க குடும்பம் (இக்குடும்பம் ஆரம்ப முதலே அறியப்பட்டோர் வகையினதாய் இருந்தது) தலைமை தாங்கியது. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்துசென்ற எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க (1956-58) பிரதமராக இருந்து இக்குடும்ப இராச்சியத்தை தொடக்கிவைத்தார். அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க (1960-65, 1970-77, 1994)

பிரதமராக இருந்தார். அவரது மகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 இல் ஜனாதிபதியானார். சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பேரன் பிரித்தானிய ஆட்சியினால் மகாமுதலியாராகப் பதவி நியமனம் செய்யப்பட்டுச் சரியாக 100 ஆண்டுகள் கழிந்த தருணமான 1994 இல், அவர் இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதோடு, 1999 இல் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். மேற்குறிப்பிட்ட இரு குடும்பங்களும் விவாக உறவுகளால் ஒன்றோடொன்று தொடர்புறும் நிலையும் எழுந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சகோதரரின் புதல்வி லக்மினி றத்வத்த வியாபாரத் தொழில் அதிபரான உபாலி விஜயவர்த்தனவை (இவர் ஜே.ஆர். ஜயவர்தனவின் First Cousin என்ற உறவு முறையினர்) விவாகம் செய்தார். சந்திரிகா குமாரதுங்கவின் சகோதரர் அநுரா பண்டாரநாயக்க ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான எதிர்க்கட்சிக்கு மாறினார். 2000 ஆம் ஆண்டில் அநுரா பண்டாரநாயக்க இரு தரப்பினரின் ஆதரவோடு சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சுதந்திரத்தின் பின்னர் உள்ள காலத்தில் அரசியல் தலைமைத்துவத்தை ஏற்ற 'கவர்ச்சி'மிகு தலைவர்களுக்கு பெரும் செல்வம், நில உடைமை, அந்தஸ்து, சாதி ஆகியன துணையாக இருந்துள்ளதைக் காணலாம். முதலில் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையே இருந்தது. பின்னர் இது சர்வசனவாக்குரிமையாக பால், சாதி, வர்க்கம், இனம், சமயம் என்ற பேதங்களைக் கடந்து யாவருக்கும் பொதுவான உரிமை ஆகியது. ஆயினும் நாட்டின் தலைமைத்துவம் விரிவடையவில்லை. அது சலுகைபெற்ற சிறுகுழுக்கள் என்ற சிறு வட்டத்திற்குள் சுருங்கியது. 1931 -47 காலத்தின் சட்டசபை காலனித்துவ ஆட்சியை ஏற்றுக்கொண்டு ஜனநாயக முறையினை இக்காலத்தில் விரிவுபடுத்தியதைக் காணலாம். சுதந்திரத்திற்காக வெகுஜனங்களைத் திரட்டி, விடுதலைப் போராட்ட இயக்கம் வளர்க்கப்படவில்லை. முதலாளித்துவ வகுப்பின் பழமைவாதத் தலைவர்கள் தமது சொத்துகளையும் சுகபோக சலுகைகளையும் பாதுகாத்துக்கொள்வதிலேயே அக்கறை கொண்டிருந்தனர். இப்பின்னணியில் டொனமூர்காலச் சட்டசபை ஆண் மேலாதிக்கம், உயர் வகுப்பின் மேலாதிக்கம், உயர்சாதி மேலாதிக்கம் ஆகிய பண்புகளை உடையதாய் இருந்தது. பெரும்பான்மை இன அரசியலை முதன்மைப்படுத்தும் குடும்ப சாம்ராஜ்ஜியம் ஜனநாயகத்தலைமை உடையதாகவும் அமைந்தது.

## குறிப்புகள்

5. பொரஸ்டர் ஒபயசேகர (அவிசாவல), டி.எச். கொத்தலாவல (பதுளை), எச்.எம். மாக்கான் மாக்கர் (மட்டக்களப்பு தெற்கு), ஏ.எவ். மொலமுரே (டெடிகம), ரி.பி. பானபொக்கே (கம்பளை), வி.டி.எஸ். விக்கரமநாயக்க (ஹம்பாந்தோட்டை), டாக்டர், ஈ.ஏ. குரே (கொழும்பு தெற்கு), டி.எஸ். சேனநாயக்க (மினுவாங்கொட), டாக்டர் டபிள்யூ.ஏ.டி. சில்வா (மொறட்டுவ), ஜி.எல். மடவெல (நாரம்மல), ஏ.ஈ. ராஜபக்ச (நீர்கொழும்பு),



எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க
Image Source - nexttravelsrilanka.com

ஹென்றி டிமெல் (புத்தளம்), ஜே.எச். மீதெனிய (றுவான்வெல) ஆகியோர் தேர்தலில் வெற்றி பெற்றனர். உயர்தொழில்களில் சிறந்து விளங்கிய புதியவர்களாகவும், பிராந்தியங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுமாக பின்வருவோர் இருந்தனர்: ஜோர்ஜ் ஈ.டி. சில்வா (கண்டி), ஜி. கே.டபிள்யூ. பெரேரா (மாத்தறை). சி.டபிள்யு. டபிள்யூ. கன்னங்கரா (மத்துகம), ஈ.டபிள்யூ. பெரேரா (ஹொரணை), ஈ.ஏ.பி. விஜயரட்ண (கேகாலை), போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட டி.பி. ஜயதிலக்க (களனி) (De silva, 1979).

6. டி.எஸ். சேனநாயக்க, டி.பி. ஜயதிலக்க, டாக்டர் டபிள்யூ.ஏ.டி. சில்வா, சி. பத்துவான் துடாவ, சி. டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா, ஆர்.எஸ். தென்னக்கோன், ஏ.ஈ. ராஜபக்ச, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க, ஜி. சி.எஸ். கொறயா, ஜி.சி. றம்புக்பொத, ஜோர்ஜ் ஈ.டி. சில்வா, ஏ.ஈ. குணசிங்க, சுசந்த டி பொன்சேக, டி.எச். கொத்தலாவல ஆகியோர்.



ரி.பி. ஜயா
Image Source - ta.wikipedia.org

7. பிற்காலத்தில் இக்குடும்பத்தில் இருந்து அனில் முனசிங்க, சுசில் முனசிங்க, மங்கள முனசிங்க, காமினி ஜயசூரிய ஆகியோர் அரசியலுக்கு வந்தனர். ஏனைய கொய்கம குடும்பங்களாவன: ராஜபக்ச குடும்பம் (ஜோர்ஜ், லக்ஸ்மன், மகிந்த, நிருபமா ராஜபக்சவும் பிறரும்), பொறலுகொட குணவர்தன குடும்பம் (பிலிப், றொபேர்ட், கறோலின், இந்திகா, தினேஷ் குணவர்த்தன, வியன் குணவர்த்தன).

8. 1936 ஆம் ஆண்டின் சட்டசபையின் தமிழ் உறுப்பினர்களாக இருந்தோர்: ஏ. மகாதேவ (சேர். பொன்னம்பலம் அருணாசலத்தின் மகன்); இவர் யாழ்ப்பாணம் தொகுதியில் பிரதிநிதியாக, 1934-47 காலத்தில் சட்டசபை உறுப்பினராக இருந்தார். இவரின் மைத்துனர் ஆர்.சிறி. ராமநாதன் (மன்னார், முல்லைத்தீவு), இதே காலப்பகுதியில் உறுப்பினராக இருந்தார். எஸ்.ஓ. கனகரத்தினம் (மட்டக்களப்பு தெற்கு), டபிள்யூ. துரைச்சாமி (ஊர்காவற்துறை), கே. நடேசய்யர் (ஹட்டன்), எஸ். நடேசன் (காங்கேசன்துறை), ஜி.ஜி.பொன்னம்பலம் (பருத்தித்துறை), நேசம் சரவணமுத்து (கொழும்பு - வடக்கு), ஏ.ஆர். தம்பிமுத்து (திருகோணமலை), எஸ். வைத்திலிங்கம் (தலவாக்கொல்ல) (De silva, 1979).

9. சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் (1945) பின்னர், 1947 ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி, தேர்தலின்பின் அரசாங்கத்தை அமைத்தது. 14 மந்திரிகளுள் அனைத்து உறுப்பினர்களும் ஆண்களாவர். இவர்களுள் 11 பேர் சிங்களவராவர். ஒலிவர் குணதிலக, டி.எஸ். சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜயவர்த்தன, ஜே.எல். கொத்தலாவல, ஏ. ரத்தினாயக்க ஆகிய 8 பேரும் கொய்கம சாதியினர். ஆர்.எஸ்.எஸ். குணவர்த்தன, ஜோர்ஜ் ஈ.டி. சில்வா, லலிதா ராஜபக்ச ஆகிய 3 பேரும் கொய்கம அல்லாதோர். 1948 வரை கராவ சாதிப் பிரதிநிதித்துவம் மந்திரி சபையில் இருக்கவில்லை. 1947 மந்திரி சபையில் 3 தமிழர்கள் இருந்தனர் (சி. சுந்தரலிங்கம், சி. சிற்றம்பலம்). சுந்தரலிங்கம் 1948 இல் பதவி விலகிய பின்னர் ஜி.ஜி. பொன்னம்பலம் மந்திரியானார். மலே முஸ்லிம் ஆகிய ரி.பி. ஜயா இன்னொரு சிறுபான்மை இனத்தவரான மந்திரி ஆவார் (De silva, 1979).

10. கொத்தலாவல, ஜயவர்த்தன குடும்பங்களுக்கிடையில் பிரான்சிஸ் ஆட்டிகலவின் கொலை, ஜோன் கொத்தலாவல கைது என்ற சம்பவங்களின் பின்னர் பகைமை நிலவியது. கொலையாளியைக் கண்டுபிடிப்பதில் ரி.ஜி. ஜயவர்த்தன காட்டிய முயற்சி கொத்தலாவல, ஜயவர்த்தன குடும்பங்களுக்கிடையே நீண்ட நாள் பகைமையாக நிலைத்தது (டி. சில்வா, றிஜின்ஸ், 1985: 46). இருப்பினும் ஆட்டிகல சகோதரிகள் இரு குடும்பங்களையும் ஒற்றுமையாக வைத்திருக்க உதவினர் எனக் கூறப்படுகிறது (டாக்டர் காமினி கொறயா - தனிப்பட்ட தொடர்பாடல் மூலம் தெரிவித்தது).

'Nobodies to Somebodies: The Rise of the Colonial Bourgeoise in Sri Lanka' நூலின் 19 ஆவது அத்தியாயம் (பக். 340-351) 'Political Capital and Dynasty' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. இவ் அத்தியாயத்தின் மொழிபெயர்ப்பாக அமையும் இக்கட்டுரையின் தமிழ்த்தலைப்பு 'சுதந்திரத்திற்கு முந்திய அரை நூற்றாண்டு வரலாற்றில் (1900-1948) இலங்கையின் சட்டசபைகளில் அரசியல் பிரதிநிதித்துவம்' என அமைகிறது.

தி. செல்வமனோகரன்



யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். 'சொற்களால் அமையுலகு' என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.

# கரும்புக்காரன் எனும் தெய்வமும் வழிபாட்டுமுறைகளும்

பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் 'மேனிலையாக்கம்' எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே 'ஈழத்து நாட்டார் தெய்வங்கள்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.

மனிதகுல வரலாற்றில் புதிய கற்காலத்திலேயே (ஏறத்தாழ கி.மு 9000 - 6000) விவசாய உற்பத்தி, ஆயர்வாழ்வு என்பன தோன்றிவிட்டன (Allchin, F.R. 1963, Neolithic Cattle Keepers of South India, Cambridge). தமிழ்ச்சமூகத்திலும் காடுசார் வாழ்வுடைய திணைக்குடிகளான முல்லைநில மக்கள், ஆரம்பத்தில் மேய்ச்சல் நிலத்துக்கான புலம்பெயர்வாளர்களாக இருந்தபோதிலும் நிலையான குடியிருப்புகள் உடையவர்களாகவும் காணப்பட்டுள்ளனர். தரிசாக இருந்த கொல்லை நிலத்தில் (அகம்:89:17) பயிரிடல் மேற்கொள்ளப்பட்டது. காடழித்துக் களனியாக்கப்பட்டது (அகம், 394:3). முல்லைநில மக்கள் எருமை (கோட்டினத்தாயர்), மாடு (பசு ஆயர், கோவினத்தாயர்), ஆடு (புல்லினத்தாயர்) ஆகியனவற்றை மேய்த்துள்ளமையை அறியமுடிகிறது. இவர்களது பொருளாதாரம் கால்நடை வளர்ப்பு, விவசாய உற்பத்தி (வன்புல வேளாண்மை) என்பவற்றால் கட்டமைக்கப்பட்டது (நற்றிணை, 266:13). இந்த வாழ்வியலின் நீட்சியும் மருதநில, முல்லைநில வாழ்வியல் இணைவும் புதிய வர்க்கங்களையும் சமூகக்கட்டுமானங்களையும் தோற்றுவித்தன. கால்நடை, உழவு, உற்பத்தி எனக் கலப்புநிலையை ஏற்படுத்தின.

ஈழத்துப்புலத்தில் விவசாயமும் கால்நடைவளர்ப்பும் இணைந்த வாழ்வமைவு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை உடையது. நிலவுடமையாளரே கால்நடைப்பட்டியை உடையவராதலால் பெருங்குடி வேளாளர், சிறுகுடி வேளாளர் எனும் சாதிய அடுக்கமைவும், உழுவித்துண்போர், உழுதுண்போர் என்ற வர்க்கவமைவும் தவிர்க்கமுடியாதபடி உருவாயிற்று. அவற்றின்வழியே தெய்வங்களும் தெய்வநம்பிக்கைகளும் கட்டமைக்கப்பட்டன.

புறப்பொருள் வெண்பாமாலை ஆதிகாலத் தமிழ்ச்சமூகத்தில் நிகழ்ந்த போர்களை எட்டாக வகுத்துரைக்கின்றது. அவற்றுள் ஆநிரை கவர்தல் - வெட்சி, ஆநிரை மீட்டல் - கரந்தை என்பன முதன்மை பெறுகின்றன. பூசல் எனும் போர் தொறுகோடல், மீட்டல் எனும் இரண்டையும் குறிக்கும் வண்ணம், தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணை 5 இல் குறிக்கப்படுகிறது. தொறு - பசுக்கூட்டம், மாடுகள் எனவும்; தொறுப்பூசல் - மாடுபிடி, சண்டை எனவும் கூறப்படுகின்றது. ஆகவே பூசல் என்பது பெரும் போரைக் குறிக்காது. ஆநிரை கவர்தலையும் மீட்டலையும் வேறுபடுத்திக்காட்டப் பயன்பட்ட சொல்லாகவும் இது விளக்கப்படுகிறது (பக்தவத்சல பாரதி, 2020, பண்டைத்தமிழ்ப் பண்பாடு, அடையாளம், திருச்சி). முல்லைநிலக் கடவுளான மாயோனே கால்நடைகளின் தெய்வமாகச் சுட்டப்படினும் பிற்காலத்தில் மாயோன், திருமால் எனும் பெருந்தெய்வமானார். கால்நடைவளர்ப்போர் பிராந்திய மற்றும் முன்னோர் நம்பிக்கையின்வழி புதிய தெய்வங்களை தமக்கேற்றவகையில் உருவாக்கிக்கொண்டனர். அந்தவகையில் ஈழத்து வடபுல, கிளிநொச்சி மாவட்ட, பூநகரி வாழ்புலத்தில் நின்றிலங்கும் தெய்வமாக 'கரும்புக்காரன்' காணப்படுகின்றார்.

## கரும்புக்காரன்

கரும்புக்காரன் எனும் பெயர் அநேக ஊகங்களுக்கு இடமளிக்கின்றது. கருப்பு, கருப்புசாமி, கருப்பணசாமி எனப்பல பெயர்களால் குறிப்பிடப்படும் கருப்பன், கரும்புக்காரனாக விரிந்திருக்கலாம் எனக் கருதமுடிகிறது. ஆயினும் கருப்புசாமிக்குச் சொல்லப்படும் எந்த இலட்சணங்களும், வழிபடுமுறைகளும், கதைகளும் கரும்புக்காரனுடன் பொருந்துவதாயில்லை.

விவசாய நடவடிக்கையில் கரும்பு, நெல் உற்பத்தி என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. கரும்புத்தோட்டத்திற்குக் காவலாகக் கருதப்பட்ட தெய்வமாக இருக்கலாம் என அனுமானிப்பின், பூநகரியில் இத்தெய்வம் நின்றுநிலவும் பிரதேசங்களில் முன்போ தற்போதோ கரும்புப்பயிரிடல் இடம்பெற்றதாக அறியமுடியவில்லை. கரும்பைக் கையில் உடைய காமன், கரும்புக்காரன் எனப்பட்டான் எனக் கருதின், விவசாயத்துக்கும் கால்நடைவளர்ப்புக்கும், காதல் தெய்வமான காமனுக்கும் எந்த சம்பந்தமும் இருப்பதாக அறியமுடியவில்லை.

வடமராட்சியில் குறும்பன் எனும் தெய்வம் காணப்படுகிறது; தற்போது அது கருப்பன்சாமியாக வழிபடப்படுவது ஆய்வுக்குரியது என்ற ஒரு கருத்தை பா. இரகுவரனின் முகநூற்பதிவில் காணமுடிந்தது. பொதுவில் மலையகம் தவிர்ந்த, குறிப்பாக ஈழத்து

வடபுலத்தில் கருப்பன்சாமி வழிபாடு அரிதான ஒன்றாகவே காணப்படுகின்றது.

தமிழகச்சூழலிலோ ஈழத்தின் ஏனைய பிராந்தியங்களிலோ இத்தெய்வத்தையோ அல்லது இதனை ஒத்த தெய்வத்தையோ அடையாளப்படுத்த முடியவில்லை. ஆகவே பூநகரிப் பிராந்தியத்தின் கால்நடை, வேளாண்மைசார்ந்த தனித்துவமான தெய்வமாக கரும்புக்காரன் காணப்படுகின்றார்.

இத்தெய்வத்தைப் பற்றிய முதற்குறிப்பை வழங்கியவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் சி. செரஞ்சன் அவர்கள். இவரும், ஊடகவியல்துறை முகாமைத்துவ உதவியாளரும், ஆய்வு ஆர்வலருமான கோ. விஜிகரனும் எம்மோடு கள ஆய்வில் ஈடுபட்டனர்.

### பூநகரியில் கரும்புக்காரன்

பூநகரியின் கொடுதாவில் பிரதேசத்திலும், கிராஞ்சியிலும் கரும்புக்காரனுக்குத் தனிக்கோயில்கள் உண்டு. பல்லாய் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் பரிவாரத்தெய்வமாக தெற்குப்பக்கத்தில் கரும்புக்காரன் வீற்றிருக்கின்றார். இவற்றைவிட வேறெங்கும் கரும்புக்காரன் இருப்பதாக அறியமுடியவில்லை. வயலும் (மருதம்), காடும் (முல்லை) சேர்ந்திருக்கின்ற, நெல்விளைச்சலும் பட்டிகளுக்கான மேய்ச்சல் தரவைகளும் (விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்தி) இணைந்திருக்கின்ற இந்தப்பிரதேசத்தின் தனித்தெய்வமாக, கரும்புக்காரன் முக்கியத்துவம் பெறுகின்றார். கரும்புக்காரன் யார்? இத்தெய்வத்தின் தோற்றம் பற்றிய கதைகள், வரலாறுகள் எவை? போன்ற கேள்விகளுக்கான விடைகளை வாய்மொழி வழக்காறுகளாகவேனும் அறியமுடியவில்லை.

### கொடுதாவில் கரும்புக்காரன் கோயில்

பூநகரிப் பிரதேசத்தில், மன்னார் செல்லும் பாதையினால் உள்நுழையும் கிராமங்களில் ஒன்று கொடுதாவில். காடாகிக்கிடக்கும் இப்பிரதேசத்தில் முன்பு தோட்டங்கள் இருந்தபோதும் இப்போது இல்லை. சில மரமுந்திரிகைத் தோட்டங்கள் உள்ளன. கோயில் உரித்தாளர்களுள் முக்கியமானவரான இராமன் நாகேஸ்வரன் (இராசன் - வயது - 64), தனது பூட்டன் காலத்துக்கு முன்னைய ஆலயமாக கொடுதாவில் கரும்புக்காரன் கோயிலைக் குறிப்பிடுகிறார். கும்பாபிஷேகம் நடைபெற்று மேனிலையாக்கம் செய்யப்பட்ட பல்லாய் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயமான பிள்ளையார் கோயிலில், குறித்த சமூகத்தையும், தெளிகரை எனும் ஊரையும் சேர்ந்த தம்பையா பொன்னம்பலம் பூசாரி (வயது, 70) அவர்களால் தொடர்ந்தும் பூசை செய்யப்பட்டு வருகிறது. இப்பல்லாய் பிள்ளையார் கோயிலில் இருந்தே ஏறத்தாழ இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கொடுதாவில் கரும்புக்காரன் கோயிலுக்கு மடைப்பண்டம் கொண்டுசெல்லப்படுகிறது.

பல்லாய் மிகவும் செழிப்பான மருதநிலம்; பனைவளம் நிறைந்த ஊர். ஆயினும் ஈழப்போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டபின் வெள்ளப்பெருக்கு நிலையை அடிப்படையாகக்கொண்டு குள அபிவிருத்திக்காக இடப்பெயர்விக்கப்பட்ட நிலமாக அது மாறிவிட்டது. அங்கு வாழ்ந்த மக்கள் தெளிகரை, பூநகரி எனச் சிதறி வாழ்கின்றனர். இன்றும் குள அபிவிருத்தி தொடங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பல்லாயிலிருந்து வெள்ளம் கடந்தே கொடுதாவிலுக்குச் செல்லும் சூழல் இவ் ஆண்டு (2025) மார்ச், ஏப்ரல் மாதங்களிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கு பாடசாலை சிதிலமடைந்து காணப்படுகிறது. பல்லாய் வாழ்விழந்த ஊராயிற்று. பிள்ளையார் மட்டும் நிமிர்ந்து நிற்கின்றார்.

பட்டிமாடுகளும் மேய்ச்சல் தரவைகளும் வயல்வெளியும் நிறைந்த இப்பூமியின் சிறுகுடி வேளாள சமூகத்தின் (பள்ளர்) குலதெய்வமான கரும்புக்காரனின் கோயில், இன்றும் நாட்டார் மரபு சிறிதேனும்மாறாத பண்பியலோடு காணப்படுகிறது. ஆயினும் சீமெந்தாலான கட்டடச்சுவர் உடையதாக தற்போது கட்டமைக்கப்பட்டுள்ளது. பல்லாய் பிள்ளையார் கோயிலிலும் கொடுதாவில் கரும்புக்காரன் கோயிலிலும் கல்ரூபத்தோடு இரும்பாலான ரூபத்தில் கரும்புக்காரன் காட்சியளிக்கின்றார்.

பெரும்பாலான நாட்டார் தெய்வங்கள் கல், முச்சூலம் (திரிசூலம்) வடிவங்களிலேயே காட்சி தருகின்றனர். ஆனால் கரும்புக்காரனின் இரும்பாலான ரூபம் தனித்துவமானது. குறித்த இரும்புக்கம்பியின் நுனியில் இருந்து 45 இஞ்ச் இடைவெளியில் மொட்டுப்போன்ற வடிவில் மூன்று வளைவு கம்பிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இவை தாமரைமலர் மொட்டுப்போலக் காணப்படுகின்றன. நுனியில் வெள்ளி, தகரம் ஒட்டப்பட்டிருக்கின்றது. இன்னொன்றின் நுனி, இலை அல்லது வேல் போன்ற வடிவம் உடையதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இது மாடுகளைக் கட்டும் கம்பியின் வடிவம் எனில் நுனியின் வட்டம் அல்லது வளைவே அதில் காணப்படும். இது மலர் மொட்டுப்போலவே காட்சியளிப்பது தனித்துவமும் அழகியலும் உடையதாக உள்ளது. இதற்கு உரிய விளக்கத்தை யாராலும் சொல்லமுடியவில்லை.



கொடுதாவில் கரும்புக்காரன் கோயில்

## கிராஞ்சி கரும்புக்காரன் கோயில்

பூநகரி பிரதேசத்தின் கிராஞ்சி, விளாத்திமோட்டை, உறக்கிணறு பகுதியில் இக்கரும்புக்காரன் கோயில் காணப்படுகிறது. அப்பிரதேசத்தில் வாழும் சிறுகுடி வேளாளரான பள்ளர் சமூகத்தின் குலதெய்வமாக இத்தெய்வம் விளங்குகிறது. ஆரம்பத்தில் இத்தெய்வம் பிருந்தாவனக் கரைகடல் எனும் இலவங்குடாவில் இருந்ததாகவும், பின்னர் கிராஞ்சி, சிவபுரம் ஊர்மனையுள் இருந்ததாகவும், பின் அதன்மீதான அச்சத்தினால் கிராமத்தின் வடதிசையில் தற்போது உள்ள இடத்தில் கோயிலமைத்து வழிபட்டுவருவதாகவும் பூசாரி பழனி செல்லதுரை (வயது, 72) கூறுகின்றார். இந்த ஆலயத்தில் கரும்புக்காரன் 'கல்' வடிவத்திலேயே வணங்கப்படுகின்றார். இந்த ஆலயத்தின் பூசாரி தெரிவுமுறை மிகச் சுவாரசியமானது. நாற்பது வருடங்களுக்குமேல் பூசாரியாகத் தெய்வமாடிப் பூசை செய்துவந்த கணபதி சின்னத்தம்பி இறந்ததன்பின் பூசாரி இன்றி ஆலயவழிபாடு தடைப்பட்டது. உரிய விசேட காலத்தில் பானை வைத்துப் பொங்கும்போது, கரும்புக்காரன் வளந்துப்பானையில் பொங்கிவரும் நுரையை உரியநேரத்தில் அள்ளுபவர் யாரோ அவரே பூசாரி என்ற சம்பிரதாயம் உண்டு. அதன்படி எல்லாத் தெய்வங்களுக்கும் பொங்கலிடப்பட்டது. கரும்புக்காரன் பானை பொங்கிவரும் நேரத்தில் எங்கோவொரு மூலையில் மரத்தடியில் நண்பர்களோடு பொழுது போக்கிக்கொண்டிருந்த செல்லத்துரை அவர்கள் உருவேறி வேகமாகவந்து யாரும் எதிர்பாராதவகையில் நுரையை அள்ளியதோடு, அன்றிரவு முழுவதும் கலையாடி, காலையிலேயே தெய்வமிறங்கியதாக திரு. செல்வம் (வயது, 77) தெரிவித்தார். இருபது வருடங்களுக்குமேலாக பழனி செல்லத்துரையே பூசாரியாக இருந்துவருகிறார்.

மழைநீர் தேங்கும் நிலம் கடந்தே இந்த ஆலயத்திற்கும் செல்ல வேண்டும். காட்டினில் இக்கோயில் எந்தவகையிலும் நாட்டார்மரபு மாறாதவகையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்தக் கோயிலும் மருதமும், முல்லையும் - பட்டி வளர்ப்பும், விவசாயமும் இணைந்த பாரம்பரிய நிலமாகவே காட்சியளிக்கின்றது.

## விசேட தினங்கள்

இவ்விரு கோயில்களிலும் தைப்பொங்கல், சித்திரைப் பிறப்பு, தீபாவளி, திருக்கார்த்திகை ஆகிய தினங்கள் விசேட தினங்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆயினும் கிராஞ்சிக் கோயிலின் சிறப்பு வழிபாடாக வைகாசி, ஆனி மாதங்களுக்கிடையில், ஏனைய ஆலயங்களின் பட்சங்களையும் அனுசரித்து வருடாந்தப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்து ஞாயிறு வழி வெட்டப்படும். கொடுதாவில் கோயிலில் ஆனிப் பௌர்ணமியை மையமாக வைத்து வருடாந்தப் பொங்கல் இடம்பெற்று வருகின்றது.

## வழிபாட்டு முறைகள்

பிராந்திய, சமூகத்தேவைகள் சார்ந்து இவ்விரு

கோயில்களிலும் சிலசில வேறுபாடுகள் காணப்படினும், வழிபாட்டுமுறைகள் ஒத்ததன்மையுடையனவாகவே பெரிதும் காணப்படுகின்றன. கொடுதாவில் கரும்புக்காரனுக்கு பல்லாய் பிள்ளையார் கோயிலிலிருந்தும், கிராஞ்சி விளாத்திமோட்டை கோயிலுக்கு, வாண்டையான் பள்ளத்தில் உள்ள புளியமரத்தடியிலிருந்தும் மடைப்பண்டம் எடுத்துச் செல்லப்படும்.

வெள்ளிக்கிழமை காலையில் கிராஞ்சியில் காட்டுப்பிள்ளையாருக்கும், கொடுதாவிலிலுள்ள பல்லாய் பிள்ளையாருக்கும் பொங்கல் நடைபெறும். பிள்ளையார் பொங்கல் இடம்பெறும் அதேவேளை பல்லாய் பிள்ளையார் ஆலயத்திலிருந்து செல்லையாத்தீவு அம்மனுக்கு பண்டம் அனுப்பப்படும். அவ்வாலயப் பூசாரி அதனைப் பொங்கிக் கொடுத்தனுப்புவார் (அவ்வாலய மரபு உயர்குடி வேளாளருக்கானது). அப்படையல் பிள்ளையார் கோயிலில் விரதகாரருக்கு வழங்கப்பட்டபின், அன்னதானம் வழங்கப்படும். பின் அவ்வளந்துப்பானை கழுவப்பட்டு அம்மன் வளந்துடன், கொடுதாவில் கரும்புக்காரன் கோயிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு அவ்வளந்துப்பானையில் மீளவும் பொங்கும் மரபு உண்டு. அப்பானையின் பொங்கல் படைக்கப்படுவதில்லை. அதனோடு, ஏனைய தெய்வங்களின் மூன்று படையல்களையும் இணைத்து சலவைத் தொழிலாளிக்கு வழங்கும் வழக்கமும் காணப்படுகின்றது. இம்மரபு கிராஞ்சி கரும்புக்காரன் கோயிலில் இடம்பெறுவதில்லை.

கிராஞ்சியில் மடைப்பண்டம் எடுக்கமுன், ஐயனார் மடையை மரத்தின் அடியில் படைத்தபின்பு அன்னதானம் இடம்பெறும். அதன்பின் ‘கயிறு நேருதல்’ எனும் நிகழ்வு இடம்பெறும். கிராஞ்சியில் ஆத்திமரநாரைக் கிழித்து முப்புரியாகத் திரித்து நான்கு கயிறுகள் செய்வர். கொடுதாவிலில் உவரி மரநாரைப் பயன்படுத்துவதாக இ. நாகேஸ்வரன் தெரிவித்தார். அந்தக் கயிற்றை அடுத்த வருடம் பயன்படுத்துவதில்லை. வருடாவருடம் புதிதாகத் தயாரித்தே இருகோயில்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வெள்ளிக்கிழமை மாலை வெற்றிலை, பழம், பாக்கு, தேசிக்காய் உள்ளிட்ட ‘வெற்றிலை மடை’யை கரும்புக்காரன் கோயிலுக்குக் கொண்டுசெல்வர். ஆலயத்தை நீரால் கழுவுவதோடு சுற்றுப்புறச்சூழலையும் துப்புரவு செய்வர். அதன்பின் சலவைத் தொழிலாளியால் ‘வெள்ளை’ கட்டப்படும். பூசாரியால் விளக்கு வைக்கப்பட்டு, தெய்வமாடி, பூசையின் தன்மை பற்றியும் நிறைகுறைகள் பற்றியும் கூறப்படும். அதற்கேற்றபடி பூசைகள் முன்னெடுக்கப்படும். கிராஞ்சிக் கோயிலில் கரும்புக்காரன், இளந்தாரி, முன்னோடி, சிங்கள இளந்தாரி எனும் தெய்வங்களுக்கான பூசாரிகள் தெய்வமாடுவர் (செல்லத்துரை பகீரதன், வயது - 30). கொடுதாவில் கோயிலில் கரும்புக்காரனோடு நாச்சியார், பூவாளிப் பிள்ளையார், ஐயன் இளந்தாரி, சிங்கள இளந்தாரி, குறிப்பன், மாடன் போன்ற ஒன்பது தெய்வங்கள் காணப்பட்டாலும் கரும்புக்காரன், ஐயன் இளந்தாரி, சிங்கள இளந்தாரி, நாச்சிமார் போன்றவற்றின் பூசாரிகளே தெய்வமேறியாடுவர். இப்பூசாரிகளுக்கு வேளநூல் (கும்பத்துக்குச் சுற்றும் நூல்) கொண்டு பூணூல் போடப்படுகிறது. நூற்பந்திலிருந்து நூலை முழங்கையாற் சுற்றி பூசாரியின் இரண்டு பக்கமும் போடும் மரபு காணப்படுகின்றது (பிராமணர் ஒரு பக்கமாகப் பூணூல் போடுதல் நினைவுகூரத்தக்கது). நாச்சிமார் தெய்வமேறி ஆடுபவர் பெண்பூசாரி; அவருக்குப் பூணூல் இடப்படுவதில்லை. பூசாரிகளுக்கு திருநீறு, சந்தனம் இட்டு பன்னீர் தெளிக்கும் வழக்கமும் காணப்படுகிறது.

கிராஞ்சி கரும்புக்காரன் கோயில் பூசாரி கறுப்புநிற ஆடை அணிவார். அது சுருக்கு வைத்த பாவாடையாக இருக்கும். காலில் சலங்கை, வெள்ளியாலான நெத்திப்பட்டம், பூட்டுக்காப்பு, வெண்டயம், அரையில் ஒட்டியாணம் என்பனவற்றையும், வெள்ளியாலான பூணூலையும் அணிவார். கொடுதாவில் பூசாரி வெள்ளி அணிகலன்களை இவ்வண்ணமே அணிகின்ற அதேவேளை, வெள்ளாடை அணிவார். அச்சுருக்குப் பாவாடையில் மூவர்ணக் கோடுகள் காணப்படும். கொடுதாவில் ஐயன் இளந்தாரி நெத்திப்பட்டம், வெண்டயம், பித்தளைப்பூணூல், வெள்ளாடை என்பனவற்றை அணிவார். சிங்கள இளந்தாரி வெள்ளாடை மட்டும் அணிவார். கிராஞ்சியில் சிங்கள இளந்தாரிக்கான பூசாரி வெள்ளை, சிவப்பு கலந்த ஆடையை அணிவார்.

### கால்நடையும் கரும்புக்காரனும்

கரும்புக்காரன் வழிபாட்டுச்சடங்கில் ‘பலகாலத்துக்கு’ முன்பு மாடுகளை வெட்டிப்பலியிட்டு வழிபடும் மரபு

காணப்பட்டுள்ளது. பொங்கலோடு இவ்விறைச்சியைப் படைக்கும் வழக்கம் இருந்துவந்துள்ளது (வெட்டிப்பலியிடப்படும் மாடுகளின் எண்ணிக்கை 200க்கு மேல், 108, 60 என மாறுபட்டவகையில் பலவாறு கூறப்படுகிறது). படையல் சடங்கு முடிவடைந்ததன்பின் யாவரும் ஆலயத்தில் இருந்து வெளியேறிய பிறகே பூசாரி வீடு திரும்புவார். அதன்பின் ஆலயத்தில் நிற்பவருக்கு மரணம் நேரும் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் காணப்படுகிறது. ஆயினும் குறித்த ஒரு வருடப் பூசை முடிந்து யாவரும் வெளியேறிய பிறகு, பூசாரியும் வீட்டிற்கு வந்துவிட்டார். அவரது சிறிய வயது மகன் ஆலயத்திலேயே விடப்பட்டுவிட்டது பின்பே அவருக்குத் தெரிந்தது. ஆலயத்துக்குச் செல்ல அவர் மனம் துணியவில்லை. தன் மகனைக் காக்குமாறு கரும்புக்காரனையே அவர் வேண்டிநின்றார். அச்சிறுவன் வீடு வந்து சேர்ந்தான். யாருடன் வந்தாய் என்ற கேள்விக்கு, தன்னை ஒரு மாமா கொண்டுவந்து விட்டதாகவும், கையில் ஓர் இறைச்சித்துண்டும் சிறுசோறும் தந்து ‘மாடுகளை வெட்டிப் படைக்க வேண்டாம்’ என்று கூறியதாகவும், பசுக்கன்றின் செவிகளில் இருந்து இரு சிறுதுண்டுகளையும், நாகு கன்றின் செவியில் இருந்து ஒரு சிறுபகுதியையும் வெட்டிப் படைக்குமாறு கூறியதாகவும் பதில் சொல்லி, கையிலிருந்த சோற்றையும் ஓர் இறைச்சித்துண்டையும் அவன் காட்டினான். அன்றிலிருந்து கரும்புக்காரனுக்கான பலியிடல் நிறுத்தப்பட்டு கன்றின் செவியில் சிறுதுண்டு வெட்டிப்படைத்தல் இரு ஆலயங்களிலும் நடைபெற்றுவருகின்றது. அந்தவகையில் இது கால்நடை வளர்ப்பாளர்களின் தெய்வம் எனலாம்.

### மாட்டுக்கன்று பிடித்தல்

கிராஞ்சியில் ஐயனார் பொங்கல் முடிந்து அன்னதானம் வழங்கிய பின்பும், கொடுதாவிலில் பிள்ளையார் பொங்கல் முடிந்து அன்னதானம் வழங்கிய பின்பும், கன்று பிடிக்கப் போவர். பிடிக்கப்போகும் மாட்டுக்கன்றுகள் நிற்கும் திசை, குறிப்பு என்பவற்றை, கிராஞ்சி சிங்கள இளந்தாரி, கொடுதாவில் ஐயன் இளந்தாரிப் பூசாரிகள் கலையாடிக் கூறுவர். கொடுதாவில் கரும்புக்காரன், ஐயன் இளந்தாரி பூசாரிகளும், மாடு பிடிக்கும் உரித்துடையோரும் கன்று பிடிக்கச்செல்வர். தனிக்கறுப்புநிற, மறை ஏதும் இல்லாத (அடையாளம்), குறிசுடப்படாத ஒரு பசுக்கன்றும் ஒரு நாம்பன் கன்றும் பிடித்துவரப்படும். மரநாரில் திரிக்கப்பட்ட கயிறுகள் கொண்டே இக்கன்றுகள் பிடிக்கப்படுகின்றன.

இதன்பின்பு முன்னோடித் தெய்வமேறிய பூசாரி முன்னேசெல்ல, மடைப்பண்டங்களோடு கன்றுகளையும் கொண்டு, கால்நடையாக, பறை முதலிய வாத்தியங்கள் இசைக்கப்பட, கரும்புக்காரன் கோயிலுக்குச் செல்வர். அங்கு பூசை ஏற்பாடுகள் யாவும் நடைபெறும். ஆலயத்தின் முன்னே சற்றுத்தூரத்தில் உள்ள மரத்தில் குடை போன்ற முக்காடு போடப்பட்டு, சுற்றிவர வெள்ளை கட்டப்படும். அம்மரத்தடியில் கன்று கட்டப்படும். அது கன்றுக்கட்டை அல்லது கன்றுக்கொல்லை அல்லது கன்றுகட்டும் பாலை என்று கூறப்படுகிறது. முன்பு, பன்னைக் குழையினாலேயே கொல்லை வேயப்பட்டு வந்துள்ளது. பின்பு வெள்ளை கட்டும் மரபு உருவானது. இன்றும் இயற்கையோடு இணைந்த குலதெய்வ வழிபாடாகவே கரும்புக்காரன் வழிபாடு திகழ்கின்றது.

### மடை பரவுதல்

கரும்புக்காரன் கோயிலில் கரும்புக்காரனுக்கும் பரிகலன்களுக்குமான வளந்துப்பானைகளை வைத்துப் பொங்கல் இடம்பெறும். தனிப்பசும்பாலே பொங்கலுக்குப் பயன்படுத்தப்படும். பால் கொதித்து வரும்போது மடை பரவப்படும். குலைகுலையாக பல்வேறு வகை வாழைப்பழங்கள் கொண்டுவரப்பட்டு அவற்றைச் சீப்புச்சீப்பாக வெட்டி அடுக்குவர். வெற்றிலை, பாக்கு என்பனவும் சிறப்பாக அடுக்கப்பட்டிருக்கும். பலாப்பழம், மாம்பழம் போன்றனவும் மடையில் இடம்பெறும். முறுக்கு, பால்றொட்டி (வெள்றொட்டி) போன்ற பலகாரங்கள் நிறைவாகச் செய்யப்பட்டு படைக்கப்படும். கிராஞ்சியில் வளந்துப்பானையில் பொங்கிவரும் நுரையை, பூசாரி தெய்வமேறி ஆடி, கைகளால் சுடச்சுட அள்ளிக்கொண்டுபோய் மடையில் தெளித்தல் முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. கொடுதாவிலில் மடையை ‘துலங்கல் மடை’ என்பர். கரும்புக்காரனோடு நாச்சிமார், பிள்ளையார், ஐயன் இளந்தாரி, சிங்கள இளந்தாரி, குறிப்பன், மாடன் உள்ளிட்ட ஒன்பது தெய்வங்களுக்கும் வெள்ளைவிரித்து வாழைப்பழம் சீப்புச்சீப்பாக அடுக்கி மடை வைக்கப்படும். பொங்கல் பொங்கி முடிந்ததன்பின் அவையாவும் படையல் செய்யப்படும். பூசாரிகள்

தெய்வமேறிக் கலையாடுவர். அப்போது முன்னோடியின் கையில் மூன்று பூண்கள் (வெள்ளி) இடப்பட்ட கருங்காலிப்பொல்லும், கரும்புக்காரன் கையில் தனித்தடி அல்லது இரும்பாலான பொல்லு அல்லது முக்காலிப் பொல்லும் காணப்படும்.

மடை பரவி முடிந்ததன்பின் கன்றின் காதறுப்போருக்கு திருநீறு, சந்தனம் வழங்கப்பட்டு ஒருவர் கையில் வெற்றிலையும் மற்றவர் கையில் சிறுகத்தியும் வழங்கப்படும். மரத்தின் அடியில் கட்டப்பட்ட கன்றுகளுக்கு தீருநீறு, சந்தனம் இடப்பட்டு மாலை போடப்படும். நாகுவின் செவியொன்றின் சிறுபகுதியும், பசுக்கன்றின் இரு செவிகளிலிருந்து இரு சிறுதுண்டுகளும் வெட்டப்பட்டு, வெற்றிலையில் வைக்கப்பட்டு வழங்கப்பட, கரும்புக்காரன் பூசாரி அதைப் பெற்றுக்கொண்டு கலையாடியபடி ஓடிச்சென்று மடையின் மீது அதனை வைப்பார். ஆயினும் அச்செவித்துண்டுகளை, பின்பு மடையின் மீது காணமுடியாது எனத் தகவலாளிகள் யாவரும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழிவெட்டல் சடங்கு முடிந்ததும், கன்றுகள் அவிழ்த்துவிடப்படும். அவை தத்தம் பட்டியைத் தவறாமல் சென்றடையும் என்றும், கரும்புக்காரனுக்கு செவிப்பலி வழங்கிய கன்றுகள் உள்ள பட்டிகள் நன்றே பெருகும் என்றும் நம்பப்படுகின்றது.

### பன்றி குத்தும் நிகழ்வு

வழிவெட்டல் நிகழ்வுக்குமுன் பன்றி குத்தும் நிகழ்வு என்னும் சடங்கு நடைபெறும். ஒரு இளநீரைக் குறித்த இடத்தில் மண்ணுக்குள் (இளநீரின் அளவுக்கு ஏற்ப) கிடங்கு வெட்டிப் புதைப்பர். அவ்வாறு புதைக்கும்போது மரநாரில் திரிக்கப்பட்ட கயிறைத் தடம்போட்டு மண்ணில் மறைத்து கயிற்றின் நுனியினை சற்றுத் தள்ளிப்பிடித்தபடி நிற்பர். இளநீரை மண்ணுக்குள் புதைக்கும் சடங்கினை இளந்தாரி தெய்வத்துக்கான பூசாரி நிகழ்த்துவார். இவ்விடத்தின் மேல் பன்னைக்குழை போடப்படும். கரும்புக்காரன் பூசாரி கலையாடியபடி வர, பறை உள்ளிட்ட இசைக்கருவிகள் இசைக்கப்பட, பாடல்கள் பாடப்பட, இச்சடங்கு நிகழும். பல்வேறு இடங்களுக்கு ஆடியாடிச்சென்று, இறுதியில் இளநீர் புதைக்கப்பட்ட இடத்திற்கு கரும்புக்காரன் பூசாரி சென்று, கையில் உள்ள இரும்பால் குத்தி இளநீரைத் தூக்க, தடக்கயிறு இழுக்கப்பட்டு இளநீர் இறுக்கிப்பிடிக்கப்படும். பின்பு அதனை கயிற்றோடு இழுத்துச்சென்று ஆலயத்துக்குப் புறத்தில் வீசிவிடுவர். கொடுதாவிலில் சூலத்தால் இளநீர் குத்தப்பட்டு எறியப்படும்.

### யானையேற்றம்

பூசாரி, பலம் பொருந்திய மனிதர்கள்மீது ஏறி வலம்வருதலே யானை ஏற்றம் எனப்படுகிறது. இவ்வாறு யானையேறி தெய்வத்தைச் சுற்றி வந்ததன்பின் வெள்ளை வேட்டியை நால்வர் ஏந்திப்பிடிக்க, பூசாரியின் ஆபரணங்கள், பொல், பிரம்பு உள்ளிட்ட ஆயுதங்கள் அவ்வேட்டியில் இடப்படும். அதன்பின் அவ்வேட்டியினால் அவற்றைச் சுற்றிக்கட்டி கோயில் வாசலின்மேல் வைக்கும் வழக்கம் கொடுதாவிலில் காணப்படுகின்றது. மேலும் யானையேற்றத்தின் போது வெள்ளிப்பூண் போடப்பட்ட கருங்காலிப் பொல்லில் துணியைக்கட்டி எண்ணையில் நனைத்துத் தீயிட்டு, பந்தமாக்கிக் கொண்டு செல்லுகின்ற மரபும் அங்கு உண்டு.

### வழிவெட்டல் சடங்கு

பூசைகளில் யாவும் முடிந்ததன்பின் வழிவெட்டல் சடங்கு இடம்பெறும். ஆலயத்தில் இருந்து சிறிதுதூரத்தில் சூலம் குத்தப்பட்டு, இளநீர் வெட்டப்பட்டு இச்சடங்கு செய்யப்படுவதோடு கரும்புக்காரனுக்கான பூசை நிறைவுபெறும். வழிவெட்டியபின் பூசாரி திருநீறு, சந்தனம் என்பவற்றை அடியவர்களுக்கு வழங்குவார். அவரால் திருநீறு இடப்பட்டவர்களுக்கு நோய் நீக்கம் உள்ளிட்டவை ஏற்படும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. நேர்த்தி வைத்தவர்கள் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி, தீச்சட்டி, பாற்செம்பு எடுத்தல் முதலிய செயற்பாடுகளைச் செய்வர். ஆலய முன்றலில் தீ மிதித்தல் நிகழ்வும் நடைபெற்று வருகிறது. கொடுதாவில் கோயிலில் பேய்விரட்டும் சடங்கும் நடைபெறுகின்றது. பேய்பிடித்த நபரின் தலைமயிரை ஓர் ஆணியில் சுற்றி ஆலயத்தின் முன்னே இருக்கின்ற மரத்தில் அடித்துவிட்டால் அவர் சுகம் பெறுவார் என நம்பப்படுகின்றது. வைத்தியர்களால் கைவிடப்பட்ட, தீரா நோயுடையவர்களுக்கும், படுக்கையில் நீண்டகாலம் மரணத்தை எதிர்பார்த்து (இழுத்துக்கொண்டு கிடப்பவர்கள்) இருப்பவர்களுக்கும் திருநீறிட்டு, பிரம்பால் அடித்து, தலைமையிரை ஆணியில் சுற்றி வெட்டிவிழுத்த சுகம்வரும் என கொடுதாவில்

கோயிலைச் சேர்ந்த இராமன் நாகேஸ்வரன் தெரிவிக்கின்றார்.

### கிராஞ்சி சரிமொந்தன் தெய்வம்

கிராஞ்சி சிவபுரம் குளத்துக்கருகே உள்ள மருதமரத்தடியில் இத்தெய்வத்தை வைத்து வழிபட்டு வந்துள்ளனர். அக்காலத்தில் அவ்வழியில் செல்பவர்கள் மீது ஏறிச் 'சேட்டைகள்' புரிவதாகவும், நோய்நொடிகளை ஏற்படுத்துவதாகவும், மொத்தத்தில் மக்களுக்குத் துன்பம் தருவதாகவும் இத்தெய்வம் இருந்து வந்துள்ளது. கிராஞ்சிக்குவந்த பூசாரி ஒருவர், இத்தெய்வத்தை தெய்வமாடி அடக்கமுடியாது, இதனை இரு கோயில்களுக்கு நடுவே வைத்தால்தான் அமைதிபெறும், மக்களுக்குத் துன்பம் தராது என்று கூறியதாகவும், அதன்படி கரும்புக்காரனுக்கும் அதன் அருகே உள்ள முறிகண்டிப் பிள்ளையாருக்கும் இடைப்பட்ட இடத்தில் இந்த சரிமொந்தன் தெய்வத்தை வைத்ததாகவும், அதன்பின் இத்தெய்வம் அமைதி கொண்டதாகவும் கிராஞ்சியைச் சேர்ந்த செல்வம் குறிப்பிடுகின்றார். இத்தெய்வத்திற்கும் உருவமில்லை. வேறுகதைகள் இருப்பதாகவும் தெரியவில்லை. வேறு இடங்களில் இத்தெய்வம் வழிபடப்படுவதாகவும் அறிய முடியவில்லை.

கரும்புக்காரன் பூசையின்பின் மூன்றாம் நாள் சரிமொந்தனுக்குப் பொங்கலிடப்படும். பானை பொங்கிவரும் போது கோழியின் கழுத்தை அறுத்து அல்லது முறித்து பலியிடும் வழக்கம் காணப்படுகின்றது. அத்தோடு அக்கோழியை அப்படியே நெருப்பில் இட்டுச் சுடுவர். தெய்வத்துக்கு மடைபரவும்போது இதனையும் வைத்துப் படைப்பர். இச்சடங்கு 'எச்சில் மாத்தல்' (எச்சில் மாற்றல்) எனப்படுகின்றது. இந்த மடை முழுவதும் சலவைத் தொழிலாளிகளுக்கு உரியதாகும்.

### எட்டாம் மடை

நாட்டார் தெய்வங்களுக்கு எட்டாம் மடை எனப்படுகின்ற சடங்கு பொதுவில் நிகழ்த்தப்படுதல்போல, கிராஞ்சியிலும் கரும்புக்காரனுக்கு எட்டாம்நாள் விளக்கு வைத்து, பொங்கி மடை பரவுவர். இத்தோடு கரும்புக்காரனுக்கான வருடாந்தப்பூசை நிறைவு செய்யப்படும். கொடுதாவில் கோயிலில் இச்சடங்கு இடம்பெறுவதில்லை. மூன்றாம் நாளே கோயில் பூசாரி, உரித்துடையோர் ஆகியோர் வருகை தந்து கோயிலைச் சுத்தப்படுத்தி, விளக்கு வைத்தலோடு வருடாந்தப்பூசை நிறைவு செய்யப்படுகின்றது. இவ்விரு ஆலயங்களிலும் விசேட தினங்களில் மட்டுமே விளக்கு வைக்கப்பட்டு வருகின்றது.

### ஏனையவை

நேர்த்தி வைத்தவர்களுக்காக சிறப்புப் பூசைகளும் நடைபெற்றுவருகின்றன. அதேவேளை கொடுதாவில் கோயிலில் விசேட பூசைகளின்போது, கோயிலின் உள்ளே மடை பரவாது வாசலில் வைத்தே மடை பரவப்படுவது குறிப்பிடத்தக்கது.

கிராஞ்சியில் வைத்தியர்களால் கைவிடப்பட்டவர்களுக்கான பூசை அவரவர் வீட்டில் இடம்பெற்று வருகிறது. கரும்புக்காரன், இளந்தாரி, முன்னோடி, சிங்கள இளந்தாரி எனும் நான்கு தெய்வங்களின் பூசாரிகளும் குறித்த நோயாளியின் வீட்டுக்குச் செல்வர். அப்பூசாரிகள் நால்வருக்கும் அவ்வீட்டவர் பச்சை அரிசி, பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், மரக்கறிகள் என்பனவற்றைத் தானமாக வழங்குவர். அப்போது கரும்புக்காரனுக்கான பாடல், திருமுறைகள் என்பன பாடகரால் இசைக்கப்படும். அந்த இசையின்வழி கரும்புக்காரன் பூசாரியின்மீது தெய்வமேறி ஆடி, வழங்கப்பட்ட அரிசியைக் கிள்ளி எறிந்து அடங்க, நோயாளி தெளிந்துவிடுவார். அதன்பின் எட்டாம்நாள் கரும்புக்காரனுக்கு விளக்குவைத்துப் பொங்கலிட அந்த நோயாளி முழுச்சுகம் பெற்று விடுவார் என கிராஞ்சியைச் சேர்ந்த செல்வம் குறிப்பிடுகின்றார். இந்த நம்பிக்கை இன்றும் அவ்வூர் மக்களிடம் காணப்படுகின்றது.

### சில குறிப்புகள்

- இது கால்நடை – குறிப்பாக மாடுவளர்ப்புத் தொழிலுடன் இணைந்த வழிபாட்டுமரபு என்பது தெளிவாகின்றது. முக்காலிக்கம்பி, கரும்புக்கார தெய்வத்தின் குறியாக, அடையாளமாக அமைந்திருப்பதும் அதனை மக்கள் வழிபட்டுவருவதும் தனித்துவமான ஒரு விடயமாகின்றது.
- அண்ணமார், குறிப்பன், கரும்புக்காரன் உள்ளிட்ட சிறுவேளாண் குடி மக்களின் குலதெய்வங்கள், குறிப்பாக கால்நடைவளர்ப்புடன் தொடர்புபட்ட இத்தெய்வங்கள் யாவும் பிரம்பு அல்லது பொல்லுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- மாடுகள் பலவற்றை ஒன்றாகப் பலியிடல் சமய நம்பிக்கை எனினும், அது பெரும்

பொருளாதார இழப்பாகவும் காணப்பட்டது. ஒரு கட்டத்தில் அறுபதுக்கு மேற்பட்ட மாடுகளை ஒன்றாகப் பலியிடல் ‘பட்டியழித்தல்’ ஆகவும் அமைந்தது. ஆகவே ‘இறைக்கட்டளை’யாக கூறுதல் சமய நம்பிக்கை இழப்பாகவோ, நம்பிக்கை மீறலாகவோ கருதப்படமாட்டாது எனும் எண்ணத்தின்வழி இக்கதை உரைக்கப்பட்டிருக்கலாம்.

- பட்டி மாடுகளை ஏதோவொரு சூழலில் பலியிட விரும்பாத - பட்டி தொலைந்து போன - ஏதோ ஒரு சந்தர்ப்பத்தால் இவ்வாறான கதை உருவாக்கப்பட்டிருக்கலாம்.
- வேளாண்மை - கால்நடைவளர்ப்பு இருநிலப் பண்பாடாக இருந்தகாலத்தில் விவசாயத்தை அழித்த மேய்ச்சல் மாடுகளைப் பலி செய்திருக்கலாம். பின் இரண்டும் ஒன்றான வேளாண்மை வந்தகாலத்தில், பட்டியைப் பலியிட விரும்பாதநிலையில் இக்கதை உருவாக்கப்பட்டிருக்கலாம்.
- பட்டியைக் காக்க உயிர் கொடுத்த தலைவனின் வேண்டுகோளாக, இப்பலியிடல் மரபு நிறுத்தப்பட்டு இருக்கலாம்.
- சரிமொந்தன் கிராஞ்சிக்கு உரிய தனித்துவமாகின்றது. இத்தெய்வம் தனித்து ஆராயப்பட வேண்டியதாயினும் இத்தெய்வம் குறித்த தகவல்களைப் பெறமுடியாதுள்ளது. சரிமொந்தன் - சாரி பொத்தன் - சாரி புத்தன் என்பவற்றை ‘சாரிபுத்தன்’ என்பதன் திரிபாகக் கருதினால், அது பௌத்தத்துடன் இணைத்துச் சிந்திக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகின்றது (சம்பந்தர் வரலாற்றில் சாரிபுத்தன் தலையில் இடிவிழச் செய்யப்பட்டுக் கொல்லப்பட, அவருடன் வந்த ஏனைய பௌத்தர்களுடன் சம்மந்தர் வாதிட்டு வென்று அவர்களைச் சைவத்தில் சேர்த்த வரலாறு பெரிய புராணத்தில் இடம்பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் கிராஞ்சிக்கு அருகில் உள்ள மன்னார் மாதோட்டத்தை, அங்குள்ள திருக்கேதீஸ்வரத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளமை கவனத்திற்குரிய விடயமாகும்.)
- கரும்புக்காரன் சிறுகுடி வேளாளரின் குலதெய்வம் எனினும், இவ்விரு கோயில்களும் சலவைத் தொழிலாளர்களுக்கும் மடைப்பங்கை வழங்கி வருகின்றன.
- கிராஞ்சியில் பங்குனி மாதத்தில் ‘பால் காய்ச்சுதல்’ எனும் சிறப்பு வழிபாடு கரும்புக்காரனுக்கு நிகழ்த்தப்படுகிறது. பச்சைப் பாலைக் கடைந்து நெய் எடுத்து அதில் விளக்கேற்றி, மடை வைத்து வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது.
- பன்றி குத்தும் நிகழ்வு என்பது விவசாயத்தோடு சம்பந்தப்பட்டது. வயலை நாசம் செய்யவரும் பன்றியைக் குத்திக் கொல்லுதலும், தடம் வைத்துப் பிடித்தலுமான செயல்முறை இத்தெய்வத்தின்முன் சடங்காக, ஒருவகைக் கூத்தாக நிகழ்த்தப்படுகின்றது. பன்றியை உணவாகவோ தெய்வத்துக்கான படையலாகவோ எடுப்பதில்லை என்பது இங்கு கவனத்துக்குரியது. அதேவேளை இந்தச்சடங்கு வன்னிப் பிராந்தியத்தின் ‘பன்றிப் பள்ளு’ இலக்கியத்தையும் கூத்தையும் ஞாபகமூட்டி நிற்கின்றது.

**முடிவுரை**

கிராஞ்சி, கொடுதாவில் கிராமங்களில் காடுகளை அண்மித்தும், பல்லாய் பிள்ளையாரில் பண்டமெடுக்கும் இடத்திலும் கரும்புக்காரன் தெய்வம் வழிபடப்பட்டு வருகின்றது. மாடுவளர்ப்புத் தொழிலுடன் முழுமையாகத் தொடர்புபட்ட வழிபாடு இதுவாகும். ஆயினும் விவசாயநிலத்தோடும் இது தொடர்புறுத்தப்படுகின்றது. சிறுகுடி வேளாளர்களின் குலதெய்வமான கரும்புக்காரன் வழிபாட்டை வேறு எங்கும் காண முடியாதுள்ளது. சிறுகுடி வேளாளரின் அனைத்துக் குலதெய்வங்களும் பிரம்பு, பொல் என்பனவற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. வேத வேள்வி மரபில் காணப்பட்ட ‘மாட்டைப் பலியிடல்’ எனும் கருத்துரு பிற்காலத்தில் பல்வேறு காரணங்களால் வேத வேள்வி மரபினரான வைதிக மதத்தவர்களாலேயே நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இயற்கை தெய்வவழிபாட்டில், குறிப்பாக ஈழத்துத் தமிழ்ச்சூழலில் ‘மாடு பலியிடல்’ எனும் மரபு கரும்புக்காரனோடு பின்னிப்பிணைந்துள்ளது. இன்று முழுமையான பலியிடல் இல்லையாயினும், கன்றுகளுடைய காதுகளின் சிறுபகுதிகளை அறுத்துப்படைத்தல் என்பது அதன் நீட்சியே. கரும்புக்காரன் பற்றிய கதையாடல்கள், வாய்மொழிவழக்காறுகள் என்பவற்றை இன்று அறிவது சிரமமாக இருப்பினும், இவ்வழிபாடு இந்த நிலத்தோடும், அதன் பண்பாட்டோடும், பொருளாதாரத்தோடும் இரண்டறக்கலந்த இயற்கை வழிபாடாக இன்றும் திகழ்தல் குறிப்பிடத்தக்கது.

எம். எம். ஜெயசீலன்



எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

# இந்தியா – இலங்கை ஒப்பந்தம்: தோல்வியடைந்த ஒப்பந்தமும் கற்றுக்கொள்ளாத பாடமும்

மலையகத் தமிழரின் சமூக, அரசியல் விடுதலைக்காகத் தன் வாழ்வின் பெரும்பாகத்தை அர்ப்பணித்த நடேசய்யர் குறித்த ஆய்வுகள் அவரது பங்களிப்பை அறிமுகப்படுத்தல், அவற்றை மதிப்பிடுதல் என்ற தளங்களில் முன்னோடி முயற்சிகளாக விளங்குகின்றன. இருந்தபோதிலும் அவை குறிப்பிட்ட சில மட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன.  நடேசய்யரின் மூல ஆவணங்கள் பல கிடைக்கப்பெறாத காலத்தில், கிடைக்கப்பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும், சில புதிய மூலங்களைக் கண்டறிந்தும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அவற்றுள் நடேசய்யரின் மொத்தப் பங்களிப்புகளும், அவரின் கருத்தியல் தளத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களும் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படாத நிலையே தொடர்கிறது. அந்தவகையில், ஏற்கனவே கிடைக்கப்பட்டுள்ள நூல்களையும் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள நூல்களையும் மதிப்பிடுவதன் மூலம் நடேசய்யரின் பங்களிப்புகளையும், அவர் காலத்து சமூக, அரசியல் அசைவையும் கண்டுகொள்ளவும் நடேசய்யர் பற்றிய ஆய்வுகளில் நிலவும் இடைவெளியை நிரப்பவும் எதிர்கால ஆய்வுகளுக்கான திசைகாட்டல்களை வழங்கவும் ‘கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை’ எனும் இத் தொடர் எழுதப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டு இலங்கை அரசியலின் வெளிநாட்டு உறவில் இந்தியா தலையான இடத்தினை வகித்துள்ளது. இலங்கையில் நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் குடியேறியிருந்த இந்தியரின் அந்தஸ்து மற்றும் உரிமைகள் தொடர்பான உரையாடல்கள் அதற்கு அடிப்படைக்காரணமாக அமைந்தன. இலங்கையின் பெருந்தோட்டங்களிலும் அரச மற்றும் தனியார் துறைகளிலும் 19 ஆம் நூற்றாண்டு முதல் தொழில்புரிந்து வந்த இந்தியரின் சனத்தொகைப் பெருக்கமும் அரசியல் பங்குபற்றலும் சுதேசிய ஆட்சியாளர்களிடையே அதிருப்திகளைத் தோற்றுவித்தன. அதனால் அவ்வாறு குடியேறியவர்களை அந்நியராக அடையாளப்படுத்திய அவர்கள், அம்மக்களை இலங்கையிலிருந்து அப்புறப்படுத்தும் முயற்சிகளையும், புதிதாக இலங்கைக்கு வருபவர்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளையும் சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி முன்னெடுக்கத் தொடங்கினர். அம்முன்னெடுப்புகள் இலங்கை - இந்திய அரசியலை நேரடியாகப் பிணைத்தன.

இலங்கை அரசியலில் மட்டுமல்லாது இந்திய அரசியலிலும் இலங்கைவாழ் இந்தியர் தொடர்பிலான உரையாடல்கள் மிகுந்த கவனத்துக்கு உரியதாக விளங்கிவந்துள்ளன. இந்திய அரசுக்கு இலங்கைவாழ் இந்தியர் பிரச்சினையானது, இலங்கையுடன் மட்டும் மட்டுப்பட்ட விடயமாக அமையவில்லை. மலேயா, தென்னாபிரிக்கா, பீஜி, கயானா முதலான பல நாடுகளுக்கும் குடிபெயர்ந்த இந்தியருடன் தொடர்புடையதாக அப்பிரச்சினை விளங்கியுள்ளது. அதனால் இலங்கையில் வாழும் இந்தியர் தொடர்பில் இந்தியா உருவாக்கும் கொள்கைகளும் சட்டங்களும் இந்தியர் வாழும் ஏனைய நாடுகளையும் கவனத்தில் கொண்டவையாக அமைந்தன.

பெருந்தொகையான இந்தியர் இலங்கையில் குடியேறியமை இலங்கையின் குடித்தொகை கட்டமைவிலும், அரசியல் நடைமுறைகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. "இலங்கையின் சமீபத்திய வரலாற்றில் இந்தியத் தொழிலாளரின் இலங்கை வருகையைப் போல வேறு எந்த நிகழ்வுகளும் நாட்டின் அரசியலில் இவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை" (*Jayasinghe*, **2006**, *The Indo - Ceylon Problem: The Politics of Immigrant Labour*: **03**) எனக் கணிப்பிடும் அளவுக்கு அவர்களின் குடிவருகை தாக்கம் செலுத்தியுள்ளது. இலங்கையில் இந்தியர் குடியேறிய தொடக்ககாலத்தில் இரு நாட்டு அரசுகளுக்கு இடையே அரசியல் நெருக்கடிகள் தோற்றம்பெறவில்லை. நீண்டகாலமாக இலங்கைவாழ் இந்தியர் எவ்வித அரசியல் உரிமைகளுமற்ற நிலையிலேயே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். பெருந்தொகையான இந்தியத் தொழிலாளர்களைக் கொண்டிருந்த பெருந்தோட்டங்கள் சிங்களக் கிராமங்களுடன் தொடர்பற்றவகையில், சிங்களவர்களது சமூக, அரசியல் வாழ்வுடன் சம்பந்தப்படாத வகையில் இயங்கியுள்ளன. நாட்டின் அரசியலில் சுதேசியரின் ஆதிக்கம், பங்கேற்பு முதலியன குறைந்த மட்டத்திலேயே இருந்துள்ளன. அதனால் இந்தியர் குடியேற்றம் இரு நாடுகளுக்கு இடையே அரசியற் சிக்கல்களை ஏற்படுத்தவில்லை. தோட்டத்தொழிலாளர்கள் மிகமோசமாகச் சுரண்டப்பட்டு, அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்ததால் இந்திய அரசு இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தது. அந்த அழுத்தம் காலனிய அரசுக்கும், தோட்ட உடமையாளருக்குமானதாகும். ஆனால், 1920களில் காட்சிகள் மாறத்தொடங்கின. அக்காலம்முதல் சுதேசியரின் அரசியல் ஆதிக்கம் பெருகத் தொடங்கியது; இலங்கைவாழ் இந்தியருக்கும் அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டன. அக்காலத்திலேயே, 1920களில், இந்திய - இலங்கை உறவு அரசியல் பிரச்சினையாக முகிழ்க்கத் தொடங்கியுள்ளது. டொனமூர் அரசியல் சீர்திருத்தம் (1931), சுதேசியருக்கு ஆட்சியதிகாரத்தில் மிகுதியான பங்கினை வழங்கியபோது, சுதேசிய ஆட்சியாளர்களிடம் இந்தியர் எதிர்ப்பு மிகுதியாக வெளிப்பட்டுள்ளது.

இலங்கையில் பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டுவரும் இந்தியரை இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டவர்களாகக் கருதுவதா, அவர்களை இலங்கையில் தற்காலிகமாகக் குடியேறியவர்கள் எனக்கொண்டு இந்தியப் பிரஜைகளாகக் கருதுவதா என்பதே இந்திய - இலங்கை அரசியல்

உறவின் மையமான பிரச்சினையாக விளங்கியுள்ளது. இலங்கையின் சுதேசிய ஆட்சியாளர்கள், இந்தியர் இலங்கையில் தற்காலிகமாகக் குடியேறியவர்கள் என்ற நிலைப்பாட்டையும் இந்திய அரசினர், இலங்கையில் குடியேறிய இந்தியரை இலங்கையராகக் கொள்ளவேண்டும் என்ற நிலைப்பாட்டையும் கொண்டிருந்துள்ளனர். அதனால், அப்பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக இருநாட்டு அரசியல் தலைவர்களுக்கு இடையேயும் இருநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இடையேயும் பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு 1941 ஆம் ஆண்டு இந்திய, இலங்கைப் பிரதிநிதிகளுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் பற்றியதாக நடேசய்யரின் 'இந்தியா - இலங்கை ஒப்பந்தம்' என்ற நூல் அமைந்துள்ளது.

*Indo - Ceylon Agreement: with Comments* என்ற ஆங்கில உபதலைப்புடன் வெளிவந்துள்ள இச் சிறுநூல், ஹற்றன் கணேஷ் பிரஸினால் 1941 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. நூலின் ஒரு பிரதியினுடைய விலை 25 சதமென நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலை பெ. சரவணகுமார் 2022 ஆம் ஆண்டு மறுபதிப்பாகக் கொண்டுவந்துள்ளார்.

நடேசய்யர் நேரடி அரசியலில் ஈடுபடத்தொடங்கிய காலத்தில் மெல்ல மெல்ல முளைவிடத் தொடங்கிய இந்திய எதிர்ப்பானது, பின்னர் மிகுந்த வளர்ச்சிபெறத் தொடங்கியது. அவர் நேரடி அரசியலில் ஈடுபட்ட கால்நூற்றாண்டு காலத்தில் (1924 - 1947) இந்திய எதிர்ப்பானது, சுதேசிய ஆட்சியாளர்களால் வலுவான சக்தியாகக் கட்டியெழுப்பப்பட்டது. அதனால் நடேசய்யரின் அரசியல் இயக்கம் இந்திய - இலங்கை உறவு, அது தொடர்பிலான சட்டங்கள், ஒப்பந்தங்கள் முதலானவற்றில் மிகுந்த அக்கறைகாட்டி வந்துள்ளது. அந்த அக்கறையின் ஒரு வெளிப்பாடாக இந்நூலைக் கொள்ளலாம்.

இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளர்களின் எதிர்காலம் இருநாட்டுப் பிரதிநிதிகளால் செய்துகொள்ளப்பட்ட மேற்படி ஒப்பந்தத்தினால் தீர்மானிக்கப்படயிருப்பதால் இலங்கையில் வாழும் இந்தியர் ஒவ்வொருவருக்கும் இந்த ஒப்பந்தம் மிகுந்த முக்கியத்துவமுடையதாக விளங்கியுள்ளது. இலங்கைவாழ் இந்தியரைப் பாரபட்சமாக நடத்துவதிலும், அவர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதிலும், புதிதாக இலங்கை வரவிருக்கும் இந்தியரைக் கட்டுப்படுத்துவதிலும் சுதேசிய சிங்கள ஆட்சியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வந்ததால், இலங்கைவாழ் இந்தியர் தம் இருப்பை வலுவாக நிலைநிறுத்துவதற்கு இந்த ஒப்பந்த விதிகளைத் தெளிவாகப் புரிந்துகொள்வதும் அவ்விதிகளுக்கு அமைய செயற்படுவதும் அவசியமானதாக இருந்துள்ளன. அதனைக் கருத்திற்கொண்டே நடேசய்யர், ஒப்பந்தம் தொடர்பான விழிப்புணர்வை இந்நூல்வழி மேற்கொள்ள முனைந்துள்ளார்.

இச்சிறு நூலானது கூட்டு ஒப்பந்த அறிக்கை, வியாக்கியானம் என இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. கூட்டு ஒப்பந்த அறிக்கை என அமைந்துள்ள முதற்பாகம், இருநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது. இப்பகுதி இலங்கைக்குள் முதன்முறை வருவதும் திரும்ப வருவதும், கோட்டாக்கள், வாக்குரிமை, பதிவுசெய்தல், அந்தஸ்து, பொதுவிதிகள் எனும் ஆறு பகுதிகளைக் கொண்டுள்ளது. வியாக்கியானம் என அமைந்துள்ள இரண்டாம் பகுதி, ஒப்பந்தத்தின் மூலக்கொள்கைகள், இலங்கையர் யார்?, இலங்கை இந்தியர் - புதுப்பேர்வழிகள், பழைய இந்தியர், சில முக்கிய விஷயங்கள் எனும் ஐந்து அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இந்த இரண்டாம் பகுதியில் கூட்டு ஒப்பந்த அறிக்கையின் விதிகள் குறித்த வியாக்கியானங்களையும் விமர்சனங்களையும் நடேசய்யர் முன்வைத்துள்ளார்.

இலங்கைவாழ் இந்தியரின் அந்தஸ்து, அவர்களின் அரசியல் - பொருளாதார உரிமைகள் தொடர்பில், இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய தேவை 1930களின் இறுதியில் ஏற்பட்டது எனலாம். இலங்கைவாழ் இந்தியருக்கு எதிரான நிலைப்பாட்டைச் சுதேசிய சிங்கள ஆட்சியாளர்கள் 1920கள் முதலே வெவ்வேறு தளங்களில் முன்னெடுக்கத் தொடங்கினர். இந்தியரின் சனத்தொகைப் பெருக்கம், அரசு மற்றும் தனியார்துறைகளில்

அவர்கள் வகித்துவந்த தொழில்கள் ஆகியன சுதேசிய சிங்கள ஆட்சியாளர்களின் வெளிப்படையான குரோதத்துக்குக் காரணமாக அமைந்தன. 1920களின் பிற்பகுதியிலிருந்து அதிகரிக்கத் தொடங்கிய இலங்கைமயமாக்கல் செயற்பாடு, உலகப் பொருளாதாரப் பெருமந்தம், உலகமகா யுத்தம் முதலானவை சுதேசிய சிங்கள ஆட்சியாளர்களின் இந்தியர் எதிர்ப்பை மேலும் மிகுவித்தன.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலப்பகுதி வரையான இந்திய - இலங்கை உறவுகளை ஆழமாக ஆராய்ந்துள்ள எஸ்.யு. கொடிகார (S.U. Kodikara), இந்திய - இலங்கை உறவு சிக்கலுக்குரியதாக மாறியதில், இலங்கையில் 1931 இல் புதிய அரசியல் சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்குக் காலனிய அரசு எடுத்த முடிவிலிருந்து எழுந்த பிரச்சினைகள், 1930களின் தொடக்கத்தில் ஏற்பட்ட உலகப் பொருளாதாரப் பெருமந்தத்திலிருந்து எழுந்த பிரச்சினைகள் ஆகியனவும், இந்தியக் குடியேற்றம் தொடர்பிலான இலங்கையரின் மனப்பான்மையில் அவை ஏற்படுத்திய தாக்கமும் காரணமாக அமைந்தன என்பார் (Indo - Ceylon Relations Since Independence, 1965: 74). இவற்றினை அரசியல் தளத்தில்நின்றும், பொருளியல் தளத்தில்நின்றும் கொடிகார விரிவாக ஆராய்ந்துள்ளபோதிலும் சில விடயங்களை வெளிப்படையாக விவாதிப்பதில் அவர் தயக்கம் காட்டியுள்ளதை - தவிர்த்துள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது. அவ்வாறு அவர் தவிர்த்த விடயங்களை நடேசய்யர் வெளிப்படையாகப் போட்டுடைத்திருக்கிறார். சான்றாக,

“அரசியல் அதிகாரம் சிங்களச் சகோதரர்களுக்குக் கிடைத்த உடனே, அவ்வதிகாரத்தைத் தங்களுக்குச் சாதகமாய் உபயோகித்துக்கொள்ள முற்பட்டார்கள். வியாபாரமெல்லாம் அந்நியர் கையில் இருப்பதைக் கண்டார்கள். காணிகளில் பெரும்பாகம் அந்நியர் கையில் இருக்கக் கண்டார்கள். வியாபாரத்திலும் இதர தொழில்களிலும் வேலை செய்பவர்கள் இந்தியர்கள் என்பதைக் கண்டார்கள். இந்தியர்கள் இந்நாட்டில் இல்லாவிட்டால் தங்களிடமே எல்லாக் காணிகளும் வியாபாரங்களும் தொழில்களும் இருக்கும் எனக் கருதினார்கள்... இக்கிளர்ச்சியால் தங்களுக்கு அரசியல் அதிகாரம் நிரந்தரமாயிருக்கும் என்பதைக் கண்டார்கள். ஆகவே, இந்தியர்களுக்கு விரோதமான கிளர்ச்சி 10 - 12 வருஷங்களுக்கு முன்தான் கிளம்பியது. இந்தியத் துவேஷத்தைப் பரப்பப் பலர் முன்வந்தார்கள். இந்தப்போக்கை கவனித்து மந்திரிகளும் இலங்கையர்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் கற்பிக்கத் தலைப்பட்டார்கள்”

என்ற விபரிப்பு, இலங்கை - இந்திய உறவில் நெருக்கடிகளைத் தோற்றுவித்த காரணிகளைச் சுருக்கமாகவும் செறிவாகவும் எடுத்துரைத்துள்ளதைக் காணலாம். கொடிகார இலங்கையர் தளத்தில்நின்று இந்திய - இலங்கை உறவை ஆராய்ந்துள்ளமையால் அவரின் முடிவுகளில் இலங்கைச்சார்பு உள்ளுறைந்திருப்பதைக் கண்டுகொள்ள முடிகிறது. இதனை இன்னொரு சான்றின் மூலமும் நிரூபிக்கலாம். தொடக்ககாலத்தில் இலங்கையில் குடியேறிய இந்தியர்களைப் போல அண்மைக்காலத்தில் (காலனியக் காலம்) குடியேறியவர்கள் நாட்டின் நிரந்தரப் பிரஜைகளுடன் ஒருங்கிணையவில்லை எனக்கூறும் அவர், அதற்கான காரணங்களாகப் பின்வரும் மூன்றினைக் குறிப்பிட்டுள்ளார்:

1. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெருந்தோட்ட எல்லைக்குள் சிங்களக் கிராமங்களின் தொடர்பற்றும், இலங்கையின் அரசியல், சமூக வாழ்வில் பங்குபற்றாமலும் தனித்து வாழ்கின்றமை.
2. தொடக்ககாலம் முதலே தோட்டங்களுக்குத் தேவையான அளவு தொழிலாளர்களே தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டனர். வேலை குறைவான காலங்களில் அத்தொழிலாளர்கள் தம் கிராமங்களுக்குத் திரும்பச் செல்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். அத்துடன் அவர்கள் தம் இந்தியக் கிராமங்களுடன் தொடர்புகளைப் பேணினர்.
3. இந்துக் கூட்டுக்குடும்ப வாழ்க்கையின் பழக்கவழக்கங்களின் காரணமாக, இந்தியர் இந்தியாவிலுள்ள குடும்பத்துடன் பிணைக்கப்பட்டிருந்தனர். சொத்துப் பற்றிய கொள்கையால், மையக் குடும்பத்தை

நோக்கி ஈர்க்கப்பட்டனர். அதனால் வெளிநாட்டில் தங்குவது அவர்களுக்கு ஒரு தற்காலிக நிகழ்வாகும் (1965: 73,74).

இம்மூன்று காரணிகளையும் ஆராய்ந்து பார்க்கின்றபோது, முதலாவது காரணி மட்டுமே இலங்கை மக்களுடன் ஒருங்கிணைவை ஏற்படுத்துவதில் எதிர்நிலையான தாக்கத்தை மிகுதியாக ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை, இலங்கையில் நிலையாக வாழ்ந்துவரும் இந்தியரின் எண்ணிக்கை காலத்துக்குக்காலம் அதிகரித்துச் சென்றமையும், இலங்கையில் குடியேறிய தோட்டத்தொழிலாளர்களுள் அநேகர் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலிருந்தமையும், ஏனைய இரு காரணிகளும் தாக்ககரமான பாதிப்பினைச் செலுத்தியுள்ளன என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு இட்டுச் செல்கின்றன. கொடிகார இலங்கைவாழ் இந்தியர் இலங்கையில் நிலைகுடியாக வாழவில்லை என்பதை நியாயப்படுத்துவதற்கு மேற்படி காரணிகளை வலிந்து திணித்துள்ளார் என எண்ணத் தோன்றுகிறது.

இலங்கையில் இந்தியர் எதிர்ப்பு வளர்ச்சிபெற்ற பின்னணியை வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது, டி.எஸ். சேனாநாயக்க 1926 ஆம் ஆண்டிலேயே, "சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, ஆட்சேர்ப்பு முகவர்களுக்குக் குறைந்தளவிலான ஊக்கத்தொகைகள் வழங்கப்படாவிட்டால், இலங்கை விரைவில் தொழில்திறனற்ற இந்தியத் தொழிலாளர்களால் முழ்கடிக்கப்பட்டுவிடும். கட்டுப்பாடற்ற வகையில் இந்தியாவிலிருந்து குடிவருகின்றமையானது சம்பள விகிதங்கள், சுதேசியரின் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் மட்டுமல்ல, தேவையான புலம்பெயர் தொழிலாளர்களையும்கூட மோசமாகப் பாதிக்கும்" (மேற்கோள்: மேலது: 201) எனத் தன் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளார். இடதுசாரி அரசியலை முன்னெடுத்த ஏ.இ. குணசிங்க, துறைமுகத் தொழிலாளர் இயக்கத்தின் மூலம், துறைமுகத்தில் சரக்குகளை ஏற்றி இறக்கும் பணிகளில் இருபத்தைந்து விகிதத்தை இலங்கையருக்கு ஒதுக்கவேண்டும் என்ற கோரிக்கையை 1928 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார். 1929 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புகையிரத விதிகள் மாற்றத்தின்படி, ரயில்நிலையத் தொழில்களில், தேவையான இலங்கையர் இல்லாத பட்சத்திலேயே பிறருக்கு (இந்தியருக்கு) தொழில் வழங்கலாம் என்ற விதி கொண்டுவரப்படுகிறது. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டபோது (1931) இலங்கைவாழ் இந்தியருக்குச் சிறப்பு விதிகள் உருவாக்கப்பட்டு, கட்டுப்பாடற்ற வகையில் அவர்களுக்கு வாக்குரிமை வழங்குவது தவிர்க்கப்பட்டது. 1933 ஆம் ஆண்டுக்குரிய அரசாங்க சேவைச் சுற்றறிக்கையொன்று, அரசாங்கச் சேவைப் பணிகளில் இலங்கையர் கிடைக்கின்ற பட்சத்தில், இலங்கையரல்லாதவரைப் பணியிலமர்த்தக்கூடாது என்ற விதியைப் பிறப்பித்தது.

1935 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் சட்டம், இலங்கைவாழ் இந்தியர் நிலம் வாங்குவதில் தடையை ஏற்படுத்தியது. கிராம சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தின்படி (1937) தோட்டத்தொழிலாளருக்குக் கிராம சபைத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. இத்தகைய பாரபட்சத்தின் உச்சமாக 1939 ஆம் ஆண்டு நாட்சம்பளத்துக்கு அரசாங்கத்துறைகளில் பணியாற்றிய 4000 இந்தியர் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். அத்துடன் இலங்கையரல்லாத நாட்சம்பள அரசாங்க ஊழியருக்கான ஓய்வூதியத் திட்டம் (1939) கொண்டுவரப்பட்டது. அதனால் இந்தியர் பலர் (ஏறக்குறைய 2500 பேர்) ஓய்வூதியம் பெற்றுப் பணியிலிருந்து நீங்கியுள்ளனர். இத்தகைய பாரபட்சங்களுக்கான - இந்திய எதிர்ப்புச் செயற்பாடுகளுக்கான எதிர்வினையாக, தொழில்திறனற்றோர் இலங்கைக்குக் குடிபெயர்வதை இந்திய அரசு தடை செய்ததுடன், இலங்கையுடன் வர்த்தகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான முன்னைய இந்திய வாய்ப்பைத் திரும்பப் பெற்றது. இருந்தபோதிலும் இந்தியருக்கு எதிரான செயற்பாடுகளைச் சுதேசிய சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கலாயினர்.

1940 இல் கொணடுவரப்பட்ட மீன்பிடிச் சட்டம் இலங்கையரல்லாதவர் மீன் பிடிப்பதற்கு அனுமதி வாங்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தது. அதனால்

*நீண்ட காலமாக இலங்கையில் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வந்த இந்தியர் பாதிப்புற்றனர். வாக்காளர் பதிவிலும் கடுமையான விதிமுறைகளைக் கொண்டுவந்தனர். இலங்கைவாழ் இந்தியரை வாக்காளர் பட்டியலில் பதிவதற்கு ஆவணங்கள் மட்டும்போதாது அவர்களை நேரடியாக அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என்ற நடைமுறையை 1940 ஆம் ஆண்டு கொண்டுவந்தனர். அதனால் 1939 ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட இலங்கைவாழ் இந்தியர் வாக்காளர் தொகை, 1941 ஆம் ஆண்டு கணிசமாகக் குறைந்தது.*




**இந்தியா - இலங்கை ஒப்பந்தம் எனும் நூலின் முதற் பக்கம்**

*“சிங்களத் தலைவர்கள் இந்தியாவிலிருந்து சுதந்திரமாகக் குடியேறியதால்தான் இலங்கையில் வேலையின்மை ஏற்பட்டதாக உறுதியாக நம்பினர். அதனால் முப்பதுகள் முழுதும் தொழிலாளர் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்க சபையில் தொடர்ச்சியாக அழுத்தத்தைப் பிரயோகித்தனர்” (மேலது: 86). அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட இலங்கைமயமாக்கம் என்பது இந்தியரை அந்நியப்படுத்தல் என்பதையே மையமிட்டிருந்தது. அதனாலேயே இந்தியர் அதிகமாகப் பணிபுரிந்த அரசாங்கத்துறைகளிலிருந்து அவர்களை வெளியேற்றும் முயற்சிகளைச் சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொண்டனர். அவர்களின் செயற்பாடுகளால் இந்தியர் ஆதிக்கம் அரசதுறைகளில் கணிசமாகக் குறைந்தது. அரச சேவையில் 1936 ஆம் ஆண்டு 26 விகித இந்தியர் பணியாற்றியுள்ளனர். இத்தொகை 1941 ஆம் ஆண்டு 12 விகிதத்துக்குக் குறைந்துள்ளது. அத்துடன் சுதந்திரமாகக் குடிவருதலைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் சுதேசிய சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்த வந்தனர். ஆனால், தோட்ட உடைமையாளர் குடிவருகையைக் கட்டுப்படுத்தும் தீர்மானத்துக்கு ஆதரவு நல்கவில்லை. இந்நிலையால் கட்டுப்பாடற்ற குடியேற்றத்தால் இலங்கையின் நிரந்தரக்குடிகள் வேலையின்மை அல்லது பிற பொருளாதார இழப்புக்கு உள்ளாகிறார்களா? என்பதை ஆராய்வதற்கு ஜக்சன் என்பார் தலைமையில் ஒரு குழு உருவாக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை, கட்டுப்பாடற்ற குடியேற்றத்துக்கும் (இந்தியரின்) சுதேசியரின் பொருளாதார இழப்புக்கும் காரணமில்லை என்பதைக் கண்டறிந்ததுடன், தோட்டங்களுக்கு அதிகமான தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்பதையும் வெளிப்படுத்தியது. இருந்தபோதிலும் சிங்கள ஆட்சியாளர்கள் தம் இந்தியர் எதிர்ப்பு நிலைப்பாட்டிலிருந்து மாறவில்லை. அதனாலேயே இலங்கையரல்லாதவர் இலங்கைக்குக் குடிவருவதைக் கட்டுப்படுத்தும் குடிவரவு மசோதா (1941), இலங்கையர் அல்லாதவர்களைப் பதிவு செய்யும் மசோதா (1941) ஆகியவற்றைக் கொண்டுவந்தனர்.*

*1939 ஆம் ஆண்டு நாட்சம்பளத்துக்குப் பணியாற்றிய இந்தியரைப் பணியிலிருந்து நீக்கிய பின்னர், நேரு அவர்கள் இந்தியக் காங்கிரஸ் பிரதிநிதியாக இலங்கை வந்து பேச்சுவார்த்தைகளை நிகழ்த்தியுள்ளார். அதன் தொடர்ச்சியாக, இலங்கைவாழ் இந்திய மக்களின் அந்தஸ்து, பொருளாதார - அரசியல் உரிமைகள் தொடர்பில் ஆராய்வதற்கான மாநாடொன்று 1940 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதுடில்லியில் இலங்கை - இந்திய பிரதிநிதிகளுக்கு இடையே இடம்பெற்றது. இலங்கைவாழ் இந்தியர் தொடர்பில், இருநாடுகளுக்கும் பொதுவான அனைத்துப் பிரச்சினைகளுக்குமான ஒரு திருப்திகரமான முடிவினை, முறையான*

பேச்சுவார்த்தையின்மூலம் தீர்த்துக்கொள்வதை இலக்காகக்கொண்டு இந்த மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அம்மாநாடு எவ்வித தீர்க்கமான முடிவினையும் அடைவதற்கு வழிசமைக்கவில்லை. இலங்கைப் பிரதிநிதிகள், "இலங்கையின் அன்றைய பொருளாதார நிலைமையின் பின்னணியில் அதிகரித்து வரும் மக்கள்தொகை, வேலையின்மையின் அதிகரிப்பு, வாழ்க்கைத்தர வீழ்ச்சி மற்றும் உலகமா யுத்தத்திற்குப் பின்னரான பொருளாதார மந்தம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கைவாழ் இந்தியர் பிரச்சினைக்கான முடிவுகளை முன்வைக்க முனைந்தனர்" (மேலது: 93). அதன்படி, இலங்கையில் வாழும் சகல இந்தியருக்கும் அரசியல் - பொருளாதார உரிமைகளை வழங்க முடியாது, இலங்கைமீது நிரந்தர அக்கறையுடைய இந்தியருக்கு மட்டும் அவ்வுரிமைகளை வழங்கலாம் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தியப் பிரதிநிதிகளோ, "பிரிட்டிஷ் அரசாங்கத்தின்கீழ் ஒரு குறிப்பிட்ட நாட்டில் பல ஆண்டுகளாக வாழும் இந்தியர்கள், அந்நாட்டின் பூர்வீக மக்களுடன் சமத்துவத்தைப் பெறுகிறார்கள். சம உரிமைகளைப் பெறுகிறார்கள்" (மேலது: 94) என்ற வாதத்தின் மூலம், இலங்கைவாழ் இந்தியர், இலங்கையருக்கு உரிய சகல உரிமைகளுக்கும் உரித்துடையவர் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர். அத்துடன் இலங்கையில் வாழும் இந்தியருக்கான இலங்கைக்குடியுரிமை இலகுவான நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்பதையும் இந்தியப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர். இந்த இருதுருவ நிலைப்பாட்டால், அம்மாநாடு தோல்வியில் நிறைவடைந்தது. அதன்பின்னர் 1941 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை இலங்கையில் இடம்பெற்றது. அப்பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிவுகளே இந்தியா - இலங்கை கூட்டு அறிக்கை என வெளியிடப்பட்டது.

இந்தியாவில் தோல்விகண்ட பேச்சுவார்த்தை இலங்கையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணங்களை நடேசய்யர் பின்வருமாறு விளக்கியுரைத்துள்ளார்:

"இந்தியா ஏற்படுத்திய தொழிலாளர் போக்குவரத்துத் தடையை எடுத்துவிடவேண்டி தோட்டத்துரைமார்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பலமான வேலை செய்தார்கள். போதாக்குறைக்கு காங்கிரஸ்காரர்களுடைய நிர்வாகம் இந்தியாவில் மறைந்தது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் வியாபார விஷயத்தில் ஒப்பந்தம் ஏற்படவேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டது. ஏனெனில், இலங்கைக்குப் பிறநாடுகளினின்றும் சாமான்கள்வரத் தடைப்பட்டபடியால் இந்தியாவின் நல்லெண்ணத்தை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே, சமாதானப்பேச்சுக்கள் நடத்தி இலங்கை இந்தியர் விஷயத்தில் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று இலங்கை அரசினர் எழுத, இதுதான் சமயம் என்று ஏகாதிபத்தியத்தின் நன்மையைக்கருதி நிற்கும் இந்தியா கவர்ன்மெண்டாரும் ஒப்புக்கொண்டார்கள்." ஆகவே, இலங்கைவாழ் இந்தியர் நன்மை என்பதைவிட, அக்காலப் பூகோள அரசியல் நகர்வுகள் இணக்கமான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான சூழலைத் தோற்றுவித்தன எனலாம்.

1941 ஆம் ஆண்டு இடம்பெற்ற பேச்சுவார்த்தை, இலங்கை அரசாங்கம் வரைந்த குடிவரவு மசோதாவை அடியொட்டியதாக அமைந்தது. இந்தியாவிலிருந்து இலங்கை வருபவர்களுக்குப் பிரயாண அனுமதிச்சீட்டு (Passport) வழங்கும் முறையைக் கொண்டுவருதல், குடிவரவு தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்க இந்தியப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குடிவரவுச்சபை ஒன்றை உருவாக்குதல், இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை உள்வாங்குவதிலோ இலங்கைக்குள் வேலைக்கு அமர்த்திக்கொள்வதிலோ யாதாயினும் கோட்டா சட்டங்களை உருவாக்குவதாக இருந்தால் அவற்றின் நகல்களைக் குடிவரவுச்சபையின் அபிப்பிராயங்களுடன், இந்திய அரசின் அபிப்பிராயத்தை அறிவதற்கு அனுப்புதல் முதலான முக்கியமான அம்சங்கள் இந்த ஒப்பந்தத்தில் முன்மொழியப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்று வருபவர்கள் தொடர்பில், "பிறப்பால் இலங்கையில் நிரந்தரவாசியானவர்களும், விருப்பால் நிரந்தரவாசியென்ற உரிமை பெற்றவர்களும் நீங்கலாகப் பிறர், இலங்கையைவிட்டு 12 மாதகாலம் தொடர்ந்து

வெளியே தங்கிவிடுவார்களானால் அவர்கள் பிறகு தங்குதடையில்லாமல் இலங்கைக்குள் வரும் உரிமையை இழந்தவர்களாவர்” என்ற விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனைப்போல பிற்காலத்தில் இலங்கைவாழ் இந்தியர் தொடர்பில் உருவாக்கப்படக்கூடிய கோட்டா சட்டங்களில் யார், யாருக்கு விலக்கு உண்டு என்பதைனையும் இக்கூட்டு அறிக்கை தெளிவாக வரையறுத்துள்ளது. பிறப்பால் இலங்கையில் நிரந்தரவாசியான இந்தியர்களும் விருப்பால் நிரந்தரவாசியென்ற உரிமை பெற்றவர்களும் நிரந்தரவாசியென்ற அத்தாட்சிப்பத்திரம் வைத்திருப்பவர்களும், இக்கூட்டு அறிக்கை நிறைவேற்றப்படும் காலத்தில் 07 வருட காலத்திற்கு அதிகமாய் இலங்கையில் வாழ்பவர்களும் புதிதாக உருவாக்கப்படும் கோட்டா சட்டங்களுக்கு உள்ளடங்கமாட்டார்கள். அதேவேளை, இலங்கையில் மூன்று வருடங்களுக்குக் குறைவான காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள் புதிதாக உருவாக்கப்படும் கோட்டா சட்டவிதிகளுக்குக் கட்டுப்பட்டவராவார்கள் என்ற விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வாக்குரிமை தொடர்பான விடயத்தில், புதிதாக இலங்கை வருபவர் கல்வி அறிவும் சொத்தும் உடையவர் என்ற முறையில், ஐந்து வருடம் இலங்கையில் தங்கியிருந்து, விருப்பால் நிரந்தரவாசி என்ற உரிமைபெற்றால், அவர் வாக்குரிமை பெறலாம்; விருப்பால் இலங்கையின் நிரந்தரவாசியானவர்களும், நிரந்தரவாசியென்ற அத்தாட்சிப்பத்திரம் வைத்திருப்பவர்களும் வாக்குரிமைக்குத் தகுதியுடையோராவர். மேலும், நிரந்தரவாசியென்ற அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறுவதற்கான நிபந்தனைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. பதிவுசெய்தல் என்ற பகுதியில் இலங்கைவாழ் இந்தியரைப் பதிவு செய்தல் தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள விதிகள், இலங்கையிலுள்ள எல்லா மக்களுக்கும் பொருத்தமானதாக இருக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்தஸ்துத் தொடர்பான பகுதியில் இலங்கையில் பிறப்பால் நிரந்தரவாசியானவர், விருப்பால் நிரந்தரவாசியானவர், நிரந்தரவாசியென்ற அத்தாட்சிப்பத்திரம் வைத்திருப்பவர் ஆகியோருக்கும், இலங்கையருக்கும் உரிமைகள் தொடர்பில் வித்தியாசம் காட்டக்கூடாது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், பிறப்பால் இலங்கைவாசியான இந்தியர்களைத் தவிர ஏனைய இந்தியர், அரசசேவைப் பணிகளைப் பெற்றுக்கொள்ளவும் நில அபிவிருத்திச் சட்டத்தின் நன்மைகளைப் பெறவும் முடியாது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இதனைக் கேள்விக்குட்டுத்தும் நடேசய்யர், “கவர்ன்மெண்ட் உத்தியோகங்களில் இந்தியர்களுக்கு இடமில்லை, கிராமநிலங்கள் இந்தியர்களுக்கில்லை, மீன்பிடிச்சட்டத்தின் பிரகாரம் இந்திய மீன்பிடிக்காரர்கள் இலங்கையில் மீன்பிடிக்கலாகாது, சிவில் சர்வீஸ் வேலை கிடையாது. இவைதான் கூட்டு அறிக்கையின் வெளிப்படையான வித்தியாசங்கள். இவ்வளவு சமத்துவமான நிலைமையை விட்டுகொடுத்துச் சமாதானம் ஏன்? உள்ள உரிமையையும் விட்டுக்கொடுப்பானேன் என்ற கேள்வி ஏற்படுகிறது” என இலங்கையில் இந்தியர் அனுபவித்துவரும் சுதந்திரங்கள், கூட்டு அறிக்கையில் இழக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கூட்டு அறிக்கை, இலங்கைவாழ் இந்தியர் தொடர்பில் முற்காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள், ஏற்படுத்தப்பட்ட விதிகள் யாதொன்றையும் கருத்தில்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்துள்ள நடேசய்யர், “பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் குடிகள் நாங்கள், எங்களுக்கு கவர்னர் முதலியவர்களின் வாக்குறுதிகள் இருக்கின்றனவென்று இலங்கைவாழ் இந்திய மக்கள் எண்ணிக்கொண்டிருந்தால் அது வீண் கனவாகும்” என்பதை எடுத்துக்காட்டி, இலங்கைவாழ் இந்தியர் தாம் ஒன்றுபடுவதன் மூலமே தமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை வலியுறுத்தியுள்ளார். அதேவேளை, இலங்கை அரசாங்கம் கொண்டுவந்த குடிவரவு மசோதாவை அடிப்படையாகக்கொண்டே இக்கூட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதால், இந்திய அரசு, இலங்கைவாழ் இந்தியரின் அரசியல், பொருளாதார உரிமைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் இலங்கைக்கு உண்டு

என்பதை ஏற்றுக்கொண்டுள்ளது எனப் பொருள்கொண்டுள்ள நடேசய்யர், “இலங்கைவாழ் இந்தியர்கள், இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியத் தலைவர்களும் தங்களைத் தாங்குவார்கள் என்ற தைரியத்தைக் கைவிடவேண்டிய அவசியத்தை” எடுத்துக்காட்டியுள்ளார். இதனையே நூலின் முன்னுரையில், “இலங்கைவாழ் இந்தியர்களை முன்னேற்ற இந்தியாவிலிருந்து ஆட்கள் வரவேண்டும் என்று எண்ணிக்கொண்டு காலந்தள்ளுவது முட்டாள்கள் செய்யும் காரியம். தங்களைத் தாங்களே முன்னேற்றிக்கொள்ள வேண்டும்” என வலியுறுத்தியுள்ளார்.

கூட்டு ஒப்பந்த அறிக்கையில் இலங்கைமீது நிரந்தர அக்கறையுள்ள, இலங்கையராக வாழ்கின்ற இந்தியர், இலங்கையருக்கு உரிய சகல உரிமைகளையும் பெறுவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால், இலங்கைவாழ் இந்தியர் இலங்கையராகப் பதிவுசெய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை நடேசய்யர் விரிவாக எடுத்துக்காட்டியுள்ளார். அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பிறப்பின் அடிப்படையில் நிரந்தரவாசி, விருப்பின் அடிப்படையில் நிரந்தரவாசி, நிரந்தரவாசி என்ற அத்தாட்சிப் பத்திரம் பெறுதல் ஆகியவற்றின் அடிப்படைகளையும் அவற்றினால் விளைகின்ற நன்மைகளையும் பாதிப்புகளையும் விளக்கியுள்ள அவர், இந்தியத் தொழிலாளரை விருப்பின் அடிப்படையில் நிரந்தரவாசியாகுமாறு வலியுறுத்தியுள்ளார். விருப்பின் அடிப்படையில் நிரந்தரவாசியாகிறவர்களுக்கு ஒப்பந்தப்படி, அரசாங்க உத்தியோகம், நில அபிவிருத்திச் சட்டப்பிரகாரம் ஏற்படும் உரிமைகள், மீன்பிடிச்சட்டத்தின் கீழுள்ள உரிமைகள் தவிர ஏனைய உரிமைகள்தான் கிடைக்கப்பெற்றாலும், அவர்களின் குழந்தைகளுக்கு முழு உரிமையும் கிடைக்கும் வாய்ப்புள்ளதால் நடேசய்யர், “விருப்பால் நிரந்தரவாசி என்ற தத்துவத்தில் சிறிதளவு உரிமைகள் குறைவாகவுள்ளது என்ற காரணத்தால் அதை விட்டுவிட வேண்டாம். இவர்களின் பிள்ளைகளின் நன்மை கருதியாவது விருப்பால் நிரந்தரவாசி என்பதைப் பெறவேண்டும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.



நேருவுடன் டீஸ். சேனநாயக்கவும், அவரது அமைச்சரவை உறுப்பினர்களும்
Image Source - udithadevapriya.medium.com

இலங்கைவாசி என்ற அந்தஸ்தைப் பெறாது இலங்கையில் வசிக்கும் இந்தியர் எதிர்காலத்தில் இந்தியாவுக்குச் சென்று திரும்ப வருதல், புதிதாக உருவாக்கப்படக்கூடிய கோட்டா சட்டங்கள், வாக்குரிமை பெறுதல், அந்தஸ்து முதலானவற்றில் பாரிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ள நடேசய்யர், “இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளர்களில் ஒவ்வொருவரும் நிரந்தரவாசியாக வேண்டும். ‘விருப்பால் நிரந்தரவாசி’ என்ற தத்துவம் பெற்றபிறகே இந்தியா போவதென்ற கங்கணங்கட்டிக் கொள்ளட்டும். இந்தியாவிற்கும் இந்தியருக்கும் மரியாதையும் பலமும் ஏற்படவேண்டுமானால் 6 ½ லட்சம் தொழிலாளர்களுள் 6 லட்சம் பேராவது நிரந்தரவாசிகளாகி வாக்குரிமை பெறவேண்டும்” என இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டியுள்ளார்.

நிரந்தரவாசி என்ற அத்தாட்சிப்பத்திரம் பெற்று இந்தியாவுக்குச் சென்று ஒரு வருட காலத்திற்குப் பின்னர் திரும்பி வருபவர்களும், அரசநிதியில் இந்தியாவுக்குச் சென்று மீண்டும் திரும்ப வருபவர்களும் புதிதாக இலங்கை வருகின்ற இந்தியருக்கு ஒப்பானவர்களென இந்த ஒப்பந்தம் குறிப்பிட்டுள்ளது. புதிய சட்ட மசோதாவுக்கு அமைய அத்தகையோர் இலங்கையின் அரசியல் உரிமைகளுக்கு உரித்தற்றவர்களாவர். அவர்களை

'அடிமைகளாகக் குறைந்த கூலிக்கு வேலைக்கு வருவோர்' என அடையாளப்படுத்தும் நடேசய்யர், இந்திய அரசு இலங்கைக்கு அடிமைகளை அனுப்பத் தயாரா? என்ற வினாவை எழுப்பி, இந்த ஒப்பந்தத்தின் பலவீனத்தை எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்தியா - இலங்கைப் பிரதிநிதிகளால் இலங்கைவாழ் இந்தியர் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டு அறிக்கையை, இலங்கைவாழ் இந்தியர் தளத்தில்நின்று அணுகியுள்ள நடேசய்யர், இலங்கை அரசாங்கம் கொண்டுவந்துள்ள குடிவரவு மசோதா சட்டமாக்கப்பட்டால், இந்தக் கூட்டு அறிக்கையே இலங்கைவாழ் இந்தியரின் இருப்பைத் தீர்மானிக்கும் விதிகளாக இருக்கும் என்பதை அறிந்தும், அவ்விதிகளை இலங்கைவாழ் இந்தியர் நன்கு அறிந்துகொள்வதும், அவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் செயற்படுவதும் அவசியம் என்பதை உணர்ந்தும், அது தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியை இந்நூலில் மேற்கொண்டுள்ளார். அவ்விழிப்புணர்வில் இலங்கையில் வாழ்கின்ற இந்தியர், இலங்கையராக வாழ்வதற்குரிய - இலங்கையராகச் சட்டப்படி பதிவுசெய்து கொள்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும், புதிதாக இலங்கைக்கு வரவிருக்கும் இந்தியரை, இலங்கைக்கு வரவிடாமல் தடுக்க வேண்டும் என்பதும் பிரதானமானதாக இடம்பெற்றிருக்கின்றன. *1920*களின் பிற்பகுதி முதல் சுதேசிய சிங்கள ஆட்சியாளர்கள் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் நடேசய்யரின் அம்முடிவுகளுக்குக் காரணமாக விளங்கியுள்ளன.

இலங்கைவாழ் இந்தியரின் எதிர்கால வாழ்வைத் தீர்மானிக்கும் அறிக்கை என்பதால் நடேசய்யர் மிகுந்த முயற்சியுடன் உடனடியாக, ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்குள்ளேயே இந்நூலாக்கத்தை மேற்கொண்டுள்ளார். இருப்பினும் உலகமகா யுத்தத்தின் தாக்கத்தினால் காலனிய அரசு, குடிவரவு மசோதாவையும், இலங்கையரல்லாதோரைப் பதிவுசெய்யும் மசோதாவையும் நிராகரித்தது. அதனால் இக்கூட்டு அறிக்கையும் நடைமுறைக்கு வரவில்லை. இந்திய அரசும் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்கவில்லை. சுதேசிய சிங்கள ஆட்சியாளர்களோ தொடர்ந்தும் இந்தியர் எதிர்ப்புச் செயற்பாடுகளை வெவ்வேறு தளங்களில் முன்னெடுக்கலாயினர். மீண்டும் இலங்கை - இந்திய அரச மட்டங்களில் இலங்கைவாழ் இந்தியர் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

நேருவுக்கும் சேனாநாயக்கவுக்கும் இடையில் *1947* ஆம் ஆண்டு நேரடியாகவும், கடிதங்கள் மூலமும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அப்பேச்சுவார்த்தைகளிலும் இரண்டு நாட்டுத் தலைவர்களும் இருதுருவ நிலையில்நின்று பிரச்சினைகளை அணுகியுள்ளனர். அதனால் அப்பேச்சுவார்த்தைகளால் சாதகமான முடிவுகள் எட்டப்படவில்லை. ஆனால், இலங்கை சுதந்திரமடைந்ததும் டி.எஸ். சேனாநாயக்க தலைமையிலான அரசாங்கம், பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து பெருந்தொகை இந்தியரை நாடற்றவராக்கியது. அதன்பின்பான இலங்கை - இந்திய உறவில் இந்த நாடற்ற மக்களின் பிரச்சினை மையமாக விளங்கியுள்ளது. டட்லி சேனாநாயக்க - நேரு ஒப்பந்தம், நேரு - கொத்தலாவல ஒப்பந்தங்கள், சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தம், சிறீமா - இந்திரா ஒப்பந்தம் எனப் பல உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் விளைவால் ஒருதொகை இலங்கைவாழ் இந்தியருக்கு இந்தியப் பிரஜாவுரிமையும், ஒரு தொகையோருக்கு இலங்கைப் பிரஜாவுரிமையும் வழங்கப்பட்டு, அரச மட்டத்தில் பிரச்சினை தீர்க்கப்பட்டது. ஆனால், இந்த முடிவு இலங்கைவாழ் இந்திய மக்களின் பிரச்சினைகளுக்கான நியாமான - பொருத்தமான தீர்வாக அமையவில்லை. அம்முடிவு தந்த துயரினதும் பலவீனத்தினதும் வடுக்கள் இன்றும் அச்சமூக அசைவில் பிரதிபலித்துவருகின்றன.

*1920*கள் முதல் மெல்ல மெல்ல பெருகத் தொடங்கிய இந்தியர் எதிர்ப்பும், சுதேசியர்களின் இந்தியருக்கு எதிரான பாரபட்சமான செயற்பாடுகளும் இலங்கைவாழ் இந்தியர் விடயத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டியை தேவையை வெளிப்படுத்தின. பிரச்சினைகளை

இணக்கமாகத் தீர்த்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் - உடன்படிக்கைகள் தோல்வியில் முடிந்தன. சுதேசிய சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கைவாழ் இந்தியரை அந்நியர் என வரையறுப்பதிலும் அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவதிலும் தீவிரம் காட்டியுள்ளனர் என்பதை அவர்களின் கருத்துகளும் செயற்பாடுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இலங்கைவாழ் இந்தியர் தளத்தில்நின்று அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் வலுவான சமூக, அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாததோடு இந்திய அரசும் தீர்க்கமான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. அதன்விளைவாகவே, இலங்கை சுதந்திரமடைந்ததும் இலங்கைவாழ் இந்தியரில் பெருந்தொகையானோர் நாடற்றவர்களாக்கப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையில் வாழ்ந்த மக்களுள் ஒரு தொகையினர் மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். இத்தகைய பாதிப்பு இலங்கைவாழ் இந்தியருக்கு ஏற்படக்கூடும் என்பதை நடேசய்யர் அனுமானித்துள்ளார். அதனாலேயே, இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தில், "இந்திய மக்கள், சென்ற 100 வருஷ காலமாய்த் தூங்கிக்கொண்டிருந்தது போல் இனியும் தூங்கிக்கொண்டிருப்பார்களேயானால், இந்த ஒப்பந்தம் இவர்களை முன்னேற்றாது. நாளடைவில் இவர்களை வெளியேற்றும், அல்லது நிரந்தர கூலிகளாக்கும். அப்படியில்லாமல், உணர்ச்சியுடனும் ஊக்கத்துடனும் உழைத்தால், இந்தியன் இலங்கையில் மரியாதையுடன் வாழ இடமிருக்கிறது. அவ்வித நிலைமையைத் தேடிக் கொள்ளவேண்டியது இந்தியன் கடமை" என அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைவாழ் இந்தியரிடம் முதன்மைபெற்றுள்ள இந்திய அடையாள அரசியலினாலோ, இந்திய அரசினாலோ இலங்கையில் இந்தியர் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தீர்க்கப்படபோவதில்லை என்பதை அனுமானித்த நடேசய்யர், இலங்கைவாழ் இந்தியர் இலங்கையின் முழுப் பிரஜைகளாக வாழ்வதற்கு இலங்கைத் தமிழர் என்ற அடையாளத்தைப் பெறுவதும், இலங்கைவாழ் ஒட்டுமொத்தத் தமிழரும் ஐக்கியப்படுவதும் அவசியம் என்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளார். அதனால், இலங்கைவாழ் இந்தியரை இலங்கைத் தமிழர் என்ற அடையாளத்துக்குள் உள்ளடக்கும் முயற்சியை அவர் பின்நாளில் மேற்கொண்டுள்ளார்.

"இலங்கைத் தமிழர்கள் என்று கூறக்கூடியவர்களுள் தோட்டத்தொழிலாளர்கள் உள்ளடங்குவார்கள் என்பதை இலங்கைத் தமிழர் மறக்கலாகாது" " (சுதந்திரன் - 13.06.1947) எனக்கூறியுள்ள அவர், தமிழ்க் காங்கிரஸ் தோட்டத்தொழிலாளர்களுக்கான காரியங்களை வெளிப்படையாகச் செய்ய முன்வரவேண்டும் எனக் கோரிக்கையை விடுத்துள்ளதுடன் இலங்கைத் தமிழரின் ஐக்கியமே பலம் என்று பகிரங்கமாக வெளிப்படுத்தி, இந்திய அடையாளத்தை வலியுறுத்தும் இலங்கை - இந்தியக் காங்கிரஸை நிராகரித்துள்ளார்.

இருப்பினும் நடேசய்யர் எதிர்பார்த்த ஒருங்கிணைப்பு மேற்படி இரு சமூகத்தாருக்கும் இடையே நிகழவில்லை. நாடு சுதந்திரம் பெற்றதும் இலங்கைவாழ் இந்தியருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு (1948) தமிழ்க் காங்கிரஸின் ஜி.ஜி. பொன்னம்பலம் ஆதரவு தெரிவித்தமையால், இலங்கைத் தமிழருடனான இலங்கைவாழ் இந்தியத் தமிழரின் அரசியல் உறவு பெருங்கேள்விக்கு உள்ளாகியது. அப்போது தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்த செல்வநாயகம் உள்ளிட்டோர் தமிழரசுக்கட்சியைத் தோற்றுவித்ததோடு பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட இந்தியவம்சாவளித் தமிழருக்குப் பிரஜாவுரிமை பெற்றுக்கொடுப்பதைத் தமது நோக்கங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தினர்.

ஆனால், அப்பிரகடனத்தை நிறைவேற்றும் வகையில் காத்திரமான முயற்சிகள் எவற்றையும் அக்கட்சியினர் முன்னெடுத்ததாகத் தெரியவில்லை. பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னரே நடேசய்யர் உயிர்துறந்தமையால் (07.11.1947) அக்காலத்து அரசியற் சூழலை அவர் எவ்வாறு அணுகி யிருப்பார் என்பதையறிய வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

கார்த்திகேசு இந்திரபாலா



பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

# பேரரசும் பெண் விடுதலையும்

'வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்' எனும் இத்தொடர் 'ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்' பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.

*–கார்த்திகேசு இந்திரபாலா–*

## வட்டுக்கோட்டையில் குடிபுகுதல்

பெருமந்தத்தின் விளைவாகத் தன் வேலையை இழந்து, இளவயதிலேயே ஓய்வூதியம் பெற்ற என் தகப்பனார் பொருளாதாரப் பிரச்சினை நீங்கும்வரை மலாயாவில் தங்கி இராது, குடும்பத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார். வட்டுக்கோட்டையில் அம்மாவுக்குக் கொடுக்கப்பட்ட சீதன வளவில் இரண்டு அறைகளையுடைய கல்வீடு ஒன்றைக் கட்டி அதில் என் குடும்பத்தினர் குடிபுகுந்தனர். இது எங்கள் ஊரில் கட்டப்பட்ட இரண்டாவது கல்வீடு.

மலாயாவில் இருந்து திரும்பி வந்தவர்கள் எவ்வாறு யாழ்ப்பாணத்தின் பல்வேறு ஊர்களில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அம்சங்கள் பலவற்றை அறிமுகப்படுத்தினர் என்பதை ஓரளவு விளங்கிக்கொள்ள, என் பெற்றோர் மலாயாவில் இருந்து புதிய வீட்டுக்குக் கொண்டுவந்த சில பொருட்களைக் குறிப்பிடலாம்.

என் அண்ணனை (இராஜேந்திரா) குழந்தையாகக் (இரண்டு வயது என்று நினைக்கின்றேன்) கொண்டுவந்த காரணத்தினால் கோலாலம்பூர் வீட்டில் அவருக்கென வாங்கியிருந்த பல்வகை உபகரணங்களையும், விளையாட்டுப் பொருட்களையும் கப்பலில் ஏற்றி என் பெற்றோர் கொண்டுவந்திருந்தனர். நான் சிறுவனாக இருந்தபோது இவற்றுள் பல பழுதடைந்த நிலையில் இருந்தன. ஒன்று, குழந்தைகளை வெளியே கொண்டுசெல்லும்போது பயன்படுத்தப்படும் தள்ளுவண்டி (ஆங்கிலத்தில் Pram/ Perambulator). இன்னொன்று, சிறுபிள்ளைகள் காலால் மிதித்து ஓட்டும் ‘கார்’ வண்டி.

சமையல், சாப்பாட்டுடன் தொடர்புடைய பல பொருட்களையும் என் பெற்றோர் கொண்டுவந்திருந்தனர். குறிப்பிடத்தக்கவையாக எனக்கு நினைவில் உள்ளவை; மேசைக் கத்தி, மேசைக் கரண்டி, முட்டை அடிக்கும் கருவி (Eggwhisk), தகரம் வெட்டும் கருவி (Tincutter), பீங்கான் (Porcelain) தட்டுகள் ஆகியவை. இவற்றுடன் ஒரு பெரிய கற்பூரப் பெட்டியும் (Chinese camphor box) கொண்டுவரப்பட்டது. கோலாலம்பூர் வீட்டில் பயன்படுத்திய இரண்டு கம்பளங்களையும் (Carpets) பெற்றோர் கொண்டுவந்திருந்தனர். மிகவும் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்ட தளபாடம், ஒரு மடிக்கக்கூடிய சாய்மானக் கதிரை (Folding easy chair). வேறு வீட்டுத் தளபாடங்களும் கொண்டுவரப்பட்டனவோ தெரியவில்லை.

புதிதாகத் தேக்கு மரத்தில் ஒரு கட்டிலும் மேசையும் செய்விக்கப்பட்டன. அக்காலகட்டத்தில் மரவேலையில் திறமையுடைய சிலர் கேரளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து வீட்டுத் தளபாடங்களைச் செய்தனர் எனத் தோன்றுகிறது. வேலுப்பிள்ளை மாமாவின் வீடு கட்டப்பட்டபோது அப்படி ஒரு கேரள மரவேலைக் கலைஞர் வந்திருந்தார். அவர் பெயர் கிருஷ்ணன். இவர் எங்கள் வீட்டுக் கட்டிலையும் மேசையையும் செய்து உதவினார். இதெல்லாம் நான் பிறக்குமுன் நடந்தவை. ஆனால் இவர் மீண்டும் எங்கள் வீட்டுக்கு, எனக்கு ஐந்து அல்லது ஆறு வயதாய் இருக்கும்போது வந்திருந்தார். அப்பொழுது இந்த விவரங்களை நான் அறியக்கூடியதாய் இருந்தது. அவர் பெயரை என்னால் மறக்க முடியவில்லை. அவர் ஒரு நல்ல மனிதர் என்று என் பெற்றோர் பலதடவை சொல்லக் கேட்டிருக்கிறேன்.

மலேரியா நோய் 1930களில் கடுமையாகப் பரவிக் கஷ்டங்களை விளைவித்ததால், எங்கள் கட்டிலுக்குக் கொசுவலையும் போடப்பட்டது. அத்துடன் பஞ்சு மெத்தையும் இருந்தது. இவ்வாறு வேறும் பல ‘சிங்கப்பூர் பெஞ்சன்காரர்’ 1930களில் கட்டிய வீடுகளில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வசதிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன என நான் நினைக்கிறேன். சில வீடுகளில் நான் இவற்றைக் கண்டும் இருக்கிறேன்.

அம்மாவுக்குப் பல ஆண்டுகளாகப் பயன்பட்ட ஒரு பொருளாகக் கொண்டுவரப்பட்டது, கையால் சுழற்றி இயக்கக்கூடிய ஒரு தையல் இயந்திரம் (Singer sewing machine) ஆகும். நானும் என் இரு தங்கைமாரும் சிறுபிள்ளைகளாக அணிந்த உடைகள் அனைத்தும் இந்தக் கருவியில் அம்மாவால் தைக்கப்பட்டன. இதே காலத்தில் பிற ‘மலாயாவில் இருந்து திரும்பிய’ குடும்பங்களில் இத்தகைய தையல் இயந்திரங்கள் இருந்திருக்கும் என நினைக்கின்றேன்.

### இணுவில் மகப்பேற்று வைத்தியசாலை

வட்டுக்கோட்டையில் குடியமர்ந்து, கோலாலம்பூர் நகர வாழ்க்கையில் இருந்து பெரிதும் வேறுபட்ட ஊர்ப்புற வாழ்க்கையை என் பெற்றோர் தொடங்கி ஒரு சில ஆண்டுகளின் பின், 1937 ஒக்டோபரில், பிரசவத்துக்காக அம்மா இணுவில் மக்லவுட் மகப்பேற்று வைத்தியசாலையில் (Inuvil McLeod Maternity Hospital) அனுமதிக்கப்பட்டார். அங்கு அம்மாதம் 22 ஆம் திகதி நான் பிறந்தேன். அப்பொழுது அங்கு மகப்பேற்று வைத்தியராகக் கடமையாற்றியவர், இஸபெலா கேர் (Dr. Isabella Curr) என்ற மிஷனரி வைத்தியர் ஆவார்.

யாழ்ப்பாணத்தின் பெண்விடுதலை வரலாற்றில் இணுவில் வைத்தியசாலை ஒரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்திய நிறுவனம் என்பது பொதுவாக உணரப்படுவதில்லை. விடுதலை என்பது பல்வகைப்பட்ட அரசியல், சமூக, பண்பாட்டு, பொருளியல் கட்டுப்பாடுகளில் இருந்து வெளியேறும் நிலையைக் குறிக்கும். யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கு, பிரித்தானியப் பேரரசின் ஆட்சி தொடங்கியபோது, அதாவது 19 ஆம் நூற்றாண்டு தொடங்கும் கட்டத்தில், பாரம்பரியக் கட்டுப்பாடுகளால் அடக்கப்பட்ட நிலை காணப்பட்டது எனலாம். பேரரசின் ஆட்சியின்போது இந்த நிலை மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது.

பேரரசு எனும்போது பொதுவாக மனதில் எழும் எண்ணங்கள் ஏகாதிபத்தியம், படைபலம், அடக்குமுறை, பொருளாதாரச் சுரண்டல், பண்பாட்டுச் சிதைவு பற்றியவையாகவே இருக்கும். ஆனால் பேரரசுக்குள் இயங்கும் பல்வகைப்பட்ட சக்திகளுள் சில முற்போக்கானவை, சில சீர்திருத்தத்தை நாடுபவை, சில மாற்றங்களுக்காகப் போராடுபவை.

பிரித்தானியப் பேரரசு 19 ஆம் நூற்றாண்டில் உலகின் பல பாகங்களைக் கைப்பற்றித் தன் ஆதிக்கத்தை வளர்த்துச் செல்ல, அதன் ஆதிக்க மையமான இங்கிலாந்திலேயே அதற்குப் பெருவருமானத்தைப் பெற உதவிய அடிமை வர்த்தகத்துக்கும், அடிமை முறைக்கும் எதிரான தாராண்மைவாதச் சக்திகள் குரல் எழுப்பின. இதன் விளைவாக முதலில் அடிமை வர்த்தகம் தடை செய்யப்பட்டது; பின்னர் அடிமை முறை ஒழிக்கப்பட்டது.

இவ்வாறே இந்தியாவில் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானியர் ஆதிக்கம் மெதுவாகப் படர்ந்து சென்ற வேளையில் பெண்களின் நிலை தொடர்பாகக் காணப்பட்ட ஒரு கொடிய வழக்கத்தை ஒழிப்பதற்குப் பேரரசுக்குள் இயங்கிய சக்திகள் உதவின.

நீண்ட காலமாக, முக்கியமாக வட இந்தியாவில், கணவனை இழந்த பெண்கள் கணவனின் உடல் எரிக்கப்படும்போது 'உடன்கட்டை ஏறும்' வழக்கம் இருந்தது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான விதவைகள், மிகவும் இளமையானவர்கள் உட்பட, இக்கொடூர வழக்கத்தால் உயிரிழந்தனர். இதனை ஒழிப்பதற்கு ஒரு புறம் கிறிஸ்தவ மிஷனரிமாரும், இன்னொரு புறம் இந்தியச் சீர்திருத்தவாதிகளும் செயற்பட்டனர். அவர்களுள் ஒருவர் ராம் மோகன் ரோய். இதன் விளைவாக 1829 இல் பிரித்தானிய ஆளுநர் உடன்கட்டை ஏறுதலை ஒழிக்கும் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். இது இந்தியப் பெண்விடுதலை வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

பிரித்தானியாவில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து பெண் செயற்பாட்டாளர்கள், ஆண்களுடன் சமமாக அரசியல் வாக்குரிமை பெறுவதற்கு இயக்கம் நடத்தினர். இது படிப்படியாக வளர்ந்து செல்ல, 20 ஆம் நூற்றாண்டின் முதற்காலில் வலுப்பெற்ற சமூகவுடைமை (Socialism) சிந்தனைகளும், தாராண்மைவாதமும் 1928 இல் பிரித்தானியப் பெண்களுக்கு முழுமையான வாக்குரிமையைப் பெற உதவின. இது பெண் விடுதலை வரலாற்றில் ஒரு பெரு வெற்றியாக விளங்கியது.

இதன் விளைவாகப் பேரரசில் நடந்தது என்ன? மூன்றே மூன்று ஆண்டுகளுக்குள், 1931 இல், போராட்டம் எதுவும் இல்லாது, இலங்கையில் எல்லாப் பெண்களுக்கும் வேறுபாடின்றி வாக்குரிமை வழங்கப்பட்டது. இலங்கையில் அப்பொழுது அரசியல் தலைவர்களாகக் கருதப்பட்ட பிரமுகர்கள், நாட்டில் அனைவருக்கும் சமமான வாக்குரிமை வழங்குவதை எதிர்த்து வாதாடியும், மலையகத்தில் தேயிலைத் தோட்டத்தில் எழுத்தறிவில்லாது தவித்த பெண்களுக்கும், யாழ்ப்பாணத்தில் சமூகத்தின் கீழ்நிலையில் இடர்பட்டு வாழ்ந்த பெண்களுக்கும், பேரரசால் சமனான அரசியல் உரிமை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துப் பெண்விடுதலை வரலாற்றில் இணுவில் மகப்பேற்று வைத்தியசாலை எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றது? இதனைப் புரிந்து கொள்ள 19 ஆம் நூற்றாண்டில் மகப்பேறு தொடர்பாகப் பெண்கள் அனுபவித்த இன்னல்களையும் சமூக - பண்பாட்டுக் கட்டுப்பாடுகளையும் நோக்கவேண்டும்.

எல்லாப் பாரம்பரியச் சமூகங்களிலும் பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாகப் பல்வகைப்பட்ட கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் இருப்பதைக் காணலாம். இவை சமூகத்தில் பெண்ணைத் தாழ்நிலைப்படுத்தி தன் கண்ணியத்தை (Dignity) இழக்க வைத்ததுடன், உடல் வேதனையை அனுபவிக்கவும் வைத்தன. இத்தகைய நிலை யாழ்ப்பாணத்தில் 20 ஆம் நூற்றாண்டு உதயமாகியபோது இருந்தது என்பதை அறியமுடிகின்றது.

பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றிச் சான்றுதரும் வரலாற்றுச் சுவடிகளைப் பெறுவது அரிது. எனினும் வெளிநாட்டு மிஷனரிமார் குறிப்புகளை வைத்தும், நான் சிறுவனாக இருந்த காலத்தில் அறிந்த சிலவற்றை வைத்தும், ஓரளவுக்கு, பெண்களுக்கு இருந்த கட்டுப்பாடுகள் பற்றி அறிய முடிகின்றது.

பெண்களின் வாழ்க்கையில் இரண்டு காலப்பகுதிகள் மாசுபட்ட (Pollution) வேளைகளாகக் கருதப்பட்டன எனலாம். இது தொடர்பாகத் தமிழில் 'துடக்கு' என்ற சொல் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டாலும், இச்சொல் 'மாசுபட்ட நிலை' என்பதற்கும் அப்பால் பரந்த பொருளை உடையது என எனக்குத் தோன்றுகிறது. யாழ்ப்பாண வழக்கில் வேறும் பல சொற்கள் 'மாசுபட்ட நிலை'யைக் குறிக்கப் பயன்பட்டன என அறியமுடிகின்றது.

மாசுபட்ட வேளைகளுள் முதலாவது, ஒவ்வொரு மாதமும் பெண்கள் அனுபவிக்கும் 'மாதவிடாய்' என வழங்கும் காலம். இது தொடர்பாக இருந்த கட்டுப்பாடுகள் வீட்டுக்கு வீடு வேறுபட்டவையாக இருந்திருக்கலாம். இக்கட்டுப்பாடுகள் 1940களில் கூட இருந்ததை நான் அறிவேன்.

என் தாயார் இவ்வேளையை அனுபவித்தபோது, "அம்மா தொடக்கூடாது" என்று நாங்கள் சொல்லுவோம். அயல் வீடுகளில் இருந்த பிள்ளைகள் "அம்மா வீட்டுத்தூரம்" என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன். இரண்டு சொற்றொடர்களும் பொருள் நிரம்பியவை. நேரடியாக உண்மை நிலையைக் கூறாது மறைமுகமாகச் சொல்வதைத் தமிழ் இலக்கணத்தில் இடக்கரடக்கல் (Euphemism) என்பர். அம்மா மாசுபட்ட நிலையில் இருப்பதாகக் கருதியபடியால் நாங்கள் அவரைத் தொடக்கூடாது. அவரும் வீட்டுப் பொருள்களைத் தொடக்கூடாது; சமையல் செய்யவும் கூடாது. வழமையாகத் தூங்கும் படுக்கை அறையைவிட்டு, வெளியே விறாந்தையில் ஒரு மூலையில் பாய்போட்டுப் படுக்கவேண்டியிருந்தது. கரியால் கோடு போட்டு அந்த இடம் வேறாகக் குறிக்கப்பட்டது. கோட்டைக் கடந்து பிறர் செல்ல முடியாது. மூன்று நாட்களின்பின் (சிலவேளை நான்கு அல்லது ஐந்து நாட்கள் என நினைக்கின்றேன்) முழுகியதும் தாயார் சாதாரண நிலைக்குத் திரும்புவார். அவர் உடுத்த சேலை, பாவாடை ஆகியவையும் படுக்கையில் போடப்பட்ட துணிகளும் ஒரு மூட்டையாகக் கட்டப்பட்டு வெளியே வேறாக வைக்கப்படும். வீட்டுக் கிணற்றடியில் அவை கழுவப்படுவதில்லை. குடும்பத்துக்குச் சலவைத்தொழில் புரிபவர் (வண்ணான் - இவரை நாங்கள் கட்டாடியார் என்று மரியாதையுடன் அழைப்போம்) இந்த மூட்டையை எடுத்துச் சென்று கழுவுவார்.

'வீட்டுத்தூரம்' என்ற சொற்றொடரில் இருந்து ஒரு முக்கியமான விஷயத்தை ஊகிக்க முடிகின்றது. பெண் மாசுபட்ட நிலையில் இருப்பதாகக் கருதப்பட்டபோது வீட்டில் இருக்காது வெளியே ஓர் ஒதுக்கிடத்தில் இருக்கவேண்டி ஏற்பட்டது. இன்றும் சில தென்இந்தியச் சமூகங்களில் இத்தகைய நிலை இருப்பதை அறியமுடிகின்றது. பிரசவத்தின்போது வேறாக அமைக்கப்பட்ட கொட்டிலில் பிள்ளையைப் பெறவேண்டியிருந்தது என்று கொள்ளவும் சான்று உண்டு.

இவ்வாறு கட்டுப்பாடுகள் பல காணப்பட்ட நிலையில், பிரசவத்தின்போது பெண்களுக்கு உதவிசெய்ய ஆண்களோ, வைத்தியர்களோ அணுகமுடியாதிருந்தமை ஆச்சரியத்துக்கு உரியதல்ல. வேதனையால் தவிக்கும் பெண்ணுக்கு உதவி செய்ய 'மருத்துவிச்சி' ஒருவர்

அழைக்கப்படுவார். இவர் சமூகத்தில் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு பெண்ணாகவே இருப்பார். அனுபவத்தால் பெற்ற அறிவைவிட, வேறு மருத்துவ அறிவு அவருக்குக் கிடையாது. நான் சிறுவனாக இருந்த காலத்தில், 1940களில், அயல் ஊரில் அப்படியான ஒரு பெண் இருந்தார். அவர் பெயர் சின்னத்தங்கி; பிள்ளைகள் இல்லை; கணவன் சுப்பன், கோழிக்குஞ்சுகளை அடைப்பதற்குப் பயன்படும் கரப்பு என்ற கூடுகளைச்செய்து பிழைப்பவர்.

### பெண்களுக்கான வைத்தியசாலை

யாழ்ப்பாணத்துப் பெண்கள் தங்கள் உடல்நலனைக் கவனிப்பதற்குப் பெண் வைத்தியர்களோ, பெண்களுக்கான வைத்தியசாலையோ இல்லாது பல இன்னல்களுக்கு ஆளாகுவதை 19 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் கண்ணுற்ற இரு அமெரிக்கப் பெண்கள், இந்த நிலைமையை மாற்றத் தீர்மானித்தனர். இருவரும் சகோதரிகள்; அமெரிக்க மிஷனைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மேரி லீச் (Mary Leitch), மற்றவர் மாகரட் லீச் (Margaret Leitch).

இருவரும் சில ஆண்டுகள் பல போற்றத்தக்க முயற்சிகளை எடுத்து, பிரித்தானியாவுக்குச் சென்று தேவையான நிதியைத் திரட்டி வந்து, இணுவிலில் பெண்களுக்கான வைத்தியசாலையை நிறுவினர். யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட முதலாவது மகப்பேற்று வைதியசாலையாக 1898 இல் இது திறக்கப்பட்டது. பாரம்பரியக் கட்டுப்பாடுகளில் இருந்து யாழ்ப்பாணப் பெண்கள் விடுதலை பெற்ற வரலாற்றில் இந்த நிகழ்வு ஒரு மைல்கல்லாகும். இது நிகழ்வதற்குப் பேரரசில் செயற்பட்ட சக்திகள் காரணமாக இருந்தன என்பதை மறுக்கமுடியாது.

### இஸபெலா கேர்

இணுவில் வைத்தியசாலையின் முதலாவது வைத்தியராக ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த இஸபெலா கேர் (Dr. Isabella Curr), லீச் சகோதரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் பெற்றார். பெண் வைத்தியர் இருந்தும், பெண் உதவியாளர் இருந்தும், பெண்களுக்கான சிறப்பு வசதிகள் இருந்தும் தொடக்கத்தில் நோயாளிகள் வரவில்லை. பிள்ளைப்பெறும் காலத்தில் பெண் வெளியே செல்ல முடியாது, வைத்தியரைக் காணமுடியாது போன்ற தடைகளுடன், ஒரு கிறிஸ்தவ வெள்ளையருடன் தொடர்பு கொள்வது மாசுபடுத்தும் செயல் எனக் கருதப்பட்டதாலும் பெண் நோயாளிகள் தொடக்கத்தில் இங்கு வரவில்லை. வைத்தியர் கேர், தன் உதவியாளருடன், நோயுற்ற பெண்களின் வீட்டுக்குச்சென்று உதவ முற்பட்ட வேளைகளிலும்கூட, கணவன்மார் அவரை அனுமதிக்க மறுத்தனர்.



வைத்தியர் இஸபெலா கேர் – இணுவில் வைத்தியசாலையின் முதலாவது தலைமை வைத்தியர் 1898-1938

இத்தகைய நிலை விரைவில் மாறி, படிப்படியாக இணுவில் வைத்தியசாலைக்கு கூடுதலான பெண்நோயாளிகள் செல்லத் தொடங்கினர். பிள்ளைப் பெறுவதற்காக வைத்தியசாலைக்குச் செல்லும் வழக்கத்தை யாழ்ப்பாணத்தவர் கடைப்பிடிக்க, இணுவில் வைத்தியசாலை வழிதிறந்தது.

இந்த வைத்தியசாலையுடன் தொடர்புடையதாக ஒரு முக்கிய நிகழ்ச்சி 1911 இல் இடம்பெற்றது. இந்த ஆண்டில் ஒரு தமிழ்ப் பெண் வைத்தியர், நல்லம்மா முருகேசன், வைத்தியர் கேருக்கு உதவிபுரிய நியமிக்கப்பட்டார். இவரே யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய முதல் தமிழ்ப் பெண் வைத்தியர் எனலாம்.

இவ்வாறாக 20 ஆம் நூற்றாண்டின் முதற்காலில் யாழ்ப்பாணத்தில் பெண்களின் நிலை தொடர்பாகக் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. பிரித்தானியப் பேரரசில் செயற்பட்ட சக்திகள், பல வழிகளில் பெண் விடுதலைக்கு வழிதிறந்து உதவின. இச்சக்திகள் பெரும்பாலும் மத அடிப்படையில் எழுந்தவையாக இருந்தபோதிலும் அவற்றின் விளைவாக யாழ்ப்பாணத்தில் சமூக மாற்றங்கள் ஏற்பட்டன என்பது முக்கியமானது.

சிவ தியாகராஜா



கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

# வரலாறு மற்றும் இலக்கியப் பதிவுகளில் நாகநாடும் நாகர்களும்

1

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையில் மேற்கொண்ட அகழாய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் 'பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்' எனும் இக்கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பவற்றின் பரந்த காட்சிப் பதிவாக விளங்கும்.

"நாகநீள் நகரொடு நாகநாடு அதனொடு

போகம், நீள்புகழ் மன்னும் புகார்நகர்!

சிலப்பதிகாரம் I:21-22.

## நாகநாடு

வரலாற்றுப் பதிவுகளில் நாகநாடு அன்றைய உலகின் செல்வச்செழிப்பும் சிறந்த வாழ்வும்கொண்ட ஒரு நாடாகக் கூறப்படுகிறது. அதனால்தான் சிலப்பதிகாரக் காவியத்தில் பூம்புகார் நகரின் பெருமையை விளக்கவந்த இளங்கோ அடிகள் "நாகர்களின் நெடிய நகரோடு விளங்கும் நாகநாட்டினோடு ஒப்பாக, போக வாழ்வு பரவிக் கிடக்கும் நீண்ட புகழ் நிறைந்த புகார்" எனக் கூறிச்சென்றிருக்கிறார்.

பண்டைய நாட்களில் இலங்கையின் வடபகுதி, மிகுதி இலங்கையிலிருந்து தனியான ஒரு நாடு என்ற பொருளில், 'நாகநாடு அல்லது நாகதீப' என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த நிலையை தமிழ் மொழியிலுள்ள புராதன இலக்கியங்களான சிலப்பதிகாரம் (21:29), மணிமேகலை (24: 54-57), வீரசோழியம் ஆகியவற்றில் காணலாம். இலங்கைநாடு நாகநாடு, இரத்தின துவீபம் ஆகிய இரு பகுதிகளாக ஆட்சி செய்யப்படுவதை மணிமேகலைக் காப்பியம் குறிப்பிட்டுக் கூறுகிறது. இப்பெயரில் இடம்பெறும் 'நாடு' என்ற சொற்பதம் தனியான ஒரு தேசத்தை - தனியான ஓர் ஆட்சிப்பரப்பைக் குறிப்பிடுகிறது. நாகநாட்டை வளைவாணன் என்ற அரசன் செல்வச்செழிப்புடனும், உயர்வான தமிழ் - பௌத்த பாரம்பரியத்துடனும் ஆட்சிபுரிந்து வருவதாக மணிமேகலை குறிப்பிடுகிறது (மணிமேகலை, அத். 14: 24). சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் தமிழகத்தின் சேர, சோழ, பாண்டிய நாடுகளை நிகர்த்த ஒரு நாகரிகம் வடஇலங்கையின் நாகநாட்டில் இருந்ததை எடுத்துரைக்கின்றன.

இலங்கையின் ஆறாம் நூற்றாண்டு பாளிமொழி இலக்கியமான மகாவம்சம் இந்தப் பகுதியை நாகதீப (நாகர்களின் தீவு) எனக் குறிப்பிடுகிறது. இந்த நாகதீபத்திற்கு கி.மு. ஆறாம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் புத்த பகவான் வந்திருந்தார் எனப் பதிவு செய்திருக்கிறது (புத்த பகவான் வாழ்ந்த காலம் கி.மு. 563-480 எனக் கூறப்படுகிறது) (*Mahavamsa, Ch. I*). அநுராதபுரத்தில் கண்டெடுத்த கி.மு. முதலாம் நூற்றாண்டிற்குரிய ஒரு பிராமிக் கல்வெட்டில் காணப்பட்ட நாகநகர் என்ற தமிழ்ப்பெயர் நாகநாட்டின் தலைநகரைக் குறிக்கிறது (*Epigraphia Zeylanica, VII: 82*). கிரேக்க தேசத்து நிலவியலாளர் குளோடியஸ் தொலமி (கி.பி. 901-68) அவரது இலங்கையின் நிலவியல் படத்தில் இந்த நாட்டை 'நாகடீபொய்' எனப் பதிவு செய்திருக்கிறார். கி.பி. நான்காம் நூற்றாண்டிற்குரிய வல்லிபுரப் பொற்சாசனத்தில், இந்நாட்டின் பெயர் 'நகதிவ' என பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்டிருக்கிறது (*Paranavitana, 1934 1941*). யாழ்ப்பாணத்தில் உடுத்துறையில் கண்டெடுத்த ஒரு நாக நாணயத்தில் இந்நாட்டின் மாற்றுப் பெயராக 'நாகபூமி' என்ற பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிறது (*Pushparatnam, P. 2002*). குடுமியாமலைக் கல்வெட்டில் வரும் 'நாகநாடு' யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கையின் வடபிராந்தியத்தைக் குறிப்பிடுகிறது.

## மணிபல்லவம்

தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத் தீவகத்தையே மணிபல்லவம் எனவும், மணிபல்லவத்தின் ஒரு பகுதியையே நாகநாடு எனவும் குறிப்பிடுகிறது. இதற்கு ஆதாரமாக மணிமேகலையில் இடம்பெறும் மணிபல்லவத்தின் "கீழ்நில மருங்கின் நாகநாடாளும்" (மணிமேகலை VIII:54) என்ற அடிகள் கவனிக்கப்பட வேண்டியவை. மணிபல்லவத்தின் கிழக்கே கடலுக்கு அப்பாலுள்ள நாகநாடு எனக்கூறாமல், மணிபல்லவத் தீவின் கிழக்கேயுள்ள நிலப்பகுதியிலுள்ள நாகநாடு எனக் கூறப்படுவதால், நாகநாடு அரசு மணிபல்லவத் தீவிலுள்ள ஓர் அரசு என்றே பொருள்கொள்ள வேண்டியுள்ளது. மணிபல்லவத்திற்கும் நாகநாட்டிற்குமுள்ள தொடர்பு இதைத்தவிர, மணிமேகலையில் வேறெந்த இடத்திலும் கூறப்படவில்லை. மணிபல்லவம், நாகநாடு என்ற இரண்டும் நாகதீபத்தினையே குறித்தன என வரலாற்றாசிரியரான ஞானப்பிரகாசர் கூறியதும் இங்கே கவனிக்கப்பட வேண்டியதாகும் (ஞானப்பிரகாசர் 1928: 23-36).

நாகதீபத்தில் கி.மு. ஆறாம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் மகோதரன், சூளோதரன் என்ற இரு நாக அரசர்கள், இந்திரனால் வழங்கப்பட்ட இரத்தினமிழைத்த, அதில் உட்காருபவர்களின் முற்பிறப்பை எடுத்துரைக்கக்கூடிய சிங்காசனத்திற்காகப் போரிட்ட சமயம், புத்தபிரான் அங்கே தோன்றி அவர்களது போரை நிறுத்தி அவர்களைச் சமாதானப்படுத்தி, பௌத்த தர்மத்தைப் போதித்ததையும், அதைத் தொடர்ந்து நாக மக்கள் பலர் பௌத்த மதத்தைத் தழுவிய செய்தியையும் மகாவம்சம் எடுத்துரைக்கிறது (*Mahavamsa - Chapter 1*). இந்தச் சம்பவம் மணிமேகலையிலும் கூறப்படுகிறது. இங்கே புத்தபிரான் வருகைதந்த இடம் மணிபல்லவம். மணிபல்லவத்தின்கீழ் நிலமருங்கில் நாகநாடு உள்ளது என இச்செய்யுளில் காணலாம்.

“இருங்கடல்
வாங்குதிரை யுடுத்த மணிபல் லவத்திடை
ஐயா வோவென் றழுவோன் முன்னர்
விரிந்திலங் கவிரொளி சிறந்துகதிர் பரப்பி
உரைபெறு மும்முழம் நிலமிசை யோங்கித்
திசைதொறு மொன்பான் முழநில மகன்று
விதிமா ணாடியின் வட்டங் குயின்று
பதும சதுர மீமிசை விளங்கி
அறவோற் கமைந்த வாசனமென்றே
நறுமல ரல்லாது பிறமரங் சொரியாது
பறவையு முதிர்சிறை பாங்குசென் றதிராது
தேவர்கோ னிட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங் கவிரொளி யறத்தகை யாசனங்
கீழ்நில மருங்கி நாகநா டாளும்
இருவர் மன்னவர் ரொருவழித் தோன்றி
எமதி தென்றே யெடுக்க லாற்றார்”

(மணிமேகலை, காதை 8, வரி 12, 43–56)

கடந்த அரைநூற்றாண்டு காலமாகப் பல அறிஞர்கள் மணிபல்லவம் என்ற தீவகம் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்கேயுள்ள கடற்பரப்பிலுள்ள நயினாதீவைக் குறிப்பதாகப் பேசியும் எழுதியும் வருகிறார்கள் என்பதை அறிவேன். இன்னும் சிலர் ‘நாகதீப’ என்ற பதம் நயினாதீவைக் குறிப்பதாக அர்த்தம் கொள்வர். நயினாதீவு நாகர்கள் வாழ்ந்த, பௌத்த மதம் பரவியிருந்த ஓர் இடமாக இருந்தபோதிலும், அது நாகநாட்டு அரசு அமைந்திருந்த நாடு என்பதற்கான தொல்லியல் ஆதாரங்களோ, வரலாற்று ஆதாரங்களோ ஏதுமில்லை. அங்கிருக்கும் நாகவிகாரை இருபதாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும்.

‘திரையுடுத்த மணிபல்லவம்’ காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து தென்திசையில் 30 யோசனை தூரத்தில் இருப்பதாக மணிமேகலையில் கூறப்படுவதனால் சிலர் அது நயினாதீவு எனக் கொள்வர். ஒரு யோசனை தூரம் என்பது நான்கு மைல் தொலைவு என்ற கணக்கின்படி, மணிபல்லவம் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து 120 மைல் தொலைவில் அமைந்திருக்கிறது. இத் தூரக்கணக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் பொருந்தும்.

“அந்தரம் ஆறா ஆறைந்து யோசனைத்
தென்திசை மருங்கில் சென்று, திரையுடுத்த
மணிபல்ல வத்திடை மணிமே கலாதெய்வம்
அணியிழை தன்னைவைத் தகன்றது தான் என”

(மணிமேகலை 6: 211–214)

தென்கிழக்காசிய நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வணிகர்கள் வங்க நாட்டிலிருந்தும், சோழ நாட்டிலிருந்தும் வரும்போதும், திரும்பிச் செல்லும்போதும் மணிபல்லவத் துறைகளில் தங்கிச்செல்வதை மணிமேகலை எடுத்துரைக்கிறது.

“கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉய்
இலங்கு நீர்ப்புணரி யெறிகரை எய்தி,
வங்க மேறினன் மணிபல்லவத்திடைத்
தங்காது அக்கலஞ் சென்றுசார்ந் திறுத்தலும்”

(மணிமேகலை 25: 124–127)

“வங்க மாக்களொடு மகிழ்வுட னேறிக்
கால்லிசை கடுக்கக் கடல்கலக் குறுதலின்
மாலிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்
தங்கிய தொருநாள்”.

(மணிமேகலை 24: 79–84)

தென்கிழக்காசிய நாடுகளுக்குச் செல்லும் வர்த்தகக் கப்பல்கள் நாகநாட்டின் சம்புகோவளம் (மகாவம்சம் கூறும் ‘ஜம்புகோல’), காயாத்துறை ஆகிய துறைகளில் தங்கிச்செல்வது வழக்கம். இப்படியான பெருந்துறைகள் ஏதும் நயினாதீவில் இல்லை. ‘தாம்ரலிப்தி’யிலிருந்து அசோக மன்னனின்

மகளான சங்கமித்த, புனித அரசமரக் கிளையுடன் வந்திறங்கிய துறை 'ஜம்புகோல'. புத்தகாயாவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் கப்பலெடுத்துச் சென்ற துறை காயாத்துறை எனப் பெயர் பெற்றது. கி.மு. எட்டாம் நூற்றாண்டில் மாவிட்டபுரம் கந்தவேள் ஆலயத்திற்காக சோழ நாட்டிலிருந்து காங்கேயன் (கந்தவேள்) விக்கிரகங்கள் இத்துறையில் வந்திறங்கிய பின்னர் காயாத்துறை காங்கேயன்துறை ஆயிற்று.

### நாகநகர் கந்தரோடை - கந்தமாதனம்

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையும் யாழ்ப்பாணக் குடாநாடும், மிகுதி இலங்கை நிலப்பரப்பின் வடபகுதியும் சேர்ந்த பகுதி நாகநாடு என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த நாட்டை ஓர் அரசன் ஆண்டு வந்திருக்கிறான் என்கிற தகவல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் புத்தகோசர் பாளிமொழியில் எழுதிய சம்மோஹவிநோதனி என்னும் நூலிலும் கூறப்படுகிறது. இந்த நூலில் நாகதீப அரசன் 'தீபராஜா' (நாகதீவின் அரசன்) எனக் குறிப்பிடப்படுகிறான் (*Buddhaghosa: Sammohavi nodani: 443*).

கி.பி. பதின்நான்காம் நூற்றாண்டில் சிங்களமொழியில் எழுதப்பட்ட 'சத்தம்மலங்காரய' என்ற பௌத்த மத நூலில் கூறப்பட்டுள்ள ஓர் உபகதையில் இலங்கையின் தெற்குப் பகுதியான மகாகமத்திலிருந்து பறந்துவந்த ஓர் ஆண் காக்கைக்கும், வடபகுதியான 'மணிநாக தீபத்திலிருந்து' வந்த ஒரு பெண் காக்கைக்கும் ஏற்பட்ட காதலும், திருமண நிகழ்வும் கூறப்படுகிறது. ராஜாவலிய என்ற சிங்கள நூல், 'மணிநாகதீப' புராதன யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற பௌத்த மையம் எனச் சொல்கிறது (*Gunasekara, B. 2015*). இவற்றை ஆராய்ந்த கலாநிதி கொடகும்புர, 'மணிநாகதீப' என்ற நகரம் பண்டைய கந்தரோடையைக் குறிப்பதாகக் கூறியிருக்கிறார் (*Godakumbura, C. 1968*). கி.பி. ஆறாம் நூற்றாண்டில் மகாவம்சத்தை எழுதிய அநுராதபுரம் மகாவிகாரையின் தலைமைக் குருவான மகாநாமர் இலங்கையின் வடபகுதியை 'நாகதீப' என்றும், நாகதீப அரசர்களில் ஒருவரான சூளோதரன் 'கந்தவதமான' (*Kannavaddhamana*) குன்றிலிருந்து ஆட்சி புரிந்ததாகவும் கூறியிருக்கிறார். 'கந்தவதமான' என்ற பாளிப்பதம், 'கந்தமாதனம்' என்ற தமிழ்ப்பெயரின் பாளிமொழி வடிவம் என நம்ப இடமிருக்கிறது.

யாழ்ப்பாண வரலாற்றைப் பதிவு செய்திருக்கும் 'யாழ்ப்பாண வைபவமாலை', இந்த நாட்டின் பண்டைய தலைநகரமாக 'கதிரமலை'யைக் குறிப்பிடுகிறது. கதிரமலை என்பது இன்று நாம் கந்தரோடை என அழைக்கும் கிராமத்தின் மற்றுமொரு பெயராகும். இன்றைக்கும் சுன்னாகம் சந்தைக்கும் கந்தரோடைக்கும் இடைப்பட்ட குன்றுப் பிராந்தியம் கதிரமலை என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. மேலும், சுன்னாகம் ரயில் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள சிவன்கோயில் 'கதிரமலைச் சிவன்கோயில்' என அழைக்கப்படுகிறது.

'கந்தரோடை' என்ற பெயரின் பூர்வீகத்தைச் சரியாக அறியமுடியவில்லை. மகாவம்சம் குறிப்பிடும் 'கந்தமாதனம்' என்ற பெயருக்கும், 'கந்தரோடை' என்ற பெயருக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும். 'தமிழரும் இலங்கையும்' என்ற நூலை எழுதிய வரலாற்றாசிரியர் சி.எஸ். நவரட்ணம் ஒருசமயம் 'கந்தகோட்டம்' என்ற பெயரே காலப்போக்கில் 'கந்தரோடை'யாக மருவியிருக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டிருந்தார். 'கந்தமாதனம்' என்ற பெயரின் பின்னர் கந்தகோட்டம், கந்தகோட்டை, கந்தரோடை ஆகிய பெயர்கள் நீண்டகால வரலாற்றில், வெவ்வேறு காலங்களில் இந்த நடுவத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

### உத்தரதேசம்

கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் பாளி ஏடுகள் அநுராதபுரத்தைத்தவிர, இலங்கையின் ஏனைய ஐந்து பிரதேசங்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன. இவை வரலாற்றேடுகளில் முன்பிருந்தே குறிப்பிடப்பட்டுவந்த ரோஹண (இலங்கையின் தென்பாகம்), மலய (இலங்கையின் நடுவேயுள்ள மலைப்பிரதேசம்), உத்தரதேச (வடநாடு), பசின தேச (கீழ்நாடு), தக்கிண தேச (தென்நாடு) என்பனவாகும். இவற்றின் எல்லைகளை எவ்விதத்திலும் அறிய முடியாதுள்ளது. இப்பிரதேசங்கள் அநுராதபுரத்தை மையமாகக் கொண்ட அரசின் நடுப்பகுதிக்கு வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் இருந்த பிரதேசங்கள் எனவும், திட்டவட்டமற்ற முறையில் வகுக்கப்பட்ட மாநிலங்கள் எனவும் கொள்வது தவறாகாது (இந்திரபாலா, கா. 2006: 230-31).

வடஇலங்கையின் 'உத்தர தேசத்தைப்' பற்றிய குறிப்புகளை ஆய்வு செய்தால் அப்பிரதேசம்

ஏனைய பிரதேசங்களைவிட வேறுபட்டதாக இருந்தது என்பதை அறியலாம். அநுராதபுரத்து மன்னர்களின் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாகப் பலமுறை அதனைக் காணலாம். அநுராதபுர ஆட்சியை எதிர்த்தோர் அங்கு ஆதரவு பெற்றதையும் காணலாம். முற்பட்ட நூற்றாண்டுகளைப்போல் அல்லாது, ஆறாம் நூற்றாண்டின்பின் தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள் வடபகுதியில் (உத்தரதேசத்தில்) இறங்குவதையும் அவதானிக்க முடிகிறது. அப்படி வந்த படைகள் வடக்கில் தங்களை உறுதிப்படுத்தியபின் அநுராதபுரத்தை நோக்கி முன்னேறின. இவற்றை நோக்குமிடத்து அநுராதபுரத்து ஆட்சியாளருக்குச் சாதகமான சூழ்நிலை வடபகுதியில் நிலவவில்லை என்பது தெளிவு (இந்திரபாலா, கா. 2006: 231).

இச்சந்தர்ப்பத்தில் எகிப்தின் அலெக்ஸ்ஸாந்திரியாவிலிருந்து ஆறாம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த வர்த்தகரும் மதகுருவுமான கொஸ்மஸ் இன்டிகோபிளியுஸ்டிஸ் (Cosmas Indicopleustes) இலங்கையின் அன்றைய அரசியல்நிலை தொடர்பாகக் கூறிய கருத்தை இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். அவரது கூற்றிலிருந்து இலங்கையில் இரு அரசுகள் இருந்தமையும், அவற்றுள் ஓர் அரசின் மன்னனிடம் செந்நிறமணிகள் காணப்படும் நிலப்பகுதியும், இன்னொரு மன்னனிடம் மிகப்பெரிய வணிகநகரத்தை உள்ளடக்கிய துறைமுகம் இருந்தமையும் தெரியவருகிறது. இதற்கு விளக்கமளித்த பேராசிரியர் பரணவிதான, செந்நிறமணிகள் காணப்படும் நிலப்பரப்பு தென்னிலங்கை அரசு எனவும், பெரிய வணிகநகரத்தை உள்ளடக்கிய துறைமுகம் மாதோட்டம் எனவும், அது அநுராதபுர அரசனால் ஆளப்பட்ட பகுதி என்றும் கூறுகிறார். தென்னிலங்கையில் இன்னொரு மன்னன் இருந்தமைக்கு, அதன் ஆட்சியாளன் அநுராதபுர அரசிற்கு கீழ்ப்படிய மறுத்ததே காரணம் என விளக்கம் கூறுகிறார் (Paranavithana, 1961: 184). ஆனால் முதலியார் இராசநாயகம், பெரிய வணிகநகரத்தை உள்ளடக்கிய மாதோட்டத்துறைமுகம் யாழ்ப்பாண அரசிற்கு உரியதெனக் கூறியிருக்கிறார் (Rasanayagam, C. 1926).

கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பின்னர் நாகதீபத்திற்கும் அநுராதபுரத்திற்கும் இடையே இருந்த அரசியல் உறவுகளை நோக்கும்போது தென்னிலங்கையைக் காட்டிலும் வடஇலங்கையே அநுராதபுர அரசின் மேலாண்மைக்குக் கீழ்ப்படியாதிருந்ததைக் காணமுடிகிறது. இதனால் கொஸ்மஸ் கூறும் பெரிய வணிகத்துறைமுகத்தைக் கொண்டிருந்த மன்னன் வடஇலங்கையில் ஆட்சிசெய்த மன்னர்களில் ஒருவனாகக் கருத இடமுண்டு (பத்மநாதன், 2014: 25).

கி.பி. 850 ஆம் ஆண்டளவில் இந்தியா, இலங்கை (Sarandib), சீனா ஆகிய நாடுகளுக்குப் பிரயாணம் செய்த ஈரானிய மொகம்மதிய யாத்திரிகர்களான சுலைமான் அல்தாஜிர், அபு செயத் ஆகியவர்களும், இலங்கைத்தீவை இரு அரசர்கள் ஆட்சிபுரிவதாகக் கூறியிருக்கிறார்கள்:

*"This Sarandib Island, which is of great extent, has two kings; and here you may have woodaloes, gold, precious stones, and Pearls, which are fished on the coast; also, a kind of large shells, which they use instead of trumpets, and which they much value"* (Sulayman alTajir & Abu Zaid, 1733, page. 3)"

"பெரியளவிலான இந்த ஸரன்திப் தீவில் இரு அரசர்கள் ஆட்சி புரிகிறார்கள். இங்கே அகில் மரம், தங்கம், மதிப்புமிக்க கற்கள், கடற்கரைப்பகுதியிலிருந்தே பெறப்படும் முத்துகள், மிக மதிப்புள்ள, ஊதுகொம்பாய் உபயோகப்படுத்தப்படும் பெரிய கடற்சிப்பிகள் (சங்குகள்) என்பன கிடைக்கும்." கடலில் முத்துக் குளிப்பதும், சங்குகள் எடுப்பதும் பாரம்பரியமாக வடஇலங்கை அரசர்களால் இலங்கையின் வடமேற்குக் கடலில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளாகும்.

**நாகர்கள்**

நாகர்கள் புராதனகாலத்தில் இந்தியாவிலும், இலங்கையிலும் வாழ்ந்த பூர்வகுடி மக்களாவார். இம்மக்கள் நாகபாம்பை தங்களது

குலச்சின்னமாகக் கொண்டு (Clan totem), நாகத்தை வணங்கி வந்தபடியினால் 'நாகர்கள்' என அழைக்கப்பட்டார்கள் என்பது ஆனந்தா குமாரசாமி போன்ற சில ஆய்வாளர்களின் முடிவு. இந்நாகர்களைப் பற்றிய விவரங்கள் சங்கத்தமிழ் இலக்கியங்களிலும், வியாசர் மகாபாரதத்தின் ஆரம்ப அத்தியாயங்களிலும் காணப்படுகின்றன.

ஆதிகால நாகர், அகில இந்தியப் பரிமாணமுடையவர்கள். இந்தியக் குடியரசின் வடக்கிலே நாகலாந்து என்னும் மாநிலமுள்ளது. முற்காலங்களில் நாக வம்சத்தவர், கங்கைச் சமவெளியின் தென்பால் அரசு புரிந்தனர். குப்தப்

பேரரசனான சமுத்திரகுப்தன், அவர்களில் சிலரின் இராச்சியங்களைக் கைப்பற்றினான். அவனது இரண்டாவது மகன் சந்திரகுப்தனின் தேவியரில் ஒருத்தி நாக நங்கையான குபேரநாகை ஆவாள் (பத்மநாதன், சி. 2013: XIV).

இந்தியாவின் பல நாடுகளையும், நகரங்களையும் நாக மன்னர்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். மௌரிய அரசை ஆரம்பித்துவைத்து ஆட்சிபுரிந்த பிம்பிசாரன், அஜாத்சத்ரு, நாகதாசகன், சுசுநாகன் ஆகியோர் நாக அரசர்களே. சமுத்திரகுப்தனின் அலகபாத் கல்வெட்டில் நாகதத்தன், நாகசேனன் ஆகிய நாக அரசர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. பொ.யு. மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளில் நாகபுரியின் நாக மன்னர்கள் சத்வாகனர்களுடனும், பல்லவர்களுடனும் கலப்பு மணம் புரிந்திருக்கிறார்கள். கி.பி. பதினொராம் நூற்றாண்டுவரை மத்திய இந்தியாவின் சுக்ரகுத்தா, போகவதி ஆகிய நகரங்களை, நாக பாம்பை அரச இலச்சினையாகக்கொண்ட நாக அரசர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள் (தியாகராஜா, சி. 2023: 95).

நாகர்கள் எக்காலத்தில் வடக்கிலிருந்து தென்புலம் வந்தனர் என்பது பூர்வீக இந்தியஇலங்கை வரலாற்றில் இன்னும் தெளிவுபடுத்தப்படாத விடயம். இலங்கையின் பாளி ஏடான மகாவம்சம், கி.மு. ஆறாம்ஐந்தாம் நூற்றாண்டில், புத்த பெருமான் வாழ்ந்த காலத்தில் வடஇலங்கையின் நாகதீபத்தின் அரசுரிமைக்காக மகோதரன், சூளோதரன் என்ற இரு நாக அரசர்கள் போட்டியிட்ட சம்பவத்தைக் குறிப்பிடுகிறது. பொ.யு.மு. ஆறாம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் நாகநாட்டில் ஓர் இராசதானி இருந்ததை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது (*Mahavamsa I: 63*).

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை நாகர்கள் வாழும் இடங்களாக யாழ்ப்பாணம், ஜாவா, நிக்கோபார் தீவுகள் ஆகிய இடங்களைக் குறிப்பிட்டுச் சொல்கிறது. மணிமேகலை இவ்விடங்களில் வாழும் பூர்வகுடிகளை எல்லாம் 'நாகர்' என்ற பொதுப்பெயரால் அழைப்பதுபோலத் தெரிகிறது. நாகநாடு எனப்படும் பண்டைய யாழ்ப்பாணத்து நாகர்கள், காவிரிப்பூம்பட்டினத்தை நிகர்த்த உயர்வான ஒரு நாகரிகத்தைக் கொண்டவர்களாகவும், இங்கே சிறப்பான ஓர் அரசை ஓர் அரசன் கொண்டுநடத்துவதாகவும், இங்குள்ள மக்கள் செல்வச்செழிப்பான ஒரு வாழ்க்கை நடத்துவதாகவும் இந்நூல் விவரிக்கிறது (மணிமேகலை அத். 14:24, அத். 54:71).



திருகோணமலையில் வட்டவன் பாறையில் பொறிக்கப்பட்டிருக்கும் பகுதி அழிந்த தமிழ்ப்பிராமி வாசகம்: 'பருமகன் வேள்...'
மூலம்: சி.பத்மநாதன்

ஜாவா தேசத்து நாகர்களும் உயர்வானதொரு நாகரிகத்தைப் பேணி, ஓர் அரசனால் ஆளப்படுகிறார்கள். அவர்களது நாடும் செல்வச்செழிப்பு மிகுந்த நாடாகக் கூறப்படுகிறது. அவர்களது நாட்டின் தலைநகரம் நாகபுரம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது (மணிமேகலை அத். 24: 169-170).

நிக்கோபார் தீவின் நாகர்கள் கறுப்பு நிறத்தவர் எனவும், நாடோடி வாழ்க்கை வாழ்பவர் எனவும், மனித மாமிசம் புசிப்பவர் எனவும் கூறப்படுகின்றன. அவனது கப்பல் அத்தீவில் கரைதட்டியபோது அங்கே சென்ற ஒரு வர்த்தகன், அத்தீவின் தலையாரி நாகன் அவனது மனைவியோடு அமர்ந்திருப்பதைக்கண்டு 'அவர்களைப் பார்க்க, ஒரு கரடி தனது பெண் ஜோடியோடு உட்கார்ந்திருப்பது போலக் காட்சியளித்தது' என்று கூறியதாக மணிமேகலை பதிவு செய்திருக்கிறது (மணிமேகலை அத். 15: 16, அத். 16: 66-69).

இக்காட்சியைப் பார்க்குமிடத்து இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து தென்கிழக்கு ஆசியாவரை இடம்பெயர்ந்து சென்ற ஆதி ஆஸ்திரலோயிட்டு மக்களின் நேரடி வம்சாவளியினர்களாக இருக்கலாமெனவும், இந்த ஆதிவாசிகளில் சற்று நாகரிகமடைந்து நாக வணக்கத்தை மேற்கொண்ட மக்கள் 'நாகர்' எனப் பெயர் பெற்றதாகவும், காட்டில் வேட்டையாடி உணவு உண்ட மக்கள் 'வேடர்'களாகத் தொடர்ந்ததாகவும் அறிஞர் ஆனந்தா குமாரசாமி கருதுகிறார்.

தென்ஆசியாவின் ஆதி ஆஸ்திரலோயிட் மக்களினதும், 'கோக்கஸோயிட்' மக்களினதும் சேர்க்கையால் தென்னாசிய நாகர்கள் பிறந்தனர்;

ஆஸ்திரலோயிட் மக்களினதும், 'மொங்கலோயிட்' மக்களினதும் சேர்க்கையால் தென்கிழக்கு ஆசிய நாகர்கள் தோன்றினர்; இவர்களின் வம்சாவளியினரே 7 முதல் 16 ஆம் நூற்றாண்டுவரை கம்போடியாவை ஆட்சிபுரிந்த கமர் அரசர்கள் (Khmer kings); இவர்கள் பசிபிக் தீவுகள், ஈஸ்டர் தீவுகள், மடகஸ்கார் தீவு ஆகிய இடங்களுக்குச் சென்று 'ஆஸ்திரோ மெலனேசியர்கள்' (AustroMelanesians) என அழைக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது (Chandler, D.P. 1983).

இலங்கையின் தலையாய தொல்லியலாளர்களுள் ஒருவரான சிரான் தெரனியகல, இலங்கையின் வரலாற்றுதயகால இரும்புக்கால மனிதர்களே நாகர்கள் என்றும், இவர்கள் அதற்குமுன்னர் இங்கிருந்த இடைக்கற்காலத்து வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்ந்துவந்த மனிதர்களை இலங்கையின் வடபகுதியிலிருந்தும், தென்பகுதியிலிருந்தும் பொ.யு.மு. 1000 ஆண்டளவில் நீக்கிவிட்டு, அவ்விடங்களில் இனப்பெருக்கம் அடைந்ததாகக் கூறியிருக்கிறார் (Deraniyagala, S.U. 1992: 735, 363).

இச்சந்தர்ப்பத்தில், யாழ்ப்பாண நாகர்கள், தென்னிந்தியாவிலிருந்து இரும்புக்காலத்தில் பெருங்கற் பண்பாட்டை இங்கே கொண்டுவந்தவர்களா? அல்லது அப்பண்பாடு இங்கே கசிந்துவந்த காலத்தில், அதைப் பின்பற்றிய இலங்கை மக்களா? என்ற கேள்வி எழுகிறது. அவர்கள் பொ.யு.மு. 65,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆபிரிக்காவிலிருந்து பல அலைகளாக இங்குவந்த மக்களின் சந்ததியினராக இருப்பின், 30,000 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிருந்த நுண்கற்கால மக்களின் வம்சாவளியினரின் ஒரு பகுதியினராகவே இருப்பர்.

இன்றைய மரபணுவியல் ஆய்வுகள், இலங்கையில் இன்றிருக்கும் மக்களில் 90% இற்றைக்கு 30,000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டிலிருந்த இடைக்கற்கால, நுண்கற்கால மக்களின் நேரடி வம்சாவளியினரே என எடுத்துக்காட்டுகிறது (Thiagarajah, Siva. 2011). கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வடஇந்தியாவிலிருந்து விஜயனும் அவனது சகாக்களும் இங்கே வந்திறங்கிய சமயம், இந்த நாட்டில் நாகர்கள் வாழ்ந்ததை இலங்கையின் பாளி நூல்கள் எடுத்துரைக்கின்றன. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து நாகர்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்ந்த புராதன மனிதர்களின் ஒரு பிரிவினர் என எண்ணவேண்டியுள்ளது. இலங்கையின் பாளி நூல்கள் எந்த இடத்திலும் விஜயனையும் அவனது சகாக்களையும் 'இந்தியஆரியர்' என அழைக்கவில்லை.

நாகர்களைப் பற்றிய குறிப்புகள் பல பரிமாணங்களைக் கொண்டவை. சில இடங்களில் நாக(ர்) என்பது ஓர் இனக்குழுவின் பெயராக வருகின்றது. வேறு சிலவற்றில் அது ஒரு குலப்பெயர் என்று கொள்ளும் வகையிலே காணப்படுகிறது. இன்னும் சில இடங்களில் அது ஒருவரின் தனிப்பெயராக அமைந்துவிடுகிறது. பிரதானமாக சாசனக்குறிப்புகளில் இந்த வேறுபாட்டைக் காணலாம் (பத்மநாதன், சி. 2011: 48).

நாகர்கள் வடஇலங்கையில் நாகதீபம் (யாழ்ப்பாணம்), பூநகர் (பூநகரி), மாதோட்டம் (மாந்தை), பல்லவாங்கம் (பதவியா), திரிகூடம் (திருக்கோணமலை) ஆகிய இடங்களிலும், அப்பால் கரையோரப்பகுதிகளான புத்தளம், சிலாபம், கல்யாணி (களனி), தேவேந்திரமுனை (தேவிநுவர), நாகதுமை (மகாகம), திருக்கோவில், நன்னிகிரி ஆகிய இடங்களிலும் வாழ்ந்திருந்தார்கள் என்பதை இலக்கிய ஆதாரங்கள், தொலமியின் வரைபடம் என்பன எடுத்துக்காட்டுகின்றன.

மகாவம்சம், புத்தபகவான் வாழ்ந்த காலத்தில் (பொ.யு.மு. ஆறாம்ஐந்தாம் நூற்றாண்டில்) இலங்கையில் நாகதீபத்திலும், கல்யாணியிலும் இரு நாக அரசுகள் இருந்ததை எடுத்துரைக்கிறது (Mahavamsa Ch.1). மகாவம்சத்தைப்போல, இயக்கரையும் நாகரையும் இலங்கையின் பூர்வகுடிகளாகக் கொள்ளுகின்ற 'மட்டக்களப்பு பூர்வசரித்திரம்' அவர்களுக்கிடையில் ஏற்பட்ட கலப்பினைப்பற்றி பின்வருமாறு வர்ணிக்கின்றது:

"கலிகடந் தெண்ணூறாண்டில் கருதிய இலங்கை தன்னில்
வலியவ ரியக்கரோடு கலந்தவர் மரபென்றாகி
நலிவில்லா நிருபஞ்செய்து நகரெலா மிறைகளென்ன
ஒலிவள ருகந்தமென்னும் நகரத்திலுறைநந்தார் நாகர்."

(மட்டக்களப்பு பூர்வசரித்திரம், பக். 3)

இப்பாடல், ஆதிகாலத்தில் நாகர் உகந்தையில் இராச்சியம் அமைத்து அங்கே வாழ்ந்தனர் என்பதைக் குறிக்கின்றது. இலங்கையில் ஏற்பட்ட அரச உருவாக்கம், நாகருடன் தொடங்கியது என்ற வரலாற்றை அது பிரதிபலிக்கிறது. அரசின் தோற்றம் பற்றிய ஆய்வில் இக்கதை சிறப்பிடம் பெறக்கூடியது (பத்மநாதன், சி. 2011: 49).

மிகவும் புராதனமான காலத்தில், இலங்கையின் கிழக்குக் கரையோரப்பகுதியில், உகந்தையைத்தவிர நாகர் ஆதிக்கம் பெற்றிருந்த வேறு சிற்றரசுகள் இருந்ததைப் பற்றியும் இந்நூலின் மூலம் அறிகின்றோம். தேசத்துக்கோயில் எனப் பிற்காலத்திலே பராட்டப்பெற்ற திருக்கோயில் அமைந்தபகுதி நாகர்முனை என்ற பெயரால் வழங்கியது என்றும், அது 'உன்னரசகிரி' என்னும் இராச்சியத்தில் அடங்கிய பகுதி என்றும் இந்நூலில் கூறப்படுகிறது. மேலும், திருகோணமலை, கொட்டியாரப்பற்று என்பனவும் நாகர் பிரதானிகளை அதிபர்களாகக்கொண்ட ஆதிகாலக் குறுநிலப்பிரிவுகள் என்பதும் இந்நூலின் மூலம் அறியக்கிடக்கின்றது (மட்டக்களப்பு பூர்வசரித்திரம், பக்.16).

இலக்கியச் சான்றுகளைத்தவிர, சமீபகாலங்களில் பேராசிரியர் சி. பத்மநாதன் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில், நாகர்களின் பல சிற்றரசுகள் இருந்ததை அவ்விடங்களிலுள்ள பிராமிக்கல்வெட்டுகள் மூலமாகவும் எடுத்துக்காட்டியிருக்கிறார் (பத்மநாதன், சி. 2016).

இலங்கையின் மூன்றிலொரு பாகத்திலே தமிழர் சமுதாயம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் உருவாகிவிட்டது என்றும், தொடர்ச்சியான ஒரு நிலப்பகுதியிலே தமிழ்மொழி பேசுவோர் வேளிர் ஆட்சியின் கீழமைந்த சிற்றரசுகள் பலவற்றை உருவாக்கிவிட்டனர் என்றும் சொல்லக்கூடிய காலம் வந்துள்ளது. நாகர் தமிழ்மொழி பேசியவர்கள் என்பதாலும், ஆதிஇரும்புக்காலப் பண்பாட்டைப் பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் என்பதாலும், கி.மு. ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சுவழக்கு மொழியாக நிலைபெற்றுள்ளமை உய்த்துணரப்படுகின்றது. இங்கு கிடைக்கின்ற தமிழ்ப் பிராமிக்கல்வெட்டுகளின் அடிப்படையில் இலங்கையில் தமிழ்மொழியின் தொன்மை பற்றி அறியமுடிகிறது (பத்மநாதன், சி. 2016: xiv).

இலங்கையின் பழங்குடி மக்களான நாகர்கள் திராவிடர்களே என்பதை ஆங்கில வரலாற்றாசிரியர்களான ஸேர். எமர்ஸன் ரெனன்ற் (Emerson Tennent: Ceylon), ஹென்றி பார்க்கர் (H. Parker: Ancient Ceylon) ஆகியோர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இலங்கையில் வாழ்ந்த நாகர்கள் தமிழ்மொழியைப் பேசிய தமிழர்கள் என்பது அவர்கள் விட்டுச்சென்ற கல்வெட்டுகளில் காணப்படும் தமிழ்ப்பிராமி எழுத்துகள் மூலம் அறியப்படுகிறது. புளியங்குளம் - முல்லைத்தீவு பாதையில் உள்ள கட்டுக்கரைப் பாறையில் 'வேள் நாகன்' என்ற தமிழ்ப்பிராமிப் பொறிப்பு காணப்படுகிறது. 'வேள்' என்ற பதம் பண்டைய தமிழகத்தில் இருந்ததைப்போல ஒரு சிற்றரசனைக் குறிக்கும். தென்னிலங்கையில் மகாகமையில் கண்டுபிடிக்கப்பட்ட பொ.யு.மு. இரண்டாம் நூற்றாண்டிற்குரிய நாணயம் ஒன்றில் 'திசபுரசடநாகராசன்' என்னும் தமிழ்ப்பிராமி வாசகம் காணப்படுகிறது. இது 'திசபுரம்' என்னும் இடத்திலிருந்து ஆட்சிபுரிந்த ஒரு நாக அரசன் வெளியிட்ட நாணயமாகக் கொள்ளப்படுகிறது (Bopearachchi, O. & Wickramasinghe, R.M. 1999).

இலங்கையில் அநுராதபுரத்திலிருந்து ஆட்சிபுரிந்த பல நாக அரசர்களைப் பற்றி மகாவம்சம் எடுத்துரைக்கிறது: கல்லாட நாகன் (கி.மு. 50-43), சோரநாகன் (கி.மு. 3-பொ.யு. 9), மகாதத்திக மகாநாகன் (கி.பி. 66-78), ஈழநாகன் (கி.பி. 95-101), மாகல்ல நாகன் (பொ.யு. 195 199), குச்சநாகன் (பொ.யு. 241-243), குஞ்சநாகன் (கி.பி. 243-244), ஸ்ரீநாகன் (கி.பி. 244-263), அபயநாகன் (கி.பி. 285-293), இரண்டாம் ஸ்ரீநாகன் (கி.பி. 293-295) (Mahavamsa: 1960, Introduction). இந்த அரசர்களை அவர்களின் பெயர்களிலிருந்தே நாகர்களாக இனங்கண்டு கொள்ளலாம்.

அநுராதபுரத்திலிருந்து ஆட்சிபுரிந்த 'லம்பகர்ண' அரசர்கள், வடஈழ நாகர்களுக்கும் பாண்டிய அரச குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட உறவினால் வந்த வம்சாவளி அரசர்களாவர். பெரிய காதணிகளை அணிந்ததனால், பெரிய காதுகளைப் பெற்றிருந்த இவர்கள் லம்பகர்ணர்கள் என அழைக்கப்பட்டார்கள். வீரபாண்டியன், மதுரையில் முடிசூடிக் கொண்டபோது இவ்விழாவில் அநுராதபுர லம்பகர்ணர்கள் பங்குபற்றித் தமது கடமைகளைப் புரிந்தார்கள் என சூளவம்சம் கூறுகிறது.

அநுராதபுரத்தில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தேவநம்பியதிஸ்ஸனால் ஆரம்பித்துவைக்கப்பட்ட மௌரிய ஆட்சி முடிவடைய, அரசன் வசபனுடன் (கி.பி. 124 -168) லம்பகர்ணர்களின் ஆட்சி ஆரம்பமாகி, மகாநாமன் வரை நீடித்தது. இவர்களில் புகழ்பெற்ற லம்பகர்ண அரசனான கஜபாகு (கி. பி. 171-193) ஈழத்தில் கண்ணகி வழிபாட்டை

அறிமுகப்படுத்திய பெருமகனாவார் (தியாகராஜா **2023: 96)**. அநுராதபுர அரசனான தேவநம்பியதிஸ்ஸன் நாகர் குலத்தவனே. இவனது தந்தையின் பெயர் மூத்தசிவன். இவனது பெயர் குறிப்பிடுவதுபோல இவன் சிவபக்தனாக இருந்திருக்கலாம். இவர்களைத்தவிர 'திஸ்ஸ' என்ற பெயரைக்கொண்ட அநுராதபுர அரசர்கள் நாகர்குல அரசர்களாவர். சூரத் திஸ்ஸன், சுத்த திஸ்ஸன், லஞ்ச திஸ்ஸன், மகா திஸ்ஸன், குட்டகண்ண திஸ்ஸன், கனிராஜனு திஸ்ஸன், யகலாலக திஸ்ஸன், வங்கநாசிக திஸ்ஸன் ஆகிய அரசர்களின் பெயர்கள் மகாவம்சத்தில் இடம்பெறுகின்றன. இன்றும் வடஈழத் தமிழர்களிடையே காணப்படும் திஸவீரசிங்கம், திஸ்ஸநாயகம், திசைகொண்டான் ஆகிய பெயர்கள் இப்புராதன நாகப் பெயர்களின் எச்சங்களே.

சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் புலவர்களில், பல நாகர்கள் இடம்பெறுகிறார்கள். முதற்சங்கத்தில் முக்கியத்துவம்பெற்ற முரஞ்சியூர் முடிநாகராயர், ஈழத்திலிருந்து சென்று எழிற்றமிழ் புனைந்த பூதந்தேவனார், ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசியை இயற்றிய நாகதத்தர், பரிபாடலில் இடம்பெறும் பல பாடல்களை இயற்றிய நாகநன்னாகனார், கலித்தொகையில் மருதக்கவி பாடிய மருதிள நாகர் அனைவரும், 'தேன் பிலிற்றும்' செய்யுட்கள் வரைந்த தீந்தமிழ் நாகர்களே! இவர்கள் மட்டுமா? சயங்கொண்ட சோழனின் வேண்டுகோளுக்கிணங்க நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதியவரும் நாகஞானியான பவணந்தி முனிவரே!

## பண்டைக்கால நாகநாட்டில் இந்து - பௌத்த மதங்கள்

கந்தரோடை அகழ்வுகளில் காணப்பட்ட முக்கியமான ஓர் அம்சம் தாய்த்தெய்வ வழிபாட்டைக் குறிப்பிடும் உலோகவில்லைகளாகும் (Plaques). **1917-1919** இல் அங்கே அகழ்வை மேற்கொண்ட போல்பீரிஸ் நூற்றுக்கணக்கான இந்த வில்லைகளைக் கண்டெடுத்தார். நிற்கும்நிலையில் வலதுகையில் தாமரை மலரையோ அல்லது ஒரு தண்டத்தையோ பிடித்துக்கொண்டிருக்கும் இந்த உருவங்களைக்கொண்ட வில்லைகளுக்கு 'லக்ஷ்மி வில்லைகள்' எனப் பெயர் கொடுத்தார். இந்த வில்லைகள் நாணயங்களாகப் பாவிக்கப்பட்டன எனச் சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இந்த லக்ஷ்மி வில்லைகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை **600** ஆண்டுகாலமாக புழக்கத்தில் இருந்துவந்தன (Pieris, P. **1919: 52-53)**.

இவை தவிர யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் புக்ஷ்பரட்ணம் கண்டெடுத்த இரு செப்புத்தகடுகள் முக்கியமானவை. இவற்றிலொன்றில் வலதுகையில் தாமரை மலரைப் பிடித்துக்கொண்டு, தலைவிரி கோலமாக, லலிதாசன நிலையில் உட்கார்ந்திருக்கும் பெண் தெய்வம் கொற்றவை ஆகும். இச்செப்புப் பட்டயம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குரியது (Pushparatnam, P. **2002: 183)**.

அடுத்தது, யோகநிலையில் உட்கார்ந்த ஆண் உருவம் கொண்ட செப்புப் பட்டயம். இதன் தலைப்பகுதியில் உச்சிமுடி காணப்படவில்லை. இந்தச் செப்புப்பட்டயம் சிவனுடைய முற்காலத்தைய உருவமாகக் கருதப்படுகிறது. இந்த உருவத்திற்கும் மொகஞ்சதாரோவில் ஜோன் மார்க்ஷல் கண்டெடுத்த சிவனின் உருவத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகிறது (Pushparatnam, P. **2002: 183)**. இவற்றைத்தவிர வெண்கலத்தினாலும், செப்பினாலும் செய்யப்பட்ட திரிசூலங்களும், வேல்களும் கந்தரோடையிலும், யாழ்ப்பாணத்தின் பிற இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

கி.மு. ஆறாம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் நாகநாட்டிற்கு பௌத்தமதம் அறிமுகமாகிய பொழுதில் மகோதரன், சூளோதரன் ஆகிய நாக அரசர்களும், அந்நாட்டில் வாழ்ந்த பல மக்களும் அம்மதத்தைத் தழுவிய செய்தி ஏற்கனவே கூறப்பட்டது. இந்நாக மக்கள் சிவவணக்கத்துடன் பௌத்தமதக் கொள்கைகளையும் சேர்த்தே அனுசரித்து வந்தார்கள் என ஊகிக்கமுடிகிறது. கந்தரோடை அகழ்வுகளிலும், யாழ்ப்பாணத்தின் பிற இடங்களிலும் கிடைத்த லக்ஷ்மி வில்லைகளும், தாய்த்தெய்வ சுடுமண் உருவங்களும், அவற்றோடு அதே அகழ்வு மட்டங்களில் இடம்பெறும் பௌத்தமதக் கருவூலப் பொருட்களும் இம்மக்கள் ஒரே சமயத்தில் இந்துபௌத்த மத வணக்கங்களை மேற்கொண்டவர்கள் என்ற கருத்திற்கு ஆதரவு தருவதாய் அமைந்திருக்கிறது.

இவற்றை நோக்குமிடத்து நாக நாடான பண்டைய யாழ்ப்பாணத்தை இந்து, பௌத்தம் ஆகிய இரு மதங்களையும் பேணிய மக்கள் சுமுகமாக வாழ்ந்த ஒரு பொதுவுடமை சமூகத்திற்குரிய (Cosmopolitan Society) நாடாகக் கொள்ளலாம்.

## பீலிவளை புதல்வன் தொண்டைமான் இளந்திரையன்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நாகநாட்டை ஆண்ட அரசர்கள் பௌத்தமதத்தைத் தழுவியிருந்தார்கள். இம்மன்னர்களின் மாண்புகளை மணிமேகலை எடுத்துரைக்கிறது. நாகநாட்டை ஆட்சிபுரியும் மன்னன் 'வளைவாணன்' (வளை எறிவதில் வல்லவன்) என்ற பெயரைக் கொண்டவன். அவனது மனைவியான அரசியின் பெயர், வாசமயிலை. அவர்களுக்குப் பிறந்த பெண், பீலிவளை.

"நாக நாடு நடுக்கின் றாள்பவன்
வாகை வேலோன் வளைவணன் தேவி
வாச மயிலை வயிற்றுட் தோன்றிய
பீலிவளை என்போள் பிறந்த அந்நாள்"

(மணிமேகலை: காதை 24: வரி 54–57)

## நெடுமுடிக்கிள்ளி

பீலிவளை வளர்ந்து பெரியவளாகிறாள். பூம்புகார் நகரத்திற்குப் பெற்றோர்களோடு இந்திரவிழாக் காணச்சென்ற சமயத்தில் ஒரு நாள் சோழ மன்னன் நெடுமுடிக்கிள்ளியைச் சந்திக்க நேரிடுகிறது. சோழ மன்னனுக்கும் நாக இளவரசிக்குமிடையே காதல் மலர்கிறது. ஒரு திங்கள் காலம், பீலிவளை சோழ அரசனுடனே கூடியிருந்து களித்திருந்தாள்.

"உப்பளம் தழீஇய உயர்மணல் நெடுங்கோட்டுப்,
பொங்குதிரை உலாவும் புன்னையங் கானல்
கிளர்மணி நெடுமுடிக் கிள்ளி முன்னா
இளவேனில் இறுப்ப இறும்பூது சான்ற
பூநாறு சோலை யாருமில் ஒருசிறைத்
தானே தமியன் ஒருத்தி தோன்ற"

(மணிமேகலை: காதை 24: வரி 27–32)

உப்பளத்தினைச் சார்ந்ததும், மணல் உயர்ந்த நீண்ட கரையினை உடையதும், பொங்கிவரும் கடலலைகள் உலவிக்கொண்டிருக்கும் புன்னைமரங்களைக் கொண்ட அழகிய கானற் சோலையிடத்தே ஒளி கிளர்ந்துகொண்டிருந்த நெடிய முடியினையுடைய கிள்ளியின் முன்பாக, இளவேனிற் பருவமானது இறுமாப்பினை

2

அடையுமாறு, வியக்கும்தன்மை வாய்ந்த மலர்கள் மணம் பரப்பிக்கொண்டிருக்கும் சோலையினுள்ளே, யாருமில்லாத ஒரு பக்கத்தே, தன்னந்தனியளாக ஒருத்தி வந்து தோன்றினாள்.

## கிள்ளியின் காதலி

"இன்னல் ஆர்கொல் ஈங்கிவள்? என்று,
மன்னன் அறியான் மயக்கம் எய்திக்
கண்ட வண்ணினும், கேட்ட செவியினும்,
உண்ட வாயினும், உயிர்த்த மூக்கினும்,
உற்றுணர் உடம்பினும், வெற்றிச் சிலைக் காமன்
மயிலையும், செயலையும், மாவும் குவளையும்,
பயிலிதழ்க் கமலமும், பருவத் தர்ந்த
மலர்வாய் அம்பின் வாசங் கமழப்
பலர்புறங் கண்டோன் பணிந்து தொழில் கேட்ப
ஒருமதி யெல்லை கழிப்பினும் உரையாள்
பொருவரு பூங்கொடி போயின அந்நாள்"

(மணிமேகலை: காதை 24: வரி 33–43)




வழுக்கை ஆறு வடக்கே கட்டுவன் கிராமத்தில் ஆரம்பித்து தெல்லிப்பளை, அளவெட்டி, கந்தரோடை, ஆனைக்கோட்டை வழியாக மேற்கே யாழ்ப்பாணக் கடலேரியை அடைகிறது.

அவளது பேரழகில் மயங்கிய மன்னன் கிள்ளிவளவன், போரில் பலரின் புறங்கண்டவன், அவளைப் பணிந்து, அவள் ஏவலைக்கேட்டு, அவளோடு கூடியிருந்தான். ஒரு திங்களளவும் அவள் அவனுடன் கூடியிருந்தபோதிலும், தான் யாரென்று சொல்லாத ஒப்பற்ற பூங்கொடிபோன்ற அவள் ஒருநாள் அவனைவிட்டுப் பிரிந்து போனாள்.

## பீலிவளை புதல்வன்

மணிபல்லவம் திரும்பிய பீலிவளை ஒரு ஆண்மகவைப் பெற்றெடுக்கிறாள். அந்த இளங்கிள்ளி வளர்ந்து பிள்ளைப் பருவத்தையடைந்த காலத்தில் நாகநாட்டின் பகைவர்கள் அங்கே படையெடுத்து வருகிறார்கள் எனக் கேள்விப்படுகிறாள். அரச குலத்து இளவலான அப்பிள்ளையைக் கண்டால் அவனைக் கொலைசெய்யத் தயங்கமாட்டார்கள் என்பதை உணர்ந்து அந்த இளங்கிள்ளியை சோழநாட்டிற்கு அவனது தந்தையிடம் அனுப்பிவைக்க முடிவு செய்கிறாள்.

> "நாக நன்னாடு ஆள்வோன் தன் மகள்
> பீலிவளை என்பாள், பெண்டிரில் மிக்கோள்
> பனிப்பகை வானவன் வழியில் தோன்றிய
> பற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தி
> இத் தீவகம் வலஞ்செய்து தேவர்கோன் இட்ட
> மாபெரும் பீடிகை வலங்கொண்டே தழிக்
> கம்பளச் செட்டி கலம் வந்து இறுப்ப
> அங்கவன் பாற் சென்று, அவன் திறம் அறிந்து
> 'கொற்றவன் மகனிவன் கொள்க' எனக் கொடுத்தலும்
> பேற்ற உவகையன் பெரு மகிழ்வு எய்திப்
> பழுதில் காட்சிப் பைந்தொடி புதல்வனைத்
> தொழுதனன் வாங்கித் துறை பிறக்கு ஒழிய"
>
> (மணிமேகலை: காதை 25: வரி 178–189)

நன்மைகள் சிறந்த நாகநாட்டை ஆண்டுவந்த அரசனின் மகளான, பெண்களில் சிறந்த பண்புகளைக்கொண்ட பீலிவளை என்பவள், பனிக்குப் பகைவனான ஆதவனின் வம்சத்தில் தோன்றிய இளவயதுடைய ஒரு குழந்தையுடன் பூங்கொடிபோல இவ்விடம் வந்தாள். இத்தீவை வலம்செய்து, தேவர் கோமான் அமைத்துக்கொடுத்த பெருமைகொண்ட புத்தபீடிகையையும் வலம்வந்து வணங்கினாள்.

அப்படிப் போற்றுகின்ற காலத்தில் அத்துறையில் (சம்புத்துறையாக இருக்கலாம்) கம்பளச் செட்டி என்பவனின் மரக்கலம் வந்து சேர்ந்தது. பீலிவளை அவனிடத்தில் சென்று, அவனது நேர்மையையும், திறமையையும் அறிந்து, 'உனது நாட்டு மன்னனின் மகன் இவன். இவனைக் கவனமாகக் கொண்டுபோய் உனது மன்னனிடம் சேர்ப்பிப்பாயாக' என தனது மைந்தனது கழுத்தில் பைந்தொடியான தொண்டைமாலை அணிவித்து, அவனிடம் கொடுத்தாள். பழுதற்ற தோற்றத்தினையுடைய, பசுமையான தொண்டைமாலை அணிந்த அப்புதல்வனை பெருமகிழ்ச்சியுடனும், உவகையுடனும், வணக்கத்துடனும் பெற்றுக்கொண்ட கம்பளச் செட்டி, தனது மரக்கலத்துடன் அத்துறையை விட்டுக் கலத்தை ஓட்டிச்சென்றான்.

## உடைந்த கலம்

அம்மரக்கலம் புறப்பட்டு காரிருள் நேரத்தில் சோழநாட்டுக் கரையைச் சமீபித்த சமயம் ஏற்பட்ட சூறாவளியில் சிக்கி உடைந்துபோனது. உடைந்துபோன கலத்திலிருந்து உயிர் தப்பியவர்கள் அரசன் கிள்ளிவளவனிடம் சென்று அப்புதல்வனை இழந்த செய்தியைத் தெரிவித்தார்கள்.

> "கலங்கொண்டு பெயர்ந்த அன்றே, காரிருள்
> இலங்கு நீர் அடைகரை அக்கலங் கெட்டது
> கெடுகல மாக்கள் புதல்வனைக் கெடுத்தது
> வடிவேற் கிள்ளி மன்னனுக்கு உரைப்ப"
>
> (மணிமேகலை: காதை 25: வரி 190–193)

## மன்னனின் துயரம்

தனது மகன் கடலிலே இறந்து விட்டான் என எண்ணிய மன்னன் ஆற்றொணாத் துயரத்தில் இருந்தான். அந்த நாட்களில் அரண்மனைக்குவந்த ஒரு சோதிடன் "கவலை வேண்டாம் அரசே, உனது மகன் இறக்கவில்லை. பீலிவளையின் புதல்வன் உன்னிடம் சுகமாக வந்து சேருவான். அவனது தாயார்தான் உன்னிடம் வரமாட்டாள்" எனக் கூறினான்.

> "ஆங்கப் புதல்வன் வரூஉம் அல்லது
> பூங்கொடி வாராள்: புலம்பல் இதுகேள்"
>
> (மணிமேகலை: காதை 24: வரி 60–61)

## திரை கொணர்ந்த பிள்ளை

பெரும்பாணாற்றுப்படை, கடியலூர் உருத்தரங்கண்ணணார் எழுதிய சங்க இலக்கியம் ஆகும். மணிமேகலையில் கூறப்பட்ட கதை அதில் தொடர்கிறது.

பெரும்பாணாற்றுப்படைக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியரின் கூற்று இது:

“கடலில் காவிரிப்பூம்பட்டினக் கரையருகே மீன்பிடிக்கச் சென்ற திரையர்கள் கடலில் ஒரு படகு மிதந்து வருவதையும், அப்படகில் தொண்டை மாலையணிந்த ஒரு குழந்தை இருப்பதையும் கண்டார்கள். அக்குழந்தையை மன்னன் கிள்ளிவளவனிடம் சேர்ப்பித்தார்கள். கிள்ளிவளவன் அப்பிள்ளை தனது புதல்வனே என அறிந்து அவனுக்கே அடுத்த அரசுரிமை எனக் கூறினான்.”

கடலில் எற்பட்ட சூறாவளியில் அவனது மரக்கலம் உடைந்தபோது, மரக்கலத்திலிருந்த ஒரு படகில் தனது மகனை அமர்த்திவிட்டு சூறாவளியில் சிக்கி உயிரிழந்த கம்பளச் செட்டிக்கு நன்றி தெரிவித்தான் மன்னன். கழுத்தில் தொண்டை மாலையுடன் வந்தமையால் ‘தொண்டைமான்’ என்றும், இளமையில் திரைகொண்டு வந்தமையால் ‘இளந்திரையன்’ எனவும் அம்மகன் பெயர் பெறுகிறான். ‘திரைதரு மரபின் உரவோன் உம்பன்’ என்கிறார் உருத்திரங் கண்ணணார்.

“இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முன்னீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பன்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசு முழங்கு தானை மூவருள்ளும்
இலங்கு நீர்ப்பரப்பின் வளைமீக் கூறும்
வுலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையன் படர்குவி ராயில்

(பெரும்பாணாற்றுப்படை: வரி 29–37)

## தொண்டைமான் தொடுவாய்

தொண்டைமான் இளந்திரையன் வளர்ந்து வாலிபப்பருவம் அடைகிறான். அவனுக்குத் தான் பிறந்த பூமியின் நினைவுகளும், அன்னையின் முகமும் பசுமையாக மனத்தில் பதிந்துவிட்டிருந்தன. அக்காலகட்டத்தில் தான் பிறந்த நாடான மணிபல்லவத்தைப் பகைவர்கள் கைப்பற்றி, அங்கே ஆட்சிபுரிந்த நாக அரசர்களைக் கொன்றுவிட்டு, மக்களை வருத்திக் கொடுங்கோலாட்சி நடத்துகிறார்கள் என்ற செய்தி அவனுக்குக் கிடைக்கிறது. தான் பிறந்த மண்ணுக்குச் செய்யவேண்டிய கடமை அவனை மணிபல்லவத்திற்கு அழைக்கிறது.

ஒருநாள், பூம்புகாரிலிருந்தும், நாகைப்பட்டினத்திலிருந்தும் போர் வீரர்களைத் தாங்கிய மரக்கலங்கள் மணிபல்லவத்தை நோக்கி வருகின்றன. அவற்றிற்குத் தலைமைதாங்கி வந்துகொண்டிருக்கிறான் தொண்டைமான். வரிசைவரிசையாக வேல்களைத் தாங்கி வரும் வீரர்களைக்கொண்ட கப்பல்களைக் கண்ட மணிபல்லவ மக்கள், பாற்கடலில் பள்ளிகொண்ட திருமால், ‘ஆழித்தேவனாக’ அவதாரமெடுத்து வருகிறாரோ என வியப்புடன் பார்க்கிறார்கள்.

பண்டைய கட்டுவனூரின் விசுவநாதக் கவிராயர், வல்லிபுரத்தில் கோயில்கொண்ட திருமாலைப் போற்றி ‘வல்லைப் பதிகம்’ என்றொரு பாடலைப் பாடியிருக்கிறார்.

“திரைகடல் மடிமிசை பலவே லேந்தி
தொடுவாய் தோண்டி நாவா யோட்டி
பகைவனை யொழித்துப் பல்லவ மீட்டி
புஞ்சம் நல்கிப் பஞ்சம் போக்கி
வல்லையம் பதியினி லாலயம் தோற்றி
விண்ணவன் கார்முகில் வண்ணனை யேற்றி
ஆயிரம் தலைவிரிப் பள்ளியான் தொழீஇ
ஆழித் தேவன் தொண்டைமான் வாழி”

(வல்லைப்பதிகம்)

திரைகடல்மீது பல கலங்களில் வேல்களைத்தாங்கி வந்த தொண்டைமான், நிலப்பகுதியிலில் நீண்டிருந்த உள்நிலக் கடலுக்கும் வடகடலுக்குமிடையே இருந்த நிலத்தைத் தோண்டி, அதனூடே தனது கலங்களைச்செலுத்தி நாகநகருக்குச் சமீபமாகக் கொண்டு செல்கிறான். பகைவனுடன் போரிட்டு அவனை அழித்து, மணிபல்லவத்தை எதிரிகளிடமிருந்து மீட்டு, பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு உணவு கொடுத்து இன்னல் தீர்க்கிறான். பின்னர் வல்லையம்பதி என்ற வல்லிபுரத்தில் விண்ணவனான (விண்ணுஶ்ரீவிக்ஷ்ணு) கார்முகில் வண்ணனுக்கு கோயில் கட்டுவித்து, ஆயிரம் தலைகொண்ட

ஆதிசேக்ஷன் மீது துயில்கொள்ளும் மாதவனை அங்கே அமர்த்தி, தொழுது வணங்கிய ஆழித்தேவனான தொண்டைமானே நீ வாழ்க என வாழ்த்துகிறார் புலவர் (இராசநாயகம், வ. 1950).

தொண்டைமான் கடற்தொடுவாய் அமைத்த பின்னர் 'வல்லியாறு'என அழைக்கப்பட்ட உள்நிலக் கடற்கால்வாய் 'தொண்டைமான் ஆறு' என்ற பெயரால் வழங்கப்பட்டது.

விசுவநாதப் புலவரைத் தொடர்ந்து பாடல் உரைப்பவர் விநாசித்தம்பிப் புலவர். இவர் எழுதிய 'ஆற்றுப்பாடல்' செல்வச்சந்நிதி கந்தன் திருத்தலப் புராணத்தில் இடம் பெறுகிறது (விநாசித்தம்பிப் புலவர், 1978).

"பொன்னுயர் ஈழ நாட்டில் பொருந்திய வடபால் யாழூர்
மன்னிய விந்து வாரி மணிக்கரை வந்து சேர
உன்னிய செழுமையாற்றி ஒளி மயிலழகனாரின்
சொன்னல முழங்க ஓடும் தொழ வல்லியாறு சூழ்ந்தே"

(ஆற்றுப்பாடல்: 1)

மேலுள்ள பாடலில்வரும் 'மணிக்கரை' என்ற பதம் மணிபல்லவக்கரை என்ற கருத்தில் அமைந்திருக்கிறது. இக்கரைக்குச் சற்றுக் கிழக்கே வல்லிபுரத்தின் வடகரையில் 'பல்லவத்துறை' என்ற பெயரில் ஒரு துறைமுகம் இருந்தது.

"தாவலை வல்லியாற்றின் சார்நிலம் தன்னை யாண்ட
கோவெனும் தொண்டைமானைக் குரைகடல் நாட்டை கொள்ளத்
தீவினை புரிந்த வாற்றால் தெளி நன்னீர் யாறு பின்னர்
தூவல்லி நாம மாறித் தொண்டைமா னாறாயிற்றே.""

(ஆற்றுப்பாடல்: 2)

சிலகாலம் அப்பகுதியை தொண்டைமான் ஆட்சிபுரிந்தபடியினால் முதலில் 'வல்லியாறு' எனப் யெர் பெற்றிருந்த அந்த ஆறு பின்னர் 'தொண்டைமானாறு' எனப் பெயர் பெற்றது. அது மட்டுமல்ல முதலில் தெளிந்த நல்லநீரைக் கொண்டிருந்த அந்த ஆற்றை, தொண்டைமான் வடகடலுடன் இணைத்த தீவினையால் அந்த ஆறு உப்பாறாக ஆனதாகவும் புலவர் கூறுகிறார்.

மணிபல்லவத்திலிருந்து திரும்பிய தொண்டைமான் காஞ்சியில் புதியதொரு தலைநகர் அமைத்து ஆட்சிபுரிகிறான். அவன் ஆட்சிபுரிந்த சோழநாட்டின் வடபகுதி 'தொண்டைமண்டலம்' என அழைக்கப்பட்டது.

இக்கதையில் மணிமேகலை, பெரும்பாணாற்றுப்படை, வல்லைப்பதிகம், செல்வச்சந்நிதிக் கந்தன் திருத்தலப் புராணம் ஆகிய இலக்கியங்களில் கண்ட சம்பவங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் மணிமேகலையில் கண்ட செய்திகளையும், பெரும்பாணாற்றுப்படையில் கண்ட சம்பவங்களையும் இணைத்த பெருமை முதலியார் இராசநாயகத்திற்கு உரியது.

## நாகநாட்டுத் துறைமுகங்கள்

வழுக்கை ஆறு, வடக்கே கட்டுவன் கிராமத்தில் ஆரம்பித்து தெல்லிப்பழை, அளவெட்டி, கந்தரோடை, ஆனைக்கோட்டை வழியாக மேற்கே யாழ்ப்பாணக் கடலேரியை அடைகிறது. இலங்கைத் தீவானது இந்து மாகடலின் நடுப்பகுதியில் இருப்பதாலும், பாரதக்கண்டத்திற்கு மிக அண்மையில் இருப்பதாலும் ஆசியாவில் உள்ள எல்லா நாடுகளிலும்பார்க்க அது சிறந்த கடல் வணிகநிலையமாய் விளங்கியது. இங்கு இலங்கையில் உண்டாகும் பொருட்கள் மட்டுமன்றி பல தேசத்துப் பொருட்களும் வந்துசேர்ந்தன. கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வரும் வணிகர்கள் இங்குவந்து அப்பொருட்களைத் தத்தம் நாடுகளுக்கு எடுத்துச்சென்றனர். இதனால் அது ஒரு பண்டமாற்று நிலையமாய் இருந்தது. எகிப்திய ஆசிரியரான கொஸ்மஸ் என்பார், "பல நாட்டுப் பொருட்களையும் தன்னிடத்தே ஒருங்குசேர்த்து அவற்றை வேண்டிய நாடுகளுக்குப் பகிர்ந்து கொடுக்கும் பண்டமாற்றுநிலையம் இலங்கை" என்கிறார்.

பண்டைக்காலத்தில் வடஇலங்கையே இந்தப் பலநாட்டு வணிகநிலையமாய் விளங்கியது. பட்டு, பீங்கான் பொருட்கள் முதலியவற்றை கிழக்கு ஆபிரிக்கக் கரையில் உள்ள துறைமுகங்களுக்குக் கொண்டுசெல்லும் சீனதேசக் கப்பல்களும், கிழக்கிந்தியத் தீவுகளில் உண்டாகும் வாசனைப்பொருட்களை ஐரோப்பிய தேசங்களுக்கு ஏற்றப்போகும் அரேபியக் கப்பல்களும் இந்நாட்டிலுள்ள துறைமுகங்களில் வந்துதங்கின. சம்புகோளம், மாந்தை என்னும் இரு துறைமுகங்களும் பண்டைக்காலத்திலே கீர்த்தி வாய்ந்தனவாக இருந்தன (கணபதிப்பிள்ளை, க. 1996: 97-98).

## சம்புகோவளம்
## (சம்புகோளம், ஜம்புகோல, சம்புத்துறை)

வடஇந்தியாவிலிருந்து வணிகர், வணிகப் பொருட்களை வாங்குவதற்காக இலங்கைக்கு கப்பல்மூலம் வந்த செய்திகளை புத்த சாதகக்கதைகள் கூறுகின்றன. வங்காளத்திலுள்ள தாம்ரலிப்தி என்னும் துறைமுகத்திற்கும் சம்புகோளத்திற்கும் கடல்வாணிகத் தொடர்பு இருந்துவந்தது. சம்புகோளத்திலிருந்தே தேவநம்பியதீசனின் தூதர்கள் அசோகச் சக்கரவர்த்தியின் அரசவைக்குப் போகும்பொழுது கப்பலேறினார்கள். இப்பட்டினத்திலிருந்து அநுராதபுரம் வரையும் ஒரு பெருந்தெரு அக்காலத்தில் இருந்தது. இச்சம்புகோளப் பட்டினத்திலேயே புத்தபகவான் இருந்து தவம் செய்து மெய்யறிவு பெற்ற அரசமரத்தின் கிளையோடு சங்கமித்தை என்பவள் பாடலிபுரத்திலிருந்து மரக்கலம்மூலம் வந்திறங்கினாள். அவளை வரவேற்க அநுராதபுரத்து அரசன் தேவநம்பியதீசன் அங்கே வந்து பாடி போட்டிருந்தான் (கணபதிப்பிள்ளை, க. 1996: 98).

'ஜம்புத்வீப' (Jambudvipa) என்ற பதம் வடமொழிப் புராணங்களில் அண்டவியல் பற்றிக் கூறப்படும், அண்டவெளியில் ஒன்றிற்கு மேல் ஒன்றாக இருக்கும் ஏழு கற்பனை உலகங்களிலுள்ள கண்டங்களில் ஒன்றைக் குறிப்பிட உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது (Saptadvipa vasumati - Jain Cosmology). அதன்பொருள் கடலால் சூழப்பட்ட 'ஜம்புத்தீவு' என்றிருந்தபோதிலும் அசோகச் சக்கரவர்த்தியின் பிராகிருதக் கல்வெட்டு ஒன்றும், மகாவம்சம் நூலும் (Mahavamsa III: 13), இந்தியா ஒரு தீவாக இல்லாத போதிலும், இந்தியத்துணைக் கண்டத்தைக் குறிப்பிட 'ஜம்புத்வீப' என்ற பதத்தை உபயோகித்திருக்கின்றன.

பண்டையகால தமிழ்நூல்கள் சில, இந்தியத்துணைக் கண்டத்தை 'நாவலந்தீவு' எனவும், யாழ்ப்பாணத் தீவகத்தை 'சம்புத்தீவு' எனவும் குறிப்பிடுகின்றன. 'சம்பு' என்ற பதம் நாவல் மரத்தையும் குறிக்கும். இத்தீவினில் உள்ள நாவல் மரங்களாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். "தீங்கனி நாவல் ஓங்குமித் தீவு" என மணிமேகலை (காதை 9, வரி 17) கூறுகிறது.

இச்சம்புத்தீவை 'ஜம்புத்வீப'வுடன் குழப்பாமல் இருக்கவே மேலேயுள்ள விளக்கம் தரப்பட்டுள்ளது. 'கோவளம்' என்றால் பெரியவழி எனப் பொருள்படும். 'சம்புகோவளம்' என்றால் சம்புத்தீவிற்கான பெருவழி எனப் பொருள் தரும். இச் 'சம்புகோவளம்' என்ற பெயரே பாளியில் 'ஜம்புகோல' (Mahavamsa XIX: 128-135) எனக் குறிப்பிடப்படுகிறது. 'ஜம்புகோல' என்ற மகாவம்சம் கூறும்பெயரை அடிப்படையாகக்கொண்டு நமது வரலாற்றாசிரியர்கள் இத்துறையை 'சம்புகோள' என அழைத்தார்கள். யாழ்ப்பாண மக்கள் இத்துறையை இன்று 'சம்புத்துறை' அல்லது 'யம்புத்துறை' ஆகிய பெயர்களால் அழைக்கிறார்கள்.

## காயாத்துறை

நாகநாட்டின் வடகரையில் சம்புத்துறைக்குக் கிழக்கேயுள்ள இன்றைய காங்கேசன்துறை அக்காலத்தில் 'காயாத்துறை' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அக்காலத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவின் 'புத்தகாயா'வுக்கு யாத்திரை மேற்கொள்ளும் பௌத்த யாத்திரிகர்கள் எல்லாம் இத்துறைமுகத்திலிருந்து மரக்கலம் எடுத்துச் சென்றபடியினால் இத்துறை அப்பெயரைப் பெற்றது. இலங்கையின் பெருநிலப்பரப்பிலிருந்து புத்தகாயா செல்லும் யாத்திரிகர்கள் அநுராதபுரத்திலிருந்து வடஇலங்கையின் துறைகள் வரை வந்த பெருந்தெரு வழியாகவந்து கப்பலேறினார்கள். இப்பெருந்தெரு பற்றி மகாவம்சம் குறிப்பிடுகிறது.

கி.பி எட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கந்தரோடை அரசனான உக்கிரசிங்கன் மாவிட்டபுரத்தில் கந்தவேளுக்காக ஒரு பெரியகோயில் கட்டியபொழுதில் சோழநாட்டிலிருந்து 'காங்கேயன்' (கந்தவேள்) விக்கிரகங்கள் இத்துறையில் வந்திறங்கியதைத் தொடர்ந்து இத்துறை 'காங்கேயன் துறை' என அக்கால மக்களால் வழங்கப்பட்டது.

சாலிவாகன சகாப்தம் 721 இல் (கி.பி. 799 ஆம் ஆண்டு) ஆனிமாத உத்தரநாளில் இக்கோயில் கொடியேற்றத்துடன் பொதுமக்களுக்காக ஆரம்பித்து வைக்கப்பட்டது ('மாவிட்டபுர ஆதீன கோயில் பதிவேடுகள்' பிரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்கள்).

## பல்லவத்துறை

நாகநாட்டின் வடகரையில் உள்ள பண்டைய நகரம் வல்லிபுரம். வல்லிபுரப்பெற்சாசனம் இந்த நகரத்தை 'வடகரை ஆதனம்' என்ற பொருளில் 'Badakara - atanehi' என பிராகிருதமயப்படுத்தப்பட்ட தமிழில் கூறுகிறது. பொதுயுகத்தின் ஆரம்பகாலங்களில் இந்தியாவின் ஆந்திரதேசத்து அமராவதியுடனும், மற்றைய மையங்களுடனும் இந்த நகரம் கொண்டிருந்த கடற்தொடர்புகளை வல்லிபுரப் புத்தர்சிலையும், வல்லிபுரப் பொற்சாசனமும், ஏனைய தொல்பொருட்களும் எடுத்துக்காட்டுகின்றன.

வல்லிபுரத்தின் வடகரையில் 'பல்லவத்துறை' என்ற பெயரில் ஒரு துறைமுகம் இருந்ததை அறியமுடிகிறது. இத்துறைமுகத்தை மகாவம்சம் 'பல்லதித்த' எனக் குறிப்பிடுகிறது. இத்துறைமுகம் இருந்த வடகிழக்கு யாழ்ப்பாணக் கடற்கரைக்கிராமம் இன்றைக்கு 'பல்லப்பை' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

அநுராதபுரத்திலிருந்து வொகரிக்கதீசன் (கி.மு. 263-285) என்ற நாக மன்னன் அரசாண்டுகொண்டிருந்த காலத்தில் அவனது தம்பியான அபயநாகன் அரசனது மனைவி அரசியுடன் காதல் உறவு கொண்டிருந்தான். இதை அறிந்த அரசன், கோபங்கொண்டு தன்னைக் கொல்லவருகிறான் என்பதையறிந்த அபயநாகன் தனது நெருங்கிய சில நண்பர்களுடன் வடக்கே தனது இனத்தவரான நாகர்களின் உதவியுடன் பல்லதித்தவில் (பல்லவத்துறையில்) கப்பலெடுத்து இந்தியாவிற்குத் தப்பிச்சென்றான் (Mahavamsa XXVI: 42-44).

## சிங்கைப்பட்டினம்

யாழ்ப்பாணத்துப் பழைய வரலாற்று நூல்கள் யாழ்ப்பாண அரசர்கள் நல்லூரில் இராசதானி அமைத்து அங்கிருந்து ஆட்சிபுரியுமுன்னர் 'சிங்கைநகர்' என்ற பட்டினத்திலிருந்து ஆட்சிபுரிந்ததாகக் குறிப்பிடுகின்றன. அது மட்டுமல்லாமல் நல்லூரிலிருந்து ஆட்சிபுரிந்த அரசர்களும் தங்களது முன்னோர்களிலிருந்து தொடர்ந்த பாரம்பரியத்தைப் பேணும்வகையில் தங்களை 'சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகள்' எனக் கூறிக்கொண்டார்கள். இதை மேலும் உறுதிசெய்யும் வகையில் பிரித்தானியர்களின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் தெற்கே கேகாலை மாவட்டத்தில் 'H.C.P. Bell' என்பவரால் தமிழில் பொறித்த ஒரு கல்வெட்டுக் கண்டுபிடிக்கப்பட்டது. அக்கல்வெட்டு வடஇலங்கை அரசர்களை 'பொங்கொலி நீர்ச் சிங்கைநகர் ஆரியர்கள்' எனக் குறிப்பிட்டிருந்தது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. இக்கல்வெட்டு கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ளது (Spolia Zeylanica 1917: p. 159).

அக்காலத்திலிருந்து இச்சிங்கைநகர் எங்கே இருந்திருக்கிறது எனக் காண்பதில் வரலாற்று ஆய்வாளர்களிடையே பாரிய வேறுபாடுகள் காணப்பட்டன. முதலியார் இராசநாயகம் கடற்கரையிலிருந்த சிங்கைநகர் வல்லிபுரத்தில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதினார் (Rasanayagam. S. 1923). பேராசிரியர் இந்திரபாலா, சிங்கைநகர் (Lion City) என்ற பெயர், கலிங்கத்தின் சிங்கபுரத்தை நினைவுபடுத்தும் பொருட்டு அங்கிருந்து வந்த கலிங்கமாகனால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அந்த இடம் யாழ்நகரின் கடற்கரையில் இருந்திருக்கவேண்டும் என்றும் கருதினார் (Indrapala, K. 1972: 5152). பேராசிரியர் பரணவிதான இப்பெயர் மலாயாவிருந்து இலங்கைக்கு வந்தவர்களால் கொடுக்கப்பட்ட பெயர் என்றார் (Paranavitana, S. 1966: 91). 1990 ஆம் ஆண்டுகளில் பூநகரியில் அகழாய்வுகளை மேற்கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பரமு புஷ்பரட்ணம் (பிந்நாள் பேராசிரியர்) சிங்கபுரம் பூநகரியில் இருந்திருக்க வேண்டும் எனக் கருதினார் (புஷ்பரட்ணம், ப. 1993).

இக்கருத்துகளுக்கெல்லாம் 2011-12, 2017-18 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம் கோட்டையில் நடைபெற்ற அகழாய்வுகள் முற்றுப்புள்ளி வைத்தன. அந்த அகழாய்வுகளின் முடிவாக கீழ்க்காணும் வரலாற்று உண்மைகள் நிறுவப்பட்டன.

1. பெருங்கற்காலப் பண்பாட்டைப் பேணிய மக்கள் இப்பிராந்தியத்தில் கி.மு.1000 ஆண்டுக் காலத்திலிருந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.
2. இப்பிராந்தியம் கி.மு. 500 ஆம் ஆண்டளவில் நகரமயமாக்கப்பட்டு, அன்றிலிருந்து அடுத்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு பெருந்துறைமுகமாக இயங்கிவந்திருக்கிறது.

3. கி.மு. 500 ஆம் ஆண்டிலிருந்து இந்திய நகரங்களுடனும், தொடர்ந்து கிரேக்க - ரோமப் பேரரசுகளுடனும், அரேபியர்களுடனும், பாரசீக சஸானியப் பேரரசுடனும், சீனர்களுடனும் நீண்டகால வர்த்தக நடவடிக்கைகளிலும் யாழ்ப்பாணம் ஈடுபட்டு வந்திருக்கிறது.

4. கி.மு. 500 ஆம் ஆண்டிலிருந்து கி.பி 16 ஆம் நூற்றாண்டு ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பு வரை யாழ்ப்பாணம் ஒரு பெருந்துறையாக விளங்கியிருக்கிறது (இத்தொல்லியலாய்வு பின்னர் விவரமாகப் பேசப்படும்).

## நாகநாட்டின் வன்னிப் பகுதியில் பெருங்கற் பண்பாடு

இலங்கையின் பெருநிலப் பகுதியிலுள்ள வன்னிப்பிராந்தியத்தில் பெருங்கற் பண்பாடும் அதனோடு தொடர்புடைய தமிழ்மொழியும் பரவியமையைப் புரிந்துகொள்வதற்கு பெருங்கற் பண்பாட்டின் சில சிறப்பம்சங்களை இங்கே குறிப்பிடுவது அவசியமாகும். முதன்முதலாக ஒழுங்கானமுறையில் வயல்நிலங்கள் உருவாக்கப்பட்டு நெல், குரக்கன், பயறு, உழுந்து முதலிய தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆடு, மாடு, கோழி ஆகிய பிராணிகளின் பண்ணை வளர்ப்பு வழமையாகியது. மட்கலன்களை சக்கரம் மூலமாக வனையும் வழக்கம் ஏற்பட்டது. புழக்கத்தில் வந்த மட்கலங்களுள் கரும்செம் மட்பாண்டங்கள் இப்பண்பாட்டின் தனிச் சிறப்பாக அமைந்தவை. வயல்களை உழுவதற்கு கொழுமுனை பொருத்திய கலப்பைகள் புழக்கத்தில் வந்தன. இரும்பு முதலான உலோகங்களிலான கருவிகள், ஆயுதங்கள், கொள்கலன்கள், அணிகலன்கள், புழக்கத்தில் வந்தன. இரும்பின் உபயோகம் இப்பண்பாட்டின் மூலம் அறிமுகமாகிப் பரவியது (பத்மநாதன், சி. 2014: 2).

நிலையான குடியிருப்புகள் ஏற்பட்டு ஊர்கள் தோன்றின. வாணிப மையங்கள் தோன்றின. கடல்வளங்களைப் பயன்படுத்தும்முறை விருத்தியடைந்தது. கப்பல் கட்டுதல், கப்பலோட்டுதல், கடல்வழி வாணிபம் ஆகியவற்றில் அப்பண்பாட்டுக்குரிய மக்கள் ஈடுபடத் தொடங்கினர். பருத்தியினைச் செய்கைபண்ணி பஞ்சினை நூலாக்கி ஆடைகளை நெய்யும் தொழில் உருவாகியது. இரும்பு, செம்பு, பொன், வெள்ளி முதலிய உலோக வார்ப்புகளிலும், வார்ப்பான உலோகத் தகடுகளை வெட்டியும், உருவாக்கியும் உபகரணங்கள், ஆயுதங்கள், கலன்கள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்முறை விருத்தியடைந்தது. தொழில் வேற்றுமை காரணமாக அமைந்த தனித்தனிப் பிரிவுகளைக்கொண்ட சமூகக்கட்டமைப்புகள் உருவாகின. பல ஊர்களை உள்ளடக்கிய குறுநில அரசுகள், அரச உருவாக்கத்தின் வளர்ச்சியிலுள்ள முதலாவது படிநிலையாகும்.

வன்னி நிலரப்பரப்பில் இலங்கையின் ஏனைய பல பகுதிகளைப்போல ஆற்றுவழியாகவே பெருங்கற்பண்பாடு பரவியதென்று கருதலாம். மேற்கே அருவி ஆறு, பறங்கி ஆறு ஆகியவற்றின் வழியாகவும், வடக்கே கனகராயன் ஆறு வழியாகவும், கிழக்கே யன்ஓயா மூலமாகவும் அது பரவியதெனக் கொள்ளலாம். வடமேற்கிலே பூநகரியில் மண்ணித்தலை, கல்முனை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா ஆகிய இடங்களில் தமிழகத் தொடர்புடைய ஆதி இரும்புக்காலத் தொல்பொருட்கள் பரவலாகக் காணப்படுகின்றன. எனவே, அங்கிருந்தும் இப்பண்பாடு தரைவழியாகப் பரவியதென்றுங் கொள்ளலாம் (பத்மநாதன், சி. 2014: 3).

## நாகநாட்டு வன்னியின் நாக அரசர்கள்

இலங்கையின் பெருநிலப்பகுதியில் உள்ள நாகநாட்டின் வன்னிப்பகுதியில் அக்காலத்தில் பல சிற்றரசுகள் இருந்திருக்கின்றன. வன்னியின் மலைப்பாறைகளில் வெட்டப்பட்ட ஐம்பத்து நான்கு பிராமிக்கல்வெட்டுகள் இதுவரை அடையாளங்காணப்பட்டுள்ளன. அவை மகாகச்சட்கோடி (4), எருப்பொத்தானை (12), பெரிய புளியங்குளம் (35), வெடுக்குநாறி மலை (3) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. அவையாவும் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டுகள். (பத்மநாதன், சி. 2013: XXIII).

இலங்கையிலே காணப்படும் பிராமிக்கல்வெட்டுகளில் வவுனியா மாவட்டத்தில் உள்ளவற்றிலேதான் தமிழ்மொழியின் செல்வாக்கு மிகக்கூடுதலாகக் காணப்படுகிறது. அவற்றிலே வேள், வேலு, பருமக(ன்), பருமகள், அபி(அவ்வி) ஆகிய சொற்கள் வருகின்றன. அவற்றில் ஒரு கல்வெட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறது:

“பருமக அஸ அதேக வேளஸ ஜாயா திஸாய லெணெ”

இதன்வாசகம்: பருமகனும் குதிரைகளின் அதிபனுமாகிய வேளினது மனைவி திஸாவின் குகை.

சங்ககாலத் தமிழகத்தில் சிற்றரசர்களை ‘வேள்’, ‘வேளிர்’ என அழைப்பதுண்டு. அதேவழக்கம் இலங்கைத் தமிழரிடையிலும் இருந்திருக்கிறது. அந்தவகையில் இதில்வரும் வேள் ஒரு சிற்றரசனாக இருக்கலாம். அவன் சிற்றரசன் மட்டுமல்லாது குதிரைகளின் அதிபனாகவும் இருந்திருக்கிறான். பெரிய புளியங்குளத்திலுள்ள நான்கு கல்வெட்டுகளில் ராஜநாகன் என்ற அரசனைப்பற்றிய குறிப்புக் காணப்படுகிறது:

“ராஜநாக ஜிதா ராஜ உதி ஜாயா
அபி அநுரதி ச ராஜா உதி ச
காராபித ஸே இமே லெணே
சததிஸ ஸகாய”

இதன்வாசகம்: ராஜநாகனின் மகளும் ராஜா உதியின் மனைவியுமான அபி அநுரதியும் ராஜா உதியும் செய்வித்த இந்தக்குகை நாற்றிசைச் சங்கத்தாருக்கும் உரியது.

இச்சாசனத்தில் ராஜநாகன், உதி ஆகிய இரு அரசர்கள் ராஜா எனக் குறிப்பிடப்படுகிறார்கள். அரசனும் அரசியுமாக இணைந்து குகையினை பௌத்த சங்கத்திற்குத் தானம் செய்துள்ளார்கள். அரசகுலத்துப் பெண்களை அபி எனக் குறிப்பிடுவது சாசனவழக்கு. பௌத்தமதம் சார்ந்த கல்வெட்டுகள் அனைத்தும் பிராகிருத மொழியில் பிராமி எழுத்துகளில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

மற்றுமொரு பெரிய புளியங்குளத்துச் சாசனம் இது:

“த மராஜ புத மாதிஸ அய
ஜிதா அப ஸவேரா
அயப ய புத திஸ அய ஜாயா
அபி ஸவேராய தாநே ஸக ஸ
தி நே”

இதன்வாசகம்: தமராஜனின் மகனான மகாதிஸ அய்யனின் மகள் அபி ஸவேரா. அய்யன் அபயனின் மகன் திஸஅய்யனின் மனைவியான



ஜம்புத்வீப தீவின் வரைபடம்
Image Source - Jain Cosmology

அபி ஸவேராவினால் சங்கத்தினருக்குத் தானம் வழங்கப்பட்டது. இந்தச்சாசனம் அரசனின் மகனான மகாதிஸ என்னும் இளவரசனை அய் என்றும், அவனது மகளான ஸவேராவை அபி என்றும் குறிப்பிடுகிறது. ஸவேராவின் கணவன் திஸ அய்யன். திஸ அய்யன், அபயனின் மகன். அய், அபி என்பன திராவிடமொழிச் சொற்கள் என்பது குறிப்பிடத்தக்கது (பத்மநாதன், சி. 2013: XXX).

பெரிய புளியங்குளத்துச் சாசனம் ராஜா என்ற பதவிநிலையிலுள்ள இருவரைக் குறிப்பிடுகின்றது. அவர்கள் இரண்டு தலைமுறையைச் சேர்ந்தவர்கள். மாமன், மருமகன் என்ற உறவுமுறை கொண்டவர்கள். ராஜநாகனின் பின்பு அவனது மருமகனாகிய உதி, ராஜா என்னும் பதவியைப் பெறுகிறான். அவர்களின் பதவிப் பெயரான ராஜா என்பது சமகாலத் தமிழகத்து வேளிர் என்னும் பட்டத்தினைப் போன்றது. ஏறக்குறைய 2200 வருடங்களுக்குமுன்பே வன்னியில் குறுநில அரசுகள் தோன்றிவிட்டன. அவற்றில் ஒன்றைப் பற்றியே சாசனங்கள்மூலம் அறியமுடிகின்றது. நாகர் குலத்தவர் அதிகாரம் செலுத்திய அரசினைப்பற்றி பெரிய புளியங்குளத்துக் கல்வெட்டுகள் தெளிவுபடுத்துகின்றன. பிற்காலத்தைய வன்னி இராச்சியங்களுக்கு இவையே மூலமானவை. சமகாலத்தில் நாகர் அதிகாரம் செலுத்திய அரசுகள் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்புத்தேசத்திலும்



**பிராகிருதத்தில் 'ஜம்புடீபாசி' என உள்ள அசோகன் கல்வெட்டு.**

Image Source - Inscriptions of Asoka, 1925

தோன்றியுள்ளன (பத்மநாதன், சி. 2013: XXX)

இனி வரவிருப்பது...

பொதுயுகத்திற்கு முற்பட்ட (கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட) பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டைப் பேணிய மக்களின் குடியேற்றங்கள் கந்தரோடையில் ஏற்பட்டு, கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்மொழி பேசிய மக்களைக்கொண்ட அரச உருவாக்கம் அங்கே ஆரம்பிக்கப்பட்டு, அதன்துணைச் சிற்றரசுகள் (Satellite chiefdoms) யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், வடஇலங்கையின் பெருநிலப்பரப்பான வன்னிப்பிரதேசத்திலும் எழுச்சிபெற்றமை இனிவரும் இயல்களில் தொல்லியல், கல்வெட்டியல், மானிடவியல் சான்றுகள்கொண்டு நிறுவப்படும்.

இலங்கைத் தமிழர்களின் பண்டைய வரலாற்றை ஆதாரபூர்வமாக வெளிக்கொணரக்கூடிய தொல்பொருட்சின்னங்கள் நிலத்தினுள்ளே புதைந்து கிடக்கின்றன. சமீபகாலங்களில்தான் அறிவியல்ரீதியான தொல்லியல் அகழாய்வுகள் கந்தரோடை, மாந்தை, யாழ்ப்பாணக் கோட்டை (1970, 1980-84, 2017-18) ஆகிய மையங்களில் இடம்பெற்று அதன்மூலம் புராதனகால இலங்கைத் தமிழர்பற்றிய பல புதிய தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. விவசாயம், கைத்தொழில், உலோகத்தொழில், கடற்தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியும், நிலையான குடியிருப்புகளின் விளைவாக ஊர்கள், நகரங்கள் என்பவற்றின் வளர்ச்சியும், துறைமுகங்களின் தோற்றம், நெடுங்கடல் வர்த்தகம், கடல்வழியான கப்பற்பிரயாணம் ஆகியனவும் பொதுயுகத்திற்கு முற்பட்ட ஆயிரத்தாண்டுகளில் தென்னிந்தியாவில் உருவான ஆதி இரும்புக்காலத்தைய பெருங்கற்பண்பாடு பரவியதன் விளைவே என்பதும் இனிவரும் இயல்களில் விரிவாக எடுத்துரைக்கப்படும்.

## உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்


1. *BOPEARAACHCHI, Osmund & WICKREMESINHE (1999): Ruhuna - An Ancient Civilisation ReVisited, Wickremesinhe Publishing, Sri Lanka.*
2. *BUDDHAGHOSA (5th Century CE) Transl. A.P. Buddhadatta Thero (1980): SAMMOHAVINODANI, PTS Series 116, Pali Text Society, London. (According to a story in the text, the ruler of Nagadipa bore the title of 'Diparja').*
3. *CHANDLER, David P. (1983): A History of Cambodia, Westview Press, Colorado.*
4. *DERANIYAGALA, S.U. (1992): Prehistory of Sri Lanka: An Ecological Perspective, Sri Lanka Department of Archaeological Survey, Colombo.*
5. *GEIGER, Wilhelm (1960): Culture in Medieval Times, (ed.) Heinz Bechert Harrassowitz Publishing House, Germany.*
6. *GODAKUMBURA, C. (1968): Kantarodai, Journal of the Royal Asiatic Society, Ceylon Branch Vol. XII, (New Series) Colombo.*
7. *GUNASEKARA, B. Transl. (2015): The Rajavaliya (Line of Kings), Digital Library of India.*
8. *MAHAVAMSA (1960 reprint): Ed. & Transl. by Wilhelm Geiger, Colombo.*
9. *PARKER, H. (1909): Ancient Ceylon, Luzac & Co., London.*
10. *PARANAVITANA, S. (193-441): Vallipuram Gold Plate Inscription, Epigraphia Zeylanica, Vol. IV: 229-237.*
11. *PARANAVITANA, Senarat (1961): A Concise History of Ceylon, Ceylon University Press, Colombo.*
12. *PARANAVITANA, S. (1966): Ceylon and Malaysia, Lake House, Colombo.*
13. *PIERIS, Paul E. (1919): Nagadipa and the Buddhist Remains in Jaffna, Journal of the Royal Asiatic Society (C.B), Vol. XVIII, No. 72: Part II, Colombo.*

14. PUSHPARATNAM, P. (2002): Nka Dynasty as Gleaned from the Archaeological Evidence in Sri Lanka, Jaffna Science Association, Jaffna.

15. PUSHPARATNAM, P. (2002): Ancient Coins of Sri Lankan Tamil Rulers, Bavani Pathippakam, Jaffna.

16. RAGUPATHY, P. (1986): Tamil Social Formation in Sri Lanka, Madras.

17. RAGUPATHY, P. (1987): Early Settlements in Jaffna, Mrs. Ragupathy, Madras.

18. RASANAYAGAM, C. (1926): Ancient Jaffna, Everyman's Publishers Ltd., Madras.

19. SITRAMPALAM, S.K. (1983): Ancient Jaffna- An Archaeological Perspective, Journal of South Asian Studies, Vol. 3, No. 182.

20. SPOLIA ZEYLANICA (1917): Proceedings of the Ceylon Natural History Society, Vol. 812, Colombo Museum, Colombo.

21. SULAYMAN ALTAJIR & ABU ZAYD - Transl. from Arabic by Fusebius Renaudot (1733): Ancient Accounts of India and China, Samuel Harding, London. (This book is available at the British Library, London).

22. THIAGARAJAH, Siva (2011): Peoples and Cultures of Early Sri Lanka, Tamil Information Centre, Kingston, UK.

23. 23. WEERAKKODY, D.P.M. (1997): Taprobane: Ancient Sri Lanka as known to the Greeks and Romans, Brepols Publishers, Turnhout, Belgium.

24. இராசநாயகம், செ. (1933), மறுபதிப்பு (1999): யாழ்ப்பாணச் சரித்திரம், ஏசியன் எடுகேக்ஷனல் சர்வீசஸ், புதுதில்லி.

25. இராசநாயகம், வ. (பதிப்.) (1950): விசுவநாதப் புலவர்: தனிப்பாடல் திரட்டு, வசாவிளான்.

26. இந்திரபாலா, கா. (1972): யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், யாழ். தொல்பொருளியற் கழகம், கண்டி.

27. இந்திரபாலா, கா. (2006): இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

28. உருத்திரங்கண்ணணார், கடியலூர் (பொ.யு. 100) (1960): பெரும்பாணாற்றுப்படை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

29. ஞானப்பிரகாசர், சுவாமி (1928): யாழ்ப்பாண வைபவ விமர்சனம், அச்சுவேலி.

30. கணபதிப்பிள்ளை, க. (2ஆம் பதிப்பு, 1996): ஈழத்து வாழ்வும் வளமும், குமரன் பிரசுரம், சென்னை.

31. தியாகராஜா, சிவ (2023): பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

32. 32. பத்மநாதன், சி. (2011): யாழ்ப்பாண இராச்சியம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

33. பத்மநாதன், சி. (2013): இலங்கையின் வன்னி மாவட்டங்கள்: ஒரு கையேடு (ஜே.பி. லூயிஸ்) - வன்னி தமிழாக்கக் குழு: முன்னுரை IV-XXXII, சேமமடு பதிப்பகம், கொழும்பு.

34. பத்மநாதன், சி. (2013): 'வன்னியில் நாகர் உருவாக்கிய அரசு,' in க. சுந்தரலிங்கம் (பதிப்.), வன்னி வரலாறும் பண்பாடும், குமரன் பப்ளிக்ஷர்ஸ், சென்னை.

35. பத்மநாதன், சி. (2016): இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும், இந்துசமய கலாசார அலுவலகத் திணைக்களம், கொழும்பு.

36. பத்மநாதன், சி. (2011): யாழ்ப்பாண இராச்சியம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

37. மணிமேகலை (பதிப்பு): சாமிநாதையர், உ. வே. (1965): ஆறாம் பதிப்பு, அறம் பதிப்பகம், சென்னை.

38. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் (பதிப்பு): வித்துவான் சா.இ. கமலநாதன், கமலா கமலநாதன் (2005): குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.

39. விநாசித்தம்பிப் புலவர் (1978): யாழ். தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் திருத்தல புராணம், வீ. ஸ்ரீதரன் பதிப்பு, திருநந்தி, மல்லாகம்.

பி. ஏ. காதர்



பி. ஏ. காதர் அவர்கள் நுவரெலியா ராகலையைச் சேர்ந்த எழுத்தாளர். அத்துடன் ஆய்வாளராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

பாவா அப்துல் காதர் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் முக்கியமானவையாக 'சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்', 'சுயம் நிர்ணயம் உரிமை' மற்றும் 'மேதின வரலாறும் படிப்பினைகளும்' போன்ற நூல்கள் அமைகின்றன.

# பௌத்தமத மறுமலர்ச்சியின் இரண்டாம் காலகட்டம்: 1883 – 1897

இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. இது தற்செயலாக வெடித்த ஒன்றோ தற்காலிகமான ஒன்றோ அல்ல. இதன் வரலாற்று வேர்கள் ஆழமானவை, நீண்டவை. இந்நிலைமைக்கு நிதிநிர்வாகத்தவறுகளை மாத்திரம் காரணம் காட்டமுடியாது. அதனை விடவும், 1948 முதல் இதுவரை இலங்கையை ஆட்சிசெய்த அனைத்து தலைவர்களும் நடத்திய இனவாத அரசியலுக்கு நாடு கொடுத்த விலையே இதுவாகும். இதனை விளக்குவதாகவே இலங்கையின் 'இனவாத அரசியல் – ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடர் அமைகிறது. இதன்படி, 1915 க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தத் தொடர் ஆராய்கின்றது. இரு பகுதிகளாக அமையவுள்ள இந்தத் தொடரின் முதல் பகுதி, இலங்கையின் இனவாத அரசியலின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் இரண்டாம் பகுதி இலங்கையின் அரசியல் நெருக்கடியிலும் பொருளாதார நெருக்கடியிலும் இனவாத அரசியலின் பாத்திரம் பற்றியும் ஆராய்கிறது.

இலங்கையின் முதலாவது மதமறுமலர்ச்சிக் காலகட்டத்தில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய அம்சம் ஒன்றுள்ளது. தமிழர்கள் மத்தியில் உருவாகி இருந்த மதமறுமலர்ச்சி இயக்கம், ஆறுமுக நாவலர் என்று அறியப்படும், கந்தப்பிள்ளை ஆறுமுகப்பிள்ளை என்ற ஆளுமைமிக்க, ஒருவரின் பெயரோடு பின்னிப்பிணைந்தது. அது ஒரு மக்கள் இயக்கமாக அன்றி, ஆறுமுக நாவலரினதும் அவரது சகாக்களினதும் செயற்பாடுகளின் தொகுப்பாகவே அமைந்தது. ஆனால் சைவ மதத்துக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம், தமிழுக்கும் வழங்கப்பட்டதால் மொழிசார்ந்த தேசியவாதம் இங்கு உருவானது. *1879* இல், அதாவது *1883* ஈஸ்டர் மதக்கலவரம் வெடிப்பதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், ஆறுமுக நாவலர் காலமான பின்னர் அப்பணி ஏனையோரால் முன்னெடுக்கப்பட்டது. தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த அளவுக்கு மொழியார்வமும் பற்றும் சிங்களவர் மத்தியில் வளர்ந்திருக்கவில்லை. அதற்கு மற்றும் சில காரணங்களும் இருந்தன. திருக்குறள் போல ஒரு நூலோ, கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற காவியங்களோ சிங்களமொழியில் இருக்கவில்லை. அத்துடன் இலங்கைமீது மேற்கொள்ளப்பட்ட நிலப்பிரபுத்துவகால தென்னிந்தியப் படையெடுப்புகள் அரிதாகவே இடம்பெற்றன; தென்னிந்தியாவுடனான நல்லுறவே பிரதான போக்காக இருந்தது. ஆயினும் தென்னிந்திய அச்சுறுத்தல் ஏற்பட்டபோதெல்லாம், அவற்றுக்கு எதிராக பௌத்தமதத்தின் பெயராலும், சிங்கள இனத்தின் பெயராலும் சிங்களமக்கள் அணிதிரட்டப்பட்டதால் அதன்தாக்கம் மொழித்தாக்கத்தைவிட ஆழமாக வேரிட்டது. அதைவிட உலகில் இன்றுவரை நிலைத்துள்ள பழம்பெரும் மொழிகளில் மூத்தமொழியாகத் திகழும் தமிழ்மொழியைப் போலல்லாது சிங்களமொழி வளர்ச்சிபெற்ற மொழியாக மிகவும் பிற்காலத்தில்தான் உருவானது.

தமிழ்ப்பகுதிகளில் உருவான மத - மொழி மறுமலர்ச்சியின் மற்றுமொரு சிறப்பம்சம் யாதெனில், அது கிறிஸ்தவ மிஷனரிகளுக்கெதிரான செயற்பாடுகளில் தீவிரவடிவம் பெறாமல் மிதவாதத்தன்மை கொண்டதாக இருந்த அதேசமயம், தனது தனித்துவத்தை விட்டுக்கொடுக்காமல் இருப்பதிலும் வெற்றிபெற்றது. இதற்கு தமிழ்ப்பகுதியில் இயங்கிய கிறிஸ்தவ மிஷனரிகள் தமது மதத்தைப் பரப்புவதில் மென்மையான போக்கை கடைப்பிடித்ததும் ஒரு காரணம். *1828* ஆம் ஆண்டு மட்டக்களப்பு செமினரி தனது மாணவர்களுக்கு கந்தபுராணத்தைக் கேலிசெய்யும் விதத்தில் கற்பிக்க முடிவு செய்தபோது, அதற்கு எதிரான கிறிஸ்தவ விமர்சனம் முதற்தடவையாக தமிழ்ப்பகுதியில் வெளிப்பட்டது. பின்னர் நாளடைவில் அது அடங்கிப்போனது.

சிங்களப்பகுதிகளிலே கிறிஸ்தவமதம் பரவுவதைத் தடுப்பதில் மதமறுமலர்ச்சி பெரும் அளவு வெற்றி பெறவில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் அவர்கள் மத்தியில் உருவான மேட்டுக்குடிகளில், அநேகமாக அனைவருமே கிறிஸ்தவமதத்தைத் தழுவினர். தமிழ்ப்பகுதிகள் அப்படி ஒரு போக்கு இருக்கவில்லை. அதுபோன்றே முஸ்லிம் பகுதியிலும் மேட்டுக்குடிகள் கிறிஸ்தவமயமாக ஆகவில்லை. தமிழ் - இஸ்லாமிய மதமறுமலர்ச்சி இயக்களுக்கிடையே மற்றுமொரு ஒற்றுமையும் இருந்தது. எப்படி தமிழ்ப்பகுதியில் ஆறுமுக நாவலருக்குப் பின்னால் மறுமலர்ச்சி நடவடிக்கை மையம் கொண்டிருந்ததோ, அதேபோல முஸ்லிம்கள் மத்தியிலே முஹம்மது காசிம் சித்திலெப்பை என்ற பெயரைக்கொண்ட சித்திலெப்பை என்பவரை மையமாகக் கொண்டுதான் இஸ்லாமிய மதமறுமலர்ச்சி இயக்கம் உருவானது. இதனைப்போன்று அனைத்துச் சிங்களவர்களையும் ஒன்றிணைக்ககூடிய ஒரு தலைமை இக்காலத்தில் சிங்களப்பகுதியில் அப்போது உருவாகியிருக்கவில்லை. ஆயினும் பௌத்த மதமறுமலர்ச்சியின் இரண்டாவது காலகட்டம் சில தனிநபர்களை மையமாகக்கொண்டு மக்கள் அடித்தளம் கொண்ட இயக்கமாகப் பரிணமித்தது. பௌத்த மதமறுமலர்ச்சியின் இரண்டாவது காலகட்டம் கோர்ணல் ஹென்றி ஸ்டீல் ஒல்கோட், மெடம் பிளாவட்ஸ்கி, பிற்காலத்தில் அநாகரிக தர்மபால ஆகிய மூன்று ஆளுமைகளைச் சுற்றியே சுழன்றது. இவர்களுள் ஒல்கோட் வகித்த பாத்திரம் முக்கியமானது. ஆவிகளின் உலகத் தேடலில் பௌத்த மதத்தில் சங்கமித்த அமெரிக்கர்: கோர்ணல் ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் (*Col. Henry Steel Olcott*)

*1873* ஆம் ஆண்டு நடைபெற்று பிரசித்திபெற்ற பாணந்துறை விவாதம் - அப்போது ஆவிகள்பற்றியும், அப்பாற்பட்ட சக்திகள்பற்றியும், ஆன்மீகம்பற்றியும் அறியமுடியாத உண்மைகளைத்தேடிக் குழம்பிக்கொண்டிருந்த

அமெரிக்கரான - கேர்ணல் ஒல்கோட்டின் கவனத்தைக் கவர்ந்தது. வண. ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர் உட்பட பல முக்கிய பௌத்த துறவிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட விரிவான கடிதப்பரிமாற்றமே அவரை பௌத்தமதம் தொடர்பாக விரிவாக வாசிக்கத்தூண்டியது. இதன்விளைவாகவே அவர் பௌத்த மதத்தைத் தழுவினார்.

கேர்ணல் ஹென்றி ஸ்டீல் ஒல்கோட் 1832 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் திகதி அமெரிக்காவின் நியூஜெர்சியிலுள்ள ஆரஞ் (Orange) நகரில் பிறந்தார். புத்தமதத்திற்கு முறையாக மாறிய முதலாவது ஐரோப்பிய வம்சாவளியைச் சேர்ந்த பிரபல அமெரிக்கர் இவரே.

அவர் ஒரு பத்திரிகையாளராகவும், விவசாய நிபுணராகவும், காப்பீட்டு (Insurance) வழக்கறிஞராகவும் இருந்தபோதிலும், அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது ஓர் இராணுவவீரனாக இணைந்து கேர்ணலாகப் பதவி உயர்த்தப்பட்டார். பின்னர் முன்கூட்டியே இராணுவசேவையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அதனையடுத்து பல உயர்மட்டக்குழுக்களில் இடம்பெற்றார். இராணுவ விநியோகங்களில் நிகழ்ந்த ஊழல்குறித்து விசாரித்த குழுக்களிலும், ஆபிரகாம் லிங்கனின் படுகொலையை ஆராய்ந்த குழு உட்பட பல முக்கியமான அரசாங்கக்குழுக்களிலும் அவர் பணியாற்றினார்.

1874 ஆம் ஆண்டில், அவரது வாழ்க்கை ஒரு திருப்பத்தை எடுத்தது. அவ்வாண்டு முதல் அவர் ஆன்மீகத்தில் ஆர்வம்காட்டத் தொடங்கினர். அதீதப் பழங்கால நம்பிக்கையுடன் (Pristine Past), மாயவாதம் (Mysticism), அப்பாற்பட்ட தெய்வீகசக்தி போன்ற ஆவிகளுடன் தொடர்பு கொள்வதற்கான தேடலிலும் (Communion With Spirits And The Paranormal), அமானுஷ்ய சக்தியைப்பெறும் முயற்சியிலும் இறங்கினார். இந்த மாற்றத்தினை ஊக்குவிக்கும் வகையில், அதேவிதமான சிந்தனைகொண்ட ஹெலனா பிளாவட்ஸ்கியுடன் (Helena Blavatsky) ஏற்பட்ட தற்செயலான சந்திப்பு அமைந்தது. ரஷ்யரான பிளாவட்ஸ்கியைச் சந்தித்தபிறகு, புனித ஆத்மாக்கள் பற்றிய அவரது நம்பிக்கை வலுப்பெற்றது. துறவியான பிளாவட்ஸ்கி, தன்னிடம் மந்திரசக்தி இருப்பதாகவும் தான் ஆவிகளுடன் உரையாடுவதாகவும், கேர்ணல் ஒல்கோட் உட்பட இதேகருத்தைக் கொண்டிருந்த பலரையும் நம்பச்செய்தார்; தானும் அவ்வாறே நம்பினார். இவரை நம்பிவந்த பலரின் நோய்கள் 'புனித ஆவிகளின்' அருளால் குணமாகின எனப் பரவலாகப்பேசப்பட்டது. இவரது இயற்பெயர் ஹெலினா ஹான் (Helena Hahn). ஹெலினா, 17 வயதில், ரஷ்ய இராணுவ அதிகாரியும் மாகாணத் துணை ஆளுநருமான நிகிஃபோர் வி. பிளாவட்ஸ்கியை (Nikifor V. Blavatsky) மணந்தார். ஆனால் சில மாதங்களுக்குப்பிறகு அவர்கள் பிரிந்தனர். அதன்பின்னர் ஹெலினா பிளாவட்ஸ்கி (Helena Blavatsky) என்ற பெயராலேயே இவர் அறியப்பட்டார்.

கேர்ணல் ஒல்கோட்டும் இவரை நம்பினார். செப்டம்பர் 1874 இல், வெர்மான்ட் பண்ணையில் (Vermont Farm) தொடர்ச்சியாக ஆவிகள் தோன்றுவதாகக்கூறப்பட, ஒல்கோட் அங்குசென்று அதுபற்றி ஆராய்ந்து கொண்டிருந்தபோது, அவர் ஹெலினாவைச் சந்தித்தார். அப்பெண் மாற்றுலகவாசிகளுடன் மாய உரையாடல்கள் நடத்துவதைப்பற்றி பத்திரிகைகளுக்கு ஒல்கோட் பல கட்டுரைகள் எழுதினார். இக்கட்டுரைகள் பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தன. இத்தகைய அதீதசக்திகளின் நம்பிக்கைகளுக்கும் மதங்களுக்கும் இடையே தொடர்புகள் இருந்தன. ஆன்மீகத்துக்கும் அதீதசக்திகளின் நம்பிக்கைகளுக்கும் இடையே ஒரு மெல்லிய இடைவெளியே இருந்ததால் கேர்ணல் ஒல்கோட், பிளாவட்ஸ்கி ஆகிய இருவரும் ஆன்மீகத்தேடலிலும் ஈடுபட்டனர். இவர்களை கீழைத்தேச இந்துமதமும், பௌத்தமதமும் கவர்ந்தன. இருவரும் அனைத்து மதங்களின் ஒற்றுமையிலும், ஒவ்வொருவரும் தமது அடுத்தபிறவிக்கு தனித்தனியாகவே பாடுபடவேண்டும் என்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே இவர்கள் சந்தித்த ஒரு வருடத்திற்குள், இருவரும் தங்கள் பொதுவான கண்ணோட்டத்தை ஒரு கூட்டு முயற்சியாக மாற்றினர். 17 நவம்பர் 1875 இல், நியூயோர்க்கில் உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் 16 பேர் முன்னிலையில் தியோசொபிகல் சொசைட்டியை (Theosophical Society) நிறுவினர்.

1879 ஆம் ஆண்டு எட்வின் அர்னால்ட் (Edwin Arnold) புத்தரைப்பற்றி எழுதிய 'ஆசியாவின் ஒளி' (The Light Of Asia) என்ற நூலை வசித்தபிறகு, புத்தமதத்தின் மீதான அவர்களது ஆர்வம் அதிகரித்தது. ஆரம்பத்திலிருந்தே, தியோசொபிகல் சொசைட்டியில் ஆவிகள், ஜோசியம், மறுவுலகம், மாயவாதம் ஆகியவற்றில் நம்பிக்கைகொண்ட ஒரு குழு இருந்தது. அதன்

அணிகள் பல ஆண்டுகளுக்குள் வளர்ந்து அதனை ஓர் இயக்கமாக மாற்றியது. இதன் தொடர்பெல்லை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் விரிந்தது. 1879 இன் தொடக்கத்தில் ஒல்கோட்டும், பிளாவட்ஸ்கியும் கீழைத்தேசமதங்கள் பற்றிய பண்டைக்கால ஞானத்தைத்தேடி இந்தியாவின் சென்னை, அடையாறுப்பகுதிக்கு இடம்பெயர்ந்தனர். 1882 ஆம் ஆண்டு சென்னையின் அடையாறில் உள்ள தியோசொபிகல் சொசைட்டியின் நிரந்தரத் தலைமையகத்தை நிறுவினர். இவர்களோடு அன்னி பெசன்ட்டு அம்மையார் (Annie Besant) இணைந்தமை இவ்வமைப்புக்கு உத்வேகத்தைக் கொடுத்தது. வாரணாசியில் (பனாரஸ்) மத்திய இந்துக் கல்லூரியை நிறுவுவதில் அன்னி பெசன்ட்டுக்கு கோர்ணல் ஒல்கோட் உதவினார்.

கோர்ணல் ஒல்கோட்டும் பிளாவட்ஸ்கியும் இந்தியாவில் ஒரே மாதிரியான பாதையைப் பின்பற்றவில்லை என்றாலும், சில பொதுவான நம்பிக்கைகள் இருவரையும் இணைத்தன. பிளாவட்ஸ்கியைச் சுற்றி ஆவிகளை நம்பும் ஒரு கூட்டம் எப்பொழுதும் இருந்தது. இமயமலையில் வசிக்கும் ஆவிகளோடு தான் கடிதத்தொடர்பு கொள்வதாக பிளாவட்ஸ்கி அவர்களை நம்பவைத்தார். ஆனால் கோர்ணல் ஒல்கோட் படிப்படியாக தனது பழைய சுயமாக மாறினார். பல்வேறு சீர்திருத்தப்பணிகளில் ஈடுபட்டார். கல்வியின்மூலமே மக்களின் வாழ்நிலையை மேம்படுத்தி, பௌத்தமதத்தை வளர்க்க முடியும் என நம்பினார். அப்போது இலங்கையில் கிறிஸ்தவ மிஷனரிகளுக்கும் பௌத்தமதப் பீடங்களுக்குமிடையே யாருடைய மதம் உயர்வானது என்ற தர்க்கம் சூடேறிக்கொண்டிருந்தது. பௌத்தமதப் பீடங்களின் கரத்தை வலுப்படுத்துவதையும், தமது தியோசொபிகல் சொசைட்டியை இலங்கையில் நிறுவுவதையும் நோக்கமாகக்கொண்டு மே 16, 1880 ஆம் திகதி கோர்ணல் ஒல்கோட்டும், பிளாவட்ஸ்கியும் கொழும்புக்கு வந்தனர். அவர்களுக்கு அரச வரவேற்பு அளிக்கப்பட்டது. துறைமுகத்தில் கூடியிருந்த ஒரு பெரிய மக்கள் கூட்டம் சாது! சாது! என்று கோஷமிட்டு அவர்களை வரவேற்றது. மே 25 ஆம் திகதி காலியிலுள்ள விஜயானந்த மடாலயத்தில் இவர்களுக்கு சிறப்புவரவேற்பு அளிக்கப்பட்டது. ஒல்கோட்டும், பிளாவட்ஸ்கியும் புத்தர்சிலைக்கு முன்பாக பௌத்தர்களாக மாறினர். அவ்வாண்டு ஜூலை வரை, வண. குணானந்த தேரர் மற்றும் வண. ஹிக்கடுவே சுமங்கல தேரர் போன்ற பல துறவிகளையும், பல முக்கியப் பிரமுகர்களையும் கோர்ணல் ஒல்கோட் சந்தித்தார்.

கோர்ணல் ஒல்கோட், 1880 ஜூன் 17 இல், தனது முதல் வருகையின் போது, பௌத்த தியோசொபிகல் சொசைட்டியை (Buddhist Theosoph ical Society) நிறுவினார். இது புத்தமதச் சிறுவர்களுக்கு ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்பிப்பதற்காகப் பிரசாரம் செய்தது. அக்காலகட்டத்தில் மிஷனரிப்பள்ளிகளில் கிறிஸ்தவ மாணவர்கள் மாத்திரமே ஆங்கிலவழியில் கல்விகற்கும் வாய்ப்பைப்பெற்றனர். அவற்றில் பெரும்பாலானவை கிறிஸ்தவ மதகுருமார்களால் நடத்தப்பட்டன.

1880 ஆம் ஆண்டு, 16 வயதுச் சிறுவனாக இருந்தபோது, அநகாரிக தர்மபால ஆகிய டொன் டேவிட் ஹேவவிதாரனவுக்கு, கோர்ணல் ஒல்கோட்டையும், மேடம் பிளாவட்ஸ்கியையும் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. அந்தச் சந்திப்பின்விளைவாக, மத வாழ்க்கைக்கு அவர் தன்னை அர்ப்பணிக்கத் தொடங்கினார். 1884 ஆம் ஆண்டு, அவரது தந்தையின் விருப்பத்திற்கு மாறாக, மேடம் பிளாவட்ஸ்கியுடன் இந்தியாவின் அடையாறுக்குச் சென்றார். பின்னர் இந்தியாவிலிருந்து திரும்பிய அவர் தியோசொபிகல் சொசைட்டியின் தலைமையகத்தில் வசித்துவந்தார். கோர்ணல் ஒல்கோட்டுடன் பௌத்தமதப் பிரசாரத்துக்குச் செல்வது, அவரது உரையை மொழிபெயர்ப்பது போன்ற பணிகளில் அநகாரிக தர்மபால ஆர்வத்தோடு ஈடுபட்டார். 1881 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், ஒல்கோட் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்தார். அப்போது வண. குணானந்த தேரருடன் சேர்ந்து, அவர் தானே வடிவமைத்த மாட்டுவண்டியில் எட்டு மாதங்கள் மேற்கு மாகாணத்தில் சுற்றுப்பயணம் செய்தார். அவரது மாட்டுவண்டியைப் பார்க்கவும், அவரது கிறிஸ்தவ எதிர்ப்புப் பேச்சுகளைக் கேட்கவும் கிராமவாசிகள் திரண்டனர். ஒரு வெள்ளைக்காரர் தங்களுக்கு ஆதரவாக, பௌத்தமதத்தை ஆதரித்து கிறிஸ்தவமதத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்வது பௌத்தர்களைப் பிரமிக்கவைத்தது. இது அவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது. தான் வெளியிட்ட கிறிஸ்தவ எதிர்ப்பு, பௌத்த ஆதரவுத் துண்டுப்பிரசுரங்களையும் அவர் விநியோகித்தார்.

ஜூலை 24, 1881 இல் கோர்ணல் ஒல்கோட் 'புத்தமதக் கோட்பாடு' (The Buddhist Catechism) என்ற கையேட்டை எழுதி வெளியிட்டார். இது

சிங்களமொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இன்னும் பயன்பாட்டில் உள்ள இந்தக் கையேடு 40 பதிப்புகளைக் கடந்து, 20க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது கத்தோலிக்கர்கள் மற்றும் புரட்டஸ்தாந்தியரின் மதக்கோட்பாட்டு வடிவத்தை ஒத்திருந்தது. ஆனால் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பே நாவலர் சைவ வினா - விடை மற்றும் இலக்கண வினா - விடை ஆகியவற்றை எழுதியபோது, இந்த வடிவத்தைப் பின்பற்றியிருந்தார்.

1881 ஆம் ஆண்டின் இறுதியில் கேர்ணல் ஒல்கோட் அமெரிக்கா திரும்பினார். மீண்டும் ஜுலை 18, 1882 அன்று தனது மூன்றாவது சுற்றுப்பயணத்திற்காக இலங்கைக்கு வந்தார். அதற்கு இரண்டு காரணங்கள் வழிவகுத்தன. முதலாவது, அவர் இலங்கையில் உருவாக்கிய பௌத்த தியோசொபிகல் சொசைட்டி செயலற்றுப் போய்க்கொண்டிருந்தது. தேசிய கல்விநிதிக்கு உறுதியளிக்கப்பட்ட 13,000 ரூபாயில், 100 ரூபாய் மாத்திரமே சேகரிக்கப்பட்டிருப்பதை அறிந்து அவர் கவலையடைந்தார். இரண்டாவது, ரோமன் கத்தோலிக்க மிஷனரிகளின் ஒரு குழு, ஒரு புத்த யாத்திரைத்தலத்திற்கு அருகிலுள்ள லூர்து மாதாவின் ஆலயத்தை (Lourdes - Like Healing Shrine) நோயைக் குணப்படுத்தும் ஆலயமாகமாற்றி, கிறிஸ்தவத்தெய்வத்தின் சக்தியை மக்களிடையே நம்பவைக்கும் முயற்சியை மேற்கொண்டது. அது பௌத்தர்களை கத்தோலிக்கமதத்தை நோக்கி ஈர்க்கும் என்று ஒல்கோட் அஞ்சினார். இம்முயற்சியை முறியடிப்பதறகு, புத்தரின் பெயரால் ஒரு பௌத்தத்துறவி முன்வந்து, புத்தரின் அருளால் குணப்படுத்தல்களைச் செய்யவேண்டுமென்று, ஒல்கோட் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் எந்தப் பௌத்தப்பிக்குவும் முன்வராததனால், அவர் திரும்பிவந்து, அப்பணியை தானே நிறைவேற்ற முடிவுசெய்தார்.

இவ்வாறு கேர்ணல் ஒல்கோட்டின் முதலாவது குணப்படுத்துதல் நிகழ்வு ஆகஸ்ட் 29, 1882 அன்று நிகழ்ந்தது. முற்றிலும் செயலிழந்த கையும், பகுதியளவு ஊனமுற்ற காலும்கொண்ட ஒரு நோயாளிக்கு ஒல்கோட் தனது மயக்கசக்திகளைப் (Mesmerism) பயன்படுத்தி சிகிச்சையளித்தார். அந்நோயாளியின் உடல்நிலை சீரடைந்தது. அன்றிலிருந்து அவர் தனது சொற்பொழிவுச் சுற்றுப்பயணங்களை, குணப்படுத்தும் பணிகளாகவும் மாற்றினார். ஆனால் அதே ஆண்டு தனது 'மயக்கசக்தி மூலம் நோய்களைக் குணப்படுத்தும்' நடைமுறையைக்கைவிட்டு கல்வி மேம்பாட்டுப்பணியில் கூடுதலாகக் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

இதன்போதுதான், கேர்ணல் ஒல்கோட், சிங்கள - பௌத்தர்கள் மத்தியில், தேசிய அளவில் புகழ்பெற்ற அந்தச் சம்பவம் நடைபெற்றது. அதுதான் மார்ச் 25, 1883 ஈஸ்டர் ஞாயிறு, கொட்டாஞ்சேனைக் கலவரம். இக்கலவரம் பற்றி பூரணவிசாரணை ஒன்றை நடத்துவதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு பௌத்தர்கள் ஆளுநருக்கு மனு அனுப்பினர்.

இதன்பயனாக ஆளுநரினால் விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதன்விசாரணை நடைபெறும்போதே, கத்தோலிக்கர்களும் பௌத்தர்களும் ஒருவருக்கெதிராக ஒருவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். ஆயினும் நம்பகரமான ஆதாரங்கள் இல்லை என்றுகூறி இறுதியில் அனைத்துக் குற்றச்சாட்டுகளும் கைவிடப்பட்டன.

கத்தோலிக்கர்களுக்கு எதிரான விசாரணையில் நீதி கிடைக்காது என்பது தெளிவாகத் தெரிந்ததும், புத்தபிக்குகளும் பொதுமக்கள் குழு ஒன்றும் கேர்ணல் ஒல்கோட்டை இலங்கைக்குத் திரும்பும்படி அழைப்பு விடுத்தனர். இவ்வழைப்பை ஏற்ற கேர்ணல் ஒல்கோட், ஜனவரி 27, 1884 அன்று, ஜி.டபிள்யூ. லீட்பீட்டருடன் வந்து, ஒரு புத்தபாதுகாப்புக் குழுவை அமைத்தார். அக்குழு அவரை ஒரு கௌரவ உறுப்பினராகத் தேர்ந்தெடுத்ததுடன், தன் பிரதிநிதியாக லண்டனுக்குச்சென்று காலனித்துவ அலுவலகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, நீதிகிடைக்க வழிசெய்யும் அதிகாரத்தை அவருக்கு வழங்கியது.

இது சிங்கள - பௌத்தர்கள் மத்தியில், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரு தலைவர் இல்லாத வெற்றிடத்தைக்காட்டியது. அவ்வெற்றிடத்தை நிரப்பக்கூடிய ஒரே ஒருவராக கேர்ணல் ஒல்கோட் மாத்திரமே இருந்தார். அதனை அவர் நேர்மையோடு செய்தார். முஸ்லிம்களின் நிலைமை இதைவிடப் பலவீனமாக இருந்தது. 1898 பெப்ரவரி 05 ஆம் திகதி சித்திலெப்பை தனது 56 ஆவது வயதில் காலமானபின்னர், நீண்டகாலம் அவர்களிடையே தலைமைத்துவ வெற்றிடம் நீடித்தது. இவர்கள் அரசியலில் 'அநாமதேயர்களாக' (Nobodies) இருந்தார்கள். இதற்குமாறாக தமிழ்மக்கள்

மத்தியில் செல்வாக்குமிக்க தலைவர்கள் இருந்தார்கள். அவர்களது பலத்தையும், பலவீனத்தையும் குறித்துப் பின்னர் காணலாம்.

ஒல்கோட் லண்டனுக்குச் செல்வதற்குமுன்னர், உயர்மட்ட புத்ததுறவிகள் குழு ஒன்று கேர்ணல் ஒல்கோட்டுக்கு பௌத்தமுறைப்படி பிரியாவிடை விழாவை நடத்தி வழியனுப்பிவைத்தது. ஒல்கோட் 1884 ஏப்ரலில் லண்டனை அடைந்து, லோர்ட் டெர்பிஸ் (Lord Derbys) உள்ளிட்ட பிரிட்டிஷ் காலனித்துவ அதிகாரிகளைச் சந்தித்து, அவர்களிடம் ஆறு கோரிக்கைகளை உள்ளடக்கிய ஒரு மகஜரைக் கையளித்தார். அக்கோரிக்கைகளாவன: (1) கலவரத்தைத் தூண்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கத்தோலிக்கர்கள் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும், (2) பௌத்தர்கள் தங்கள் மதத்தைச் சுதந்திரமாகப் பின்பற்றும் உரிமையை உறுதிசெய்ய வேண்டும், (3) வெசாக் முழுநிலவு நாள், பொதுவிடுமுறையாக அறிவிக்கப்பட வேண்டும், (4) மத ஊர்வலங்களில் மேளதாளங்களையும் பிற இசைக்கருவிகளையும் பயன்படுத்துவதற்கு எதிரான அனைத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட வேண்டும், (5) பௌத்தப்பதிவாளர்கள் நியமிக்கப்பட வேண்டும், (6) பௌத்தமதப் பீடங்களுக்குச் சொந்தமான சொத்துகளை (Temporalities) பௌத்தப்பிக்குகள் கட்டுப்படுத்துவதற்குள்ள தடைகள் நீக்கப்படுதல் வேண்டும்.

காலனித்துவ அலுவலகம் கேர்ணல் ஒல்கோட் முன்வைத்த ஆறு கோரிக்கைகளில் இரண்டை வழங்கியது. டிசம்பர் 1884 இல், மத ஊர்வலங்களில் மேளதாளங்களையும் பிற இசைக்கருவிகளையும் பயன்படுத்த அனுமதி வழங்கியது அவற்றில் ஒன்று. மேலும், ஏப்ரல் 28, 1885 இல், வெசாக் முழுநிலவு தினத்தை அதிகாரபூர்வ விடுமுறையாகவும் அறிவித்தது.

1884 ஜனவரியில் கேர்ணல் ஒல்கோட் இலங்கை திரும்பியபோது, ஜி.டபிள்யூ. லீட்பீட்டரையும் (G.W. Leadbeater) அழைத்து வந்திருந்தார். அவருடன் ஏ.ஆர். புல்ட்ஜென்ஸ் (A.R. Buultjens) மற்றும் பவுல்ஸ் டாலி (Bowels Dally) ஆகியோரும் இணைந்து பௌத்த பாடசாலைகளின் நிர்வாகத்தை ஒழுங்கமைத்தனர். இவ்வாறு கிறிஸ்தவ மிஷனரிகளின் சவாலை பௌத்தர்கள் எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் ஒரு கல்விவலையமைப்பை உருவாக்குவதில் தியோசொபிகல் சொசைட்டி முக்கிய பங்கு வகித்தது. அது இலங்கையில் பல பௌத்தப்



ஒல்கோட்டும் பிளாவட்ஸ்கியும்
Image Source - www.spectator.co.uk

பள்ளிகளைக் கட்டியது. கொழும்பில் உள்ள ஆனந்தா கல்லூரி, கண்டியில் உள்ள தர்மராஜா கல்லூரி, காலியில் உள்ள மஹிந்த கல்லூரி மற்றும் குருநாகலில் உள்ள மலியதேவா கல்லூரி என்பன அவற்றுள் பிரதானமானவை.

1898 ஆம் ஆண்டளவில் இலங்கையில் இத்தகைய 103 பி.டி.எஸ். பௌத்தப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. அவற்றில் பல, மிஷன் பாடசாலைகளின் பாடவிதானங்களையும், அதேநிர்வாக முறையையும் கொண்டிருந்தன. அவற்றுள் சில பாடசாலைகள் நவீன ஆங்கிலக்கல்வியை வழங்கும் மிஷனரிகளின் சிறந்த பாடசாலைகளுக்கு நிகரான தரத்தில் இருந்தன. இங்கு காலனித்துவ ஆட்சியின்கீழ் நிர்வாக, தொழில்முறை மற்றும் வணிகப்பதவிகளுக்கான பயிற்சியை பௌத்த மாணவர்கள் பெற்றனர். இப்பாடசாலைகள் பௌத்ததன்மை கொண்டவையாக இருந்ததுடன், பாளிமொழியும் அங்கு கற்பிக்கப்பட்டது.

கேர்ணல் ஒல்கோட் பௌத்தமத வளர்ச்சிக்கு ஆற்றிய மற்றுமொரு பங்களிப்பு பௌத்தமதக் கொடியை உருவாக்கியமையாகும். கேர்ணல் ஒல்கோட்டும் ஜே.ஆர். டி சில்வாவும் கூட்டாக வடிவமைத்த இக்கொடி, 1952 ஆம் ஆண்டு உலக பௌத்த மாநாட்டால் சர்வதேச பௌத்தக்கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1884 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தியப்பத்திரிகைகள் சில பிளாவட்ஸ்கியின் மாயாஜால ஆன்மீக நிகழ்வுகளை ஏமாற்றுவேலை எனக் குற்றஞ்சாட்டின. அதன்பின்னர் அவர் லண்டனுக்கு இடம்பெயர்ந்தார். அங்கும் 1885 ஆம் ஆண்டு லண்டன் உளவியல் ஆராய்ச்சிசங்கம்

இவர் தொடர்பான விசாரணை ஒன்றை நடத்தி, அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதற்கு 'ஹாட்சன் அறிக்கை' (Hodgson Report) என்று பெயர். அது, அவரை ஒரு மோசடிக்காரர் என்று குற்றம் சுமத்தியது. எனினும் இவரது ஆதரவாளர்கள் அக்குற்றச்சாட்டை நிராகரித்து அவருக்கு ஆதரவாக இருந்தனர். கேர்ணல் ஒல்கோட் பிளாவட்ஸ்கியுடனான நட்பைத் துண்டித்துக்கொள்ளவில்லை. 1891 இல் பிளாவட்ஸ்கி இறந்தபோது, ஒல்கோட் லண்டனுக்குப் பயணம்செய்து அவரது அஸ்தியைப்பெற்று, அதனை அமெரிக்காவிலும் இந்தியாவிலும் கரைத்தார். இருப்பினும், அவர் பகுத்தறிவே உண்மையான நடுவர் என்ற கருத்தில் உறுதியாக இருந்தார். 1906 ஆம் ஆண்டில், தியோசொபிகல் நிறுவனத்தலைவராக நிகழ்த்திய தனது கடைசி உரைகளில் ஒன்றில், அவர் பின்வருமாறு கூறினார்: "எதையும் நம்பாதீர்கள்.... அது ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டதாலோ அல்லது ஒரு முனிவரால் கற்பிக்கப்பட்டதாலோ அல்லது பாரம்பரியத்தால் வழங்கப்பட்டதாலோ அல்லது ஒரு தேவரால் அருளப்பட்டதாலோ, எதையும் நம்பாதீர்கள். எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட விடயம் உங்கள் பகுத்தறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்றதாக இருக்கும்போது மாத்திரம் அதை நம்புங்கள்; நம்பி அதற்கேற்ப செயற்படுங்கள். "

1906 ஆம் ஆண்டு, கேர்ணல் ஒல்கோட் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லும்போது அவருக்குப் பலத்தகாயம் ஏற்பட்டது. சிறிதுகாலம், ஜெனோவாவில் சிகிச்சைபெற்று குணமடைந்த அவர், அடையாறுக்குத் திரும்பவேண்டும் என்று வலியுறுத்தினார். அடுத்த ஆண்டு பிப்ரவரி 17 அன்று அங்கு காலமானார்.

பௌத்த மதமறுமலர்ச்சி இயக்கத்தின் இரண்டாவது காலகட்டத்தில் ஆளுமை செலுத்தியவர்களில் மாபெரும் ஜம்பவானாகத் திகழ்ந்தவர் கேர்ணல் ஒல்கோட். அவருக்கு அடுத்தநிலையில், அவரது சீடரான அநகாரிக தர்மபால வளர்ந்துவந்தார். இவ்விருவருக்குமிடையிலான கூட்டணி ஒரு கட்டத்தில் முறிந்தது. ஏனெனில் இருவரும் இருவிதமான போக்குகளை பிரதிநிதித்துவப்படுத்தத் தொடங்கினர். அதுகுறித்துப் பின்னர் காணலாம். உண்மையில் பௌத்த மதத்துக்கும், பௌத்தர்களுக்கும் கேர்ணல் ஒல்கோட் செய்தசேவை அநகாரிக தர்மபால செய்த சேவையைவிட மிகமிக ஆதிகம். எனினும் சிங்கள - பௌத்த தேசியவாதிகள், அநகாரிக தர்மபாலவையே உயர்த்திப்பிடிக்கின்றனர். கேர்ணல் ஒல்கோட் செய்த சேவைகளுக்குரிய இடம் வரலாற்றில் இவர்களால் மறுக்கப்படுகிறது. எனினும் பௌத்த மதமறுமலர்ச்சி இயக்கத்தின் இரண்டாவது காலகட்டத்தை கேர்ணல் ஒல்கோட்டை ஒதுக்கிவிட்டு எவராலும் பேசவோ, எழுதவோ முடியாது.

எப்படி பௌத்த மதமறுமலர்ச்சி இயக்கத்தின் முதலாவது காலகட்டத்தின் போக்கை 1873 இன் பாணந்துறை விவாதம், 1883 இன் கொட்டாஞ்சேனைக் கலவரம் ஆகிய இரு சம்பவங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றனவோ, அதுபோல பௌத்த மதமறுமலர்ச்சி இயக்கத்தின் இரண்டாவது காலகட்டத்தைப் படம்பிடித்துக் காட்டும் இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றன. அவை: 1896 இல் களுத்துறைக் கோட்டையில் அரசமரம் ஒன்றை வெட்டுவதற்கு எதிரான போராட்டம், 1897 இல் சிலாபம் முஸ்லிம் வர்த்தகர்களுக்கெதிரான கலவரம்.

### 1896 இல் களுத்துறைக் கோட்டையில் இருந்த அரசமரங்களை வெட்டுவதற்கு எதிரான போராட்டம்

"சிலோனில் (இலங்கையில்) ஒரு மரம் வெட்டப்படுமா? இல்லையா? என்பதைவிட வேறு எந்த ஒரு முக்கியமான விடயத்தைப் பற்றியாவது எம்மால் சிந்திக்கவோ, அறிக்கை எழுதவோ முடியுமா?" என காலனிகளுக்கான பாராளுமன்றத் துணைச்செயலாளர், செல்போர்னின் ஏர்ல் (Earl Of Selborne) எழுதிய ஒரு குறிப்புக் கூறுகிறது. அந்தளவிற்கு, களுத்துறைக் கோட்டையில் இருந்த அரசமரங்களை வெட்டுவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானமானது, 1890களின் நடுப்பகுதியில், இலங்கையை உலுக்கிய ஒரு பிரச்சினையாக இருந்தது.

1886 ஆம் ஆண்டில், களுத்துறைவாழ் பௌத்தர்கள் சார்பில் 'பொடி சிங்கோ' என்ற சாமான்யர் ஒருவர் களுத்துறைக் கோட்டை பொதுமைதானத்தில் இருந்த மூன்று அரச மரங்களில் ஒன்றைச் சுற்றியிருந்த ஒரு துண்டுநிலத்தில் சிறிய கல்லறை - வழிபாட்டுத்தலம் (Shrine) ஒன்றைக் கட்டுவதற்கு, அந்நிலத்தைக் குத்தகைக்குத் தருமாறு உள்ளூர் சபையிடம் விண்ணப்பித்தார். அப்போதைய துணை அரசாங்க அதிபர் எச். ஹாலி கேமரூன் (H. Haley Cameron) எந்த ஆட்சேபனையும் கூறாமல் அதற்கான அனுமதியை வழங்கினார். அதைத்தொடர்ந்து, 'பொடி சிங்கோ' என்ற சாதாரண மனிதர் அவ்வரச மரத்தின் அடிவாரத்தில்

ஒரு சிறிய ஆலயத்தைக்கட்டி வழக்கமான சடங்குகளைச் செய்துவந்தார்.

1890களில் புதிய உதவி அரசாங்க அதிபராக H.W. பிராட்ஹர்ஸ்ட் (H.W. Brodhurst) என்பவர் வந்தார். அவர் பொடி சிங்கோவின் வழிபாட்டுத்தலம் இருப்பதை விரும்பவில்லை. அங்கு வழிபாட்டுக்காக வருவோர்தொகை அதிகரித்து, கோட்டையின் நுழைவாயிலில் சனப்புழக்கம் அதிகரிப்பது, அவரை எரிச்சலடையச்செய்தது. எனவே அவர் பொடி சிங்கோவின் வழிபாட்டுத்தலத்தை அப்புறப்படுத்த விரும்பினார். இதற்கிடையில் 1891 - 1892 ஆம் ஆண்டுகளில், அங்கு முன்னர் இருந்து அழிக்கப்பட்ட - மஹாவம்சத்தில் குறிப்பிடப்பட்டிருந்த - பௌத்த விகாரையை மீண்டும் கட்டுவதற்காக போதி மரத்தைச் சுற்றியுள்ள கால் ஏக்கர் நிலத்தை விடுவிக்குமாறு பௌத்தர்கள் மனுச்செய்தனர். மேற்கு மாகாண அரசாங்க அதிபரான A.R. டாசனின் (A.R. Dawson) ஆதரவுடன், பிராட்ஹர்ஸ்ட் இம்மனுக்களை நிராகரித்தார். அதேசமயம் பொடி சிங்கோவின் வழிபாட்டுத்தலத்துக்கான குத்தகையை முடிவுக்குக்கொண்டுவர அவர் எடுத்த முயற்சிகள் உள்ளூர் சபையால் நிராகரிக்கப்பட்டன. 1894 ஆம் ஆண்டுவரை விகாரையின் நிலத்தின் மீதான உரிமைகோரல்கள் தொடர்ந்ததால் ஆத்திரமடைந்த பிராட்ஹர்ஸ்ட் பொடி சிங்கோவுக்கு வழங்கப்பட்டிருந்த குத்தகையையும் பொருட்படுத்தாமால் அங்கிருந்த இரண்டு அரச மரங்களையும் வெட்ட உத்தரவிட்டார்.

இதனை ஆட்சேபித்து பிராட்ஹர்ஸ்டின் வீட்டிற்கு வெளியே உள்ளூர்வாசிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனையும் பொருட்படுத்தாமல் அரச மரங்களை அகற்றும் பணி ஆகஸ்ட் 4 ஆம் திகதி தொடங்கியது. இதனை எதிர்த்து, அண்மையில் அங்கு உருவாக்கப்பட்டிருந்த களுத்துறை பௌத்த சங்கத்தின் (Kalutara Buddhist Union) தலைவரும் மருத்துவருமான ஓ.எம். ஒபேயசேகர, ஆளுநர் ஆர்தர் ஹேவ்லாக்கிற்கு (Governor Arthur Havelock) ஒரு தந்தி அனுப்பினார். அந்நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநரிடமிருந்து உத்தரவு பறந்தது. அதற்கிடையில் ஒரு அரசமரம் அடியோடு வெட்டப்பட்டுவிட்டது. மற்றைய மரத்தின் ஒரு பகுதி மட்டுமே எஞ்சி இருந்தது.

அவர்கள் அனுப்பிய மனுவில் முன்வைக்கப்பட்ட, அரச மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பரிசீலிப்பதற்காக ஆளுநர் விசாரணைக்குழு ஒன்றை நியமித்தார். விசாரணையின்போது, அங்கு அப்படி ஒரு விகாரை என்றுமே இருந்ததில்லை என்பதை நிரூபிப்பதற்கான பழைய புவியியல் படங்களைச் சமர்ப்பித்தும், அவ் அரசமரங்கள் ரயில் பயணத்துக்கு இடையூறு ஏற்படுத்துகிறது என்று காரணம் காட்டியும், அரச அதிகாரிகள் அக்கோரிக்கையை முறியடிக்க முயற்சி செய்தனர். இழுபறியான இவ்விடயம் லண்டன் காலனியச் செயலாளர் வரைக்கும் சென்றது. லண்டன் காலனிகள் செயலகம், இது அநாவசியமாக சுதேசிகளின் ஆத்திரத்தைத் தூண்டுகின்ற செயல் என்பதையும், அதிகாரிகள் பொய் கூறுகிறார்கள் என்பதையும் புரிந்துகொண்டது. எனினும் அரச மரங்களை வெட்டுவதற்கு, பொதுவான ஒரு தடையை விதிப்பதை அது விரும்பவில்லை. எனவே ஏற்கனவே வெட்டப்பட்ட இரண்டு மரங்களை வெட்டுவதற்கும், வழிபாட்டுத்தலம் அமைந்துள்ள அரசமரத்தை வெட்டாமல் விடுவதற்கும் பரிந்துரை செய்தது.

காலனித்துவச் செயலகத்தின் சிபாரிசை களுத்துறைவாசிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் அரசமரம் பௌத்தமதத்தின் புனிதச்சின்னம் என்பதை ஏற்றாக வேண்டுமென வலியுறுத்தினர். இதற்கிடையில் புதிய ஆளுநர் ஜே. வெஸ்ட் ரிட்ஜ்வே இந்தப் பிரச்சினைக்கு ஓர் இணக்கமான தீர்வைக் காணுமாறு, 1896 அக்டோபரில் உத்தரவிட்டார். இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்த நினைத்த, அப்போது அரசாங்க அதிபராக இருந்த டாசன் (Dawson), பொடி சிங்கோவுக்கு, நவம்பர் 26 ஆம் திகதிக்குள், அவரது வழிபாட்டுத்தலம் அகற்றப்படும் என இறுதி எச்சரிக்கையை வழங்கினார்.

இவ் இறுதி எச்சரிக்கைக்கு எதிராக களுத்துறை பௌத்த ஒன்றியம், முதலாவது அரசாங்க எதிர்ப்பு வெகுஜன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. நவம்பர் 26 ஆம் திகதி காலையில், சுமார் ஆயிரம்பேர் அரசமரத்தின் அருகேகூடி, அதைப் பாதுகாத்தனர். அவர்களோடு, காலை 11.45 ரயிலில் வந்த கிராமவாசிகளும் இணைந்தனர். இதனை அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. பொலிசார் கூட்டத்தினர் சிலரைக் கைதுசெய்தனர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை மீட்பதற்காக போராட்டக்காரர்கள் பொலிஸ் நிலையத்துக்கு விரைந்தனர். இதனால், ஒரு கான்ஸ்டபிள் காயமடைந்தார். கைதான ஒருவர் தப்பினார்.

நிலைமை கட்டுமீறிப் போவதைக்கண்டு அச்சம்கொண்ட பிராட்ஹர்ஸ்ட் மரம் வெட்டப்படாது என்று அறிவித்தார். இந்த உறுதிமொழி பதற்றங்களைத் தணிக்க உதவியது. சில போராட்டக்காரர்கள் கைது செய்யப்படுவதைத் தவிர்த்ததால், அடுத்தடுத்த நீதிமன்ற விசாரணைகள் ஒரு வருடத்திற்கும் மேலாக நீடித்தன. வழக்குத்தொடரப்பட்ட 40 பேரில் பெரும்பாலானவர்களுக்கு கணிசமானதொகை அபராதம் விதிக்கப்பட்டது. இரண்டு பேருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆளுநர் ரிட்ஜ்வே, "நிலைமை மிகவும் தவறாக நிர்வகிக்கப்பட்டது" என்று முடிவுசெய்தார். எனவே தனது நிறைவேற்றுக்குழுவின் (Executive Council) மூத்த அதிகாரிகளிடம் ஆலோசனையைப் பெற்றார். அவர்களில், எஃப்.ஆர். எல்லிஸ் (F.R. Ellis) ஓர் இணக்கமான தீர்வை முன்மொழிந்தார்.

மரத்தை வெட்டுவதற்கான அரசாங்கத்தின் உரிமையை தனியான பிரச்சினையாகவும்; பொடி சிங்கோவின் வழிபாட்டுத்தலத்தை அதே இடத்தில் வைத்திருக்க அனுமதித்து, அரசமரத்தை வழிபாட்டுத்தலமாக மாற்றுவதை மற்றொரு பிரச்சினையாகவும் பிரித்து; இரண்டு பிரச்சினைகளுக்கு இடையேயான வேறுபாட்டை பிராட்ஹர்ஸ்ட்டின் வரையறுத்தார். இருக்கும் சூழ்நிலையில், அரசமரத்தை வெட்டுவதில் அவசரம் காட்டினால் அது பௌத்தமக்களின் ஆத்திரத்தைத் தூண்டும்; எனவே அந்தப் பிரச்சினையை ஆறவிட்டு, உடனடிப் பிரச்சினையான பொடி சிங்கோவின் வழிபாட்டுத்தலத்தை அகற்றுவது அவசியம் என முடிவெடுக்கப்பட்டது.

அரசமரத்தை வெட்டுவதில்லை என்ற முடிவை அறிவித்தவுடன், அதன்பின்னால் உள்ள தந்திரத்தைப் புரிந்துகொள்ளாத போராட்டக்காரர்கள் அமைதி அடைந்தார்கள். உண்மையில் அரசமரத்தை வெட்டக்கூடாது என்ற அவர்களது கோரிக்கை வெற்றிபெற்றுவிட்டது. அதன்பின்னர், அரசமரத்தை வெட்டுவது பௌத்த மதச்சின்னத்தை வெட்டுவதற்கு நிகரான செயல் என்ற மனோபாவம் பௌத்த மக்களிடையே ஏற்பட்டதுடன், அரசாங்கம் அரசமரத்தில் கைவைப்பதற்குமுன் இரண்டுமுறை சிந்திக்கும்போக்கும் உருவானது.

அதன்பின் அடுத்த காய்நகர்த்தலுக்கு அரசாங்கம் தயாரானது. பொடி சிங்கோவின் வழிபாட்டுத்தலத்தை அகற்றுவதற்காக நீதிமன்றம் செல்வதாக இருந்தால் வழக்கு, விசாரணை என நீண்டகாலம் பிடிக்கும்; எனவே ஒரு குறுக்குவழியைக் கண்டுபிடித்தார்கள். இதன்படி இரகசியமாக 100 ரூபாய் பணத்தை பொடி சிங்கோவுக்குக் கொடுத்து அவரை தானாகவே வெளியேறச் செய்தார்கள். அந்தக்காலத்தில் அத்தொகை இன்றைய பெறுமதியில் பல கோடியைத் தாண்டும். அதன்பின்னர் அவ்வழிபாட்டுத்தலம் கத்தோலிக்கர்களைக்கொண்டு அகற்றப்பட்டது.

களுத்துறைக் கோட்டை அரசமரப் போராட்டம் பலவகையில் முக்கியத்துவம் பெறுகிறது. அதுவரை பல தன்னெழுச்சியான மக்களின் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. தானியச் சட்டத்துக்கு எதிரான போராட்டங்கள் நாட்டின் பலபகுதிகளில் நடைபெற்றதை இங்கு நினைவுகூரலாம். ஆனால் மதத்தின் அடிப்படையில் மேட்டுக்குடிகளின் தலைமையின்றி சாமானியர்களால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தன்னெழுச்சியான போராட்டம் இதுவாகும்.

அதுவரை பௌத்த மதமறுமலர்ச்சி இயக்கம், பௌத்தமக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை அது வெளிப்படுத்தியது. பௌத்தமத உரிமைக்காகப் போராடவேண்டும் என்ற எண்ணத்தையும், அதற்கான மனவலிமையையும் அது ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் அந்த எழுச்சியின் உத்வேகத்தைக்கண்டு காலனித்துவ அரசே ஒருகணம் திகைத்துப்போனது.

அனைத்துக்கும் மேலாக, மகாவம்ச மனநிலையை அடிப்படையாகக்கொண்டு, சாமன்யமக்கள் ஆத்திரமடைந்த முதல் நிகழ்வாகவும் இது அமைந்தது. மகாவம்சம் மீள்கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், அது பௌத்த மக்களுக்குள் ஏற்படுத்திய ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியையும், தன்னம்பிக்கையையும் இது பிரதிபலித்தது. எனினும் மகாவம்ச மனோபாவம் அரசியல் சித்தாந்தமாக அக்காலத்தில் வலுப்பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே அது காலனித்துவ அரசுடனான போராட்டமாகவே திகழ்ந்தது.

### 1897 இல் சிலாபத்தில் முஸ்லிம் வர்த்தகர்களுக்கு எதிரான வன்முறை

1897 ஆம் ஆண்டு, சிலாபத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறை வெடித்தது. அப்போது வறட்சி காரணமாக நெல் விளைச்சல் வெகுவாகப்

பாதிக்கப்பட்டு உணவுப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. சிலாபம் நகரம் இந்தியக் கரையோர முஸ்லிம் வர்த்தகர்களினது ஆதிக்கத்தில் இருந்தது. அவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கூடியவிலைக்கு உணவுப்பொருட்களை, குறிப்பாக அரிசியை, விற்றனர். இதனால் ஆத்திரமடைந்த சிங்களச் சண்டியர் கும்பல் முஸ்லிம் கடைக்காரர்களைத் தாக்கியது. பின்னர் நகர வறிய மக்களில் சிலரும் இவ்வன்செயலில் இணைந்து சூறையாடலில் ஈடுபட்டனர். கூடியவிலைக்குப் பொருட்களை விற்பதற்கு எதிராகத் தொடங்கிய இவ்வன்முறை இஸ்லாமியமதத்தை அவமானப்படுத்தி அனைத்து முஸ்லிம்களையும் அச்சுறுத்தும் விதத்தில் வேகமெடுத்தது. பொலிசார் மிகுந்த சிரமத்தோடு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அப்போது அப்பகுதிக்குப் பொறுப்பாகவிருந்த உதவி அரசாங்க அதிபர் எழுதிய பின்வரும் குறிப்பு நிலைமையைப் புலப்படுத்துகிறது: *"...கலவரத்திற்குப்பிறகு பதினைந்து வாரங்கள் கழித்துக்கூட, பள்ளிவாசலின் சுவர்களில் பன்றிகள் மற்றும் ஆபாசமான படங்களை வரைந்து, முகமதியர்களை அவமதித்ததாக சில இளம் சிங்களவர்கள்மீது குற்றஞ்சாட்டவேண்டிய தேவை எனக்கேற்பட்டது."*

1915 ஆம் ஆண்டு இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையே நவீன இலங்கையின் முதலாவது இனக்கலவரமாகச் சித்திரிக்கப்பட்டாலும், பொருட்படுத்தத்தக்க முதலாவது இனக்கலவரமாக 1897 இல் சிலாபத்தில் வெடித்த இக்கலவரத்தைக் கருதலாம். எனினும் இது நாடுதழுவிய அளவில் பரவாமல் ஒரு நகரத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்ததனால், அதனைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாரிய கலவரமாகக் கொள்ளமுடியாமல் உள்ளது. அத்துடன் இத்தகைய முஸ்லிம் வர்த்தர்களுக்கு எதிரான சிறுசிறு சம்பவங்கள் ஆங்காங்கே இக்காலப்பகுதியில் நடைபெற்றுவந்ததையும் கருத்திற்கொள்ள வேண்டும். சிலாபம் வன்முறைக்குப் பின்புலமாக இருந்த காரணிகள், 1915 வன்முறையிலும் செல்வாக்குச்செலுத்தின.

எப்படி பௌத்த மதச்சீர்திருத்த இயக்கத்தின் முதலாவது காலகட்டம், 1833 கொட்டாஞ்சேனைக் கலவரத்தில் முடிந்ததோ, அதைப்போன்றே பௌத்த மதச்சீர்திருத்த இயக்கத்தின் இரண்டாவது காலகட்டம், 1897 சிலாபம் வன்முறையோடு முடிவுற்றதாகக் கருதமுடியும். ஏனெனில் இதன் பின்னர்தான் அநகாரிக தர்மபாலவின் எழுச்சி ஏற்படுகிறது; பாரிய சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களைக் கண்ட மூன்றாவது காலகட்டம் தொடங்குகிறது.

## உசாத்துணைகள்


1. Anu Kumar. (2023). How an American helped revive Buddhism in Sri Lanka after moving to India. Scroll.in. https://scroll.in/magazine/1047687/howanamerican helpedrevivebuddhisminsrilankaaftermovingtoindia
2. Blavatsky, H. P. (1888). The three postulates of The Secret Doctrine.
3. Caldwell, D. H. (Ed.). (2000). The esoteric world of Madame Blavatsky: Insights into the life of a modern sphinx. Quest Books. ISBN 0835607941 / ISBN 9780 835607940
4. Doyle, A. C. (1926). The history of spiritualism (Vol. 1). G.H. Doran Co.
5. Guruge, A. (2007, January). Henry Steel Olcott in Sri Lanka: Death centennial tribute. Theosophical History, 13(1).
6. Guruge, A. W. P. (1998). Free at last in paradise. AuthorHouse.
7. Killingley, D. (1998). The white Buddhist: The Asian odyssey of Henry Steel Olcott. International Journal of Hindu Studies, 2(1).
8. Kuhn, A. B. (1930). Theosophy: A modern revival of ancient wisdom. Henry Holt & Company.
9. Ministry of Cultural Affairs. (1984). From the living fountains of Buddhism: Return to righteousness. Colombo.
10. Motwani, K. (1955). Colonel H. S. Olcott: A forgotten page in American history. Ganesh.
11. Murphet, H. (1972). Hammer on the mountain: Life of Henry Steel Olcott (1832–1907). Theosophical Publish ing House. ISBN 0835602109
12. Prothero, S. R. (1996). The white Buddhist: The Asian odyssey of Henry Steel Olcott. Indiana University Press. ISBN 0253330149
13. Prothero, S. R. (n.d.). Henry Steel Olcott and 'Protestant Buddhism.' Journal of the American Academy of Religion, 63.
14. Rogers, J. D. (1997). The Kalutara Bo tree affair 1891 to 1897. In Sri Lanka: Collective identities revisited (Vol. 1, p. 328). Marga Institute.
15. Washington, P. (1995). Madame Blavatsky's baboon: A history of the mystics, mediums, and misfits who brought spiritualism to America (Originally published 1993). Schocken Books. ISBN 9780805241259
16. Williams, G. M. (1946). Priestess of the occult: Madame Blavatsky. New York.

சிவராஜா ரூபன்



சிவராஜா ரூபன் அவர்கள் 1993 ஆம் ஆண்டு சிறுவனாக இருக்கும்போது ஈழத்திலிருந்து நோர்வேக்குப் புலம்பெயர்ந்தார். தற்போது கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு, நாடகம் மற்றும் ஊடகம் ஆகிய தளங்களில் இவர் செயற்பட்டு வருவதுடன் அரசியல், சமூகம், கலை, இலக்கியம் சார்ந்தும் எழுதி வருகிறார். ஈழம், தமிழகம், மற்றும் புலம்பெயர் ஊடகங்கள், இதழ்களில் இவரது எழுத்துக்கள் தொடர்ந்து வெளிவருகின்றன.

‘எதிர்ப்பரசியல்’, ‘அதிகாரநலனும் அரசியல் நகர்வும்’ (உலக அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு), ‘எழுதிக் கடக்கின்ற தூரம்’ (கவிதைத் தொகுப்பு), ‘கலைப்பேச்சு’ (திரை நூல் அரங்கு) என்பன இவரது படைப்புகளாகும்.

# தமிழர்களும் தேசமும்: இந்திய – இலங்கைத் தமிழர்களின் தேசிய அடையாள அரசியல் மீதான ஒப்பீட்டு ஆய்வு

**பகுதி 2**

ஈழம் சார்ந்தும் ஈழப்பிரச்சினை சார்ந்தும் ஆங்கிலத்திலும் தமிழல்லாத பிற மொழிகளிலும் பல்வேறு நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. 2009 இற்கு பின்னர் வெளியாகிய அபுனைவு நூல்களை அவற்றின் சமூக – அரசியல் முக்கியத்துவம் கருதி தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கோடு ‘திக்குகள் எட்டும்’ என்ற தொடர் வெளிவருகின்றது. இத்தொடரின் மூலம் தமிழ் சூழலுக்கு தமிழல்லாத பரப்பில் நடைபெறும் ஈழம் சார்ந்த வெளிப்பாடுகள் அறிமுகமாகும்.

இப்பகுதி ‘தமிழர்களும் தேசமும்’ எனும் மாதுரிகா இராசரத்தினம் அவர்களின் ஒப்பீட்டு ஆய்வுநூலின் நான்காவதும், ஐந்தாவதுமான அத்தியாயங்கள்மீது பார்வையைச் செலுத்துகின்றது. அவை முறையே ‘பின்சுதந்திர இந்தியாவில் தேசத்திற்குள் தமிழர்கள்’, ‘தேசத்திற்கு அப்பால்: பின்சுதந்திர இலங்கையில் சிங்களவரும் தமிழரும்’ எனும் தலைப்புகளைக் கொண்டுள்ளன.

நான்காவது அத்தியாயம் பின்கொலனித்துவ யுகத்தில் தமிழக அரசியல் இயக்கங்களின் பரிணாமங்களுக்கும், இந்தியத் தேசிய அடையாளத்திற்குமிடையிலான தொடர்பு குறித்துப் பேசுகிறது. முதலில், இந்திய அரசியலமைப்பில் உள்ளீடாகவுள்ள இந்தியத் தேசிய அடையாளம் குறித்த அம்சங்களை விளக்குகிறது. இந்திய அரசியலமைப்பு என்பது காங்கிரஸ் கொள்கையின் வெளிப்பாட்டுவடிவம் என்பதோடு, பல இனங்களின் பன்மைத்துவத்தினை ஒருங்கிணைந்த தேசிய முழுமையாக மாற்றியமைக்கும் தன்மையோடும் உருவாக்கப்பட்டது. தமிழகத்தில் திராவிட இயக்கம் மற்றும் காங்கிரஸ் இடையேயான தேர்தல் அரசியற் போட்டி; தமிழர் அடையாளம், நலன்கள் மற்றும் அரசியலமைப்பிற்கு ஊடான இந்தியத் தேசிய அடையாளம் பற்றிய புரிதலுடன் இணக்கமான கருத்தாக்கங்களின் அடிப்படையில் நடந்ததென வாதிடுகின்றது.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் (DMK) செயற்திறன்கொண்ட இயங்குநிலை, பொருளாதார நெருக்கடி மற்றும் காங்கிரசின் மீளெழுச்சிக்கு எதிரான தற்காலிக அரசியல் காரணிகள் ஆகியவற்றின் பின்னணியில் தமிழகத்தில் காங்கிரசின் தேர்தல் வீழ்ச்சி விளக்கப்படுகின்றது. இந்தியத் தேசியத்திற்குள் தமிழ் அடையாளத்தின் இணைவாக்கம் என்பது, இந்தியத் தேசியம் தொடர்பான ஓர் இனத்துவப் பன்மைத்துவப் புரிதலின் அரசியல் மேலாதிக்கமே என்று நிறுவுகிறார் நூலாசிரியர். மாறாக அந்த விளைவுக்கு அரசியலமைப்பின் கூட்டாட்சி விதிகளோ அன்றி திராவிட இயக்கங்களின் மிதவாதப்போக்கோ காரணமென்பதைவிட மேற்சொன்ன காரணமே முதன்மைப்பங்கு வகிக்கின்றது என்கிறார்.

சுதந்திரத்திற்குப் பிந்தையகாலத்தில், இந்திய அரசு தேசிய அடையாளம்சார் மறுபரிசீலனைக்கு உட்பட்டது. இந்த மறுபரிசீலனையின் முதன்மையமான இலக்கு அல்லது அடைவு புதிய இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதாகும். அரசியலமைப்பானது இந்தியத் தேசிய அடையாளம்சார் புரிதலை வெளிப்படுத்தியதோடு உறுதியும்படுத்தியது. இது இந்திய மக்களின் உள்ளக இனரீதியான பன்மைத்துவத்தினை அங்கீகரித்து, பொருளாதார மற்றும் சமூக மேம்பாடுசார்ந்து பகிர்வு அடிப்படையிலான தேசிய நலனை ஒருங்கிணைத்தது.

## ‘வேற்றுமையில் ஒற்றுமை’

இந்தியத் தேசிய அடையாளம் மற்றும் தேசிய நலன்கள்சார் புரிதல், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து காங்கிரஸின் கொள்கை மற்றும் அரசியல் வளர்ச்சியின் விளைவான ‘வேற்றுமையில் ஒற்றுமை’ எனும் கருத்தியலின்வழி எட்டப்பட்டதாகும். சுதந்திரத்திற்குப் பிந்தைய தசாப்தங்களில், காங்கிரஸின் தேர்தல் மற்றும் அரசியல் மேலாண்மையானது இனத்துவப் பன்மைத்துவத்தினையும் ஒருங்கிணைந்த தேசிய அரசியலமைப்புக் கட்டமைப்பினையும்கொண்ட இரட்டைக் கொள்கைகளோடு, பொருளாதார மேம்பாட்டுக்கான உறுதியான கட்டமைப்புகளையும் இந்திய அரசியற் களத்தின் மையமாக நிறுவியது. 1977 இல் காங்கிரஸ் தேசிய மட்டத்தில் அதிகாரத்தை இழந்தபோதிலும், அது முதன்மைப்பாத்திரம் வகித்து உருவாக்கிய அரசியலமைப்பு, தென்ஆசியாவில் பிரித்தானியக் கொலனித்துவ ஆட்சியைத்தொடர்ந்து உருவாக்கப்பட்ட அரசியலமைப்புகளில் நிலைத்தன்மையுடன் இருந்து வருகிறது.

அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள இந்தியத் தேசிய அடையாளம்சார் பிரதிபலிப்பும் புரிதலும், இந்திய அரசியல் இயக்கங்களின் முக்கிய உந்துசக்தியாக இருந்துவருகிறது.

அதாவது சமூக மற்றும் அரசியல் இயக்கங்களைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும், அதேவேளை உரிமைகளை வலியுறுத்தும் ஆதாரமாகவும் செயற்படுகின்றது. அரசியலமைப்பின் இனத்துவப் பன்மைத்துவம் குறித்த உள்வாங்கல் அம்சங்கள் சாதகமாகவும், இந்தியத் தேசிய அடையாளம்சார் அம்சங்கள் சமூக - அரசியல் இயக்கங்களின் தனித்துவ உரிமை வலியுறுத்தல்களைப் பிரிவினைவாதமாகச் சித்தரித்துத் தடைகளை விதிப்பதற்கு ஆதாரமாகவும் அமைந்துள்ளன.

## காங்கிரஸ் எதிர் திராவிட அரசியல்

ஒரு காலத்தில் பிரிவினையைக் (திராவிடநாடு, தமிழ்நாடு) கோரியதும், வெளிப்படையாக இந்திய எதிர்நிலை கொண்டுமிருந்த திராவிடர் கழகத்திலிருந்து (DK) உருவான திராவிட முன்னேற்றக் கழகம் (DMK) அரசியல் கட்சியாக வளர்ந்ததால், தமிழகத்தில் இந்தியத் தேசிய அடையாளத்தை முன்னிறுத்தி அரசியலை முன்னெடுத்த காங்கிரஸ் கட்சி சவாலுக்கு உள்ளானது. 1967 ஆம் ஆண்டில் தமிழத்தில் காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாக ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றியது திராவிட முன்னேற்றக் கழகம். எனினும் இந்த மாற்றம் இந்தியத் தேசிய அடையாளத்தின் அடிப்படைகள் மீதான மறுவரையறை அன்றியும் திராவிடக்கொள்கையின் முழுமையான மறுசீராக்கம் இன்றியும் நடந்தேறியது. திராவிட மற்றும் இந்தியத் தமிழ் அடையாளம்சார் கருதுகோள்களுக்கு இடையே போதியளவு கொள்கை ஒத்திசைவு இருந்ததால் இந்தநிலை சாத்தியமானது. ஏனெனில் தமிழகத்தில் கொள்கைரீதியான ஒத்திசைவு என்பது காங்கிரஸ் இயக்கத்தின் அரசியற் செயற்பாடுகள்மூலம் உருவாக்கப்பட்டது.

## அரசியலமைப்பு உருவாக்கத்தில் காங்கிரஸ் மேலாதிக்கம்

கொலனித்துவத்தின் இறுதிக்காலத்திலிருந்து 1977 வரை, இந்திய அரசியலமைப்பின் உருவாக்கம் மற்றும் அதன் நிலைத்தன்மையில், இந்திய அரசியற்களத்தில் காங்கிரஸ் கட்சியின் அமைப்பு, கொள்கை மற்றும் தேர்தல் அரசியல் மேலாண்மைக்கு முதன்மை வகிபாகம் உண்டு. அரசியலமைப்பின் இறுதி வரையறையை உறுதிசெய்த அரசியற்பெறுமதிகள் காங்கிரஸ் கட்சியின் அரசியற்கொள்கையைப் பிரதிபலித்தன. அதன் தேர்தல் அரசியல் பலத்தினைப் பிரதிபலிக்கும்வகையில் அரசியலமைப்புச்சபையின் விவாதங்களில் மேலாண்மையையும், செல்வாக்குச்செலுத்தும் திறனையும் அது கொண்டிருந்தது. இந்திய அரசியலமைப்பின் உருவாக்கத்தை வழிநடத்திய ஜனநாயகம், சமூகநீதி, பன்மைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு ஆகிய பெறுமானங்கள், காங்கிரஸ் கட்சியின் அரசியல் வளர்ச்சி, இந்தியத் தேசிய அடையாளம் மற்றும் நலன்களின் சட்டபூர்வப்பிரதிநிதியாக தன்னை முன்னிறுத்தப் போராடியவற்றின் விளைவுகளாக இருந்தன. அரசியலமைப்புச்சபையில் வேறுபட்ட கருத்துகள் இருந்தபோதிலும், அரசியலமைப்பின் வரைவு, காங்கிரஸ் கட்சியில் உயர்மட்ட அதிகாரம்கொண்டிருந்த சில பிரதானநபர்களால் அதிகம் கட்டுப்படுத்தப்பட்டது. நில மறுசீரமைப்பு, பொருளாதாரக்கொள்கை மற்றும் சாதி போன்ற முதன்மைப்பிரச்சினைகளில் இந்தப் பிரதானநபர்களுக்கு இடையில் அடிப்படையான வேறுபாடுகள் நிலவின. ஆனால் அவர்களின் அரசியல் செயற்பாட்டியக்கம் மாநில மட்டத்தில் அல்லாமல், பரந்த இந்திய மட்டத்தில் இருந்தது. மேலும் அவர்கள் அனைவரும் தேசிய ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்தல், பொருளாதார மேம்பாடு, மற்றும் சமூக மாற்றத்தின் செயல்முறைகளை வழிநடத்தும் திறன்கொண்ட வலுவான மையப்படுத்தப்பட்ட மாநிலத்தின் தேவை ஆகியவற்றை ஒப்புக்கொண்டனர்.

இந்திய அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்பு உருவாக்கச் செயல்முறை இந்தியச்சமூகத்தின் இனத்துவப் பன்மைத்துவத்தினை அங்கீகரிப்பதற்குரிய அதிகாரபூர்வ வரைபை உருவாக்கியது. அந்த வரைபு இந்திய ஒருமைப்பாட்டினைப் பாதுகாப்பதற்கும், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கும், இந்தியத் தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கான பரந்த இலக்குகளுடன் இனப்பன்மைத்துவத்தினைப் பேணுவதற்கும் அவசியமானவற்றை முன்னெடுத்தது. அரசியலமைப்புச்சபை விவாதங்களின்போது, கொலனித்துவ எதிர்ப்புப் போராட்டங்களின்போது நிகழ்ந்ததுபோலவே, ஒருமைப்பாட்டின் அவசியம், இனத்துவ - சமூகப்பன்மைத்துத்தின் பிளவுகளுக்கும் கோரிக்கைகளுக்கும் எதிராக அதிகம் ஒப்பிடப்பட்டது.

## தேசியமொழி விவாதங்களும் சர்ச்சைகளும்

இந்தியத் தேசிய முழுமையில், இனத்துவப் பன்மைத்துவத்தினை எவ்வாறு இணைவாக்கம் செய்யவேண்டுமென்பதில் இருவேறு எதிர்நிலைக் கருத்துகள் நிலவின. முதலில் தேசியமொழி குறித்த விவாதங்களின்போது, இந்துத் தேசியவாதிகளின் கருத்துகள் வலுவாக வெளிப்பட்டன. இந்துத் தேசியவாதிகள் சமஸ்கிருதமயப்பட்ட ஹிந்தியின் ஆதிக்கத்தினை நாடுமுழுவதும் உறுதிப்படுத்த முயன்றனர். உருது மற்றும் அரபு எழுத்துகளை நீக்கி,

சமஸ்கிருதமயமான ஹிந்தியை வலியுறுத்தியதோடு, தென்இந்தியத் தேசிய இனங்கள் ஹிந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தினர். இத்தகு இனத்துவக் கரைத்தல் திட்டத்திற்கு (Ethnically assimilation project) மாறாக, தென்இந்தியத் தேசிய இனங்கள், முஸ்லீம்கள் மற்றும் பிற இனத்துவச் சிறுபான்மையினர் உட்பட்ட தரப்புகளோடு, பன்மைத்துவ இனக்குழுக்களுக்கிடையிலான அரசியல் உறவினை எதிர்மறையற்ற அணுகுமுறையில் பேணும் நோக்குடன் 'வேற்றுமையில் ஒற்றுமை' எனும் எண்ணக்கருவினைக் காங்கிரஸ் தலைமை ஆதரித்தது. இந்தியத் தேசியத்தின் 'வேற்றுமையில் ஒற்றுமை' எனும் கருத்தாக்கம், அரசியல் முழுமையாக இருப்பினும் இனப் பன்மைத்துவத்தால் அடையாளப்பட்டதாகும்.

## சாதி, மதம்

சாதி மற்றும் மதக் குழுக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மிகவும் சர்ச்சையான பிரச்சினைகளுள் ஒன்றாக இருந்தது. மதரீதியிலான குழுக்களுக்கு தனித்த தேர்தல்தொகுதி கொலனித்துவகாலத்தில் நடைமுறையில் இருந்தது. அந்நடைமுறை தேசிய ஒருமைப்பாட்டைப் பாதிக்கின்றது என்ற காரணம் முன்வைக்கப்பட்டு, அரசியலமைப்புச்சபை, கொலனித்துவ நடைமுறையைக் கைவிட்டது. இருப்பினும், தலித் மற்றும் பழங்குடிக் குழுக்களுக்கு (Scheduled Castes - SC, & Tribes - ST) சிறப்புப் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைத்தது. அவை பட்டியற் சமூகங்கள் மற்றும் பழங்குடிகள் என்று அழைக்கப்பட்டன. பல தொகுதிகள் ஒதுக்கப்பட்ட சமூகங்களின் தொகுதிகளாகக் குறிக்கப்பட்டன; இவற்றில் SC மற்றும் ST வேட்பாளர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட முடியும். மேலும், SC மற்றும் ST குழுக்களுக்கு பொதுத்துறை வேலைவாய்ப்புகள் மற்றும் உயர்கல்வியில் இடஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டன. இந்த இரு நடவடிக்கைகளும் இச்சமூகங்களின் பின்தங்கிய நிலையை மேம்படுத்தும் வழிமுறையாகக் குறுகிய காலத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன. மதக் குழுக்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் தேசிய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகமானது என்று நிராகரிக்கப்பட்டபோதிலும், இந்தியாவின் மதப்பன்முகத்தன்மையைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் அரசியலமைப்பு முயன்றது. மதச்சுதந்திரம் அடிப்படை உரிமை என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அத்தோடு கல்வி மற்றும் யாத்திரை போன்ற மத நடவடிக்கைகளுக்கு பொதுமானியங்கள் வழங்கப்பட்டன. உதாரணமாக 'ஹஜ்' மேற்கொள்ளும் முஸ்லிம்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன.

## ஒரு தேசிய அல்லது அதிகாரப்பூர்வ மொழி வரையறை

மேலும் இந்த அத்தியாயத்தில், இந்தியாவின் மொழிசார் பன்முகத்தன்மை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டைச் சமரசம் செய்வதற்கான இரண்டு முக்கிய பிரச்சினைகள் விவரிக்கப்படுகின்றன. ஒரு தேசிய அல்லது அதிகாரபூர்வமொழியை வரையறுக்கவேண்டிய அவசியம் மற்றும் தேசியமற்றதும் அதிகாரபூர்வமற்றதுமான மொழிகளுக்கு (Nonnational and nonofficial languages) வழங்கப்படும் அரசியல் அந்தஸ்து (Political Status) என்பன முதலாவது அம்சமாகும். இரண்டாவது பிரச்சினை, இந்தியாவின் மாகாண எல்லைகளின் மொழி மறுசீரமைப்புப் பற்றியது. மொழி தொடர்பான கேள்விகள், மீண்டும் இந்துத் தேசியவாதிகளுக்கும் மற்றும் இந்திய அடையாளத்தின் பன்முகத்தன்மையை 'வேற்றுமையில் ஒற்றுமை' எனும் கருத்தியலாக வலியுறுத்திவந்த தரப்பினருக்கும் இடையிலான துருவமயப்பட்ட விவாதமாகியது.

காங்கிரசிற்குள் இருந்த இந்துத் தேசியவாதிகள் ஆங்கிலம் மற்றும் பிற இந்திய மொழிகளுக்கு மாறாக சமஸ்கிருதமயப்படுத்தப்பட்ட இந்தி (Sanskritised Hindi) மொழிக்கு அதிகாரப்பூர்வ - தேசிய அந்தஸ்தினைக் கோரினர். பன்முகத்தன்மை அணுகுமுறையை ஆதரித்த நேரு (Jawaharlal Nehru) உட்பட்ட தலைவர்கள் மற்றும் அரசியலமைப்பு உருவாக்கச் செயல்முறையில் முதன்மைப்பாத்திரம் வகித்த பெரும்பான்மையினர், ஆங்கிலத்திலிருந்து இந்துஸ்தானி மொழிக்கான (A longterm switch from English to Hindustani, understood very much as composite of its Persian and Sanskrit roots) நகர்வை ஒரு நீண்டகால அடிப்படையிலாக திட்டமாக முன்வைத்தனர். நேரு மற்றும் பெரும்பாலான தென்னிந்தியப் பிரதிநிதிகள் ஆங்கிலத்தை

மாநிலமொழியாகத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு ஆதரவாக இருந்தனர். தென்னிந்தியர்கள் இந்துஸ்தானி/ இந்தி கற்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதையும் அவர்கள் விரும்பவில்லை. காங்கிரசின் பன்முகத்தன்மைக் கொள்கைக்கு ஏற்ப மொழி தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்பட்டமை இந்த அத்தியாயத்தில் விவரிக்கப்படுகின்றது. இந்திக்கு உணர்ச்சிமயமான தேசியமொழி என்ற நிலை இல்லாமல் அதிகாரபூர்வமொழி என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டமை குறித்த தகவல்களும் இடம்பெறுகின்றன.

## சட்டமன்ற ஏற்பு மொழிகள்: தமிழ் உட்பட்ட 13 பிராந்திய மொழிகள்

*1965* வரையான *15* ஆண்டுகளுக்கு, அதிகாரபூர்வ நோக்கங்களுக்காக, படிப்படியாக இந்திக்கு மாறும்வரை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரபூர்வ மொழியாக ஆங்கிலம் தக்கவைக்கப்பட்டது. அரசியலமைப்பினால், தமிழ் உட்பட்ட *13* பிராந்திய மொழிகளும், மாநில மற்றும் சட்டமன்ற ஏற்புமொழிகளாகப் பட்டியலிடப்பட்டது. பிராந்திய மொழிகளுக்கு இத்தகு அந்தஸ்து வழங்கியமைக்கு உளவியல் காரணம் முதன்மையாக இருந்ததாக அரசியலமைப்பில் மொழிவிதிகளை உருவாக்க உதவிய துர்காபி தேஷ்முக் குறிப்பிட்டதாகக் கூறப்படுகின்றது. மொழிகளை அரசியலமைப்பில் முறையாகப் பட்டியலிடுவது, புதிய இந்தியாவில் அவற்றிற்கான உரிய இடத்தை உறுதிப்படுத்தும் என்று நேரு பரிந்துரைத்ததாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்திய மாநிலங்களின் மொழிமறுசீரமைப்பு வரலாறு இந்த அத்தியாயத்தில் விரிவாக முன்வைக்கப்படுகின்றது. மொழிசார் கொள்கையும், நடைமுறையும் ஜனநாயகச் சுயாட்சிக்கான அடிப்படைத்தேவையாகக் கருதப்பட்டது. *1928* இல், 'நேரு அறிக்கை', இந்தியாவை மொழிவாரி மாகாணங்களாகப் பிரிக்கப் பரிந்துரைத்தது. ஆனால் அந்தப் பரிந்துரை *1940* களின் இறுதியில் இந்தியத் தேசியக் காங்கிரசால் எதிர்க்கப்பட்டதோடு, உடனடி மறுசீரமைப்பைத் தவிர்க்க ஆணைக்குழுக்களும் அமைக்கப்பட்டன.

தெலுங்குபேசும் பகுதிகளில் நடைபெற்ற பெருமளவிலான போராட்டங்களைத் தொடர்ந்து மொழிமறுசீரமைப்புச் செயல்முறை *1953* இல் நேருவால் தொடங்கப்பட்டது. தெலுங்குபேசும் மக்களுக்கான ஆந்திரப்பிரதேச மாநிலத்தை உருவாக்கவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது (தெலுங்கானாப் போராட்டம்: *1946-1951*). இந்த இயக்கமே இந்தியா முழுவதும் புதிய மாநிலங்களை உருவாக்கும் ஒரு பரந்த அளவிலான மொழிமறுசீரமைப்பின் செயல்முறைக்குரிய தூண்டுதலாக அமைந்தது. தொடர்ச்சியாக *1967* இல் மதராஸ் என்று வழங்கிவந்த தமிழ்பேசும் மாநிலம் தமிழ்நாடு என்று பெயரிடப்பட்டது.

## மொழி அடையாளவெளி - பிராந்தியத் தேசிய அடையாள எழுச்சி

இருந்தபோதும் இங்கு புரிந்துகொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சம் யாதெனில் இந்திய அரசியலமைப்பு மாநில மொழி அடையாளங்களை முழுமையாக நிலைநிறுத்தும் பொருட்டு அதற்கான வெளிகளோடு வடிவமைக்கப்பட்ட ஒன்று அல்ல. அது வலுவான மைய அரசைப் பேணும்பொருட்டு வடிவமைக்கப்பட்டது. இதனால் மாநிலங்களின் எல்லைகளை மத்திய அரசு மாற்ற முடிந்தது. இனரீதியான பன்முகத்தன்மையின் அரசியல் அங்கீகாரம் முன்னேற்றத்தின் ஒரு வழியாகக் கருதப்பட்டது. ஆனால் மொழிரீதியான பன்முகத்தன்மை பாகுபடுத்தும் எனக் கருதப்பட்டால், அது எதிர்க்கப்பட்டது. இந்தியத் தேசியத்தின் இந்தப்போக்கும் கருத்தியலும், குறிப்பாக தமிழ்நாட்டில் பிராந்தியத் தேசிய அடையாளத்தின் எழுச்சிக்கு வழிவகுத்தது.

மேலும் இந்த அத்தியாயத்தில், தமிழ் அடையாளம், காங்கிரஸ் கட்சி மற்றும் திராவிடக் கொள்கை ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு ஆகியனவும் ஆராயப்படுகின்றது. அந்த ஆய்வு, இந்த இரண்டு இயக்கங்களும் காலப்போக்கில் எவ்வாறு மேலெழுந்தன என்ற நோக்குநிலையிலிருந்து எழுதப்படுகின்றது. திராவிடர் கழகம் பிரதிநிதித்துவப்படுத்திய திராவிடக்கொள்கை என்பது, இந்துத்துவ சித்தாந்தங்கள், சடங்கு நிராகரிப்புகளை வலியுறுத்தியது; முற்போக்குமிக்கதும், மதச்சார்பற்றதுமான நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகளை மேம்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தியது. மேலும் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாடுகளையும் வலியுறுத்தியது.

திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்ப்பண்பாடு, கலை, இலக்கிய மேம்பாடு மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களின் நலன்களை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியது. அத்தோடு தமிழ் - தமிழர் நலன்களை அடைவதற்கான ஒரு படிக்கல்லாக அது இந்தியச் சுதந்திரத்தினைக் கருதியது. 1960 களில், திராவிட முன்னேற்றக் கழகம், சமூக சீர்திருத்தத்திலிருந்து தமிழ் மக்களின் பொருளாதார நலனை வலியுறுத்தும்வகையில், தேர்தல் பிரசாரத்தின் முதன்மைப் பொருளை மாற்றியது. மேலும் தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்குப் பொதுத்துறையில் இடஒதுக்கீடுகளையும் விரிவுபடுத்தியது.

இந்த அத்தியாயம், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வீழ்ச்சி, திராவிடக் கட்சிகளின் எழுச்சி, அவற்றின் அரசியல் இயக்கம் மற்றும் தேர்தல் அரசியல் பங்கேற்பினால் ஏற்பட்ட மாற்றங்கள் தேர்தல் முடிவுகளை எவ்வாறு பாதித்துள்ளன என்பதையும் ஆராய்கிறது. 1967 இல் தமிழகத்தில் காங்கிரஸ் அதிகாரத்தை இழந்தது. சித்தாந்த, கருத்தியல் முரண்பாடுகள் மட்டுமின்றி, பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் உள்ளகப் பிளவுகளும் காங்கிரசின் பின்னடைவுக்குக் காரணங்களாயின. இது தேசிய அளவில் கட்சியின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய தசாப்தங்களில் திமுகவின் தேர்தல் வெற்றி என்பது அதிகரித்த தேர்தல் பங்கேற்பின் விரிவாக்கத்துடன் தொடர்புடையது; குறிப்பாக இடைநிலை அல்லது தாழ்த்தப்பட்ட சமூகக் குழுக்களின் (Intermediate/ backward class) தேர்தல் பங்கேற்புடன் தொடர்புடையது. அதிலும் குறிப்பாக காங்கிரஸின் ஆதரவுத்தளங்களுக்கு வெளியே இருந்த சமூகங்களை திமுக உள்வாங்கிக்கொண்டது. இடைநிலை மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகக்குழுக்கள் மத்தியிலான அரசியல் பங்கேற்பின் விரிவாக்கம் தமிழகத் தேர்தல் இயக்கவியல் முறைமையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு வழிகோலியது. 1957 - 1967 காலப்பகுதியில் வாக்காளர் பங்கேற்பு, 49 சதவீதத்திலிருந்து 67 சதவீதமாக அதிகரித்தது. அதேநேரத்தில் தனிப்பட்ட நம்பகத்தன்மை மற்றும் செல்வாக்குகள் சார்ந்த வலையமைப்புகளை நம்பியிருந்த சுயாதீன வேட்பாளர்களால் பெறப்பட்ட வாக்குகளின் விகிதம் 25 வீதத்திலிருந்து 7 வீதமாகக் குறைவடைந்தது. இந்த மாற்றத்தின் விளைவாக அதேகாலப்பகுதியில் காங்கிரஸ் வாக்குகள் 45 வீதத்திலிருந்து 41 வீதமாகக் குறைவடைந்தது. திமுக ஆதரவு அதேகாலகட்டத்தில் 13 வீதத்திலிருந்து 41 சதவீதமாக உயர்ந்தது. உண்மையில், திமுகவின் வாக்கு விரிவாக்கம் என்பது, ஒருபுறம் காங்கிரஸ் வாக்காளர்களில் ஒரு பகுதியினரை ஈர்த்தமை, சுயாதீன வேட்பாளர்களின் வாக்குகளை வசப்படுத்தியமை மற்றும் வாக்காளர் பங்கேற்பை அதிகரிக்கவைத்தமை ஆகிய மூன்று விளைவுகளின் அறுவடை.

## தமிழ்க் கலாசாரத் தேசியவாதம்

திராவிடக்கட்சிகள் நேரடி அரசியல் பரப்புரைகள்மூலம் ஆதரவை அதிகரிக்கும் வகையில் திறமையாக இயங்கின. புதிய வாக்காளர்களை உள்வாங்குவதிலும் வெற்றி கண்டது. காங்கிரசின் பாரம்பரிய ஆதரவு வலையமைப்புகளுக்கு மாறாக, புதிய மக்கள் குழுக்களை உள்வாங்கியமை திமுகவின் வெற்றிக்கும் வளர்ச்சிக்குமான காரணியாகும். தொடர்ச்சியாக இந்த அத்தியாயம், தமிழ்த் தேசியவாதத்தின் வகிபாகம் மற்றும் தமிழக அரசியல் மாற்றங்களை ஆராய்கிறது. குறிப்பாக திமுக மற்றும் திமுக சார்ந்த நிகழ்வுகளை முன்வைக்கின்றது. சமூகச் சீர்திருத்தத்திலிருந்து தமிழ்க் கலாசார தேசியவாதத்தின்மீது திமுக கவனத்தினைத் திருப்பியது. இம்மாற்றம் அரசியல் கூட்டணிகள் மற்றும் தேர்தல் முடிவுகளை எவ்வாறு பாதித்தது என்பதையும் இந்த அத்தியாயம் பேசுகின்றது.

சமூகச் சீர்திருத்தப்பாதையை விட்டுவிலகி தமிழ்க் கலாசார தேசியவாதத்தின்மீது கவனம் செலுத்தும் திமுகவின் முடிவு, இந்திய அரசியலமைப்பிற்குச் சாதகமான ஒரு மூலோபாயத்தழுவல் ஆகும். இது மத உரிமைகள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கு முன்னுரிமை அளித்தது. 1963 இல் திமுக 'திராவிடநாடு' கோரிக்கையைக் கைவிட்டமையும் இக்கொள்கையின் பாற்பட்டது. அந்த அடிப்படையில் தமிழக அரசியல் வளர்ச்சி, பிரிவினைவாதக் கோரிக்கைகளிலிருந்து இந்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட ஓர் ஏற்றுக்கொள்ளக்கூடிய

வடிவமான கலாசாரத் தேசியவாதத்திற்கான மாற்றுப்பாதையாக வடிவம் பெற்றமை பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. இம்மாற்றம், தனிநாட்டுக் கோரிக்கையிலிருந்து விலகி, தமிழ்நாட்டிற்கு கூடுதல் மாநில தன்னாட்சியைக் கோரியது. தமிழ்மொழி மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது. அதேசமயம் இந்திய ஒன்றியத்தின் ஒருமைப்பாட்டினைப் பேணும் அணுகுமுறையையும் கொள்கைரீதியாக வெளிப்படுத்தியது. 1972 இல் தொடங்கப்பட்ட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், 1976 இல், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனப் பெயர்மாற்றம் செய்துகொண்டது. இது இந்திய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளும் ஒரு சமிக்ஞை.

## இந்தியத் தேசியத்திற்குள் தமிழர் நலன் - இலங்கைத் தேசியத்திற்கு அப்பால் ஈழத்தமிழ்த் தேசியம்

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அனைத்து இந்திய முன்னொட்டினை ஏற்றுக்கொண்டபோது, இலங்கையின் முதன்மைத் தமிழ்க் கட்சியான தமிழரசுக் கட்சி, கூட்டாட்சிக்கான முப்பதாண்டுகளுக்கு மேலான கோரிக்கையை விட்டுவிலகி, முழுமையான சுதந்திரம் அல்லது தனிநாட்டினை (பிரிவினையை) ஆதரித்தது. பிரிவினைகோரிய திராவிட இயக்கங்களின் இந்திய அரசியலமைப்புச்சார்ந்த மென்முறை அணுகுமுறை என்பது, தமிழ் அடையாளம் மற்றும் நலன்கள் சார்ந்த திராவிட மற்றும் இந்திய தேசியவாத கருத்துகளின் கூட்டுவிளைவாகும் என இந்த அத்தியாயம் வாதிடுகின்றது. இது, திராவிடக் கட்சிகள் மற்றும் காங்கிரஸ் ஆகியன அரசியல் விரோதிகள் என்பதைவிட, அரசியல் போட்டியாளர்கள் என்பதைக் குறிக்கின்றது. தமிழ்மொழி மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துவதோடு, பொருளாதார வளர்ச்சி, சமூகச் சீர்திருத்தம் மற்றும் நலன்கள் வழங்கல் ஆகியவற்றில் தமிழ் நலன்களைப் பாதுகாப்பது போன்றவை நெறிமுறைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பகிர்வுசார் அரசியல் பண்பாட்டுத்தளத்தில், திராவிடக் கட்சிகளும் தமிழ்நாடுக் காங்கிரஸ் கட்சியும் போட்டியிட்டன. மேலும், இந்தப் பகிர்வுசார் நெறிமுறைகள், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கிய பரந்த இனத்துவத்தளத்தை உருவாக்குவதற்கான காங்கிரஸின் அரசியல் போராட்டத்தின்மூலம் உருவான, இந்தியத் தேசிய அடையாளம் மற்றும் தேசிய நலன்களின் அரசியலமைப்பு வரையறைகளுக்கு இணக்கமானவை.

## அப்பாலான தேசங்கள்: பின்சுதந்திர இலங்கையில் சிங்களவரும் தமிழரும்

தேசத்திற்கு அப்பால் எனும் தலைப்பிலமைந்த இந்த நூலின் 5 ஆவது அத்தியாயம் பின்சுதந்திர இலங்கைத்தீவில், தமிழர் - சிங்களவர்களுக்கிடையேயான இனமுரண்பாட்டினை ஆராய்கின்றது. முரண்நிலைத் தேசிய அடையாளங்கள் மற்றும் நலன்கள் எவ்வாறு இனமோதலுக்கு வழிவகுத்துள்ளன என்பதைக் கவனப்படுத்துகின்றது. சிங்கள - பௌத்த அடையாளத்திற்கும் தமிழ்த் தேசிய அடையாளத்திற்குமிடையில் தெளிவான முரண்பாடுகள் உள்ளன. இம்முரண்பாடுகள் சமத்துவமும் தன்னாட்சியும் கோரிய போராட்டத்திற்குத் தமிழர்களை உந்தித்தள்ளியது. அதேவேளை சிங்களக் கட்சிகள், ஒன்றுபட்ட இலங்கையை வலியுறுத்திவந்துள்ளன.

1977 இற்குப் பின் இலங்கையின் அரசியல் களமும் கட்டமைப்பும் பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தின் செல்லாக்கிற்கு உட்பட்டதாக ஆக்கப்பட்டது. இது தமிழர்களின் நலன்கள் மற்றும் தன்னாட்சிக் கோரிக்கைகளைக் கட்டமைப்பியல்ரீதியாக ஒடுக்கவும் வழிகோலியது. பௌத்த - சிங்கள அடையாளங்களும், தமிழ்த் தேசிய அடையாளங்களும் இனரீதியாக இரண்டு தரப்பின் அரசியல் நடவடிக்கைகளை எவ்வாறு வடிவமைத்தன, மோதல்களுக்கு எவ்வாறு வழிகோலின என்பதையும் இந்த அத்தியாயம் பேசுகின்றது.

இரு தரப்பு அடையாளங்களும் இருதரப்பு அரசியல் நடவடிக்கைகளுக்கான வலுவானதும் மேலாண்மைமிக்கதுமான வகிபாகத்தினைக் கொண்டிருக்கின்றன. அவை இருதரப்பிலும் சாதிய, பிராந்திய மற்றும் மதம் போன்ற உட்பிரிவுகள்சார் செல்வாக்கினையும்




Image Source - www.dmk.in

கொண்டிருந்தன. UNP மற்றும் SLFP இடையேயான அரசியல் போட்டியானது பௌத்த - சிங்களத் தேசியவாதத்தை ஒருங்கிணைப்பதிலும் முக்கியபங்கு வகித்திருக்கின்றது.

சிங்கள - பௌத்தவாதத்தின் மேலாண்மை இரண்டு கட்டங்களாக ஒருங்கிணைக்கப்பட்டன: 1947 முதல் 1956 வரை UNP ஆட்சிக்காலம், மற்றும் 1956 முதல் 1977 வரை மாறிமாறி UNP மற்றும் SLFP ஆட்சிசெய்த காலம். முதற்கட்டம் பௌத்த - சிங்கள தேசிய அடையாளம் மற்றும் பல்லினக்கட்டமைப்பின் இடையே ஒரு நிச்சயமற்ற இணக்கத்துடன் இருந்தது. இரண்டாவது கட்டத்தில் தமிழர்களின் அரசியல் கோரிக்கைகள் வலுவடைந்ததை அடுத்து, பௌத்த - சிங்களத் தேசியவாதம் அரசினது முக்கிய அம்சமாக மாறியது. இரண்டாவது கட்டம், தமிழ் - சிங்கள மோதலின் கூர்மையடைந்த சமகாலத்தில், தமிழ் அரசியல் கோரிக்கைகள் வலுவாக முன்வைக்கப்பட்ட புறச்சூழலில் நிகழ்ந்தது.

## இலங்கைத்தீவின் அரசியல் போக்கினை வடிவமைத்த கொள்கை

1977 வாக்கில் தேசிய நலன் மற்றும் தேசிய அடையாளம் ஆகிய இரண்டு ஒன்றோடொன்று பொருந்தாத கருத்துநிலைகள், இலங்கைத்தீவின் அரசியல் போக்கினை வடிவமைத்த கொள்கையாக உறுதியாக நிலைநிறுத்தப்பட்டது; சிங்கள - பௌத்த நிலைப்பாடு அரசியல் கட்சிகள் மற்றும் அரசின் நடவடிக்கைகளின் வாயிலாக ஆதரிக்கப்பட்டது. தமிழர்நிலைப்பட்ட பார்வை, அரசின் நிகழ்ச்சிநிரலுக்கு எதிரானவகையில், தமிழ் அரசியல் கட்சிகளாலும், பிற்பட்டகாலத்தில் ஆயுத இயக்கங்களின் மூலமாகவும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. இந்த இரண்டு மாறுபட்ட பார்வைகளின் அரசியல் கூர்மையடைந்தமையை இனரீதியான மக்கள்தொகை, குறுகியகால நலன்கள், உந்துதல்கள் போன்ற நிலையான காரணிகளால் மட்டுமே விளக்கமுடியாது. மாறாக, இந்த முரண்பாடுகள் கூர்மையடைந்ததற்கு, 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு பரந்த இனத்துவக் கருத்தியலை உருவாக்குவதற்கான பேண்தகு அரசியல் முன்னெடுப்புகள் பற்றாக்குறையாக இருந்தமையே அல்லது முழுமையாக இல்லாமையே அடிப்படைக்காரணி என்கிறார் நூலாசிரியர். இதனால், தீவின் இனத்துவப் பன்முகத்தன்மை, ஒருங்கிணைந்த தேசிய அடையாளம் மற்றும் நலன்களுடன் எவ்வாறு பொருந்தும் என்பதற்கான புரிதலின்றி முரண்பாடுகள் தோன்றின என்கிறார்.

## அரசினை மையமயமாக்கலும் சிங்களத் தேசியமயமாக்கலும்

இந்த மோதலின் அதிகரிப்பு அரசியல் தலைவர்களின் தீவிர அல்லது மிதவாதப்போக்கின் விளைவு மட்டுமல்ல, மாறாக அவர்களின் தேசிய நிலைப்பாட்டு வரையறையின் தர்க்கம் மற்றும் வெற்றியுமாகும். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, சிங்களத் தேசியவாத முதலீட்டுத்தளத்தில் தனது கட்சியை (SLFP) அதிகாரத்திற்குக் கொண்டுவந்ததை அடுத்து, தமிழர் கட்சிகளுடன் ஓர் உடன்பாட்டினை எட்டுவதற்கு முயன்றார். ஆனால், சிங்கள பௌத்தவாதத்தால் உருவாக்கப்பட்ட எதிர்ப்பிற்கு முகம்கொடுக்கவும் நேர்ந்தது. 1965 இல், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் தமிழரசுக் கட்சி முன்வைத்த பிராந்தியத் தன்னாட்சி மற்றும்



Image Source - thuppahis.com

மொழி உரிமைகளுக்கான கோரிக்கைகளை நிறைவேற்ற முயன்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியி (எதிர்க்கட்சி) இதனைக் கடுமையாக எதிர்த்தது. இலங்கை அரசு மையமயமாக்கலுக்கும் (துருவமயமாக்கல்), சிங்களத் தேசியமயமாக்கலுக்கும் (*Centralization and Sinhala nationalization of the Sri Lankan state*) உட்படுவதைத் தடுக்கத் தவறியமை, இலங்கைத்தீவின் இனமுரண்பாட்டினை மேலும் கூர்மையடையச் செய்தது.

இறுதியாக, 1977 தேர்தல் அறிக்கையில் தமிழீழத் தனிநாட்டினை தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) கோரியபோதிலும், தமிழ்ப்பிரதேசங்களுக்கு வரையறுக்கப்பட்ட தன்னாட்சியுடனான (*District Development Councils*) மாவட்ட மேம்பாட்டுக் கவுன்சில்கள் தொடர்பான முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐ.தே.க தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் அந்த உடன்படிக்கை எட்டப்பட்டது. இந்த முயற்சி, அமைச்சரவையில் கிளம்பிய எதிர்ப்பு, ஜெயவர்த்தனவின் இரட்டைநிலை, தமிழ்ப் போராட்ட இயக்கங்களுக்கும் இராணுவத்திற்குமிடையேயான மோதல்கள், 1983 ஆம் ஆண்டின் தமிழர் எதிர்ப்பு வன்முறைகள் ஆகிய பல்வேறு காரணிகளின் பின்னணியில் தடுக்கப்பட்டது. சிங்கள - பௌத்த அடுக்குநிலை ஒழுங்கு (*Hierarchical order*) மற்றும் சம உரிமை தொடர்பான தமிழர்களின் கோரிக்கை ஆகியவற்றுக்கு இடையிலான பாரிய இடைவெளி முரண்பாட்டின் தீர்க்கமுடியாத அம்சமாக இருந்து வந்துள்ளது.

இந்நூலின் அடுத்த பகுதியின் மூன்று அத்தியாயங்கள், 1980 களின் ஆரம்பத்தில் இலங்கைத்தீவின் இனமுரண்பாடு வேகமாகக் கூர்மையடைந்த புறச்சூழல்களிலிருந்து, முழுமையான உள்நாட்டுப் போராக அது உருவெடுத்தமை, அதன் சர்வதேசமயமாக்கல் ஆகியன குறித்து ஆராய்கின்றது. ஜெயவர்த்தன அரசாங்கத்தின் மேற்கு ஆதரவு, நவதாராளவாத மறுசீரமைப்புகளை ஏற்றுக்கொண்டது. கொம்யூனிச எதிர்ப்புடன் தமிழ் ஆயுத இயக்கங்களுக்குப் பயங்கரவாத முத்திரை குத்தும் இலங்கை அரசின் பிரசாரங்களுக்கான வலுவான சர்வதேச ஆதரவும் எட்டப்பட்டது. இலங்கையுடனான மேற்கின் செல்வாக்கும் உறவுகளும் டெல்லிக்கு உவப்பானதாக இருக்கவில்லை. இலங்கைக்குள் மேற்கின் உள்நுழைவு, இந்தியாவின் செல்வாக்கிற்கும் வகிபாகத்திற்குமான அச்சுறுத்தலாக இந்தியாவினால் பார்க்கப்பட்டது. இது 1980 களின் நடுப்பகுதியில் இந்தியத்தலையீட்டுக்கு வழிகோலியது.

நூலின் இரண்டாம் பகுதி இந்நிகழ்வுகளை விவரிக்கிறது. அத்தோடு சர்வதேசத் தலையீடுகள் அவற்றின் இலக்குகளை அடையத் தவறியதற்கான காரணங்களையும் விளக்குகிறது. மேற்கத்திய நவதாராளவாதக் கொள்கை இலக்குகளுடனான உள்நுழைவும், செல்வாக்கும், இந்தியாவின் பிராந்திய வகிபாக முதன்மை, இவற்றுக்கு நடுவில் உள்நாட்டுப்போரின் தீவிரமடைவு, சிறிலங்கா அரசு அதன் சிங்கள - பௌத்தவாதக் குணாம்சங்களை வலுப்படுத்தியமை, தமிழர் தேசிய இயங்குதளம் ஆயுதப் போராட்டமயப்பட்டதாகக் கூர்மையடைந்தமை எனவான பேசுபொருட்களை அலசுகின்றது அடுத்த பகுதி.

வின்சென்ட் போல் சந்தியாப்பிள்ளை



வின்சென்ட் போல் சந்தியாப்பிள்ளை (B.Sc., M.A, M.Phil) அவர்கள், 1966 இல், யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் உள்ள ஊறணி எனும் இடத்தில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை இளவாலை என்றியரசர் கல்லூரியில் பயின்றார். உயர்கல்வியை பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் கற்றார். கனடாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நடத்திய தமிழியல் பட்டப்படிப்பில், 5 6 ஆண்டுகள் தமிழர் மெய்யியல், நாட்டார் வழக்காற்றியல், இலக்கியத் திறனாய்வு போன்ற பாடங்களைக் கற்பித்திருக்கிறார். கல்லூரிக் காலத்தில் நாத்திகம், மார்க்ஸிசம் போன்ற கருத்தியல்களில் ஈடுபாடு காட்டிவந்தார். பின்னர் கற்கைப் புலத்தினூடாக மெய்யியல், தத்துவம் என்பவற்றில் ஆர்வம் செலுத்தினார். தற்போது சோதிடம், ஹோமியோபதி, தமிழ்மொழி போன்றன தொடர்பாகக் கவனம் செலுத்தி வருகிறார்.

# அரைகுறை மனித உரிமை நடவடிக்கைகள்: போருக்குப் பிந்தையகாலத்தில் பொறுப்புக்கூறலைத் தவிர்த்தல் – இலங்கை

**பகுதி 1**

ஈழத்தில் ஆயுதப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. பல தலைமுறைகளின் வாழ்க்கையை மாற்றியமைத்த போர், அதன் இறுதி இனப்படுகொலையுடன் மட்டுமே முடிந்துவிடவில்லை; மாறாக, போரின் பின்னரான ஈழச் சூழலில், அதன் பின்னடைவுகளும் அடிப்படைச் சிக்கல்களும் இன்னும் பல கோணங்களில் மேற்கிளம்பவே செய்கின்றன. இந்தப் பின்னணியில், போரின் பின்னரான ஈழத்து நிலவரம் குறித்து அலசுவதற்கு புதிய வெளிகள் தேவைப்படுகின்றன. ஆய்வுக் கட்டுரைகள், கள ஆய்வுகள் ஊடான தரவுகளுடன் போருக்குப் பிந்தைய ஈழச் சூழல் குறித்த விவரங்களையும் அதன் நீண்டகால விளைவுகளையும் விவாதிக்க கூடிய சிறந்த தளமாக இருக்கின்றன. ஆனால், அவை துரதிஷ்டவசமாக வெகுஜனத் தளத்தில் அதிகமாகக் கவனம் பெறவில்லை. அந்த வகையில், ஈழத்தின் பின் – போர்க்காலச் சூழல் குறித்து ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்த்து வெளிவருவதாக ‘பின் – போர்க்கால ஆய்வுகள்’ எனும் இத் தொடர் அமைகிறது.

*ஆங்கிலமூலம்: கேட் குரோனின் – ஃபர்மான்*
*தமிழில்: வின்சென்ட் போல் சந்தியாப்பிள்ளை*

## சுருக்கம்

அடக்குமுறை அரசுகள் எதற்காக மனித உரிமை நிறுவனங்களை உருவாக்குகின்றன? தங்களுடைய பணத்தையும் மூலதனத்தையும் செலவழித்து, சர்வதேச விமர்சனங்களை அமைதிப்படுத்தத் தவறுகின்ற அமைப்புகளை ஏன் உருவாக்குகின்றன? ஐயத்துக்குரியவகையில் மனித உரிமை நடத்தையில் ஈடுபடும் இப்படியான அரசுகள் தாராளவாத மேற்கத்திய அரசுகளையும் சர்வதேச ஆதரவாளர்களையும் திருப்திப்படுத்த அல்லது ஏமாற்றுவதற்காக இப்படிச் செய்கின்றன என ஆய்வுகள் கருதுகின்றன. மேற்கத்திய நாடுகளில் மனித உரிமைகளை முன்னெடுத்து ஆதரிப்பவர்களை நோக்கியே இந்த அரைகுறை மனித உரிமை நிறுவனங்களை உருவாக்குவதற்கான இலக்கு இருந்தால், இந்த உத்தி குழப்பமான, தவறான கணிப்பீடாகத் தெரிகிறது. அடக்குமுறை அரசுகள் சர்வதேசக் கருத்துக்கு முன்னிலை கொடுப்பவை என்பதையும், அந்தக் கருத்துகள் அதிகரித்த அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன என்பதையும் இது வெளிப்படுத்துகிறது. அரைகுறை மனித உரிமை நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகள், முன்னர் கவனிக்கப்படாத நோக்கர்களை நோக்கிக் கவனம் செலுத்துகின்றன என்கிறார் ஆசிரியர்: மனித உரிமைகளைச் செயற்படுத்துவதற்கான பலதரப்பு முயற்சிகளில், தடுக்கும் ‘வீட்டோ’ புள்ளிகளாகச் செயற்படக்கூடிய ஊசலாடும் நாடுகளை இந்த முயற்சிகள் நோக்குகின்றன. போருக்குப் பிந்தைய நீதிக்கான சர்வதேச அழுத்தத்திற்கு இலங்கையின் பதில் குறித்த ஆய்வின் மூலத்தைக் கட்டுரை விளக்குகிறது. தொடர்ச்சியாகப் பலவீனமான புலனாய்வு ஆணையங்களை உருவாக்குவது, மேற்கத்திய அரசாங்கங்கள் மற்றும் அரசுசாரா அமைப்புகளின் அழுத்தத்தால் அரைகுறை அமைப்புகளை உருவாக்கத் தூண்டப்பட்டாலும், இவர்களைத் திருப்திப்படுத்தவோ அல்லது ஏமாற்றவோ எடுக்கும் முயற்சி இதுவல்ல என்பதையும் ஆசிரியர் காட்டுகிறார். மாறாக, சர்வதேச விசாரணையை உருவாக்குவதை எதிர்க்கவும், அவ்வாறு செய்வதற்கான அரசியல் மறைப்பை வழங்கவும், சமாதானப்படுத்தும் கூட்டணி - தடுப்பு உத்தியின் ஒரு பகுதியாக, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் உள்ள பிற வளரும் நாடுகளை ஈர்ப்பதாகவே இத்தகைய முனைப்புகள் உள்ளன.

### அ: அறிமுகம்

நேர்மையற்ற மனித உரிமை நடத்தைகள் என்பது சர்வதேச அரங்கில் பொதுவான அம்சமாகும். கடப்பாடுகள் பற்றிய விரிவான அமைப்பாக்கம் அதிகரித்து வந்தாலும், செயலாக்கம் முழுமையாக நடப்பதில்லை. விதிகளைத் தவிர்க்கக்கூடிய வாய்ப்புகள் உருவாகுகின்றன. அரசுகள் ஒருபோதும் தாங்கள் இணங்க விரும்பாத ஒப்பந்தங்களில் கையெழுத்திடுகின்றன. இவ்வொப்பந்தங்கள் மூலம் அபராதங்களை விதிக்க வாய்ப்பில்லை என்பதை அறிந்து, அவற்றைப் புறக்கணிக்கத் திட்டமிடும் நோக்குடனேயே அரசுகள் பங்கேற்கின்றன. இந்தப்போக்கு மனித உரிமைகள், உறுதிமொழிகள் வெறும் மலினமான பேச்சு மட்டும்தான் என்ற முடிவுக்கு இட்டுச் சென்றுள்ளது. ஆனால் அத்தகைய பேச்சு எப்போதும் மலினமானது அல்ல. அரசுகள் வழக்கமாக மனித உரிமை நடத்தையில் ஈடுபடுகின்றன. அவை குறிப்பிடத்தக்க செலவுகளையும் அந்த அரசுகளுக்கு ஏற்படுத்துகின்றன. ஆனால் அவற்றின் வழியாக எந்தக் கடமைகளையும் நிறைவேற்றுவதில்லை. இந்த நடவடிக்கைகளில் சில, போதுமான நல்லெண்ண முயற்சிகள் எனவும் விளக்கம் சொல்லப்படலாம். எதற்கும் இணங்குவதில்லை என்ற தெளிவான நோக்குடனேயே அரசுகள் பெரும்பாலும் இவற்றை மேற்கொள்கின்றன.

உதாரணமாக, 2009 ஆம் ஆண்டு ஓர் எதிர்க்கட்சிப் பேரணியில் பாதுகாப்புப் படையினர் நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்களைக் கொன்றதை அடுத்து, சர்வதேச அளவில் பெரும் கண்டனங்களை எதிர்கொண்ட கினியாவின் ஆளும் இராணுவ ஆட்சிக்குழு, விசாரணை நடத்த ஒரு விசாரணை ஆணையத்தை உருவாக்கியது. இந்தக்குழுவில் முப்பத்தொரு ஆணையர்கள் இருந்தனர். இதில் பங்கேற்க விமானம்மூலம், நான்கு வெளிநாட்டு நீதிபதிகள் வரவழைக்கப்பட்டனர்; மற்றும் ஒரு காவல் புலனாய்வாளர் குழுவும் வரவழைக்கப்பட்டது. இந்த நடவடிக்கை கினியாவின் பாதுகாப்புத்துறையினருக்குப் பிடிக்கவில்லை. தாங்கள், நடைபெற்ற படுகொலைகளுக்காகக் குற்றம் சாட்டப்படலாம்

என்று அஞ்சினர். மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான உண்மையான உறுதிப்பாட்டை, அல்லது குறைந்தபட்சம் சர்வதேசப் பார்வையாளர்களுக்குத் தங்கள் நேர்மைத்தன்மையைப் பறைசாற்றவே இது ஏற்படுத்தப்பட்டது. சர்வதேசம் பரிந்துரைத்த ஒரு நடவடிக்கையாக ஏற்படுத்தப்பட்ட இப்படிப்பட்ட ஆணையம், ஆட்சிக்கவிழ்ப்பு அபாயத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும் ஆட்சிதொடர்ந்து, படைக்கு ஆட்சேர்ப்பும் செய்து, அடக்குமுறைத்திறனை வெளிப்படையாக வளர்த்துக் கொண்டது. அதேபோல், 2011 இல் அரபு வசந்தம் எனச் சொல்லப்பட்ட ஆர்ப்பாட்டங்களை வன்முறைமூலம் அடக்கியதற்காகச் சர்வதேச அளவில் கண்டனம் தெரிவிக்கும் விதமாக, பஹ்ரைன், காவல் சித்திரவதையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நோக்கத்துடன் மூன்று நிறுவனங்களை உருவாக்கியது: ஒரு குறைதீர்ப்பாளரின் அலுவலகம், ஒரு சிறப்புப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஒரு கைதிகள் உரிமைகள் ஆணையம். இந்த நிறுவனங்களுக்கு மில்லியன் கணக்கான டொலர்கள் செலவிடப்பட்டது. இருந்தபோதிலும் அதேநேரத்தில் அரசாங்கம் மாற்றுக்கருத்தாளர்களைத் தண்டிக்கக் கடுமையான சட்டங்களை இயற்றியது. போராட்டக்காரர்களுக்கு எதிராக அளவுக்கதிகமான ஒடுக்குமுறைச்சக்தியைப் பயன்படுத்தியது.

இரண்டு நிகழ்வுகளிலும், சர்வதேச உரிமைக் குழுக்கள் இந்த முயற்சிகளை நிராகரித்தன. வெளிப்படையான நடவடிக்கை முன்னெடுப்புகளில் தோல்வியுற்ற வெற்றுத் திரைச்சீலை அலங்காரங்கள் அவை என்று நிராகரித்தன. கினியாவின் விசாரணை ஆணையம், நடந்த படுகொலையின் இறப்பு எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்துச்சொல்லி ஆட்சியைக் காப்பாற்றி விடுவித்தது. பஹ்ரைனின் புதிய நிறுவனங்கள் சித்திரவதை குறித்த அதன் பதிவை மேம்படுத்தவில்லை. இரண்டு நிகழ்வுகளிலும், இந்த நடவடிக்கைகள் தொடர்ச்சியான சர்வதேச அழுத்தத்தைத் தடுக்கத் தவறிவிட்டன. பஹ்ரைன் அதன் சித்திரவதை எதிர்ப்பு அமைப்புகள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து சில ஆண்டுகளில் மனித உரிமை அமைப்புகள், மேற்கத்திய அரசாங்கங்கள் மற்றும் ஐ.நா. ஆகியவற்றிலிருந்து அதிகரித்துவரும் கண்டனங்களை எதிர்கொண்டது. கினியா முதலில் ஐ.நா. பொதுச்செயலாளர் தலைமையிலான விசாரணை ஆணையத்திற்கும், பின்னர் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் முதற்கட்ட விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் அழுத்தங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக விலையுயர்ந்த அல்லது அரசியல் ரீதியாக சிரமமான நடவடிக்கையை மேற்கொண்ட, ஆனால் தங்கள் கடப்பாடுகளுக்கு இணங்காத அரசுகளின் எடுத்துக்காட்டுகள் இவை. நடவடிக்கை கோருபவர்களைத் திருப்திப்படுத்தாத நிறுவனங்களை உருவாக்க ஏன் இவ்வளவு செலவுகளைச் செய்யவேண்டும்? அவ்வாறு செய்யும் அரசுகள் இந்த நடவடிக்கைகள் எவ்வாறு அணுகப்படும் என்பதைத் தவறாகக் கணக்கிடுகின்றனவா? அல்லது இத்தகைய நடத்தைக்கு இன்னும் நுட்பமான தர்க்கம் உள்ளதா?

இந்தக் கட்டுரையில், இந்த நிகழ்வை விளக்க ஒரு கோட்பாட்டை நான் முன்வைக்கிறேன். இதை நான் ‘அரைகுறை மனித உரிமைகள் நடவடிக்கைகள்’ என்று அழைக்கிறேன். இவைபற்றிய முந்தைய ஆய்வுகள், முழுமையடையாத மனித உரிமைகளை முன்னெடுப்பதற்கு அரசுகளின் செலவாகும் மானியத்தொகைகளைப் பற்றி ஆராய்கின்றன. இந்த ஆய்வுகள் பொதுவாக சர்வதேச சமூகத்தின் விதிமுறைகளை ஊக்குவிக்கும் அமைப்புகளை இணங்கச் செய்வதையோ அல்லது திருப்திப்படுத்துவதையோ நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால், அரைகுறை நடவடிக்கைகளில் ஈடுபடும் பல அரசுகளின் பார்வையாளர்கள் மேற்கத்திய அரசாங்கங்களோ அல்லது மனித உரிமைகளை ஊக்குவிக்கும் மற்றும் கண்காணிக்கும் சர்வதேச அமைப்புகளோ மட்டும் அல்ல என முந்தைய ஆய்வுகள் கருதுகின்றன. மேலும் சில நாடுகள் அரைகுறை மனித நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய பார்வையாளர்களை உருவாக்குகின்றன. இந்த ஊசலாடும் நாடுகள் மனித உரிமைகள் மீதான பலதரப்பு நடவடிக்கையை ஆதரிக்கலாம் அல்லது தடுக்கலாம். எனவே, தங்கள் மனித உரிமைக் கடமைகளுக்கு இணங்கத்தயங்கும்

அடக்குமுறை நாடுகள், ஒருங்கிணைந்த சர்வதேச அழுத்தம் மற்றும் தணிக்கை போன்றவற்றைத் தடுக்க அரைகுறை நடவடிக்கைகளை ஓர் உத்தியாகப் பயன்படுத்தும் என்று நான் வாதிடுகிறேன். உள்ளடக்கத்தில் இது ஒரு கூட்டணியான தடுப்பு முயற்சியாகும். இது ஊசலாடும் மாநிலங்களின் ஆதரவைப் பெறுவதையும், மனித உரிமை மீறுபவரை ஆதரிப்பதன் நற்பெயருக்கு ஏற்படும் விளைவுகளிலிருந்து இந்தக் கண்காணிப்பாளர்களைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் நீதிக்கான சர்வதேசக் கோரிக்கைகளுக்கான பதில் குறித்த ஒரு வழக்கு ஆய்வின் மூலம், இந்த இயக்கவியலை நான் விளக்குகிறேன். அங்கு அரசாங்கம் பாரிய அட்டூழியங்கள் குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க மறுத்துவிட்டது. ஆனால் தொடர்ச்சியான பலவீனமான பொறுப்புக்கூறல் நிறுவனங்களை உருவாக்கியது. பொறுப்புக்கூறலைத் தொடர இலங்கை கடுமையாக விரும்பாவிட்டாலும், சர்வதேச அழுத்தங்களுக்குப் பதிலளிக்க அது குறிப்பிடத்தக்களவு செலவுகளைச் செய்து இவ்வமைப்புகளை உருவாக்கிறது. இந்த நடவடிக்கை அதன் உள்நாட்டு அரசியல் ஆதரவுத்தளத்தைக் கோபப்படுத்தும் அபாயத்தை ஏற்படுத்தியது என்ற போதிலும், அதைச் செய்தது. மேற்கத்திய அரசாங்கங்கள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச அமைப்புகளின் கோரிக்கைகளால் தூண்டப்பட்டாலும், இணங்கமறுக்கும் நிறுவனங்களை மீண்டும் மீண்டும் உருவாக்குவதன்மூலம், வேறுபட்ட கண்காணிப்பாளர்களிடம் அது சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியது. வளரும் இறையாண்மை நாடுகளில் நடக்கும் இத்தகைய அரைகுறை மனித உரிமை முன்னெடுப்புகள்தான், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சில், மனித உரிமைகள் குறித்துத் தலையீடு செய்வதற்குத் தயங்குவதற்குக் காரணம்.

மனித உரிமைகள் நடத்தைக்கான கவனிக்கப்படாத நோக்கர்களை அறிமுகப்படுத்துதல் இந்தக்கட்டுரையின் முக்கிய பங்களிப்பு எனலாம். பலதரப்பு நடவடிக்கைகளை ஆதரிக்கவோ அல்லது தடுக்கவோகூடிய நிலையில் உள்ள ஊசலாடும் பாசாங்குத்தனமான நாடுகளைச் சுட்டிக்காட்டுதல் இதில் அடங்கும். மனித உரிமைகளை ஊக்குவிப்பவர்களுக்கு எதிராக இந்த ஊசலாடும் அரசுகள், தங்களுக்குப் பக்கபலமாக இருக்க உதவுவதற்கு, அரைகுறை நடவடிக்கைகளைப் பின்பற்றுகின்றன என்பது எனது வாதம். சர்வதேசச் சட்டத்துடன் இணங்குதல், மனித உரிமைகள் பற்றிய அழுத்தத்தின் செயற்றிறன், சர்வதேச அரசியலில் சொல்லாடல் போன்றவற்றின் பங்கு ஆகியவற்றைப் பற்றியும் இந்தக்கட்டுரை கவனம் செலுத்துகிறது. மனித உரிமைகளைமீறும் அரசின் நடத்தை மற்றும் சர்வதேச எதிர்வினை இரண்டையும் பாதிப்பதில், ஊசலாடும் நிலைப்பாடுள்ள அரசுகள் போன்ற நோக்கர்களின் பாசாங்குத்தன அரசியலைப் பற்றிய புதிய பார்வையை நான் வழங்குகிறேன்.

### ஆ: கோட்பாடு

கடப்பாடுகள் பற்றிய மரபான கோட்பாடுகள், உலகளாவிய சட்டத்திற்கு அரசுகள் அளிக்கவேண்டிய பதில்களுக்கான கேள்வியானது, இணக்கத்துக்குரிய நிலையில் உள்ளதாகவும், இணக்கத்தை இழுத்தடித்துத் தவிர்ப்பதாகவும் இருமைநிலை கொண்டதாக உள்ளதெனக் கருதுகின்றன. இந்த இருமைப்பாட்டினால் ஏற்படும் பின்னடைவுநிலை, கடப்பாடுகளுக்குரிய நடைமுறையை மேலும் சிக்கலாக்குகின்றன. உயர்ந்த மற்றும் குறைந்த மதிப்புகளை உள்ளடக்கிய ஒரு அளவுகோலாக அவற்றைக் கருதுவதன்மூலமும் இந்நிலை ஏற்படுகிறது. தற்செயலானவை அல்லது நன்னம்பிக்கை, இணக்கம் போன்ற வகைப்பாடுகள் கடப்பாட்டுக்குரியநிலையை மேலும் சிக்கலாக்கியுள்ளன.

உலகத்தரங்களை நிறைவுசெய்யத் தவறிய, நல்லெண்ண முயற்சிகளின் சாத்தியக்கூறுகள் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆனால் கடப்பாடுகளுக்கு இணக்கமின்மை உடைய நடவடிக்கைகள் குறைவான கவனத்தைப் பெற்றுள்ளன. நேர்மையற்ற உறுதிமொழிகளை அரசுகள் ஏன் செய்கின்றன என்பதில் இணக்கமின்மை குறித்த ஆய்வுகள் கவனம் செலுத்தியுள்ளன. அரசுகள் உள்நாட்டு நோக்கர்களை அமைதிப்படுத்த முயற்சிக்கலாம்.

ஆனால் அழுத்தம் அற்றுப்போனவுடன் வழமையான நிலைக்குத் திரும்ப விரும்புகின்றன.

சுட்டிக்காட்டப்பட்டு அவமானப்படுத்தலுக்கும் வெளிப்புற அழுத்தங்களுக்கும் ஆளாகக்கூடிய நாடுகள் தங்களிடையே தந்திரோபாய உடன்பாடுகளைச் செய்யலாம். அவை சொல்லாட்சி, ஒப்பந்தங்களில் கூட்டு ஒப்புதல் அல்லது உள்நாட்டுக் கொள்கைகளை அமல்படுத்துதல் போன்ற வடிவங்களில் அவற்றை முன்னெடுக்கலாம். இந்த நடவடிக்கைகள் முதலில் கள்ளமற்றமுறையில் எடுக்கப்பட்டாலும், காலப்போக்கில் அவை வழக்கமாக ஆகி, மனித உரிமைகள் விதிமுறைகளை உள்நாட்டுமயமாக்குவதற்கும் மற்றும் நிறுவனமயமாக்குவதற்கும் பங்களிக்கின்றன. இதன் விளைவு, 'விளைவற்ற கொள்கை நடவடிக்கை' எனக்கூடத் தோன்றலாம். இவை ஒடுக்குமுறை அரசுகளை கடப்பாடுகளுக்குள் தள்ளும் ஒரு பொறியாகவும் மாறிவிடலாம்.

உலகளாவிய கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் உறுப்பினர்களின் கடப்பாடுகளுக்கான இணக்கத்தைக் கண்காணிக்கும் சிலவற்றைச் செய்கின்றன. ஆனால் அவை பொதுவாக மீறல்களுக்கு அபராதம் விதிக்க முடியாது. ஆனால் அரசுகள் இதைச்செய்ய உடனடியான பரஸ்பர வழிமுறை எதுவும் இல்லை. அதற்குப் பதிலாக, அரசுகள் பொதுக்கண்டனங்கள் முதற்கொண்டு உதவி அல்லது வர்த்தகத்தைக் குறைத்தல், ஐ.நா. தீர்மானத்தை ஆதரிப்பது, இராணுவத் தலையீடு வரை பல நெருக்கங்களை எதிர்கொள்கின்றன.

அரைகுறை நடவடிக்கைகள் என்பதன் தர்க்கம், மூன்று முக்கிய விடயங்களைச் சுற்றி வருகின்றன. முதலாவதாக, மிக முக்கியமாக, உள்நாட்டு அல்லது 'சர்வதேச மனித உரிமை ஊக்குவிப்பாளர்களை' திருப்திப்படுத்தும் எதிர்பார்ப்புடன், அரைகுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இரண்டாவது, அரைகுறை நடவடிக்கைகள் உயர்ந்த மனித உரிமைகள் நடைமுறையில் ஈடுபடுவதற்கான உறுதியான தேர்வின் விளைவாகும்; அவை எளிதான பேச்சில் உருவான தற்செயலான விளைவு அல்ல. மூன்றாவது, அரைகுறை நடவடிக்கைகள் மேற்படி மாதிரியின் தந்திரோபாயச் சலுகைகளைக் கணக்கில்கொண்டு கற்பனை செய்யப்பட்ட இணக்கத்திற்கான முதற்படியாக இருக்க வாய்ப்பில்லை. பாதி நடவடிக்கைகள் என்பது, இணக்கத்தை நம்பவைக்கும் பாசாங்குத்தனமான தீவிர முயற்சிகளாக அல்ல; மாறாக, மனித உரிமைகளை மீறுபவரைப் பாதுகாப்பதுபோல் தோன்றுவதைத் தவிர்ப்பதாக அமைகின்றன.

### இ. முறைகள்

இந்தக்கட்டுரையில் வழங்கப்படுகின்ற கோட்பாடு, காரணகாரியச் செயல்முறைகள் பற்றிய வெளிப்படையான கூற்றுகளை உள்ளடக்கியிருப்பதால், அதன் விளக்கமதிப்பை மதிப்பிடுவதற்கு, செயல்முறைத் தடமறிதல் அணுகுமுறை மிகவும் பொருத்தமானது எனலாம். ஒரு தனித்த ஆய்வுபற்றிய செயல்முறைத் தடமறிதல் மட்டுமே ஒரு கோட்பாட்டின் பொதுவான விளக்கத்தின் திறனை நிறுவ முடியாது என்றாலும், மாற்று விளக்கங்களுடன் ஒப்பிடும்போது அதன் வலிமையை மதிப்பிடுவதற்கு இது உதவுகிறது. காரணத்திற்கும் விளைவுக்கும் இடையிலான உறவு நியாயமான முறையில் நிறுவப்பட்டிருக்கும்போதும், விளைவின் அடிப்படையிலான துல்லியமான வழிமுறைகள் தெளிவாக இல்லாதபோதும் இது மிகவும் மதிப்புமிக்கது. சாத்தியமான காரணங்கள் மற்றும் கவனிக்கப்பட்ட விளைவுகளுக்கு இடையிலான தொடர்புகளைக் கண்டறிய நுண்ணிய விளக்கத்தரவுகள் தேவைப்படுகின்றன.

அரைகுறை மனித உரிமை நடவடிக்கைகளின் காரணத்தர்க்கத்தை ஆராய, போருக்குப் பிந்தைய இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கான நிகழ்சம்பவங்கள் பற்றிய விரிவான நுண்நோக்கைப் பயன்படுத்துகிறேன். இலங்கை இந்தப் பிரதிவாதங்களைச் சோதிக்க மிகவும் பொருத்தமானது. ஏனெனில் அது மக்கள் மீதான அட்டூழியங்களுக்குப் பொறுப்புக்கூறலை வழங்குவதற்கான வலுவான சர்வதேச அழுத்தத்தையும், தண்டணையிலிருந்து விலக்கு அளிப்பதற்கு ஆதரவாக வலுவான உள்நாட்டு அரசியல் ஆதரவுகளையும் எதிர்கொண்டுள்ளது. அரைகுறை மனித உரிமை நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று நாம் எதிர்பார்க்கும் நிலையில் இந்த அரசு உள்ளது. மனித உரிமைகள் கோட்பாடு மற்றும் நடைமுறைக்கும் இப்படியான நிகழ்சம்பவ நுண்நோக்குகள் முக்கியமானவை. இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதி நாட்களில் நாற்பதாயிரத்திற்கும்

மேற்பட்ட பொதுமக்கள் அரசாங்கப் படைகளால் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. எண்ணற்றவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர்; பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர்; காணாமல் போனார்கள். இது இருபத்தியோராம் நூற்றாண்டில் பொதுமக்களுக்கு எதிரான அரசாங்கத்தால் நடத்தப்பட்ட மிக மோசமான வன்முறையாக உள்ளது. சிரியா, டார்பூர் மற்றும் ரோஹிங்கியா நெருக்கடிகளுக்கு அடுத்தபடியாக உள்ள ஒரு மக்கள் மீதான அட்டூழியமாக இது இருக்கிறது. இருப்பினும், இலங்கை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் உறுப்பினராக இல்லாததாலும், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நடவடிக்கையிலிருந்து சீனாவால் பாதுகாக்கப்பட்டதாலும், இந்தக் கொடுமைகளுக்கு நீதி பெறுவதற்கு சர்வதேசச் செயற்பாட்டாளரிடையே விலையுயர்ந்த ஒருங்கிணைப்புத் தேவைப்படுகிறது. கடுமையான நிகழ்சம்பவங்கள் தொடர்பில் உள்ள மனித உரிமைகளைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகள் எவ்வாறு செயற்படுகின்றன என்று அறிவதற்கு போருக்குப் பிந்தைய இலங்கை சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் போருக்குப் பிந்தைய நீதி குறித்த சர்வதேச விவாதங்கள், முதன்மையாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் நடைபெற்றன என்பது இந்த நிகழ்சம்பவத்தின் கனதியை அதிகரிக்கிறது. மனித உரிமைகள் கவுன்சில் பலவேளைகளில் 'சக கூட்டாளிகளின் மதிப்பாய்வு நிகழ்விடமாக' இருக்கிறது. பெரும்பாலும் இது, சக ஊசலாடும் நாடுகளின் பார்வையாளர்களிடம், மனித உரிமைகளை மீறுபவர்கள், தங்கள் நடத்தையைப் பாதுகாக்க முயற்சிகளில் ஈடுபடும் இடமாகும். இந்தக் கோட்பாடு எதிர்பார்க்கும் வகையான சட்டப் பந்தாடும் விளையாட்டுகளைக் கவனிப்பதற்கான ஒரு தளமாக இந்த இடம் இருக்கலாம். மனித உரிமைகள் கவுன்சிலின் (அதன் முன்னோடி அமைப்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம்) அறிஞர்கள் கவனிப்பின்படி, 'பலவீனமான நாடுகளின் பன்முகத்தன்மை மற்றும் நிறுவனச் செல்வாக்கைத் தங்கள் நன்மைக்காகப் பயன்படுத்தும் திறன்' என்பது இங்கு விளையாடுகிறது. சக்திவாய்ந்த நாடுகளின்



Image Source - www.sbs.com.au

மனித உரிமை விருப்பங்களுக்கு எதிரான விளைவுகள் இங்கு நடந்தேறுவது மிகவும் சாத்தியமானதும் பொதுவாக நடப்பதுமாகும்.

தங்களை நிறுவும் போட்டியில் வெற்றிபெறும் குற்றவாளி நாடுகளுக்கே, உண்மையான நன்மை இங்கு கிடைக்கிறது. பலவீனமான நாடுகளுடன் கூட்டணி போட்டு சக்திவாய்ந்த, மனித உரிமைகளை ஊக்குவிப்பவர்களைத் தோற்கடித்த, தெளிவான முன்னுதாரணமும் இங்கே உள்ளது. மனித உரிமைகள் கவுன்சில் அதன் சொந்த உரிமைத்திறனை உணர்ந்துகொள்ள ஒரு முக்கியமான நிறுவனம்தான். மனித உரிமைகளிலிருந்து அமெரிக்கா பின்வாங்கும் இந்தக்காலத்தில், கவுன்சிலின் அரசியல், மிகப்பொதுவாகப் பொருந்திவரக்கூடிய பல்முனை மனித உரிமைகள் செயலாக்க மாதிரியை வழங்கக்கூடும்.

பல ஆண்டுகளாகச் செய்த தரம்காண் அணுகுமுறைமூலம் இந்த நிகழ்சம்பவ ஆய்வைக் கட்டமைத்தேன். இதுவரை ஒப்புக்கொள்ளப்படாத பாரிய கொடுஞ்செயல்களின் தன்மையை அறிய வேண்டியிருந்தது. அதைப்பற்றிய முக்கிய தகவலறிந்தவர்களுடன் நம்பிக்கையை வளர்ப்பதற்கும், ஆழமாக அரசியல்மயமாக்கப்பட்ட நிகழ்வுகள் குறித்த முரண்பாடான கூற்றுகளை மதிப்பிடுவதற்கும், விளக்குவதற்கும் தேவையான சூழல் அறிவை வளர்ப்பதற்கும், உள்ளடக்கத்தின் உணர்திறன் தன்மையை அறிய ஓர் ஆழம் பொதிந்த

அணுகுமுறையொன்று தேவைப்பட்டது. பிற அறிஞர்கள் உற்றுநோக்கிய வகையில், இத்தகைய அணுகுமுறைகள் ‘முறையான நேர்காணல்களை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு செய்யும் ஆய்வைவிடவும் குறிப்பிடத்தக்க நன்மைகளைக் கொண்டுள்ளன’.

இது ஒரு நேர்காணலின் ‘உள்ளார்ந்த நுணுக்கமான தரவுகளைப்’ பகுப்பாய்வு செய்ய ஆராய்ச்சியாளர்களுக்கு இடமளிக்கிறது.’ தகவலறிந்தவர்களின் பேச்சு, பேசப்படாத எண்ணங்கள் மற்றும் உணர்வுகள் ஆகியவை இப்படிப்பட்ட நுணுக்கமான தரவுகளாகும். அவர்கள் எப்போதும் தங்கள் கதைகள் அல்லது நேர்காணல் பதில்களில் அவற்றை வெளிப்படுத்துவதில்லை. ஆனால் அவை வேறுவழிகளில் வெளிப்படுகின்றன. போருக்குப் பிந்தைய இலங்கை போன்ற அடக்குமுறைச் சூழல்களில் இந்த அணுகுமுறையும் உற்றுநோக்கலும் மிகவும் முக்கியமானது. அங்கு உணர்திறன் வாய்ந்த தலைப்புகளில் உரையாடும்போது ஏற்படும் மௌனம், பேச்சில் சொல்லப்படுவதைவிடவும் அதிகமான தகவல்களைத் தெரிவிக்கும்.

வெளிப்புறமாகத் திணிக்கப்பட்ட மற்றும் சுயமாகத் திணிக்கப்பட்ட இத்தகைய மௌனங்களைப் புரிந்துகொள்ளும் திறன், இந்தச் சூழல்களில் நிறைந்த அரசியலைப் பகுப்பாய்வு செய்வதற்கு மிகவும் முக்கியமானது. எனவே கீழே வழங்கப்பட்ட கண்டுபிடிப்புகள், நேர்காணல்கள், பங்கேற்பாளர் கண்காணிப்புகள், களக் கண்காணிப்புகள் மற்றும் இலங்கைக்கான ஆறு பயணங்களின் போது மேற்கொள்ளப்பட்ட முதன்மை மூலமான ஆய்வுகள் ஆகியவற்றின் கலவையை அடிப்படையாகக் கொண்டவை.

இந்தக் களப்பணியில் சில சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. முதன்முறையாக நான் இலங்கைக்குச் சென்றபோது, ‘போர்க்குற்றங்கள்’ என்ற சொற்றொடர் பொதுமக்களிடையே அரிதாகவே அறியப்பட்டிருந்தது. போருக்குப் பிந்தைய நீதிபற்றிய விவாதங்கள், பேச்சுகள் கண்களை மூடிக்கொண்டு கிசுகிசுப்பாகவே நடத்தப்பட்டன. பொறுப்புக்கூறலை ஆதரித்த ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள், துரோகிகள் என்று முத்திரைகுத்தப்பட்டு வன்முறையூடாக அச்சுறுத்தப்பட்டனர். இராணுவத்தால் கொடுமைப்படுத்தப்பட்டதாக குரல் எழுப்பிய சர்வதேச அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்கள் பயங்கரவாதத்தின் அனுதாபிகள் என்று கேலி செய்யப்பட்டன. இதற்கிடையில், ஆட்சியை விமர்சிக்கும் நபர்களை உயர் தொழில்நுட்பத்தின் மூலம் அரசாங்கம் நேரடியாகவும் கண்காணித்தது.

இப்படிப்பட்ட தேவையான முன்னெச்சரிக்கைகள் இருந்தபோதிலும், முன்னாள் போர்வலயத்தில் உள்ள எட்டு மாவட்டங்களில், ஏழு மாவட்டங்கள் உட்பட, நாடு முழுவதும் பயணம்செய்து, போர்க்குற்றங்களுக்கான நீதிகுறித்து அனைத்துத்தரப்பு மக்களுடனும் பேச முடிந்தது. மொத்தத்தில், பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், உள்நாட்டு மனித உரிமை ஆர்வலர்கள், முன்னாள் இலங்கை இராணுவத் தலைவர்கள் மற்றும் சர்வதேச சிவில்சமூகத்தின் பிரதிநிதிகள் உட்பட சம்பந்தப்பட்டவர்களுடன், பொறுப்புக்கூறலில் உள்நாட்டு அரசியல் குறித்து, எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட முறையான நேர்காணல்களை நடத்தினேன்.

நியூயோர்க், வாசிங்டன் டி.சி, லண்டன், ஜெனீவா மற்றும் சென்னை ஆகிய இடங்களில் பொறுப்புக்கூறலின் சர்வதேச அரசியல் குறித்துக் கூடுதல் நேர்காணல்களை நடத்தினேன். அத்துடன் அமெரிக்க வெளியுறவுத்துறை மற்றும் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பான கூட்டங்களில் நூற்றுக்கணக்கான மணிநேரப் பதிவு செய்யப்படாத உரையாடல்கள் மற்றும் பங்கேற்பாளர் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. மார்ச் 2014 இல், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் 25 ஆவது அமர்வு கண்காணிக்கப்பட்டது. இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஆர்வலர்களுடனான மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் சமூக நிகழ்வுகளும் கண்காணிப்புச் செய்யப்பட்டன. இந்த முறைமைகள் அனைத்தும் ஒன்றிணைந்து, போருக்குப் பிந்தைய நீதிப்பிரச்சினையில் இலங்கைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடையிலான முன்னும் பின்னுமான ஐந்து ஆண்டுகால உறவுகள் பற்றிய விரிவான தரவுகளை வழங்கின.

மீநிலங்கோ தெய்வேந்திரன்



ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

# காலாவதியாகும் கல்வி : சாண் ஏறி முழஞ் சறுக்குதல்

இலங்கையின் சமகாலச் சூழலில் மூன்று விடயங்கள் தவிர்க்கவியலாமல் செல்வாக்குச் செலுத்துகின்றன. முதலாவது மூன்று தசாப்தகால யுத்தம்; இரண்டாவது போரின் முடிவின் பின்னரான இயங்கியல்; மூன்றாவது பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவுகளும். இவை மூன்றும் தன்னளவிலும், இலங்கைச் சமூகத்திலும் ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகள் அனைத்தும் கவனிக்கப்படவுமில்லை, கருத்தில் கொள்ளப்படவுமில்லை. சமகாலத்தைப் பொருள்கொள்ளல் என்பது வெறுமனே அன்றாடக் கதையாடல்களுக்குரியவற்றுடனோ அல்லது பொதுப்புத்தியில் எப்போதும் நிலைத்திருக்கும் விடயப்பரப்புகளுடனோ மட்டும் நின்றுவிடுவதல்ல. இலங்கைச் சமூகப் படிநிலையில் நலிந்தோரின் கதைகள் சொல்லப்பட வேண்டும்; அதுசார் வினாக்கள் எழுப்பப்படவேண்டும். இலங்கையின் சமகாலம் குறித்த பெரும்பான்மையான எமது உரையாடல்கள் கவனம் குவிக்கத் தவறும் விடயங்களையும் அமைதியாகக் கடந்து செல்லும் களங்களையும் ‘சமகாலத்தைப் பொருள்கொள்ளல்: கவனம்பெறா அசைவியக்கங்கள்’ எனும் இத்தொடர் பேசமுனைகிறது.

## தொடக்கக் குறிப்புகள்

சமகால இலங்கையின் கல்வியானது ஒரு நெருக்கடியான புள்ளியில் நிற்கிறது. பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையான எமது கல்வியும், கல்விமுறையும், அதுசார் நிறுவனங்களும் பொருத்தமானவையா, பயனுள்ளவையா, வினைத்திறனானவையா போன்ற கேள்விகள் எழுப்பப்பட வேண்டும். குறிப்பாக, எமது பல்கலைக்கழகக் கல்வி மிகுந்த சவாலுக்குள்ளாகியுள்ளது. கொரோனா பெருந்தொற்றும் அதைத் தொடர்ந்த பொருளாதார நெருக்கடியும் இலங்கையின் கல்வித்துறையை மிகவும் மோசமாகப் பாதித்துள்ளது. கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் முழுமையாகக் கல்வி தடைப்பட்டுள்ளது. இது மாணவர்களிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கம் பெரியது. இது நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தவல்லது.

கல்வியமைச்சரான பிரதமர், ஹரிணி அமரசூரிய பாடசாலைகளில் 40,000 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாகவும், இவற்றில் 2650 வெற்றிடங்கள் தேசிய பாடசாலைகளில் இருப்பதாகவும் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தார். இது பாடசாலைக் கல்வியின் நெருக்கடிக்கான ஒரு சான்றாகும். இதேவேளை இலங்கையின் 'டியூசன் கலாசாரம்' இன்று இந்த நெருக்கடிக்கான ஒரே தீர்வாக நோக்கப்படுகிறது. இன்று இது ஒரு முக்கிய வணிகத்துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வினடிப்படையில் ஆண்டுதோறும் தனியார் வகுப்பு நடத்தும் ஆசிரியர்கள் 210 பில்லியன் இலங்கை ரூபாய்களை வருமானமாகப் பெறுகிறார்கள். இந்தத் தரவு சொல்கிற செய்தி மிகவும் வலியது. ஒருபுறம் கல்வியின் பெயரால் மிகப்பெரிய வர்த்தகம் உருவாகியிருக்கிறது. இன்னொருபுறம், பாடசாலைக் கல்வியில் நம்பிக்கையற்ற ஒரு சமூகம் வளர்ச்சியடைந்து வருகிறது. இது இலங்கையின் பாடசாலைக் கல்வியின் எதிர்காலம் குறித்து மிகவும் பாரதூரமான சிக்கல்களைக் கோடுகாட்டுகிறது.

கடந்த நான்கு தசாப்தங்களாக உயர்கல்விக் கொள்கை மற்றும் திட்டமிடலில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு கேள்வி என்னவென்றால், அரச பல்கலைக்கழகங்கள் வேலைவாய்ப்புக்கு தகுதியான மாணவர்களை உருவாக்குகின்றனவா என்பதுதான். 1990களில் இளைஞர்களின் வேலையின்மை குறித்த கவலை, முதலில் தொடர்ந்த இன மோதல் மற்றும் இரண்டாவதான ஜே.வி.பி கிளர்ச்சி (1987-1989) ஆகியவற்றிற்குக் காரணமாக இருந்தது. இது 1990களின் பிற்பகுதியில் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு குறித்த ஒரு விவாதத்திற்கு வித்திட்டது. ஒருபுறம் பல்கலைக்கழகங்கள் வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளை உருவாக்குவதாகக் குற்றம் சாட்டப்பட்டாலும், மறுபுறம் இளைஞர்களின் வேலையின்மையை அதிகரிக்கும், தீங்கு விளைவிக்கும் பிற காரணிகளையும் நோக்க வேண்டியுள்ளது. மந்தமான பொருளாதார வளர்ச்சி, இதில் கவனிப்புக்குள்ளாக வேண்டிய மிக முக்கியமான காரணியாகும். அரசியல் தலைவர்களின் திட்டமிடப்படாத மற்றும் தற்காலிகக் கொள்கை மாற்றங்களாலும், பெண்கள் அல்லது கிராமப்புற இளைஞர்கள் எந்த வகையான வேலைவாய்ப்புகளில் ஈடுபட வேண்டும் என்பது பற்றிய தவறான ஒரே மாதிரியான நம்பிக்கைகளாலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் தடுக்கப்படுகிறது.

அரசியல் ஆதரவு (political patronage), கொண்டோர் - கொடுத்தோர் உறவு (clientelism) சிறுபான்மையினருக்கு எதிரான இனப்பாகுபாடு மற்றும் முறையான செயல்முறைகளைத் தவிர்ப்பது ஆகியவை வேலையில் சேருவதற்கான கட்டமைப்புத் தடைகளாக இருந்து வருகின்றன. ஒருமொழி பேசும், நகர்ப்புறம் அல்லாத, சிங்களம் மற்றும் தமிழ் பேசும் இளைஞர்கள் ஏற்கனவே சமூக வர்க்கம் மற்றும் பிராந்தியவாதத்தின் அடிப்படையில் ஓரங்கட்டப்பட்டிருப்பதால், அரசியல் உயரடுக்குகளை அணுக முடியாமல் போகலாம் என்பதால் இது குறிப்பாக வெறுப்பூட்டுகிறது. இதே குழுக்களுக்கு, ஆங்கில மொழிப்புலமை இல்லாதது தனியார்துறை வேலைவாய்ப்புக்கு ஒரு தடையாக உள்ளது. கவனிப்புக்குரியது யாதெனில், வேலைவாய்ப்பு தொடர்பான கருத்துகளை வரையறுப்பதற்கும் அளவிடுவதற்கும் உறுதியான அளவுகோல்கள் இல்லை. இருப்பினும் அது நீண்டகாலப் பிரச்சினையாக உள்ளது. பட்டதாரிகளின் வேலையின்மைக்கான காரணம், தனியார்துறை வேலையைப் பெற இயலாமை என்று பரவலாகக் கருதப்படுகிறது; பொருத்தமான திறன்கள் இல்லாததால் என்று கூறப்படுகிறது. ஆனால் இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி குறித்த ஆழமான விரிவான ஆய்வுகள் மிகக் குறைவு.

இலங்கையில் பட்டதாரி வேலைவாய்ப்புத் திறன் குறித்த மதிப்பாய்வில், இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வோர், குடும்பம் மற்றும் சமூகக் காரணிகளைப் புறக்கணித்துள்ளனர். இது இலங்கையில் வேலைவாய்ப்புத் திறன் குறித்த ஆய்வுமுறைகளைக் குறைபாடுடையதாக ஆக்குகிறது. பல்கலைக்கழகங்களில் பயில்வோரின் குடும்ப, சமூகக் காரணிகள் அவர்களின் வேலைவாய்புகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆனால் இலங்கையின் உயர்கல்வி தொடர்பான கொள்கைவகுப்புகள் இதனைக் கணிப்பில் எடுப்பதில்லை. வேலைவாய்ப்புத் திறன் பற்றிய கூற்றுகளை நெருக்கமாகப் பகுப்பாய்வு செய்வதற்கு அல்லது அதன் விமர்சனங்களைக் கருத்தில் கொள்வதற்குப் பதிலாக, கொள்கை வகுப்பாளர்கள் "அரச பல்கலைக்கழக அமைப்பு மறுகட்டமைக்கப்பட வேண்டும், தரம் மற்றும் பொருத்தத்தில் அக்கறை கொள்ள வேண்டும், மேலும் வேலைசார்ந்த திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்" என்ற வாதங்களை மட்டுமே முன்னிலைப்படுத்துகின்றனர். இது தவறானது மட்டுமன்றி, ஆபத்தானதும் கூட.

இப்பின்புலத்தில் கடந்த பதினைந்து ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வரன்முறையான சரிவை நோக்கும் வாய்ப்பு அமைந்தது. இந்த அனுபங்களின் அடிப்படையிலான சில நிகழ்வுகளையும் கருத்தியல் போக்குகளையும் இக்கட்டுரையின்வழி பதிவு செய்ய முனைகிறேன். அத்தோடு நின்றுவிடாமல் பல்கலைக்கழகக் கல்விக்கு அடிப்படையாக அமைகின்ற பாடசாலைக் கல்வி தொடர்பாக கடந்த ஒரு தசாப்தகாலமாக, பாடசாலை மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் பெற்றோருடனும் மேற்கொண்ட ஆய்வு அனுபங்களைப் பகிர்வதன் முக்கியத்துவத்தையும் உணர்கிறேன். ஏனெனில் இன்று பெற்றோரும் பிள்ளைகளும் கல்வி குறித்து எவ்வகைப்பட்ட எண்ணப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்வதற்கு இது உதவியாக இருக்கும். இலங்கையின் வடக்கில் உள்ள பாடசாலைகளும், கொழும்பில் உள்ள தமிழ்பேசும் பாடசாலைகளும் இவ்வாய்வின் களங்களாகும்.



Image Source : www.worldbank.org

**பாடசாலைக் கல்வி: கற்பிதங்களைத் தகர்த்தல்**

இலங்கையின் முழுக் கல்வி முறையுடன், பாலர் பாடசாலை, ஆரம்பப் பாடசாலை, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிலைகளும், பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. இந்த நெருக்கடிகளின் சில அம்சங்களை நிவர்த்தி செய்ய சமீபத்திய காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஓரளவு மட்டுமே வெற்றி பெற்றுள்ளன அல்லது முற்றிலும் தோல்வியடைந்துள்ளன.

பாடசாலை, உயர்நிலை மற்றும் உயர்கல்விக்கான அதிகரித்து வரும் சமூகத் தேவை இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. விரிவாக்கம், நவீனமயமாக்கல், தர மேம்பாடு மற்றும் சமூக அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் கடுமையான இயலாமையால் அரசு நடத்தும் கல்விமுறை பாதிக்கப்பட்டுள்ளது. கல்விக்கான அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தற்காலிக மற்றும் அவசரமாக வடிவமைக்கப்பட்ட பதில்களால் அரசுத்துறையில் அனைத்து மட்டங்களிலும் வழங்கப்படும் கல்வியின் தரம் மற்றும் தரங்களின் படிப்படியான சரிவு மேலும் துரிதப்படுத்தப்படுகிறது. விரிவாக்கத்திற்கும் தரத்திற்கும் இடையிலான வளர்ந்து வரும் பொருத்தமின்மை பாடசாலை, தொழிற்கல்வி மற்றும் பல்கலைக்கழகக் கல்வியில் காணப்படுகிறது.

சேவை வழங்குநர்களை அங்கீகரிப்பதற்கான எந்தக் கொள்கையும் இல்லாமல், ஆரம்பகாலக் குழந்தைப் பருவக் கல்வியை வழங்கும் முன்பள்ளிகள் (நேர்சரிகள் என்று நாம்

அழைப்பது), கல்வியின் ஒரு முறைசாரா மற்றும் தற்காலிகக் கிளையாகவே தொடர்கிறது. தரம், தரநிலைகள், கல்வியின் வகை, வசதிகள், நடைமுறையில் உள்ள சுகாதார நிலைமைகள், குழந்தைப் பாதுகாப்பு, நடைமுறையில் உள்ள சேவைகள் மற்றும் ஆசிரியர்களின் தொழில்முறை ஆகியவற்றைக் கண்காணிப்பதில் கல்வி அமைச்சின் தீவிரமான மற்றும் வலுவான ஈடுபாடு இல்லை. இதன் விளைவாக, இந்தத் துறை ஒரு பெரிய, ஆனால் ஒழுங்கமைக்கப்படாத கல்வித் துறையாக மாறியுள்ளது. தரமான கல்வி வழங்கப்படும் சந்தர்ப்பங்களில், கட்டணம் அதிகமாகவும் பெரும்பாலான பெற்றோருக்குக் கட்டுப்படியாகாததாகவும் உள்ளது. இந்த நேர்சரிகள் குறித்து பல்வகைப்பட்ட கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

முன்பள்ளிகள் ஏற்படுத்தும் சமூகத் தாக்கங்கள் குறித்து முல்லைத்தீவில் உள்ள கல்வியியலாளர் இவ்வாறு தெரிவித்தார்:

"பிள்ளைகளை நல்ல நேர்சரிக்கு அனுப்புவது, இப்போது கட்டாயமானதாக மாற்றப்பட்டுள்ளது. இது பெற்றோருக்கு மிகப்பெரிய அழுத்தத்தைக் கொடுக்கிறது. பொருளாதாரரீதியிலும், உளவியல்ரீதியிலும். இலங்கையில் இதுவரை நேர்சரிகள் முறையாக ஒழுங்குபடுத்தப்படவில்லை. தனியார் நேர்சரிகளே பெரும்பாலானவை. இவற்றில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு ஏராளமான பணம் தேவைப்படுகிறது. நேர்சரிகள் ஒருவகையில் ஒரு சமூக அந்தஸ்ததை வழங்குவனவாக உள்ளன. நல்ல நேர்சரிக்கு அனுப்பினால்தான் ஊர் மதிக்கும் என்ற தப்பபிப்பிராயம் மக்களிடம் உள்ளது."

நேர்சரிகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பும் தாய்மாரின் குரல்கள் சில முக்கியமான செய்திகளை - குறிப்பாக போரின் பின்னரான சமூகத்தின் - சொல்கின்றன. இக்குரல்கள் கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளில் இருந்து பதிவுசெய்யப்பட்டவை.

"நாங்கள் எல்லாத்தையும் இழந்திட்டம். படிப்பு மட்டும்தான் மிச்சம். பிள்ளையளை எப்படியாச்சும் படிப்பிக்க வேணும். அதுதான் நல்ல நேர்சரியில பிள்ளையைச் சேர்த்தனான். அவருக்கு விருப்பமில்லை. எங்கட வருமானத்துக்கு இது கூட. ஆனா படிப்பெல்லோ"

"நல்ல நேர்சரியில சேர்க்காட்டி ஆக்கள் மதிக்க மாட்டினம். நல்ல நேர்சரியில தான் இங்கிலீசும் படிப்பிக்கினம். அதுதான் என்ர பிள்ளையளைச் சேர்த்தனான். கடன் வாங்கித்தான் நேர்சரிக் காசு கட்டிறன். என்ர பிள்ளையளும் சமூகத்தில மரியாதையோட இருக்க வேணும் தானே"

"நல்ல நேர்சரிக்குப் போகாட்டி நல்ல பள்ளிக்கூடம் கிடைக்காது எண்டு சொன்னவ. அதுதான் காசு கூட எண்டாலும் கொண்டுபோய் சேர்த்தன். பிள்ளையள் எப்படியாச்சும் படிச்சு வந்திடட்டும். செலவு கூடத்தான், ஆனா என்ன செய்யிறது?"

இந்தக் குரல்கள் முன்பள்ளிகள் குறித்த போருக்குப் பிந்தைய சமூகங்களில் வாழும் சாதாரண மக்களின் பார்வையை வெளிப்படுத்தி நிற்கின்றன. அவர்களது புரிதல், கல்வி குறித்த அக்கறை, இயலாமை என எல்லாம் இக்குரல்களில் தொனிக்கின்றன. இவை இலங்கையின் கல்வி குறித்த பதிலளிக்கப்படாத பல வினாக்களை எழுப்புகின்றன.

பாடசாலைக் கல்வியானது, ஏராளமான நெருக்கடிகளைத் தன்னுள் உட்பொதித்து வைத்திருக்கிறது. ஆனால் அவை பேசப்படுவதில்லை. பாடசாலைக் குழந்தைகளிடையே மோசமான ஊட்டச்சத்து நிலைமைகள் - குறிப்பாக குறைந்த வருமானம் மற்றும் கீழ் நடுத்தர வர்க்கக் குடும்பங்கள் அனுபவிக்கும் அதிகரித்து வரும் பொருளாதார சிரமங்கள் காரணமாக - மறக்கப்பட்ட கொள்கைப் பிரச்சினையாகும். பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் உள்ள குறைந்த வருமான சமூகப் பின்னணியில் இருந்து வரும் மாணவர்களுக்கும்கூட மோசமான ஊட்டச்சத்துப் பிரச்சினை உள்ளது.

பெரும்பாலான பாடசாலை ஆசிரியர்களிடையே கற்பித்தல், பயிற்சி, மதிப்பீடு மற்றும் வழிகாட்டுதல் திறன்களில் தொழில்முறையில் தேக்கநிலை இருப்பதால் பாடசாலைக் கல்வியின் முன்னேற்றங்கள் கடுமையாகத் தடுக்கப்படுகின்றன. பெரும்பாலான ஆசிரியர்கள் ஒரே ஒரு, நிச்சயமாக தவறான கற்பித்தல் முறையை மட்டுமே கடைப்பிடிக்கின்றனர். இது (அ) மாணவர்களுக்கு குறிப்புகளை எழுதச் சொல்வது, (ஆ) மாணவர்களை மாதிரிப் பதில்களை மனப்பாடம் செய்து தேர்வுகளில் அவற்றை மீண்டும் சொல்லச் சொல்வது, மற்றும் (இ) இலக்குக் கேள்விகள் என்று அழைக்கப்படுபவற்றுக்கு மட்டுமே தயாராகும்படி மாணவர்களை வற்புறுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கியது. பொதுவாக பாடசாலை

ஆசிரியர்கள் தங்கள் பாட அறிவைப் புதுப்பிக்கவோ அல்லது புதிய திறன்களைப் பெறவோ வாய்ப்புகள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இதன் விளைவாக, அவர்கள் மாணவர்களைப் படைப்பாற்றலுக்காக ஊக்குவிக்கத் தவறிவிடுகிறார்கள்.

பாடசாலைகள் குறித்த பெற்றோரின் நிலைப்பாடுகள், அனுபங்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றன. கொழும்பில் உள்ள தமிழ்பேசும் பிள்ளைகளின் பெற்றோர் கீழ்வருமாறு நினைக்கிறார்கள்:

“நல்ல தனியார் பள்ளிக்கூடத்தில என்ர பிள்ளையை சேர்த்திருக்கிறன். அது வேதப் பள்ளிக்கூடம், ஆங்கிலத்தில படிப்பிக்கினம். யுனிவர்சிட்டி கிடைக்காட்டியும் பள்ளிக்கூடத்தைக் காட்டி வேலை எடுக்கிறது ஈசி. புள்ளை டியூசனிற்குப் போகேக்க இந்தப் பள்ளிக்கூடத்தில படிக்கிறது என்று சொன்னா மதிப்புத்தானே.”

“பிள்ளையள் நல்ல தனியார் பள்ளிக்கூடத்தில தான் படிக்கினம். படிப்புச் சரியில்ல. அதுக்கு டியூசன் இருக்குத் தானே. பெரிய பள்ளிக்கூடத்தில படிச்சினம் என்டது, பாங்க் மாதிரி இடங்களில வேலை எடுக்க சுகந்தானே. இங்கிலீசும் எல்லோ நல்லாக் கதைக்கப் பழகுவினம்.”

வடக்கில் உள்ள பெற்றோர் வெவ்வேறுபட்ட கருத்துகளை வெளிப்படுத்தினார்கள். போருக்குப் பிந்தைய சூழலில் தரமான பாடசாலைகள், அடிப்படை வசதிகள் ஆகியன அவர்களின் பிரதான கவலைகளாக இருந்தன. அதேபோல தரமான கல்வியை வழங்கும் ஆசிரியர்களின் பற்றாக்குறை, டியூசன் நிலையங்களில் அதிகளவான நம்பிக்கை என்பன பாடசாலை குறித்த ஐயங்களை எழுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்கள். எடுத்துக்காட்டாக சில மேற்கோள்கள் வருமாறு:

“நாங்கள் மீளக்குடியேறி பத்து வருடத்துக்கு மேலாகிவிட்டது. இன்னும் பாடசாலைகளுக்குப் போதுமான அடிப்படை வசதிகள் இல்லை. நல்ல கழிப்பிடம் இல்லை. இது பெண் பிள்ளைகளுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. வறுமைக்கோட்டுக்குட்பட்ட பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களைக் கவனிக்க எந்தவொரு திட்டமும் இல்லை.”

“இங்க ஒரு பெரிய அசமத்துவம் நடக்கிது. பெரிய பள்ளிக்கூடங்களுக்கு நிறைய நிதி வருகுது. பழைய மாணவர்களும் வெளிநாடுகளில இருந்து காசு அனுப்பினம். ஆனால் கிராமப் பள்ளிக்கூடங்கள், ஊர்ப்பள்ளிக்கூடங்கள் இன்னும் அபிவிருத்தி அடையேல்ல. இப்பவும் எல்லாம் நகரப் பள்ளிக்கூடங்களுக்குத் தான் செல்ல விரும்பினம். ஏங்கட ஊர் பள்ளிக்கூடங்கள் கவனிப்பாரற்றுக் கிடக்குது.”

“பெரிய பள்ளிக்கூடங்களுக்குப் போனாலும் அங்கேயும் ஏற்றத்தாழ்வு இருக்குது. பெரிய ஆக்களின்ட பிள்ளையளை தான் எல்லாத்துக்கும் முன்னுக்கு விடுவினம். எங்கட பிள்ளையளின்ட பாடு கஷ்டம். நீங்கள் கொஞ்சம் குறைஞ்ச ஆக்கள் எண்டா வாய்ப்பு குடுக்க மாட்டினம். 30 வருசம் போராடினது நாங்கள் தான். ஆனால் எங்களிட்ட சமத்துவம் இல்லை. மனிசனை மதிக்கிற பழக்கமில்லை. இங்க கல்வி எல்லாருக்கும் பொது இல்ல.”

இந்தக் கூற்றுகள் போருக்குப் பிந்தைய எமது சமூகத்தின் பிரதிபலிப்புகள். இவை எமது அக முரண்பாடுகள் குறித்து தொடர்ச்சியாகக் கேள்விகளை எழுப்பிய வண்ணமேயுள்ளன. இவ்வினாக்கள் ஆராயப்படாமல், தீர்வு நோக்கி நகராமல் விடுதலைக்காகப் போராடிய சமூகம் நாங்கள் என்று சொல்லிக்கொள்வதில் அர்த்தமில்லை.

இலங்கையின் பாடசாலைக் கல்வியின் சிதைவில் தனியார் துறை முக்கிய பங்காற்றியுள்ளது. இணைக்கல்வி வாய்ப்புகளை வழங்குவதில் தனியார் துறையின் ஈடுபாடு, கல்வியின் குறிக்கோள்கள் மற்றும் நன்மைகள் குறித்து பல சிதைவுகளுக்கும் எதிர்மறையான விளைவுகளுக்கும் வழிவகுத்துள்ளது. நிர்வகிக்கப்படாத கல்வித்துறையின் நுழைவு காரணமாக அதிகரித்து வரும் கல்விச் செலவு, இலவசக் கல்வி என்ற கருத்தையே கடுமையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது. இது பாடசாலைக்கல்வியில் ஓர் அராஜக நிலையை உருவாக்கியுள்ளது.

எந்த ஒழுங்குமுறைக் கட்டமைப்பும் இல்லாமல், இலாபம் தேடும் தனியார் கல்வி நிறுவனங்களின் கட்டுப்பாடற்ற பெருக்கம், தனியார்துறை தலைமையிலான கல்விக்கான அணுகல் என்பன புதிய ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுத்துள்ளன. தற்போது, இந்த நிறுவனங்களால் வழங்கப்படும் கல்வி மற்றும் பயிற்சியில், தரம் மற்றும் தரநிலைகளை உறுதி செய்வதற்கான எந்த அரசாங்க வழிமுறைகளும் இல்லை; மதிப்பீடுகள்

மற்றும் தேர்வுகளும் இல்லை. இதனால், ஒரு நாகரிகவளமாக கல்வியின் சமூக நோக்கத்தை அவர்கள் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளனர். அரச மற்றும் அரசுசாரா துறைகள் இரண்டிலும் தொழில்துறையின் இயலாமை, பொருளாதார மந்தம் ஆகியன அனைத்து மட்டங்களிலும் படித்த இளைஞர்களுக்குப் போதுமான வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியாத நிலையைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளன. தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் பெருக்கம் முதன்மையாக சமூகத்தின் மிகக்குறைந்த பிரிவுகளுக்கு மட்டுமே உதவுகிறது. இந்த நிலைமை அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு அணுகலில் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கூர்மைப்படுத்தியுள்ளது.

பாடசாலைக் கல்வியில் ஏற்பட்டுள்ள சிதைவுகள் உயர்கல்வியிலும் பிரதிபலிக்கின்றன. உலகளாவிய பொருளாதார மற்றும் தொழிலாளர் சந்தை போக்குகளில் அவ்வப்போது ஏற்படும் அழுத்தங்களுக்கு, பல தற்காலிக மற்றும் விலையுயர்ந்த பதில்கள் உள்ளன. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகக் கல்வியில் செயற்படுத்தப்படும் இத்தகைய சீர்திருத்த நடவடிக்கைகள், நாட்டின் கல்வியின் நிலையான மறுகட்டமைப்பிற்கான உள்ளூர்ரீதியாக உருவாக்கப்பட்ட தொலைநோக்குகள் மற்றும் முன்னோக்குகளை புறக்கணித்துள்ளன. உள்ளூர் அறிவுஜீவிகளிடமிருந்து ஆக்கபூர்வமான உள்ளீடுகளைப் புறக்கணிப்பதும், கல்வித்துறையில் ஏற்படும் மாற்றத்திற்கான அவர்களின் அக்கறையின்மையும் சமூகங்களின் நேரடிப் பங்குதாரர்களின் பங்கேற்பு இல்லாமைக்கு வழிவகுத்தன.

இலங்கை தனது மூன்றாம்நிலை மற்றும் தொழிற்பயிற்சிக் கல்வித்துறையை ஒரு வலுவான மற்றும் முன்னோக்கிய கல்விப்பிரிவாக வளர்த்து ஆதரிப்பதில் இன்னும் வெற்றிபெறவில்லை. பதினாறு வயதுக்குட்பட்ட இளம் பாடசாலைப் படிப்பை முடித்தவர்களின் வேலைவாய்ப்பு விருப்பங்களை இது பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், போதுமான எண்ணிக்கையில் அவர்களை ஈர்க்கத் தவறிவிட்டது. (அ) புதிய தலைமுறை இளைஞர்களுக்கு இது வழங்கும் படிப்புகள் மற்றும் பயிற்சியின் கவர்ச்சியற்ற தன்மை, (ஆ) மாணவர்களுக்குப் போதுமான நிதி ஆதரவு இல்லாதது, (இ) பெண் மாணவர்களின் தேவைகள் மற்றும் தொழில்சார் விருப்பங்களை பூர்த்தி செய்யத் தவறியது, மற்றும் (ஈ) தொழில்துறைப் புரட்சியின் சவால்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு இன்னும் பதிலளிக்கத் தயாராக இல்லாத ஒட்டுமொத்த கல்விக் கண்ணோட்டத்தின் பழமைவாதத் தன்மை என்பன இதற்கான காரணங்களாகும்.

போருக்குப் பிந்தைய சூழலில் இலங்கையின் வடக்கில் உள்ள 5 மாவட்டங்களில் உள்ள 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பைப் பெறாத மாணவர்களின் ஒரு தொகுதியினரிடம் இரண்டாண்டுகால ஆய்வை மேற்கொண்டோம். அவ்வாய்வின்படி பெரும்பான்மையானோர், தொழிற்பயிற்சிகளை விரும்புவதில்லை. அதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தயாராக இல்லை. அவ்வேலைகள் கடினமானவை என்பது பொதுக்கருத்தாக இருக்கிறது. சிலர், புகைப்படக்கலை, தகவல்தொழில்நுட்பம் போன்ற கற்கைநெறிகளைக் கற்கிறார்கள். அவர்களுக்கு அது கவர்ச்சிகரமாக இருக்கிறது. பலர் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்வது பற்றிய எண்ணத்திலேயே இருக்கிறார்கள். இன்னும் சிலர் அரசியல்வாதிகளின் தயவில் ஒரு அரசாங்க வேலையைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகத் தெரிவித்தார்கள். இவை, போருக்குப் பிந்தைய சமூகம் என்ற வகையில் கவனிக்க உகந்த இளையோர் மனப்பாங்குகளாகும்.

## பல்கலைக்கழகக் கல்வி: நிச்சயமற்ற எதிர்காலத்தை நோக்கி

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் கடந்த இரண்டு தசாப்தகாலமாக சரிவைச் சந்தித்து வருகின்றன. போருக்குப் பிந்தைய சூழலில் நாட்டின் வடக்குக் கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களும் அதன் வளாகங்களும் மிகுந்த வினைத்திறனுடன் மீள் எழும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் அவ்வாறு நிகழவில்லை. மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்போக்கான தன்மையுடையனவாக இப்பல்கலைக்கழகங்கள் மாறியுள்ளன. இப்பல்கலைக்கழகங்களின் கவுன்சிலில் உறுப்பினர்களாக இருந்தவர்கள், இப்பல்கலைக்கழகங்களின் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து தொடர்ச்சியாகக் கவலை வெளியிட்டு வந்துள்ளனர். இப்பல்கலைக்கழகம் ஒன்றின் கவுன்சிலில் சிலகாலம் உறுப்பினராக இருந்த, நன்கறியப்பட்ட ஆய்வாளரான ஒரு சிங்களப் பேராசிரியர் என்னிடம் இவ்வாறு குறிப்பிட்டார்:

“பல்கலைக்கழகத்தில் நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தகுதியில்லாதோருக்கெல்லாம் பதவி உயர்வும், ஒருவருக்கொருவர் ஆதரவாகச் செயற்பட்டு தவறான விடயங்களை முன்னெடுப்பதும், கல்வி குறித்தும் கற்பித்தல் குறித்தும் மிகக் குறைந்த அக்கறையும் என பல்கலைக்கழகம் முன்னேறவியலாதளவு சீரழிந்துள்ளது. நான் இவ்வாறு சொல்வதற்கு மன்னிக்கவும், இன்னும் 100 ஆண்டுகள் ஆனாலும் இந்தப் பல்கலைக்கழகத்தைத் திருத்த இயலாது. மிகவும் சீரழிந்த, பிற்போக்கான மனநிலை இதன் மையமாக உள்ளது. அதை மாற்றமால் இந்தப் பல்கலைக்கழகத்தால் பயனுறுதி வாய்ந்த பங்களிப்பை கல்விப்புலத்திற்கோ, சமூகத்திற்கோ ஆற்றவியலாது”.

இலங்கை பொதுப் பல்கலைக்கழகங்களில் ராகிங் (தமிழில், பகடிவதை) ஒரு மிகப்பாரிய பிரச்சினையாகும். பகடிவதைக்கு உட்படும் புதுமுக மாணவர்கள், தாம் இரண்டாம் மூன்றாமாண்டு மாணவர்களாக மாறும்போது பகடிவதையை நிகழ்த்துபவர்களாக மாறுகிறார்கள். தமிழில் பகடிவதை என்பது சரியான சொல்லல்ல. ஏனெனில் நிகழ்வது வன்முறையும் கொடுமையுமே. இங்கே பகடி என்ற ஒன்றே இல்லை. சில ஆய்வுகள் விரிவுரையாளர்களும் இந்த ராகிங்கில் ஈடுபவதைச் சுட்டிக்காட்டுகிறது. உண்மை யாதெனில் பல்கலைக்கழக நிர்வாகத்தினதும் விரிவுரையாளர்களதும் ஆதரவு இன்றி ராகிங் சாத்தியமில்லை. ராகிங்கில் பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கையோடு புகார் அளிப்பதற்கான வாயில்கள் எதுவுமில்லை. ராகிங் கொடுமைக்கு புகாரளித்த மாணவர்கள் விரிவுரையாளர்களால் பழிவாங்கப்பட்ட நிகழ்வுகள் போருக்குப் பின்னரான சூழலில் நாட்டின் வடக்குக் கிழக்கில் உள்ள பல்கலைக்கழக வளாகங்களில் நிகழ்ந்துள்ளன.

ராகிங் என்பது ஒரு சிக்கலான சமூக கலாசார நிகழ்வு. இது பரந்த இலங்கைச் சமூகத்தில் படிநிலை மற்றும் வன்முறையின் பிரதிபலிப்பாகும். பொறுப்புள்ள பல்கலைக்கழக நிர்வாகிகளின் செயலற்ற தன்மையால் இது அதிகரிக்கிறது. ராகிங் மூலம் ஒரு பல்கலைக்கழக மாணவன் இறந்த பிறகு, 1998 இல் இயற்றப்பட்ட ராகிங் எதிர்ப்புச் சட்டம் இருந்தாலும், ராகிங்கை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு மிகவும் உறுதியான, பன்முக அணுகுமுறை இதுவரை இல்லை. பல்கலைக்கழகங்கள் அதிகாரபூர்வமாக ராகிங்கைத் தடை செய்கின்றன. ஆனால் அதை முற்றிலுமாக ஒழிப்பதில் அர்ப்பணிப்பைக் காட்டவில்லை. தொடர்ச்சியான துன்புறுத்தலின் மன அழுத்தம் மற்றும் அவர்களின் கல்வி நடைமுறைகள் மீதான அதன் தடைகள் காரணமாக ராகிங் மாணவர்களின் கல்விச் செயற்றிறனைப் பாதிக்கிறது.

பல்கலைக்கழகங்களில் பாலியல் துன்புறுத்தல் என்பது யாரும் பேசவிரும்பாத ஆனால் பலரும் நன்கறிந்த ஒரு விடயமாக உள்ளது. 2021 ஆம் ஆண்டு தனது அறிக்கையில் இதனைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஓரளவு விரிவாகப் பேசியுள்ளது. குறைந்தபட்சம், பாலியல் துன்புறுத்தல்கள் நிகழ்கின்றன; பாலியல் குற்றவாளிகளாக பல்கலைக்கழக ஊழியர்கள் இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறது. அதேவேளை, குறித்த விடயத்தைக் கையாள்வதை பல்கலைக்கழக நிர்வாகங்கள் தவிர்க்கின்றன என்பதையும் இது சுட்டிக்காட்டுகிறது.

பல்வேறு வகையான வன்முறைகள் காரணமாகவும், வளங்கள் குறைவாக உள்ள சூழலிலும், கற்றலின் பொதுவான மன அழுத்தம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், பல்கலைக்கழகங்களில் அதிர்ச்சியூட்டும் வகையில் அதிக அளவிலான மனநலப் பிரச்சினைகள் இருப்பது ஆச்சரியமல்ல. வன்முறையை இயல்பாக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த நிறுவன ஆதரவையும் வழங்காத ஒரு கலாசாரம், வினைத்திறனற்ற நோயுற்ற மனிதர்களையே வெளித்தள்ளுகின்றன.

இந்தப் பின்புலத்தில் போருக்குப் பிந்தைய காலப்பகுதியில் நாட்டின் வடக்குக் கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்விகற்ற - கற்கும் மாணவர்கள் இது குறித்துத் தெரிவித்த கருத்துகள் மேற்சொன்னவற்றுக்கு வலுச்சேர்க்கின்றன.

“இங்க நல்லா வாளி வைக்கோணும், அப்பதான் நல்ல மாக்ஸ் கிடைக்கும். வாளி வைக்காட்டிப் பாஸ் பண்ணிறது கஸ்டம். நல்லா வாளி வைக்கிற ஆக்களுக்குத்தான் நல்ல கிளாஸ் கிடைக்கும். அல்லாட்டு பாஸ் பண்ணிக்கொண்டு போக வேண்டியதுதான். பர்ஸ்ட் கிளாஸ், செக்கண்ட் அப்பர் எல்லாம் கிடைக்காது.”

“இங்க நீங்கள் லெட்சரரா வர வேணுமெண்டா, நிறையச் செய்ய வேணும். ஏல்லாருக்கும் பந்தம் பிடிக்க வேணும். அவையளுக்குப் பிடித்த ஆளாய் இருக்க வேண்டும். படிக்கத் தேவையில்லை, அவர்களின் கீழான ஆளாக இருக்கிறதுதான்

முக்கிய தகுதி. இங்க லெக்சரரா வேலை செய்யிற ஆக்கள் முக்கால்வாசிப்பேர் அப்படி வந்த ஆக்கள் தான்."

"தாற நோட்டைப் பாடமாக்கி எழுதத் தெரிஞ்சாத்தான் நல்ல கிரேட் வரும். புதிதாக வாசிச்சு எழுதினா மோசமான கிரேட் தான். இங்க நாங்கள் யோசிக்கிறதோ, கேள்வி கேட்கிறதோ படிப்பிக்கிற ஆக்களுக்குப் பிடிக்காது. டிகிரியை வாங்கிக் கொண்டு ஓடுவம் என்றதுதான் இங்க புத்திசாலி ஆக்களின்ட மனநிலையாக் கிடக்குது."

"இந்த குப்பை சிஸ்டத்தைப் பார்த்தபிறகு லெக்சரரா வாற ஆசையே போட்டுது. நான் பர்ஸ்ட் கிளாஸ் எடுத்தாலும் எனக்கு வேலை தராயினம். தப்பித்தவறி தந்தாலும் இந்தச் சீரழிந்த சிஸ்டத்தைத்தான் பின்பற்றோனும். இதில என்ன பிரயோசம்."

"இப்ப பல்கலைக்கழகங்கள், பள்ளிக்கூடங்கள் மாதிரி, டியூசன் சென்டர் மாதிரி வந்திட்டுது. இவையள், படிப்பிக்கிறது மட்டும் தான் பல்கலைக்கழகங்களின் வேலை எண்டு நினைத்துக் கொண்டிருக்கினம். ஆய்வு என்றவொரு விசயமே இங்க இல்லை. அரசாங்க உத்தியோகத்துக்கு ஆக்களை ரெடி பண்ணுறதுதான் இவையளின்ர வேலை என்றது முடிஞ்ச முடிவு. படிக்கிற பிள்ளையளும் எப்படியாவது டிகிரியை வைத்துக்கொண்டுபாங்கிலயோ,அரசாங்கத்திலயோ ஒரு வேலை எடுக்கோணும் எண்டு நினைக்கினம்."

பல்கலைக்கழகத் கல்வித்துறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் சீர்திருத்தங்களுக்கான கொள்கை - சிந்தனை, பல்வேறு வகையான சுயநலவாதிகளால் குறுகிய அரசியல்மயமாக்கப்பட்ட எதிர்வினைகளால் தடுக்கப்படுகிறது. அவற்றில் முக்கியமானவை: சுதந்திரத்திற்குப் பிந்தைய பல்வேறு அரசாங்கங்கள், அரசியல் கட்சிகள், ஆசிரியர் சங்கங்கள் மற்றும் மாணவர் சங்கங்கள். இதேபோல், கல்விச் சமூகங்களும் அவற்றின் தொழில்முறைச் சங்கங்களும் ஆராய்ச்சி அடிப்படையிலான மாற்றுக் கொள்கை விருப்பங்களை வழங்குவதில் தொடர்ந்து தோல்வியடைந்ததால், கல்விச் சீர்திருத்தங்கள் குறித்த பொதுவிவாதம் மோசமாகிவிட்டது. இதனால் பல்கலைக்கழகங்கள் பயனற்ற நிறுவனங்களாக மாறிவருகின்றன. இது தனியார் பல்கலைக்கழகங்களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. அதேவேளை தனியார் பல்கலைக்கழகங்கள் பட்டங்களை விற்பனை செய்யும் கடைகளாக மாற்றமடைந்துள்ளமை துயரமே.

இந்தநிலைக்கு நாம் ஏன் வந்தடைந்தோம் என்று சிந்திக்கும்போது, பல்கலைக்கழகக் கல்வி என்பது அதன் காலாவதியான இலக்குகள், நிறுவன அமைப்பு மற்றும் நிறுவன கலாசாரத்திலிருந்து மாறுவதற்கான எந்தவொரு பெரிய சீர்திருத்தத்தையும் எதிர்த்ததுறையாகும். மாணவர் சேர்க்கை முதல் கற்பித்தல் திட்டங்கள் மற்றும் உரிமையை பன்முகப்படுத்துதல் வரை பல்கலைக்கழகத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் உண்மையான சீர்திருத்தங்கள், அரசியல் அமைதியின்மைக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்பிற்கும் வழிவகுத்துள்ளன. கடந்த இருபது ஆண்டுகளில் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் கல்வித்தரம் குறைந்துள்ளமைக்குப் பல காரணங்கள் பங்களித்துள்ளன. இவை பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் நிர்வாக அம்சங்களுடன் பின்னிப்பிணைந்துள்ளன.

### 1. நிதி நெருக்கடி மற்றும் பொருளாதாரச் சவால்கள்

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, குறிப்பாக 2000களின் பிற்பகுதியில் இருந்து, பல்கலைக்கழகங்களின் நிதி ஒதுக்கீட்டைக் கணிசமாகப் பாதித்துள்ளது. இலவசக் கல்வி முறைமையை தொடர்ந்து பராமரிக்க அரசாங்கத்திற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், பல்கலைக்கழகங்களுக்கு போதிய நிதி வழங்கப்படவில்லை. இது பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தியது:

***1.1 உட்கட்டமைப்புப் பற்றாக்குறை:***
பல்கலைக்கழகங்களில் நவீன ஆய்வகங்கள், நூலகங்கள், மற்றும் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதி இல்லாததால், மாணவர்களுக்குத் தரமான கற்றல் சூழல் கிடைப்பது குறைந்தது.

***1.2. பணியாளர் பற்றாக்குறை:*** தரமான ஆசிரியர்களை தக்கவைப்பதற்கு போதிய ஊதியம் இல்லாததால், பல திறமையான கல்வியாளர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர். இது ஆசிரியர் - மாணவர் விகிதத்தைப் பாதித்து, கற்பித்தல் தரத்தைக் குறைத்தது.

***1.3 ஆய்வு மற்றும் மேம்பாடு:***
பல்கலைக்கழகங்களில் ஆய்வு நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கப்படாததால், புதிய அறிவு உருவாக்கம்

இல்லாமை மற்றும் உலகளாவிய தரவரிசைகளில் மிகவும் பின்தங்கிய நிலை ஆகியவற்றிற்கு இலங்கைப் பல்கலைக்கழகங்கள் தள்ளப்பட்டன.

### 2. அரசியல் தலையீடு மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள்

பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு ஒரு முக்கிய காரணமாக உள்ளது. இது பல வழிகளில் கல்வித்தரத்தைப் பாதித்துள்ளது:

**2.1 நியமனங்களில் தலையீடு:** தகுதியற்ற நபர்கள் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டதால், திறமையான நிர்வாக முடிவுகள் எடுக்கப்படுவது குறைந்தது.

**2.2 மாணவர் அரசியல்:** மாணவர் இயக்கங்களின் அரசியல் செல்வாக்கு, பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறைகளை அடிக்கடி தடை செய்தது. இதனால், கல்வி நாட்கள் இழக்கப்பட்டன.

**2.3 கொள்கைத் தொடர்ச்சியின்மை:** அரசாங்கங்களின் மாற்றத்துடன் கல்விக் கொள்கைகளும் மாறியதால், நீண்டகால திட்டமிடல் மற்றும் மேம்பாடு என்பன பாதிக்கப்பட்டன.

### 3. பாடத்திட்டத்தின் காலாவதி மற்றும் தொழில்சார் தேவைகளுடன் பொருந்தாமை

பல்கலைக்கழகப் பாடத்திட்டங்கள் பெரும்பாலும் உலகளாவிய தொழில்சார் தேவைகளுக்கு ஏற்ப புதுப்பிக்கப்படவில்லை. இது மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனைக் குறைத்தது:

**3.1 தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் ஒத்திசைவு இன்மை:** தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, மற்றும் பிற புதிய துறைகளில் பாடத்திட்டங்கள் மேம்படுத்தப்படவில்லை. இதனால், பட்டதாரிகள் உலகளாவிய போட்டியில் பின்தங்கினர்.

**3.2 நடைமுறைப் பயிற்சிக் குறைபாடு:** பல பாடநெறிகள் கோட்பாட்டு அறிவை மட்டுமே வழங்கின, ஆனால் நடைமுறைத் திறன்களை வளர்ப்பதற்கு போதிய வாய்ப்புகள் இல்லை.

**3.3 மென்திறன் பற்றாக்குறை:** தலைமைத்துவம், தொடர்பாடல், மற்றும் பிரச்சினை தீர்க்கும் திறன்களை வளர்க்கும் கல்விமுறைகள் இல்லாததால், பட்டதாரிகள் தொழில்சார் உலகில் போராடினர்.

### 4. மாணவர் திறன் மற்றும் உந்துதல் குறைவு

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் முறையில் உள்ள குறைபாடுகள், திறமையான மாணவர்களை மட்டும் உள்வாங்குவதைத் தடுத்தன. மேலும், பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக அழுத்தங்கள் மாணவர்களின் கல்வி உந்துதலைப் பாதித்தன:

**4.1 மாணவர் தெரிவு முறை:** உயர்தரப் பரீட்சை முடிவுகளை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதால், அவர்களின் ஒட்டுமொத்தத் திறன்கள் மதிப்பிடப்படவில்லை.

**4.2 பொருளாதார அழுத்தங்கள்:** பல மாணவர்கள் கல்வியுடன் பகுதிநேர வேலைகளைச் செய்ய வேண்டியநிலை இருந்ததால், அவர்களின் கவனம் மற்றும் கல்விச் செயற்பாடு குறைந்தது.

### 5. உலகளாவிய தரவரிசைகளில் பின்னடைவு

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் உலகளாவிய தரவரிசைகளில் முன்னேறவில்லை. இதற்கு முக்கிய காரணங்களாக பின்வருவன அடையாளம் காணப்படுகின்றன:

**5.1 ஆய்வு வெளியீடுகள் குறைவு:** உலகளாவிய தரவரிசைகள், ஆய்வு வெளியீடுகள் மற்றும் மேற்கோள்களை அடிப்படையாகக் கொண்டவை. இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆய்வு நடவடிக்கைகள் குறைவாக இருப்பதால், அவை தரவரிசைகளில் பின்தங்கின.

**5.2 பன்னாட்டு ஒத்துழைப்பு இன்மை:** வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடனான கூட்டு ஆய்வுகள் மற்றும் மாணவர் பரிமாற்றத் திட்டங்கள் குறைவாக இருந்தன, இது உலகளாவிய அங்கீகாரத்தைக் குறைத்தது.

**5.3 மொழித்தடைகள்:** ஆங்கிலமொழியில் கற்பித்தல் மற்றும் ஆய்வு வெளியீடுகளை உருவாக்குவதற்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே போதிய திறன் இல்லாதது, உலகளாவிய அறிவுப் பரிமாற்றத்தில் இலங்கையைப் பின்னுக்குத் தள்ளியது.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் நெருக்கடியை எதிர்கொள்ள, பல்கலைக்கழகங்களுக்கு போதிய நிதி ஒதுக்குதல், நிர்வாக சுதந்திரம், பாடத்திட்ட மேம்பாடு, ஆய்வு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பை ஊக்குவித்தல் என்பன அவசியம்.

இவைமூலம், இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மீண்டும் உலகளாவிய தரத்தில் ஒளிர முடியும். இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பழைய பாடத்திட்டங்களைப் பின்பற்றுவதற்கும், ஆய்வை ஊக்குவிக்காமல் இருப்பதற்கும் நிதிப் பற்றாக்குறை, நிர்வாக மந்தநிலை, பழமைவாதக் கல்வி அணுகுமுறை மற்றும் உலகளாவிய தொடர்பின்மை என்பன முக்கிய காரணங்கள் ஆகும். இந்தச் சவால்களை எதிர்கொள்ள, பல்கலைக்கழகங்களுக்குப் போதிய நிதி, நிர்வாகச் சுதந்திரம், தொழிற்துறை ஒத்துழைப்பு ஆய்வுக் கலாசாரத்தை வளர்க்கும் முயற்சிகள் தேவை.

### நிறைவுக் குறிப்புகள்

ஆசிய நாடுகளிடையே எழுத்தறிவிலும் பாடசாலைக் கல்வியிலும் ஒரு காலம் முன்னிலை வகித்த இலங்கையில், ஆரம்பக் கல்வியும் இடைநிலைக் கல்வியும் பல தசாப்தங்கள் நீண்ட கரிசனையற்ற புறக்கணிப்பால் நெருக்கடியிலுள்ளன. இந்த மோசமானநிலைக்கு நாம் ஏன் வந்தடைந்தோம் என்பதை இப்போதாவது சிந்திப்பது சிறப்பு. கல்வி என்பது அனைவரின் அடிப்படை உரிமை. அனைத்துக் குடிமக்களும் கல்வியை மட்டுமல்ல, எந்த அடிப்படையிலும் பாகுபாடு அல்லது பற்றாக்குறை இல்லாமல் தரமான கல்வியைப் பெறுவதை உறுதி செய்வது அரசின் கடமை ஆகும்.

அதேவேளை பொதுமக்களின் மனநிலையிலும் மாற்றம் தேவைப்படுகிறது. பெயர்பெற்ற பாடசாலைகளில் இடம் பிடிக்கவும் அந்தஸ்துமிக்க பல்கலைக்கழகப் படிப்புக்கு அனுமதி பெறவும் போட்டியிடுதற்கே முதன்மை தரப்படுகிறது. வசதியுடையோர் தமது பிள்ளைகள் பெறும் படிப்பின் தன்மை பற்றிச் சொற்ப விளக்கமுமின்றி அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புகின்றனர், அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் உள்நாட்டுக் 'கிளைகளிற்' சேர்க்கின்றனர். தனியார் பல்கலைக்கழகங்களின் வருகையைப் பெற்றோர் பலர் மலிவான ஒரு மாற்றுவழியாகக் காண்கின்றனர். கல்வி நெருக்கடியின் வேர்கள், கல்வியின் நோக்கத்தைப் பெற்றோரும் பிள்ளைகளும் விளங்கியுள்ள விதத்திலும், பயனுள்ள தொழிற்துறைகள் பற்றிய கற்பனையான மனேபாவத்திலும் உள்ளன. இது மாற்றமடைய வேண்டும். எமது பாடசாலைக் கல்விமுறைமை குறைபாடானது. அதன் அழுத்தம் பல்கலைக்கழகம் புகக்கூடிய 5 சதவீதமானோர் மீதுள்ளது. பாடசாலையும் சமூகமும் 95 சதவீதமானோரைத் 'தோற்றோராகவே' கருதுகின்றன. இது மிகவும் தவறானது. எல்லாவற்றிலும் மேலாக, சமூகத்தின் பகுதியினராகத் தம்மை உணரும் சமூக ஈடுபாடுடைய பொறுப்புணர்வுள்ள பிரசைகளை உருவாக்குவதே கல்வியின் நோக்கம் என ஆசிரியர்களதும் மாணவர்களதும் பெற்றோரதும் மனங்களில் பதிப்பது பிரதானமானது.

பலர் மாணவரின் ஆங்கில அறிவு போதாமையைப் பாரிய பிரச்சினையாக முன்னிறுத்துகின்றனர். முன்னேறிய அறிவின் ஒரே வாசல் ஆங்கிலம் என்ற தவறான பார்வையின் விளைவே இந்த நிலைப்பாடு. இது தவறானது. இத்தகைய கொலனிய மனச்சிறையினின்று நாம் விடுபடுவது முக்கியம். அதன் பொருள், பயனுள்ள ஒரு மொழியெனும் வகையில், ஆங்கிலத்தை மறுப்பதல்ல. நவீனத்துவத்தின் வளரும் தேவைகட்கு முகங்கொடுக்குமாறு தேசியமொழிகளின் பாவனையைத் தரமுயர்த்த வேண்டும். ஏனெனில், பாடசாலைகளில் ஆங்கிலமூலக் கல்வி என்பது எதிர்பார்த்த பயனைத்தரத் தவறியுள்ளது என்பதையும் நோக்க வேண்டும். உலகத் தொழிற்சந்தையில் வேலைபெறக்கூடியோரை உற்பத்தி செய்வதே கல்வியின் நோக்கம் எனும் வெகுதவறான புரிதலும் இதில் உள்ளது. இவை மாற்றமடைய வேண்டும். எமது சிந்தனை விரிய வேண்டும்.

சமூக மாற்றம், சமூக சமத்துவம், சமூக இயக்கம், ஜனநாயகக் குடியுரிமை, பன்முகத்தன்மைகொண்ட தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தனிநபர் மற்றும் சமூக அபிலாஷைகளை உணர்ந்து கொள்வதற்கு கல்வி ஒரு முக்கிய வழிமுறையாகும். எனவே, கல்வியின்திறன் மற்றும் பங்கைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் ஆகியவை, நேர்மறையான சமூக மாற்றத்திற்கும் தனிநபர் மற்றும் சமூக மேம்பாட்டிற்கும் உந்துசக்தியாக, அரசாங்கத்திற்கும் குடிமக்களுக்கும் இடையிலான சமூகத் தொடர்புடன் ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும். கல்வியின் அனைத்து மட்டங்களிலும் சமத்துவம் முக்கியமானது என்பதில் கொள்கை வகுப்பாளர்களின் தெளிவான உறுதிப்பாட்டை இது கோருகிறது. இதைச் சாத்தியமாக்க பரந்துபட்ட மக்களின் பங்குபற்றுகை அவசியமாகின்றது. பொதுசன மட்டத்தில் கல்வி பற்றி ஆரோக்கியமானதொரு அணுகுமுறையும், கல்விக் கொள்கையிலும் நடைமுறையிலும் கூடியளவில் பொதுமக்களின் பங்குபற்றலும் அவசரமானதும் அவசியமானதுமான தேவையாகும்.

கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# இலங்கையில் பௌத்தம்: தத்துவமும் நடைமுறையும்

'இலங்கையில் பௌத்தம்' என்னும் இந்தத்தொடர் பௌத்தம் பற்றி மானிடவியலாளர்களாலும் சமூகவியலாளர்களாலும், அரசியல் விஞ்ஞானிகளாலும் எழுதப்பட்ட ஆய்வுகள் பற்றி அறிமுகம் செய்வதாக அமைகின்றது. குறிப்பாக 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் பௌத்த சமய சீர்திருத்தவாதம், சமூகம், பண்பாடு, அரசியல், இன உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களில் அரசியல் பௌத்தத்தின் வகிபாகம் என்பன பற்றி ஆய்வாளர்களின் கருத்துக்கள் விரிவாக இந்தத் தொடரில் நோக்கப்படும். கணநாத் ஒபயசேகர, ஸ்டான்லி ஜே. தம்பையா, எச். எல். செனவிரத்தின, கித்சிறிமலல் கொட, சரத் அமுனுகம, ஜயதேவ உயன்கொட, குமாரி ஜயவர்த்தன, லெஸ்லி குணவர்த்தன ஆகிய இலங்கையின் சமூக விஞ்ஞானிகளின் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் , ஹவ்வார்ட் றிஜின்ஸ், உர்மிலா பட்னிஸ், றிச்சார்ட் கொம்பிரிட்ஜ், யொனதன் ஸ்பென்சர் முதலிய இலங்கையரல்லாத ஆய்வாளர்களின் ஆய்வுகள் சிலவும் இந்தக் கட்டுரைத்தொடரில் விமர்சன நோக்கில் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது.

இந்தியாவிற்கு வெளியே பரவிய பௌத்தம், முதலில் இலங்கைக்குப் பரவியது. அதன் பின்னரே பௌத்தம் உலகின் ஏனைய நாடுகளுக்குப் பரவியது. இலங்கையில் பரவிய பௌத்தம் தேரவாதம் ஆகும். இலங்கையின் பௌத்தத்திற்கு 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான வரலாறு உள்ளது. இக்காரணங்களினால் இலங்கையின் பௌத்தம் தனக்கேயுரிய சிறப்பியல்புகளை உடையதாய் இருக்கிறது. இச்சிறப்பியல்புகளை 'தத்துவமும் நடைமுறையும்' என்னும் தலைப்பில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கடவுள் மறுப்புக் கொள்கை

பௌத்தம் கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டது. அது ஓர் அற ஒழுக்க இயக்கமாகும் (An Ethical Movement). அதனைச் சமயம் என்று கூறுதல் இயலாது என்று வாதிடுவோர் உள்ளனர். இவ்வாதத்தின் தர்க்கரீதியான முடிவு, இலங்கையில் பௌத்தம் என்று ஒரு சமயம் இல்லை; ஓர் அற இயக்கம் அப்பெயரில் இருந்து வந்துள்ளது என்றல்லவா அமைந்துவிடும்? இந்த வாதத்தின் பொருத்தமின்மையை கொம்பிரிட்ஜ் என்ற அறிஞர் எடுத்துக்காட்டியுள்ளார். பௌத்த அறக்கருத்துகள் பௌத்த சமயத்தின் ஓர் அம்சம் மட்டுமே. அது சமயத்தின் அனைத்துப் பண்புகளையும் உடையதாய் உள்ளது என்று அமைதி காண்பதே சரியானது. குறிப்பாக பௌத்த சமயத்தின் சமூக - நிறுவன வடிவங்கள் அதற்குச் சமயத்தின் பண்புகளை வழங்கியுள்ளன என்பதே அறிஞர்களின் முடிவாகும். ஆகையால், ஒரு சமூகத்தின் சமூக வரலாற்றின் ஊடாக அச்சமூகத்தின் சமயம் பற்றி ஆராய்வதை அறிஞர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

கடவுள் மறுப்புக் கொள்கை பௌத்தத்தின் நடைமுறைகளுடன் முரண்பாடின்றி இணக்கம் பெறுவதை அடுத்துப் பார்ப்போம். பௌத்த சமயப் பிரபஞ்சவியல் (Cosmology) இவ்வுலகம், அப்பால் உள்ள உலகம் என்ற இருவேறு உலகங்களைக் குறிப்பிடுகிறது. நாம் வாழும் இவ்வுலகம் பௌதிக உலகம் ஆகும். அப்பால் உள்ள உலகம் 'லோகோத்திர' ஆகும். பௌத்த சமயத்தின் பிரபஞ்சவியலில், அப்பால் உலகில் வாழும் கடவுளர்களுக்கும் தேவர்களுக்கும் அல்லது தேவதைகளுக்கும் இடம் உள்ளது. புத்தர்பிரான் உயர் நிலையிலும், அடுத்தபடியில் கடவுளர்களும், தேவர்களும் வைக்கப்பட்டுள்ளனர். ஆவிகள், பிசாசுகள் போன்ற இயற்கையிறந்த சக்திகளுக்கும் பௌத்தத்தில் இடம் உள்ளது. புத்தர்பிரான் முதல், ஆவிகள், பிசாசுகள் வரை ஒரு படிநிலையமைப்பு உள்ளது. இப்படியான தரக்கட்டமைப்பு (Hierarchy) பௌத்த சமயச் சடங்குகள், நடைமுறைகளை விளங்கிக்கொள்வதற்கு உதவுகிறது. கடவுளர்களுக்கும் தேவர்களுக்கும் தீய ஆவிகள், பிசாசுகள் என்பனவற்றிற்கும் செயல் வகிபாகம் (Functional Role) உள்ளது. மக்கள் புத்த பெருமானிடம் உலகியல் நன்மைகளை வழங்கும்படி கேட்டு முறையிடுவதோ வணங்குவதோ கிடையாது. உலகியல் நன்மைகளை வழங்குபவர்கள் கடவுளர்களும் தேவர்களும் ஆவர். உலகில் தீய செயல்களைச் செய்பவர்களுக்கு தண்டனை வழங்குவன தீய ஆவிகளும் பிசாசுகளுமாகும். இவ்விடயம் சில ஆய்வாளர்களால் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

## சமயமும், இனத்துவமும், அரசும்

இனம், சாதி, மொழி, தேசம் என்ற எல்லைகளைக் கடந்த உலகப் பொதுவான அற ஒழுக்கங்களையும் விழுமியங்களையும் போற்றுவது பௌத்த சமயம். அத்தகையதொரு சமயம் இலங்கையில் சிங்களவரின் இனத்துவ அடையாளத்துடன் பிணைக்கப்பட்டு 'சிங்கள - பௌத்தம்' ஆக வளர்ச்சியுற்றுள்ளது. இந்த அடையாளம் பௌத்தத்தின் உலகப்பொதுமை என்ற விடயத்துடன் முரண்படுகிறது.

பௌத்த சமயத்திற்கும் சிங்கள இனத்திற்கும் இடையிலான பிரிக்கமுடியாத உறவு, இலங்கையின் பௌத்த சமய வரலாற்றின் ஊடாக விளக்கப்படவும் புரிந்துகொள்ளப்படவும் வேண்டும். இலங்கையின் பௌத்த சமய வரலாற்றின் சிறப்புக் கூறுகள் பலவற்றை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

பௌத்த சமயம் இலங்கைக்கு அரச ஆதரவுடன் பரப்பப்பட்டது. துறவிகளான பிக்குகள் பௌத்த சமயத்தின் பரப்புகையிலும் அதனைப் பேணிப் பாதுகாப்பதிலும் முதன்மையான பங்காற்றினர். சிங்கள மக்கள் என்ற அடையாளமும் பௌத்த சமயிகள் என்ற அடையாளமும் ஒன்றிணைந்து 'சிங்கள பௌத்தம்' என்ற ஒருமித்த அடையாளத்தைப் பெற்றது. தொடக்கம் முதலே

இருந்து வந்த அரசு - சமயம் - இனத்துவம் என்ற பிணைப்பு நவீன காலம்வரை தொடந்தது.

தீபவம்சம், மகாவம்சம் போன்ற பௌத்த வரலாற்று நூல்களின் வழியாகக் கட்டமைக்கப்பட்ட இலங்கை வரலாறு மேற்குறித்த சிறப்பியல்புகளுக்கு அழுத்தம் கொடுப்பதாக அமைந்துள்ளது. தீபவம்சம் கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டிலும், மகாவம்சம் 6 ஆம் நூற்றாண்டிலும் இயற்றப்பட்டதென வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இவ்விரு நூல்களும் புராணக் கற்பனைகளையும், பழமரபுக் கதைகளையும் உள்ளடக்கியனவாக உள்ளன.

இலங்கையில் பௌத்த சமயமும் அரசும் பிரிக்கமுடியாத உறவு உடையவை என்ற கருத்தும், தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் இடையேயான இன்னொரு முரண் ஆகும்.

பௌத்த சமயம் அதன் தூய தத்துவ வடிவில் தனிநபர் ஆன்மிகத் தேடலை வலியுறுத்துவது. அவ்வகையில் அது தனிமனிதவாதப் பண்புடையது. இலங்கையில் பொதுஜனங்களின் சமயமாக, வெகுஜன சமயமாக பௌத்தம் மாறியபோது அதன் தனிமனிதவாதப் பண்புகள் மறைந்தன. துக்கம் - துக்க நீக்கம் என்ற ஆன்மிகம் சார்ந்த விடயங்களோடு தொடர்புடைய ஆன்மிகத் தேடல், அரசியலைப் புறம் தள்ளுவது. ஆகையால் அது அரசியலை விலக்குவது.

இலங்கையில் பௌத்தம், நவீன காலத்தில் அரசியலோடு கலப்புற்ற வெகுஜன பௌத்த சமய இயக்கமாகியதும், அரசுடனான பிணைப்பு வலியுறுத்தப்படுவதால் அரச மதமானதும், இம்முரணை வெளிப்படையானதாக்கியுள்ளது.

## சொத்துடைமை

சொத்துகள் எதுவும் அற்றவரான துறவி, பௌத்த துறவு ஒழுக்கத்தின் இலட்சிய மாதிரி ஆவார். உடைமைகள் இல்லாதவர், வீட்டைத்துறந்தவர், வறுமையில் வாழ்பவர், வனவாசி என்பன துறவின் இலட்சிய மாதிரியின் ஏனைய கூறுகளில் சிலவாகும். உபாசகர்களான உலகியல் வாழ்க்கையில் ஈடுபடும் மக்களுடன் தொடர்புகொண்டு வாழும் தேவையும் துறவிக்கு உள்ளது. இவ்வாறான உலகியல் தொடர்பு பல சந்தர்ப்பங்களில் அவரைச் சொத்தின் உடைமையாளராகவும் சொத்தின் நிர்வாகியாகவும் மாற்றுகிறது. நீதி வாசகம் அல்லது தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் இடையிலான முரண்பாடாகவும் இது அமைந்துவிடுவதும் உண்டு. இலங்கையின் பௌத்தத்தின் நீண்ட வரலாற்றில் இம்முரண்பாடு பல வடிவங்களில் வெளிப்பட்டதைக் காணமுடியும்.

இலங்கையில் பௌத்த சமயத்தின் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் ஏற்பட்ட முரண்நிலை ஒன்றைப் பற்றி இங்கு சுருக்கமாகக் கூறுவோம். கண்டி இராச்சிய காலத்தில் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 'ஹன்னினான்சே' என்ற வகையினர் பௌத்த கோவில்களின் உடைமையாளர்களாக இருந்தனர். 'உபசம்பாத' என்னும் சடங்கு நடத்தப்படாமையால் கோவில்களின் பிக்குகள் முறைப்படி வரிசைப்படுத்தப்பட்டவர்களாய் இருக்கவில்லை. கண்டிப் பகுதியில் கோவில்கள் நில உடைமையாளர் குடும்பங்களின் சொத்துகளாக இருந்து வந்தன. இக்குடும்பங்கள், தமது குடும்பத்தின் ஆண்மகன் ஒருவரை 'சமனேராவாக' (இளம் துறவி) சேர்த்து, 'உபசம்பாத' சடங்கை நடத்திய பின்னர் துறவியாக ஆக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தன. முறைப்படி பிக்குவாக 'உபசம்பாத' பெற்ற ஒருவர் கோவிலின் உடைமையாளராக இருப்பார். இதற்கு மாறாக கண்டியில் 16 ஆம் நூற்றாண்டு முதல் 'உபசம்பாத' பெறாதவர்கள் கோவில்களின் பிக்குகளாக இருக்கும் நிலை தோன்றியது. இவர்கள் உண்மையில் பிக்குகள் என்ற தகுதியை உடையவர்கள் அல்லர். இவர்கள் 'ஹன்னினான்ச' எனப்பட்டனர்.

18 ஆம் நூற்றாண்டுகளின் தொடக்க ஆண்டுகளின் போது சிங்கள சங்க அமைப்பு துறவிகளுக்குரிய பண்புகளை இழந்த அமைப்பாகச் சீரழிந்திருந்தது (சரத் அமுனுகம, 2016:212). சிறியனவும் பெரியனவுமான கோவில்கள் 'ஹன்னினான்சே'களின் உடைமைகளாக இருந்தன. நில உடைமையாளர்களான 'ஹன்னினான்சே'கள் தம் பெரும்பகுதி நேரத்தை உலகியல் அலுவல்களிலேயே கழித்தனர்.

'சுவாமின்வகன்சே' அல்லது 'உன்னான்சே' என்று மதிப்புடன் அழைக்கப்பட்ட துறவி 'ஹன்னினான்சே' என்று அழைக்கப்படும் தாழ்நிலை ஏற்பட்டது (மேலது, பக். 212). ஹன்னினான்சேகளில் பெரும்பான்மையினர் பிரம்மச்சாரிகளாகக்கூட இருக்கவில்லை. தமது ஆசை நாயகிகளையும் அவர் தம் பிள்ளைகளையும் கோவில் வளவுகளிலும், கோவில்களுக்கு அருகில் உள்ள கோவில் நிலங்களிலும் குடியிருத்தினர். இவர்களது சந்ததியினரின் 'வாசகம' பெயர்களில் 'விகார வளவுகே' எனவும் 'விகார கெதரே' எனவும் சொற்கள் இணைந்து கொண்டன. இவ்விதமாக இரத்த உறவுமுறைப் பெயர்கள் சொத்துடைமை அடையாளத்துடன் கலப்புற்றன. ஹன்னினான்சேகள் மஞ்சள் ஆடையை அணியாது வெள்ளுடை தரித்தனர். 'உபசம்பாத' சடங்கு கைவிடப்பட்டது. சமய நூல்களைக் கற்பதில் இவர்கள் நாட்டம் கொள்ளவில்லை. பாளிமொழிக் கல்வியும் கைவிடப்பட்டது. சோதிடம், மந்திர - தந்திரச் சடங்குகள், ஆவிகளுடன் உரையாடுதல் போன்ற விடயங்களில் இவர்கள் நிபுணத்துவம் பெற்றனர்.

சங்க அமைப்புக்கு நேர்ந்த இந்த அழிநிலைக்கு மல்வத்த, அஸ்கிரிய போன்ற மடாலயங்களின் பொறுப்பில் இருந்தோரிடம் இருந்து எதிர்ப்பு எழவில்லை. கண்டியின் எல்லைப்பகுதியான தும்பனவில் உள்ள 'வெலிவிட்ட' என்ற கிராமத்தைச் சேர்ந்த சமனேரா (இளம் பிக்கு) ஆகிய வெலிவிட்ட சரணங்கர அவர்கள் இந்த எதிர்ப்பியக்கத்தைத் தொடக்கி வைத்தார். இதுவே சரணங்கர தேரர் பெயரால் அழைக்கப்படும் 18 ஆம் நூற்றாண்டின் பௌத்த மறுமலர்ச்சி இயக்கமாகும். 'உபசம்பாத' சடங்கு நிகழாமையின் விளைவாக ஏற்பட்ட தீங்குகளைக் களைவதற்கான இந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் பின்புலத்தில் சொத்துடைமையும், நிலப்பிரப்புத்துவ நலன்களும் தொடர்புபட்டிருப்பதைக் காணலாம். சரணங்கர தேரரின் மறுமலர்ச்சி இயக்கம் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான இயக்கம் என்று கருதுவதற்கு இல்லை. சொத்துடைமை முறை, சங்க அமைப்பில் புகுத்திய தீய அம்சங்களைக் களைந்து அதனைத் தூய்மைப்படுத்தும் இயக்கமாகவே இது அமைந்தது.

## சாதியும் சமயமும்

கண்டி இராச்சியப் பகுதிகளில் பௌத்த கோவில்களுக்கு அரசனால் நன்கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் 'விஹாரகம்' என அழைக்கப்பட்டன. அவ்வாறு நிலங்கள் அரசனால் வழங்கப்பட முன்னர் அவை 'கபடாகம்' என்ற பெயரைப் பெற்றன. கண்டியின் கபடாகம் கிராமங்களின் நிலங்களில் பயிரிட்ட குடியான் விவசாயிகள் தத்தம் சாதிக்குரிய சேவைக் கடமைகளை அரசனின் 'கபடாகம்' திணைக்களத்திற்கு வழங்கினர். குறித்த நிலங்கள் 'விஹாரகம்' நிலங்களாக மாறியபோது, அந்நிலங்களின் குடியான் விவசாயிகள், விகாரைகளின் குடியான்களாகவும்,

**இனம், சாதி, மொழி, தேசம் என்ற எல்லைகளைக் கடந்த உலகப் பொதுவான அற ஒழுக்கங்களையும் விழுமியங்களையும் போற்றுவது பௌத்த சமயம். அத்தகையதொரு சமயம் இலங்கையில் சிங்களவரின் இனத்துவ அடையாளத்துடன் பிணைக்கப்பட்டு 'சிங்கள பௌத்தம்' ஆக வளர்ச்சியுற்றுள்ளது.**

சேவைகளை விகாரைகளுக்கு வழங்குபவர்களாகவும் மாற்றப்பட்டனர். கண்டியின் நிலப்பிரபுத்துவ சமூக ஒழுங்கமைப்பின் பாகமாக கோவில் என்ற சமய நிறுவனம் விளங்கியது. இதனைக் கித்சிறி மலல்லகொட என்ற ஆய்வாளர் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார்:

"நிலமானியப் பொருளாதார முறையின் சிக்கலான தொழில் பிரிவினை சாதியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மடாலயங்களின் சொத்துகளின் நிர்வாகக் கட்டமைப்பிலும் இதுபோன்ற தொழில் பிரிவினை இருந்தது. மடாலயங்களுக்குச் சொந்தமான 'முத்தெட்டு' வகை நிலங்களை கொவிகம சாதியினைச் சேர்ந்தோர் குத்தகைக்குப் பயிரிட்டனர். கோவில்களின் சமயத் துறவிகளுக்கு அவர்களின் அறுவடையின் ஒரு பகுதி வழங்கப்பட்டது. ஏனைய சாதிகளைச் சேர்ந்தவர்கள் கோவில்களுக்குத் தமது சேவைகளை வழங்கினர். இவர்களுக்குச்

சேவைக்குரிய கூலியாக அரிசி வழங்கப்பட்டது. அல்லது கோவில் நிலத்தில் பயிரிடும் உரிமை வழங்கப்பட்டது. கோவில்களைக் கட்டுதல் போன்ற வேலைகளிலும், பிற தொழில்நுட்ப வேலை - சித்திரவேலை - வர்ணம் பூசுதல் போன்ற வேலைகளிலும் தேர்ந்தவர்களான ஆட்களை நவண்டன சாதிக்குழு வழங்கியது. குயவர் சாதியினர் செங்கல், ஓடு, மட்பாண்டங்கள் என்பனவற்றைக் கோவில்களுக்கு வழங்குபவர்களாகப் பணி செய்தனர். கோவில்கள், மடாலயங்களின் சுவர்களுக்கு வெள்ளையடிக்கவும், நிலத்திற்கு வெள்ளையடிக்கவும் தேவைப்பட்ட சுண்ணாம்பை 'குணு' சாதியினர் வழங்கினார். 'ரதவ்' எனும் வண்ணார் குலத்தவர், சலவை செய்த துணியையும் விளக்கு எரிப்பதற்கான திரிச்சீலையையும் கொடுத்தனர். 'பெரவயோ' எனப்படும் சாதியினர் மேளமடித்தல், குழல் ஊதுதல், நடனம் ஆடுதல் ஆகிய பணிகளைக் கோவில்களில் நிகழ்த்தினர். 'படுவோ' சாதி ஆட்கள் சுமைகளைத் தூக்கிச் செல்லுதல், கோவிலின் தலைமைத் துறவியைப் பல்லக்கில் வைத்துக் காவிச் செல்லுதல் ஆகிய பணிகளைச் செய்தனர். இவ்விதமாக வெவ்வேறு சாதிகள் கோவிலின் பிரதம துறவிக்கு ஆற்றிய பணிகளை நோக்கும்போது, நிலப்பிரபுவிற்கும் சேவைச் சாதிகளுக்கும் இடையிலான உறவுமுறை கோவில் அமைப்புக்குள்ளே செயற்பட்டதைக் காண்கிறோம்."

1753 இல் சியாம் நிகாய நிறுவப்பட்டமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். சியாம் நிகாய பௌத்த சங்க அமைப்பின் அதிகாரம்மிக்க தலைமைப்பீடம் ஆகியது. 1765 ஆம் ஆண்டில் அரசன் இட்ட ஆணைப்படி மல்வத்தை அல்லது அஸ்கிரிய மடாலயங்களில் ஏதாவது ஒன்றில் மட்டுமே உபசம்பாத சடங்கு நிகழ்த்தலாம் என விதிக்கப்பட்டது. இதனால் கரையோர மாகாணங்களின் கோவில்களின் 'சமனேராக்களை' (இளம் பிக்குகள்) உபசம்பாத பரீட்சைக்காகக் கண்டிக்கு அழைத்துவரும் தேவை இருந்தது. இப்பரீட்சையின் மாதிரி வினாக்கள் வருமாறு:

(பரீட்சகரான பிரதம குரு பரீட்சார்த்தியான இளம் பிக்குவை நோக்கிக் கேட்பவை.)

பிரதம குரு: உமது பிறந்த இடம் யாது?

இளம் பிக்கு: (பதில் தருகிறார்)

பிரதமகுரு: எந்த 'ஹெதர'? (வீடு குடும்பம்?)

இளம்பிக்கு: (பதில் தருகிறார்)

பிரதம குரு: அப்பகுதியின் கௌரவம் வாய்ந்த 'ஹெதர'வாகத் தெரியவில்லையே?

இளம்பிக்கு: (பதில் தருகிறார்)

'நீர் கொவிகம சாதியினரா?' என்ற வினாவே சுற்றி வளைத்து இவ்வாறு பரீட்சார்த்தியிடம் கேட்கப்பட்டது.

(மேற்படி விபரிப்பு எச்.எல். செனிவிரத்தின என்ற ஆய்வாளரின் ஆய்வுக்கட்டுரையில் இருந்து சரத் அமுனுகம அவர்களின் நூலில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது {பார்க்க: சரத் அமுனுகம, 2016:79})

கரையோர மாகாணங்களில் ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்ட சமூக - பொருளாதார மாற்றங்களின் பயனாக, சலாகம, கராவ, துராவ சாதியினர் உயர்ச்சிபெற்று மேல்நிலைக்கு வந்தனர். சியாம் நிகாயவின் சாதி மேலாண்மையை எதிர்த்து அமரபுர நிகாய என்ற சங்க அமைப்பு 1803 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் பௌத்த சமய வரலாற்றில் இரண்டாவது மறுமலர்ச்சி இயக்கம் இடம்பெற்றது. இவ்விரண்டாவது மறுமலர்ச்சி அலையில் கரையோர மாகாணங்களில் அமரபுர நிகாய என்ற அமைப்புத் தோன்றியது. இது கண்டியின் சியாம் நிகாயவில் இருந்து பிரிந்து உருவாகிய அமைப்பாகும். பின்னர் ராமணிய நிகாய என்ற அமைப்பும் கரையோர மாகாணங்களில் தோற்றம் பெற்றது. இவை இரண்டும் மறுமலர்ச்சியில் முக்கிய பங்கேற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணைகள்


1. *Armunugama, Sarath. (2016), The Loins Roar - Anagarika Dharmapala and the Making of Modern Buddhism, Vijitha Yapa Publication, Colombo.*
2. *Phadnis Urmila. (2020), Religion and Politics in Sri Lanka, 2nd Edition, Manohar.*
3. சண்முகலிங்கம்,க. (2014), இலங்கையின் சமூக பண்பாட்டு வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு சென்னை.

எம். ஐ. எம். சாக்கீர்



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையைச் சேர்ந்த முஹம்மட் சாக்கீர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் பெற்றவர் தற்போது மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக பணிபுரிகிறார்.

வரலாறு, பண்பாட்டு ஆய்வு, நாட்டாரியல், ஆவணப்படுத்தல் போன்ற துறைகளில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 21வது வயதில் 'சம்மாந்துறை பெயர் வரலாறு' என்ற ஆய்வு நூலை வெளியிட்டார், சம்மாந்துறை பெரியபள்ளிவாசல் வரலாற்று ஆவணப்படம் போன்றவற்றிற்கு வசனம் எழுதியுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் இன்கிலாப் சஞ்சிகை மீளுருவாக்க குழுவின் முன்னோடியான செயற்பாட்டாளரான இவர் 2019 இல் வெளியான சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும் எனும் நூலின் பதிப்பாசிரியர்களிலொருவரும் கட்டுரையாசிரியருமாவார். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, கலை, பண்பாடு, முதலான கருபொருள்களில் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

# கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண நடைமுறைகள்

**பகுதி 3**

கிழக்கிலங்கை இலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசமாகும். இங்கு வாழ்கின்ற முஸ்லிம்களின் பண்பாட்டுக்கூறுகள் மட்டக்களப்புத் தமிழர்களின் பண்பாட்டுக்கூறுகளோடு பல விடயங்களில் ஒத்ததாகவும் வேறுப்பட்டும் காணப்படுவதோடு பிற முஸ்லிம் பிராந்திய கலாசாரகூறுகளிலிருந்தும் தனித்துவமாகக் காணப்படுகின்றன. கிழக்கிலங்கை முஸ்லிம்கள் கிழக்கின் பூர்வ பண்பாட்டுக்கூறுகளினை தமது மத நம்பிக்கைக்கு ஏற்ப மதத்தின் அடிப்படைக்கூறுகளில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பண்பாட்டுக்கட்டமைப்பை தகவமைத்துக் கொண்டனர். இப்பண்பாட்டுப் மறுமலர்ச்சியின் கூறுகளினை கலந்துரையாடுவதாக 'கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகள்' என்ற இக்கட்டுரைத்தொடர் அமையும். இதன்படி, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் தாய்வழி குடிமரபு முறை, முஸ்லிம் குடிவழிமரபில் உள்ள மாற்றங்கள், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள் அவற்றில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், பாரம்பரிய பரிகார முறைகள், உறவுமுறைகள் மற்றும் குடும்ப அமைப்புகள், உணவுமுறைகள், ஆடை அணிகலன்களும் மரபுகள், வீடுகள் மற்றும் கட்டடக்கலை மரபுகள், பாரம்பரிய அனுஷ்டானங்கள், கலைகள் எனப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்தத் தொடர் பேசவுள்ளது.

## உப்போடு புளியோடு முப்பத்து இரண்டு

திருமணமாகி அடுத்த நாள் மணமகன் சந்தைக்குச் சென்று சமையலுக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் வீட்டுக்கு வாங்கி வருவார். இதனை உப்போடு புளியோடு முப்பத்திரெண்டும் வாங்கி வருதல் என்பார்கள். உப்பு, புளி, ஏலம், கறுவா, வாசனைத்திரவியங்கள், மீன், இறைச்சி, மாசி, கருவாடு, மரக்கறிகள், அரிசி, பருப்பு, சீனி, தேயிலை, வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு உள்ளிட்ட அத்தனை பொருட்களும் இதில் அடங்கியிருக்கும். இது மணமகனின் கௌரவத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

## கால்மாறிச் செல்லுதல்

திருமணம் முடித்து ஏழாவது நாள் புதுமணத் தம்பதிகள் மாப்பிள்ளையின் வீட்டுக்குச் செல்வார்கள். இதனை கால்மாறிச் செல்லுதல் என்று அழைப்பார்கள். இந்நடைமுறை பிற்காலத்தில் மூன்றாம் நாளில் நடைபெற்றது. தற்காலத்தில் அதேநாள் நடைபெறும் வழக்கமும் உள்ளது.

மாப்பிள்ளை வீட்டார் கூட்டுவண்டி அல்லது வாகன ஏற்பாடு செய்து, சீர்வரிசைகளும் ஏற்பாடு செய்து வந்து பெண்ணுக்குப் புதிய ஆடைகள் அணிவித்து அழைத்துச் செல்வார்கள். பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கான புது ஆடைகளை ஏற்பாடு செய்வார்கள். இவ்வேளை இரு தரப்பினராலும் சீர்கள் செய்யப்படும். மாப்பிள்ளையின் தாயார் வீட்டுப் பாவனைப் பொருட்களுடன் பாய், தலையணை, சமையலறைப் பாவனைப் பொருட்கள், அலுமாரி போன்ற பொருட்களை வழங்கிவைப்பார் (கையூம்; 2016:145). பின்னர் மணமக்கள் பெண்வீட்டிற்கு உறவினர்கள் சகிதம் அழைத்துவரப்படுவார்கள். பொதுவாக தம்பதிகள் மூன்று நாட்களுக்கு மாப்பிள்ளையின் வீட்டில் தங்கி வருவதும் நடைமுறையில் இருந்துள்ளது. அப்போது பெண்கள் குரவை ஒலி எழுப்பி வரவேற்று ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துச் செல்வார்கள். பின்னர் இனிப்புகளும், தேனீரும் பரிமாறப்படும். பின்னர் அனைவரும் கலைந்து செல்வார்கள்.

## நாள்வட்டா கொண்டு வருதல்

இந்நடைமுறை பிற்காலத்தில் உருவாகியுள்ளது. அதாவது இது கால்மாறிச் சென்றவர்களின் சீர்களை மாப்பிள்ளையின் சகோதரிகள் பெண்வீட்டுக்கு கொண்டுவந்து கொடுக்கும் நிகழ்வாகும். இது கால்மாறிச் சென்று அடுத்தநாள் இடம்பெறும்.

## ஆறுமாதச் சோறு

திருமணமாகி ஆறு மாதங்களுக்கு பெண்வீட்டாரே அவர்களுக்கு உணவளிப்பதைப் பொறுப்பேற்பார்கள். இது பெண் வீட்டாரின் கௌரவத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இதற்கான ஏற்பாடுகளை திருமணத்திற்கு முன்னரே ஏற்பாடு செய்துவிடுவார்கள்.

## மணமக்களுக்கு விருந்து படைத்தல்

ஒவ்வொரு உறவினர்களும் மணமக்களை அழைத்து விருந்து கொடுப்பார்கள். இதற்காகச் செல்லும்போது இருவரும் கூறை ஆடைகளுடனும், தாலி உள்ளிட்ட அனைத்து ஆபரணங்களுடனும் செல்வது வழக்கமாகும். இவ்விருந்துகளில் நாட்டுக்கோழி, அமுக்கு முட்டை, புளியாணம், இறைச்சிக்கறி, கொக்கு, விரால் மீன், பொரியல் உள்ளிட்ட உயர்தரமான ஏழு கறியும் சோறும் வழங்கப்படும். சோறு பாற்சோறாகவே இருக்கும். இறுதியாகத் தயிரும் வாழைப்பழமும் கரையலுக்காக வழங்கப்படும். மாப்பிள்ளையும் பெண்ணும் விடைபெறும்போது விருந்தளித்தவர்கள், தங்கநகைகள் அல்லது பணமுடிச்சை அன்பளிப்பாக வழங்குவார்கள்.

## வேறுபோதல்

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் மரபுப்படி பெண்பிள்ளைகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பது பொது வழக்கமாக இருந்து வருகின்றது. ஆண்பிள்ளைகள் மணமுடித்த பெண்ணுக்குக் கட்டப்பட்ட வீட்டிலேயே வாழ்ந்து வருவார்கள்.

ஆறுமாதச்சோறு காலத்தின் பின்னர் மாப்பிள்ளை வீட்டார் ‘ஆக வேண்டிய அறுபத்திநாலும் உப்போடு கூடிய முப்பத்திரெண்டும்’ என்றவாறாக தனிக்குடுத்தனத்திற்கு தேவையான பண்டபாத்திரங்கள், உணவுப்பொருட்களைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். இதன்பின்னர் தம்பதிகள் தங்களுக்குத் தேவையானதைத் தாங்களே சமைத்து வாழ்வார்கள். பிற்காலத்தில் ஏற்பட்ட சமய சீர்திருத்த நடைமுறைகளின் பின்னர் பொதுவாக மாப்பிள்ளைமார் வீடு

கட்டி, பெண் எடுக்கும் பண்பாடு வளர்ந்து வருகின்றது. அதேபோல கைக்கூலி சீதனமின்றி, மஹர் வழங்கி பெண் எடுக்கும் நடைமுறையும் அதிகரித்து வருகின்றது.

### தலைப்பெருநாள் செப்பு

திருமணத்தின் பின் வருகின்ற முதலாவது பெருநாள் தலைப்பெருநாள் எனப்படும். தலைப்பெருநாளுக்கு பெண்வீட்டார், மாப்பிள்ளை வீட்டாருக்குச் செப்புப் பெட்டிகள் கொண்டு செல்வார்கள். இது பெருநாட் செப்பு எனப்படும். இதன் பின்னர் மணமக்கள் இரு குடும்பத்தினருக்கும் புத்தாடைகள் வாங்கிக் கொடுப்பார்கள். இவ்வாறு கிழக்கிலங்கையின் ஒரு திருமணமானது வருடம் முழுவதும் நடைபெறும் பல நிகழ்வுகளின் தொகுப்பாகக் காணப்பட்டுள்ளது.

### கிழக்கிலங்கைத் தமிழர் - முஸ்லிம் திருமணப் பண்பாடுகள்

இலங்கையின் கீழைக்கரையின் மக்கள் பரம்பலை நோக்கும்போது தமிழர்களும், முஸ்லிம்களும் கலந்தே வாழ்ந்து வருகின்றனர். அதேவேளை தங்களது மார்க்கச் சிந்தனை வரம்புகளின் தனித்துவங்களையும் பேணி வருகின்றனர். இப்பண்பாட்டுக் கொடுக்கல் - வாங்கல் வரலாறு நெடுகிலும் இப்பிராந்தியத்தில் இடம்பெற்றே வருகின்றது.

திருமண நடைமுறைகளில் பல ஒத்த நடைமுறைகளை அவதானிக்க முடிகின்றது. அதேவேளை அவற்றிடையே நுண்ணிய வேறுபாடுகளும் தனித்துவங்களும் காணப்படுகின்றன. இரு இனங்களின் திருமணங்களிலும் திட்டக்கட்டுதல், பெண்பார்த்தல், நாள்குறித்தல், வட்டாவைத்து அழைத்தல், பால்தப்புதல் அல்லது மணமக்களுக்குத் தண்ணீர்வார்த்தல், பந்தக்கால் நடுதல் அல்லது கன்னிக்கால் நடுதல், தாலிகட்டுதல், கூறை மாற்றுதல், ஆரத்தி, குலவை, மாப்பிள்ளைக்குக் குடைபிடித்தல், கால்கழுவுதல், மைத்துனருக்குப் பரிசு வழங்குதல், கால்மாறிச் செல்லுதல், ஆறுமாதச்சோறு போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன. சொத்துகள், ஆதனங்கள் முக்குவர்களின் வழமையைப் போன்று மருமக்கள் தாயமுறையின் பெண் வாரிசுகளுக்கே அதிகம் வழங்கப்படுகின்றன. மற்றும் ஒரு தாய்வழிக் குடிக்குள் திருமணங்கள் நடைபெறுவதில்லை.

இரு சமூகங்களிலும் சுப நிகழ்வுகளுக்காக வளர்பிறை பார்ப்பது தற்போதும் நடைமுறையில் உள்ளது. எனினும் நாள் கணிப்பதில் முஸ்லிம்களிடையே இஸ்லாமிய நாட்காட்டியும், தமிழர்களிடையே பஞ்சாங்கமும் நடைமுறையில் உள்ளது.

சாணைக்கூறை அல்லது சாணைக்குறித் திருமண வழக்கும் இரு இனத்தவர்களிடையேயும் இருந்து வந்துள்ளது. சகோதரனிற்குப் பிள்ளை பிறந்தவுடன் பிள்ளையைச் சுத்தம் செய்து மாமி முறையானவர் பிள்ளையின் வயிற்றுக்கு மேலே ஒரு வெள்ளைச்சீலையைப் போர்த்தி, இப் பெண்பிள்ளைக்கு எனது மகனே திருமணத்திற்கு முறையானவர் என்று கூறி, திருமண உரித்தைக் கோருவது சாணைக்குறித் திருமணம் எனப்படும். இந்நடைமுறை தற்காலத்தில் வழக்கத்தில் இல்லை. இரு சமூகங்களிலும் கடத்தல் திருமணங்கள், பெற்றோர் சம்மதமின்றிய திருமணங்கள், மதம்மாறித் திருமணம் செய்தல் என்பவை வெறுக்கப்பட்டவையாகவே காணப்பட்டுள்ளன. மற்றும் தாய்வழி மச்சான் அல்லது தந்தைவழி மச்சான் முறையானவரைத் திருமணம் செய்யும்முறையும் காணப்படுகின்றது. இரு சமூகங்களிலும் சித்தப்பா, பெரியப்பா, சித்தி, பெரியம்மா ஆகியோரின் பிள்ளைகளை மணமுடிப்பது தவிர்க்கப்பட்டே வந்துள்ளது. அதேபோல ஆணின் வயது பெண்ணின் வயதைவிட அதிகமாக அமையுமாறே மணமக்களைத் தேர்ந்து கொள்கின்றார்கள்.

திருமணப் பொருத்தம் பார்த்தலின் போது ஒருவருடைய பிறந்த நேரம், இடத்தை வைத்து கிரக நிலைகளின் கணக்கீட்டுடன் ஒவ்வொருவருக்கும் பிறந்த இராசி, நட்சத்திரம் என்பன தீர்மானிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்கைக்காலம் எதிர்வுகூறப்படும். இதை சாதகம், குறிப்பு என்றும் வழங்குவார்கள். ஆண் - பெண் இருவருடைய குறிப்புகளும் சோதிடர்களிடம் கொடுக்கப்பட்டு திருமணப் பொருத்தம் பார்க்கும் வழக்கம் தமிழர்களிடையே வழக்கத்தில் உள்ளது. கிரகப் பொருத்தம், நட்சத்திரப் பொருத்தம், இராசிப் பொருத்தம், யோனிப்பொருத்தம், கணப்பொருத்தம், இரச்சுப் பொருத்தம், வசியப்பொருத்தம் உள்ளிட்ட பதினான்கு பொருத்தங்களும் ஒருங்கே

அமையப்பெறுவதையே அனைவரும் விரும்புவார்கள். இம்முறை ஆரம்பகாலத்தில் இல்லாதிருந்து பிற்காலத்தில் வழக்கத்திற்கு வந்ததாக தில்லைநாதன் குறிப்பிடுவார் (2015: 199). ஆனால் முஸ்லிம்களிடையே இவ்வாறான நடைமுறை இல்லை. இவர்களின் மார்க்க வழக்கத்தின்படி சோதிடம் பார்ப்பதும், குறி கேட்பதும் தவிர்க்கப்பட்டிருப்பதால், அவர்கள் பெண்ணின் குடும்ப விபரம், சொத்து விபரங்கள், தொழில், கல்வி, மார்க்க அறிவு, அழகு என்பவற்றை விசாரித்துப் பெண்களைத் தேர்வு செய்வார்கள்.

சாதிக் கட்டுப்பாடுகள் கிழக்கிலங்கைச் சோனகர்களின் முஸ்லிம் திருமணங்களில் காணப்படாது. எனினும் குடும்பத்தின் சொத்துகளைப் பேணும் பொருட்டு சில குடும்பங்கள் அகமண முறைகளைப் பேணி வந்துள்ளனர்.

முஸ்லிம் ஆண்கள் விருத்தசேதனம் செய்வது கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. இது பராயமடைவதற்கு முன்னதாகவே செய்யப்படுகிறது. ஆண் பராயமடைந்ததை வெளிக்காட்ட கடுக்கன் அணிதல், கன்னக் குடுமியை பின் குடுமியாக கட்டுதல் போன்ற நடைமுறைகள் மட்டக்களப்புத் தமிழர்களின் பாரம்பரிய மரபுகளில் காணப்பட்டுள்ளது. எனினும் இவ்வழக்கம் முஸ்லிம்களிடம் காணப்படவில்லை.

திட்டக்கட்டுதல் என்பதை தமிழர், திருமணம் கேட்டுப் போதல் என்பார்கள். இங்கு தங்க மோதிரமொன்று மாப்பிள்ளைக் கொழுக்கட்டைக்குள் வைத்து, மாப்பிள்ளைக்காக அவித்துக் கொண்டு செல்லப்படுவதுண்டு. இந்நடைமுறை முஸ்லிம்களிடம் இல்லை. ஆயினும் மாப்பிள்ளைக்கு அடையாளம் போடுவது இடம்பெறுவதுண்டு. இரு சமூகங்களிடையேயும் தாலி கட்டுவது வழக்கத்தில் இருக்கின்றது. எனினும் முஸ்லிம் திருமணங்களில் இது ஒரு அடையாள அணிகலனாக மட்டுமே கருதப்படுகின்றது. தமிழர் திருமணங்களில் காணப்படும் மாங்கல்யத்தாலி வடிவிலோ அல்லது புலிப்பல் தாலி வடிவிலோ தாலிகள் அணியப்படுவதில்லை. தாலிக்குப் பொன்னுருக்குதல் என்ற சடங்கும் முஸ்லிம்களிடம் வழக்கில் இல்லை.

சுமங்கலி பூசை, குலதெய்வ வழிபாடு, சுபமுகூர்த்தம் பார்த்தல், பொன்னுருக்குதல், சமாவர்த்தனம், கன்னி ஊஞ்சல், மாலைமாற்றுதல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், பாணிக்கிரகணம், சப்தபதி, நலங்கு வைத்தல், ஸதாலிபாகம், தம்பதிபூசை, ஆசிர்வாதம், மெட்டி அணிவித்தல், கன்னிகாதனம் போன்றவை தமிழர் திருமணங்களில் மாத்திரம் காணப்படும் தற்கால நடைமுறைகளாகவுள்ளன.

## இலங்கையின் பிறபகுதி முஸ்லிம் திருமண நடைமுறைகள்

வடமத்திய மாகாண திருமண நடைமுறைகள் கிராமத்திற்குக் கிராமம் வேறுபடுகின்றன. இவற்றில் சில அம்சங்கள் கிழக்கிலங்கைத் திருமணங்களை ஒத்ததாகவும், வேறுபட்டும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக அனுராதபுர மாவட்டத்தில் மாப்பிள்ளை வேறுபோதல் (தனிக்குடுத்தனம்) செல்லும்போது அவருக்குத் தொழில் செய்து பிழைப்பதற்கான ஆயுதங்களையும் கருவிகளையும் பெண்வீட்டில் பெற்றுக்கொள்ளும் மரபு காணப்பட்டுள்ளது. கத்தி, கோடாரி, கருக்கத்தி, பாக்குவெட்டி, மண்வெட்டி, காடு வெட்டும் கத்தி என்பவற்றை பெற்றுச்செல்லும் நடைமுறை காணப்பட்டுள்ளது.

கிழக்கில் வெள்ளை நீத்துச் சுண்ணாம்பு அடிப்பது போல, அனுராதபுரப் பகுதிகளில் சிவப்புக் களி மண்ணால் மெழுகி அதில் அரிசி மாவைத் தோய்த்தெடுத்து அதன்மூலம் அலங்காரங்களை இடுவார்கள். இது மாலையடித்தல் எனப்படும். மணவறைச் சோடனையில் மாப்பிள்ளை, பெண் அமரும் சுவரில் இரு தென்னை மரங்களும் குத்துவிளக்கும் வரையப்பட்டிருக்கும். பந்தக்காலினை 'மாப்பிள்ளைக் கப்பு', 'மாப்பிள்ளைத் தூண்' என்று அழைப்பதாகவும் இதற்காக பால்வரக்கூடிய மரங்களின் கிளைகளைத் தேர்வு செய்து, அதனை நடுமிடங்களில் பாலும், வெள்ளிக்காசும், அறுகம்புல்லும் போட்டு கம்பை நட்ட பின்னர் சேலைகளால் அலங்கரிப்பதும் நடைமுறையில் இருந்துள்ளதாகவும் அறியமுடிகின்றது. கூறைச் சேலையுடன் மாமிக்கும் ஒரு சேலையும் பவுண் முடிச்சும் வைப்பது இங்கு வழக்கமாய் இருந்திருக்கின்றது. அதேபோல ஆரத்திகளிலும் அழகு ஆரத்தி, பால் ஆரத்தி, செம்புக்குட ஆரத்தி, பொன்மணி ஆரத்தி எனப் பலவகைகள் காணப்பட்டுள்ளன. இவைதவிர மோதிரக்காசு,

காவின்பால், பிலால் விடுதல், மடிமாங்காய், புளிச்சோறு கொடுத்தல் என்பன இடம்பெற்றுள்ளன. இவை கிழக்கிலங்கைத் திருமணங்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன.

## தற்காலத் திருமண நடைமுறைகள்

முஸ்லிம்களின் தற்காலத் திருமண நடைமுறைகள் பாரம்பரிய நடைமுறைகளிலிருந்து பெரிதும் மாற்றம் கண்டுள்ளது. போக்குவரத்து வசதிகள், மின்சாரம் போன்ற வசதிகளின் வளர்ச்சியினாலும், பாரம்பரியத் தொழில்முறைகளிலிருந்து நிறுவனமயப்பட்ட தொழில்முறைகளில் மக்கள் அதிக கவனம் செலுத்துவதனாலும், மார்க்கக் கிரந்தங்கள் தாய்மொழியில் வெகுவாகக் கிடைப்பதனாலும் திருமண நடைமுறைகள் பண்பாட்டுப் படிமலர்ச்சியின் இன்னொரு கட்டத்தை அடைந்துள்ளன. பல்வேறு மரபான திருமண நடைமுறைகள் வழக்கிலிருந்து மறைந்துவிட்டன. குறித்த சில கிராமங்களில் மாத்திரமே இன்னும் கரிசனையோடு இவை பேணப்பட்டு வருகின்றன.

திருமணப்பேச்சு வார்த்தைகள், திட்டக்கட்டுதல் என்பன மிக எளிமையாக நடத்தப்படுவதுடன், அவை இரு குடும்பங்களுக்குள்ளாகவே குறுக்கப்பட்டு நடைபெறுகின்றன. மணப்பெண், மாப்பிள்ளையின் ஆடை அலங்காரங்கள் மேலைத்தேய, வடஇந்திய, அரேபியக் கலப்பில் நடைபெறுகின்றன. இவை முற்றுமுழுதாக இரு குடும்பங்களின் முடிவுகளிலுமே தீர்மானிக்கப்படுகின்றன. மாப்பிள்ளை துருக்கித் தொப்பி அணிதல் அரிதாகி வருகின்றது. சாரம் அணிவதும், செருப்பு அணிவதும் தவிர்க்கப்பட்டு, ‘கோட் சூட்’டுடன் சப்பாத்து, கழுத்துப்பட்டி அணிவது நடைமுறையில் உள்ளது.

மணப்பெண் கூறைச்சேலையாக காஞ்சிபுரம் பட்டு, மோகினிப்பட்டு, பட்டயச்சேலை என்பவற்றை அணிவதற்கு மாற்றாக ஹபாயா, காக்ரா சோளி, ராஜஸ்தானிய லெஹெங்கா உள்ளிட்ட ஆடைகளை அணிகின்றார். மணமேடை ஆடையாக மேலைத்தேயப் பாணியிலான நீளமான வெள்ளை ஆடைகளையும் அணிகின்றார். செப்புப்பெட்டிகள், அன்பளிப்புப் பொருட்கள் புதிய தற்கால உணவுப் பொருட்களாகவும், அவற்றைப் பொதிசெய்தல் ஒரு தொழிற்துறையாகவும் விருத்தி கண்டுள்ளது. அதேபோல பெண் - மாப்பிள்ளை வீடுகளிற்குப் பரிமாறப்படும் செப்புகளும் பாரம்பரியப் பலகார வகைகளும் மாறியுள்ளன. மணமேடை அலங்காரங்கள் விமரிசையாகச் செய்யப்படுகின்றன. இவை ஆரம்பகாலங்களில் மிக எளிமையானவையாக இருந்தன. தற்காலத்தில் வண்ண விளக்குகள், மலர்கள், பல்வண்ணத் துணிகளைக் கொண்டு அலங்கரிக்கின்றனர். ஆரம்பத்தில் திருமண நிகழ்வுகளை நிழற்படங்களில் பதிவு செய்தனர். பின்னர் காணொலிகளில் பதிவு செய்தனர். தற்காலத்தில் மீண்டும் நிழற்படங்கள் மாத்திரம் எடுக்கும் வழக்கமே நடைமுறைக்கு வந்துள்ளது. இதுவும் ஒரு புதிய தொழிற்துறையாக விருத்தி கண்டுள்ளது. திருமண அழைப்பிதழ் பண்பாடும் புதிய வடிவமைப்புகளிற்கு ஏற்றதாக துரிதமாக மாறி வருகின்றது.

## சில குறிப்புகள்

ஆரம்ப காலங்களில் மஹர் தொகையாக **11, 101, 1001** ரூபாய்கள் அல்லது பத்தாயிரத்தொரு ரூபாய் ஆகியனவே வழங்கப்பட்டு வந்துள்ளன. தொகையில் ஒற்றைப்படையைப் பேணுவதற்காக இந்நடைமுறை தோன்றியது என்றும், நாணயத்தாள்கள் பறந்துவிடாமல் இருப்பதற்காக பாரத்திற்கு ஒரு ரூபா நாணயக்குற்றியை வைப்பதிலிருந்து இந்நடைமுறை தோன்றியது என்றும் இதற்கான இரு விதமான விளக்கங்களைக் கொடுப்பதைக் காணமுடிகின்றது. திருமணப்பதிவுகள் கடுத்தங்களாகப் பதியப்பட்ட போதும், **1926**ஆம் ஆண்டு விவாக, விவாகரத்துத் திருத்தச் சட்டத்தின் பின்னரே திருமணப்பதிவுகள் கட்டாயமாக்கப்பட்ட நடைமுறை தொடர்ந்து அமுலுக்கு வந்துள்ளது.

இமாம் ஹுஸைன் (ரழி) கொலை செய்யப்பட்ட மாதத்தை முஸ்லிம்கள் படுகள மாதமென்று அழைப்பதோடு அம்மாதங்களில் திருமணம், புதுமனைபுகுதல், கத்னா என்பவற்றைச் செய்வதைத் தவிர்த்துவரும் வழக்கம் காணப்படுகின்றது. திருமணம் முடித்த முதல்நாளிரவு மணமகனுக்கும் மணமகளுக்கும் ஒரே தட்டிலேயே உணவு வழங்கப்படும்.

## முடிவுரை

இக்கட்டுரை கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பண்பாட்டசைவுகளில் திருமண நிகழ்வுகளின் அசைவினை எடுத்துக்காட்ட முயன்றுள்ளது. திருமணப் பண்பாட்டுப் படிமலர்ச்சியை,

திருமணத்தின் ஒவ்வொரு அம்சங்களாக மேலும் நுணுகிப் பார்க்கமுடியும் என்பதையும், ஒவ்வொரு சடங்கினதும் குறியீட்டு ரீதியான தத்துவார்த்த விளக்கங்களையும் மேலும் ஆய்வுக்குட்படுத்த முடியும் என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

இலங்கையின் பிற பாகங்களிலுள்ள முஸ்லிம் திருமண நடைமுறைகளின் அம்சங்களோடு ஒப்பிடுகையில், கிழக்கிலங்கை முஸ்லிம் திருமணங்கள் வேறுபட்டுத் தென்படுகின்றன. இப்பிரதேச மக்கள் தமிழர் திருமண அம்சங்களினையும், மத்தியகிழக்கு, இந்தியத் துணைக்கண்டத்தின் சேரநாடு, வடஇந்தியா, தென்னிந்தியா ஆகிய பிரதேசங்களின் பண்பாட்டம்சங்களினையும் பிரதிசெய்து, மார்க்கச் சிந்தனைகளினைக் கொண்டு தமக்கான திருமணக் கலாசாரத்தை வடிவமைத்துக் கொண்டுள்ளமையையும் காணமுடிகின்றது.

**உசாத்துணைகள்**


1. *Bawa, A., & Bawa, B. W.* (1888). *The Marriage Customs of the Moors of Ceylon. The Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society of Great Britain & Ireland,* 10(36), 219-233. *http://www.jstor.org/stable/*45377244

2. 2. *Chitty, S. C.* (1836). *An Essay Descriptive of the Manners and Customs of the Moors of Ceylon. The Journal of the Royal Asiatic Society of Great Britain and Ireland,* 3(2), 337-349. *http://www.jstor.org/stable/*44011993

3. *McGilvray, Dennis.* (2014). *Matrilocal Marriage and Women's Property among the Moors of Sri Lanka.* 10.1093/*acprof:oso/*9780198092063.003.0005.

4. *The Muslim Heritage of Eastern Sri Lanka.* (2011). *Sri Lanka: Muslim Women's Research and Action Forum.*

5. அமீன், எம்.ஐ.எம். (2000). இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870-1915). அல் ஹஸனாத் பதிப்பகம், ஹெம்மாதகம.

6. அனஸ், எஸ்.எஸ்.எம். (1999). வாழ்வியலும் பண்பாடும்: அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

7. ஏறாவூர் வரலாறு. (2005). ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம், ஏறாவூர்.

8. கையூம், எம்.எல்.ஏ. (2016). நெற்பிட்டிமுனையின் வரலாறும் பண்பாட்டியலும்.

9. சமீம், ஏ.எம். (1997). இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள். கலகெதர.

10. சலீம், ஏ.ஆர்.எம். (1990). அக்கரைப்பற்று வரலாறு. ஹிறா பள்ளிகேசன்ஸ்.

11. சலீம், ஏ.ஆர்.எம். (1997). அக்கரைப்பற்று வரலாறு.

12. தில்லைநாதன், சா. (2015). மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்.

13. மஜீட், ஏ. மத்தியகிழக்கு முதல் மட்டக்களப்பு வரை.

14. மஜீட், ஏ. (2001). தென்கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு.

15. முத்துமீரான், எஸ். (2013). கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரமும்.

16. லறீப், சுலைமான். (2015). இறக்காமம் வரலாறு: சமூக வாழ்வியல்.

17. நற்பிட்டிமுனை முஸ்லிம்களின் வாழ்வியலும் வரலாறும். (2023).

18. நிந்தவூர் வரலாறும் வாழ்வியலும். (202-15).

19. றமீஸ், அ. (2020). சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும். சம்மாந்துறை வெளியீட்டுப் பணியகம்.

20. ஜெமீல், எஸ்.எச்.எம். (1995). கிராமத்து இதயம். சாய்ந்தமருது.

21. ஹனீபா, இ. (2020). ஈழத்து நாட்டார் பாடல் மரபில் கவிகள். அக்கரைப்பற்று.

22. ஹனீபா, இ. (2020). கிழக்கிலங்கை கவி மரபு. அக்கரைப்பற்று.

23. 2ஸம்சுத்தீன், மௌலானா ஜே.எம். (1997). வாழ்வியலும் பண்பாடும்: அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

## இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்



இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார். தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் – பண்டத்தரிப்பு

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.

லெயுசிக்காமின் வலிகாமப் பிரிவைக் காட்டும் நிலப்படத்தில் சங்கானைக் கோவிற்பற்றுத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இந்தக் கட்டுரையில், பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுத் தொடர்பாக நிலப்படத்திலுள்ள விவரங்களை ஆராயலாம்.

பண்டத்தரிப்புக் கோவிற்பற்றில் பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், பெரியவிளான், சிறுவிளான், மாகியப்பிட்டி ஆகிய ஆறு துணைப் பிரிவுகள் இருப்பதை நிலப்படத்தில் உள்ளடங்கியுள்ள பட்டியல் தெளிவாகக் காட்டுகிறது. அத்துடன், நிலப்படம் இந்த ஆறு பிரிவுகளையும் எல்லை குறித்தும் காட்டுகிறது (படம்1).

**எல்லைகள்**

நிலப்படத்தின்படி பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுக்கு வடக்கு எல்லையாகப் பாக்கு நீரிணை உள்ளது. கிழக்கில் தெல்லிப்பழை, மல்லாகம் ஆகிய கோவிற்பற்றுகளும்; தெற்கில் மல்லாகம், சங்கானை என்பனவும்; மேற்கில் சங்கானையும் எல்லைகளாக அமைந்துள்ளன (படம்2). இக்கோவிற்பற்றுக்குள், பாக்குநீரிணைக் கரையோரமாக மாதகல் துணைப்பிரிவு உள்ளது. இக்கோவிற்பற்றின் கடற்கரை முகப்பின் பெரும் பகுதி மாதகல் துணைப் பிரிவுக்குள்ளேயே அடங்குகிறது. சில்லாலை, பண்டத்தரிப்பு, பெரியவிளான், சிறுவிளான் ஆகிய நான்கு துணைப்பிரிவுகளும் மேற்கிலிருந்து கிழக்காக வரிசையாக அமைந்துள்ளன. இவற்றுள் சில்லாலைக்கும் சிறுவிளானுக்கும் கடல் முகப்பு இருப்பதை நிலப்படத்திலிருந்து அறிய முடிகிறது.

நிலப்படத்தின்படி ஆறாவது துணைப் பிரிவான மாகியப்பிட்டி மேலே குறிப்பிட்ட ஐந்து பிரிவுகளுடனும் தொடுப்பு இன்றித் தனியாக உள்ளது. இது, மல்லாகம், மானிப்பாய் ஆகிய கோவிற்பற்றுகளால் சூழப்பட்டுள்ளது. லெயுசிக்காமின் தொகுப்பிலுள்ள முழு யாழ்ப்பாணக் குடாநாட்டையும் காட்டும் நிலப்படத்திலும் இவ்வாறே மாகியப்பிட்டி தனியாகக் காட்டப்பட்டிருந்தாலும் அது பண்டத்தரிப்புக் கோவிற்பற்றைச் சேர்ந்தது எனத் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளனர். இதிலிருந்து, ஒல்லாந்தர் காலத்தில் மாகியப்பிட்டி பண்டத்தரிப்புக் கோவிற்பற்றின் ஏனைய பகுதிகளுடன் தொடுப்பின்றி இருந்தது தெளிவாகவே தெரிகின்றது. தற்கால நிர்வாகப் பிரிவுகளின்படி, பெரியவிளான், மாகியப்பிட்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கிடையே பொது எல்லை உள்ளது.

ஒல்லாந்தர்காலப் பண்டத்தரிப்புக் கோவிற்பற்றின் பகுதிகள் தற்காலத்தில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குள் அடங்குகின்றன. அதேவேளை, உள்ளூராட்சி நிர்வாக அமைப்பில், பண்டத்தரிப்புக் கோவிற்பற்று இன்றைய வலிகாமம் - தென்மேற்குப் பிரதேச சபையின் ஒரு பகுதியாக உள்ளது.




படம்–1: லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுப் பகுதி.

**வீதிகள்**

லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி, மானிப்பாயிலிருந்து பண்டத்தரிப்புக்குச் செல்லும் ஒரு வீதியும், இவ்வீதியைப் பண்டத்தரிப்பு நகரப் பகுதிக்கு அருகில் சந்திக்கும் சங்கானையில் இருந்து வரும் ஒரு வீதியும், பண்டத்தரிப்பிலிருந்து தெல்லிப்பழைக்குச் செல்லும் ஒரு வீதியும், பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுக்குள் அமைந்துள்ளன. முதல் இரண்டு வீதிகள் சந்திக்கும் இடம் பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுக்குள் இருப்பதாக நிலப்படம் காட்டுகின்றபோதும், உண்மையில் இது பண்டத்தரிப்புக்கு வெளியே சங்கானைக்கும் மானிப்பாய்க்கும் இடையிலான எல்லைக்கு அருகிலேயே உள்ளது என்று சென்ற கட்டுரையில் எடுத்துக்காட்டினோம். இதன்படி, இரண்டாவதாகக் குறிப்பிட்ட வீதியின் எப்பகுதியும் பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுக்குள் இருக்காது என்பது தெளிவு. இது வீதிகள்




படம்-2: யைுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட பண்டத்தரிப்புக் கோவிற்பற்றின் படம்.

துல்லியமாக வரையப்படாமையால் ஏற்பட்ட பிழையாகும். பண்டத்தரிப்பிலிருந்து தெல்லிப்பழைக்குச் செல்லும் வீதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுக்குள் பண்டத்தரிப்பு, பெரியவிளான், சிறுவிளான் ஆகிய மூன்று துணைப் பிரிவுகளை ஊடறுத்துச் செல்கிறது. இந்த வீதி, ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த பல கிறித்தவத் தேவாலயங்களை இணைக்கும் வகையில் அமைந்த நீண்ட வீதியின் ஒரு பகுதி.

### தேவாலயமும் தேவாலய இல்லமும்

பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுத் தேவாலயத்தையும் அதற்கு அண்மையில் அமைந்த தேவாலய இல்லத்தையும் பண்டத்தரிப்புத் துணைப் பிரிவுக்குள் நிலப்படம் குறித்துக் காட்டுகிறது. இவ்விடம் இன்று பண்டத்தரிப்பு அமெரிக்க இலங்கை மிசன் (இப்போது தென்னிந்தியத் திருச்சபை) தேவாலயம் அமைந்துள்ள இடத்துடன் ஏறத்தாழப் பொருந்துகிறது.

ஒல்லாந்தர்காலத் தொடக்கத்தில் பண்டத்தரிப்புத் தேவாலயம் தேவைக்குப் பொருத்தமான செம்மையான கட்டடம் என்பதையும், அது முருகைக் கற்களால் கட்டப்பட்டது என்பதையும் போல்டேயஸ் பாதிரியாருடைய விவரிப்பிலிருந்து அறிய முடிகிறது. அருகிலிருந்த தேவாலய இல்லமும் அழகாகவும் உறுதியானதாகவும் கட்டப்பட்டிருந்தது.1 இதன் கீழ்ப் பகுதியில் வளைவு வரிசைகள் இருந்துள்ளன. நூலில் உள்ள படத்திலும் தேவாலய இல்லம் விவரிப்பில் உள்ளவாறே இரண்டு தளங்களைக் கொண்டதாகவும் வளைவுகளுடன் கூடியதாகவுமே காணப்படுகின்றது[2] (படம்3).

பெரும்பாலான பிற கோவிற்பற்றுத் தேவாலயங்களைப் போலவே பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுத் தேவாலயமும் முதலில் போர்த்துக்கேயராலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும். இதையே ஒல்லாந்தர் திருத்தியும், தமது தேவைக்கேற்ப மாற்றங்களைச் செய்தும் பயன்படுத்தியிருப்பர். போல்டேயஸ் பாதிரியார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த, ஒல்லாந்தர் காலத்தின் முதல் ஏழு ஆண்டுகளிலேயே இத்தேவாலயம் நிரந்தரமான கட்டடப் பொருட்களாலான உறுதியான பெரிய கட்டடமாக இருந்ததால், போர்த்துக்கேயர் காலத்திலேயே இது ஒரு குறிப்பிடத்தக்க கட்டடமாகவே இருந்திருக்கும் என ஊகிக்கலாம். 1697ஆம் ஆண்டை அண்டிய காலப்பகுதியில் தேவாலயங்களின் பராமரிப்பில் தொய்வு ஏற்பட்டிருந்தது பற்றியும், அவற்றின் கட்டடங்கள் மோசமான நிலையில் காணப்பட்டதாகவும் அக்காலக் கட்டளைத் தளபதியின் அறிக்கையில் தகவல் உண்டு.[3] 1733 -1737 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்திருந்த யொகான் வுல்வ்காங் ஹெய்ட் என்பாரும் அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த தேவாலயங்கள் மிகவும் மோசமான நிலையில் இருந்ததாகவே குறிப்பிட்டுள்ளார்.[4]

பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் முதல் இரண்டு பத்தாண்டுகளில் தேவாலயங்கள் கைவிடப்பட்ட நிலையில் இருந்ததால் அவை பெரிதும் சேதமடைந்தன. பண்டத்தரிப்பு ஒல்லாந்தர் தேவாலயமும் இவ்வாறே சிதிலமடைந்த நிலையில் இருந்தது. அமெரிக்க மிசன் மதப் பணியாளர்கள் யாழ்ப்பாணம் வந்தபோது கையேற்றுத் திருத்திப் பயன்படுத்திய ஐந்து ஒல்லாந்தத் தேவாலயங்களுள் பண்டத்தரிப்புத் தேவாலயமும் ஒன்று.[5] இப்போதும் அவ்விடத்தில் தென்னிந்தியத் திருச்சபைத் தேவாலயம் இருப்பது பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டோம்.

### சம்புக்கழி

பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுக் கடற்கரையிலிருந்து உள்நோக்கி வரும் வகையில் அமைந்த நீர்ப்பரப்பு ஒன்றை நிலப்படம் காட்டுகிறது. இதற்குச் சம்புக்கழி எனப் பெயர் குறித்துள்ளனர். இப்பகுதி தற்காலத்தில் சம்புத்துறை என அழைக்கப்படுகிறது. மகாவம்சம் உள்ளிட்ட சில பழைய பாளி நூல்கள் ஜம்புகோள, ஜம்புகோள பட்டுன, கோள பட்டுன முதலிய பெயர்களில் ஒரு

துறைமுகம் இருந்தது பற்றிக் குறிப்பிடுகின்றன. இது மேற்படி சம்புத்துறையே என வரலாற்றாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். இலங்கை வரலாற்றில், குறிப்பாக இந்நாட்டில் புத்த மதம் பரவியது தொடர்பில், இது முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்படுகிறது.

கி.மு இரண்டாம் நூற்றாண்டில் மகதப் பேரரசர் அசோகரின் மகளும் பிக்குணியுமான சங்கமித்தை புத்தர் ஞானம் பெற்ற புனித வெள்ளரசு மரத்தின் கிளை ஒன்றுடன் இலங்கையின் வடபகுதியிலுள்ள ஜம்புகோள என்னும் இடத்தில் வந்து இறங்கியதாக மகாவம்சம் கூறுகிறது.[6] அக்காலத்தில், அனுராதபுரத்திலிருந்து அரசுபுரிந்த தேவநம்பியதீசன் இவ்விடத்துக்கு வந்து வெள்ளரசுக் கிளையை வரவேற்றதாகவும், அதற்காகக் கடற்கரையில் சமுத்தாசன்ன சாலை என்னும் மண்டபம் ஒன்றை அமைத்ததாகவும் மகாவம்சம் தகவல் தருகிறது.

பாளியிலும், சிங்களத்திலும் ஜம்பு (*Eugenia jambolana*) என அறியப்படும் மரத்தின் பெயரைத் தழுவியே இப்பெயர் ஏற்பட்டதாகச் சிலர் கருதுகின்றனர். அதேவேளை, தமிழில் சம்பு (*Typha elephantina*) எனப்படும் ஒரு புல்வகையே இப்பெயர் ஏற்படக் காரணம் என்ற கருத்தும் உண்டு. இப்பகுதியின் பொதுவான தாவர வகைகளையும் சூழலியல் தன்மைகளையும் கருத்திற் கொள்ளும்போது இரண்டாவது பெயர்க்காரணம் பொருத்தமானது என்பது கலாநிதி இரகுபதி அவர்களின் கருத்து.[7]

மன்னாருக்கு அண்மையிலுள்ள அருவியாற்றின் முகத்துவாரத்துக்கு அருகில் அமைந்த மாந்தைத் துறைமுகம் முக்கியத்துவம் பெற்று அனுராதபுரத்துக்கான முதன்மைத் துறைமுகமானபோது சம்புத்துறை அதன் முன்னைய முக்கியத்துவத்தை இழந்தது என்ற கருத்து உள்ளது.[8] சம்புத்துறை முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமாக இருந்த காலத்தில் அதற்கு அண்மையில் காரைதீவுக்கும் புன்னாலைக்கும் இடையிலிருந்த நீர்வழியினூடாக யாழ்ப்பாணக் கடலேரிக்குள் செல்ல முடிந்தது. சம்புத்துறை முக்கியத்துவம் இழந்து, காரைதீவுக்கும் புன்னாலைக்கும் இடையிலான நீர்வழியும் அடைபட்டதன் பின்னர் யாழ்ப்பாணக் கடலேரிக்குள் நுழைவதற்கான மாற்று வழியான காரைதீவுக்கும் வேலணைத் தீவுக்கும் இடையிலுள்ள வழி முக்கியத்துவம் பெற்று ஊர்காவற்றுறைத் துறைமுகமும் வளர்ச்சி அடைந்திருக்கக்கூடும்.[9]

இன்று சம்புத்துறை மாதகல் மேற்குப் பகுதியில் இருந்தபோதும், லெயுசிக்காமின் நிலப்படம் இவ்விடத்தைப் பண்டத்தரிப்புக் கோவிற்பற்றின் சில்லாலைத் துணைப்பிரிவில் அடங்கிய கடற்கரை ஓரமாகவே குறித்துக் காட்டுகிறது. ஒல்லாந்தர் காலத்தில் சில்லாலைத் துணைப்பிரிவுக்குள் இருந்த இவ்விடம் பிற்காலத்தில் ஏற்பட்ட நிர்வாக எல்லை மாற்றங்களால் மாதகலின் பகுதியாக ஆனதாகக் கொள்ளலாம். நிலப்படத்தில் இதற்குச் சம்புக் கழி (*Chamboe Callie*) எனப் பெயர் குறித்துள்ளனர் (படம்4). தமிழில் 'கழி' என்பது கடற்கரையை அடுத்து உள்நாடி அமைந்துள்ள அமைதியான கடல்நீர்ப் பகுதி என்றும் பொருள்படும்.[10] இவ்விடத்தின் புவியியல் அமைப்பைக் கருத்திற் கொள்ளும்போது இதைச் சம்புக் கழி என்று குறித்திருப்பது பொருத்தமானதே.

நிலப்படத்தில் இதைக் கடற்கரையிலிருந்து உள்நோக்கிச் செவ்வக வடிவில் நீண்டிருக்கும் நீர்ப்பரப்பாக வரைந்துள்ளனர். இது ஓர் இயற்கையான அம்சமாக அல்லாது செயற்கையாக அமைக்கப்பட்டது போலவே தோன்றுகிறது. ஒல்லாந்தர் காலத்தில் இப்பகுதியில் வண்டல் அகற்றப்பட்டு கரைகள் நேராக்கி அமைக்கப்பட்டனவா என்பது தெரியவில்லை. நிலப்படத்தில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் குறித்திருப்பதால் ஒல்லாந்தர் காலத்தில் இதற்குக் குறிப்பிடத்தக்க பயன்பாடு ஏதாவது இருந்திருக்கக்கூடும். ஆனால், இவ்விடத்தை ஒரு துறையாக நிலப்படம் குறித்துக் காட்டவில்லை.

மிக அண்மைக் காலத்தில் கடற்படையினருடைய பொறுப்பிலிருந்த இப்பகுதியில் ஒரு புத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதுடன், பிக்குணி சங்கமித்தைக்கு ஒரு சிலையும் 'கழி'ப் பகுதிக்குள் சங்கமித்தை பயணம் செய்த படகைக் குறிக்க ஒரு படகுச் சிற்பமும் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்விடம் ஒரு சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. பெரும்பாலும் தென்னிலங்கைப் பௌத்த - சிங்கள மக்கள் இவ்விடத்துக்கு வருகின்றனர்.

### குளங்கள்

லெயுசிக்காமின் நிலப்படம் பண்டத்தரிப்புக் கோவிற்பற்று எல்லைக்குள் பத்துக் குளங்களைக் காட்டுகிறது. சில்லாலைத் துணைப் பிரிவுக்குள் பொருமிக் குளம், தம்பலைப்பாய் என்னும் இரண்டு குளங்களும்; மாதகல் துணைப் பிரிவுக்குள் கல்வளைக் குளம், பள்ளக் குளம் ஆகிய இரண்டும்; பண்டத்தரிப்புத் துணைப்

பிரிவுக்குள் பன்வல்லைக் குளம் என்ற பெயரில் ஒரு குளமும், வெறுமனே குளம் என்று குறிக்கப்பட்ட ஒரு குளமும்; பெரியவிளானில் வட்டக்கரை, சுளன்னைக் குளம் என்னும் இரண்டு குளங்களும்; சிறுவிளானில் கல்லுவில் குளம், மானாவளை ஆகிய இரண்டு குளங்களும் உள்ளன. மாகியப்பிட்டிக்குள் குளம் எதுவும் இல்லை.

தற்காலக் குளங்களின் பதிவுகளின்படி, ஒல்லாந்தர் காலத்துப் பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுக்குள் அடங்கியிருந்த பகுதிகளுக்குள் 12 குளங்கள் உள்ளன.[11] அமைவிடங்களையும் பெயர் ஒலிப்பு ஒற்றுமையையும் கருதும்போது சில்லாலைப் பகுதியில் இன்று உள்ள குருமைக் குளமும் தும்பலைப்பாய்க் குளமும் நிலப்படத்தில் சில்லாலைப் பிரிவுக்குள் குறித்துள்ள பொருமிக் குளம், தம்பலைப்பாய்க் குளம் ஆகியவற்றோடு பொருந்தக்கூடும். நிலப்படத்தில் பெரியவிளான் பிரிவுக்குள் வட்டக்கரை (வட்டக்கரைக் குளம்) என்னும் குளமும் தற்காலத்தில் பண்டத்தரிப்புப் பிரிவுக்குள் வட்டக் குளம் என்ற பெயரில் ஒரு குளமும் உள்ளன. இவற்றின் அமைவிடங்கள் ஏறத்தாழப் பொருந்திவருவதால், இவை ஒன்றாக இருக்க வாய்ப்பு உள்ளது.

நிலப்படத்தில் மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய துணைப்பிரிவுகள் சந்திக்கும் இடத்தில் பண்வல்லைக் குளம் (*Panwalle Coelam*) என்ற பெயரில் ஒரு குளம் உள்ளது. தற்காலத்தில் இந்தப் பகுதியில் உள்ள பாணாகவெட்டிக் குளம் (அல்லது பாணாவெட்டிக் குளம்) என்ற பெயரிலுள்ள குளமே இதுவாகும். பாணாக வெட்டி என்பது இவ்விடத்தின் குறிச்சிப் பெயர். இப்பெயரை நிலப்படத்தில் பண்வல்லை என்று பிழையாக எழுதினரா, அல்லது பிற்காலத்தில் பழைய பெயர் மருவிப் பாணாவெட்டி/ பாணாகவெட்டி ஆனதா என்பது தெரியவில்லை.

இக்குளத்துக்கு அருகில் இருந்த கண்ணகியம்மன் கோவில், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு எடுத்த விழாவில் கலந்துகொண்டவனும், கண்ணகி வழிபாட்டை இலங்கையில் அறிமுகப்படுத்தியதாகக் கருதப்படுபவனுமான கயவாகு மன்னனால் அமைக்கப்பட்டது என்ற ஐதீகம் உண்டு. இம்மன்னன் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் அனுராதபுரத்திலிருந்து அரசாண்டவன். கண்ணகி விழாவுக்குச் செல்லும்போது அக்காலத்தில் முக்கிய துறைகளுள் ஒன்றாக விளங்கிய சம்புத்துறையூடாகவே சென்றதாகவும், வரும் வழியில் துறைக்கு அண்மையிலிருந்த இக்குளக்கரையில் கண்ணகிக்குக் கோயில் அமைத்ததாகவும் இக்கோவிலின் தலவரலாறு கூறுகிறது.[12] இது, பல நூற்றாண்டுகளாக வழக்கில் இருந்துவரும் ஐதீகமா அல்லது இப்பகுதியோடு தொடர்புடைய வரலாற்றுத் தகவல்களை, இக்கோவில்மீதும் ஏற்றிப் பிற்காலத்தில் கட்டப்பட்ட கதையா என்பது தெரியவில்லை.

போர்த்துக்கேயர் காலத்தில் அங்கிருந்த பழமையான கண்ணகி சிலை பாணாவெட்டிக் குளத்துக்குள் வீசப்பட்டதாகவும், அது பிற்காலத்தில் குளத்திலிருந்து மீட்கப்பட்டதாகவும் சொல்வர்.[13] யாழ்ப்பாணத்தின் பழமையான பல நாட்டார் தெய்வக் கோவில்கள் ஆகமக் கோவில்களாக மாறியதைப் போலவே இந்தக் கண்ணகி அம்மன் கோவிலும் அண்மைக் காலத்தில் ரீபுவனேஸ்வரி அம்மன் கோவிலாக மாற்றம் பெற்றுவிட்டது.

### குறிப்புகள்


1. Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon, trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 322.
2. Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon, 309.
3. Memoir of Hendrick Zwaardecroon, Commandeur of Jaffnapatam 1697, trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer, 1911), 57, 111.
4. Johann Wolffgang Heydt, Heydt's Ceylon, Being the Relevant Sections of the Allerneuester Geographisch und Topographischer SchauPlats,trans. RevenHart (Ceylon Government Information Department, 1952), 83.
5. Miron Winslow, Memoirs of Mrs. Harriet L. Winslow (New York: American Tract Society, 1840), 192.
6. The Mahavansa Part I, Trans. George Turnour (New Delhi: Asian Educational Services, 1996), 75.
7. இத்தகவல்கள் கலாநிதி பொ. இரகுபதியுடனான தனிப்பட்ட கலந்துரையாடல் ஊடாகப் பெறப்பட்டவை.
8. Lankapura, Dambakola Patuna, https://lk.lakpura.com/pages/dambakolapatuna
9. இத்தகவல்கள் கலாநிதி பொ. இரகுபதியுடனான தனிப்பட்ட கலந்துரையாடல் ஊடாகப் பெறப்பட்டவை.
10. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி
11. விவசாய அபிவிருத்தித் திணைக்களப் பதிவுகளின்படி
12. 1"பாணாகவெட்டி அம்மன் தலவரலாறு, மாதகல் – பாணாகவெட்டி ரீ புவனேஸ்வரி அம்மன் கும்பாபிஷேக சிறப்பு மலர், ஆலய பரிபாலன சபையினர், 2011, 9.
13. "பாணாகவெட்டி அம்மன் தலவரலாறு, 10.

இராமசாமி ரமேஷ்



கலாநிதி இரா. ரமேஷ் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார். ஆட்சிமுறை, ஊழல், அரச சேவை வழங்கல், சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பாக தனது ஆய்வுகளைச் செய்து வருகிறார். மலையகம் குறித்தும் எழுதி வருகின்றார்.

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அரசியல் மறுசீரமைப்புகளும்: சிறுபான்மை மக்களை மையப்படுத்தி ஒரு சில குறிப்புகள்

இக்கட்டுரையானது கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்ற S.J.V செல்வநாயகம் அவர்களின் 127வது ஜனன தினத்தினை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் நான் ஆற்றிய உரையினை மையப்படுத்தியதாகும். எனது உரையின் பிரதான கருப்பொருளாக அமைந்தது, தற்போது பதவியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் (NPP) அரசியல் மறுசீரமைப்புகள் தொடர்பாக வழங்கிய வாக்குறுதிகளை எவ்வாறு நிறைவேற்றப்போகின்றது, சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்புகளை எவ்வாறு கையாளப்போகின்றது, அரசியல் மறுசீரமைப்புகள் சிறுபான்மை மக்களுக்கும் ஒட்டுமொத்த நாட்டுக்கும் எவ்வளவு முக்கியமானது, சிறுபான்மை மக்களுக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்குமிடையிலான உறவு எவ்வாறு அமையும் ஆகிய விடயங்களாகும்.

நம் அனைவரையும் மிகப்பெரிய வியப்பில் ஆழ்த்திய தேர்தல் முடிவுகளை 2024ஆம் ஆண்டு பார்த்தோம். தேர்தல் அரசியலின் கட்டமைப்பினை அத்தேர்தல் முடிவுகள் முற்றாக மாற்றின. அதன்மூலம் இலங்கையில் மிகப்பெரிய அரசியல் நிலைமாற்றம் ஒன்று ஏற்பட்டது. சுதந்திரத்திற்குப்பின் ஆழமாக வேரூன்றிய வர்க்க அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பாரம்பரிய அரசியலுடன் தொடர்பில்லாத ஒரு தலைவரை மக்கள் தெரிவு செய்து மரபுரீதியான அரசியல்வாதிகளுக்கு ஒரு பலமான செய்தியினை வழங்கினர். 2024ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினை அமெரிக்காவில் ‘Wake Forest’ பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர் நீல் டிவொட்டா என்பவர் அமைதியான மக்கள் புரட்சி என வர்ணித்தார். மறுபுறமாக அமெரிக்காவில் சல்ஸ்பெரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கீதபொன்கலன் தேர்தல் ஊடாக இடம்பெற்ற அமைதியான சூழ்ச்சி எனக் குறிப்பிட்டார். அதுவரைகாலமும் இத்தகையதொரு அரசியல் நிலைமாற்றத்தினை எவரும் எண்ணியும் பார்க்கவில்லை.

தீவிர அரசியல் மாற்றம் ஒன்றுக்கான தேவை இலங்கை மக்களிடம் மிக அதிகமாகவே காணப்பட்டது. இலங்கைப் பிரஜைகளின் ஒட்டுமொத்த விரக்தியின்/ கோபத்தின் இறுதி வெளிப்பாடே 2024ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் எனலாம். இவ்விரக்தியின் மீது ஊழல் மோசடிகள், அதிகார துஸ்பிரயோகம், குடும்ப ஆட்சி, சர்வாதிகார ஆட்சி, தீய ஆட்சி நடைமுறைகள், இன மற்றும் மதவாதம் போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தின. இவ்விரக்திநிலை அரகலய எனும் மக்கள் போராட்டத்திற்குப் பின்னர் அதிகளவில் வெளிப்பட ஆரம்பித்தன. மட்டுமன்றி, ஒரு முழு அளவிலான அரசியல் மறுசீரமைப்பு மற்றும் நிலைமாற்றம் குறித்த கருத்தாடல் வடக்கு - கிழக்கு - தெற்கு - மலையகம் என எல்லா இடங்களிலும் தீவிரமாகப் பரவியது.

இச் சூழ்நிலையினை தேசிய மக்கள் சக்தி மிகவும் வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தியதன் விளைவே 2024ஆம் ஆண்டு ஆட்சி மாற்றமாகும். இலங்கை மக்களின் அபிலாசைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை கவரும் வகையில் தேசிய மக்கள் சக்தி அரசியல் பிரசாரங்களையும் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் தயாரித்தது. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் ‘வளமான நாடு, அழகான வாழ்க்கை’ எனும் தொனிப்பொருளில் வெளியிடப்பட்டது. இதில் அரசியல் மறுசீரமைப்பு தொடர்பாக பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன.

1. புதிய அரசியலமைப்பு ஒன்றினை உருவாக்கி ஜனநாயகத்தினை சக்திப்படுத்தல் மற்றும் சகல மக்களுக்கும் சமத்துவத்தினை உறுதி செய்தல்.

2. இலங்கை தேசத்தினைக் கட்டியெழுப்புவதற்காக தேசிய ஐக்கியத்தினை ஏற்படுத்தல்.

3. தேசத்தின் நற்பெயரினை சுதந்திரம், ஜனநாயகம், சமூக நீதி, மனித உரிமை, சட்டத்தின் ஆட்சி மற்றும் சுற்றுச் சூழல் நீதி (Climate Justice) போன்ற விழுமியங்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் கட்டியெழுப்புதல்.

4. நாட்டில் நல்லாட்சியினை ஏற்படுத்தி இனங்களுக்கிடையில் சகவாழ்வு மற்றும் ஒற்றுமையினைப் பேணுதல். அத்துடன் ஜனநாயகம், பிரஜைகளின் உரிமை மற்றும் மனித உரிமை என்பவற்றினை சட்டத்தின் ஆட்சியின் ஊடாகப் பாதுகாத்தல்.

5. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை நீக்கி பாராளுமன்ற அரசாங்க முறையினை அறிமுகம் செய்தல்.

மேற்கூறிய தேர்தல் வாக்குறுதிகள் இலங்கையின் அரசியல் மற்றும் ஆட்சிமுறைக் கட்டமைப்பில் தீவிர நிலைமாற்றத்தை மேற்கொள்ளும் நோக்குடன் முன்வைக்கப்பட்டவையாகும். மறுபுறமாக, இவை நாட்டிற்கு பெரிதும் அவசியமான அரசியல் மறுசீரமைப்புகளாகும். 1994ஆம் ஆண்டிலிருந்து பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களும் மேற்கூறிய அரசியல்

மறுசீரமைப்புகளை மேற்கொள்வதாக தொடர்ந்தும் வாக்குறுதியளித்தன. சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் அரசாங்கத்தின் கீழும் நல்லாட்சிக்காலத்தின் (2015-2019) போதும் அரசியல் மறுசீரமைப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை கட்சி அரசியல் எதிர்ப்பு, சிங்கள - பௌத்த தேசியவாத சக்திகளின் எதிர்ப்பு, அரசியல் விருப்பமின்மை, 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசியலமைப்புச் சூழ்ச்சி, ஈஸ்டர் தாக்குதல் போன்ற பல்வேறு காரணிகளால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆயினும், தற்போதைய அரசாங்கம் சகல இன மக்களின் ஆதரவினையும் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. அரசியல் மறுசீரமைப்புக்கான சாதகமான சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பாரிய அரசியல் மறுசீரமைப்புகளுக்கு எதிப்புத் தெரிவித்து வந்த சிங்கள - பௌத்த தேசியவாத சக்திகள், ராஜபக்ச தரப்பினர் மற்றும் இன - மதவாத சக்திகள் செல்வாக்கிழந்துள்ளன. அவை இதுவரைகாலமும் செயற்பட்டு வந்த தளம் இன்று செயலற்றுக் காணப்படுகின்றது அல்லது வலுவிழந்துள்ளது எனலாம். ஆகவே, இவை அரசாங்கம் மேற்கொள்ளும் அரசியல் மறுசீரமைப்புகளுக்கான எதிர்ப்பினை பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் பெரியளவில் மட்டுப்படுத்தி அரசியல் மறுசீரமைப்புகளுக்கான கதவினைத் திறந்துள்ளன என வாதிட முடியும்.

மேற்கூறியவாறு அரசியல் மறுசீரமைப்புகளுக்கான வாய்ப்புகள் காணப்பட்டாலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரசியல் மறுசீரமைப்பு விடயத்தினை ஏன் தாமதிக்கின்றது, அதன் விளைவுகள் எவ்வாறு அமையும் என்ற கேள்வி பலரிடம் காணப்படுகின்றது. இந்த அரசாங்கம் பெரும்பான்மை சிங்கள மக்களினதும் சிறுபான்மை மக்களினதும் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த முதலாவது அரசாங்கமாகும். இம்மாற்றம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயத்தினை உருவாக்கியுள்ளது. ஆகவே, இவ் அரசாங்கம், தெற்கில் வாழும் சிங்கள மக்களின் கோரிக்கைகள் மற்றும் அபிலாசைகளையும், சிறுபான்மை மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்புகளையும் சமநிலைப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தெற்கில் உள்ள சிங்கள மக்களின் பிரதான எதிர்பார்ப்புகளாக பொருளாதார ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்துவது, வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்துவது, தொழில் வாய்ப்பு, ஊழல் மோசடி செய்த அரசியல்வாதிகளுக்கு தண்டனை வழங்குவது, பொறுப்புக்கூறும் அரசாங்கத்தினை உருவாக்குவது, பாதாள உலக கோஸ்டியினரைக் கட்டுப்படுத்துவது என்பன காணப்படுகின்றன. மறுபுறமாக, சிறுபான்மை மக்களும் மேற்கூறிய விடயத்தில் உடன்பட்டாலும் அவர்களுக்கு சில பிரத்தியேக கோரிக்கைகளும் அபிலாசைகளும் உள்ளன. அவை நீடித்த யுத்தம், இன பாரபட்சம், தொடர்ச்சியான அடக்குமுறை, ஒதுக்கல், சமூக அநீதி மற்றும் சமத்துவமற்ற கவனிப்பு என்பவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும். எனவே, புதிய அரசாங்கத்திடமிருந்து சிறுபான்மை மக்கள் தாம் இதுவரைகாலம் அனுபவித்த பிரச்சினைகளுக்கான தீர்வினை எதிர்பார்க்கிறார்கள். சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளில் அதிகாரப் பகிர்வு, புதிய அரசியலமைப்பினை உருவாக்குதல், இராணுவத்தினரைக் குறைப்பது, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, மீள் குடியேற்றம், நல்லிணக்கம், நிலைமாறுகால நீதி என்பன முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. இவை தெற்கில் உள்ள சிங்கள மக்களின் எதிர்பார்ப்புகளில் இருந்து பெரிதும் வேறுபட்டவை. ஆகவே, அரசாங்கம் தெற்கினையும் சிறுபான்மை மக்களின் அபிலாசைகளையும் எவ்வாறு கையாளப்போகின்றது என்பதிலேயே இவ்வரசாங்கத்தின் சட்டத்தன்மை தங்கியுள்ளது. இதில் ஏதேனும் தளம்பல் ஏற்படுமாயின் அது அரசாங்கத்தின் சட்டத்தன்மையில் தாக்கத்தினை ஏற்படுத்தும். தற்போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் முழு அளவிலான வெற்றியினைப் பெறுவது குறித்து அரசாங்கம் தீவிர அக்கறை காட்டுகின்றது. அதன்மூலம் சகல அரசியல் நிறுவனங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, தமது கொள்கைகளை/ வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த முற்படலாம். தேர்தல் பெறுபேறுகளில் தளம்பல்நிலை ஏற்படக்கூடாது என்பதனால் தெற்கில் உள்ள பெரும்பான்மைச் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுவருகின்றது. அண்மைக்கால கைதுகள்/ விசாரணைகள் என்பன அதனைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. ஆறு மாதகாலமாகிய நிலையில் சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் இவ்வரசாங்கம் எதனைச் செய்துள்ளது என்ற கேள்வியும் பலமாகவே

முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்படுகின்றது.

NPP அரசாங்கம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆங்காங்கே ஜனநாயகம்/ மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் அதன் நடைமுறைச் செயற்பாடுகளை நோக்கும் போது இவ்வரசாங்கம் அதிகாரப் பரவலாக்கம், ஜனநாயக ஆட்சி, மனித உரிமைகளைப் பாதுகாத்துப் பலப்படுத்துவது மற்றும் அரசியல் மறுசீரமைப்பு போன்ற விடயங்களுக்கு அதிக முன்னுரிமை வழங்குவதாகத் தெரியவில்லை. இக்கருத்தினை பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அவர்களும் தமது அண்மையக் கட்டுரையொன்றில் வெளிப்படுத்தியிருந்தார். இதற்கு JVPயின் கருத்தியல்கள் ஆதிக்கம் செலுத்தலாம். NPP எனும் கூட்டமைப்பில் தாராளவாதிகள் அதிகளவில் காணப்பட்டாலும், தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் JVPயின் ஆதிக்கம் அதிகமாகவே காணப்படுகின்றது என்ற விமர்சனத்தினை பரவலாக அவதானிக்க முடிகின்றது. NP Pஅரசாங்கம் JVP சாயத்தினை அதிகளவில் பூசிக்கொள்ளுமாக இருந்தால், அதன் விளைவுகள் வேறுபட்டதாக அமையும். மக்கள் தமது ஆணையினை வழங்கியது NPPக்கு என்பதனை இவ்வரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். NPP அரசாங்கம் JVPயின் பிடியில் இருந்து விடுபட்டு தம்மை வேறுபடுத்திக் காட்டவேண்டும். அதுவே NPPயின் எதிர்கால அரசியல் பாதையினைத் தீர்மானிக்கும். சிறுபான்மை மக்களின் விடயத்தில் ஒரு திடமான நிலைப்பாட்டினை NPP அரசாங்கம் எடுக்க வேண்டும். அதனைத் தொடர்ந்தும் தாமதப்படுத்துமாக இருந்தால் அது அரசாங்கத்தின் நம்பிக்கையில் எதிர்க்கணியத் தாக்கத்தினை ஏற்படுத்தும்.

அரசாங்கத்தின் கடந்த ஆறுமாதககாலச் செயற்பாடுகளை அவதானிக்கும்போது ஜனநாயகம், மனித உரிமைகள், அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் மறுசீரமைப்புத் தொடர்பாக ஒரு திடமான நிலைப்பாட்டினைக் காண முடியவில்லை. JVP, தீவிர சிங்கள தேசியவாத சிந்தனையினைக்கொண்ட கட்சி என்பதனால் மேற்கூறிய விடயங்கள் குறித்து NPP தரப்பினர் பேசுவதனைத் தவிர்த்துக்கொண்டிருக்கலாம். அண்மைக்காலமாக இலங்கையர் எனும் பொது அடையாளத்தினைக் கட்டியெழுப்புவது தொடர்பாக இவ்வரசாங்கம் அதிக அக்கறை காட்டி வருகின்றது. இப்போக்கானது அதிகாரப் பகிர்வு, சிறுபான்மையினர்களின் கூட்டு அரசியல் உரிமைகள் போன்ற விடயத்தில் இவ்வரசாங்கம் எத்தகைய நிலைப்பாட்டில் உள்ளது என்பதனை அறியக்கூடியதாக உள்ளது. இவ்வரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையினால் இலங்கை தொடர்பாகக் கடந்தகாலங்களில் கொண்டுவரப்பட்ட மனித உரிமைத் தீர்மானங்களை ஏற்கப்போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளது. வெளியகத் தலையீடுகள் ஊடான விசாரணை மற்றும் தீர்வுகளை ஏற்கப்போவதில்லை என அண்மையில் வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் குறிப்பிட்டார். மாறாக தமிழ்மக்கள் திருப்தியடையும் வகையிலான தீர்வினை வழங்குவோம் என இவ்வரசாங்கம் குறிப்பிடுகின்றது. ஆயினும் அது எத்தகைய தீர்வு, அதன் உள்ளடக்கம் என்ன என்பது தொடர்பாக ஒரு தெளிவும் இல்லை.

அரசாங்கம் பொருளாதாரத்தினை தூக்கிநிறுத்திவிட்டு அதன்பின்னர் ஏனைய விடயங்கள் பற்றிச் சிந்திக்கலாம் என்ற அணுகுமுறையினைக் கையாளலாம். பொருளாதாரம் நிலைகுலையுமாயின் அது தெற்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திவிடும் என்ற அச்சம் அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவே பொருளாதார மறுசீரமைப்புகள் தொடர்பாக கலந்துரையாடி வருகின்றார்கள். ஆயினும் பொருளாதாரத்தினை ஸ்திரப்படுத்த அரசியல் மறுசீரமைப்புகளும் அவசியம் என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் அதிகாரத்தினைப் பகிராமல் பொருளாதார அபிவிருத்தி குறித்துச் சிந்திப்பது எவ்வளவு தூரம் பொருத்தமாக அமையும் என்பதனைச் சிந்திக்க வேண்டும். அரசியல் மறுசீரமைப்புகளுக்கும் பொருளாதார மறுசீரமைப்புகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனை பல ஆய்வுகள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தியுள்ளன. ஆகவே, பொருளாதாரத்தினைக் காரணம்காட்டி அரசியல் மறுசீரமைப்புகளை காலம் தாழ்த்துவது அரசாங்கத்தின் மீதான சிறுபான்மை மக்களின் நம்பிக்கையினைப் பாதிக்கும். மாறாக சிங்கள - பௌத்த தேசியவாத சக்திகள் மீண்டும் எழுச்சிபெற்று அணிதிரண்டு சிறுபான்மை மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய அரசியல் மறுசீரமைப்புகளை சீர்குலைக்கலாம். அத்தகைய அனுபவங்கள் இலங்கையில் நிறையவே உண்டு என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும். அத்துடன் இவ்வரசாங்கம் முன்னைய அரசாங்கங்கள் கையாண்ட தாராள சமாதானத்தினைக் கட்டியெழுப்பும் அணுகுமுறையினை (*liberal peacebuilding approach*)

விரும்பவில்லை. குறிப்பாக மேற்கத்தேய நாடுகளின் உதவியுடன், அவற்றின் அணுகுமுறையுடன் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட நல்லிணக்கம், நிலைமாறுகால நீதி, சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல், மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல், அதிகாரப்பகிர்வு மற்றும் கூட்டு உரிமைகள் (collective rights) போன்ற விடயங்களில் இவ்வரசாங்கம் நம்பிக்கையற்றுக் காணப்படுகின்றது. ஆகவேதான், கடந்தகாலங்களில் ஐ.நா கொண்டு வந்த மனித உரிமைத் தீர்மானங்களை இவ்வரசாங்கம் ஏற்க மறுத்துள்ளது. இப்பின்புலத்திலேயே 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நீதி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டினை அவதானிக்க வேண்டும். அதன்படி 54 பில்லியன் ரூபாய் மாத்திரமே இவ்வமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது மிகக்குறைந்த ஒதுக்கீடாகும். அதே வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 442 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது சாதாரண வேறுபாடு அல்ல.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் காணாமல்போனோர் அலுவலகத்திற்கு 126 மில்லியன் ரூபாயும், இழப்பீட்டு அலுவலகத்திற்கு 2.35 பில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடும்போது குறைந்த ஒதுக்கீடாகும். மேலும், இவ்வரவுசெலவுத் திட்டத்தில் இராணுவ முகாம்களை அகற்றவோ, இராணுவத்தினைக் குறைக்கவோ, சோதனைச் சாவடிகளை அகற்றவோ அல்லது வடக்கு - கிழக்கில் வாழும் முன்னாள் LTTE போராளிகளின் வாழ்வாதாரத்தினை உயர்த்தவோ நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எவ்வாறயினும், இவ் வரவு செலவுத் திட்டத்தில் வடக்கில் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் வட்டுவாகல் பாலத்தினை அமைப்பதற்கு 6 பில்லியன் ரூபாயும், போரினால் இடம்பெயர்ந்தோரின் வீட்டு வசதிக்காக 1.5 பில்லியன் ரூபாயும், 16,000 ஏக்கரில் தென்னைப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்காக 500 மில்லியன் ரூபாயும், யாழ். நூலகத்திற்கு 100 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வடக்கி - கிழக்கு மக்களின் சமூக - பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக போருக்குப் பின்னர் அமெரிக்க அரசாங்கமும் ஏனைய நிதி நிறுவனங்களும் வழங்கிய உதவிகள் டிரம்பின் வருகையுடன் நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலை இம்மக்களின் சமூக நிலையினை மேலும் பாதிக்கும். வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் கடந்த பெப்ரவரி மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற 58ஆவது மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை தாபிக்க மற்றும் அது தொடர்பாகச் செயற்பட அர்ப்பணிப்பைக் காட்டியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பான நகல் வரைபொன்றும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தகாலத்தில் உருவாக்கப்பட்டது. ஆயினும் இவ்வரைபு இன்னும் நடைமுறைக்குவரவில்லை. சிறுபான்மை மக்களின் நலன்கள்சார்ந்த விடயங்களில் இவ்வரசாங்கத்துக்கு உண்மையான அக்கறை காணப்படுமாயின் இவ்வாணைக்குழுவினை உடனடியாகச் செயற்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும். பெரும் எதிர்பார்ப்புகளுடன் வாக்களித்த சிறுபான்மை மக்களின் அபிலாசையை நிறைவேற்றும் வகையில் ஏதேனும் ஒரு திடமான நிலைப்பாட்டினை எடுக்க வேண்டும். இவ்வரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இனவாதச் செயற்பாடுகள் எல்லா மட்டங்களிலும் தொடர்கின்றது என்ற வாதமும் முன்வைக்கப்படுகின்றது. அவற்றை அரச பதவிகளுக்கான நியமனம், பதவி உயர்வு, வள ஒதுக்கீடு, சட்டத்தினை அமுல்படுத்துவது, முறையற்ற பாதுகாப்புக் கெடுப்பிடிகள் போன்ற விடயங்களில் அவதானிக்க முடிகின்றது. படிப்படியான சிங்களமயமாக்கம் இடம்பெறுவதாக விமர்சிக்கப்படுகின்றது. மேலும், சட்டத்திற்குப் புறம்பாக இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவது குறித்து இவ்வரசாங்கம் எதுவும் குறிப்பிடவில்லை. போருக்குப் பின்னர் சிவில் மக்களின் காணிகளை வனவிலங்குத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனத்துறை என்பன கைப்பற்றியுள்ளன. இக்காணிகளை விடுவிப்பது தொடர்பாக இதுவரையிலும் எந்த திடமான நிலைப்பாட்டினையும் இவ்வரசாங்கம் எடுக்கவில்லை. இதன் எதிர்விளைவுகளை உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளில் அவதானிக்கலாம். ஜனாதிபதி, 2030ஆம் ஆண்டாகும் போது முப்படையினரின் எண்ணிக்கையைக் குறைக்க திட்டமிட்டுள்ளதாக அண்மையில் குறிப்பிட்டார். இது பெரிதும் வரவேற்கத்தக்க விடயமாகும். அதன்படி இராணுவத்தினை 100,000 ஆகவும் (தற்போது

255,000) கடற்படையினை 40,000 ஆகவும், விமானப்படையினை 18,000 ஆகவும் குறைக்கப்போவதாகக் குறிப்பிட்டார். இவை உடனடியாக இடம்பெறுமாக இருந்தால் அது சிறுப்பான்மை மக்கள் வாழும் பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க உதவும். மறுபுறமாக, பொருளாதாரத்திற்கும் நன்மை பயக்கும். காரணம் ஒவ்வொரு அரசாங்கமும் முப்படையினரின் எண்ணிக்கையினை அரசியல் மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காக கணிசமாக அதிகரித்துள்ளன. மிகப்பெரிய முப்படையினை இலங்கை அரசாங்கம் முகாமை செய்து வருகின்றது. முப்படைகளிலும் சுமார் 346,700 பேர் பணியாற்றுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை போன்ற சிறிய பொருளாதாரத்தினைக் கொண்ட நாட்டுக்கு இது மேலதிக பொருளாதாரச் சுமையினை ஏற்படுத்தியுள்ளது. உலகின் பெரிய எண்ணிக்கையிலான இராணுவத்தினைக்கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை 14ஆவது இடத்தில் காணப்படுகின்றது.

முப்படையினரைக் குறைப்பது தெற்கில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்ற அச்சமும் அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவேதான் இதனை நிறைவேற்றுவதற்காக எதிர்பார்க்கப்படும் ஆண்டு 2030 என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இங்கு அவதானிக்க வேண்டிய பிரிதொரு விடயம் யாதெனில், NPPக்கு வாக்களித்தவர்களில் 75% ஆனவர்கள் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் மொட்டுக்கட்சிக்கும் ராஜபக்சக்களுக்கும் வாக்களித்தவர்களாகும். ஆகவே, சிங்கள பௌத்தத்தின் இருப்புக்கு, நாட்டின் இறைமைக்கு அல்லது ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எந்த ஒரு தீர்மானத்தினையும் இவ்வரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளாது. அதில் சில அரசியல் மறுசீரமைப்புகளும் அடங்கும் என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும். குறிப்பாக, மனித உரிமை மீறலுக்கான பொறுப்புக்கூறல், அதிகாரப் பகிர்வு, நிலைமாறுகால நீதி, இராணுவக் குறைப்பு, வடக்கு - கிழக்கில் பௌத்தமயமாக்கத்தினை மற்றும் சிங்களமயமாக்கத்தினை நிறுத்துதல் என்பன இதில் பிரதான இடத்தினைப் பிடிக்கின்றன.

வேறுவகையில் கூறுவதாயின், இவ்வரசாங்கம் தாராளவாத ஜனநாயகத்தின் (liberal democracy) மீது நம்பிக்கையற்று இருப்பது போல் தென்படுகின்றது. இதற்கு கடந்தகால அனுபவங்களும் காரணமாக இருக்கலாம். நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றமை, கடந்த காலங்களில் ஜனநாயகம் என்ற பெயரில் ஆட்சிக்கு வந்தவர்கள் நடாத்திய தீய அல்லது மோசமான ஆட்சியின் இறுதி விளைவாகும். ஆகவே, லிபரல் ஜனநாயகமும் இன்றைய சமூக, பொருளாதார மற்றும் அரசில் நெருக்கடிக்கு காரணமென NPP அரசாங்கம் நினைக்கின்றது. தாராள ஜனநாயகத்தின் அழிவுக்கு ஜனநாயகரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியர்களே காரணம் என்ற கருத்தினை 'ஜனநாயகம் எவ்வாறு மரணிக்கின்றது' (How Democracies Die) என்ற நூலில் அமெரிக்க அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர்களான டேனியல் சிப்லெட் மற்றும் ஸ்டீபன் லெவிட்ஸ்கி ஆகியோர் வாதிட்டுள்ளார்கள். 2017ஆம் ஆண்டு இதே கருத்தினைத் தழுவி பிறிதொரு முக்கியமான நூலும் வெளியிடப்பட்டது. இது பல விருதுகளைப்பெற்ற உலகில் மிகவும் போற்றப்படுகின்ற அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர்களான Christopher Achen மற்றும் Larry Bartels என்போரால் எழுதப்பட்ட 'ஏன் தேர்தல்கள் பொறுப்புக்கூறும் அரசாங்கத்தினை உருவாக்குவதில்லை' (Why Elections do not Produce Responsive Government) என்ற நூலாகும். இத்தகையதொரு பின்புலத்திலேயே NPP அதிகம் பொருளாதார ஜனநாயகம் குறித்துப் பேசிவருகின்றது. சம பொருளாதார வாய்ப்பு, சமத்துவம், சம பங்கீடு என்பன தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதிகம் பேசப்பட்டுள்ளது. பொருளாதார ஜனநாயகத்தினை ஏற்படுத்துவதன் மூலம் ஏனைய பிரச்சினைகளை தீர்க்க முடியும் என எண்ணலாம்.

### சிறுபான்மை மக்களின் கூட்டு அரசியல் உரிமைகள்

NPP அரசாங்கம் சிறுபான்மை மக்களின் கூட்டு அரசியல் உரிமைகளை எவ்வாறு உறுதி செய்யும் என்பதே பலரிடம் காணப்படும் சந்தேகமாகும். உண்மையில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள், மலையக மக்கள் மற்றும் முஸ்லிம்கள் கோருவது கூட்டு அரசியல் உரிமைகளையாகும். அவை சுயநிர்ணயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை. அவை அதிகாரப் பகிர்வு, அரசியல் அதிகாரம், குழு உரிமை, மனித உரிமைகள் என்பவற்றுடன் பிணைக்கப்பட்டவை. இன்று அரசியல் மறுசீரமைப்பு அல்லது கூட்டு அரசியல் உரிமைகள் குறித்துப் பேசும் போது வடக்கு - கிழக்கு மக்கள் மட்டுமன்றி மலையக மக்களும்,

முஸ்லிம் மக்களும் தவிர்க்க முடியாத பங்குதாரர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கென்று பிரத்தியேகப் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் காணப்படுகின்றன.

குறிப்பாக மலையக மக்கள் வேறுபட்ட குடியுரிமையினைக் (*differentiated citizenship*) கோருகின்றார்கள். இவை வாக்களித்தல், பிரதிநிதித்துவம் மற்றும் சிவில் உரிமைகளுக்கு அப்பாற்பட்டவை. அதில் நிர்வாக அதிகாரத்தை பன்முகப்படுத்துவது, நிலத்தொடர்பற்ற அதிகாரப் பகிர்வு, நிலத்தொடர்பற்ற கலாசார சபை ஒன்றினைத் தாபித்தல், குறைதீர் நடவடிக்கையின் ஊடாக நீடித்த சமூக - பொருளாதார அசமத்துவத்தினைச் சரிசெய்தல், உள்ளூராட்சி நிறுவனங்களின் சம பிரதிநிதித்துவம், காணியுரிமை போன்ற கோரிக்கைகளை தொடர்ச்சியாக முன்வைக்கின்றார்கள். இவை மலையக மக்களின் மரபுரீதியான தொழிலாளர்களை மையப்படுத்திய கோரிக்கைகளில் (வேதனம், தொழிலாளர் உரிமை, தொழில் பாதுகாப்பு, தொழில் சட்டங்களை மறுசீரமைத்தல், கூட்டு ஒப்பந்தம்) இருந்து முற்றிலும் வேறுப்பட்டவை. மாத்திரமன்றி, தமது கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இது தொடர்பான தேசியமட்டக் கலந்துரையாடல்களில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர். அரசாங்க மட்டத்தில் முன்னெடுக்கப்படும் அரசியல் அமைப்பு மற்றும் தேர்தல்முறைச் சீர்திருத்தச் செயற்பாடுகளில் தீவிரமாகப் பங்கெடுத்து வருகின்றனர். இது இச்சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் அரசியல் விழிப்புணர்வினை எடுத்துக்காட்டுகின்றது. இதேபோன்ற கோரிக்கைகளை முஸ்லிம் மக்களும் முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு மற்றும் தேர்தல் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் போது மிக ஆர்வத்துடன் பங்கேற்றதுடன், தமது கோரிக்கைகளை அரசியல் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து முன்வைத்தார்கள். முஸ்லிம் சமூகத்தில் இன்று பலமான சிவில் சமூக அமைப்பொன்று உருவாகியுள்ளதுடன், அது இச்சமூகத்தின் அரசியல் - சமூக, பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினைகளை தீவிரமாக ஆராய்ந்து, அது குறித்து விவாதித்து அதற்கான தீர்வுகளை முன்வைத்து வருகின்றது. இவ் யதார்த்தத்தினை NPP அரசாங்கம் புரிந்துக்கொள்ள வேண்டும். கடந்தகாலங்களில் சிறுபான்மை மக்களும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையிலான உறவு பெரியளவில் சிதைவடைந்திருந்தது. அவ்வுறவினை புதுப்பிக்க வேண்டும். அதற்கான வாய்ப்பொன்று தற்போது கிடைத்துள்ளது. இனவாதத்திற்கு எந்தவகையிலும் இடமில்லை எனவும் அதனைப் புதிய சட்டமொன்றினை உருவாக்கியேனும் இல்லாது செய்வோம் எனவும் ஜனாதிபதி அடிக்கடி கூறிவருவது வரவேற்கத்தக்க விடயமாகும். ஆயினும், அதனை யதார்த்தமாக்க வேண்டும். சுதந்திரத்திற்குப் பின்னர் மாறிமாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இலங்கைத் தேசத்தினைக் கட்டியெழுப்புவதில் கையாண்ட தவறான அணுகுமுறையை இவ்வரசாங்கம் உணரவேண்டும். சிங்கள - பௌத்த தேசியவாதக் கருத்தியலின் அடிப்படையில் இலங்கையர் என்ற பொது அடையாளத்தினை உருவாக்க முடியாது என்ற யதார்த்தத்தினை ஏற்று அங்கிகரிக்க வேண்டும்.

சுதந்திரம்பெற்ற காலத்தில் இருந்து இலங்கை ஓர் இனத்துவ அல்லது இன மேலாதிக்க அரசாகவே (*ethnocratic state*) இருந்துள்ளது என்பதனை பேராசிரியர் நீல் டிவொட்ட தமது கட்டுரைகளில் தொடர்ச்சியாக வாதிட்டுள்ளார். இலங்கை அரசு யாவரையும் உள்ளடக்கிய அரசாக இருக்கவில்லை. சிறுபான்மை மக்கள், ஆட்சிமுறைக் கட்டமைப்பில் இருந்து வெளியில் தள்ளப்பட்டார்கள் அல்லது ஒதுக்கப்பட்டார்கள் எனலாம். இந்நிலையினை NPP அரசாங்கம் மாற்ற வேண்டும். வேறுபட்ட அடையாளங்களை, கலாசாரத்தினை உள்வாங்கி அங்கீகரிக்கும் அரசு ஒன்றினைக் கட்டியெழுப்ப வேண்டும். மேலும், யுத்தம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இலங்கை ஒரு தேசிய பாதுகாப்பு அரசாகவே இருந்து வந்துள்ளது. தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் அரசினை பாதுகாப்புமயப்படுத்தி சிறுபான்மை மக்களை அரசாட்சிக் கட்டமைப்பில் இருந்து ஒதுக்கினார்கள். சிறுபான்மைச் சமூகங்களை இராணுவபலம், பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற கருவிகள் ஊடாக அச்சம் நிறைந்த சூழலுக்குள் தள்ளுகின்றார்கள். சிறுபான்மை மக்கள் குறிப்பாக, போர்க்காலத்தில் தமிழ் மக்கள், போர் முடிந்த பின்னர் முஸ்லிம் மக்கள், பாதுகாப்பு மயப்படுத்தப்பட்டார்கள். அண்மையில் கொழும்பில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக ஸ்டிக்கர் ஒன்றினை ஒட்டியதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை இதன் தொடர்ச்சியான வெளிப்பாடாகும். ஆகவே, NPP அரசாங்கம் தேசிய பாதுகாப்பு அரசினை மறுசீரமைக்க வேண்டும். இலங்கைச் சமூகத்தினை ஜனநாயகப்படுத்த வேண்டும். சிவில், அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார

உரிமைகளை சகல இனத்தவர்களும் சமமாக அனுபவிக்கும் சூழ்நிலையினை உருவாக்க வேண்டும். அதற்கு அவசியமான சட்ட அல்லது கொள்கை அல்லது நிறுவன மறுசீரமைப்புகளை மேற்கொள்ளல் வேண்டும். சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைக் கையாளுவதற்காக பிரத்தியேக ஆணைக்குழு ஒன்றினை உருவாக்க முடியும். இது எமது நீண்டநாள் கோரிக்கையாகக் காணப்படுகின்றது. சிறுபான்மை மக்களின் விவகாரங்களுக்கான ஆணைக்குழுக்கள் உலகில் பல நாடுகளில் உள்ளன. இந்தியாவில் சிறுபான்மை மக்களுக்கான அமைச்சும், அவ்வமைச்சின்கீழ் சிறுபான்மையினருக்கான ஆணைக்குழுவொன்றும் காணப்படுகின்றது. கிழக்கு ஐரோப்பாவில் வேறுப்பட்ட அமைப்புகள் நிறுவப்பட்டு, மனித உரிமைகள், பிரகடனங்கள் மற்றும் சமவாயங்கள் ஊடாக சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. பொதுவில் நெருக்கடியான சூழ்நிலையானது அரசியல் - பொருளாதார மறுசீரமைப்புக்கான கதவினைத் திறக்கும். இதுவே உலகளாவிய அனுபவமாகும். ஆகவே, அதனைப் புரிந்துகொண்டு NPP அரசாங்கம் அரசியல் மற்றும் பொருளதார மறுசீரமைப்புகளைக் காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டும். அத்தகைய மறுசீரமைப்புகள் பல சமூக - அரசியல் - பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்பினை வழங்கும். NPP அரசாங்கம் சிறுபான்மை மக்களின் அபிலாசைகள் தொடர்பாக தொடர்ந்தும் காலம் தாழ்த்துமாக இருந்தால் சிவில் சமூகம், பிரஜைகள் மற்றும் முற்போக்கு அரசியல் சக்திகள் என்பன ஒன்றிணைந்து அரசாங்கத்தின்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். அரசியல் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்களில் தீவிர ஈடுபாட்டினைக்காட்ட வேண்டும். காரணம் இத்தகையதொரு வாய்ப்பு இனிக் கிடைக்கப்போவதில்லை.

மிக முக்கியமாக, சிறுபான்மை அரசியல் தலைமைகள், அரசியல் சக்திகள், சிவில் சமூகம், கல்விமான்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை நலன்சார் தரப்பினர் இதுவரை காலமும் கையாண்ட அணுகுமுறையினை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். புதிய அணுகுமுறைகள் குறித்துச் சிந்திக்க வேண்டும். சிறுபான்மை மக்களின் உரிமைகளை எவ்வாறு வென்றெடுப்பது, அதற்கான புதிய அணுகுமுறைகள் என்ன என்பன தொடர்பில் தீவிர கலந்துரையாடல்களில் ஈடுபட வேண்டும். இவ்விடயத்தில் வடக்கு - கிழக்கு தமிழர், முஸ்லீம் மற்றும் மலையக அரசியல் தலைமைகள், சிவில் சமூகம் மற்றும் புத்திஜீவிகள் ஒன்றிணைந்து பொது அமைப்பின்கீழ் செயற்பட முன்வரவேண்டும். பொது அமைப்புக்குள் இருந்துகொண்டு தமது பிரத்தியேகக் கோரிக்கைகளை அடைந்துகொள்ள கூட்டிணைந்த அணுகுமுறையினைக் கையாள வேண்டும். சிறுபான்மை மக்களின் அரசியல் சக்திகள் இன்று பெரியளவில் துருவமயமாகிப் பிரிந்து செயற்படுகின்றன. இது சிறுபான்மை மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வாய்ப்பினைக் குறைக்கும். இத்தகைய துருவமயமாக்கலை தென்னிலங்கை அரசியல் தலைமைகள் விரும்புவர். புதியதொரு தாராள ஜனநாயக அரசியல் யாப்பொன்று இலங்கைக்குத் தேவை. அதன்மூலமே பல்லினத்தன்மை, பல்கலாசாரம் மற்றும் வேற்றுமைகளில் ஒற்றுமை என்பவற்றினை உறுதி செய்ய முடியும். குழு உரிமை, கூட்டு அரசியல் உரிமை, சமூக - பொருளாதாரம், ஜனநாயகம் மற்றும் மனிதப் பாதுகாப்பு என்பன சிறுபான்மை மக்கள்சார்ந்து முன்வைக்க வேண்டிய முக்கிய கோரிக்கைகளாகும். சிறுபான்மை மக்களின் கூட்டு அரசியல் உரிமைகளை NPP அரசாங்கம் ஏற்க வேண்டும். அரசியல் மறுசீரமைப்புக்கான அடிப்படையாக அதனைப் பயன்படுத்த வேண்டும். சிறுபான்மை மக்களின் கூட்டு அரசியல் உரிமைகள் பொதுச்சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளில் இருந்து வேறுப்பட்டவை. ஆகவே, விசேட ஏற்பாடுகளின் மூலம் கூட்டு அரசியல் உரிமைகளை உறுதி செய்ய வேண்டும். அவை பொதுச்சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள சிவில், அரசியல், பொருளாதர, சமூக மற்றும் கலாசார உரிமைகளை அனுபவிக்க அவசியமாகும். இலங்கையில் இடம்பெற்ற 30 ஆண்டுகால இனமோதல் சிறுபான்மை மக்களின் கூட்டு அரசியல் உரிமைகள் தொடர்பான கருத்தாடலுக்கு வித்திட்டது.

மொழியுரிமை இதற்குச் மிகச்சிறந்த உதாரணமாகும். ஆகவே, இக்கருத்தாடலை பரந்துபட்ட அளவில் கூட்டிணைந்த முறையில் மேற்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் பிரதான நிகழ்ச்சிநிரலில் இதனைத் தொடர்ந்தும் இருப்புக்கொள்ளச் செய்ய வேண்டும். அதன்மூலமே NPP அரசாங்கத்தின்கீழ் அரசியல் மறுசீரமைப்புகளை சாத்தியமாக்கி சிறுபான்மை மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

சின்னையா மௌனகுரு



சின்னையா மௌனகுரு அவர்கள் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர்; அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், பிரதி உருவாக்குநர், நடிகர், கூத்துக் கலைஞர் என்று பல தளங்களில் இன்றும் இயங்கிவருபவர்.ஈழத்து அரங்கத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிலரில் மௌனகுரு குறிப்பிடத்தக்கவர். ‘இராவணேசன்’, ‘சங்காரம்’ முதலிய புகழ்பெற்ற கூத்து நாடகங்கள் மௌனகுருவுக்கு தனியான அடையாளத்தை வழங்கின. இவர், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம் – 1984, சடங்கில் இருந்து நாடகம் வரை – 1985, மௌனகுருவின் மூன்று நாடகங்கள் – 1985, தப்பி வந்த தாடி ஆடு – 1987, பழையதும் புதியதும் நாடகம் அரங்கியல் – 1992, சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் – 1992, சங்காரம் – ஆற்றுகையும் தாக்கமும் (நாடகம்) – 1993, ஈழத்து தமிழ் நாடக அரங்கு – 1993, கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் – நீலாவணன் – 1994, கலை இலக்கிய கட்டுரைகள் – 1997, சக்தி பிறக்குது – நாடகம் – 1997, பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும் – 1997, ஈழத்து நாடக அரங்கு – 2 ஆம் திருத்திய பதிப்பு – 2004, தமிழ்க் கூத்துக்கலை – வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல் – 2010, கூத்து யாத்திரை – 2021, கூத்தே உன் பன்மை அழகு – 2021 போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.

# தமிழ்ச் சமூகத்தின் அடிக்கட்டுமானங்களும் கருத்தியலும்

ஈழத்து மரபுவழி ஆற்றுகைக் கலைகளுக்கு ஒரு வரலாறும் வளர்ச்சியும் உண்டு. தென்மோடி, வடமோடி, சிந்துநடைக் கூத்துகள், வாசாப்பு, இசை நாடகம், பள்ளு, குறவஞ்சி, வசந்தன், மகுடி என அது பன்முகப்பட்டது. இவற்றுள் சில அருகிவிட்டன; சில கால ஓட்டத்துடன் நின்று போராடி நிலைக்கின்றன; சில மாறுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும், அதனை உருவாக்கிய அரசியல், பொருளாதார, சமூக காரணங்களும் இம்மாற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளன. இந்த பல்வேறு வகைப்பட்ட ஆற்றுகை வடிவங்கள் தத்தமக்கென அழகியலையும், அமைப்பையும், வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டுள்ளன; ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும் வளர்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதும், அவை மாற்றம் பெற்றபோது அது சம்பந்தமாக நடந்த விவாதங்களை அறிவதும், இதன் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவருக்கும், அதனை மேலும் வளர்த்துச் செல்ல விரும்புவோருக்கும் உதவியாக இருக்கும். இப் பல்வேறு ஆற்றுகை வடிவங்கள் பற்றியும் அவை கல்வி உலகில் ஏற்கப்பட்ட பின்னணிகள் பற்றியும், அதனால் இந்த ஆற்றுகைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதாக ‘ஈழத்துத் தமிழரின் ஆற்றுகைக் கலைகள் : மரபும் மாற்றமும்’ எனும் இக்கட்டுரைத் தொடர் அமைந்திருக்கும்.

உலகம் எங்கணும் பரந்துவாழும் தமிழ்ச்சமூகத்தை, தமிழ்ச்சமூகமாக இணைக்கின்ற இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன: ஒன்று, அவர்கள் பேசும் தமிழ்மொழி; மற்றது, அவர்களால் கட்டமைக்கப்பட்ட தமிழ்ப்பண்பாடு. இந்த இரண்டிற்கும் ஒரு வரலாற்றுப்பின்னணியும், வளர்ச்சிப்பின்னணியும் உள்ளது. மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரேயே வளர்ச்சிபெற்ற தமிழ்மொழி காலத்திற்கேற்ப மாறிவந்துள்ளது. அதுபோலவே, 3000 வருடங்களுக்கு முன்னரே உருவான தமிழ்ப்பண்பாடும் காலந்தோறும் மாறிவந்துள்ளது. இந்த மாற்றங்களைப் புரிந்துகொண்டால்தான் தமிழ்ச்சமூகத்தின் அடிக்கட்டுமானத்தையும் கருத்தியலையும் நம்மால் உணரமுடியும்.

தமிழ் இனத்தின் மூல உற்பத்தி இந்தியாவின் தென்பகுதி என்றும், அது ஈழம்வரை பரந்திருந்ததென்றும் கூறுவதற்கான ஆதாரங்கள் உள்ளன. எனவே, தமிழினத்தின் மூல உற்பத்தியை தமிழகத்திலும், ஈழத்திலும் காணலாம் என்பது சிலரது கருத்து. அத்தமிழினம் இன்று உலகம் எங்கும் பரந்துவாழ்கிறது, அதற்கான வரலாற்றுக்காரணமும் உள்ளது. ஆசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க நாடுகள், வடதுருவ நாடுகள் என இன்று தமிழினம் பரந்து வாழ்கிறது. இங்குவாழும் தமிழ்மக்கள் அனைவரும் தமிழ்மொழியையும் தமிழர்பண்பாட்டையும் பேணவேண்டும், அதன்தனித்துவத்தைக் காக்கவேண்டும் என்ற உணர்வோடு செயற்படவேண்டிய காலமாக இக்காலம் உள்ளது.

இந்தப் பின்னணியிலேயே நாம் தமிழரைப் பற்றிய அடிக்கட்டுமானத்தைக் காணவேண்டும். அயல்நாடுகளில் வாழும் தமிழர் சமூகத்தில் பழம் தலைமுறையினர் பழைய அடிக்கட்டுமான கருத்தியலில் வாழ்ந்துகொண்டு இருப்பது போலவும், அங்குவாழும் புதிய தலைமுறையினர் அக்கருத்தியலிலிருந்து விடுபட்டுவாழும் சூழ்நிலை அங்கு தோன்றியுள்ளது எனவும் அறிகிறோம். இங்கு நான் ஈழத்துக்கூத்துகள் பற்றிப் பேசுவதால், ஈழத்தமிழரின் அடிக்கட்டுமானம் பற்றியும் அவைதரும் கருத்தியல் பற்றியுமே பேசவுள்ளேன். இன்றைய உலகத் தமிழ்க்கூத்துகளையும் அதன் போக்குகளையும் அறிந்துகொள்ள இது உதவக்கூடும். ஏனையவை பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசுவோம்.

ஈழத்தில் அல்லது இலங்கையில் வாழும் தமிழ்மக்கள் இலங்கையின் வடபகுதி, வன்னிப் பகுதி, கிழக்குப் பகுதி, மத்திய பகுதி, மேற்குப் பகுதி மற்றும் வடமேற்குப் பகுதி என பல்வேறு பகுதிகளில் பிரிந்து வாழ்கிறார்கள். இவர்களின் இன்றைய பொருளாதார அடிக்கட்டுமானமாக நிலமானியமும், முதலாளித்துவ நவீனப் பொருளியல்முறையும் அமைந்துள்ளன; இவை இணைந்தும் காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் நிலமானியமே அடிக்கட்டுமானமாக இருந்தது; அத்தகைய சிந்தனைகளே அவர்களின் கருத்துகளாக இருந்தன. பின்னர் வெவ்வேறு பொருளாதார அடிக்கட்டுமானங்கள் உருவானபோது, அவர்களின் சிந்தனையிலும் கருத்தியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. முதலில் நாம் ஒவ்வொரு பிரதேசத்தையும், அதன் பிரதான பொருளியல் அமைப்பையும், சமூக அமைப்பையும் புரிந்துகொள்ள வேண்டும்.

### நிலமானியப் பொருளியல் அமைப்பின் குழந்தை: சாதி அமைப்பும் நிலமானியச் சமயமும்

யாழ்ப்பாணத்தின் அல்லது வடபகுதியின் சமூகக்கட்டமைப்பு வித்தியாசமானது. அதில் வேளாளர்கள் மேல்நிலையிலும், ‘விளிம்புநிலையினர்’ எனக் கூறப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் கீழ்நிலையிலும் உள்ள ஒரு சமூகக்கட்டமைப்புக் காணப்படுகிறது. ஆகம முறையிலமைந்த இந்துமதமே அங்கு சமூக மேல்நிலைச் சமயக் கருத்துநிலையாகும்.

மட்டக்களப்பில் முக்குவர்கள் மேல்நிலையிலும், விளிம்புநிலை மக்கள் கீழ்நிலையிலுமுள்ள ஒரு சமூகக்கட்டமைப்பு உள்ளது. இங்கு ஆகமம்சாரா, சடங்குமுறைசார்ந்த இந்துசமயக் கருத்துநிலையே மையநிலையாக இருக்கின்றது. மன்னாரிலும் இந்தநிலையே காணப்படுகிறது. அங்கு ஆகமமுறையிலான சமயம் இருப்பினும், கத்தோலிக்கம் முக்கிய இடம் வகிக்கிறது. ஐரோப்பிய நிலமானிய அமைப்பின் முக்கிய மதம் கத்தோலிக்கம் என்பதே சில ஆய்வாளர்களின் முடிவாகும்.

மலையகத்தில் சமூகக்கட்டமைப்பின் உயர்நிலையில் உள்ளவர்கள் மற்றும் தாழ்நிலையில் உள்ளவர்கள் என்றவாறான ஒரு சமூகக்கட்டமைப்பு உள்ளது. இந்தக் கட்டமைப்புகளே அவர்களின் சிந்தனைகளைத்

தோற்றுவிக்கின்றன, கருத்தியலை உருவாக்குகின்றன. அங்கும் சாதியமைப்பு உண்டு; சாதிரீதியாகவே அவர்கள் ஆரம்பத்தில் குடியிருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. அங்கு ஆகமம் சார்ந்த இந்துமத முறைகள் செல்வாக்குப் பெற்றிருப்பினும், ஆகமம் சாரா தெய்வவழிபாட்டுமுறையே பிரதானமாக இருக்கிறது என்பதை மறந்துவிடலாகாது.

### சமூக அமைப்பும், கலை வடிவங்களும்

சமூக அமைப்பிற்கும் கலை வடிவங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் உள்ளன. குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் நிலவும் பொருளாதார உற்பத்தி, அச்சமுகத்தின் பிரதான கலைவடிவங்களை நிர்ணயிப்பதில் பெரும்பங்கு கொள்கிறது. வளர்ச்சியடைந்த ஈழத்துக்கூத்துகள் தமிழர் மத்தியில் உள்ள நிலமானிய சமூகத்தைப் பிரதிபலிப்பதுடன் அதனைக் கட்டிக்காக்கும் உள்ளடக்கம், உருவங்களையும் பெற்றுள்ளன. அத்தோடு நிலமானிய சமூகத்தின் உளவியல் தேவைகளையும் அவை நிறைவேற்றுகின்றன.

தமிழர் சமூகம் சமச்சீரற்ற பொருளாதார அமைப்பைக் கொண்டுள்ளது. இந்தக் குறிப்பிட்ட பொருளாதாரச்சூழல் அச்சமூகத்தில் பயில்நிலையிலுள்ள கூத்தாற்றுகையின் வன்மைப்பாட்டைத் தீர்மானிக்கிறது. இப்பொருளாதாரச் சூழல் மாற, அது தனது பழைய முக்கியத்துவத்தை இழக்கிறது. சூழல் மாற்றத்திற்கு பொருளாதார அகச்சிதைவே முக்கிய காரணம் ஆயினும், புதிய பண்பாட்டின் வருகை மற்றும் நம்பிக்கை என்பன இம்மாற்றத்தை துரிதப்படுத்துவதில் பங்கு வகிக்கின்றன. ஆனால், இவ்வண்ணம் சூழல் மாறினாலும், பாரிய பாரம்பரிய நம்பிக்கை காரணமாக கூத்துப் போற்றப்படுகிறது. பண்பாடு என்பது மிகச் சிறுவயதிலிருந்தே அகத்தில் ஊறிய ஒன்று; அது இலேசில் மாறிவிடும் தன்மையுடையது அல்ல; ஆனால், மாறுவதையும் தவிர்க்க முடியாது.

மாறும் சமூகத்திற்கு ஏற்ப, கூத்தை மாற்றி, சமூகப் பயன்பாடு உடையதாக அதனை ஆக்கும் முயற்சியும் புத்திஜீவிகளால் மேற்கொள்ளப்படுகிறது. அனைத்தும் மாறக்கூடிய சமூகத்தில் கூத்து மட்டும் மாறாவிட்டால், அது காலப்போக்கில் ஒரு நூதனசாலைப்பொருள் ஆகிவிடும். இப்பொதுவிதியின் பின்னணியில் கூத்தை நோக்குவோம்; முக்கியமாக மட்டக்களப்பை அடிப்படையாகக்கொண்டு இதனைப் பார்ப்போம்.



Image Source - www.battinews.com

### மட்டக்களப்பு ஒரு சுருக்கமான சமூக ஆய்வு

கிழக்கிலங்கை; திருகோணமலைப் பிரிவு, மட்டக்களப்பு பிரிவு, அம்பாறைப் பிரிவு என நிர்வாக வசதிகருதி மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்புப் பிரிவில் சிறப்பாகவும், ஏனைய பிரிவுகளில் குறிப்பாகவும் கூத்துகள் ஆடப்பட்டு வருகின்றன. மட்டக்களப்புப் பகுதியே இங்கு ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது. மட்டக்களப்பின் சமூக அமைப்பு எத்தகையது? அங்கு நடைபெறும் கூத்துவகைகள் யாவை? இந்தக் கூத்துவகைகளுக்கும் இச்சமூக அமைப்புக்கும் உள்ள தொடர்புகள் என்ன? இதன் சமூக அத்தியாவசியம் என்ன? என்பனவே நம்முன்னே உள்ள கேள்விகள் ஆகும். சமூக அமைப்பை இங்கு முக்கியமாக நோக்கவேண்டும். சமூக அமைப்பின் அச்சாணியாக விளங்குவது அச்சமூக அமைப்பின் அடித்தளமாக இருக்கும் பொருளாதார வாழ்க்கைமுறைமை ஆகும். உற்பத்திக் கருவிகளையும், அதனால் ஏற்படும் உற்பத்தி உறவுகளையும் கொண்டு இச்சமூக அமைப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

### மட்டக்களப்பின் சமூக அமைப்பு

இப்போதைய மட்டக்களப்பின் சமூக அமைப்பை நாம் நிலமானியச் சமூக அமைப்பு எனலாம். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள விளைநிலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மட்டக்களப்பில் விவசாயமே இன்று முக்கியத் தொழிலாக இருக்கின்றது. எனினும், பழைய புராதன குழுவாழ்வின் (தேன் எடுத்தல், மந்தை

மேய்த்தல்) எச்சசொச்சங்களையும், அவை விட்டுச்சென்ற பழைய கலாசார அம்சங்களையும் இதன் சமூக வாழ்க்கைமுறையில் இன்றும் கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது. ஆங்கிலேயர் வருகையின் காரணமாகவும், அவர்கள் கல்வியில் ஏற்படுத்திய சமூக வளர்ச்சி காரணமாகவும், இவ் அமைப்பின் இறுக்கம் சில இடங்களில் குறைந்துள்ளது.

### நிலமானிய வேறுபாடுகள்

ஐரோப்பிய நிலப்பிரபுத்துவநிலையில் இருந்து இந்திய நில உடைமை அமைப்பு மாறுபட்டது என்பார் அறிஞர் கோஸாம்பி. இந்திய நிலப்பிரபுத்துவ அமைப்பில் சாதிமுறையும் சமயமுமே முக்கியமான அம்சங்களாகும். அதனோடு நாம் பெண்ணடிமையையும் சேர்த்துக்கொள்ளலாம். இந்தச் சாதிமுறைமை இந்திய சமூக அமைப்பின் அச்சாணியாகவும், சிறப்பம்சமாகவும் சமயநூல்களால் ஏற்கப்பட்டு இன்றுவரை இயங்கிவருகிறது. பெண்ணடிமை முறையை இலக்கியங்களும் அறநூல்களும் வலியுறுத்தியே வந்துள்ளன. சாதி அமைப்பின் வலிமை அவ்வவ் சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்ப தாக்கம் கூடியதாகவும், குறைந்ததாகவும் நிலவிவந்தாலும், சாதி என்ற அமைப்பும் கருத்தும் இன்றுவரை தமிழ்ச்சமூகத்திடம் மிகமிக வலிமை வாய்ந்த கருத்தியலாகவே இருந்துவருகிறது.

யாழ்ப்பாணத்து நிலமானிய சமூக அமைப்புக்கும், மட்டக்களப்பு நிலமானிய சமூக அமைப்புக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறுபாடுகள் முக்கியமானவைகளாகும். இவ்வேறுபாடுகள் ஏற்பட்டமைக்கும், மட்டக்களப்புக்கு என தனித்தவொரு சாதி அமைப்பும் சமூகப் பண்பாடும் உருவாகியமைக்கும் உரிய காரணங்களை நாம் வரலாற்றில் இருந்துதான் பெறவேண்டும். மட்டக்களப்பு வரலாறு குறித்து இன்னும் தெளிவாக ஆராயப்படவில்லை. எனினும், கிடைக்கும் ஆதாரங்களைக்கொண்டு பார்க்குமிடத்து அதன் வரலாற்றை நாம் ஓரளவு ஊகிக்கலாம். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், தமிழ்நாட்டைத் தவிர ஏனைய பாகங்களில் இருந்தும், இலங்கையின் வடபால் இருந்தும் காலத்துக்குக்காலம், மட்டக்களப்பில் மக்கள் குடியேறியதை அறியமுடிகிறது.

ஏற்கனவே இங்கு பழங்குடிகள் வாழ்ந்திருந்தபோதிலும், பின்னர் குடியேறியோர், ஏற்கனவே இங்கு வாழ்ந்தோருடன் இணைந்தனர். குடிகளுக்கிடையே ஆரம்பத்தில் சண்டைகள் நிகழ்ந்தன. இறுதியில், சமூகத்தில் செல்வாக்குமிக்க குடிகள் மட்டக்களப்புக்கு என ஓர் அரசை நிறுவிக்கொண்டன. ஆரம்பகாலங்களில் இந்த அரசு தென்இலங்கையிலிருந்த பேரரசான உருகுணை அரசின் கீழும், இடைக்காலத்தில் தமிழகத்திலிருந்துவந்த தமிழ் மன்னர்களின் கீழும், பிற்காலத்தில் கண்டிய அரசின்கீழும் இருந்தது என வரலாறு கூறுகிறது.

குடியேறிய மக்களும் இங்கு வாழ்ந்த பழங்குடியினரும் விவசாயத்தையே தங்கள் முக்கிய தொழிலாகக்கொண்டனர். விவசாயத்தை அடியொட்டிய நிலமானியமுறை அமைப்பினைக் கட்டிக்காக்க, ஸ்திரமான அரசு அவசியமாக, மாகோன் என்னும் மன்னன் இந்த அரசை நிறுவி ஓர் இறுக்கமான சமூக அமைப்பை உருவாக்கினான் என்று கூறப்படுகிறது. நிலமானிய அமைப்புக்கு ஏற்ப சாதிமுறைகளும் வகுக்கப்பட்டன. அடிக்கடி குடியேற்றங்கள் நடைபெற்றதனாலும், குடியேறியோர் காடுவெட்டிப் பயிர்செய்து குடியேறிய பகுதிகளில் ஸ்திரமாகியதனாலும், குறிப்பிட்ட சாதியினரைத்தவிர, தாழ்ந்த வகுப்பினராகக் கருதப்படும் ஏனைய சாதியினர், நில உடைமையாளர்களில் தங்கியிருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்கவில்லை. இதனாலேயே மட்டக்களப்பில் சாதி அமைப்பு, இலங்கையின் வடபகுதிபோல அத்தனை இறுக்கமாக இல்லை என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

நிலமானிய அமைப்பின் தன்மையைப்பொறுத்து இந்தச் சாதிகளை 17 சாதிகளாக வகுத்தனர் என்று மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இந்தச் சாதி அமைப்பைக்கொண்ட சமூக அமைப்பில் வெள்ளாளரும் முக்குவருமே உயர்குடியினராகக் கருதப்பட்டனர். அவர்கள் குடிகளாகவும் வகுக்கப்பட்டிருந்தனர். அதிகமான நிலங்களுக்கு இவர்கள் சொந்தக்காரர்களாக இருந்ததுவே இதற்கான காரணமாகும்.

இவர்களுக்கு அடுத்தபடியாராக சீர்பாதக்காரரும், கரையாரும் முக்கிய இடம் வகித்தனர். வேளாளரிடமும், முக்குவரிடமும், சீர்பாதக்காரரிடமும், கரையாரில் ஒரு பிரிவினரிடமும் இந்தக் குடிமுறைகள் உண்டு. இவர்களில் கரையார், கரையோரப்பகுதிகளில் மீன்பிடிச் சமூகத்தினராக ஒதுங்கிவிட, வெள்ளாளரும் முக்குவரும் சீர்பாதக்காரருமே கிராமிய அமைப்பில் தலைமை ஸ்தானம் பெற்றனர். இங்குள்ள கோயில்களிலே இந்தத்

தன்மையைக் காணலாம்; திருவிழாக்களில் இந்தக்குடிமுறை பேணப்படுகிறது. குடிகளுக்குள்ளும் ஏற்றத்தாழ்வுகள் உண்டு.

கிராமப்புறங்களில் சாதி அமைப்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சாதிக்குமுரிய ஊழியங்கள் வகுக்கப்பட்டிருந்தன. இவை சமூக ஊழியம், கோவில் ஊழியம் என நிர்ணயிக்கப்பட்டிருந்தன. உயர் வகுப்பினராகக் கருதப்பட்ட முக்குவர், வேளாளர் இடையே உழுவோர், உழுவித்து உண்போர் என இரண்டு பிரிவுகள் இருந்தன. உழுபவர்கள் பொருளாதார அமைப்பில் சமூகத்தின் கீழ்நிலையிலும், உழுவிப்போர் பொருளாதார அமைப்பின் மேல்நிலையிலும் இருந்தனர். சமூகத்தின் தலைமை ஸ்தானத்திலிருந்தோர், சிறைக்குடிகள் எனும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனி இடமும், தனிநிலமும் கொடுத்து அவர்களைத் தமக்கு ஊழியம்செய்யவென வைத்துக்கொண்டனர். உயர்நிலையில் இருந்தோரின் வாழ்வியலில் (மணநாள், பிணநாள், சாமத்திய வீடு, கோயில் நிகழ்வுகள், இன்னோரன்ன சடங்காசார வாழ்வியல்) இந்தத் தாழ்நிலையில் இருந்தோரின் வாழ்வு பிணைக்கப்பட்டிருந்தது.

உயர்நிலையிலிருந்தோர் எனக் கருதப்பட்டோருக்கும், தாழ்நிலையில் இருந்தோர் எனக் கருதப்பட்டோருக்குமிடையே ஓர் உறவு நிலவினாலும், சாதிமுறைகளைமீறாத நேசபூர்வமான உறவாகவே அது திகழ்ந்தது. ஒரு சங்கிலிப் பிணைப்புபோல் அது இருந்தது எனலாம். சாதிகளுக்கிடையே திருமண உறவுகள் ஏற்பட சமூகம் ஒருபோதும் அனுமதிக்கவேயில்லை. காரணம் அது சொத்துரிமை சார்ந்ததாக இருந்தது.

இத்தகைய நிலமானிய அமைப்பு மட்டக்களப்பில் நீண்டகாலமாக இருந்துவந்தது. எனினும் ஆங்கிலேயர் வருகையும், பொருளாதார அகச்சிதைவுகளும், இந்த அமைப்பைப் பலவீனப்படுத்திவிட்டன. கிறிஸ்தவமதத்தின் வருகையும், மத்தியதரவர்க்கத்தின் தோற்றமும் நகரப்பகுதிகளில் இந்த அமைப்புத் தகரக் காரணமாக இருந்தன. இந்தச் சமூக அமைப்பின் பின்னணியில்தான் மட்டக்களப்பில் நடந்துவரும் கூத்துகளை நாங்கள் பொருத்திப்பார்க்க வேண்டும்.

### மட்டக்களப்புக்கூத்தும் சமூக அமைப்பும்

மட்டக்களப்புக் கூத்துகளைப்பற்றி எழுதிய அனைவரும் தென்மோடி, வடமோடி கூத்துகளைப்பற்றிச் சிறப்பாகச் சொல்வர். மிக அலங்காரமான ஆடல் வடிவங்களையும், இனிமையான இசைப்பாடல்களையும், கண்கவர் ஆஹார்ய அபிநயங்களையும், அதற்கான வட்டக்களரியையும் கொண்ட இந்தச் செழுமையான கலைவடிவங்கள் முன்னிலையாக ஆக்கப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

மட்டக்களப்புப்பகுதியில் வழங்கும் 'கூத்து' என அழைக்கப்படும் இக்கிராமிய நாடகத்தை தென்மோடிக்கூத்து, வடமோடிக்கூத்து, விலாசக்கூத்து என்று மூவகையாக வகுக்கலாம் என பண்டைய அறிஞர்கள் கூறியுள்ளனர். அவர்கள் வடமோடி, தென்மோடி என அதனை வகைப்படுத்திக்காட்டினர்; அதன்சிறப்புகளையும் கூறினர்; தாளக்கட்டுகளையும், ஆட்டக்கோலங்களையும் விளக்கினர்.

### வடமோடி, தென்மோடி தவிர்ந்த கூத்துகள்

ஆனால் அந்தப் பெரும் அறிஞர்கள் கூறிய இந்த வடமோடி, தென்மோடிக் கூத்துகளுக்கும் அப்பால், இன்னும் பல வகையான கூத்துகளும் மட்டக்களப்பில் இருந்திருக்கின்றன.

#### 1. மகிடிக்கூத்து

மந்திர, தந்திர விளையாட்டுகளைக்கொண்ட இது ஒரு கேளிக்கை அரங்காகும். இந்தக் கூத்தினைச் சிறப்பாக ஆடியோர், மட்டக்களப்பின் பறையடிக்கும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இன்னும் சிலர் ஆடியிருப்பினும், அச்சமூகத்தினிடையேதான் மகிடிக்கூத்துக்கான ஏட்டுப்பிரதி இருந்துள்ளது. அப்பிரதி அச்சமூகத்திற்கே உரிமையானது; அதனை வேறு யாரும் ஆடியிருக்கவில்லை. இவ்வாறே, சமூகத்தில் இடைநிலையில் வாழ்ந்த சமூகக்குழுக்களிடையே வித்தியாசம் வித்தியாசமான மகிடி ஆற்றுகைகள் இருந்தன. ஆனால் அவை தமக்கென எழுத்துப்பிரதிகள் இல்லாதவை. இம்மகிடிக் கூத்துகளிலே மட்டக்களப்புக்குரிய மந்திரச்சடங்குகளும், வழிபாட்டுமுறைகளும் இடம்பெறும். அத்தோடு அங்கு வாழ்ந்த வேடர், வந்து சேர்ந்த குறவர் போன்ற விளிம்புநிலை மக்களும், சாதாரண மக்களும் பாத்திரங்களாக இடம்பெறுவர். இந்தக்கூத்து அதிகாரத்தில் உள்ள சிலரை விமர்சனம் செய்வதால், இதனை ஓர் எதிர்ப்பரங்காகவும் சிலர் கட்டமைப்பர்.

#### 2. வசந்தன் கூத்து

இது விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட கூத்தாகும். வேளாண்மை செய்தல், உப்பட்டி கட்டல், கதிரறுத்தல், கதிரடித்தல், வயலுழுதல் என விவசாயம்சார்ந்த விடயங்களை இது அதிகம்

கூறும். சில வேடிக்கையான, பொழுதுபோக்கு இதிகாச, புராணப்பாத்திரங்களும் இதில் இடம்பெறும். இக்கூத்தை விவசாயச் சமூகத்தைச்சேர்ந்தோர் ஆடுவர். விளிம்புநிலை மக்களிடம் இக்கூத்தை ஆடும் மரபு இல்லை. ஒரு சமூகத்தில், செல்வாக்குமிக்கோரின் கருத்தும் கலையுமே அந்தச் முழுச்சமூக மக்களின் கலையாகவும் கொள்ளப்படுவது வழமை. அது அதிகாரத்தின் பாற்பட்டது. இந்தவகையில் அதிகாரத்தின் மேல்நிலையில் இருந்த முக்குவர், வெள்ளாளர் மத்தியிலே இருந்த கூத்துகளே மட்டக்களப்பின் கூத்துகளாக, ஏனைய கூத்துகளையும் மிஞ்சி மேலெழுந்தன.

### வடமோடி, தென்மோடிக் கூத்துகள்

நிலமானிய அமைப்பிலே சாதியும், மதமுமே பிரதான சக்திகளாக விளங்கின. கிராமங்கள் தன்னிறைவு பெற்றெனவாக இருந்தன. சாதி அமைப்பு முறைகளும், மரபு பேணப்படும் வழமைகளும் இவ்வமைப்பைக் கட்டிக்காத்தன. சாதி அமைப்பும் சமூகச் சமயமும் நிலைநிறுத்திய நிலமானியச் சமூக அமைப்பின் பின்னணியில் தோன்றிய இத்தகைய கலைவடிவங்கள் அச்சமூகத்தையே பிரதிபலிக்கும் என்பதில் ஆச்சரியம் இல்லை.

ஆரம்பத்தில் கூத்துநூல்களை இயற்றிய கணபதி ஐயர், இணுவைச் சின்னத்தம்பி ஆகியோர் உயர் சாதியினராக, முறையே பிராமணராக, வேளாளராக இருந்தமை இங்கு மனங்கொள்ளத்தக்கது. நிலமானியச் சமூக அமைப்பில் தலைவர்களாகக் கருதப்பட்டோரும், அச்சமூக அமைப்பைப் பேணிய புராண, இதிகாசக் கதைகளின் தலைவர்களும், அவர்களின் வாழ்க்கையுமே கூத்துகளின் கருப்பொருட்கள் ஆகின.

சுடலைமாடன், மாரி அம்மன், பெரியதம்பிரான், பேச்சியம்மன் போன்ற சிறுதெய்வங்கள் பற்றிய தெய்வக்கதைகளே சமூகத்தில் தாழ்த்தப்பட்டவரிடம் இருந்தன. புராண, இதிகாசக் கதைகள் பெருமளவில் செல்வாக்குற்றபோது, இப்புராண, இதிகாசக் கடவுளர்கள் மெல்லமெல்ல சிறுதெய்வங்கள் பெற்ற இடத்தினைப் பெற்றன அல்லது அவற்றோடு இணைக்கப்பட்டன. இந்த வரலாற்று உண்மைகள் நிறுவப்பட்டும் உள்ளன. காத்தவராயன் கூத்து இதற்குச் சிறந்த உதாரணமாகும். மாரி அம்மனும், சிவனும் இணையும் கதையாக இது காணப்படுகிறது. இது இரண்டு பண்பாடுகளது இணைப்பின் குறியீடு ஆகும்.

மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்துகளில் சிறுதெய்வங்கள் முக்கியத்துவம் பெறவே இல்லை. கண்ணன், சிவன், முருகன் போன்ற பெருந்தெய்வங்களே முக்கியத்துவம் பெற்றன. அரசர்களும், தலைவர்களும் முக்கிய பாத்திரங்களாக வர, சாதாரண மக்கள் இக்கூத்துகளின் உபபாத்திரங்கள் ஆனார்கள். இந்தப் பெருந்தலைவர்களின் விசேட செய்திகளை அறிவிக்க வரும் ‘பறையன்’ பாத்திரமும், அவர்களுக்கு ஊழியம் செய்யவரும் ‘வண்ணான், குறவன், வேலையாள், வேடன்’ போன்ற பாத்திரங்களும், நகைச்சுவைப் பாத்திரங்களாகவே கூத்துகளில் சித்திரிக்கப்படுகின்றன. கள்ளைக் குடித்துவிட்டு ஏனையவருடன் உளறும் அறிவிலிகளாகவே இப்பாத்திரங்கள் சித்திரிக்கப்பட்டன. தாளம், பாடல், ஆடல் போன்றவற்றிலும்கூட இவ்வேறுபாடுகள் காணப்பட்டன. அரசன், மந்திரி, ராஜகுமாரர்களுக்கு அலங்காரமான தாளக்கட்டுகளும் பாடல்களும் இசைக்கப்பட, பறையறைவோனுக்கோ அலங்காரமற்ற வேறு தாளக்கட்டுகளும் பாடல்களும் இசைக்கப்படும். பறையறைவோன் ஆடும் தாளக்கட்டுக்கு உயர்நிலைப் பாத்திரங்கள் ஆடுவதில்லை. தாளத்திலும் சாதி வேறுபாடு, உயர்வு - தாழ்வு காணப்பட்டது.
சுருங்கச்சொன்னால், மட்டக்களப்பில் வளர்ச்சிபெற்ற தென்மோடி, வடமோடி கூத்துகளின் உள்ளடக்கங்கள் நிலமானிய சமுதாயத்தை நியாயப்படுத்தின. கூத்துகளில் வரும் பெண், மரபுவழிப் பெண்ணாகவே சித்திரிக்கப்பட்டாள். கணவனுக்குக் கீழ்ப்படிந்தவளாக, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் குணம் கொண்டவளாக, அழுதுபுலம்புபவளாகவே சித்திரிக்கப்பட்டாள். இவ்விடத்திலே பேராசிரியர் ஆனால்கெட்டில் காவியம்பற்றிக் கூறிய கூற்று ஞாபகம் வருகிறது:

“காவியம் என்பது நிலப்பிரபுத்துவ வர்க்கத்தைப் பிரதிபலித்து, அவர்களைச் சிறப்பிக்கும் சாதனம் என்பதினால் அவ்வர்க்கத்தினர் மாத்திரம் அவற்றைக்கேட்டு இன்புற்றனர் என்பது தவறாகும். மாறாக, ஓய்வுநேரம் குறைந்த, தாழ்நிலையில் உள்ளவர்களுக்கும் காவியம்காட்டும் இன்ப உலகமானது ஒருவகையான பதில் வாழ்க்கையாக, உண்மையான வாழ்க்கைக்கு மாற்றீடாக அமைந்துவிடுகிறது. வறண்ட, துன்பம்மிகுந்த நிஜவாழ்க்கையில் இருந்து விட்டுவிடுதலையாகி, இன்பம் அனுபவிக்க காவியம் உதவுகிறது.”
காவியம் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளையும்

கொண்ட சமூகம் முழுவதற்கும் அமைந்த பொதுவடிவமாக மாறியதுபோல, கூத்தும் வெவ்வேறு சமூகநிலைகளிலும் உள்ள மக்கள் அனைவருக்குமான பொதுவடிவமாக மாறியது. சமூகத்தின் மேட்டுக்குடியினரையும், அவர்களின்கீழ் வாழ்ந்த ஏழை மக்களையும் கூத்து ஒருங்குசேர்த்து மகிழ்வித்தது. ஆனால், மக்கள்மனதில், கலைமூலம் மிக நாசூக்காக, பிற்போக்கான கருத்துகள் விதைக்கப்பட்டன. மட்டக்களப்பு மக்கள் அனைவருக்கும் பொதுவான கலையாக அமைந்த கூத்து, கிராமிய மக்களின் முழு அம்சங்களையும் பிரதிபலித்தது. அவர்கள் மத்தியில் உள்ள நம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், சடங்குகள் யாவற்றையும் அது பிரதிபலித்தது.

ஆரம்பத்தில், கூத்துகளை சமூக அமைப்பில் உயர்சாதியினரே ஆடினர் என்பதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. தாழ்ந்தநிலையில் வைத்துக் கணிக்கப்பட்ட சமூக வகுப்பினர் ஆரம்பத்தில் தென்மோடி, வடமோடிக் கூத்துகளை ஆடியமைக்குச் சான்றுகள் இல்லை. கிராமங்களில் வண்ணார், அம்பட்டர் போன்ற குடிமக்களுக்கு திட்டவட்டமான ஊழியங்கள் வரையறுக்கப்பட்டன. கூத்து ஆடுதலைப் பறையறைவோர் பறையறிந்து தெரிவித்தனர். கூத்துக்களரியில் அலங்காரம்செய்ய வண்ணச்சேலை கொடுப்பது தொடக்கம், நடிகர் வரவின்போது திரைபிடிப்பது வரை, சேவைசம்பந்தமான ஊழியங்களை வண்ணார் செய்தனர். கோவில் சடங்குபோல, இதுவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், காலப்போக்கில் இக்கூத்துகளைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் ஆட ஆரம்பித்தனர்.

சமூக அமைப்பில் தாழ்த்தப்பட்டோரால், ஒன்றோ இரண்டோ, அதுவும் ஒரேவிதமான கூத்துகள்தான் மீண்டும் மீண்டும் ஆடப்பட்டிருந்தன. இன்றைய சமூக அமைப்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கூத்தாடக்கூடாது என்ற கட்டிறுக்கம் குறைந்துவிட்டது. சாதி அமைப்பின் இறுக்கமின்மையே இதற்குக் காரணமாகும். இன்று சகல சமூகங்களிலும் கூத்தாடப்படுகின்றது. தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்துவந்த மிகத்திறமையான அண்ணாவிமார், தம்மிலும் 'உயர்வான' வகுப்பினருக்குக் கூத்துப்பழக்கும் முறையும் பின்னாளில் மட்டக்களப்பில் ஏற்பட்டது என்றும் தகவல்கள் கிடைக்கின்றன. இவ்வண்ணம், மட்டக்களப்புக் கூத்துகள் இன்று மட்டக்களப்புச் சமூகம் முழுமைக்கும் பொதுவான ஒரு கலைவடிவம் ஆகிவிட்டது. எனினும், மகுடிக்கூத்து, வசந்தன்கூத்து, பறைமேளக்கூத்து ஆகியன குறிப்பிட்ட சமூகநிலையில் உள்ளவர்களால் மாத்திரமே ஆடப்படுகின்றன.

சகல சாதிக்குமான பொதுநாடக வடிவமாகக் கூத்து மாறினாலும், சாதிகலந்து கூத்தாடும் மரபு இன்னும் மட்டக்களப்பில் ஏற்படவே இல்லை. இது சமூக அமைப்பின் தாக்கத்தையே காட்டுகின்றது. எனினும் பாடசாலைகள், மன்றங்கள் போன்ற பொது ஸ்தாபனங்கள் (ஆங்கில ஆட்சியின் வருகையினால் ஏற்பட்டவை) நடத்துகின்ற கூத்துகளில், இம்முறையானது மீறப்பட்டு, சகலசாதியினரும் கலந்து கூத்தாடும்முறை தோன்றியுள்ளது. சமூக, பொருளாதாரச்சூழல் மட்டக்களப்புக் கூத்தின் வன்மைப்பாட்டினைத் தீர்மானித்து வந்துள்ளது. ஆனால் அச்சூழல் இப்போது மாறிவருகிறது.

### கூத்தின் தன்மையும் அதன் நிலைபேறும்

புதிய பண்பாட்டின் வருகை, இச்சூழலில் மாற்றத்தைத் துரிதப்படுத்தியுள்ளது. இம்மாற்றத்தினால் கூத்துக்கலை நலிவடையும்நிலையில் இருப்பினும், பண்பாட்டு உணர்வு காரணமாக இன்றும் மட்டக்களப்பில் புதுவருட நாட்களிலும், கோயில் விழாக்களிலும், கலை விழாக்களிலும் கூத்துகள் அரங்கேறுகின்றன. தமிழர்களின் பாரம்பரியக்கலையாக அவை இருப்பதனாலேயே பல்கலைக்கழக அறிஞர்களும், கலைஞர்களும் அதனை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். அதற்கான ஓர் அரசியல் தேவையும் இருந்துள்ளது. சமுதாய மாற்றத்திற்காகவும் பலர் கூத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இதனால் கூத்தின் அமைப்பு முறையே மாறுபட்டு வந்திருப்பதை அண்மைக்கால வரலாறுகள் கூறுகின்றன. இவ்வளவு சமூகச்சிக்கல்களுக்கு மத்தியிலும் கூத்து ஏன் ஒரு வலிமையான கலைவடிவமாக ஆனது? சாதியைப் பேணி, அதனைத் தனது ஆற்றுகையிலும் பாடல்களிலும் வலியுறுத்திய கூத்து, பெண்ணடிமை பேசி அவர்களைப் பேதைகளாகக் கட்டமைத்த கூத்து, பிற்போக்குப் புராண, இதிகாசக் கதைகளையே தொடர்ந்து பேசிய பகுத்தறிவுக்கு முரணான பழங்கதைகளைக்கூறிய கூத்து, ஏன் இன்றும் சில கிராமங்களிலேனும் உயிர்வாழ்கிறது? அந்த வலிமையை அது எங்கிருந்து பெற்றிருக்கக்கூடும்? ஆகிய வினாக்கள் முக்கியமானவையாகும். இவற்றிற்கான விடைகளை அடுத்த கட்டுரையில் அலசுவோம்.

நடேசன் இரவீந்திரன்



இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

# சென்ற காலத்தின் மீதான நாட்டமும் தேடலும்

இன்றைய இருப்பில் இயங்கும் சமூக சக்திகள் தத்தமக்கான நலன்களின் நோக்கில் கடந்த காலத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றன. மேலாதிக்கத் தமிழ்த் தேசியம், தலித்தியம், விடுதலைத் தேசியம் என்பவற்றின் கருத்தியல் தளங்களை அடிப்படையாக உடைய சமூக சக்திகள் இன்றைய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. எமக்கான நவீன வரலாற்றைக் கட்டமைத்த ஆளுமையாகிய ஆறுமுக நாவலர் குறித்து இவை ஒவ்வொன்றும் தமக்கே உரிய கண்ணோட்டத்தில் மறுவாசிப்பை மேற்கொள்கின்றன; இதன்வழியாக, கடந்தகாலச் சமூக சக்திகள் வழிவகுத்துவிட்டிருந்த இயங்குமுறை அமைந்த அடித்தளங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றன. இதேபோன்ற பின்னணிக்குரிய ஏனைய சமூகங்களில் இயங்கிய ஆளுமைகளுடன் எமது இயங்கு தளத்துக்குரிய ஆளுமைகளை ஒப்பிடுவதன் வாயிலாக செய்யப்பட்டவற்றையும், செய்திருக்கத்தக்கன எவை என்பதையும் மதிப்பீடு செய்வது அவசியமானது. இவற்றின் பெறுபேறுகள் எமக்கான எதிர்கால மார்க்கத்தை வடிவமைப்பதற்கு மிகமிக முக்கியமானவை ஆகும். "சமத்துவச் சமூகம் காணப் போராடுவோர் பார்வையில் ஆறுமுக நாவலர் எனும் இத்தொடரானது நாவலரின் பங்களிப்புக் குறித்த மதிப்பீட்டின் வழியாக சமகால இயங்குமுறையைக் கணிப்பிட்டு, சுயவிமரிசனங்களுடன் புதிய பாதையையும், அதற்குரிய சரியான மார்க்கத்தையும் கண்டடையும் நோக்கில் எழுதப்படுகிறது.

ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர்கூட ஒரு விரலசைப்பில் உலக நாடுகளை வழிக்குக்கொண்டுவர இயலுமாக இருந்த ஐக்கிய அமெரிக்காவுக்கு என்ன நேர்ந்துவிட்டது? கறாரான வரிவிதிப்பின் ஊடாகப் பிறதேசங்களை அடங்கி ஒடுங்கிப்போக வைத்துவிடலாம் என்று நினைத்தால் சொந்த நாட்டு மக்களே கிளர்ந்தெழுந்து முட்டுக்கட்டை போட்டுவிடுகிறார்களே? புதிதாய்த் தலைமையேற்ற புதுத் தும்புத்தடியாக வேகம் காட்டுகிற ஜனாதிபதியிடம் வெளிப்படும் தடுமாற்றங்களா இவை? ஐக்கிய அமெரிக்க ஆளும் அதிகாரசக்தியின் நிலைதடுமாறுகிற தளம்பல் இன்றைய அரசியல் தலைமை வாயிலாக வெளிப்படுகிறதா?

வரலாறு ஒருபோதும் நேர்க்கோட்டு வளர்ச்சியில் எந்தத் தேசத்தையும் தூக்கிச்சென்று கொடுமுடியில் நிரந்தரமாக வைத்துவிடாது. ஐரோப்பாவைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டால் உலகத்தையே வென்றமாதிரி என்ற நினைப்பில் நெப்போலியன் தலைமையேற்ற வரையில், பிரான்சின் இராணுவ வல்லமை அனைத்தையும் ஐரோப்பாவினுள் பிரான்ஸ் முடக்கியபோது, பிரித்தானியா உலகெங்கும் பரந்து ‘சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியத்தை’ கட்டியெழுப்பியது. உலகின் முதல்நிலைப் பண்பட்ட நாடெனப் பிரான்ஸ் மேற்பிளம்புவதற்கு முன்னர், முதலில் முதலாளித்துவம் உருவான தொட்டிலாகத் திகழ்ந்த இத்தாலி உயரந்தஸ்துடன் ஒருகாலத்தில் இருந்துள்ளது. போர்த்துக்கல், ஒல்லாந்து, ஸ்பெயின் எனத் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக மேலாதிக்கம் பெறமுனைந்து ஒவ்வொன்றும் பின்னடைய, இறுதியில் பிரித்தானியா ஏகாதிபத்தியத்துக்கான அதியுயர் பீடத்தை இருபதாம் நூற்றாண்டின் முற்கூறில் பெற்றுக்கொண்டது. உலக ஆதிக்கவரிசையில் அந்தநாடுகள் ஒவ்வொன்றாகப் பின்னடைந்த போதிலும், ஐரோப்பிய நாடுகள் ஏனைய கண்டங்களைத் தமக்குள் பங்குபோட்டதனால், உலகனைத்தும் ஐரோப்பியக்கண்டத்தின் குடியேற்றப் பிராந்தியமாகி இருந்தது.

ஐரோப்பியத் தாயகத்தில் இருந்து குடியேறிய பின்னர் அமெரிக்க நாடுகளின் நிரந்தரப் பிரசைகளாகிவிட்ட வெள்ளை இன அமெரிக்கர்கள், தத்தமது தாயகத்துடன் மோதிச் சுதந்திரக் குடியரசுகளாக வேண்டியிருந்தது. முன்னதாக, ஐக்கிய அமெரிக்காவுக்கு உட்பட்டிருந்த பல அரசுகளில் நிரந்தரக் குடிகளாக வாழும் தமக்கான வளங்கள் அபகரிக்கப்பட்டு பிரித்தானியாவுக்குக் கப்பலேற்றப்படுவதனைத் தடுக்கும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்ததன் பேரில், ஐம்பது அரசுகள் ஒன்றிணைந்து உருவான ஒரு தேசம் தான் ‘அமெரிக்க ஐக்கிய இராச்சியங்களின் ஒன்றியம்’ (United States of America USA, ஐக்கிய அமெரிக்கா). விடுதலைவீரர் வாசிங்டன் தலைமையில் 1776 ஆம் ஆண்டு சாதிக்கப்பட்ட அந்த முதல் தேசிய விடுதலைப்போர் உலக நாடுகளின் தேசிய எழுச்சிக்கு வித்திட்ட பெருமை உடையது. பதின்மூன்று வருடங்களுக்குப் பின்னர், பிரான்சியப் புரட்சி (1789) உலகில் முதல் தேசியப் புரட்சியெனக் கொண்டாடப்பட்டபோதிலும் தமக்கு உத்வேகமூட்டிய ஐக்கிய அமெரிக்காவுக்கு பிரான்ஸ் வழங்கிய சுதந்திரச்சிலை இன்றுவரை நியூயோர்க்கில் ஐக்கிய அமெரிக்காவை அடையாளப்படுத்தும் சின்னமாகத் திகழ்கிறது எனும் அம்சம் கவனிப்புக்குரியது!

சுதந்திர உத்வேகத்தைத் தொடர்ந்து உலகெங்கும் எடுத்துச்செல்லும் இலட்சிய உணர்வுடன் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பயணப்பட்ட கிறிஸ்தவப் போதகர்கள் பலரும் கல்வி விழிப்புணர்வுடன் இணைந்ததாக மதப்பரப்புரையை ஐரோப்பியக் காலனிகளாக விளங்கிய நாடுகளில் மேற்கொண்டனர். பல்கலைக்கழகக் கற்கைக்குரிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன், பெண்கள் தங்கிப்படிக்கும் முதல் பாடசாலை எனப் பெருமை படைத்த உடுவில் மகளிர் கல்லூரி என்பன, ஆசிய நாடுகளில் முதல் வரிசையில் தொடங்கப்பட்டன எனும் பெருமைகளைப் பெற்றன; மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விரு பாடசாலைகளுடன் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும் இருநூறு வருடங்களின் நிறைவினைக் கொண்டாடி இருந்தன. நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் உடற்கூற்றியல், இரசாயனம், பௌதிகம் ஆகிய துறைகளுக்கான தமிழின் முதல் நூல்களைத் தமது மாணவர்களுடன் இணைந்து அமெரிக்க மிசனரியினராகிய Dr. கிறீன் உருவாக்கினார். தமிழைத் தாம் ஆழமாகக் கற்றதுடன் தனது மாணவர்களை ஆங்கிலத்தில் துறைபோகக் கற்க

வழிப்படுத்தி இருந்தமையால் இவ்வாறு நவீன விஞ்ஞானநூல்கள் முதன்முதலில் இங்கே வெளிப்பட்டன. இதன்பேறாக 'மானிப்பாய் அகராதி' எனும் முதல் ஆங்கில - தமிழ் அகராதியும் (இப்போது 'யாழ்ப்பாண அகராதி' என அறியப்படுவது) வெளிப்படலாயிற்று!

பேர்சிவல் பாதிரியாரும் அதுபோன்ற கல்விச்சேவையை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வாயிலாக ஆற்றியபோது, அவரது மாணவராக ஆறுமுகம் கல்வி கற்று, அங்கேயே ஆசிரியராகப் பணியாற்றினார். தனது ஆசிரியருடன் இணைந்து பைபிளை இனிய தமிழில் மொழிபெயர்த்த இளைஞனுக்குள் ஏற்பட்ட விழிப்புணர்வே ஆறுமுகமாக இருந்தவரை நாவலராகப் பரிணமிக்க வைத்தது எனும் வரலாற்றை அனைவரும் அறிவோம். கிறிஸ்தவப் பரப்புரையாளர்களான பாதிரிமார்களில் பலரும் அர்ப்பணிப்பும் தியாக சிந்தையும் கொண்டு சுதேச மக்களது மனங்களை வென்றெடுக்கக்கூடிய நல்லவர்களாகவும் திகழ்ந்தனர். கடந்த யுத்தகாலத்திலும் எமது பிரதேசங்களில் இயங்கிய படையினர்களில் மக்களைக் கவரும் வகையில் நல்லுள்ளத்துடன் இயங்கிய படையினர் குறிவைத்துக் கொல்லப்பட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. யுத்தத்தின்போது மேற்கொள்ளக்கூடிய இந்த நடைமுறையை இயல்பான வாழ்வுக் காலத்தில் மேற்கொண்டிருக்க இயலாது.

நட்புணர்வுடன் இறை பணியாற்றுகின்ற தனது ஆசிரியருக்கு மக்களால் போற்றப்படும் ஜேசுவின் போதனைகளைத் தமிழாக்கம் செய்வதற்கு உதவிய பின்னர், ஆறுமுகம் என்ற இளைஞருக்கு அச்ச உணர்வு ஏற்பட்டமை எமது வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. எமது சொந்தப்பண்பாட்டை உருவாக்கி வளர்த்த சைவத்தை நீங்கிக் கிறிஸ்தவத்தின்பால் பலரும் நாட்டம் கொள்வாராயின் எமக்கான வரலாறு முற்றுப்பெற்றதாக ஆகுமென்ற ஆறுமுகநாவலரின் அச்சம், கல்விப்பணியைச் சைவப் பாடசாலைகள் வாயிலாக முன்னெடுக்க உந்தித் தள்ளியது. இவ்வாறு சைவப்பாடசாலை ஒன்றை வண்ணார்பண்ணையில் தொடங்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொண்டு வந்த ஆசிரியப்பணியைத் துறந்து வெளியேறி இருந்தார்; இவ்வாறு நீங்கியமைக்கான உடனடிக் காரணமாக வேறோர் சம்பவம் இடம்பெற்றிருந்தது எனும் கருத்தும் புறக்கணிக்கத்தக்கதல்ல.

மத்திய கல்லூரியில் ஒடுக்கப்பட்ட மாணவர் சேர்க்கப்பட்டமையை எதிர்த்தே ஆறுமுகநாவலர் அவ்வாறு வெளியேறினார் எனக் கூறப்படுகிறது; இதனை முன்வைப்பவர்கள், காலனிய எதிர்ப்பைவிடவும் சாதியபிமானத்தைப் பேணுதலே அவரது முதன்மை அக்கறையாக இருந்தது என்பர். எமது பண்பாட்டின் பேரால் விதிக்கப்பட்ட கட்டாய ஊழியத்தை ஒவ்வொரு சாதியினரும் நிறைவேற்ற வழிவகுப்பதாகவே சாதி ஒடுக்குமுறை நீடித்து நிலைபெற வைக்கப்படுகிறது என்பதில் சந்தேகமிருக்க இடமில்லை. சாதியாசாரங்கள் உள்ளவாறே பின்பற்றப்பட வேண்டும் என்பதை ஆணித்தரமாக வற்புறுத்துகிறவராக நாவலர் இயங்கினார் என்பதும் உண்மை. தமிழீழப் போராட்டம் முனைப்பாக இருந்தபோது சாதிப்பிரச்சினையின் தீர்வுக்கான புதிய கோரிக்கைகள் எழுப்பப்படக்கூடாது, அதன் நடைமுறைப்பிரயோகம் அதுவரை எவ்வகையில் இடம்பெற்றவாறு இருந்ததோ, அந்தச் செயலொழுங்கு அவ்வாறே ஒவ்வோரிடத்திலும் பின்பற்றப்பட வேண்டும் என்பது, விடுதலைப்புலிகளின் நிலைப்பாடாக இருந்தது; சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையை முறியடிப்பது முதன்மைத் தேவையாக இருக்கும் காலகட்டத்தில், "சாதி பேதம் பாராட்டுவதை ஒழிக்கும் பணியை முன்னெடுக்க வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைப்பது கைவிடப்பட வேண்டும்; ஈழம் வென்றெடுக்கப்பட்ட பின்னர் சாதிப்பிரச்சினைத் தீர்வுக்கான கோரிக்கைகளை நிறைவேற்ற இயலும் என்பது அவர்களது கருத்தாக இருந்தது.

சிங்களப் பேரினவாதத்தை முறியடிக்கும் இலட்சியம் இருந்த அளவுக்கு சாதி ஒடுக்குமுறையைத் தகர்த்தாக வேண்டும் எனும் அக்கறை விடுதலைப்புலிகளிடம் இல்லாமல் இருக்கலாம். அதன்பொருட்டு ஒடுக்கப்பட்ட மக்கள் மீது புறக்கணிப்புகள் தொடரப்பட வேண்டும் என்ற கருத்து அவர்களிடம் காணப்பட்டது எனக்கூறிவிட இயலாது. சாதி வெறியர்கள் அத்தகைய எண்ணத்துடன் அந்தப் போராட்டத்தை ஆதரித்தார்கள் என்பது மெய்; ஈழம் கிடைத்த பின்னர் தமது ஒடுக்குமுறையைச் சுதந்திரமாக மேற்கொள்ள இயலும் என்ற கருத்தோடு இருந்தவர்கள், அந்தக் குறிக்கோள் நிறைவேறாதபோதிலும் தங்களது சாதிய வக்கிரத்தை மூர்க்கத்தனமாக இப்போது வெளிப்படுத்தியவாறுதான் உள்ளார்கள். மாறாக, தமக்கான விடுதலையும் எட்டப்படும் என்ற

*நம்பிக்கையுடன் போராட்டத்தில் இணைந்திருந்த ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பல்லாயிரம் பேர் இருந்தனர் எனும் உண்மையைக் கவனங்கொள்ளாமல் இருக்கவியலாது!*

*அவ்வாறேதான், காலனியப் பண்பாட்டுத் திணிப்புக்கு எதிராக எமது பண்பாட்டைப் பேணிக்காத்தல் எனும் நாவலரிடம் காணப்பட்ட 'சாதியாசாரங்கள் இதுவரை இருந்து வந்ததைப்போல அப்படியே பின்பற்றப்பட வேண்டும்' எனும் நிலைப்பாட்டில் தவறுண்டு; காலனியத் தகர்ப்புடன் இணைத்து நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையும் தகர்க்கப்பட வேண்டும் என்பதை ஏற்கத்தவறியபோது, முழுமைப்பட்ட மக்கள் விடுதலை நாவலரால் மனங்கொள்ளப்பட்டு இருக்கவில்லை என்பது தெளிவு. அதன்பொருட்டு, எமக்கான வாழ்வியலின் விருத்திக்கு அவசியமான ஓரம்சமான பண்பாட்டுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்வகையில் அந்நிய நுகத்தடியைத் தகர்க்கும் அக்கறை நாவலரிடம் முனைப்புடன் இருந்தது எனும் உண்மையைப் புறந்தள்ளிவிட இயலாது. காலனிய மனப்பாங்கில் எமது பண்பாட்டுப் பலத்தை இழந்து போனதன் பலாபலன் இன்றுவரை தொடர்வதன் காரணமாக, மக்கள் விடுதலைக்கு விரோதமான சக்திகள் எமது பாதையை வகுப்பவர்களாகத் தொடரும்நிலை நீடிக்கக் காண்கிறோம். இன்று மக்கள் விடுதலை தூரப்பட்டு இருப்பது இந்தக் காலனிய உறவைத் தொடர்ந்தவாறு, ஏகாதிபத்திய அணிக்குள் ஈழத்தமிழர் நலன் பிணைக்கப்பட்டு இருப்பதனால்தான் என்ற நிதர்சனம் கவனிப்புக்கு உரியது. ஏற்கனவே வகுக்கப்பட்ட வழக்காறுகளை ஒடுக்கப்பட்ட பிரிவினர் பின்பற்ற வேண்டும் என நாவலர் வலியுறுத்தியதிலுள்ள அம்சங்களை முனைப்பாக்கிப் பேசுகிறவர்கள், வெள்ளாளர்கள் சாதியாசாரங்கெட்டு ஆங்கிலேயரது வாழ்முறையைப் பின்பற்றுதல், நவநாகரிக வாழ்வெனும் மயக்கத்துடன், மட்டுமரியாதையற்ற உணவுப்பழக்கத்திற்கும் குடிபோதைக்கும் அடிமையாகுதல் என்பவற்றை அவர் மிக வன்மையாகக் கண்டிப்பதனைக் கண்டுகொள்வதில்லை. ஒடுக்கப்பட்ட மக்களை நிராகரித்து உயர் சாதியினருக்கான பாடசாலைகளை நாவலர் உருவாக்கினார் என்றால், அன்றைய வாழ்வியலில் கல்வி - வேலைவாய்ப்பு என்பவற்றுக்காகக் கிறிஸ்தவராகும் வாய்ப்புடன் இருந்த அந்தச் சமூகத்தளத்தைத் தடுத்தாட்கொள்ளும் வரலாற்று அவசியம் அவரை உந்தித்தள்ளி இருந்தது எனும் உண்மை மனங்கொள்ளப்பட வேண்டும். காலனிய ஊடுருவலை முறியடிக்கும் அடிப்படையான சமூகக் கடமையை முன்னிறுத்தியதன் பேரில் நாவலருக்கான மதிப்பளிப்பை நல்கிய இலங்கை முற்போக்கு இலக்கிய இயக்கம், தனது காலத்து வரலாற்றுப்பொறுப்பு எனும் வகையில் சாதியத் தகர்ப்பு இலக்கிய ஆளுமைகளான கே. டானியல், டொமினிக் ஜீவா உட்பட்ட பலரது பங்களிப்புகளூடாக சாதியத்துக்கு எதிரான பண்பாட்டு எழுச்சியையும் சமூகத் தளத்திலான பல வெகுஜனப் பங்கேற்புக்கான போராட்டங்களையும் செயலுருப்படுத்தி இருந்தது. 'சாதியின் காவலர் நாவலர்' என்ற கண்டன முழக்கங்கள் மிகக் கடும் தொனியில் ஒலித்த போதிலும், சாதியத் தகர்ப்புக்காகப் போராடியவர்கள், நாவலரின் வரலாற்றுப் பாத்திரத்தில் மதிப்புணர்வுக்கு உரிய உள்ளடக்கங்களைக் கொண்ட பக்கங்களும் இருந்தன எனக் கணித்துச் செயற்பட்டமையை எவ்வாறு புரிந்துகொள்வது? அதற்குரிய வரலாற்றுப் பின்னணியை இங்கு விளங்கிக்கொள்வது அவசியமாகின்றது!*

## ஆண்டபரம்பரை

*நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் உலக நாடுகள் அனைத்தும் ஐரோப்பியக் காலனித்துவப் பிடிக்குள் இருந்து சுதந்திரம் பெற்று ஜனநாயகக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என ஐக்கிய அமெரிக்கக் கிறிஸ்தவப் பரப்புரையாளர்கள் அர்ப்பணிப்புடன் புறப்பட்டு அரும்பணி ஆற்றியிருந்தனர். அவ்வாறு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தவர்களும் எமக்கான கல்வி விருத்திக்குக் காரணமாக அமைந்து மிக நீண்ட காலம் உலகப் பரப்பெங்கும் உயர் உத்தியோகங்கள் புரிய வழிசமைத்துத் தந்தனர். அவர்களது ஜனநாயக அக்கறை முதல் எழுபத்தைந்து ஆண்டுகள் அப்பழுக்கற்றதாகவே இருந்தது. எமது தேசங்கள் விடுதலை பெறுவதனை முழு அளவில் அப்போது ஆதரித்தார்கள். சுதந்திரம் பெற்ற பின்னர் எமது நாடுகளை நவகாலனித்துவப் பிடிக்குள் ஆட்படுத்தித் தமது டொலர் மேலாதிக்கம் வாயிலாக உலகனைத்தையும் கொள்ளையடிப்போராக அதே ஐக்கிய அமெரிக்கா மாற்றம் பெற்றிருந்தது!*

*ஐரோப்பியக் கண்டத்து நாடுகளின் நேரடிக் காலனித்துவம் நிலவியவரை அவர்களை மீறித்*

தமது சுரண்டல் மோலோங்க இயலாது என்பதனால் அங்குள்ள அதிகாரத் தரப்பினர், சேவை மனப்பாங்குடன் உழைக்க முன்வந்த ஜனநாயக சக்திகளுக்கு உதவி நல்கி எமது மனங்களை வெற்றி கொண்டனர்; நேரடிக் காலனித்துவம் தகர்ந்த பின்னர் சுரண்டல் கும்பலின் கோரமுகம் வெளிப்பட்டுக் கொள்ளையடிப்பது முனைப்படையலாயிற்று. இதன்பொருட்டு முந்திய சேவையாளர்களை நான்கு தசாப்தங்களின் முன்னர் ஊடுருவிய உலகமயமாதல் கொள்ளைக் கூட்டத்துக்குரிய அரசசார்பற்ற நிறுவனத்தார்போலக் கருதிவிட இயலாது; அவர்களது நல்லெண்ணங்களைக் கொச்சைப்படுத்த முனைவது வரலாற்றுப் புரிதலற்ற கபடத்தனமாக இருக்கும். அதேநேரம் அவர்களை ஆதரித்து இயக்கியவர்களின் பின்னால் ஊடாடியவர்களது கொள்ளை லாப வேட்டை மனப்பாங்கையும் எண்ணத்தையும் காணத்தவறக்கூடாது. காலம் பார்த்திருந்த அந்தச் சுரண்டல் கும்பல், ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முக்கால் நூற்றாண்டு (1950 - 2025) உலக மேலாதிக்க வெளிப்பாட்டின் ஊடாக அதன் வல்லாதிக்கக் கொடூர முகத்தைக் காண்பித்துள்ளது.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டாக உலகின் முதல்நிலைக்குரிய பொருளாதார உச்சத்துடன் திகழ்ந்த ஐக்கிய அமெரிக்கா இன்று இரண்டாம் நிலைக்குச் சரிந்துள்ளது. நாற்பது வருடங்களாக இன, மத, சாதிப் பிளவாக்கக் குழு மோதல்களை எம்மத்தியில் தூண்டிய அவர்களால், தொடர்ந்தும் அந்த அடையாள அரசியலுக்குத் தூபம்போடும் டொலர்களை வாரியிறைக்க இயலாது. தொண்டு நிறுவனங்கள் பலவற்றுக்கு ஊட்டமளித்த அவர்களது பிரதான நிறுவனம், ஐக்கிய அமெரிகாவின் இன்றைய அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்டுவிட்டது. ஆயினும் அவர்களது பலிக்கடாவாகப் யுத்தத்தை முன்னெடுத்த இனப்பிளவாக்கக் கொடூரத்தில் இருந்து மீள இயலாத வடுக்களுடன் இலங்கையும் யாழ்ப்பாணமும் அல்லாடியபடி உள்ள நிலையில் இருந்து முற்றாக நீங்க இயலாத நிலை இன்னமும் தொடர்கிறது.

இருநூறு வருடங்களுக்கு முன்னர் எமது நாடுகளை நோக்கிவரத் தொடங்கிய ஐக்கிய அமெரிக்க கிறிஸ்தவ நிறுவனங்கள் முன்னதாகத் தமிழகத்தில் தமது பணியை விரிவாக்கத் திட்டமிட்டன. அப்போது இந்தியா முழுமையும் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி



மருத்துவர் கிறீன்
Image Source - tamil.wiki



பேர்சிவல் பாதிரியார்
Image Source - tamil.wiki

ஆளுகைக்குள் இருந்தது; இலங்கை பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதலாக நேரடியான பிரித்தானிய முடியாட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டு இருந்தது. ஐக்கிய அமெரிக்கப் பாதிரிகளின் கல்வி நடவடிக்கைகள் இந்தியாவைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் பாதக விளைவை ஏற்படுத்தலாம் எனக் கருதிய கம்பனி ஆட்சியாளர்கள் இலங்கையை நோக்கிக் கைகாட்டி இருந்தனர். இங்கும் சிங்கள மக்களைக் ‘கெடுத்துவிட’ வேண்டாம் எனக் கருதி யாழ்ப்பாணம் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டது. மன்னர் ஆட்சிக்காலம் முதலாக வணிக எழுச்சியுடன் இணைந்த (வர்த்தக ஊடாட்டத்துக்கு அவசியமான) பன்மொழிக் கற்றல் நாட்டமும் அதற்கான வாய்ப்பு வசதிகளும் யாழ்ப்பாணத்தில் இருந்துவந்தது பற்றிப் பொருளியல் பேராசிரியர் வி. நித்தியானந்தம் எடுத்துக்காட்டி உள்ளார். அந்தவளம் ஆங்கிலக்கல்விப் புலத்தாலும் விரிவுபட்டது. இலங்கையில் நீண்டகாலத்துக்கு நீடிக்கக்கூடியதாக ஏகாதிபத்திய நலன் பேணப்பட வேண்டும் என்ற காரணத்தால் யாழ்ப்பாணத்தவர்க்கு அதிகளவில் கல்வி வழங்கும் நடவடிக்கையைப் பிரித்தானிய அரசு மேற்கொண்டது. சுதந்திரம் பெற்ற பின்னரும் இலங்கை முழுவதிலும் உயர் பதவிகளை யாழ்ப்பாணத்தவரே கையகப்படுத்தி இருந்த சூழலை, உரிய வகையில் கையாள இயலாத முடக்கம் சிங்கள ஆட்சியாளரிடம் நிலவியது. யாழ்ப்பாணத்தில் இருந்து உயர்கல்வி பெறுவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தப்படும் வகையில் தரப்படுத்தலை மேற்கொண்டு ஏனைய மாவட்டங்களில் இருந்தும் உயர் பதவிகளைப்பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டபோது பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் இளம் தலைமுறையினர்

ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர். சிங்களப் பிரதேசங்களுக்கு உத்தியோகவாய்ப்பு இவ்வகையில் பறிபோன பின்னர், மாற்றுவழி எதையும் நாடாமல் பிரிவினை நாட்டம் கொண்டு யுத்த முனைப்புக்கு ஆட்படும் உந்துதல் எப்படி ஏற்பட்டது? நானூறு ஆண்டுகளின் முன்னர் போர்த்துக்கீசரிடம் ஆட்சி உரிமையை இழந்த யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய உத்வேகம் தான் 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை' எனக் கோசமிட வைத்ததா?

தரப்படுத்தலில் யாழ்ப்பாணத்தவரது பல்கலைக்கழகப் பிரவேசம் மட்டுப்படுத்தப்படுவதற்கு முன்னர்வரை எமது கல்விப்புலத்தில் இலங்கை இலக்கியம் குறித்த ஆர்வத்தூண்டலுக்கான எந்தவொரு அடிப்படையும் இருந்ததில்லை. ஈழத்தில் இலக்கிய ஆர்வமின்றித் தமிழக இலக்கியத்துக்குள் மூழ்கித் திளைத்தபோது யாழ்ப்பாண இராச்சிய வீறாப்பு எங்கிருந்து வரும்? தரப்படுத்தலின் சமகாலத்தில் (1972 ஆம் ஆண்டையடுத்து) இலங்கை முற்போக்கு இலக்கிய இயக்கம் எமக்கான கலை - இலக்கிய விருத்தியை ஏற்படுத்துவதன் பொருட்டு, தமிழகத்தின் கலை - இலக்கியப் படைப்புகளது இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கும்படி கோரியிருந்தது; அதன்பேரில் அவசியமான நல்ல படைப்புகளைத் தவிர்ந்த ஏனைய வேண்டாத குப்பைகளெனக் கணிக்கத்தக்கன இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டபோது ஈழத்து இலக்கியம், சஞ்சிகை வெளியீடுகள், நூலாக்கங்கள், ஈழத்தமிழ் சினிமா எனப் பல்துறை வளர்ச்சிகள் இங்கே சாத்தியப்பட்டன. அப்போதுதான் எமது கல்விப்புலத்திலும் ஈழத்தமிழ் இலக்கிய வரலாறு, ஈழத்துப் படைப்புகள் குறித்த ஆய்வுகள் என்பன இடம்பிடிக்கத் தொடங்கின.

எமது படைப்புலகம் விரிவடைய முன்னர் தமிழக ஆக்கங்களின் வாசகர்களாக இருந்ததைப்போன்றே, தமிழிலக்கிய வரலாறு எனில் தமிழகப் படைப்புச் செல்நெறியைப் (அதனூடாகத் தமிழக அரசியல் வரலாற்றைப்) படித்து வந்தநிலை எழுபதாம் ஆண்டுகள் வரை நீடித்திருந்தது. அந்தவகையில் இளைஞர்களை ஆயுதமேந்தத் தூண்டிய 'ஆண்ட பரம்பரைக்' கனவு முற்றுமுழுதாக சேர, சோழ, பாண்டிய மன்னர்களை முன்னிறுத்தியதாகவே தொடங்கப்பட்டது. காலப்போக்கில் சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்றோர் அரங்குக்கு வரலாயினர் (வரலாற்று உணர்வுடன் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களால் ஏற்கனவே எழுதப்பட்ட 'சங்கிலியன்' நாடகம் பின்னர் கவனிப்பைப் பெற்றமைக்கு இக்காலப்பின்புலம் அடிப்படையாக அமைந்தது; இன முரண்பாடு கூர்மையடையத் தொடங்கியபோது 'பண்டாரவன்னியன்' நாடகத்தை எழுதியிருந்த முல்லைமணி அவர்கள் 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' உல்டாபண்ணப்பட்டு தம்மால் எழுதப்பட்டது என்பதனைக்கூறி, பின்னர் பண்டாரவன்னியன் குறித்த தேடலை முனைப்பாக்கி உண்மைத் தன்மைகளை ஆய்வுக்கட்டுரைகளாக வெளிப்படுத்தி இருந்தார்). பேரினவாதம் மேற்கொண்ட திட்டமிட்ட புறக்கணிப்புகளுக்கு எதிராக 'விடுதலை உணர்வை' இளைஞர்கள் இடையே தீவிரமாகத் தூண்டி வளர்த்த தமிழ்த் தலைமையானது அதனை தமக்கான தேர்தல் வெற்றிக்கு உரிய அளவில் கையாள விரும்பினர். உயர்கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டதனால் (ஏனைய தரப்பினருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்பது நியாயமாக இருந்தபோதிலும், வரலாற்றுரீதியாகக் கல்வியினூடகவே தமது வாழ்க்கைக்கான அடிப்படைகளைத் தேடிவந்த சமூகம் ஒன்றுக்கு மாற்று நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும்; அதனைச் செய்யத்தவறியமை 'புறக்கணிப்பு' என்பதன் பாற்பட்டதே. எண்பதாம் ஆண்டுகளில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்ட பின்னரே இன ஒடுக்குமுறை எனும் வடிவம் தொடக்கம் பெற்றது.) அரசியல் எழுச்சிக்கு ஆட்பட்ட இளைஞர்கள் தலைவர்களது, எல்லைகளை மீறி மார்க்சியத் தேடலில் இறங்கினர். ஆயினும், முன்னதாகத் தீர்மானிக்கப்பட்ட தனித்தமிழீழம் என்ற வரையறைக்குள் அவர்கள் முடங்கி இருந்த காரணத்தால், இத்தகைய இளைஞர் நாட்டம் முளையில் கருக்கப்பட்டு, ஈழப்போராட்டத்தை பேச்சளவில் தொடக்கிவைத்து வளர்த்துவந்த ஏகாதிபத்திய நலன்பேணும் அணி, தமக்கானதாகத் தமிழீழ அரசியல் தொடரப்படுவதற்கு ஏற்ற வாய்ப்பைப் பெற்றுக்கொண்டனர். பிரச்சினைகளின் தீர்வுக்கான வழிமுறைகளை நாடுவதைவிட "அடைந்தால் தமிழீழம், இல்லையேல் வீர மரணம்" என்ற மூடியபாதையின் வழியில் ஆற்றுப்படுத்தப்பட்ட வரலாறு, சொந்த

மண்ணில் பாரிய இழப்புகளைச் சந்தித்து முடக்கப்பட்டது. ஆயினும் அந்தத் திசைவழியைத் தேர்ந்தெடுத்த மேலாதிக்கத் தமிழ்த்தேசியம் புகலிட ஏகாதிபத்தியக்களத்தில் தமக்கான வாழ்வாதாரத்தை 'வென்றெடுத்து' தொடர்ந்தும் ஏகாதிபத்திய ஊடுருவலுக்கான வெளியை இங்கே செயலுருப்படுத்தி வருகின்ற 'சாதனையை' நிலைநாட்டி உள்ளமை கவனிப்புக்கு உரியது!

இவ்வகையான மேலாதிக்கவாத நாட்டத்துடன் தமிழ்த்தேசியத்தை மடைமாற்றி விடுதலைத் தேடலுடன் இருந்த ஏனைய அணிகளைக் களத்தைவிட்டு அப்புறப்படுத்திய விடுதலைப் புலிகள் தமக்கானதாக சோழப்பேரரசின் புலிக்கொடியை ஏந்தினார்கள் என்பது தற்செயலான ஒன்றல்ல. ஆயிரம் வருடங்களுக்கு முன்னர், அன்றைய உலகில் அதுவரை எங்குமே இல்லாதிருந்த மிகப்பெரும் கடற்படையுடன் உலகில் முதல் தடவையாகப் பல ஆயிரம் கிலோமீற்றர்கள் கடந்து தொலைதூரத்திலுள்ள பேரரசொன்றை (இன்றைய மலேசியா, வியட்னாம், இந்தோனேசியா பகுதிகளை உள்ளடக்கியிருந்தது) வென்றடக்கிய ஆக்கிரமிப்புச் சோழப்பேரரசுப் படையின் வழித்தோன்றல்களாகத் தம்மை உணர்ந்த மேலாதிக்கத் தமிழ்த்தேசியம் சமகாலத்து ஏகாதிபத்திய அணியுடன் இணைந்து கொள்வதில் ஆச்சரியம் கொள்ள ஏதுமில்லை!

**ஒடுக்குமுறையை நகர்த்தல்**

அன்றைய உலகின் அதியுச்ச மேலாதிக்கச் சக்தியாகத் திகழ்ந்த தமிழகம், அத்தகைய ஆற்றலைப்பெற இயலுமாக இருந்தமைக்கு, அடிப்படைச் சாதி வேறுபாடுகளைக் கடந்து அனைத்துத் தரப்பினரையும் ஒன்றுபடுத்தி வைத்திருந்தமையே காரணம் ஆகும். உலக நாடுகள் அனைத்தில் இருந்தும் வேறுபட்டதாகத் தமிழகத்தில் கி.மு 6 ஆம் நூற்றாண்டில் பெருநகர்க் கட்டுமானமும் கைத்தொழில் விருத்திக்கான தொழிற்பட்டறைகளும் உருப்பெறுவதற்கு அடிமைகளின் உழைப்புப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு பிறர் உழைப்பை அபகரிக்கும் விவசாயப் பெருக்கம் (அதனூடாகப் பெரும்படைக்கு உணவளித்து ஆக்கிரமிப்புச்) சாத்தியப்பட்ட பின்னரே வேறெந்தவொரு சமூகத்திலும் இதுபோன்ற நகர்க்கட்டுமானமோ பண்பாட்டு எழுச்சியோ உருவாகி இருந்தமை பொதுவழக்கு. இந்தத்தனித்துவ அம்சம் இன்னமும் ஆய்வுலகின் கவனத்தை ஈர்க்கவில்லை. தமிழகத்தில் இயற்கை விளைபொருட்கள் (ஏலம், கறுவா, கராம்பு, மிளகு, மாணிக்கம், வைரம், முத்து) வர்த்தகப் பெறுமதிக்கு உரியனவாக அமைந்து உருவான வணிகப் பெருக்கம் குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய திணைகளில் வேளிர் எனும் இனமரபுக்குழுத் தலைமை ஆட்சியுடன் பண்பாட்டு விருத்தியைச் சாதிக்க வழிகோலி இருந்தது. பிறரை ஆக்கிரமிக்கும் அவசியமின்றி தமக்குள்ளும் திணைகள் ஒவ்வொன்றின் இடையேயும் சமத்துவத்தைப் பேணியவாறு மூன்று நூற்றாண்டுகளுக்கு அன்றைய உலகின் மேலான நாகரிகச் செழுமையுடன் இலக்கியங்கள் படைக்கத் தமிழுக்கு வாய்த்திருந்தது. விவசாய எழுச்சி முன்னதாக ஏற்பட்ட பின்னர், பண்பாட்டு எழுச்சியைப் பெற்றிருந்த ஏனைய சமூகங்களில், புவியமைப்பு வேறுபாடுகளைத் திணையாகக் கவனங்கொண்டு இலக்கிய, இலக்கணத்தை வகுக்க இயலாதிருக்கவும்; தமிழுக்கு திணைக்கோட்பாடு சாத்தியப்பட்டதற்கும் இதுவே அடிப்படை!

அத்தகைய சமத்துவம், மூன்று நூற்றாண்டுகளின் பின்னர், கி.மு 3 ஆம் நூற்றாண்டில் மருதத்திணை மேலாதிக்கம் ஏனைய திணைகளை வென்றடக்கி சேர, சோழ, பாண்டியப் பேரரசுகளை உருவாக்கிய பின்னர் அற்றுப்போனது. அதன்நீடிப்பு நான்கு நூற்றாண்டுகள் நிலவிய பின்னர் மூவேந்தர் ஆட்சிப்பரப்புகள் தகர்க்கப்பட்டு பலநூறு சிற்றரசுகளைச் சாத்தியப்படுத்திய களப்பிரர் ஆட்சிக்காலம் அரங்கேறியபோது, விவசாய மேலாண்மை ஒழிக்கப்பட்டு வணிக மேலாதிக்கம் நிதர்சனமாகியது. இந்தச் சமூகமாற்றச் சந்தியில் தோன்றிய திருக்குறள், வணிகம் - விவசாயம் எனக்கூறுபட்ட இரு சமூகசக்திகளில் எந்தவொன்றையும் சாராமல் (எத்தகைய மேலாதிக்கத்தையும் நிராகரித்து, வரலாற்றுத் தொடக்கம் முதல் மூன்று நூற்றாண்டுகளாய் வழக்காறாக நிலவிய சமத்துவ நோக்குடன்) அனைத்துத் தொழில்களையும் சம அளவில் போற்றுவது எனும், உலக இலக்கியப்பரப்பில் தனித்துவமிக்க பண்புத்திறத்தை வெளிப்படுத்தியது! சாதி பேதங்களைக் கண்டித்து அனைவரும் ஒப்பானவர்கள் என முழங்கிய திருக்குறளை வெளிப்படுத்திய தமிழ்ப்பண்பாட்டுத் தனித்துவம், சோழப்பேரரசர் காலம்வரை (சாதிய வாழ்வியல் ஏற்பட்டிருந்தபோதிலும்) அனைவரும் ஒன்றுபட்டுப் போராடி அன்றைய 'உலகை'

மேலாதிக்கம் புரிய வழிப்படுத்தி இருந்தது. இந்த வெற்றியின் மமதை, பிறர் உழைப்பை அபகரித்து வந்து, தமிழகத்தைச் சொர்க்கபுரியாக ஆக்குவதற்கு இட்டுச்சென்றது. போர்க்குணத்துடன் வரலாறு படைப்பதற்குத் தலைமை தாங்கிய மருதத்திணையின் மேலாதிக்கத்தரப்பு வேளாண்மை புரிந்து வேளாளர் என ஆகிக்கொண்டு, தம்மை ஆதிக்கசாதி எனக் கருத்தியல் கட்டமைப்புச் செய்யும் பிராமணர்களுக்கு நிலதானம் செய்து அரவணைத்துக் கொண்டது. சாதியச் சழக்குகள் பெருகவும், சமூக ஒற்றுமை குலையத் தொடங்கியது. தலைமைச் சக்தியான வேளாளர் தமக்கான போர்த்திறனை வற்றடிக்கும் ஆதிக்கசாதி மேட்டிமைப் பண்புகளை வளர்த்தனர்.

ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் நீடித்த சோழப்பேரரசு பல சாதனைகளைப் படைத்திருந்தது; பிரதானமாக இந்திய வரலாற்றிலேயே நீண்டகாலத்துக்கு நீடித்து நிலவிய பேரரசு, இந்தியாவில் நிலவிய வேறெந்தப் பேரரசைக் காட்டிலும் மிகப்பெரும் விஸ்தீரணத்தை வென்றடக்கி இருந்ததோடு, இந்தியாவில் கப்பல் படையைக் கொண்டிருந்த ஒரேயொரு பேரரசு எனும் சாதனைகள் வரலாற்றாசிரியர்களால் விதந்துரைக்கப்படுவன. அத்தகைய ஆளுமையைத் தமிழகம் கைநழுவிப் போய்விடுமாறு இருந்துவிட, சாதிபேதப் பிளவாக்கத்துக்கு ஆட்பட்டமை முதன்மைக் காரணம் எனலாம். ஆந்திராவில் உருவாகி விரிவாக்கம் பெற்ற விஜயநகரப் பேரரசர் ஆட்சியின் கீழ் சோழநாடு வென்றடக்கப்பட்ட பின்னர், பிராமணர்கள் தம்மைப் புனிதச் சாதியெனச் சொல்வதற்காக, அவர்களுக்கு அதீதப் புனிதம் கற்பித்த தமது தவறினை வெள்ளாளர்கள் உணர்ந்து கொண்டனர். பிராமணரது வந்த வேதாந்தபிரம்ம சூத்திரங்களைவிடத் தமது தத்துவமேன்மை அதி உயர்ந்தது எனக்காட்டும் சைவசித்தாந்தத்தை 13 ஆம் நூற்றாண்டில் வெள்ளாளர் மடங்கள் வாயிலாக வெளிப்படுத்தினர்.

அதேநூற்றாண்டு தென்தமிழகத்தில் ஏற்பட்ட ஒரு முரண்பாட்டின் காரணமாக வெள்ளார்கள் பதினெட்டுச் சாதிகளுடன் வந்து யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்துக்கொண்டனர். அவர்களால் கட்டமைக்கப்பட்ட புதிய யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னர் பரம்பரை 'ஆரியச் சக்கரவர்த்திகள்' என அடையாளப்படுத்தப்படனர்; தொண்டூழியம் செய்யவெனக் கொண்டுவரப்பட்ட பதினெட்டுச் சாதிகளைப் பரிவாரமாக இணைத்தவாறு, இங்கு ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்களில் குடியிருப்பதற்கு வெள்ளாளர்களுக்குச் சாதியம் அவசியப்பட்டது. தலைமையாக ஆரிய நாமமும் தேவையாக இருந்தது. கோயில் தொண்டூழியம் புரிந்து தம்மைச் சற்சூத்திரரென மேன்மைப்படுத்தும் பிராமணர்களையும் கொண்டுவந்தனர்; ஒரு நூற்றாண்டுக்கு முன்னராகத் தமது ஆட்சி உச்ச நிலையில் நிலவியவரை, எதிர்காலத்தில் ஏற்படப்போகும் மாற்றம் பற்றிய புரிதலின்மையால் இழைத்துவிட்ட தவறினைப்போல, இங்கே பிராமணரை நிலச்சொந்தக்காரராக்கும் தவறினை நிகழ்த்தாமல் பார்த்துக்கொண்டனர்.

தமிழகத்தில் தெரியாத்தனமாகச் சரியாசனத்தைப் பிராமணருக்கு வழங்கியபோது சூரியசந்திரர் உள்ளவரை தமது அரசியல் மேலாதிக்கம் தொடர்ந்து நிலைத்திருக்கும் என்ற கற்பிதம் வெள்ளாளரிடம் இருந்தது. ஆட்சியதிகாரம் பிறமொழி பேசுகின்ற மன்னரிடம் இழக்கப்பட்ட பின்னர் 'வேதங்களின் நாடு பாரதம்' என்பதற்குள் அடங்கும் பகுதியாகத் தமிழ்கூறு நல்லுலகம் ஆகிவிட்ட அனுபவத்தில், யாழ்ப்பாணத்தைச் சைவசித்தாந்த மேலாதிக்கத்துக்கு உரியதாகவும், ஈழமண்டலம் முழுமையையும் சிவபூமியாகவும் வடிவப்படுத்திக் கொண்டனர்.

ஐரோப்பியர் ஆட்சிக்கு ஆட்பட்ட காலத்திலும் சைவசித்தாந்த ஆயுதத்தை வலிமையுடன் பேணிவந்ததன் பேறு, நாவலர் அதனைக் கையேற்க வழிவகுத்தது. முன்னதாகப் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலங்களில் சட்டபூர்வமாகக் கிறிஸ்தவர்களாகப் பதிவுசெய்து கொண்டு, மனதளவில் சைவத்தை வரித்துக்கொண்டு வாழ்ந்தனர். ஆங்கிலேயர் ஆட்சி, மதச் சுதந்திரத்தை வழங்கியபோது பலரும் தமக்கான கிறிஸ்தவ மேற்போர்வையை நீக்கினர்.

அதேவேளை உயர்படிப்பு, பட்டம், பதவி என்பன கிறிஸ்தவர்களுக்கே எனும் ஆங்கில ஆட்சியாளரின் நிலைப்பாடு காரணமாக, சமூக ஆதிக்க நாட்டம்மிக்கோர் மனச்சாட்சியையும் கிறிஸ்தவத்திடம் ஒப்புவிக்கும்நிலை வந்தபோது காலனித்துவத்துக்கு எதிரான போராயுதமாக நாவலர் சைவசித்தாந்தத்தை முன்னிறுத்தினார். அதனிடமுள்ள மேலாதிக்கப்பண்பு எத்தனை வலியதோ, அதேயளவுக்குக் காலனித்துவ அடிமைத்தளைக்கு எதிரான போராயுதமாகும் வரலாற்றுப் பாத்திரமும் அதற்கு வந்தமைந்தது. அதனைக் கையாண்ட ஆறுமுக நாவலர் குறித்த மறுவாசிப்புகள் பற்றித் தொடர்ந்து பார்ப்போம்!

சி. அ. யோதிலிங்கம்



சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார்.

'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

# 1833 – 1921 வரையான காலகட்டம்: தமிழ்த் தலைவர்களும் இலங்கை தேசிய காங்கிரசும்

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

*உதவி : ஜீவராசா டிலக்ஷனா*

இலங்கையில் ஒரு பொதுவான நிர்வாக முறையையும், சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சியையும், தாராண்மை ஜனநாயக அரசாங்க முறையையும் நிலைநிறுத்துவதற்காக கோல்புறூக்கமரன் குழுவினர் *1829* ஏப்ரல் மாதம் *11* ஆம் திகதி இலங்கை வந்தனர். இவர்களில் கோல்புறூக் குழுவினர் அரசியல் சீர்திருத்தத்தையும், கமரன் குழுவினர் நீதிச் சீர்திருத்தத்தையும் சிபாரிசு செய்தனர். *1831* டிசம்பர் மாதம் *31* ஆம் திகதி கோல்புறூக் குழுவினர் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தனர். தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க பல்வேறு வழிகளில் பொருளாதார, சமூக, நிர்வாகம் பற்றிய தகவல்களைப் பெற்றனர். அரச ஊழியர்களிடம் கேள்விக்கொத்துகளை வழங்கி தகவல்களைப் பெற்றதுடன், பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று மக்கள், மதகுருமார்களுடன் கலந்துரையாடியும் தகவல்களைப் பெற்றனர். இவர்களினால் சிபாரிசு செய்யப்பட்ட கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் *1833* ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் *28* ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்களாக:

1. சட்டசபை அறிமுகம் செய்யப்பட்டமை.
2. சட்ட நிர்வாக சபை அறிமுகம் செய்யப்பட்டமை.
3. மாகாணங்கள் ஐந்தாகக் குறைக்கப்பட்டமை.
4. ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமை.
5. இராஜகாரியமுறை நீக்கப்பட்டமை.
6. கட்டற்ற வர்த்தகம் அறிமுகம் செய்யப்பட்டமை.
7. இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டமை.
8. தேசாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டமை.
9. அரச ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டமை.
10. கிராமசபை அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை.

என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழர்கள் உட்பட ஏனைய சமூகங்கள் அரச அதிகாரக் கட்டமைப்புக்கு வெளியே தூக்கி வீசப்பட்டனர். அவர்கள், வரலாறு வழியாக கட்டங்கட்டமாகத் தூக்கிவீசப்பட்ட ஒரு செயற்பாடு நடைமுறையில் நிகழ்ந்திருக்கின்றது. இதற்கு எதிரான போராட்டமே தமிழர்களின் விடுதலைப் போராட்டம்.

இலங்கையில் பிரித்தானியர்களின் கைகளில் இருந்த ஆட்சி அதிகாரங்கள் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் ஊடாகவே இலங்கையர்களின் கைகளுக்கு மாற்றப்பட்டது. *1833* ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கைமாற்றம் *1972* ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் யாப்பு அறிமுகத்துடன் முடிவுக்கு வந்தது. இதிலிருந்து, இலங்கையர்களின் அரசியல் யாப்பு வரலாறு என்பது தமிழ் மக்களை ஆட்சி அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தூக்கிவீசிய வரலாறாக இருக்கின்றது. *1833* ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கைமாற்றம் *1931* ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்புடன் அரைப்பொறுப்பாட்சியை வழங்குவதாகவும், *1947* ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்புடன் முழுப்பொறுப்பாட்சியை வழங்குவதாகவும், *1972* ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்புடன் பேரளவு அதிகாரங்களைக்கூட கைவிடுவதாகவும் அமைந்திருந்தது.

முதலாவது காலகட்டத்தில் தமிழர்கள் ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் பாரதூரமான விளைவுகளைப் புரிந்திருக்கவில்லை. ஆட்சி அதிகாரங்கள் ஆங்கிலேயரின் கைகளில் இருந்தமையினால் ஒடுக்குமுறைகளைத் தொட்டுணரக்கூடிய சூழலும் இருக்கவில்லை. இதனால் முதலாவது காலகட்டத்தில் தமிழர்களின் அரசியல் என்பது அரசியல் தளத்தில் இலங்கையர் என்ற அடையாளத்தையும், பண்பாட்டுத்தளத்தில் தமிழர்கள் என்ற அடையாளத்தையும் பேணுவதாக இருந்தது.

அன்று தமிழர்களின் தலைவர்களாக இருந்தவர்களும், தமிழர்களுக்கு மட்டும் தலைவர்களாக இருக்கவில்லை, முழு இலங்கைக்கும் தலைவர்களாக இருந்தனர். குறிப்பாக அதில் மூன்று பேர் முக்கியமானவர்கள். இவர்கள் மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதில் முதலாவது நபர் சேர். முத்துக்குமாரசாமி. இவர் சேர். பொன்னம்பலம்

இராமநாதனின் தாய் மாமன் ஆவர். இவர்தான் முதன்முதலாக ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துக் கருத்துகளைக் கூறியவர். இவரிடம் ஆசிய தேசியவாதம் காணப்பட்டது. இவருடைய மகன்தான் கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி. அவர் பண்பாட்டுத்தளத்தில் ஆசிய அடையாளத்தை நிலைநிறுத்திய ஒருவராக விளங்கினார். இரண்டாமவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன். மூன்றாமவர் சேர். பொன் அருணாசலம். இவர் சேர். பொன் இராமநாதனின் இளைய சகோதரனாவார்.

### கோல்புறூக் சட்டசபை

கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம்மூலம் இலங்கையில் முதன்முதலாக சட்டசபை உருவாக்கப்பட்டது. இதில் 15 பேர் அங்கம் வகித்தனர். இவர்களில் 9 பேர் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்களாகவும், 6 பேர் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களாகவும் விளங்கினர். உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்கள் அந்தந்த உத்தியோகங்களை வகிப்பதன் ஊடாக சட்டசபையில் அங்கம் வகித்தனர். உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் மக்களின் பிரதிநிதிகளாக விளங்கினர்.

- ஐரோப்பியர் - 3
- சிங்களவர் - 1
- தமிழர் - 1
- பறங்கியர் - 1

என்றவகையில் இப்பிரதிநிதித்துவம் அமைந்திருந்தது. தமிழர் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டவர் ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி ஆவார். இவர் சேர். பொன் இராமநாதனின் தாயின் தந்தை ஆவார். தேசாதிபதியின் மொழிபெயர்ப்பாளராக இருந்த இவரை இராஜினாமாச் செய்யவைத்த தேசாதிபதி, மக்கள் பிரதிநிதியாக நியமித்தார். உத்தியோகப்பற்ற அங்கத்தவர்கள் அனைவரையும் தேசாதிபதியே நியமித்தார். கோல்புறூக் குழுவினர் இலங்கையின் பன்முகச் சமூகத்தன்மையை அடையாளம் கண்டனர். இதனாலேயே பல இனத்தைச் சேர்ந்தவர்களும் சமமான வகையில் பிரதிநிதித்துவத்தைப் பெறும்வகையில் இனவாரிப் பிரதிநிதித்துவமுறையை அறிமுகம் செய்தனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இனவாரிப் பிரதிநிதித்துவ முறையை முன்வைத்தனர் எனலாம். உண்மையில் இதனை அடுத்த கட்டத்திற்கு வளர்த்திருக்க வேண்டும். அந்த அடுத்த கட்டம் என்பது மரபுரீதியாக தனித்தன்மைவாய்ந்த இனங்கள் அதிகாரக் கட்டமைப்பில் தங்களது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கக்கூடிய வகையில் பங்குபெறுவதாக இருந்திருக்க வேண்டும். 1889 வரை தமிழர்களையும் முஸ்லிம்களையும் தமிழ்ப்பிரதிநிதியே பிரதிநிதித்துவப்படுத்தினார். தங்களை தமிழ்ப்பிரதிநிதி பிரதிநிதித்துவப்படுத்துவதை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் 1889 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு என தனியான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. அந்த அடிப்படையில் ‘காசிம் அப்துல் ரகுமான்’ தேசாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

### ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி

ஆ. குமாரசுவாமி பருத்தித்துறைக்கு அண்மையில் உள்ள கெருடாவில் கிராமத்தில் 1783 ஆம் ஆண்டு பிறந்தார். கொழும்புக்கு அவர் வந்தபோது இவரது பண்புமிக்க நடத்தை, திறமை, வியாபார நுண்ணறிவு என்பனவற்றினால் நகரத்தின் முன்னணித் தமிழர்களின் நன்மதிப்பை விரைவில் சம்பாதித்துக்கொண்டார். 1808 இல், முதலில் இவர் தேசாதிபதி தோமஸ் மெயிட்லண்ட்க்கு மொழிபெயர்ப்பாளராக பணிபுரிந்தார். பின்னர் 1810 இல் ஒரு தமிழரினால் வகிக்கப்படக்கூடிய அதி உயர்ந்த பதவியாகிய தேசாதிபதியின் ‘பிரதம தமிழ் மொழிபெயர்ப்பாளர்’ பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

### குருமக்கலம் அரசியல் திருத்தம் - 1912

1912 ஆம் ஆண்டு குருமக்கலம் அரசியல் திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டது. இதன்கீழ் தேர்தல்முறை அறிமுகப்படுத்தப்பட்டதோடு நான்கு பிரதிநிதிகள் தேர்தல்மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். ஐரோப்பியர் இரண்டு, பறங்கியர் ஒன்று, படித்த இலங்கையர் ஒன்று எனத் தேர்தல்மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். இத்தேர்தலில் கல்வியறிவு உடையோரும், சொத்துடையோரும் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். தேர்தல் இடம்பெற்றபோது முழு இலங்கையிலும் படித்த இலங்கையர் சார்பில் சேர். பொன் இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார். ஓய்விற்காக தமிழ்நாடு, கொடைக்கானல் விடுதியில் தங்கியிருந்த இராமநாதனை வேட்பாளராக நிறுத்த, சிங்கள அரசியல் தலைவரான ஜே.ஆர். ஜெயவர்த்தனவின்

தந்தை ஹெக்டர் ஜெயவர்த்தனா அங்கே சென்று, அவரைச் சம்மதிக்க வைத்து, அங்கேயே வேட்புமனு விண்ணப்பத்தின் மீது கையொப்பமும் வாங்கிவந்தார் எனக் கூறப்படுகின்றது. இத்தேர்தலில் மார்க்கஸ் பெர்னாண்டோ என்கின்ற சிங்கள மருத்துவரோடு போட்டியிட்டு, இராமநாதன் வெற்றிபெற்றார். மார்க்கஸ் பெர்னாண்டோ மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த கரவா சாதியினராக இருந்தமையினால், சிங்கள உயர் சாதியினர் இராமநாதனையே ஆதரித்தனர். தொடர்ந்து 1916 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலிலும் டி.எஸ். ஜெயவர்த்தனா என்பவரோடு போட்டியிட்டு இராமநாதனே வெற்றிபெற்றார்.

இக்காலத்தின் அரசியல் விவகாரத்தைப் பொறுத்தவரை இராமநாதன் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தார் எனக் கூறமுடியாது. அவர் இலங்கை மக்களுக்காக, குறிப்பாகச் சிங்கள மக்களுக்காகக் குரல் கொடுத்த ஒருவராக விளங்கினார். வெசாக்தினத்தை விடுமுறை தினமாக்கியதில் இவரது பங்கு அதிகமாக இருந்தது. சிங்களமொழியைப் போதனா மொழியாக்குவதற்கு இவர் கடுமையாகக் குரல் கொடுத்தார்.

### சிங்கள - முஸ்லிம் கலவரம் (1915)

1915 ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லிம் கலவரம் இடம்பெற்றது. கலவரம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து குறுகிய காலத்திலேயே இலங்கை முழுவதும் பரவியது. இது, முதலாம் உலக மகா யுத்த காலத்தில் இடம்பெற்றமையினால், ஜேர்மனியின் உளவாளிகள் சிங்கள மக்களிடையே இருந்து செயற்படுகின்றார்கள் என ஆங்கிலேயர்கள் கருதினர். ஆகவே இதனை மிகமோசமாக நசுக்கத் தொடங்கினர். குறிப்பாக மது ஒழிப்பு இயக்கத்தில் பங்குபற்றிய பல சிங்கள அரசியல் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையின் முதலாவது பிரதமராக இருந்த டி.எஸ். சேனநாயக்காவும் ஒருவராவார். பலர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். இது விடயத்தில் ஆட்சியாளர்களின் மிக மோசமான அடக்குமுறையைக் கண்டித்து சேர். பொன் இராமநாதன் சட்டசபையில் நீண்ட நேரம் உரையாற்றியது மட்டுமல்லாமல், நோய்வாய்ப்பட்ட நிலையிலும் முதலாம் உலக மகா யுத்த நெருக்கடிக் காலத்தினையும் கவனத்தில் கொள்ளாது, கப்பல்மூலம் லண்டன் சென்று அங்கு பிரதமர், குடியேற்ற நாட்டுச் செயலாளர் என்பவர்களுடன் பேசி, கலவரத்தை உடனே நிறுத்தினார். கைது செய்யப்பட்ட சிங்கள அரசியல் தலைவர்களையும் விடுவித்தார். லண்டனிலிருந்து கப்பலில் இராமநாதன் நாடு திரும்பியதும், துறைமுகத்தில் இறங்கி தனது குதிரை வண்டியில் வீடு செல்லத் தயாரானபோது, சிங்கள அரசியல் தலைவர்கள் குதிரையைக் கழற்றி தாங்களே அவரை வீடுவரை இழுத்துச் சென்றனர்.

### சேர். பொன் அருணாசலத்தின் வகிபங்கு

#### 1. சேரிப்புற மக்கள் மத்தியில் பணிபுரிதல்

சேர். பொன் அருணாசலம், சேர். பொன் இராமநாதனின் இளைய சகோதரன் ஆவார். பதிவாளர் நாயகமாக இருந்த இவர், 1913 ஆம் ஆண்டு தனது பதவியில் இருந்து ஓய்வுபெற்று நேரடியாக அரசியலுக்கு வந்தார். அரசியலில் அவர் முதல் தெரிவுசெய்த மக்கள் கூட்டம், கொழும்பின் சேரிப்புறங்களில் வாழும் அடிநிலை மக்கள்தான். இம்மக்களின் நலன்களைப் பேண தொழிலாளர் நலன்புரிச் சங்கத்தை உருவாக்கினார். சேரிப்புற மக்களின் நலன்களை விஞ்ஞானபூர்வமாக மேம்படுத்தும் பொருட்டு, லண்டன் சென்ற அவர், லண்டன் மாநகரசபை எவ்வாறு சேரிப்புற மக்களின் நலன்களைப் பேணுகிறது என்பதை ஆராய்ந்தறிந்து, அதனை இங்கு நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தினார்.

#### 2. மலையக மக்கள் மீதான அக்கறை

சேர். பொன் அருணாசலம் சேரிப்புற மக்களுக்கு அடுத்ததாக, அக்காலத்தில் மிகுந்த ஒடுக்குமுறைக்கு உள்ளான மலையக மக்களின் நலன்களில் அக்கறை கொண்டார். மலையக வம்சாவளியினரான பெரிசுந்தரத்துடன் இணைந்து தோட்டத் தொழிலாளர் நலன்புரி அமைப்பை உருவாக்கினார். இவ் அமைப்பின் தலைவராக அருணாசலமும் செயலாளராக பெரிசுந்தரமும் விளங்கினார்கள். மலையகத்தில் நிலவிய மோசமான ஒடுக்குமுறையான துண்டுமுறையை இல்லாது ஒழிப்பதில் இவரது பங்கு முக்கியமாகக் காணப்பட்டது. துண்டுமுறை என்பது ‘ஒருவர் தோட்டத்திலிருந்து திருமணம் காரணமாகவோ அல்லது வேறு விடயங்களின் காரணமாகவோ இன்னொரு தோட்டத்திற்குச் செல்லவேண்டி ஏற்பட்டால், முன்னர் கடமையாற்றிய தோட்ட

நிர்வாகம் குறித்த நபர் நன்னடத்தை உடையவர் என்றும், இவருக்கு கடன் எதுவும் இல்லை என்றும், ஒரு கடிதத்தை எழுத்தில் வழங்க வேண்டும்.' கடிதம் இருந்தால் மட்டுமே மற்றைய தோட்டம் குறித்த நபரை ஏற்றுக்கொள்ளும்.

இலங்கையில் வாழும் அடிநிலை மக்களின் நலன்களில் அக்கறைகொண்ட காரணத்தினாலேயே இவரை 'இலங்கையின் சமூக மாற்ற அரசியலின் தந்தை' என அழைக்கின்றனர். ஏ.ஈ. குணசிங்க போன்ற தொழிற்சங்க தலைவர்கள் இவரது கருத்தியலினால் கவரப்பட்டு அரசியலுக்கு வந்தனர். ஏ.ஈ. குணசிங்க தன்னுடைய அரசியல் குரு அருணாசலம்தான் என்பதைக் கூறுவதற்கு ஒருபோதும் தயங்கியதில்லை.

### 3. இலங்கை தேசிய காங்கிரஸ் தோற்றம் - (1919 டிசம்பர் 11)

சிங்கள - முஸ்லிம் கலவரம் போன்று இன்னொரு கலவரம் வரக்கூடாது என்பதற்காகவும், இலங்கை மக்களுக்கு உள்ளூர் நிர்வாக சுயாட்சி அதிகாரத்தைக் கோருவதற்காகவும் 1919 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி இலங்கையின் முதலாவது தேசிய இயக்கமான இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இதன் உருவாக்கத்தில் சேர். பொன் அருணாசலம் முதன்மையாகச் செயற்பட்டமையினால், இலங்கை தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவராக அருணாசலமே ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக்கத்தின்போது இலங்கையில் உள்ள பல்வேறு இனங்களையும் ஐக்கியபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் அடிப்படையில் சிங்களத் தலைவர்கள், தமிழ்த் தலைவர்களிடையே சேர். பொன் அருணாசலம் தலைமையில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. சிங்கள மக்கள்சார்பாக இலங்கை தேசிய சங்கத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் பீரிசும், இலங்கை அரசியல் சீர்திருத்தக்கழகத்தைச் சேர்ந்த ஈ.ஜே. சமரவிக்கிரமவும் கலந்து கொண்டனர். தமிழ் மக்கள்சார்பாக யாழ்ப்பாணச் சங்கத்தைச் சேர்ந்தோர்; அம்பலவாணர் கனகசபை தலைமையில் கலந்துகொண்டனர். 1906 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆறாம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் யாழ்ப்பாணச் சங்கம் உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாணச் சங்கம் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாகப் புதிய அரசியல் சீர்திருத்தத்தின்போது, தமிழர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும், கொழும்பில் வாழும் தமிழர்களுக்கு என ஒரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் இரு கோரிக்கைகளை முன்வைத்தது. இரு கோரிக்கைகளையும் ஏற்று, சிங்களத் தலைவர்கள் உத்தரவாதத்தை வழங்கினர். இதுவே தமிழ்த்தரப்பிற்கு சிங்களத்தரப்பு வழங்கிய முதலாவது எழுத்து மூல உத்தரவாதமாகும்.

### மனிங் அரசியல் சீர்திருத்தம் - 1921

1921 ஆம் ஆண்டு மனிங் அரசியல் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்தது. இது முதன்முதலாக இலங்கையில் பிரதேசவாரி பிரதிநிதித்துவமுறையை அறிமுகம் செய்தது. இதன்படி இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களில், மேல் மாகாணம் தவிர, ஏனைய மாகாணங்களுக்கு தலா ஒவ்வொரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. மேல் மாகாணம் சனத்தொகை கூடிய மாகாணமாக இருந்ததால் 3 பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. இந்த மூன்று பிரதிநிதித்துவத்தினுள் ஒரு பிரதிநிதித்துவம், முன்னரே உத்தரவாதம் அளிக்கப்பட்டதன்படி தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என தமிழ்த்தரப்பு ஒரு கோரிக்கையை முன்வைத்தது. இதைச் சிங்களத் தலைவர்கள் நிராகரித்தனர். இலங்கை தேசிய காங்கிரஸ் உருவாக முன்னர் வழங்கப்பட்ட உத்தரவாதத்திற்கு இலங்கை தேசிய காங்கிரஸே பொறுப்பாகாது எனக் கூறப்பட்டது.

ஏ.ஈ. குணசிங்க போன்ற சில தலைவர்கள் இதில் சமரசத்தில் ஈடுபட்டு, தமிழ்த்தரப்பிற்கு ஒரு பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்ற உடன்பாட்டைக் கொண்டுவந்தனர். இதை நம்பி சேர். பொன்னம்பலம் அருணாசலம் வேட்பு மனுத்தாக்கல் செய்ய அரசாங்கச் செயலகத்திற்கு சென்றார். அவர் செல்ல முன்னரே, மூன்று வேட்பு மனுத்தாக்கல்களும் செய்யப்பட்டு இருந்தன. இதனால் அருணாசலம் மிகவும் அதிருப்தி அடைந்தார். "பிரமாணம் பிரமாணமாக இருக்க வேண்டும். சிங்களத் தலைவர்கள் அதை மீறிவிட்டனர். எனவே இவர்களுடன் ஒன்றாகப் பயணிக்க முடியாது" எனக்கூறிவிட்டு, இலங்கை தேசிய காங்கிரஸிலிருந்து வெளியேறினார். இந்த வெளியேற்றத்துடன் தமிழரசியல் வரலாற்றின் இரண்டாம் கட்டம் ஆரம்பித்துவிட்டது எனலாம்.

இளங்கோ



யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். ஈழத்திலிருந்து போரின் நிமித்தம் தனது பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து தற்போது ரொறொண்டோவில் வசித்து வருகிறார். கவிதைகள், சிறுகதைகள், நாவல் தவிர, ‘டிசே தமிழன்’ என்னும் பெயரில் கட்டுரைகளும், விமர்சனங்களும், பத்திகளும் பல்வேறு இதழ்களிலும், இணையத்தளங்களிலும் எழுதி வருகின்றார். நாடற்றவனின் குறிப்புகள் (கவிதைகள் 2007), சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் (சிறுகதைகள் 2012), பேயாய் உழலும் சிறுமனமே (கட்டுரைகள் 2016), மெக்ஸிக்கோ (நாவல் 2019), உதிரும் நினைவின் வர்ணங்கள் (திரைப்படக்கட்டுரைகள் 2020), ப்யூகோவ்ஸ்கி கவிதைகள் (மொழிபெயர்ப்பு 2021), தாய்லாந்து (குறுநாவல் 2023) ஆகியவை இதுவரையில் இவர் எழுதிய பனுவல்கள் ஆகும்.

# ‘வன்னி’ (Vanni: A Family Struggle through the Sri Lankan Conflict): கிராபிக் நாவலை முன்வைத்து

ஈழத்தில் போர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உக்கிரமாக நடந்திருக்கின்றது. அது அங்கிருந்த அனைத்து மக்களையும் ஏதோ ஒருவகையில் பாதித்திருக்கின்றது. இப்போது யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. போர் ஒரு கொடுங்கனவாய் மக்களின் மனதில் இருந்து மறக்கடிக்கப்பட்டிருந்தாலும், அதன் நிமித்தம் ஏற்பட்ட உடல்/உள வடுக்கள் இன்னும் இல்லாமல் போகவில்லை. இனங்களிடையே நல்லிணக்கம் மட்டுமில்லை, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்கள், உதவிகள் கூட போரால் வெற்றி கொள்ளப்பட்ட அதிகாரத் தரப்பால் நிகழ்த்தப்படவில்லை. இன்னுமின்னும் இலங்கையில் இருக்கும் ஒவ்வொரு இனங்களும் துவிதங்களாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஈழத்துப் போர்ச்சூழலின் பின்னணியில் எழுதப்பட்ட பனுவல்களை முன்வைத்து வாசிப்புச் செய்யப்படுகின்ற ஒரு தொடராக ‘இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள்’ அமைகின்றது.



‘வன்னி’ (*Vanni: A Family Struggle through the Sri Lankan Conflict*) என்கின்ற கிராபிக் நாவல் ஈழத்தில் நடந்த இறுதி யுத்தத்தைப் பற்றிப் பேசுகின்றது. 2004 இல், செம்பியன்பற்றில் சுனாமியால் பாதிக்கப்படும் ஒரு மீனவக் கிராமத்தைச் சேர்ந்த அன்ரனிதான் இதில் முக்கிய பாத்திரம். அவரின் குடும்பத்தினரும், அயலவரான சுஜி/நளாயினி குடும்பத்தினரும் செம்பியன்பற்றில் இருந்து பரந்தன், கிளிநொச்சி, விசுவமடு, No Fire Zone 1, No Fire Zone 2 என்று இடம்பெயர்ந்து, இறுதியில் முள்ளிவாய்க்காலுக்குச் செல்வதுவரை இந்தநூல் விவரிக்கின்றது.

இதைக் கதையாக எழுதிய பெஞ்சமின், சுனாமிப் பேரழிவு சமயத்தில் வன்னிக்குள் சென்றவர்; இறுதியில் யுத்த வலயத்துள் இருந்து வெளியேற்றப்பட்டவர். ஐ. நாவின் பணியாளராக இருந்தவர். 2008, செப்ரெம்பர் 16, காலை 10.45 இற்கு, அரச சார்பற்ற நிறுவனங்கள் வன்னிக்குள் இருந்து அரசால் வெளியேற்றப்பட்டன என பெஞ்சமின் துல்லியமாகச் சொல்கிறார். ஏனென்றால் அவ்வாறு வெளியேற்றப்பட்ட இறுதிப் பணியாளர்களில் ஒருவராக அவர் இருந்திருக்கின்றார்.

போரை நேரடியாகப் பார்த்ததால், அவர் மீண்டும் தனது சொந்தநாடு திரும்பும்போது, PTSD யினால் பாதிக்கப்படுகின்றார். அந்தப் பாரத்தை ஏதோ ஒருவகையில் இறக்கிவைக்காவிட்டால், உளவியல் சிக்கலுக்குள் மூழ்கிவிடக்கூடுமென்ற அச்சத்திலேயே ‘வன்னி’யை எழுதத் தொடங்கியிருக்கின்றார்.

பெஞ்சமின் கிளிநொச்சியில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டபோது, போர் நடந்துகொண்டிருந்த அன்றைய காலத்தில் (2009) அநாமதேயமாக ஒரு கட்டுரையை எழுதியிருக்கின்றார். அது அன்று தெல்ஹா (Telka) பத்திரிகையில் ‘இரண்டு இராணுவங்களுக்கு இடையில்’ (*In between Two Armies*) எனும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்டுமிருந்தது.

பெஞ்சமின் வன்னிக்குள் நின்ற இறுதிக்காலங்களில், இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சிலிருந்து தப்ப, பதுங்குகுழிக்குள் இருந்திருக்கிறார். அந்த நாட்களில் வாசித்த பாலஸ்தீனியம் (Palestine) பற்றியதும், யூதப்படுகொலை (Maus) பற்றியதுமான கிராபிக் நாவல்களே ‘வன்னி’ நாவலுக்கு உந்துசக்தியாக இருந்தன எனச் சொல்கிறார்.

அன்ரன் இலண்டனில் வாகனச்சாரதியாக வேலை பார்க்கின்றார். அவர் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர் என அவரது காரில் ஏறும் பயணியொருவர் அறியும்போது, “இலங்கை நல்ல காலநிலையையும், அழகான கடற்கரைகளையும் கொண்ட ஒரு நல்ல நாடு. நான்கூட விரைவில்




Image Source : www.amazon.in

இலங்கைக்குப் போக இருக்கின்றேன். நீ இலங்கைக்குப் போகவில்லையா?” எனக் கேட்கின்றார். அதிலிருந்து அன்ரனின் கடந்தகாலத் துயரக்கதை வாசகர்களாகிய நமக்கு எடுத்துரைக்கப்படுகின்றது.

அன்ரனின் தகப்பனும், அன்ரனின் சகோதரரான ரஞ்சனும் கொழும்பிற்குச் செல்லும்போது, ‘1983’ இனக்கொலைகள் நடக்கின்றன. அதில் அன்ரனின்

தகப்பன் கொல்லப்பட, அதிர்ஷ்டவசமாக தப்பும் ரஞ்சன் ஊர் திரும்புகின்றார். எனினும் படுகொலைகளை நேரடிச் சாட்சியமாகப் பார்த்த ரஞ்சன் ஒரு விடுதலைப்புலிப் போராளியாக மாறுகின்றார். ரஞ்சன் விடுமுறையில் வீட்டுக்குத் திரும்பும்போது அவரின் பெறாமக்களான மைக்கலும், தீபாவும் அவரோடு அன்பு பாராட்டுகின்றனர். போர் தீவிரமாகும்போது, அன்ரனின் பக்கத்து வீட்டுக்காரரான சேகரும் புலிகளில் இணைகின்றார். இவர்கள் இருவரும் இறுதி யுத்தத்தில், இராணுவத்திடம் சரணடையும்போது, இராணுவத்தால் கைகள் பின்புறமாகவும், கண்கள் துணியாலும் கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள்.

இவ்வாறே புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்பில் பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட ரஞ்சனின் மனைவியின் சகோதரியான பிரியாவும், அவரது தோழியான கவிதாவும் (இவர்கள் இருவரும் புலிகளின் மருத்துவப்பிரிவில் வேலை செய்கின்றனர்.) போரின் இறுதிக்கட்டத்தில் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு 'காணாமல்' ஆக்கப்படுகின்றனர்.

அன்ரனும் ரஞ்சனியும் காதலித்துத் திருமணம் செய்கின்றனர். இருவரும் வெவ்வேறு சமூகப்பின்னணியில் இருந்து வந்தவர்கள். அன்ரனின் தாயான ஈழநிலாவால் இதனை அவ்வளவு எளிதாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவ்வாறு ஈழத்தில் சமூகங்களிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகளும் இந்த கிராபிக் நாவலில் சுட்டிக்காட்டப்படுவது முக்கியமானது. அன்ரனுக்கும் ரஞ்சனிக்கும் மைக்கல், தீபா என்கின்ற இரு குழந்தைகள் பிறக்கின்றனர். இறுதி யுத்தம் முடியும்போது இவர்கள் தமது குழந்தையான மைக்கலையும், குழந்தையின் பாட்டியான ஈழநிலாவையும் இழக்கின்றனர். அன்ரனின் சகோதரரும் (ரஞ்சன்), மச்சாளும் (பிரியா) புலிகள் இயக்கத்தில் இருந்தவர்கள் என்பதால், இராணுவத்தில் சரணடைந்த அன்ரனை இராணுவம் கொடுமையான சித்திரவதைகள் செய்கின்றது. ஒரு கட்டத்தில் முள்வேலி முகாமில் தங்கியிருந்த அன்ரனின் மனைவியான ரஞ்சினியும், மகள் தீபாவும் இராணுவத்துக்கு - அவர்களின் உறவினர் ஒருவரால் - இலஞ்சம் கொடுக்கப்பட்டு முகாமிலிருந்து வெளியே கொண்டுவரப்படுகின்றனர். அவ்வாறே அன்ரனும் மிகப்பெரும் பணம் கொடுத்து அகதி முகாமில் இருந்து வெளியில் தப்பிவருகின்றார்.




Image Source : positivenegatives.org

இவர்கள் பின்னர் கொழும்பிற்குச் சென்று, தமிழகத்துக்குத் தப்பிப் போகின்றனர். அங்கேயும் உரிய ஆவணம் இன்றித் தமிழகப் பொலிஸின் கண்காணிப்பில் சிக்குகின்றனர். ஒருவழியாக அன்ரன், உறவினர் ஒருவரின் உதவியால் இங்கிலாந்துக்கு வந்து, தனது துயரக்கதையை இங்கிலாந்துக் குடிவரவு அதிகாரியிடம் சொல்கின்றார். இறுதியில் ரஞ்சனியும், தீபாவும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு வந்து அன்ரனோடு சேர்வதோடு இந்த கிராபிக் நாவல் முடிகின்றது.

ஈழப்போரின் கொடூரத்தைப் பதிவு செய்யவேண்டுமென சிறு காமிக்ஸ் புத்தகமாக 40 பக்கங்கள் அளவில் தயாரிக்க ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம், பின்னர் கிட்டத்தட்ட 250 பக்கங்களில் கிராபிக் நாவலாக விரிந்திருக்கின்றது. இதை முன்வைத்தே

பெஞ்சமின் தனது மானிடவியலுக்கான *Ph.D* பட்டத்தையும் செய்திருக்கின்றார். பெஞ்சமின், இந்த நாவலுக்காக, வரைபடக்கலைஞரான லிண்ட்சேயுடன் மீண்டும் இலங்கைக்குத் திரும்ப விரும்பியிருக்கின்றார். நாட்டின் நிலைமைகள் உகந்ததாக இருக்கவில்லை. ஆகவே, 2012 இல், இவர்கள் இருவரும் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்கிருக்கும் அகதி மக்களோடும், பிறரோடும் கள ஆய்வுகளைச் செய்திருக்கின்றனர். மேலும் இங்கிலாந்திலும், சுவிஸிலும், பிரான்சிலும், கனடாவிலும்; போரிலிருந்து தப்பிய ஈழத்தமிழர்களை இவர்கள் சந்தித்திருக்கின்றனர். இவர்கள் இருவரும் இந்நாவலின் பாத்திரங்களாகவும் வருகின்றனர். அதனை, இலண்டனில் அன்ரனி தன் கதையைச் சொல்லும் பக்கங்களில் நாம் பார்க்க முடியும்.

2017 இல், பெஞ்சமின் மீண்டும் இலங்கைக்குச் சென்று, கிளிநொச்சியில் அவர் பணியாற்றிய ஐ. நாவின் கட்டடத்தைப் பார்க்கின்றார். அந்த அனுபவத்தைக்கொண்டு, போருக்கு முன்பும், அதற்குப் பின்புமாக இருந்த வன்னியைப் பற்றி ஒரு விரிவான கட்டுரையை இந்த கிராபிக் நாவலின் பின்னிணைப்பாக அவர் எழுதியிருக்கின்றார். மேலும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு அகதியும், போருக்குள் இருந்ததைப் போன்றே, தமது அகதி மனுக்கோரிக்கைகள் ஏற்கப்படுமா? நிராகரிக்கப்படுமா? என்ற பதற்றத்துடன் இருக்கின்றார்கள் என்பதை தனது ஆய்வின் அடிப்படையில் சொல்கின்றார். அவ்வாறு அகதிக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதால், தற்கொலைக்கு முயன்ற சிலரைக்கூட, தான் இந்த நாவல் எழுதுவதன் பொருட்டுச் சந்தித்திருப்பதாகச் சொல்கின்றார். அன்ரனைப் போன்று யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வேறு நாடுகளுக்கு அகதிகளாக வந்தவர்களுக்கு, வாழ்வை மீண்டும் மீண்டும் கட்டியெழுப்புவதைத் தவிர வேறு எந்த வழிகளும் இல்லையெனவும் கூறுகின்றார். இவர்கள், ஓர் அந்நியக் கலாசாரத்தில், புதிய மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டியிருப்பது



Lindsay Pollock
Image Source : jlflitfest.org



Benjamin Dix
Image Source : www.mideq.org

பற்றியும், அவர்களுக்குப் பழக்கமற்ற அந்தந்த நாட்டுப் பண்பாட்டு விழுமியங்களை அறிந்துகொள்ள அவதிப்படுவது பற்றியும் பெஞ்சமின் இங்கே கவனப்படுத்துகின்றார். அன்ரனைப் போன்றவர்கள், இழந்த வீடுகளை மட்டுமல்ல, போரில் இறந்த உறவுகள்/ நண்பர்களின், நினைவுகளையும் தாங்கியபடி, இன்னமும் உளவியல் சிக்கல்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களென அடையாளப்படுத்துகின்றார்.

அந்தவகையில் இந்த 'வன்னி' என்னும் கிராபிக் நாவல் வித்தியாசமான முயற்சி எனலாம். இதனூடாக போருக்கு முன்பான அமைதியான வாழ்க்கை மட்டுமன்றி, இறுதிப்போரின் உக்கிரமான ஒவ்வொரு காலகட்டமும் வரைகலை ஓவியங்களாக மாற்றப்பட்டு, மறக்க முடியாத நினைவுத்தடங்களாகக் காட்சிப்படுத்த ப்பட்டிருக்கின்றது.

பிபிஸியின் இலங்கைக்கான செய்தித் தொடர்பாளரான பிரான்ஸிஸ் ஹாரிசன், ஈழப்போர் தொடர்பாக '*Still Counting the Dead*' என்ற நூலை எழுதியிருந்தார். அதன் அறிமுக நிகழ்வு கனடாவில் நடந்தபோது, பிரான்ஸிஸ், ஈழப்போரின்போது நடந்த மனிதவுரிமை மீறல்கள் குறித்து வெவ்வேறு கலைவடிவங்களில் வெளிப்படுத்த முயற்சிக்க வேண்டுமெனக் கூறியிருந்தார். ஏனெனில், அங்கு நடந்தவை பற்றி அறிய, பல புகைப்படங்களும், காணொளிகளும், நேரடிச் சாட்சியங்களாக இருந்தாலும், அவற்றைப் பற்றி எவரும் அக்கறைப்படுவதாகக் காணவில்லை. எனவே நாம் வெவ்வேறு ஊடகங்கள்/ தளங்கள் மூலம் அவற்றை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தக் கவனம் செலுத்தவேண்டுமெனக் கூறியிருந்தார்.

ஜெகன் அருளையா



இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம்பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

# BBK:
# உலகிற்குக் கணக்கெழுதும் யாழ்ப்பாணத்துக் கணக்காளர்கள்

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே ‘வளரும் வடக்கு’ எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.

*தமிழில்: த. சிவதாசன்*

**B**K Partnership Sri Lanka பற்றி நான் முதன் முதலில் அறிந்தது 2015 இல். 2018 இல் இதன் இணை நிறுவுநரான ஆனந்தன் ஆர்ணோல்டுடன் நான் பேசியிருந்தாலும் மார்ச் 2020 இல் தான் அவரை நேரடியாகச் சந்தித்தேன். மானிப்பாயிலுள்ள மருத்துவ மனையொன்றில், மிகவும் எளிமையா உடைகளுடனிருந்த அவரைச் சந்தித்தபோது, லண்டன் நகரிலுள்ள BBK பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (BBK Partnership of Chartered Accoun tants) ஒரு பங்காளியாக அவரைப் பார்க்க முடியவில்லை. இரண்டு வாரங்களுக்கு தனது கோட், சூட், ரை போன்ற வியாபார உடைகளை ஓரங்கட்டிவிட்டு சைக்கிள் ஓட்டவீரரின் வளி கிழிக்கும் லைக்றா ஆடையில் ஆனந்தன் (படத்தில் வலது பக்கம் இருப்பவர்) என்னை மனமுவந்து வரவேற்றார். அவரது சகோதரர் கிறிஸ் உட்பட 50 பேர் கொண்ட குழுவின் 435 கி.மீ. கொழும்பு - யாழ்ப்பாணம் சைக்கிள் பயணத்தை முடித்துக்கொண்ட பின்னர் எங்கள் சந்திப்பு நிகழ்ந்தது. மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனைக்கான நிதிச் சேகரிப்பிற்காக 'இலங்கைக்கான ஓட்டம்' (Ride For Ceylon) என்ற அமைப்பினால் இச்சைக்கிளோட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 1848 இல் அமெரிக்க மத போதகர் டாக்டர் சாமுவேல் ஃபிஸ்க் கிறீன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இம்மருத்துவமனையே இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரியாகும். தற்போது இது ஒரு தர்ம ஸ்தாபனமாக, நோயாளிகள் கொடுக்கும் (பெரும்பாலானவர்கள் எதுவுமே கொடுப்பதில்லை) சிறிய பணத்தின் உதவியுடன் தனது சேவைகளை வழங்கிக்கொண்டிருக்கிறது.

இலங்கையின் இனப்போரினால் சிதைக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் இருந்த கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையை மறுசீரமைத்துச் செயற்படுநிலைக்குக் கொண்டுவர ஆர்ணோல்ட் குடும்பம் தீர்மானித்ததையடுத்து, இந்நிதிச் சேகரிப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இம் மருத்துவமனைக்கும் ஆர்ணோல்ட் குடும்பத்திற்குமிடையேயான உறவு மிக நீண்டது என்கிறார் ஆனந்தன். ஆனந்தனின் தந்தையார் திரு ஜோயெல் தர்மராஜா ஆர்ணோல்ட் அவர்கள் பிரிவு வருமான அதிகாரியாக (Division al Revenue Officer - DRO) - இப்போது இப்பதவி உதவி அரசாங்க அதிபர் என அழைக்கப்படுகிறது - கடமையாற்றிவந்தார். அதேகாலத்தில் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய திரு ஆர். ஆர். செல்வத்துரையின் மகளான சுகிர்தம் அவர்களே ஆர்ணோல்டின் மனைவியானார். இவர்களுக்கு நான்கு ஆண் பிள்ளைகள் பிறந்தார்கள். போர் முடிந்த கையோடு, இவர்களில் இரண்டாவது மகனான டாக்டர் ஜயந்தா ஆர்ணோல்ட் அவர்களது தலைமையில் மீதிச் சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள், சகபாடிகள் எல்லோரும் இணைந்து இம்மருத்துவமனையை மறுசீரமைப்பதற்காக பெருந்தொகையான பணத்தைச் சேகரித்துக் கொடுத்தார்கள். இந்நிதியின் உதவியுடன் மறுசீரமைக்கப்பட்ட மருத்துவமனை தன்னை அண்டி வரும் நோயாளிகளிக்குச் சிறப்பான சேவைகளைச் செய்துவருகிறது. இந்தத் தடவை, டாக்டர் ஜயந்தா ஆர்ணோல்ட், தனது பிள்ளைகளான ரம்யா மற்றும் ரோஹன் ஆகியோரது வாகன ஓட்டக்காரருக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களுடன், முன்னணியில் வழிகாட்ட 435 கி.மீ. சைக்கிள் பவனி தன் பயணத்தை ஆரம்பித்தது. இதன் மூலம் ஆணோல்ட் குடும்பத்தின் சேவை மனப்பான்மை அடுத்த தலைமுறைக்கும் கடந்து செல்கிறது.

இந்த கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை சைக்கிள் பவனியை இடைநடுவில் முறித்துக்கொண்ட 'BBK Partnership' இன் மற்றுமொரு பங்காளியான காண்டி என அழைக்கப்படும் அரியரத்னம் காண்டீபனை நான் லண்டன் நகரில் சந்தித்தேன். இச்சைக்கிள் பவனியில் கலந்துகொண்ட அவரது சைக்கிள் மன்னாருக்கு அருகே விபத்துக்குள்ளாகி அவரது மார்பெலும்பு உடைந்தநிலையில் அம்புலன்ஸ் வண்டியில் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

இந்த அம்புலன்ஸ் வண்டிகூட இதற்கு முதல் வருடத்து 'Ride for Ceylon' சைக்கிள் பவனியின்போது சேகரிக்கப்பட்ட பணத்தில் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒன்று என்பது ஆனந்தமான ஆச்சரியம். "நீங்கள் விதைத்ததை நீங்களே அறுவடை செய்வீர்கள்" என்ற விவிலிய வாக்கியத்தை நிரூபித்ததுபோல் (எதிர்மறையாக) அமைந்தது காண்டியின் அம்புலன்ஸ் பயணமும்.

மூன்று சகோதரர்களுடன் ஆனந்தன் ஆர்ணோல்ட் மானிப்பாயில் வளர்ந்தார். கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையில் பிறந்த அவர் செண்ட். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்றார். ஆனந்தனுக்கு 9 வயதாகவிருக்கும்போதே அவரது தந்தையார் இறந்துபோக முழுக்குடும்பத்தையும் அவரது தாயாரே பொறுப்பேற்று நிர்வகித்தார். செண்ட். ஜோன்ஸ் கல்லூரியில் ஆனந்தன் கல்வியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார். க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் திறமைகளுடன் சித்தியடைந்திருந்தாலும், 1983 இல் வெடித்த இனப்போரினால் அவரது உயர்தரக்கல்விக் கனவுகள் சிதைந்து போயின. போர் ஆரம்பித்ததும் ஆனந்தனின் குடும்பம் யாழ்ப்பாணத்தைவிட்டுப் போகத் தீர்மானித்தது. லண்டன் மருத்துவமனையொன்றில் டாக்டராகப் பணி புரிந்துவந்த ஆனந்தனின் சகோதரரான ஜயந்தா, குடும்பத்தை லண்டனுக்கு அழைத்தார். ஆனந்தனுக்கு அப்போது 18 வயது. தானும் ஒரு மருத்துவராக வரவேண்டுமென்ற கனவுகளுடன் இருந்த ஆனந்தனுக்குப் பல மணித்தியாலங்களைத் தின்று ஏப்பம்விடும் அண்ணா ஜயந்தாவின் மருத்துவர் பணி அச்சத்தையும் ஏமாற்றத்தையும் தந்தது. அவர் தனது திசையை மாற்றிக்கொண்டார். அப்போது அவரிடம் செண்ட். ஜோன்ஸ் கல்லூரி பெற்றுத்தந்த, விஞ்ஞானத்தில் நான்கு A தரப் பெறுபேறுகள் கைவசம் இருந்தன. அடுத்த 8 மாதங்களில் கணக்கியல், பொருளாதாரம், சட்டம் ஆகிய பாடங்களில் மேலும் மூன்று A தரப் பெறுபேறுகளைச் சேர்த்துக்கொண்டார்.

இன்னும் பதின்ம வயதைக் கடக்காத ஆனந்தன் லண்டனிலுள்ள ஒரு யூதக் கணக்காளரான திரு அலன் கேயி அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். அதுவரை தனியாகத் தொழில் செய்துவந்த கேயி, ஆனந்தனை இணைத்துக்கொள்வதன் மூலம் தனது நிறுவனத்தை இரட்டிப்பாக்கினார். இப்போது அந்நிறுவனத்தின் பெயர் ஏ.டி. கேயி அண்ட் கொம்பனி. அடுத்த சில வருடங்களில் ஏ.டி. கேயி அண்ட் கொம்பனி வளர்ந்து டேவிட் பெக்வித் மற்றும் போல் பிளேக் ஆகிய இரு நிறுவனங்களையும் உள்வாங்கி பெக்வித், பிளேக் அண்ட் கேயி (The BBK Partnership) என்னும் நிறுவனமாக உருவெடுத்தது. இப்போது



ஆனந்தன் (வலது) மற்றும் கிறிஸ் ஆணோல்ட்
Image Source : www.lankabusinessonline.com

இந்நிறுவனத்தில் ஆனந்தன் ஒரு பங்காளி. பிளேக்கும் பெக்வித்தும் ஏறத்தாழ ஓய்வுநிலைக்குப் போகும்நிலையில் அலனுடன் பங்காளியாக ஆனந்தனும் இணைந்து, The BBK Partnership நிறுவனத்தை நிர்வகிக்கிறார்கள்.

1983 இல் லண்டன் வந்து ஒரு வருடத்திற்குள் ஆனந்தன் தனது சொந்த இடத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார். அடுத்த 10 வருடங்களில் லண்டனில் திருமணமாகாத ஓர் இளைஞர் அனுபவிக்கக்கூடிய சுதந்திரபோகத்தை ஆனந்தனால் அனுபவிக்க முடிந்தது. இக்காலத்தில்தான் லண்டனில் விடுமுறையைக் கழிக்கவென வந்திருந்த அமெரிக்கத் தமிழ்ப் பெண்ணைச் சந்திக்கிறார். மீரா என்ற இப்பெண்ணும்கூட மானிப்பாயைச் சேர்ந்தவர்தான். 1983 இல் ஆரம்பித்த இனப்போரினால் இடம்பெயர்க்கப்பட்ட பலரில் மீராவும் ஒருவர். அவரது 11 வயதில் ஃபுளோறிடாவில் தஞ்சமடைந்தவர்.

ஆனந்தனைப் போலவே மீராவும் சமூகசேவை மனப்பான்மை கொண்டவர். இருவரும் இணைந்து வடக்கிலுள்ள இளையோருக்கு பொருளாதார வளங்களைப் பெற்றுக்கொடுக்க முயற்சி செய்தார்கள். 2004 இல் அவர்கள்

யாழ்ப்பாணம் சென்று அதன் பொருளாதார வளத்தை முன்னேற்றவும், அதேவேளை கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையைப் புனரமைக்கவும் தேவையான வழிமுறைகளை ஆராய்ந்தார்கள். அப்போது இம்மருத்துவமனை மிகவும் சீரழிந்தநிலையில் நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலங்களே சேவைகளை வழங்கிக்கொண்டிருந்தது. இதனால் மனமுடைந்த ஆனந்தன் லண்டன் திரும்பி சகோதரர் டாக்டர் ஜயந்தாவுடன் இணைந்து 'மானிப்பாய் மருத்துவமனையின் நண்பர்கள் (Friends of Manipay Hospital)' என்ற ஒரு தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்தார். 2005 முதல் இத்தொண்டு நிறுவனம் இம்மருத்துவமனைக்கான நிதிச் சேகரிப்பை நடத்தி வருகிறது. இவர்களது முயற்சியால் பலன்பெற்ற கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனையை நான் நேரில் தரிசித்தேன். இன்றுவரை இங்கே அழகும், தூய்மையும், சேவையும் அசத்துகின்றன. 2009 இல் BBK Partner ship நிறுவனத்தின் முதலாவது கிளை கொழும்பில் திறக்கப்பட்டது. மூத்த சகோதரர் றொஹானின் பணிப்பின்கீழ், ஆனந்தனின் பெரு நிறுவன, வல்லுநர்களான நண்பர்களின் உதவியுடன் இது சாத்தியமானது. போரின் காரணமாக வடக்கிலிருந்து வெளியேறிய பலர் இங்கு பணிபுரிகிறார்கள். போர் முடிவுக்கு வந்ததும் 2010 இல் வவுனியாவில் BBK கிளையொன்றை ஆனந்தன் நிறுவினார். இதன் ஆரம்பப் பணியாளர்கள் கொழும்புக்கிளையில் பணியாற்றிய வடக்கைச் சேர்ந்தவர்கள். தமது சொந்த இடங்களுக்கு அண்மையில் பணிபுரிவதை அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்கள். இவர்கள் அனைவரும் பட்டதாரிகளாக இருந்தும் வடக்கில் கிடைக்காத வளங்களினால் இவர்கள் கடைகளிலோ அல்லது விவசாய நிலங்களிலோ பணிபுரிந்திருப்பார்கள். BBK இவர்களுக்கு நிபுணத்துவத் தொழில்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்கியிருக்கிறது.

வவுனியாவில் குளிரூட்டப்பட்ட அறைகளுடன் கூடிய BBK அலுவலகம் திறக்கப்பட்டதும் அங்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கிறதென்பதும் செய்திகளாகப் பரவத் தொடங்கியது. போரினால் துரத்தப்பட்டு அவுஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்த ஒரு பெண் விடுமுறையில் இலங்கை வந்தபோது வவுனியா BBK அலுவகத்திற்குச் சென்றிருக்கிறார். அங்கு வேலை வாய்ப்பு இருக்கிறதென்பதை அறிந்து விண்ணப்பமும் செய்திருக்கிறார். லண்டனிலிருந்து ஆனந்தனுடன் தொலைபேசி உரையாடலும் நிகழ்ந்தது. அப்பெண்ணின் அவுஸ்திரேலிய (ஆங்கில) மொழிப்பாவனையும், தன்னம்பிக்கையும் ஆனந்தனுக்குப் பிடித்துப்போனது. உடனேயே அவர் பணிக்கு அழைக்கப்பட்டார். கணவனையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு அப்பெண் இலங்கை திரும்பிவிட்டார்.

2011 இல் ஆனந்தன் தனது யாழ்ப்பாணக் கிளையைத் திறந்தார். பிரதான வீதியில் இருந்த பழைய முகமறியாக் கட்டடம் ஒன்றில் நான்கு பேருடன் இக்கிளை திறக்கப்பட்டது. சீரான கட்டடம் இல்லாமையால் மேலதிகப் பணியாளர்களைச் சேர்ப்பது கடினமாகவிருந்தது. 2016 இல் யாழ். கோட்டைக்கு அருகே இருந்த மறுசீரமைக்கப்பட்ட கட்டடமொன்றிற்கு அலுவலகத்தை நகர்த்தினார் ஆனந்தன். வேலை கேட்டு விண்ணப்பங்கள் வந்து குவிந்தன. 2016 முதல் 2019 வரையில் பணியாளர் தொகை 8 இலிருந்து 82 ஆக உயர்ந்தது. 2020 நத்தாருக்கு முதல் இத்தொகையை 100 ஆக அதிகரிக்க வேண்டுமென்பது ஆனந்தனது திட்டம்.

BBK பணியாளர்கள் கல்வியில் சிறப்பான தரங்களையுடையவர்கள் மட்டுமல்லாது இவர்களில் பெரும்பாலானோர் ஆங்கிலமொழி பேசக்கூடியவர்கள். சிலர் AAT, CIMA, ACCA போன்ற பட்டங்களைப் பெற்றவர்கள். சிலர் அவற்றைப் பெறுவதற்காகப் பயிற்சிகளை மேற்கொண்டு வருபவர்கள். சிலர் பல்கலைக்கழகங்களுக்குச் செல்லத் தயாராகவிருப்பவர்கள். இலங்கையில் க.பொ.த. உயர்தரக்கல்வி முடித்தபின் பல்கலைக்கழகம் செல்வதற்கு ஒரு வருடம் காத்திருக்க வேண்டும். இந்த இளையோர் சிறந்த கல்வியைப் பெற்றால்தான் பொருளாதாரத்திற்கு சிறப்பான பங்களிப்பை வழங்க முடியுமென்பதை ஆனந்தன் மனதில் கொண்டு செயற்படுகிறார்.

BBK இலங்கைக் கிளை இலாபமீட்டுகிறதா என நான் ஆனந்தனைக் கேட்டேன். BBK Partnership நிறுவனத்தின் இலாபமும் நட்டமும் ஒட்டுமொத்த நிறுவனத்தின் கணக்காகவே கணிக்கப்படுகிறது; கிளைரீதியாக அல்ல என ஆனந்தன் கூறுகிறார். உலகம் முழுவதிலுமுள்ள BBK இன் வாடிக்கையாளர்கள் எப்படியான சேவைகளைப் பெறுகிறார்கள் என்பதுவே BBK இன் வெற்றியைத் தீர்மானிக்கிறது என்கிறார்

ஆனந்தன். லண்டன் தலைமையகமே BBK நிறுவனத்தின் பெரும்பாலான வருவாயை ஈட்டுகிறது. இங்கு மணித்தியாலத்துக்கு நூற்றுக்கணக்கான பவுண்டுகளைக் கட்டணமாக அறவிடுகிறார்கள். வரித்திட்டமிடல் (Tax Planning), சொத்துத் திட்டமிடல் (Estate Planning), வியாபார அபிவிருத்தி (Business Development) போன்ற விடயங்களில் வழங்கப்படும் சேவைகளே இங்கு அதிகமாகக் கையாளப்படுகின்றன. இச்சேவை வழங்கலைத் தக்கவைத்துக் கொள்வதற்காக வாடிக்கையாளர்களின் திறைசேரி மேலாண்மை (Treasury Management), கணக்கெழுதுதல் (Bookkeeping), 'வீ ஏ ரி' சமர்ப்பித்தல் (VAT Returns), சம்பளம் வழங்கல் (Payroll) போன்ற உதிரிச் சேவைகளை மலிவான விலையில் வழங்குவதன் மூலம் அவர்களைத் திருப்தியாக வைத்திருக்கிறது BBK. இப்படியான சேவைகளை இலங்கையிலுள்ள கிளைகள்மூலம் BBK வழங்குவதால் பிரித்தானிய வாடிக்கையாளர்கள் மலிவாகச் சேவைகளைப் பெற முடிகிறது.

கணக்கியல் சேவைகளுக்கு அப்பால் BBK - இலங்கைக்கிளை பிரித்தானிய வாடிக்கையாளர் ஒருவருக்காக பண்டசாலை (Warehousing) நிர்வாகமொன்றையும் செய்து வருகிறது. பண்டங்களின் இருப்பைக் கணக்கிடுதல் முதல் விநியோகப் பாதைகளைத் திட்டமிடுதல், விநியோக வாகனங்களை வரிசைப்படுத்தல், வாகனங்களினுள் விநியோக வரிசையில் பண்டங்களை அடுக்குதல், உரிய ஒழுங்கில் பண்டங்களை விநியோகித்தல் வரை பண்டசாலை முகாமைத்துவத்தை மேற்கொள்கிறது BBK - இலங்கை.

BBK - இலங்கைக்கிளையின் பணியாளர்கள் வருடமொன்றுக்கு இரண்டு தடவைகள் சம்பள உயர்வும் 32 நாட்கள் விடுமுறையையும் பெறுகிறார்கள். விடுமுறையைப் பெற விரும்பாதவர்களுக்கு அந்நாட்களின் ஊதியத்தின் 1.5 மடங்கு சம்பளம் வழங்கப்படுகிறது. தமிழ்ப் புத்தாண்டுக்கு, சகல பணியாளர்களுக்கும் ஒரு மாத மேலதிகச் சம்பளம் (Bonus) வழங்கப்படுகிறது. அத்தோடு அனைத்துப் பணியாளர்களுக்கும் குளிரூட்டப்பட்ட அலுவலக வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. EPF/ ETF போன்ற ஓய்வூதியப் பங்களிப்புகள் மற்றும் பணியிலிருந்து விலகுபவர்களுக்கு Gratuity Fund போன்ற சலுகைகளையும் BBK தாராளமாகச் செய்துகொடுக்கிறது என்கிறார் ஆனந்தன். குறைந்த சம்பளம் கிடைப்பினும் ஓய்வூதியத்துடன் கூடிய அரச பணிகளைப் பெறும்படி பெற்றோர்களது வற்புறுத்தல் காரணமாக, சிலர் பணிகளைத் துறந்தாலும், பணியாளர்கள் பணி துறப்பது இங்கு மிகவும் அரிது. யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய மூன்று கிளைகளுக்கும் தகமையுள்ள பணியாளர்களைச் சேர்த்துக்கொள்வதில் ஒருபோதும் சிரமம் இருந்ததில்லை.

BBK இன் கணக்கியல் வியாபாரத்துக்கு அப்பால், லண்டன் தொடர்புகளைப் பாவித்து, இதர பல விடயங்களில் கவனம் செலுத்துவதற்கும் ஆனந்தன் அஞ்சுவதில்லை. யாழ்ப்பாணத்தில் 'ஓவிய விழா' (Art Festival) ஒன்றை நடத்துவதற்கான திட்டமொன்றும் அவரிடம் இருக்கிறது. பிரித்தானியா, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளிலிருந்து நடுவர்களைக் கொண்டுவந்து இங்கு உருவாக்கப்படும் கலைப்படைப்புகளைத் தரத் தேர்வு செய்ய அவர் உத்தேசித்திருக்கிறார். பரிசுகள் பணமுடிச்சுகளாக மட்டும் இருக்காது. ரூ. 100,000, ரூ.50,000, ரூ.25,000, ரூ.10,000 படி 50 ஆறுதல் பரிசுகள் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படுமென்பதற்கு அப்பால், வெற்றிபெறும் ஓவியங்கள் பகிரங்க உலகச் சந்தையில் ஏலம் விடப்பட்டு அதில் பெறப்படும் பணத்தின் 50% படைப்பாளிக்கும் மீதி 50% இலங்கை முழுவதிலுமுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் கல்விச்சேவைகளை வழங்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்படுமெனக் கூறுகிறார் ஆனந்தன். இவ்விழாவில் சிறப்பானதெனத் தேர்வாகும் ஓவியங்களை லண்டனின் நாகரீக டாம்பீகம் குடிகொண்டிருக்கும் செல்சீ மாவட்டத்திலுள்ள (Chelsea district) BBK வாடிக்கையாளர் ஒருவரின் காட்சிமண்டபத்தில் காட்சிப்படுத்தவும் ஆனந்தன் திட்டமிட்டுள்ளார்.

இலங்கையில் BBK நிறுவனத்தை நடத்துவதில் எப்படியான சவால்களை எதிர்கொள்கிறீர்கள் என நான் ஆனந்தனைக் கேட்டேன். "வடக்கில் நிறுவனங்களை இயக்குவது பற்றிப் பலவிதமான கட்டுக்கதைகள் கூறப்படுகின்றன. சோம்பல், வெளிநாட்டுப் பணத்தில் தங்கியிருத்தல், பணியாளர் மீது நம்பிக்கையின்மை, சண்டித்தனம் எனப் பலவகையான குணாம்சங்கள்

கூறப்படுகின்றன. இவையெல்லாம் வெளிநாடுகளில் கூறப்படும் கட்டுக்கதைகள்; எதையும் செய்ய விரும்பாத வெளிநாட்டுக்காரர் இவற்றை நம்பி சும்மா இருப்பதற்கே இக்கட்டுக்கதைகள் உதவுகின்றன. லண்டனைச் சுற்றி வாழும் பல கோடீஸ்வரர்கள் யாழ்ப்பாணத்தில் தங்களது தென்னந்தோட்டங்களில் தேங்காய்கள் திருடப்படுவது பற்றிக் குறைபட்டுக்கொள்கிறார்கள். அதேவேளை பராமரிக்கப்படாமல் காடுகளாக வளர்ந்திருக்கும் இத்தோட்டங்களில் பாம்புகளும், எலிகளும் குடிகொண்டு அயலவர்களுக்கு இம்சை தருவது பற்றி அவர்களுக்கு எந்தவித அக்கறையுமில்லை என்பது எரிச்சலையே ஊட்டுகிறது" என்கிறார் ஆனந்தன் . முதல் தடவை யாழ்ப்பாணம் வந்தபோது ஆனந்தன் எதிர்கொண்ட மின்வெட்டு, இணையத் தொடர்பின்மை போன்ற சவால்கள் இப்போது தீர்க்கப்பட்டுவிட்டன. 2015 இல், முதல் தடவையாக நான் யாழ்ப்பாணத்தில் குடியேறியபோது எதிர்கொண்ட மின்வெட்டுகள் இப்போது மிகவும் அரிது; அப்படியானாலும் அவை பற்றிய முன்கூட்டிய அறிவிப்புகள் வழங்கப்படுகின்றன என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

இலங்லையிலுள்ள BBK பணியாளர் குறித்து ஆனந்தனது வாடிக்கையாளர்கள் திருப்தியாக உள்ளார்கள். பிரித்தானிய கிறீன்விச் நேரம் மாலை 6:00 மணியாகவிருக்கும்போது இலங்கை நேரம் இரவு 11:30 மணியாகவிருக்கும். அப்படியிருந்தும் இலங்கைப் பணியாளர் தூங்காமலிருந்து தமது வாடிக்கையாளரின் தேவைகளைத் திருப்திப்படுத்துகிறார்கள். இதனால் சில பணியாளர் நீண்டநேரத்தை அலுவலகத்தில் செலவிடவேண்டி ஏற்படுகிறது. இரவுநேரங்களில் பணியாளர் பாதுகாப்பாக வீடு செல்வதற்கு BBK வாகன வசதிகளைச் செய்து கொடுக்கிறது. பணியாளரை மரியாதையாக நடத்துவதன்மூலமே அவர்களது விசுவாசத்தைப் பெற முடியும் என்கிறார் ஆனந்தன். அவர் அலுவலகத்தில் நுழையும்போது பணியாளர் எவரும் எழுந்திருப்பதோ அல்லது அவரை 'சேர்' என அழைப்பதோ இங்கு அனுமதிக்கப்படுவதில்லை. 'ஆர்ணோல்ட் அண்ணா' என அழைக்கப்படுவதையே அவர் விரும்புகிறார். உணவு தயாரிக்குமிடத்தில் கிண்ணங்கள் கழுவப்படாமல் இருந்தால் ஆனந்தன் அவற்றைக் கழுவி வைப்பார். இதன் மூலம் எந்தவொரு பணியும் இழிவானதல்ல என்பதை அவர் நிரூபிக்க விரும்புகிறார். ஆனந்தனது இப்பெரும்பணி பற்றி எழுதுவதற்கு நான் நீண்டகாலமாக முயற்சிக்கிறேன் என அவருக்கு முறையிட்டபோது, "இதுவரை காலமும் நான் இலங்கையில் மேற்கொண்டுவரும் முயற்சிகளைப் பகிரங்கமாகச் செய்ய விரும்பவில்லை" என அவர் கூறினார். இப்போது அவர் தன்னை இனங்காட்டத் தயாராகி விட்டார். தன்னைப் போலவே மேலும் பலரும் இலங்கை வந்து, நிறுவனங்களை ஆரம்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறார். அவை போட்டி வியாபாரமாக இருந்தாலும் வடக்கிற்கு வேலைவாய்ப்புகளை அளிக்குமானால் அதுவே அவருக்கு மகிழ்வைத் தரும்.

"கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்" என்ற பழமொழியோடு அவர் உரையாடலை முடித்துக்கொள்கிறார். ஆனந்தன் ஆர்ணோல்டுடன் தொடர்புகொள்ள விரும்புபவர்கள், arnold@bbkca.com என்னும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.

இக்கட்டுரை மார்ச் 19, 2020 இல் வெளியான லங்கா பிசினஸ் ஒன்லைன் பதிப்பில் ஆங்கிலத்தில் பிரசுரமானது.




த.சிவதாசன்

1983ஆம் ஆண்டு முதல் கனடாவில் வசித்துவரும் தொழில்முறை மின்பொறியாளரான த. சிவதாசன் அவர்கள் தனது கல்வியை இங்கிலாந்தில் மேற்கொண்டார். கனடாவின் 'TVI' எனும் தொலைக்காட்சியில் 'வெளிச்சம்' என்ற பெயரில் சமகால அரசியல் நிலைவரம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடாத்தியிருக்கிறார். விபுலானந்த அடிகளின் யாழ் நூல் மூன்றாம் பதிப்பு, மு. தளையசிங்கம் படைப்புகள் போன்ற நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். எழுத்து, ஆய்வு, விமர்சனம், மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் தீவிரமாகப் பங்கேற்று வரும் இவர், கனடாவில் முதன் முதலாகத் தமிழில் வெளிவந்த 'தமிழ் எழில்', 'நலம்', 'மறுமொழி' ஆகிய சஞ்சிகைகளினதும் 'வீடு' எனும் பத்திரிகையினதும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 'தாயகம்' என்னும் பெயரில் கனடாவில் வெளிவரும் சஞ்சிகையில் 'அசை' என்னும் தலைப்பில் பத்திகளை எழுதியதால் 'அசை சிவதாசன்' என இலக்கிய வட்டத்தில் அறியப்படுகிறார். 'மறுமொழி.கொம்' என்னும் இணையத்தளத்தைக் கடந்த பதினைந்து வருடங்களாக நடத்தி வருகிறார்

அருணாசலம் லெட்சுமணன்



‘ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்’ அதிபரான அருணாசலம் லெட்சுமணன், ‘நிகர்’ சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.

# காமன்கூத்து:

## பன்முக நோக்கில் ஓர் ஆய்வு

ஒரு சமூகம் தங்கள் பண்பாட்டு அம்சங்களைத் தக்கவைக்கின்ற போதே அதற்குரிய தனித்துவ அடையாளமும், இருப்பும் உறுதிப்படுத்தப்படும். அந்தப் பண்பாட்டு அம்சங்களை நிலைபெறச் செய்வதற்கு அச்சமூகத்தின் கலைகள்மீதான கவனம் இன்றியமையாததாகும். அந்தவகையில் இருநூறு வருடங்களுக்குமுன்பு புலம்பெயர்ந்த இந்தியவம்சாவளித் தமிழர்கள் தங்களது பாரம்பரிய உணர்வுடன், தம் சமூகம்சார் கலைகளைப் பாதுகாத்து வருகின்றனர். அத்தகைய கலைகளுள் காமன்கூத்துக்கலை மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. அவ்வாறு முக்கியத்துவம் பெறுவதற்கு ஏதுவான காரணங்கள்பற்றி அறிய விழைவதை நோக்காகக்கொண்டு இக்கட்டுரை விரிவுபெறுகிறது. சமகாலத்தில் அக்கூத்தின் போக்குப்பற்றியும், எதிர்காலத்தில் அவற்றை ஆவணப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள்பற்றியும் தெளிவுறுத்துவதாகவே இக்கட்டுரையின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

## தெய்வீகக் கலையாக காமன்கூத்து

பக்தி உணர்வுடன் மாசிமாதம் பிறையன்று காமன் பொட்டலில் காமன் ஊன்றுதல் இடம்பெறும். காமன் ஊன்றுதல் தொடக்கம், காமனைத் தகனம்செய்து மூன்றாம்நாள் காமனுக்கு உயிர்வழங்கும் நிகழ்வுவரை பக்தியுணர்வுடனே ஒவ்வொரு நிகழ்வும் இடம்பெறும். அண்ணாவியாரின் (காமன் மாஸ்டர்) வழிகாட்டலில் இடம்பெறும் இந்நிகழ்வில் சம்பந்தப்பட்டுள்ள சமூகத்தினரின் ஒன்றித்த ஈடுபாடு இக்கூத்து அரங்கேற்றத்தில் முக்கிய கவனிப்பிற்குரியதாகும். இக்கூத்துடன் தொடர்புபட்ட வேடங்களைத் தரிப்பவர்கள், அப்பாத்திரங்களுடனும், ஏனையவர்கள் இக்கூத்துடனும் ஒன்றித்தநிலையில், அதன் உச்சக்கட்டமாக ‘மருள்’ வருவதுண்டு. மேலும், தெய்வீக உணர்வுகளுக்கு மதிப்பளித்து விரதம் அனுஷ்டித்தல், நேர்த்திக்கடன் வைத்து எண்ணிய காரியம் சித்திகிடைத்த பின்பு, நேர்த்திக்கடனை நிறைவேற்றல் போன்ற விடயங்களில் இக்கலையை நேசிக்கின்றதரப்பினர் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இக்கூத்துடன் தொடர்புபட்ட குருவை தெய்வீகத்தன்மையோடு பொருத்திப்பார்க்கின்ற தன்மையையும் அவதானிக்கலாம். மூத்தகலைஞர் ஒருவரிடமிருந்து குருவாக்குப் பெற்றுக்கொள்வதற்கு சீடர்கள் பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். காமன் மாஸ்டர் (அண்ணாவியார்) ஒருவர் தங்கள் சிஷ்யர்களுக்கு குருவாக்கை வழங்குவது அபூர்வம். தன் மனதைவென்ற ஒருவருக்கு அல்லது மிக நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே குருவாக்கை வழங்கிவந்துள்ளார்கள். பெரும்பாலும் குடும்பரீதியான ஆதிக்கத்தைக்கருதி தங்களுடைய புதல்வர்களுக்கு மாத்திரமே குருவாக்கை வழங்குவார்கள். இவ்வாறு குருவாக்கைப் பெற்றவர்கள் மாத்திரமே தொடர்ந்து காமன்கூத்துக் கலையை நடத்தி வந்துள்ளனர். குருதட்சணை செலுத்துதல், குருவுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவம் செலுத்துதல், குருவுக்கு உபசாரம் செய்தல் போன்ற நிகழ்வுகள் குருமீதான முக்கியத்துவத்தைக் காட்டுவதாக அமைகின்றன எனலாம்.

கந்தபுராணத்தின்படி, குமாரக் கடவுளின் தோற்றம் நிகழ்வதற்காக, சிவன் மற்றும் பார்வதி இடையே காதல் ஏற்படவேண்டும்; இதனைச்செய்யும் முக்கியப்பாத்திரமாக காமன் காணப்படுகிறார். சிலப்பதிகாரத்தில் காமன்விழா தொடர்பிலும், நாச்சியார் திருமொழியில் காமன் தொர்பிலும் கூறப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். காமனை கிரேக்கர் ‘இரான்’ என்றும் ரோமானியர்கள் ‘கூப்பிட்’ என்றும் பெயரிட்டு, காமனுடன் தொடர்புடைய கதைகளுக்கு முக்கியத்துவம் வழங்கிவந்துள்ளனர். இந்துக்களின் நம்பிக்கையாக முத்தொழில்களுக்கும், செல்வங்களை வழங்குவதற்கும் தனித்தனியே கடவுள்கள் இருப்பதுபோல், ஆணும் பெண்ணும் ஒருயிர் ஈருடலாக வாழ்ந்து தங்கள் இனத்தை விருத்திசெய்வதற்கு ஏற்ற சக்தியை வழங்குவதற்கான கடவுளாக காமன் போற்றப்படுகிறான். காமனுக்குப் பல்வேறு பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவனது தோற்றம்பற்றி பல்வேறு கதைகள் சித்திரிக்கப்படுகின்றன. புராணங்கள் பலவற்றில் காமனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளன. மேற்கத்தியக் கலாசாரங்களிலும், இந்தியக் கலாசார அம்சத்திலும் காமன்

ஏற்றுக்கொள்ளப்பட்டவனாகவும், விமர்சனத்திற்குட்பட்டவனாகவும் சித்திரிக்கப்பட்டு வந்துள்ளான். இந்தியமரபின் வழிவந்த மலையகத்தவர்களின் கவனிப்பில், காமன் எவ்வகையில் காட்டப்படுகின்றான் என்பதுபற்றி காமன்கூத்துக் கலையை உற்றுநோக்குவதன் வாயிலாக அறியமுடிகிறது.

இந்திரனின் வேண்டுகோளை ஏற்று, சிவனின் தவம் கலைக்க முயற்சிக்கும் மதன், அதற்குமுன் தனது மனைவி ரதியிடம் விடைபெற முயல்கிறான். ஆனால், சிவனின் மகிமையால் மதன் அழியப்போவது நிச்சயம் என்பதை உணர்ந்த ரதி, தவம் கலைக்கச் செல்லவேண்டாம் எனக் கண்டித்துப் பேசுகிறாள். இந்தநிலையில், தங்கள் தந்தையரின் மேன்மையை வலியுறுத்தும் வகையில், சிவன் மற்றும் விஷ்ணுவைப் பற்றி ரதி மற்றும் மதன் ஆகியோர் பாடல்களை எடுத்துரைப்பதைக் காணலாம். ரதியின் கேலிக்கு உள்ளாகும்போது, மதன் தனது தந்தையான விஷ்ணுவின் உயர்வை எடுத்துரைக்கும் பாடல்களையும், போற்றும் பாடல்களையும் பாடுவதைக் காணமுடிகிறது.

“பச்சமுள்ள பெண் ரதியே இக்கணமே என் தகப்பன்
பரந்தாமன் தன் பெருமை நிரந்தரமாய் கேட்டிடுவாய்
பக்தரட்சகனெனும் முத்திக்கு ஆதாரமான
பன்னவர் சகாயனெனும் விண்ணோர் மாயன் துதிக்கும்”

எனத் தொடங்கி, பத்மாசூரனுக்கு வரத்தைவழங்கி அவனிடமே சிக்கிக்கொள்ளும் சிவனை, விஷ்ணு காப்பாற்றிய கதையை பாடலாக மதன் கூறுகிறான். அவ்வாறே மதனை நோக்கி ரதியானவள்,

“அச்சுதனார் தன் மகனே பச்சைக்கிளி வாகனனே
அரண்மேல் கணை தொடுக்க பரமசிவனை ஜெயிக்க
ஆராலுக்காகாது நேராக இப்போது
அவருடைய தன் சமர்த்தும் பாண்டு ரங்கன் சமர்த்தும்”

எனத் தொடங்கும் பாடல் அடிகளின் வாயிலாக சிவனின் பெருமையை எடுத்துரைக்கின்றாள்.



Image Source - www.youtube.com/Jeyasankar Sivagnanam

மதன், ரதி இருவருக்கும் இடையில் கருத்துகள் பரிமாறப்படுகின்றன. மதத்தின் மேன்மைகள் எடுத்துரைக்கப்படுவதுடன், கணவனை இழக்கும் பெண் எதிர்கொள்ளும் சவால்கள், காதல் பிரிவைத் தாங்கமுடியாத வேதனை ஆகியனவும் இப்பாடல்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. பாடலினூடாகவே கதை அம்சம் நகரும் வடிவில் மதன், ரதி உரையாடல் தன்மை எடுத்துக்காட்டப்படுகிறது.

“தென்றல் ரதம் நானெடுத்து பெண்ணே – பெண்ணே
அந்த தேவர் சபை போறனடி கண்ணே கண்ணே
”தென்றல் ரதம் நீர் எடுக்க வேண்டாம் வேண்டாம்
அந்த தேவர் சபை நீரும் போக வேண்டாம் வேண்டாம்
”செங்கரும்பு வில்லெடுத்து பெண்ணே பெண்ணே
அந்த சிவன் மீது போர்தொடுக்கப் போறேன் போறேன்
”ஐயா செங்கரும்பு வில்லெடுக்க வேண்டாம் வேண்டாம்
அந்த சிவன் மீது போர்தொடுக்க வேண்டாம் வேண்டாம்”

காமன் கூத்தில் பாடப்படுகின்ற பாடல்கள் இயல்பான சொற்களுடன், ரசனையை ஏற்படுத்துவதையும் பல பாடல்களில் ஒவ்வொருவரியும் ஒரே எழுத்தில் தொடங்குவதையும் சிறப்பம்சமாகக் கொண்டமைந்துள்ளதைக் காணலாம். எடுத்துக்காட்டாக ரதியைநோக்கி மதன் ‘ந’ எழுத்தில் ஒவ்வொருவரியும் தொடங்குமாறு அமைந்த பாடலொன்று பின்வருமாறு அமைகின்றது:

"நல்லதடி பெண்ணரசே வில்லடி கொண்டோன் மகளே
நாராயணன் மருகிதோ நா வடிவழகி
நாட்டில் உள்ள கன்னியர்க்கே மேட்டிமையான கண்ணே
நடமாடும் சித்திரமே வடிவான ரத்தினமே
நாடியே தூதனுப்ப வாடியே நீயுமிப்போ
நாயமதாய் உரைத்து போகாதென தடுத்து
நாட்டமதாய் சொல்லவந்த வாட்ட மென்ன உந்தனுக்கு
நலமான தேவரென்னை பிறவானென்றறிந்து
நாடியே தூதனுப்ப வாடியே நீயுமிப்போ
நானே போய் இந்திரசபை மானே அதை அறிந்து
நாயகியே வாரனென்றான் மாயன் மகன் மன்மதனார்

கேட்பவரை எளிதில் கவரும் வகையிலும் பல்வேறு உத்திகள் கையாளப்பட்டு பாடல்களில் புனைவுத்திறமையை வெளிபடுத்தும் ஆற்றல்களை இப்பாடல்களில் காணலாம்.

## மொழித்திறனை வளர்க்கும் கலையாக காமன்கூத்து

மொழிப்புலமையையும், வாதத்திறமையையும் வளர்த்தெடுக்கும் வகையில் சொல்லாட்சிச் சிறப்பை வளர்க்கும் கலையாகவும் காமன்கூத்துக் கலை திகழ்கிறது. அண்ணாவியாரின் பாடல்கள், ரதி - மதன் சார்பான குரல்களாகத் தர்க்கித்துக் கொள்வதாக அமைகிறது. 'மதன் எரிந்தான், மதன் எரியவில்லை' போன்ற வாதங்கள், தர்க்கிக்கும் திறனை வளர்த்துவந்துள்ளன. மொழி, பாடும்திறன், பாடல் புனையும்திறன் என்பனவற்றை வளர்க்கும் பணியில் பாடலாசிரியர்களின் வித்துவச்செருக்கும் மொழிப்புலமையும் வெளிப்படக்காணலாம். விடுகதைகள், பழமொழிகள் மற்றும் நுண்ணறிவு தொடர்பான அறிவும் இக்கூத்தினூடாக வளர்க்கப்படுமாற்றைக் காணலாம். எடுத்துக்காட்டாக எரிந்தகட்சிசார் பிரதிநிதிகள் எரியாத கட்சித்தரப்பினரிடம் மொழிப்புலமையை பரீட்சிக்கும் வண்ணம்,

"ஐந்தாறு வண்டி மாட்டை ஓர்
ஆற்றங் கரையான் முழுங்குது பார்
அம்மியைத் தூக்கித் தண்ணித் தவளை
முழுங்குது பார்
வாத்தியாரை தூக்கிக் கீரைப் பாத்தி
முழுங்குது பார்
கவியறிந்த வானவரே எந்தன்
செவிதனிலே சொல்லும்படி
கட்டுடைக்க வேண்டுமென்று
உன் கால்களிலே தெண்டமிட்டேன்

என்றவாறு வினாத்தொடுப்பதும், தொடர்ந்து எரியாத கட்சி சார்பான குரலாக,

கண்ணுமுண்டு வாயுமுண்டு
அது பெண்ணுமல்ல ஆணுமல்ல
கழுத்திலே மாலையுண்டு
நெழிந்த கால் கையுமில்லை
கவுந்தமில்லா மேனியது
கொஞ்சம் சிவந்திருக்கும் ரூபமது
மங்கையர்க்கு காடை வார்க்க
அது என்ன வசனமது?

எனப் புதிர்போடுவதும் மொழிவளர்ப்பின் ஒரு முக்கிய அம்சமாகும். தமிழ்ப்பண்பாட்டு மரபில் ஆண், பெண் உறவு தந்த படிமமுறைமையில் பரஸ்பரப் புரிதலை உணர்த்தும் வகையிலான அம்சங்கள் காமன்கூத்தில் எடுத்துரைக்கப்படுவதைக் காணலாம். இந்திரசபையின் கோரிக்கையை செவிமடுத்தநிலையில் மதன், ரதியிடம் உத்தரவு கேட்பதும், ரதியானவள் தன்நிலையை நினைத்து மதனைத் தடுப்பதும், வாழ்வியலில் ஆண், பெண் உறவில் ஒருவரையொருவர் இழந்து வாழும்போது ஏற்படும் பாதிப்பையும், பிரிவுதரும் தாக்கத்தையும் புலப்படுத்துகின்றன. இல்லறம் போற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் முனைப்பினையும் காமன்கூத்துக் கொண்டுள்ளது. கணவன் இடர்படுகின்ற நேரத்தில், பெண் நாசூக்காகப் புத்திமதி சொல்லுவதை இக்கூத்தில் காணலாம். பெண்ணின் ஆலோசனையை மதிக்காதபோது ஏற்படும் பாதிப்புகளையும், வாழ்க்கைத் தீர்மானங்களில் இருவரும் சேர்ந்து முடிவெடுக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தும் பணியையும் காமன்கூத்து மேற்கொள்கிறது எனலாம்.

## பெண்ணிலைவாதத்தை முன்நிறுத்தும் கலையாகக் காமன்கூத்து

பெண்ணிலைவாத முனைப்பில் ரதி என்ற பாத்திரத்தினூடாக மதனின் ஆதிக்கக் கருத்துகளுக்கு மறுப்புத் தெரிவிக்கப்படுவதை அவதானிக்கலாம். முற்போக்கான சிந்தனை

ஓட்டம் இருந்தபோதிலும், மதன் ஆதிக்கச் சிந்தனை மேலோங்கி ரதியின் கோரிக்கையைச் செவிமடுக்காது செயற்படுகிறான். இது ஆண் வர்க்கத்தின் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் ஏகப்பிரதிநிதியாக மதனைக் காட்சிப்படுத்துகிறது. இந்நிலை, சமகால இந்திய நாகரிகமரபின் தன்மையையும் பிரதிபலிக்கிறது. முற்போக்கான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில், ரதி தன் கணவனுக்கு ஏற்பட்ட கொடுமையை எதிர்க்கத் துணிந்தவளாக உருவாகுகின்றாள். உலக சிருஷ்டிப்பின் பிரதானியாகச் சித்திரிக்கப்படும் சிவன் தன் தந்தையாக இருந்தபோதிலும், அவரை எதிர்க்கத்துணியும் ரதி, மதன் இழந்த செய்தியின்பின், வேதனையுறுவதைக் காணலாம். அந்தப்பாதிப்பின் தாக்கத்துடன், தனக்கு ஆதரவான அணியைத்திரட்ட ஊர்வலமாகப் புறப்படுகிறாள். அவலச்சுவையுடன் ஒப்பாரி இசைத்து, தனக்கான ஆதரவையும் பிரசாரத்தையும் முனைந்து மேற்கொள்கின்றாள். சமூக அணித்திரட்டலில் பெண்ணின் இயங்கும் தன்மைகள் இவ்வண்ணம் வெளிப்படுகின்றன.

பெருந்தோட்டப் பொறிமுறையில் தொழிலாளர் வர்க்கம் ஏகாதிபத்திய அசைவியக்கத்தினுள் அகப்பட்டுள்ளமையின் அடையாளத்தோடும் இந்நிலைமை பொருந்துவதாக அமைகிறது. அதற்கெதிரான மீளெழுச்சியை வலியுறுத்தும் முனைப்பாக இந்நிகழ்வு அமைகிறது; அது பார்ப்பவரையும் கேட்பவரையும், துணிந்தவருடன் மனதளவில் இணைவதற்கான அனுபவமாக வெளிப்படுகிறது.

ஒப்பாரியின் ஊடாக வலியுறுத்தப்படும் வேதனையைச் செவிமடுக்கும்போது, ரதியுடன் ஓர் அணி உருவாகுவது கண்கூடாகத் தெரிகிறது. மலையக நாட்டுப்புற மரபில் ஒப்பாரிப்பாடல்கள் வாழ்வியலை வெளிப்படுத்துவதில் முனைப்புப்பெறுகின்றன. கணவனை இழந்த பெண் தூற்றுவதற்குரியவளாகும் நிலைபற்றி,

> "ஆத்தில வாழை வச்சி
> அளர பழுத்தாலும்
> ஆகாத வாழையினு – என்னை
> ஆத்தில தள்ளுவாங்க
> குளத்தில வாழை வச்சி
> குளர பழுத்தாலும்
> கோவமுள்ள வாழையினு
> குளத்தில தள்ளுவாங்க
> என ரதி கூறுவதும், அந்த இழப்புத்தந்த வேதனை,
> "ஆத்தங் கரையோரம்
> அன்னம் போல் குந்தியிருந்தேன்
> அம்பு மேல் அம்பு போட்டு
> குண்டு மேல் குண்டு போட்டு
> இந்த அம்புபட்ட காயமது
> அணைய நாள் செல்லுமையா

என்றவாறும் அமைகிறது.

நியாயத்திற்கான பெண்ணிலைவாதக் குரல் சிவனைச் சிந்திக்கவைப்பதும், ரதியின் வெற்றியாக அமைகிறது. பெண்களின் முற்போக்குத்தன்மையை வலியுறுத்தும் கலையாகவும் காமன்கூத்துத் திகழ்கிறது. சிவனை எதிர்த்த சக்திகள் சிறுதெய்வங்களாகப் போற்றப்படும் மரபின்வழியில் அவ்வழிபாட்டுமுறை மலையகத்திலும் ஊடுருவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அம்முனைப்பின் வெளிப்பாடகவே சிவனை எதிர்த்த உமையின் வழித்தோன்றலாக மாரியம்மன் வழிபாடு முக்கியத்துவம் பெற்றுள்ளதைக் காணலாம்.

## ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வைத் தூண்டும் கலையாக காமன்கூத்து

சமூக அடக்குமுறைக்கெதிரான வலியுறுத்தலை, அணிதிரட்டலை உளவியல்ரீதியில் ஏற்படுத்தும் முனைப்பையும் காமன்கூத்து உட்பொருளாகக் கொண்டமைந்தமைக்கான ஆதாரங்கள் பல உள்ளன. "கலை என்பது கலைஞனுக்கு ஏற்பட்ட பாதிப்பாகும். இங்கு தொழிலாளி கலைஞனாகிறான். எனவே தொழிலாளியின் பாதிப்பு கலைஞனின் பாதிப்பாக வெளிப்படுத்தப்படுகிறது." மேலும் "கலையின்மூலம் தன் அகவுணர்வை, அதன் அழுத்தத்தை வெளிப்படுத்தும் புறக்கருவியாகவும் அவன் கலைகளைக் காண்கிறான்." என்ற இரா. நித்தியானந்தனின் கூற்றுக்கமைய, தொழிலாளி தன்னுள் சுமந்துள்ள அடக்குமுறை தந்த அவலத்திற்கெதிரான தயார்ப்படுத்தலுக்கான, சமூக அணிதிரட்டலை ஏற்படுத்தும் முனைப்பும், காமன்கூத்தினூடாகக்

கையாளப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

ஒடுக்கப்பட்ட சமூகமொன்றில் எதிர்ப்புணர்வையும், தன்னம்பிக்கையையும் வளர்த்தெடுக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தும் கைங்கரியமும் இக்கூத்தினூடாக கட்டியெழுப்பப்படுகிறது. இவ்வெளிப்படுத்தலின் உண்மையைப் புரிந்துகொண்டநிலை, இக்கலை தொடர்பான பற்றுதல் மலையகமக்களிடத்தில் ஊடுருவியுள்ளமைக்குக் காரணமாக அமைகின்றது. பெருந்தோட்டப்பொறிமுறையில் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் நலன்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கப்பட்டு வந்துள்ளது. அதன் தொடர்ச்சி நிலையில், தோட்டத்துரைமார்கள் தொடக்கம் கங்காணிமார் வரையிலான கட்டமைப்பு, ஆதிக்கம் செலுத்துவதாகவே அமைகிறது. அடிமைத்தனம் பொருந்திய வாழ்வியலுக்கு மட்டுமே சொந்தமான துன்பியல் வாழ்வை மீட்டெடுக்கும் வகையில், சிவனையே எதிர்க்கத்துணிந்த மதன் பாத்திரம் மலையகமக்களால் நேசிக்கப்படுகிறது. இவ்வாறு, எதிர்ப்பியக்கக் கட்டமைப்பிற்கும் இக்கூத்து வழிசமைத்திருக்கலாம்.

## சாதிய எதிர்ப்புணர்வைத் தூண்டும் கலையாகக் காமன்கூத்து

தனியே எதிர்ப்புணர்வு மட்டுமல்லாமல், வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வழிகாட்டல் இக்கூத்தில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. மதன் ஒரு போராளியாகவும், போராட்டத்தில் தன்னை இழக்கத் துணிந்தவனாகவும் இருந்தமை கவனிக்கத்தக்கதாகும். ‘ஆதிக்கச் செல்நெறியை உடைக்கமுற்படும் முற்போக்கு எண்ணமும், போராட்டம் ஒன்றின் இழப்பும், விடிவுக்கான வழியைப் புதுப்பிக்கும் தெம்பும்’ என்பதே இதன்மூலம் வளர்க்கப்படும் சிந்தனையாகும்.

பொருளாதாரப் பொறிமுறையின் ஏற்றத்தாழ்வுகள், வர்க்க அடக்குமுறைக்கெதிரான போர்க்குணப் பாய்ச்சலை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றியுள்ளது. அதேநேரத்தில், தொழிலாளர் வர்க்கம் சாதி அடிப்படையிலான சமூகக் கட்டமைப்பை ஆமோதித்ததாகவே திகழ்ந்துள்ளது. இச்சாதிய அமைப்பை அங்கீகரித்து, அதனை வளர்த்தெடுக்கும் கைங்கரியத்தில் முதலாளி வர்க்கம் அக்கறை செலுத்தியுள்ளது; தொழிலாளர் வர்க்கத்தை நாசூக்காகப் பிரித்துவைத்துப் பயன்படுத்தியும், பிரிவினைவாதத்தை வளர்த்தும் வந்துள்ளது. இந்நிலையைச் சாதகமாக்கிய சூழலில், அதனுடன் குளிர்காய்ந்து வந்துள்ளதான கசப்பான வரலாற்றை மலையகச்சமூகம் கொண்டுள்ளது. மாரியம்மன் வழிபாடு தொடர்பான ஆதிக்கம், தோட்டங்களைச் சேர்ந்த உயர்சாதியினருடன் தொடர்புடையதாகவே காணப்பட்டது. இந்நிலையில், விரக்தி மனப்பான்மையின் உந்துதலோடு, ஏனைய சிறுதெய்வங்கள் மீதான கவனம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு உருவான மனநிலையின் வெளிப்பாடாகவே, காமன்கூத்துக் கலை தாழ்த்தப்பட்ட சாதியினரின் கவனத்தை ஈர்த்ததாகவும் பார்க்கப்படுகிறது. சாதிய ஒடுக்குமுறையை எதிர்த்துச்செல்வதற்குப் பதிலாக, அதை ஊடறுக்கும் வகையில் காமன்கூத்து நேசிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் பல உள்ளன. உயர்சாதியினர், தாழ்த்தப்பட்ட சாதியினரை கோயிலுக்குள் அனுமதிக்காத கசப்பான சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. துரைமார்களின் கைக்கூலிகளாக இருந்த கங்காணிமார்கள், மேல்சாதியினர் என்றவகையில் இக்கட்டுப்பாட்டை தோட்டங்களில் நிலைபெறச் செய்துள்ளனர். கோயிலுக்குள் நுழையமுடியாத வேதனையின் வெளிப்பாடாக, தங்களது முற்றத்தில் தங்கள் வழிபாட்டுமுறையைத் தீர்மானித்ததோடு, அதனுடன் கலைகளையும் வளர்ப்பதில் ஒடுக்கப்பட்டோர் தங்கள் பங்களிப்பை வழங்கிவந்துள்ளனர். மேல்சாதியினரின் செயற்பாட்டுக்கு எதிராகவே இவ்வழிபாட்டுமுறையும், கலைவளர்ப்பும் உருவாகி வந்ததாகக் கூறலாம்.

ஓர் அசைவியக்கத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட மக்கள் கூட்டம், தங்களுக்குள் ஒரு தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டும், ஒரு நெறியாள்கையின்கீழ் வழிப்படுத்தப்பட்டும், அழகியல் எதிர்ப்புணர்வுகளை வளர்த்துக்கொண்டும் வாழ்வதற்கான முன்னுதாரணக் கலையாக காமன்கூத்து திகழ்கிறது. புராணம், இதிகாசம், வரலாறு, ஒழுக்கம் தொடர்பான மேற்கோள்களை உள்ளடக்கியதாகவும் இக்கூத்தின் அம்சம்

அமைந்துள்ளது. மகாபாரதம், இராமாயணம், சிறுதொண்டர் புராணம், நளவெண்பா, அரிச்சந்திரன் புராணம், இரணியன் கதை, தக்கன் கதை போன்றவற்றின் உபகதைகள் இக்கூத்துடன் தொடர்புபடுகின்றன. வாழ்வியலுக்குத் தேவையான ஒழுக்கநெறிகளைப் போதிக்கும் பணியை ஆற்றுவதே இவற்றின் பிரதான நோக்காகக் கொள்ளப்படுகின்றது. இக்கூத்தில் பல வேடங்கள் காட்டப்படுவதுடன், உலக உற்பத்தி தொடர்பிலான அம்சங்களும் சித்திரிக்கப்படுகின்றன. உயிரின் உற்பத்தி, பஞ்சபூதங்களின் தொழிற்பாட்டு ஆதிக்கம் தொடர்பிலான அறிவை பாமரமக்களிடம் ஏற்படுத்தும் முனைப்பும் இதில் இடம்பெற்றுள்ளது எனலாம். தர்க்கத்திறனுடன் அறிவியல் தொடர்பான சிந்தனைவாதத்தையும் போதிக்கும்வகையில் காமன்கூத்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒழுக்கநெறியினை வலியுறுத்தும் காமன்கூத்து, வாழ்வியலில் காமம் எந்தளவிற்கு முறையாகக்கொள்ளப்படல் வேண்டும் என்பதைப் போதிக்கின்றது. இறைவனானாலும் காமம் முறையாகக் கைக்கொள்ளப்படாதபோது ஏற்படும் விளைவுகள் தொடர்பிலான வலியுறுத்தல் இங்கு முன்வைக்கப்படுகிறது. இது ஒருவேளை அக்காலத்தில் நிலவிய பலதாரத் திருமணத்தைத் தடுக்கும் கைங்கரியமாகவும் அமையப்பெற்றுள்ளது. தேவலோகமாக இருப்பினும் காமம் முறையற்றுப் பிரயோகப்படுத்தப்பட்டதன் விளைவு பிரம்மன், சிவன் போன்ற பாத்திரங்களினூடாக வெளிப்படுத்தப்படுவதையும் காணலாம்.

## பல்வேறு கலைகளின் சேர்க்கையாகக் காமன்கூத்து

காமன்கூத்தினூடாக பல கலைகள் வளர்க்கப்பட்டுள்ளன. இதில், இசைக்கலை முக்கிய இடம் வகிக்கிறது. இக்கூத்தின் ஒவ்வொரு அங்கமும் பாடலினூடாகவே நகர்த்தப்படுகிறது. நல்ல குரல்வளமும் இசைஞானமும் உடையவர்களே அண்ணாவியார்களாகத் திகழ்ந்துள்ளனர். இக்கூத்து வளர்ப்பின் கடப்பாடுகள் இவர்களின் வசமே காணப்படுகின்றன. இக்கூத்தில் பாடகர்கள் இல்லையெனில், கூத்தே இல்லை என்றநிலை காணப்படுகிறது. இக்கூத்தில் பாடகர்களைப் போலவே, இசைக்கலைஞர்களின் பங்கும், ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாததவையாகத் திகழ்கிறது. இப்பாடல்களில் தப்பிசையே பிரதான இடம் வகித்தது. ஜால்ராவின் ஆதிக்கமும் இக்கூத்தை மெருகூட்டுகிறது.

ஆடற்கலை இக்கூத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. இசைக்கேற்ற பாடல்களுக்கு தாளக்கட்டுடனான ஆடல், பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளது. பல்வேறு பாத்திரங்களின் பங்களிப்பு இருந்தபோதிலும், ரதி - மதன் ஆகிய பாத்திரங்களின் ஆட்டமே கூடுதல் செல்வாக்குப் பெற்றுள்ளது. சந்தோசம், துக்கம், தர்க்கம் என்பவற்றை வெளிப்படுத்துமாறு ரதி - மதனின் ஆட்டம் காணப்படும். அரைவட்டத்தில் எதிரெதிரே இருந்து உலாவரும் ஆட்டம், பல்வேறு தப்பிசைக்கமைய மாறுபடும். ஒயிலாட்டத்தின் தன்மையும் ஓர் ஆட்டமாகக் காணப்படும். ஏனைய பாத்திரங்கள் சாதுவான நிலையிலும் யமன், தூதன், வீரபத்திரர் போன்ற பாத்திரங்களின் ஆட்டங்கள் பய உணர்வைத் தூண்டுவதாகவும் அமையும். சபையோரைக் கவரும் ஆட்டமான குறத்தி நடனமும், சபையோருக்கு நகைச்சுவை உணர்வை ஏற்படுத்தும் பபூன் ஆட்டமும் குறிப்பிடத்தக்கதாகும். எனவே பல்வேறு ஆடல்களின் சேர்கையாகவும் இக்கலை திகழ்கிறது.

ஒப்பனைக்கலை, உடைவடிவமைப்புக்கலை, ஓவியம் என்பன குறித்து தனித்து மதிப்பிடக்கூடிய வகையிலும் இக்கலைகளை வளர்க்கும் பணியைக் காமன்கூத்து வளர்த்துள்ளது. வாதிடும் கலை, அரங்கமைப்புக்கலை, நிர்மாணக்கலை, ஆபரணங்களை உருவாக்கும் கலை என்பவற்றையும் வளர்த்துள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது காமன்கூத்தானது ஆன்மீகம், அறிவியல் கலைகள், ஒழுக்கவியல் என்பவற்றைப் போதிக்கும்தன்மையைக் கொண்டுள்ளது. இக்கூத்து மலையகச்சமூகத்தின் முக்கிய வரலாற்று ஆவணமாகவும் திகழ்கின்றது. இக்கலை தொடர்பான சமகாலக்கண்ணோட்டம் பற்றியும், பார்வையைச் செலுத்தவேண்டியது அவசியமாகும். மலையகத்தின் சகல பிரதேசங்களிலும் காமன்கூத்து அரங்கேற்றப்பட்டு வந்துள்ளநிலையில் தற்போது மிகக்குறைந்தளவே தோட்டங்களிலே அரங்கேற்றப்படுகிறது.

1. *தாழ்த்தப்பட்ட சமூகத்தவரின் கலை என்ற மனநிலை.*
2. *இக்கலையை ஏனையவர்களுக்கும் கற்றுக்கொடுக்கும் மனநிலை காமன் 'மாஸ்டர்'களிடம் இல்லாமை.*
3. *இக்கூத்தில் பங்கெடுப்பது கௌரவக் குறைச்சல் எனும் படித்தவர்களின் மனநிலை.*
4. *மலையகமக்கள் மத்தியில் கூட்டுணர்வு, ஒற்றுமையுணர்வு குறைந்து போயுள்ளமை.*
5. *சமூகக் கட்டுக்கோப்பிலிருந்து விடுபட்டுள்ள தன்மை.*
6. *நாகரீகமோகத்தில் இக்கூத்துக் கலைஞர்களை ஏளனமாகப் பார்க்கின்ற தன்மை.*
7. *தொலைக்காட்சித் திரைப்படங்களின் ஆதிக்கத்தன்மை.*

போன்ற காரணங்களினால் இக்கலை மலையகச் சமூகத்தவர்களிலிருந்து ஒதுங்கிப் போய்க்கொண்டிருக்கும் துர்ப்பாக்கியநிலை காணப்படுவது கவனிக்கத்தக்கதாகும்.

இருந்தபோதிலும் இக்கலையை நேசித்த கலைஞர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும், பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் சமூகப்பங்களிப்புக் குறைவான நிலையிலும், உயிரோட்டமாக இதனை நிகழ்த்திவருவது குறிப்பிடத்தக்கதாகும். இன்று தொழில்நுட்பங்கள் வளர்ந்திருந்தாலும், மரபுநிலை மறாமல் தொடரும் தேயிலைத் தொழிற்துறையைப் போலவே, இந்தக் கலைஞர்களும் கௌரவப்படுத்தப்படுவதில்லை. அண்மைக்காலமாக இக்கூத்தை தோட்டங்களில் அரங்கேற்றுவதும் அதனைச் சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதன் ஊடாக பார்வையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ளும் நிலைமையும் வரவேற்கத்தக்கதாக அமைகிறது.

### பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகக் காமன்கூத்து

காலவோட்டத்திற்கேற்ப காமன்கூத்துக் கலையைப் பாதுகாக்கும் நோக்கில் நவீனநுட்பத்தைக் கையாண்டு, உள்ளக அரங்கமயப்படுத்தும் முயற்சியில் பலர் ஈடுபட்டுவருகின்றனர். இவ்வாறு இக்கலையை மேடைவடிவத்திற்குக் கொண்டுவரும் முயற்சிக்கு அமரர்களான திரு. வி.டீ. தர்மலிங்கம், திரு. திருச்செந்தூரன் ஆகியோர் எழுபதுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இக்கூத்தில் ரதி பாத்திரத்தை ஆண்களே ஏற்றுவந்துள்ளனர். மேடைவடிவத்திற்கு மாற்றப்பட்டுள்ளநிலையில் முதன்முறையாக பிராஷிஸ் அசுந்தா என்ற பெண்மணியே பெண் வேடமிட்டுள்ளதாக வே. இராமர் குறிப்பிடுவார். தொடர்ந்து உள்ளக அரங்கமயப்படுத்தும் முயற்சியில் கொட்டகலை, அரசினர் ஆசிரியர் கலாசாலை, ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி போன்றன ஈடுபட்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மற்றும் அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டி நிகழ்வுகளில் கூத்து அரங்கேற்றம் ஒரு போட்டி நிகழ்வாகக் காணப்பட்டது. அக்காலகட்டங்களில் மத்திய மாகாணப் பாடசாலைகளுக்கிடையே காமன்கூத்துத் தொடர்பிலான கவனம் காணப்பட்டமை வரவேற்கத்தக்கது. துரதிர்ஷ்டவசமாக முக்கியத்துவம் இழந்துசெல்லும் தமிழ்மொழித்தினப் போட்டி நிகழ்விலிருந்து கூத்து தொடர்பான போட்டி நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டமை கவலைக்குரியதாகும். இருந்தபோதும் தரம் 6 தமிழ்மொழி பாடத்திட்டத்திலும், உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டத்திலும் இது இணைத்துக்கொள்ளப்பட்டமை, நாட்டின் சகல பிரதேச மாணவர்களும் காமன்கூத்துத் தொடர்பில் கவனத்தைச் செலுத்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது எனலாம்.

மலையகக் கவிதை இலக்கியத்தில், வீதிப்பாடல் யுகம் திருப்புமுனைகளை ஏற்படுத்திய காலமாகும். அக்காலத்தில் மலையகத்தில் செங்கொடிச் சங்கத்தின் புரட்சிகரக் கலை, இலக்கியக் குழுவினர் காமன்கூத்தில் உள்ள பலவீன அம்சங்களை, காமன்கூத்தின் சாயலில், காமன்கூத்திற்குரிய இசை, தாள அமைப்புகளைக் கையாண்டு தோட்டங்கள் தோறும் 'கீமன்கூத்து' எனப் பெயரிட்டு, தெருக்கூத்துகளையும், மேடை நாடகங்களையும் நடாத்திவந்துள்ளனர். மேலும் அண்மைக்காலங்களில் கண்டி, சமூக அபிவிருத்தி நிறுவனம் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியினர், வீதி நாடகங்களை காமன்கூத்திற்குரிய இசைகளுடன் நடாத்துகின்றனர். காமன்கூத்திற்குப் பயன்படுத்தப்படும் தப்பு

வாத்தியமே இந்நாடகங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

கடந்த சில வருடங்களாக இதனை மேடை அமைப்பிற்குக் கொண்டுவரும் முயிற்சியில் ஈடுபட்டுவந்த பிரான்சிஸ் ஹெலன் தலைமையிலான மலையகமக்கள் கலை அரங்கத்தைச் சேர்ந்த கலைஞர்கள், கடந்த வருடம் இடம்பெற்ற செம்மொழி மாநாட்டில் காமன்கூத்தை அரங்கேற்றிப் பெருமை சேர்த்துள்ளனர். குறிப்பாக இவ்வாய்ப்பின் பின்னணியில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களது பங்களிப்புக் குறித்து வியந்துகூறுவார்கள்.

மலையகமக்களின் வரலாற்று ஆவணமாகத் திகழும் இக்கலையை ஆவணப்படுத்தும் பிரயத்தனத்தில் மலையக கலை, இலக்கிய அமைப்பினர் கவனம் செலுத்தி வருகின்றமை கவனிக்கத்தக்கது. அந்தவகையில், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம், புசல்லாவை இராமன்துரைத் தோட்டத்தில் அமைந்துள்ள மலையக அருங்காட்சியகத்தில் இக்கூத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. காமன்கூத்திற்கு பயன்படுத்தும் உடைகள், ஆபரணங்கள் பாடல்கள் என்பனவும் பாதுகாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி, உபபீடாதிபதி திரு. எஸ். இராஜேந்திரன் அவர்களது வழிகாட்டலில், வருடாந்தம் ஆசிரியர் பயிலுநர்களைக்கொண்டு சமூகவியல் கண்காட்சியை நடத்தி வருகின்றது. அக்காட்சியில் காமன்கூத்து தொடர்பான அரும்பொருட்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இக்கண்காட்சி மலையகத்திற்கென்ற பெரியதொரு அருங்காட்சியகம் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

அவ்வாறே யாழ். பல்கலைக்கழகம், கொழும்புத் தமிழ்ச்சங்கம், வசந்தம் தொலைக்காட்சி ஆகியன இக்கூத்தின் முக்கியத்துவத்தை அறிந்து, அரங்கேற்றியும் ஆவணப்படுத்தியுமுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆய்வு முயற்சிகளில் காமன்கூத்து

இருநூறு வருடகால புலம்பெயர் சமூகமொன்றின் வாழ்வியலோடும் வரலாறோடும் தொடர்புபட்ட ஒரு கலையாக விளங்கிய காமன்கூத்துத் தொடர்பிலான ஆய்வு முயற்சிகள் அரிதாகவே காணப்படுகின்றன. சு. திருச்செந்தூரன், மு. சிவலிங்கம், மாத்தளை வடிவேலன், சு. முரளிதரன், லெனின் மதிவானம், ரா. நித்தியானந்தன், பொன். பிரபாகரன், அ. லெட்சுமணன் ஆகியோர் சுயாதீனமாக இது தொடர்பில் ஆய்வில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக்கழக மட்டத்திலிருந்து பேராசிரியர் காரை செ. சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கா. சிவதம்பி, பேராசிரியர். சி. தில்லைநாதன், கலாநிதி துரை மனோகரன், பேராசிரியர் சி. மௌனகுரு, திருமதி. சோதிமலர் ரவீந்திரன் ஆகியோர் இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். மேலும், பல்கலைக்கழக மட்டத்தில் மாணவர்களும் ஆய்வில் ஈடுபட்டுவருகின்றனர்.

காமன்கூத்துத் தொடர்பிலான ஆய்வுத்தளம் அகலச் செல்லவேண்டியது அவசியமாகும். அண்மைக்காலமாக பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெறுவதற்கென மாணவர்கள், நுனிப்புல் மேய்ந்தாற்போல் காமன்கூத்துத் தொடர்பிலான தரவுகளை வழங்கிவருகின்றனர்.

இந்தியப் பல்கலைக்கழகங்களில் வெளிவாரி மாணவர்களாகப் பயில்பவர்களிடமிருந்து வரும் ஆய்வுத்தகவல்கள், பல்வேறு பலவீன அம்சங்களோடு காணப்படுகின்றன. இவ்வாறான காரணங்களினால் காமன்கூத்தைக் குறைத்து மதிப்பிடக்கூடியநிலைமை தோன்றுகின்றது. எனவே இவ்வாறான குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படல் வேண்டும்.

உதயசூரியன் இதழில் ‘காமன்கூத்துக் கலையறிவோம்’ எனும் அ. லெட்சுமணன் எழுதிய தொடர் 2011 ஆம் வருடம், வாராந்தம் தொடர்ந்து வெளிவந்தது. அதன் விரிவான பார்வை ‘தாய்வீடு’ இதழில் ‘காமன்கூத்து - வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த கலை’ எனும் தலைப்பில் தொடராக வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு சமூகமொன்றின் வரலாற்று ஆவணம் என்றவகையில் இக்கூத்துக் கட்டிக்காக்கப்படும் நோக்கில் முழுமையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். அதன்பொருட்டு:

1. காலங்காலமாக காமன்கூத்துக் கலையில் ஈடுபடும் கலைஞர்களுக்கு தகுந்த கௌரவத்தை வழங்குதல்; அவர்கள் தொடர்பிலான ஆவணங்களைப் பேணுதல்.
2. பல்கலைக்கழகங்களில் பயில்நிலைக்குரிய கலையாக காமன்கூத்தையும் இணைத்துக்கொள்ளல்.
3. பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களில் கலை, இலக்கிய அமைப்புகளில் நவீன உத்திகளைக் கையாண்டு உள்ளக அரங்கமயப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளல்.
4. தோட்டங்களில், காமன்கூத்தை உண்மைநிலை மாறாதவகையில் அரங்கேற்றல்.
5. காமன்கூத்துத் தொடர்பில் ஆய்வுத்தளத்தை விஸ்தரித்தல்.
6. காமன்கூத்தில் பாடப்படும் பாடல்களின் உள்ளடக்கம் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
7. மலையகத்திற்கென தனியான அருங்காட்சியகம் அமைத்தல் மற்றும் தேசிய அருங்காட்சியகத்தில் காமன்கூத்துத் தொடர்பிலான ஆவணங்களைப் பாதுகாத்தல்.
8. இக்கலையில் ஈடுபடும் கலைஞர்கள் ஒன்றிணைந்து செயலூக்கம் பொருந்திய வகையில் செயற்படல்.

போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒடுக்கப்பட்ட சமூகமொன்றின் விடிவைத் தேடவேண்டிய அவசியத்தை உணரச்செய்து, எழுச்சிக்குரிய எண்ணங்களைப் புரையோடச்செய்வதில் பங்களிப்புச்செய்யும் கலையாக காமன்கூத்துத் திகழ்கிறது. அவ்வகையில் இது ஆவணப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தைக் கொண்டிருக்கின்றது. இக்கூத்தினூடாக மலையகத்தவரின் இருப்பிற்கான அவசியம் உணரப்படுகிறது. திட்டமிட்ட இன அழிப்புகள்மூலம் சமூகச்செறிவு குறைக்கப்படுகின்றது. இச்செய்தி நமக்குப்போதிக்கும் அபாயத்தை உணரவேண்டியுள்ளது. உலகமயமாக்கத்தில் புரளவேண்டிய அவசியம் தவிர்க்க முடியாததே; இருந்தபோதிலும், இன அடையாளத்தை உறுதிப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்தில், இவ்வாறான கலைகள் மலையகமக்களின் பொக்கிஷமாகப் பாதுகாக்கப்படல் வேண்டும் என உறுதியாகக் கூறலாம்.

## உசாத்துணைகள்


**நூல்கள்:**

1. சோதிமலர், ரவீந்திரன். (காமன் கூத்து மற்றும் மலையகப் பாரம்பரியம்)
2. பிரான்சிஸ், ஹெலன். (2011). இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்கள் வழங்கும் காமன் கூத்து (பிரதியாக்கம்). மலையக மக்கள் கலை அரங்கு.
3. சுகவனேச்வரன், அ. வெ. (2007). குமார சம்பவம். வரம்.
4. சத்தியநாதன், ச. (2002). காமன் கூத்து ஓர் கள ஆய்வு. ஞானம் பதிப்பகம்.
5. சிவலிங்கம், மு. (2007). மலையக தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள். குறிஞ்சி தமிழ் இலக்கிய மன்றம்.
6. இராமர், வே. (2018). மலையக மக்களின் கலையான காமன் கூத்து. மக்கள் கலை பண்பாட்டு அரங்கு.

**நேர்காணல்கள்:**

1. காமன் மாஸ்டர் சு. கோபால் (அண்ணாவியார்), பிளக்குவாட்டர், கினிகத்ஹேன.
2. காமன் மாஸ்டர் N. மோகனதாஸ், பிளக்குவாட்டர், கினிகத்ஹேன.
3. காமன் மாஸ்டர் பாட்டையா, அல்லித்தோட்டம், கினிகத்ஹேன.
4. திரு. சுப்ரமணியம், பார்கேப்பல், கெட்டபுலா.

**பாடல் உதவி:**

1. திரு. கந்தையா, கடியன்லேன கட்டபுலா.
2. திருமதி. அருணாசலம் தெய்வானை, கல்லாறு இம்புல்பிட்டி, நாவலப்பிட்டி.

**கட்டுரைகள்:**

1. சு. முரளிதரன். ‘இலங்கையில் காமன் கூத்து சில அர்த்தக்கோடல்கள்’. உலக தமிழ் செம்மொழி மாநாட்டின் அரங்கேறிய காமன் கூத்து பிரதியாக்கம்.
2. லெனின் மதிவானம். ‘மலையத்தில் காமன் கூத்து சில அவதானிப்புகள்’. மல்லிகை ஜனவரி 2001 ஆண்டுமலர்.
3. ரா. நித்தியானந்தன். ‘தாழ்த்தப்பட்ட மக்களின் சின்னஞ் சிறிய கடவுளர்’. (இலங்கை தமிழ்ப் பெருந்தோட்ட மக்களின் கடவுளர் வழிபாடு தொடர்பான சமூகவியல் ஆய்வு). சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு – 2011 கட்டுரைக்கோவை.
4. வே. இராமர். ‘மலையக கலைகளும் இன்றைய நிலையும்’. நிகர் சஞ்சிகை.

சுப்ரமணியம் சிவகுமார்



கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார். பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

# மூலோபாயப் பகுதி பற்றிய அடிப்படைத் தகவல்கள்

# 1

இலங்கையின் வறண்ட மண்டலமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்துவதற்கான கொள்கைகள் உருவாக்குவது மிகவும் அவசியமாக உள்ளது. இது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், நிலையான நீர்வள மேலாண்மை சுற்றுச்சூழலுக்கு உதவியாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவாகவும் அமையும். இதன் மூலம், வறண்ட மண்டலங்களில் உள்ள நீர்வளங்கள் பாதுகாக்கப்படும். "வறண்ட மண்டல நீர்வளங்களின் இருப்பும் பேண்தகு பயன்பாடும்: வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள், இலங்கை எனும் இந்தக் கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து ஆற்றுப்படுகைகளின் நீர்வளங்களின் நிலையை ஆராய்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன், அவற்றின் திறம்பட்ட பயன்பாட்டை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதைக்கூறும்.

## 1.1. அறிமுகம்

இலங்கை என்பது இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள ஒரு தீவாகும். இதன் பரப்பளவு 65,526 சதுர கிலோமீட்டர்கள் (25,300 சதுர மைல்கள்). இது, அட்சரேகை 5° 55’ முதல் 9° 50’ வரையும், தீர்க்கரேகை 80° முதல் 82° வரையுமான இடத்தில் அமைந்துள்ளது. நிர்வாக நோக்கங்களுக்காக, நாடு ஒன்பது மாகாண சபைகள் மற்றும் 25 மாவட்ட நிர்வாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 2005 இல் மக்கள்தொகை 19,544,988 ஆக இருந்தது (அடர்த்தி: 312 பேர்/ சதுர கி.மீ), மேலும் 2019 இல் இது 21,323,733 ஆக உயர்ந்தது (அடர்த்தி: 340 பேர்/சதுர கி.மீ). 2005 முதல் 2019 வரையான மக்கள்தொகை வளர்ச்சி அட்டவணை 1.1 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

| Year | Population | Yearly %Change | Yearly Change | Median Age | Fertility Rate | Density (P/Km²) |
|---|---|---|---|---|---|---|
| 2019 | 21,323,733 | 0.45% | 94,970 | 32.6 | 2.21 | 340 |
| 2018 | 21,228,763 | 0.48% | 100,731 | 32.6 | 2.21 | 339 |
| 2017 | 21,128,032 | 0.51% | 106,861 | 32.6 | 2.21 | 337 |
| 2016 | 21,021,171 | 0.54% | 113,144 | 32.6 | 2.21 | 335 |
| 2015 | 20,908,027 | 0.63% | 129,258 | 32.3 | 2.21 | 333 |
| 2010 | 20,261,737 | 0.72% | 143,350 | 30.4 | 2.28 | 323 |
| 2005 | 19,544,988 | 0.80% | 153,477 | 29.0 | 2.26 | 312 |

அட்டவணை 1.1 : மக்கள் தொகை வளர்ச்சி 2005-2019

Image Source - Cental Bank, Annual report

இலங்கையின் பொருளாதாரம் 2018 இல் மிதமான 3.2% வளர்ச்சியைப் பதிவு செய்தது; 2017 இல் இது 3.4% ஆக இருந்தது. இந்த வளர்ச்சி உள்நாட்டு மற்றும் வெளிப்புறச் சூழல்களின் சவால்களுக்கு இடையே அமைந்தது. முக்கிய விவசாயப்பகுதிகளில் நிலவிய சாதகமான வானிலை காரணமாக, விவசாயத்துறை ஆண்டுமுழுவதும் வலுவான மீட்சியைக் கண்டது. இதன் விளைவாக, அந்த ஆண்டில் நெல் உற்பத்தி கணிசமாக அதிகரித்தது. அதேசமயம், 2018 இல் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கிய சேவைத்துறை, நிதிச்சேவைகள் மற்றும் மொத்த மற்றும் சில்லறை வணிகத்தின் வளர்ச்சியால் முன்னணியில் இருந்தது. மேலும், விவசாயத்துறையின் மீட்சியின் தாக்கங்களும் இதற்கு ஆதரவாக இருந்தன.

உணவுப்பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளும்போது, ஊட்டச்சத்தை மனிதநுகர்வுக்கான முக்கியமான கூறாகக் கருதுவது மிகவும் அவசியம். இலங்கையில் உள்நாட்டு உணவானது, உள்நாட்டு உற்பத்தி மற்றும் உணவுப்பொருட்கள், கால்நடைப்பொருட்கள் மற்றும் மீன் இறக்குமதியைப் பொறுத்தது. ஊட்டக்குறைவு இன்னும் ஒரு பெரிய கவலையாக உள்ளது, மேலும் இது நாட்டின் சமூக - பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு தடையாகக் கருதப்படுகிறது.

விவசாயத்துறை அரசாங்கத்திடமிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் கணிசமான மானியங்கள் மற்றும் உதவிகளைப் பெறுகிறது. இது உணவுப்பாதுகாப்பிற்கு முக்கியமானது. இத்துறையைச் சார்ந்துவாழும் பெரும் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. எனினும், இத்தகைய மானியங்கள் மற்றும் விலை ஆதரவுத்திட்டங்கள் வள ஒதுக்கீட்டின் திறனைக் குறைக்கின்றன; குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட விவசாயமுறைகளை ஊக்குவிக்கின்றன.

இலங்கையில் சுமார் 20 லட்சம் பேர் (தொழிலாளர் சக்தியில் கால் பகுதி) விவசாயத்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஆனால், மத்திய வங்கியின் 2018 ஆண்டு அறிக்கையின்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) இத்துறையின் பங்களிப்பு வெறும் 78% ஆக மட்டுமே உள்ளது. துணைத்துறைகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) பங்களிப்பு அட்டவணை 1.2 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

விவசாய நிலங்களின் வேகமான பிரிவினைச் (பிளவுபடுதல்) சூழலில், பாரம்பரிய மற்றும் உழைப்புச்சார்ந்த விவசாயமுறைகள் தொடர்ந்து பயன்பாட்டில் இருப்பதால், விவசாயத்துறையின் உற்பத்தித்திறன் குறைந்துள்ளது. இதன்விளைவாக, விவசாயச் சமூகத்தின் வருமானமும் தாழ்நிலையில் உள்ளது. இத்துறைக்கு வழங்கப்படும் அதிகப்படியான பாதுகாப்பு (உதவிகள்/ மானியங்கள்), தொழிலாளர்களை மேலும் உற்பத்தித்திறன் மிக்க துறைகளான உற்பத்தித்துறை (உலோகம், துணி, எந்திரவியல் போன்றவை) மற்றும் சுற்றுலா - விருந்தோம்பல் துறை போன்றவற்றிற்கு மாறுவதைத் தடுக்கிறது. இந்தத் துறைகளில் தொடர்ச்சியான தொழிலாளர் பற்றாக்குறை நிலவுகிறது.

இலங்கை ஒரு திறன் - ஆதாரப் பொருளாதார நாடாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ள நிலையில், விவசாயத்துறையின் தற்போதைய சிக்கல்களைத் தீர்க்க சரியான நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். விவசாய அல்லது விவசாயப் பிரிவுகள், திறன் மேம்பாடு, இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்முனைவோர் கலாசாரத்தை ஊக்குவிப்பதன்மூலம் லாபம் தரும்

| Economic Activity | As Percentage | |
|---|---|---|
| | 2017 | 2018 |
| **Agriculture, Forestry and Fishing** | **6.9** | **7** |
| Growing of cereals (except rice) | 0.1 | 0.1 |
| Growing of rice | 0.5 | 0.7 |
| Growing of vegetables | 0.6 | 0.6 |
| Growing of sugar cane, tobacco and other non-perennial crops | 0 | 0 |
| Growing of fruits | 0.5 | 0.6 |
| Growing of oleaginous fruits (coconut, king coconut, oil palm) | 0.6 | 0.6 |
| Growing of tea (green leaves) | 0.7 | 0.7 |
| Growing of other beverage crops (coffee, cocoa, etc.) | 0 | 0 |
| Growing of spices, aromatic, drug and pharmaceutical crops | 0.7 | 0.7 |
| Growing of rubber | 0.3 | 0.2 |
| Growing of other perennial crops | 0.2 | 0.2 |
| Animal production | 0.6 | 0.6 |
| Plant propagation and support activities to agriculture | 0.1 | 0.1 |
| Forestry and logging | 0.7 | 0.6 |
| Fishing | 1.3 | 1.2 |
| **Industries** | **26.7** | **26.1** |
| Mining and quarrying | 2.5 | 2.3 |
| Manufacturing | 15.5 | 15.5 |
| Electricity, gas, steam and air conditioning supply | 1 | 1 |
| Water collection, treatment and supply | 0.1 | 0.1 |
| Sewerage, waste treatment and disposal activities | 0.3 | 0.3 |
| Construction | 7.2 | 6.8 |
| **Services** | **56.85** | **7.7** |
| Wholesale and retail trade, transportation and storage, and accommodation and food service activities | 23.1 | 23.3 |
| Information and communication | 0.6 | 0.7 |
| Financial, insurance and real estate activities including ownership of dwellings | 13.3 | 14 |
| Professional services and other personal service activities | 11.5 | 11.6 |
| Public administration, defense, education, human health and social work activities | 8.3 | 8.1 |
| **Equals Gross Value Added (GVA) at Basic Price** | **90.4** | **90.8** |
| Taxes less subsidies on products | 9.6 | 9.2 |
| **Equals Gross Domestic Product (GDP) at Market Price** | **100** | **100** |

**அட்டவணை 1.2 : துணைத் துறைகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) பங்களிப்பு**
Image Source - Cental Bank, Annual report

வணிக அலகுகளாக மாற்றப்பட வேண்டும். இது இத்துறையில் அதிக வருமானத்தை ஈட்ட உதவும். அதேபோல், தனிப்பட்ட லாப நோக்கு வணிக அலகுகளை ஒன்றிணைத்து, பெரிய விவசாய அமைப்புகளை உருவாக்குவதில் உள்ள தடைகளை நீக்க வேண்டும். உற்பத்தித்திறன் அதிகரிப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டைத் தீவிரப்படுத்துதல், அதிக லாபம் தரும் விவசாயப் பொருட்களைப் பயிரிடுவதன்மூலம் பல்வகைப்படுத்தல் போன்ற முயற்சிகள்மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்க ஊக்குவிக்க வேண்டும்.

விவசாயத்தில் நன்மைகளைப் பெறுவதெனில், ஏற்படும் காலநிலை மாற்றச் சவால்களைச் சமாளிக்க அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இத்தகைய முயற்சிகள் விவசாயத்துறையை சுயாதீனமான, உற்பத்தித்திறன் மிக்க மற்றும் போட்டித்தன்மை கொண்டதாக மாற்றி, நாட்டின் வளர்ச்சியில் நேர்மறையான பங்களிப்பை வழங்கும்.

### இலங்கையின் நீர் வளங்கள்

இலங்கை 103 ஆறுகளால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது (படம் 1.1). இவை யாழ்ப்பாணத் தீபகற்பத்தைத் தவிர மற்றப் பகுதிகளில் சமமாகப் பரவியுள்ளன. யாழ்ப்பாணத்தில் ஆறுகள் எதுவும் இல்லை.

இலங்கை, வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவமழைகளில் அதிக மழைப்பொழிவைப் பெறுகிறது. இதன் விளைவான சராசரி ஆண்டு மழைப்பொழிவு 1,760 மி.மீ ஆகும். எனினும், மழைப்பொழிவு சமமாகப் பரவாததால், வறண்ட மண்டலத்தில் உள்ள பெரும்பாலான நிலங்கள் நீர்ப்பற்றாக்குறையால் பாதிக்கப்படுகின்றன. மேலும், வறண்ட மண்டலத்தின் மழைப்பொழிவு பெரும்பாலும் வடகிழக்கு பருவமழைக்காலத்தில் (அக்டோபர், நவம்பர், டிசம்பர்) குவிகிறது. மற்ற 9 மாதங்களில் மழை மிகக் குறைவாகவே பெய்கிறது.

### நீர்ப்பாசனம் மற்றும் பண்டைய நீர்த்தேக்கங்கள்

அரிசி முக்கிய உணவாக உள்ள இந்த விவசாய நாட்டில், நீர்ப்பாசனத்துறை அதிகளவு நீரைப் பயன்படுத்துகிறது. நீர்ப்பற்றாக்குறை இருந்தபோதிலும், வறண்ட மண்டலத்தின் பிறநிலைகள் (சமதள நிலப்பரப்பு, வளமான மண் மற்றும் சூரிய ஒளி) நெல் சாகுபடிக்கு ஏற்றவையாக உள்ளன.

நீர்ப்பற்றாக்குறையைச் சமாளிக்க, பண்டைய இராச்சியங்கள் நீர்த்தேக்கங்கள் மற்றும் திசைதிருப்பும் கட்டமைப்புகளை நாடு முழுவதும் கட்டின. இதன் விளைவாக, இலங்கை பழங்கால நீர்த்தேக்கங்களின் மிகவும் மேம்பட்ட மற்றும் செயற்படும் அமைப்பைப் பெற்றது. அவற்றில் பல இன்றும் பயன்பாட்டில் உள்ளன.

### ஆறுகள் மற்றும் நீர் வளங்கள்

இந்த 103 ஆறுகளின் வடிநிலங்கள் சுமார் 59,424 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளன. மீதமுள்ள பகுதி, யாழ்ப்பாணத் தீபகற்பத்தையும் அதனுடன் மண்டைதீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய மேற்குப் பகுதியில் உள்ள தீவுகளையும் உள்ளடக்கிய 1,018 சதுர கிலோமீட்டர் பரப்புடன், மேலும் 5,084 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ள சிறிய கடலோர வடிநிலங்களையும் உள்ளடக்கியது. இவ்வாறு, நாட்டின் மொத்தப் பரப்பளவு சுமார் 65,526 சதுர கிலோமீட்டராக உள்ளது. இந்த 103 ஆறுகளில், 20 ஆறுகள் ஈரமண்டல (Wet Zone) ஆறுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின்

வடிநிலங்கள் 12,676 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளன. இது நாட்டின் நிலப்பரப்பில் 20% மட்டுமே. ஆனாலும், இவை ஆண்டுக்கு 25,830 மில்லியன் கன மீட்டர் (MCM) நீரை வழங்குகின்றன. இது நாட்டின் மொத்த நீர் வளத்தில் பாதி ஆகும். மற்ற 83 வறண்ட மண்டல ஆறுகள் தீவின் 80% நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ளன. இவற்றின் சராசரி ஆண்டு நீர்வளம் 25,495 MCM ஆகும். இது ஈரமண்டல ஆறுகளின் நீர்வளத்திற்கு ஏறத்தாழச் சமம்.

### முக்கிய ஆறுகள் மற்றும் அவற்றின் பண்புகள்

36 ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதி 371 சதுர கி.மீ இற்கு மேல் உள்ளது. இவை முக்கிய ஆறுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் களனி கங்கை, களுகங்கை, பெந்தரகங்கை, கின்கங்கை, நில்வளகங்கை, மகா ஓயா மற்றும் அட்டனகலு ஓயா ஆகியவை ஈர மண்டல ஆறுகளாகும். பொதுவாக இந்த ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை அதிக மழைப்பொழிவைப் பெறுகின்றன. மேலும் இவை ஆண்டுமுழுவதும் நீர் வற்றாத ஆறுகளாக உள்ளன. இந்த நீர்ப்பிடிப்புப்பகுதிகள் அதிக மக்கள்தொகை கொண்டவை மற்றும் நன்கு வளர்ச்சியடைந்தவை. இதேபோல், 26 முக்கிய நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வறண்ட மண்டலப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஈர மண்டலத்தைப் போலல்லாமல், இந்தப் பகுதிகள் நாட்டின் பெரிய மற்றும் விரிவான பகுதிகளை உள்ளடக்கியவை. இங்கு நீர்ப்பாசனம் இல்லாமல் விவசாயம் செய்ய முடியாது. இப்பகுதிகள் அக்டோபர் முதல் டிசம்பர் வரையான வடகிழக்கு பருவமழையில் குறிப்பிடத்தக்க மழைப்பொழிவைப் பெறுகின்றன.

இந்தப் பகுதிகளின் நீர்ப்பாசன வளர்ச்சியே விவசாய உற்பத்தி மற்றும் நாட்டின் வளர்ச்சியை நிர்ணயிக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பண்டைய இராச்சியங்கள் இந்த ஆறுகளின் பகுதிகளில் மிகவும் மேம்பட்ட நீர்ப்பாசன அமைப்புகளை உருவாக்கியுள்ளன. இது பொறியியல் மற்றும் நீரியல் துறையின் ஓர் அருமையான சாதனையாகக் கருதப்படுகிறது.

### இரு பருவமழை ஆறுகள்

மகாவலி மற்றும் வளவ ஆறுகள் இரு பருவமழைகளிலும் (வடகிழக்கு மற்றும் தென்மேற்கு) குறிப்பிடத்தக்க மழைப்பொழிவைப் பெறுகின்றன. எனவே இவை சில நேரங்களில் இரு பருவமழை ஆறுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. மகாவலி ஆற்றின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், இது மத்திய மலைப்பகுதிகளிலிருந்து வரும் நீரைப் பெறுகிறது. இந்த மலைப்பகுதிகள் இரு பருவமழைகளால் பயனடைகின்றன. இந்த நீர், கிழக்குச் சமவெளிகளுக்குப் பாய்கிறது; விவசாயத்திற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது.

வளவ ஆறும் ஒரு முக்கியமான நீர்ப்பிடிப்புப் பகுதியாகும். இது மத்திய மலைகளிலிருந்து தெற்கு கடற்கரைப் பகுதிகளுக்கு நீரைக் கொண்டு செல்கிறது. இந்தப் பகுதியும் நீர்ப்பாசன விவசாயத்திற்கு ஏற்ற திறன் கொண்டது. தெதுரு ஓயா, இரு பருவமழை ஆறாகக் கருதப்படாவிட்டாலும், இதன் உற்பத்திப்பகுதி நாட்டின் மத்தியபகுதியில் அமைந்துள்ளது. இது இரு பருவமழைகளிலும் அதிக மழைப்பொழிவைப் பெறுகிறது மற்றும் வறண்ட மண்டலத்திற்கு நீரை வழங்குகிறது.

### நீரியல் முக்கியத்துவம் வாய்ந்த ஆறுகள்

மகாவலி ஆற்றில் கட்டப்பட்ட மிகப்பெரிய நீர்த்தேக்கங்கள் அல்லது மகாவலியிலிருந்து கூடுதல் நீரைப் பெறும் நீர்த்தேக்கங்கள் அட்டவணை 1.3 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

| Reservoir | Capacity in MCM | Height of Dam in meter |
|---|---|---|
| Kotmala | 175 | 87 |
| Randinagala | 860 | 94 |
| Randembe | 21 | 42 |
| Victoria | 722 | 122 |
| Maduru Oya | 400 | 41 |
| Moragaganda | 394 | 71 |

அட்டவணை 1.3 மகாவலியிலிருந்து கூடுதல் நீரைப் பெறும் நீர்த்தேக்கங்கள்

Image Source - Cental Bank, Annual report

நீரியல் அடிப்படையில் மிக முக்கியமான 21 முதன்மை ஆறுகள் அட்டவணை 1.4 இல் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை நீர்ப்பிடிப்புப் பரப்பளவின் அடிப்படையில் (800 சதுர கி.மீ இற்கு மேல்) இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. காலநிலைக் காரணங்களால், இந்த ஆறுகளின் ஆண்டு நீர்வளம் இந்த வரிசையைப் பின்பற்றுவதில்லை.

### இலங்கையின் காலநிலை மண்டலங்கள்

இலங்கை அதன் சராசரி ஆண்டு மழைப்பொழிவின் அடிப்படையில் ஈர, இடைநிலை மற்றும் வறண்ட என மூன்று காலநிலை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது (படம் 1.2).

| Rank Based on Basin Area | Name of the River (River basin No.) | Catchment Area sq.km | Average Annual Discharge MCM | Type | Specific Features |
|---|---|---|---|---|---|
| 1 | Mahawali Ganga (60) | 10,256.00 | 5,314.00 | Bi-monsoonal | Longest River |
| 2 | Aruvi Aru (92) | 3,291.00 | 1,239.00 | Dry -Zone | Oldest Civilization |
| 3 | Kalu Ganga (3) | 2,839.00 | 7,767.00 | Wet-Zone | Highest Yield |
| 4 | Deduru Oya (99) | 2,622.00 | 1,508.00 | Bi-monsoonal | Most recent reservoir |
| 5 | Kala Oya (93) | 2,526.00 | 1,060.00 | Dry -Zone | Ancient Civilization |
| 6 | Walawe Ganga (18) | 2,424.00 | 2,201.00 | Bi-monsoonal | One of the Larger reservoir |
| 7 | Kelani Ganga (1) | 2,340.00 | 7,166.00 | Wet-Zone | Second highest discharge yield |
| 8 | Gal Oya (44) | 1,911.00 | 1,750.00 | Dry -Zone | |
| 9 | Mee Oya (68) | 1,555.00 | 149.00 | Dry -Zone | Semi-Arid basin |
| 10 | Yan Oya (67) | 1,518.00 | 785.00 | Dry -Zone | One of the Larger Reservoir |
| 11 | Maha Oya (102) | 1,470.00 | 1,937.00 | Wet-Zone | Worst eroded river |
| 12 | Maduru Oya (54) | 1,439.00 | 1,398.00 | Dry -Zone | Augmented by Mahawali |
| 13 | Mandani Aru (52) | 1,373.00 | 752.00 | Dry -Zone | Ongoing project |
| 14 | Manic Ganga (26) | 1,301.00 | 647.00 | Dry -Zone | Augmented Kirindi Oya |
| 15 | Kumbukkan Oya (31) | 1,227.00 | 723.00 | Dry -Zone | Proposed development |
| 16 | Kirindi Oya (22) | 1,156.00 | 663.00 | Dry -Zone | One of the Larger Reservoir |
| 17 | Nilwala Ganga (12) | 1,043.00 | 1,493.00 | Wet-Zone | Flood Protection Scheme |
| 18 | Maa Oya (69) | 1,042.00 | 474.00 | Dry -Zone | |
| 19 | ModeragamaAru (92) | 1,001.00 | 311.00 | Dry -Zone | |
| 20 | Ginganga (9) | 915.00 | 1,913.00 | Wet-Zone | Flood Protection Scheme |
| 21 | Attanagalu Oya (103) | 811.00 | 763.00 | Wet-Zone | Frequently flooded |

அட்டவணை 1.4 : நீரியல் அடிப்படையில் மிக முக்கியமான 21 முதன்மை ஆறுகள்
Image Source - Cental Bank, Annual report

### ஈர மண்டலம்:

ஆண்டுச்சராசரி 2,500 மி.மீ இற்கு மேல் மழைப்பொழிவைப் பெறும் பகுதிகள். நாட்டின் தென்மேற்குப் பகுதிகளை உள்ளடக்கியது. தென்மேற்குப் பருவமழையின் போது (ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில்) மிக அதிக மழைப்பொழிவைப் பெறுகிறது.




படம் 1.2 : இலங்கையின் காலநிலை வலயங்கள்



படம் 1.3 : மழைப்பொழிவின் இடஞ்சார்ந்த பரவல்

### வறண்ட மண்டலம்:

ஆண்டுச்சராசரி 1,750 மி.மீ இற்கும் குறைவான மழைப்பொழிவு உள்ள பகுதிகள். இவை முக்கியமாக வடகிழக்கு பருவமழைக்காலத்தில் மழையைப் பெறுகின்றன.

### இடைநிலை மண்டலம்:

ஆண்டுச்சராசரி 1,750 முதல் 2,500 மி.மீ வரை மழைப்பொழிவு உள்ள பகுதிகள். ஈர மற்றும் வறண்ட மண்டலங்களுக்கு இடையே அமைந்துள்ளன.

நீண்டகால மழைப்பொழிவுப் பதிவுகளின்படி, மன்னார் மட்டுமே 1,000 மி.மீ இற்கும் குறைவான மழைப்பொழிவைப் பெறும் பகுதியாக உள்ளது (படம் 1.3). இந்த மண்டலப் பிரிவுகள் இலங்கையின் விவசாயம், நீர்வள மேலாண்மை மற்றும் சுற்றாடல் திட்டமிடலுக்கு முக்கியமான தகவல்களை வழங்குகின்றன.

## இலங்கையின் மழைப்பொழிவு பரவல் மற்றும் நீர்வள மேலாண்மை

### நீர்வளத்தின் இருப்பு மற்றும் சவால்கள்:

ஆண்டுச்சராசரி மழைப்பொழிவுப் பதிவுகளின்படி, இலங்கை ஒரு நீர்வளம் மிக்க நாடாகக் கருதப்படுகிறது. எனினும், அதிக ஆவியாதல் விகிதம் மற்றும் மழைப்பொழிவின் பருவகால ஏற்றத்தாழ்வுகள் காரணமாக, நாட்டின் வறண்ட மண்டலப் பகுதிகள் நீர்ப்பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன. இந்த வறண்ட பகுதிகளில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பண்டைய அரசுகள் கட்டிய நீர்த்தேக்கங்கள், அணைகள், ஏரிகள் மற்றும் கால்வாய் வலையமைப்புகள் இன்றும் செயற்பாட்டில் உள்ளன. இவை அந்தக்காலத்தின் சிவில் மற்றும் நீரியல் பொறியியல் துறையின் முன்னேற்றத்திற்குச் சான்றாக உள்ளன.

### இலங்கையின் மழைப்பொழிவுப் பரவல்:

#### சராசரி மழைப்பொழிவு:

1. நாட்டின் சராசரி ஆண்டு மழைப்பொழிவு: 1,750 மி.மீ
2. கடலோரச் சமவெளிகளில்: 900 மி.மீ (குறைந்தது)
3. மத்திய மலைப்பகுதிகளின் மேற்குச் சரிவுகளில்: 5,000 மி.மீ (அதிகம்)

#### பருவகால மழைப்பொழிவு:

1. அக்டோபர், நவம்பர், டிசம்பர்: முழு நாடும் கனமான மழை
2. ஈர மண்டலம்: ஏப்ரல், மே, ஜூன் மாதங்களிலும் குறிப்பிடத்தக்க மழை
3. வறண்ட மண்டலத்தின் பருவகால ஏற்றத்தாழ்வுகள் (படம் 1.4): பிப்ரவரி முதல் செப்டம்பர் வரை (8 மாதங்கள்) கடுமையான நீர்ப்பற்றாக்குறை; அக்டோபர் - டிசம்பர் மாதங்களில் மட்டுமே போதுமான மழை.

மழைப்பொழிவின் இடம் மற்றும் காலம் சார்ந்த ஏற்றத்தாழ்வுகள் நீர் மேலாண்மைக்கான திட்டமிடலை அவசியமாக்குகின்றன. வறண்ட மண்டலத்தின் 8 மாத நீர்ப்பற்றாக்குறை, நீர்த்தேக்கமுறைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இந்தத் தகவல்கள் இலங்கையின் நீர்வள மேலாண்மை மற்றும் விவசாயத் திட்டமிடலுக்கு அடிப்படையானவையாக உள்ளன.

படம் 1.5 ஈர மண்டலத்தின் மழைப்பொழிவின் மாறுபாட்டைக் காட்டுகிறது. இது ஈர மண்டலத்தின் மழைப்பொழிவு, ஆண்டு முழுவதும் சீராகப் பரவியுள்ளதை வெளிப்படுத்துகிறது. இதன் விளைவாக, இப்பகுதியில் நெல் உட்பட எந்தவொரு பயிரையும் கூடுதல் நீர்ப்பாசனம் இல்லாமல் வளர்க்க முடியும்.

### இலங்கையின் நீர்த்துறைக் கொள்கைகள்

இலங்கை அரசாங்கம் 1990களின் மத்தியில் ஒரு சீரான மற்றும் ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மைக் (IWRM) கொள்கையை உருவாக்க பல நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இந்தக் கொள்கையின் நோக்கம், "நீர், நிலம் மற்றும் தொடர்புடைய வளங்களை ஒருங்கிணைத்து மேலாண்மை செய்வதன்மூலம், அத்தியாவசியச் சுற்றுச்சூழல் அமைப்புகளின் நிலைத்தன்மையைப் பாதிக்காமல், சமமான முறையில் பொருளாதார மற்றும் சமூக நலனை அதிகரிப்பது" என்பது ஆகும். இருப்பினும், இந்த முயற்சி 2005 இல் கைவிடப்பட்டது.

### நீர்க்கொள்கை உருவாக்கத்தின் பின்னணி

1992 இல், ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) நிதியுதவியுடன், சீரான நீர்வள மேலாண்மைத் (CWRM) திட்டம் தொடங்கப்பட்டது.

### நீர்க்கொள்கை உருவாக்கத்தின் நோக்கம்

1. நீர்த்துறையில் நிறுவனத் திறனை மதிப்பிடுதல்.
2. நீர்வளங்களை நிர்வகிக்க ஓர் ஒருங்கிணைந்த கொள்கை மற்றும் சட்டத்தை உருவாக்குதல்.
3. நீர் தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைக்க ஒரு மேலாண்மை அமைப்பை (Apex Body) நிறுவுதல்.

2001 இல், நீர்வள மேலாண்மைத்திட்டம் தொடங்கப்பட்டு, அடிப்படை உட்கட்டமைப்புகள் மற்றும் மேலாண்மை அமைப்பின் திறனை வலுப்படுத்த நிதியளிக்கப்பட்டது. இருப்பினும், இந்த முயற்சியும் கைவிடப்பட்டது.

### தேசிய நீர்வளக் கொள்கை முயற்சிகள்

1. 1996 முதல், பல தேசிய நீர்வளக் கொள்கைகள் உருவாக்கப்பட்டன. ஆனால், அரசியல் விருப்பமின்மை காரணமாக எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவை வெறும் கருத்துருகள் அல்லது முன்மொழிவுகளாகவே இருக்கின்றன.



படம் 1.4 வறண்ட மண்டலத்தின் பருவகால ஏற்றத்தாழ்வுகள்

2. 2000 இல், நீர்வளக் குழுமச் சட்டம் (1964, சட்டம் எண். 29) பிரிவு 12 (1) இன் கீழ், நிலத்தடி நீர் மாசுபாடு மற்றும் கடலோர உப்புநீர் ஊடுருவல் பிரச்சினைகளைக் கையாள, பிரிவு 16 (1) மற்றும் 16 (2) இன் கீழ் 2017 மார்ச் 16 இல் அரசாங்கம் உத்தரவுகளைப் (Gazette No. 2010/23) பிறப்பித்தது.
3. 2004 இல், விவசாய, கால்நடை, நில மற்றும் நீர்ப்பாசன அமைச்சகம் ஒரு



படம் 1.5 ஈர மண்டலத்தின் காலப்போக்கில் மழைப்பொழிவின் மாறுபாடு

நீர்க்கொள்கையை உருவாக்கியது. இது 1999 இல் நீர்வளக் குழுமச் சட்டத்தில் திருத்தங்களை ரத்துச் செய்யக் கோரியது.

### நீர்க்கொள்கை உருவாக்கத்தில் சவால்கள்

1. மேலாண்மை அமைப்பு (Apex Body) மீது ஏற்பட்ட எதிர்ப்பு - நீர்த்துறையில் ஏற்கனவே இருந்த நிறுவனங்கள் இதை விரும்பவில்லை.
2. நீர் உரிமைகள் மற்றும் கட்டணம் - நீர் ஒரு பொதுச்சொத்து (Common Good) என்ற பாரம்பரியக் கருத்துக்கு முரணாக இருந்தது.

### சமீபத்திய முன்மொழிவுகள்

2019 மார்ச் மாதம், 'நீர்வள மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான தேசிய கொள்கை, உத்திகள் மற்றும் நிறுவனக்கட்டமைப்பு' எனும் வரைவுக் கொள்கை பொதுக் கருத்துக்காக வெளியிடப்பட்டது.

**இந்தக் கொள்கையின் நோக்கம்:**

'நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்தும், சமூக - பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற சுற்றுச்சூழலை உருவாக்கும் ஒரு சமூகம்.'

### உலகளாவிய நீர் மேலாண்மைக் கோட்பாடுகள்

1. 1992 இல் டப்ளின் கோட்பாடுகள் (Dublin Principles) உருவாக்கப்பட்டன. இவை நீர்வளங்களை ஒருங்கிணைந்தமுறையில் நிர்வகிக்க வழிகாட்டுகின்றன.
2. நான்காவது கோட்பாடு: "நீர் அனைத்துப் போட்டிப் பயன்பாடுகளிலும் ஒரு பொருளாதார மதிப்பைக் கொண்டுள்ளது. அதை ஒரு பொருளாதாரப் பொருளாகக் கருத வேண்டும்."
3. ஐ.நா. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் குழு (2002) "பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரம் என்பன அடிப்படை மனித உரிமை" என அங்கீகரித்தது.

### நீரின் பல பரிமாணங்கள்

நீர் ஆளுமையின் அடிப்படைப் பரிமாணங்கள் படம் 1.6 இல் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், ஹேக்கில் நடந்த உலக நீர் மன்றத்தின் அமைச்சர்மன்ற மாநாடு, "பாதுகாப்பான, போதுமான நீர் மற்றும் சுகாதார வசதிகள் என்பன அடிப்படை மனிதத் தேவைகள்" என்பதை வலியுறுத்தியது. ஐ.நா. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் குழு 2002 இல் "நீருக்கான மனித உரிமை" என்பதை அங்கீகரித்தது.

**சமூகப் பரிமாணம்:**

நீர்வளங்கள் மற்றும் சேவைகளுக்கான சமமான அணுகல் மற்றும் பயன்பாடு இந்தப் பரிமாணத்தின் முக்கிய அம்சமாகும். இது பல்வேறு சமூக மற்றும் பொருளாதாரக் குழுக்களுக்கிடையே நீர்வளங்களின் நியாயமான பகிர்மானம் மற்றும் அது சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் போன்ற விடயங்களை உள்ளடக்குகிறது.

**பொருளாதாரப் பரிமாணம்:**

இது நீர் ஒதுக்கீடு மற்றும் பயன்பாட்டில் திறமை (சிறந்த முறையில் பயன்படுத்துதல்) மற்றும் பொருளாதார ரீதியான நிர்வாகம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துகிறது.

**அரசியல் பரிமாணம்:**

இப்பரிமாணம் பல்வேறு முடிவெடுக்கும் செயல்முறைகளில் பங்குதாரர்களுக்கு சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது. இதில் நீர் மேலாண்மை மற்றும் கொள்கை வடிவமைப்பில் அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பும் உறுதி செய்யப்படுகிறது.

**சுற்றுச்சூழல் பரிமாணம்:**

இப்பரிமாணம் நீரின் நிலைத்தன்மையான பயன்பாடு மற்றும் தொடர்புடைய சுற்றுச்சூழல் அமைப்புச் சேவைகளைப் பேணுவதை வலியுறுத்துகிறது. இயற்கை வளங்களின் சமநிலையைப் பாதுகாப்பதன் மூலம் எதிர்காலத் தலைமுறைகளுக்கான நீர் வளத்தை உறுதி செய்கிறது. நீர் ஆளுமையின் அடிப்படைப் பரிமாணங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நீரின் பொருளாதார மதிப்புடன் கூடுதலாக அதற்கு சமூக மற்றும் கலாசார மதிப்பும் உள்ளது என்பது இப்போது பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நீர் மேலாண்மை மற்றும் ஆளுமைக் கொள்கைகள் இயங்கும்தன்மை கொண்டவை என்பதும், காலத்திற்கேற்ப மாறுபடுபவை என்பதும் தெளிவாகிறது. 1990களில் நீர்க்கொள்கையை வகுப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில கொள்கைகள், பயன்பாட்டிற்குமுன் போதுமான சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. தேவை மேலாண்மை, நீர் மாசுபாடு, அரசியல் - சமூக - நிதி ரீதியான சக்தி வாய்ந்த தரப்புகள் நீரை அதிகமாகப்

பயன்படுத்துதல் போன்ற பிரச்சினைகளைச் சமாளிக்கும் கொள்கைகளின் பற்றாக்குறையால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்புவதற்கு எந்தவொரு மதிப்புமிக்க முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

### தற்போதைய சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகள்

இந்தநிலைமை சமீபகாலங்களில் சமூகப் பிரச்சினைகள் மற்றும் அமைதிக் குலைவுகளுக்கு வழிவகுத்துள்ளது. மேலும், சில துணைத்துறைக் கொள்கைகள் மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீரின் இணைப்புகள் மற்றும் கிராமப்புறமக்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களுக்குமான நீரின் முக்கியத்துவம் ஆகியவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இந்த விவாதம், வடமாகாணத்தில் உள்ள நீர்சார்ந்த சிக்கல்களை திறம்படத் தீர்க்கக்கூடிய கொள்கைக் குறைபாடுகளின் தாக்கத்தை மேலும் விளக்கும்.

### இலங்கையின் சூழல் கொள்கைகள்




படம் 1.6 : நீர் ஆளுமையின் அடிப்படை பரிமாணங்கள்

1. தேசிய சூழல் சட்டம் (1980) இயற்றப்பட்டது.
2. தேசிய சூழல் கொள்கை (2003) வகுக்கப்பட்டது.

இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி “பல வளர்ச்சித் திட்டங்களில் சூழல் கவலைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், வளர்ச்சி நடவடிக்கைகளில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவையான அளவு இணைக்கப்படவில்லை.”

### நீர்வள மேலாண்மை மற்றும் வளர்ச்சியைப் பாதிக்கும் முக்கிய சூழல் கொள்கைகள்:

1. 1980களில் விவசாய அமைச்சகம் உருவாக்கிய வனம் மற்றும் நிலங்கள் குறித்த தேசிய கொள்கைக் கட்டமைப்பு.
2. 1995 இல் தேசிய வனக் கொள்கை.
3. 1996 இல் தேசிய இயற்பியல் நிலப் பயன்பாட்டுக் கொள்கை.
4. 1990 இல் வனவிலங்குப் பாதுகாப்புக் கொள்கை.
5. 2004 இல் தேசிய நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மைக் கொள்கை.

### நீர் ஆளுமை தொடர்பான செயற்பாடுகள்

1. நீர்க் கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நிறுவனங்களை உருவாக்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
2. நீர் தொடர்பான கொள்கைகள், சட்டமியற்றல் மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளை வடிவமைத்தல்.
3. நீர்வளங்கள் மற்றும் சேவைகளை ஒழுங்குபடுத்துதல்.
4. நீர் வளங்களின் பயன்பாடு மற்றும் சேவைகளுக்கான விதிமுறைகளை வகுத்தல்.
5. நீர்வளத் திட்டமிடல் மற்றும் நீர் தொடர்பான செயற்பாடுகளுக்கான திறனை வளர்த்தல்.
6. திட்டமிடல் மற்றும் செயற்பாடுகளுக்கான திறன் மேம்பாடு.
7. நீர்வளங்களை ஒதுக்கீடு செய்தல்.
8. பல்வேறு தேவைகளுக்கான நீர் விநியோக முறையை நிர்ணயித்தல்.
9. நீர்வளங்களை மேம்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் சேவைகளை வழங்குதல்.
10. நீர் வள மேம்பாடு மற்றும் சேவை வழங்கல் முறைகளை உருவாக்குதல்.

நீர் மற்றும் சூழல் கொள்கைகளின் ஒருங்கிணைப்பு இல்லாமை, நீர் மேலாண்மையில் பெரும் இடர்பாடுகளை உருவாக்கியுள்ளது. கிராமப்புற மக்களின் நீர்த் தேவைகள் கொள்கை உருவாக்கத்தில் முழுமையாகக் கருத்தில் கொள்ளப்படவில்லை.

வடமாகாணத்தின் நீர்ப் பிரச்சினைகள், கொள்கைக் குறைபாடுகளால் மேலும் சிக்கலாகியுள்ளன. இந்தக் கொள்கைகள் இலங்கையின் நீர் வளங்களை நிலைபேறுடன் பயன்படுத்தவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் உதவும் வகையில் மேம்படுத்தப்பட வேண்டும்.

### 1.2 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள், யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களை உள்ளடக்கியவை. இந்த மாகாணங்களின் மொத்தப் பரப்பளவு 18,881 சதுர கி.மீ ஆகும். 'இலங்கை பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிவரங்கள் 2018' அறிக்கையின்படி, 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இப்பகுதிகளின் மக்கள்தொகை 27.89 இலட்சமாக இருந்தது (அட்டவணை 1.5 இல் காணலாம்).

| Province | Mid-Year Population (2017) | Land Area (sq.km) | Density of Population (Person/sq.km) |
|---|---|---|---|
| Western | 6,081,000 | 3,593 | 1,692.46 |
| Central | 2,722,000 | 5,575 | 488.25 |
| Southern | 2,611,000 | 5,383 | 485.05 |
| Northern | 1,119,000 | 8,290 | 134.98 |
| Eastern | 1,677,000 | 9,361 | 179.15 |
| North Western | 2,508,000 | 7,506 | 334.13 |
| North Central | 1,349,000 | 9,741 | 138.49 |
| Uva | 1,349,000 | 8,335 | 161.85 |
| Sabaragamuwa | 2,028,000 | 4,921 | 412.11 |
| Total | 21,444,000 | 62,705 | 341.98 |

படம் 1.5 : 2017 இன் நடுப்பகுதியில் மாகாண ரீதியாக கணிக்கப்பட்ட மக்கள் சனத்தொகை

Image Source - Economics and Social Statistics of Srilanka 2018 of Central Bank

கால்நடை வளர்ப்பு, மீன்வளம் மற்றும் விவசாயம் ஆகியன இந்த இரு மாகாணங்களிலும் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகளாக இருந்து வருகின்றன. இந்த இரு மாகாணங்களின் மொத்த வேலைத் தொழிலாளர்களில் (Work force) 30% இற்கும் மேற்பட்டோர் தங்களது வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தைச் சார்ந்தே உள்ளனர்.

### பொருளாதாரம் மற்றும் வேளாண்மை

கால்நடை வளர்ப்பு, மீன்வளம் மற்றும் விவசாயத்துறை ஆகியன, போரிற்குமுன், இரு மாகாணங்களினதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 50% இற்கும் மேலாக பங்களித்து வந்தன. 1980களில், உற்பத்தி அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள், நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியில் சுமார் 20% இற்கும் மேலாகப் பங்களித்தன. நாட்டின் நிலப்பரப்பின் மூன்றிலொன்று இந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ளது. இது வறண்ட பகுதியானாலும், நிலத்தடி மற்றும் மேற்பரப்பிலுள்ள நீர்வள ஆதாரங்கள், பலவகை விவசாய நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துகின்றன. மோதலுக்கு முன்னர், நாட்டில் உற்பத்தியாகும் அரிசியில் சுமார் 33%, உலர்ந்த மிளகாயில் 40%, வெங்காயத்தில் 85%, தானியவகைகளில் 30%; வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து உற்பத்தியாகின. நாட்டின் மொத்த மாடுகளில் 30% இற்கும் மேல் இம்மாகாணங்களிலிருந்து உற்பத்தியாகியது. மீன்வள உற்பத்தியில் இம்மாகாணங்கள் 55% இற்கும் மேல் பங்களித்தன.

1983 ஆம் ஆண்டில் தொடங்கிய மோதல், இந்தத்துறைகளைக் கடுமையாகப் பாதித்தது. அரசும் தனியாரும் வைத்திருந்த சொத்துகள் சேதமடைந்தன; விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தங்கள் இடங்களைவிட்டு வெளியேறினர்; முதலீடுகள் குறைந்தன; ஆதரவுச் சேவைகள் சுருங்கின. இதனால் உற்பத்தித்திறன் குறைதல், இழப்புகள் அதிகரித்தல், சொத்துகளின் பராமரிப்பு இல்லாதநிலை, வேலைவாய்ப்பின்மை, வறுமை மற்றும் சமூக அதிருப்தி போன்ற விளைவுகள் ஏற்பட்டு வந்தன. இதனால் ஏற்பட்ட விவசாய உற்பத்தி இழப்புகள் மற்றும் சொத்துச்சேதங்களின் மொத்த இழப்புகள் பல ஆயிரம் கோடி ரூபாய்கள் என மதிப்பிடப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஆறுகளின் நீர்பாய்வு பிரதேசங்களில் 348 பாசனக் குளங்கள்/ தடாகங்கள் மற்றும் 41 நீரோட்டத்தைத் திருப்பும் கட்டமைப்புகள் (Anicuts) உள்ளன. இந்தக் குளங்கள் மற்றும் நீர்திருப்பும் அமைப்புகள், ஆறுகளிலிருந்து கிடைக்கும் நீரைப் பயனுள்ளதாகப் பயன்படுத்துவதற்காகக் கட்டப்பட்டவை. மேலும், இவை வெள்ளப்பெருக்குகளைக் கட்டுப்படுத்துவதற்கும் உதவுகின்றன. இந்தக் குளங்களில் தேக்கப்பட்ட நீர், மழைக்காலப் பயிர்களுக்கு கூடுதலாக வழங்கப்படுகிறது; மீதமுள்ள நீர், வறட்சிக்காலப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் குளங்களில் உள்ள நீர், குடிநீர் தேவைகளுக்கும் பயன்படுகிறது. எதிர்காலத்தில், இந்நீரை விவசாயம் தவிர்ந்த பிற பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தலாம். மேலும், இந்தக் குளங்களில் நீரைத்

தங்கவைப்பதன்மூலம் நிலத்தடி நீர்மட்டத்தையும் அதிக நிலைப்பில் பராமரிக்க முடியும்.

### 1.2.1. வடக்கு மாகாணம்

2017 நடுப்பகுதியில் மத்திய வங்கியால் தொகுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, வட மாகாணத்தின் மக்கள்தொகை 1,120,000 ஆக இருந்தது. அங்கு சதுர கிலோமீட்டருக்கு சுமார் 135 மனிதர்கள் என்னும் சனத்தொகை அடர்த்தி இருந்தது. இதேநேரத்தில் தேசிய சராசரி சதுர கிலோமீட்டருக்கு 337 மனிதர்களாக இருந்தது. எனவே, இலங்கையில் மக்கள்தொகை குறைவான மாகாணமாக வட மாகாணம் காணப்படுகிறது.

படம் 1.7 இல் காணப்படுவதுபோல், யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நகர மக்கள்தொகை சுமார் 20% ஆக இருக்கிறது. முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் பெரும்பாலும் கிராமப்புங்களாக உள்ளன.



படம் 1.7 : வடக்கு மாகாண மாவட்ட விவரக் குறிப்பு

வட மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சியில் விவசாயத்துறை மிக முக்கியமானதாகும். சுமார் 60% மக்கள் பயிர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். 25% இற்கும் மேற்பட்ட தொழிலாளர் குழு, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விவசாயத்துறையில் நம்பிக்கையுடன் ஈடுபட்டு வாழ்கின்றது. போருக்கு முன்பு இந்தத் துறையின் பங்களிப்பு, நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியில் சுமார் 12% ஆக இருந்தது. இதில் அரிசி 15%, வற்றல்மிளகாய் 30%, சின்ன வெங்காயம் 75% மற்றும் பருப்பு வகைகள் 30% என்ற வீதத்தில் பங்காற்றின. தற்போது, இந்த மாகாணத்தில் விவசாயத்துறை சீரமைக்கப்படாது; ஒழுங்கற்ற, சந்தை சார்ந்ததல்லாது; உள்ளூர் நுகர்விற்கு மட்டுப்பட்டதாகவே உள்ளது. இதனால் விவசாயம் இலாபமற்ற செயலாக மாறியுள்ளது. உட்பிரதேசங்களில் உள்ள கிராமப்புறம், மாகாண உணவுத் தேவைகளுக்கும், வேலை வாய்ப்புகளுக்கும் பிரதான ஆதாரமாக உள்ளது.

இந்த மாகாணத்தில் மொத்தமாக 150,000 விவசாயக் குடும்பங்கள் உள்ளன. இதில் சுமார் 80,000 குடும்பங்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. நெல் பயிரிடக்கூடிய நிலம் 100,000 ஹெக்டேயர் ஆகவும், பிற உணவுப் பயிர்கள் பயிரிடக்கூடிய நிலம் 55,000 ஹெக்டேயர் ஆகவும் உள்ளது. கடந்த சில ஆண்டுகளில், நெல் சராசரியாக 55,000 ஹெக்டேயர் நிலத்திலும், பிற உணவுப் பயிர்கள் 27,000 நிலத்திலுமே பயிரிடப்படுகின்றன.

சந்தை வாய்ப்புக் குறைந்ததாலும், பராமரிப்பு இல்லாமையாலும், உற்பத்தித்திறன் கொண்ட நிலங்கள் கைவிடப்பட்டமையினாலும், விவசாயிகள் இடம்பெயர்ந்தமையினாலும் மிளகாய், பழங்கள், வாழை மற்றும் திராட்சை போன்ற பணப்பயிர்களின் சாகுபடி பெரிதும் குறைந்துள்ளன. வட மாகாணத்தில் நிலத்தின் கிடைப்பும், பகிர்வும் அட்டவணை 1.6 இல் காணப்படுகின்றன. வட மாகாணத்தில் 69 பெரிய/ நடுத்தர அளவிலான குளங்களும், 4,773 சிறிய குளங்களும், 28 கிராமிய அணைக்கட்டுகளும் உள்ளன. இவை மொத்தம் 41,878 ஹெக்டேயர் நிலப்பகுதியை பாசனத்துக்கு உகந்தவையாகச் செய்கின்றன. இருப்பினும், மழைப்பொழிவின் முறை மற்றும் தீவிரம் ஆகியவை தண்ணீர் கிடைக்கும் அளவைத் தீர்மானிக்கின்றன. இதனால் இவையே பயிரிடப்படும் பரப்பளவை நிர்ணயிக்கின்றன.

| District | Paddy Land | Subsidiary Food Crops Land | Homestead Land | Fruit Crop Land |
|---|---|---|---|---|
| Jaffna | 13,134.0 | 13,629.7 | 1,423.9 | 2,214.1 |
| Kilinochchi | 25,381.0 | 11,810.0 | 431.0 | 140.0 |
| Mullaitivu | 18,957.7 | 6,275.2 | | 825.8 |
| Vavuniya | 21,010.0 | 7,754.0 | 15,870.0 | 1,556.9 |
| Mannar | 21,825.0 | 3,052.0 | 1,187.0 | 117.4 |
| | 100,307.7 | 42,520.9 | 18,911.9 | 4,854.2 |

படம் 1.6 : வடமாகாணத்தில் நிலத்தின் கிடைப்பும் பகிர்வும்

Image Source - Annual Report of northern provincial council

போர் காரணமாக, அலுவலகக் கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட பல சொத்துகள் சேதமடைந்துள்ளன. இதன் விளைவாக, விவசாய சமுதாயத்திற்கு வழங்கப்படும் சேவைகளின் செயற்றிறன் குறைந்துள்ளது. மேலாண்மை மற்றும் விவசாய விரிவாக்கப் பணியாளர்களின் பற்றாக்குறை, அவர்களது கண்காணிப்புத் திறனின் (Field inspection) குறைபாடு, அறிவுப்பகிர்வு வசதிகள் இல்லாமை ஆகியன இந்த சூழ்நிலையை மேலும் மோசமாக்கியுள்ளன.

விவசாயச் சமூகத்தின் சமூக அதிகாரமூட்டலும், திறனூட்டலும், விவசாய வளர்ச்சியில் விவசாயிகளை சுயநிறைவுடையவர்களாக உருவாக்குவதும் மிகவும் அவசியமாகின்றன. மாவட்ட வேளாண்மை பயிற்சி மையங்கள், நடைமுறைசார்ந்த மற்றும் தகுந்த பயிற்சிகளை வழங்கும் இடங்களாகவும், அறிவியல் அடிப்படையிலான விவசாய சமூகத்தை உருவாக்கும் பங்களிப்புகளாகவும் உள்ளன.

வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள சேவைப்பணி பயிற்சி நிறுவனங்கள் (DATC), விவசாயத்துறையில் அறிவும், திறனும் மேம்படுத்தப்பட வேண்டிய அலுவலர்களுக்கான பயிற்சி மையங்களாக உள்ளன. இருப்பினும், இவை முழுத்திறனுடன் செயற்படவில்லை. விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட பல தொழில்கள் மாகாணத்தில் இயங்கி வந்தாலும், அவை உற்பத்தி மற்றும் தரத்திலுள்ள ஏற்றமற்றநிலையை எதிர்கொண்டு வருகின்றன.

உலக வங்கி நிதியுதவியில் செயற்பட்ட வடக்கு - கிழக்கு பாசன விவசாய திட்டத்தின் (NEIAP) ஊடாக 2004 ஆம் ஆண்டு கனகராயன் குளம், ஒட்டுசுட்டான் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் மூன்று முழுமையாகச் சீரமைக்கப்பட்ட பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டன. இதில் முதல் இரண்டையும் சேவைப்பணி அலுவலர்கள் பயன்படுத்தி வருகின்றனர். மூன்றாவது மையம் பாசனத்துறையால் அதன் நோக்கத்திற்கு மாறாகப் பயன்படுத்தப்படுகிறது.

போர் முடிந்த உடனேயே உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வடக்கு அவசர மீட்பு திட்டத்தின்கீழ் (ENREP) (இத்திட்டத்தின் திட்டப் பணிப்பாளராகக் கட்டுரையாளரே இருந்தார்) பாசன, நீர்வள, விவசாயத்துறை அதிகாரிகளுக்கான பயிற்சிக்காக 40 அறைகள், விரிவுரை மண்டபம், சொற்பொழிவுக் கூடம், உணவகம், சமையலறை மற்றும் பிறவசதிகளுடன் கூடிய சேவைப்பணி பயிற்சி மையம் ஒன்று கட்டப்பட்டது. இது நீண்டகாலமாக தனது நோக்கத்திற்கேற்ப பயன்படுத்தப்படவில்லை. தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயப்பீடம், இந்த மதிப்புமிக்க இடத்தை, தங்களது ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டத்திற்காகப் பயன்படுத்தி வருகின்றது. இருப்பினும் இதுவும் குறைவாகவே பயன்படுத்தப்படுகிறது.

நீர் என்பது வாழ்விற்கு அத்தியாவசியமான இயற்கை வளமாகும். வட மாகாணத்தின் வேளாண்மை உற்பத்தி, மாகாணத்தின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவே, பாசனத்துறையும் முக்கிய பங்கு வகிக்கின்றது. கடந்த சில தசாப்தங்களில், வட மாகாணம், சிறிய தொழில்கள் மற்றும் குறைந்த மக்கள்தொகையுடன், விவசாயம்சார்ந்த கிராமப்புறக் கட்டமைப்பையே கொண்டிருந்தது. அதனால், ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை (IWRM) என்பது அப்போது அவசரத் தேவையாக இருந்தது எனச் சொல்ல முடியாது. ஆனால் தற்போது சூழ்நிலை முற்றிலும் மாறியுள்ளது. நீரின் தேவை அதிகரித்து வருகிறது. சில பகுதிகளில், இந்தத்தேவை, நிலைத்த நீர்வளக் கிடைப்பை மீறிச் செல்லும் அளவுக்கு உள்ளது. ஒழுங்கற்ற நீர் பெறுகை, மாகாணத்தின் நீர்வள ஆதாரங்களை குறைக்கும் மற்றும் கெடுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. வேளாண்மைத்துறையைப் பாதுகாத்தபடியே (இது மாகாணத்தின் முக்கிய வாழ்வாதாரமாகும்), வீட்டுப்பயன்பாடு, பாசனத் தேவைகள் மற்றும் தொழில்துறை தேவைகள் ஆகியவற்றிற்கான நீர்த் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் அதேவேளையில், நீர்நிலைகளின் சுற்றுச்சூழல் நலனையும் தரத்தையும் மேம்படுத்த வேண்டும் என்பதே தற்போதைய முக்கிய சவால்.

வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பம் மற்றும் மன்னார் மாவட்டத்தில், மேற்கூறிய வெளி நீர் வளங்கள்மூலம், விவசாய

நடவடிக்கைகளுக்கான நீர் குறிப்பிடத்தக்க அளவில் பயன்படுத்தப்படுகிறது.

### பண்டைய வட மாகாணத்தில் நீர்வள மேம்பாடு

அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்கள் உள்ள வடமத்திய மாகாணத்திலும், தென்மாகாணத்திலும் நீர்வள மேம்பாடு குறித்துப் பரந்தளவில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது; சிறப்பாகவும் ஆவணமாக்கப்பட்டுள்ளது. ஆனால், வட மாகாணத்தில் இதுபோன்ற பண்டைய நீர்வள மேம்பாடு குறித்த வரலாறு விரிவாக ஆவணப்படுத்தப்படவில்லை.

அதிர்ஷ்டவசமாக, பிரோஹியர் தனது புகழ்பெற்ற நூலான '*Ancient Irrigation Works of Ceylon*' (1934 இல் வெளியானது) இல் '*The Northern Vanni and Peninsula of Jaffna*' என்ற தலைப்பில் ஓர் அத்தியாயத்தைத் தொகுத்திருக்கிறார்.

திரு. புரோஹியர் வட மாகாணப்பகுதியில் உள்ள சிறு நீரோடைகள் பண்டைய காலத்தில் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை, அவரது புரிதல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நிலப்பட ஆய்வுகளின் அடிப்படையில் முடிவு செய்கிறார். சற்றே அலைக்கம்பமான நிலப்பரப்பும், ஒழுங்கற்ற வெள்ளப்பாய்ச்சல்களும் நீர்வள மேலாண்மையைச் சவாலான பணியாக ஆக்கியிருக்கலாம். அட்டவணை 1.7, வட மாகாண நீர்ப்பிடிப்புப் பகுதிகளின் நீர்வள மேம்பாட்டைச் சுருக்கமாக விளக்குகிறது.

கல் ஆற்றில் உள்ள மேல்நிலைக் குளமாக இரட்டைப் பெரியகுளம் உள்ளது. பிரோஹியரும் ஆறுமுகமும், இக்குளத்தின் தடுப்பணையில் முதலாம் கஜபாகு மன்னரால் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்றில் இது 'அளவிச்ச குளம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். இப்பிரதேசத்தில் பண்டைய காலத்தில் உருவாக்கப்பட்ட மற்றொரு முக்கியமான குளம் பாவற்குளம் ஆகும்.

கல் ஆற்றில் அமைந்துள்ள ஒரு திரிப்பான் அமைப்பாகக் கொரிஞ்சக்குளம் தடுப்பணை உள்ளது. இத்தடுப்பணையிலிருந்து நீங்கும் கால்வாய்கள் செயலிழந்ததால், ஆறு தன்

| Basin no. | Basin Name | Catchment area sq.km | Number of Major Medium Tanks | Village Tanks | Village Anicuts |
|---|---|---|---|---|---|
| 67 | Yan Oya | 1,529.00 | 1 | 746 | 7 |
| 68 | Mee Oya | 158.00 | 1 | 55 | 0 |
| 69 | Ma Oya | 1,063.00 | 1 | 378 | 0 |
| 70 | Churiyan Aru | 88.00 | 0 | 12 | 0 |
| 71 | Chavar Aru | 58.00 | 0 | 19 | 0 |
| 72 | Paladi Aru | 59.00 | 0 | 10 | 0 |
| 73 | Mannal Aru (Munadal Aru) | 241.00 | 1 | 92 | 3 |
| 74 | Kodallikallu Aru | 94.00 | 2 | 33 | 0 |
| 75 | Per Aru | 479.00 | 1 | 154 | 1 |
| 76 | Kalmaduru Aru (Pali Aru) | 107.00 | 1 | 11 | 0 |
| 77 | Maruthapillay Aru | 60.00 | 1 | 9 | 0 |
| 78 | Therravill Aru | 111.00 | 1 | 17 | 0 |
| 79 | Piramanthal Aru | 91.00 | 2 | 10 | 0 |
| 80 | Nethali Aru | 124.00 | 1 | 16 | 0 |
| 81 | Kanakarayan Aru | 905.00 | 5 | 200 | 0 |
| 82 | Kalavalappu Aru | 64.00 | 1 | 24 | 0 |
| 83 | Akkarayan Aru | 260.00 | 3 | 74 | 0 |
| 84 | Mandagal Aru | 336.00 | 6 | 62 | 0 |
| 85 | Pallavarayan Kadu Aru | 179.00 | 3 | 34 | 0 |
| 86 | Pali Aru | 474.00 | 4 | 124 | 0 |
| 87 | Chappai Aru | 75.00 | 0 | 9 | 0 |
| 88 | Paranki Aru (Menankaddy) | 875.00 | 12 | 386 | 2 |
| 89 | Nay Aru | 537.00 | 9 | 112 | 7 |
| 90 | Malwathu Oya (Aruvi Aru) | 3,183.00 | 8 | 1,731 | 7 |
| 91 | Kal Aru | 277.00 | 2 | 6 | 0 |
| 92 | Moderagama Aru | 1,142.00 | 1 | 449 | 1 |
| | Total | 12,569.00 | 66 | 4,773 | 28 |

படம் 1.7 : வடமாகாணத்தின் நீர்ப்பிடிப்பு பகுதிகள்

Image Source - "Anciens Irrigation works of ceylon" Published in 1934

வழித்தடத்தை மாற்றி இந்தத் திரிப்பான் அமைப்பைத் தவிர்த்துவிட்டது. மற்றொரு திரிப்பான் அமைப்பு அல்லேகட்டு தடுப்பணை ஆகும். இவை இரண்டும் பல பழமையான பெரிய குளங்களை நீரூட்டிய கால்வாய்கள் மூலம் இணைத்திருந்தன. தற்போது அந்தக் குளங்களில் பலவும் கைவிடப்பட்டுள்ளன.

வவுனியா - ஓமந்தைப் பகுதிகளில் தோன்றும் பறங்கி ஆற்றில், பண்டைய காலத்திலேயே உருவாக்கப்பட்ட பல குளங்களைப் பற்றிப் பிரோஹியரும் ஆறுமுகமும் குறிப்பிடுகின்றனர். அதுபோலவே, பாலி ஆறும் முக்கியமான ஆறாகும். இதன் வழியிலேயே வவுனிக்குளம் போன்ற பல பண்டைய குளங்கள் இருந்தன.

மன்னார்ப் பகுதியில், புவியியல் மற்றும் நிலவியல் தன்மைகளைக் கருத்தில் கொண்டு, மேற்பரப்பின் நீர்நிலை பண்டைய குடியிருப்புகளுக்குத் தேவையான அளவிற்குப் போதுமானதாக இருக்கவில்லை என பிரோஹியர் கூறுகிறார். இதனால், இந்தப் பகுதி நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து வேறுபட்டதாக உள்ளது. ஏனெனில், மழை மற்றும் மேல்நில நீர்த்தரங்கள் ஏனைய பகுதிகளில் பிரதான நீர்வள ஆதாரங்களாக இருந்தன. மேற்கண்ட அட்டவணை, பூமிக்கடியில் ஓடும் நதிகளை உள்ளடக்கிய ஒரு நெடுந்தொடரான பாதை

இருந்திருக்க வாய்ப்பு உள்ளதைக் கூறுகிறது. இதற்கமைய, முதற்கட்டத்தில் உள்ள கட்டுக்கரை குளம் (Giants Tank) ஒரு பூமிக்கடிநதியாக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்தப் பகுதியில் ஏற்பட்ட வளமான வாழ்வாதாரத்திற்கு, இத்தகைய பூமிக்கடிநதிகளின் இருப்பும், அவற்றைப் பயன்படுத்தும் திறனைப் பற்றிய அறிவுமே காரணங்களாகும். பின்னர், 12 ஆம் நூற்றாண்டில், இத்தகைய குளங்களுக்கு ஆறு திரிப்புகள் மூலம் நீரூட்டும் நடைமுறைகள் தொடங்கப்பட்டன.

1889 ஆம் ஆண்டில், மன்னாரில் உள்ள கட்டுக்கரைக்குளத்துடன் தொடர்புடைய ஒரு அணைக்கட்டிலிருந்து எடுக்கப்பட்ட காங்கிரீட் மாதிரியின்மீது (அந்தக் காலத்தில் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டது) பிரித்தானியப் பேராசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது. இது, நமது பண்டைய பாசன மரபின் வெற்றிக்கான முக்கிய காரணங்களில் ஒன்று, உயர்தரமான மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டதுதான் என்பதைக் குறிப்பிடுகிறது.

“லண்டன், E.C. மே 17, 1889

**ஐயன்மாரே,**

கடந்த டிசம்பர் மாதம் கொழும்பில் தங்கும்போது திரு. A. M. பெர்குசன் என்பவரால் எனக்கு வழங்கப்பட்ட கற்காரை மாதிரியின் முழுமையான பகுப்பாய்வு முடிவுகளை உங்களுக்கு அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ‘The Builder’ ஆகஸ்ட் 18, 1888, இதழில் வெளியான எனது கட்டுரையில் சிறந்த காரை மோட்டாரின் பகுப்பாய்வு முடிவுகளுடன் இதை ஒப்பிட்டுப்பார்த்தால், பலவகைகளில் இவை நெருங்கிய ஒற்றுமை கொண்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

உண்மையில் சிறந்த காரை மோட்டாரில், சுண்ணாம்பின் ஒரு பகுதி எப்போதும் கால்சியம் சிலிக்கேட்டாக (சிமெண்டில் உள்ளது போல்) காணப்படுகிறது. அதாவது, இது சாதாரண காரையில் உள்ள கால்சியம் கார்பனேட்டுடன் (CaCO) மட்டுமல்லாமல், போர்ட்லாண்ட் சிமெண்டில் உள்ள கால்சியம் சிலிக்கேட்டையும் (CaSiO) கொண்டிருப்பதால், இது மிகவும் உயர்ந்ததரமும் கடினத்தன்மையும் உடையதாகிறது.

இந்த மாதிரியில், நான் நுண்ணோக்கியின் உதவியால் கவனித்தபோது, பயன்படுத்தப்பட்ட கற்களின் விளிம்புகள் முரடாக இருந்தன. மேலும், அவை காரையுடன் மிக நுணுக்கமாக பிணைந்திருந்ததால், பகுப்பாய்வுக்காக அவற்றை பொடியாக உடைப்பது மிகவும் கடினமாக இருந்தது.

‘கெமிக்கல் டிரேட் ஜர்னல்’ (பிப்ரவரி 16, 1889) இதழில் வெளியான ஓர் ஆய்வறிக்கையில், மூன்றாம் நூற்றாண்டைச்சேர்ந்த சில காரை மாதிரிகளின் கலவை பற்றி டாக்டர் W. ஃபாரியன் நான்கு பகுப்பாய்வுகளை வழங்கியுள்ளார். அவற்றில் எந்த ஒரு மாதிரியிலும் காரத்தில் கரையும் சிலிக்கா (SiO) 2.50% இனைவிட அதிகமாக இல்லை. ஆனால், இந்த இலங்கை கற்காரை மாதிரியில், காரத்தில் கரையும் சிலிக்கா 7.10% ஆக உள்ளது. இதை நான் கால்சியம் சிலிக்கேட்டாக கருதியுள்ளேன். ஏனெனில் போர்ட்லாண்ட் சிமெண்டுகளை பகுப்பாய்வு செய்யும்முறையிலேயே இதையும் சோதனை செய்தேன்.

டாக்டர் ஃபாரியன் குறிப்பிடுவதாவது, பண்டைய ரோமானிய காரை மாதிரிகள் எந்தவகையிலும் சிறந்தவை அல்ல. மாறாக மிகவும் தரம் குறைந்த பண்புகளைக் கொண்டிருந்தன. சமீபத்திய பல பகுப்பாய்வு முடிவுகளின் அடிப்படையில் என் கருத்துப்படி, இந்த தரக்குறைவு முக்கியமாக கால்சியம் சிலிக்கேட்டின் குறைபாடுகளால் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், இலங்கையின் ஏரிகளில் இருந்து எடுக்கப்பட்ட இந்த கற்காரையில், 7.10% சிலிக்கா (SiO) கால்சியத்துடன் சேர்ந்துள்ளது. மேலும், இதில் நிறைய கால்சியம் கார்பனேட் (CaCO) மற்றும் முரடான விளிம்புகளுடன் கூடிய கற்கள் உள்ளன.

வணக்கங்களுடன், உங்களின் விசுவாசமான,

ஜான் ஹியூஸ், F.C.S., மே 17, 1889.

மூலம்: ‘Ceylon Observer,’ வார இதழ், 1889, பக்கம். 582

ஆதாரம்: இலங்கையின் பொது வேலைத்துறை வரலாறு, 1796 முதல் 1913 வரை, தொகுதி 2, தொகுப்பாளர்: P. M. Binham; பங்களிப்பு: J. A. Balfour, பாசனத்துறை இயக்குநர்.

படங்கள் 18(a) மற்றும் 18(b) முறையே கட்டுக்கரைக் குளத்திற்கான (Giants Tank) திசைமாற்றுக் கால்வாயின் நீர்வரத்துக்கான அணைக்கட்டும், மன்னார் மாவட்டத்தில் உள்ள அணைக்கட்டின் கீழ்வரப்பகுதியைக் காண்பிக்கும் காட்சியும் ஆகும்.



படம் 1.8(a) : கட்டுக்கரை குளத்திற்கான தேக்கம் அணைக்கட்டு



படம் 1.8(b) : மன்னார் மாவட்டத்தில் உள்ள தேக்கம் அணைக்கட்டு

### வடக்கு மாகாணத்தின் நீர் வளங்கள் - துணைப் பாசனத் திட்டங்கள் மற்றும் நீர்த்தரம்

வடக்கு மாகாணத்தில் 25 ஆறுகள் உள்ளன. இவை அனைத்தும் பருவகால ஆறுகளாகும் (நீடித்த ஓட்டம் இல்லாதவை). இந்த மாகாணத்தில் 62 பாரிய/ நடுத்தர பாசனத் திட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்பது முக்கிய நீர்த்தேக்கங்களும் அடங்கும். இவை மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் பராமரிக்கப்படுகின்றன. இத்திட்டங்கள் முதன்மையாக 28,430 ஹெக்டேயர் நிலங்களுக்கு பாசன வசதியை வழங்குகின்றன. இது இப்பகுதியில் 28,459 விவசாயக் குடும்பங்களுக்குப் பயனளிக்கிறது.

வழுக்கையாறு வடிகால் திட்டம் 810 ஹெக்டேயர் விவசாய நிலத்திற்கு வடிகால் வசதியை வழங்குகிறது. 54 உப்புநீர் தடுப்புத் திட்டங்கள் 6,686 ஹெக்டேயர் விவசாய நிலத்திற்கு உப்புநீர் புகாமல் காக்கும் வசதியை அளிக்கின்றன. யாழ்ப்பாணம் கடல் நீரேரித் திட்டம் (ஆனையிறவு கடல் நீரேரித் திட்டம், உப்பாறு நீரேரித் திட்டம் மற்றும் வடமராட்சி கடல் நீரேரித் திட்டம் ஆகியவை) வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின்கீழ் செயற்படுகிறது. வடக்கு மாகாணத்தில் 9 பாரிய/ நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தால் பராமரிக்கப்படுகின்றன. அவற்றில் ஐந்து முக்கிய நீர்த்தேக்கங்களும் அடங்கும். இத்திட்டங்கள் 18,448 ஹெக்டேயர் விவசாய நிலத்திற்குப் பாசன வசதியை வழங்குகின்றன. வடக்கு மாகாணத்தில் 2,744 சிறு பாசனத்திட்டங்கள் கமநல சேவைத் திணைக்களத்தால் பராமரிக்கப்படுகின்றன. இத்திட்டங்கள் முதன்மையாக 31,539 ஹெக்டேயர் நிலத்திற்கு பாசன வசதியை வழங்குகின்றன. மேலும் இவை இப்பகுதியில் 50,000 இற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களுக்குப் பயனளிக்கின்றன.

### நிலத்தடி நீர்நிலைகளின் பங்கு

யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளில் அமைந்துள்ள சுண்ணாம்புக்கல் அடுக்குகளுக்குள் உள்ள நீர்நிலைகள் (Aquifers) முக்கியமானவை. இந்த நீர்நிலைகள் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன.

#### நீர் மாசுபாட்டின் அதிகரிப்பு

நீர்நிலைகள் மற்றும் குடிநீர் மூலங்களில் மாசுபாட்டின் அளவு அபாயகரமான விகிதத்தில் அதிகரித்துள்ளது. இதற்கான முக்கிய காரணங்கள்:

- வேதி உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் அதிகப்படியான பயன்பாடு.
- கழிவுகளை சரியான முறையில் அகற்றாதது.
- நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் பற்றாக்குறை.
- மக்கள்தொகை அடர்த்தி மிகுந்த பகுதிகளில் (போர் காரணமாக) திட்டமிடப்படாத கழிவறைக் கட்டமைப்புகள்.

இவை அனைத்தும் நீரின்தரம் படிப்படியாகச் சீர்கெடுவதற்கு வழிவகுத்துள்ளன.

### ஆறுகளின் புவியியல் பண்புகள்

இலங்கையின் மத்திய பகுதிகளில் உற்பத்தியாகி, கடைநோக்கிப் பாயும் ஆறுகளின் இயல்பைக் கருத்தில் கொண்டால், நிலப்பரப்பு நீர் வளங்களை அரசியல் அல்லது நிர்வாக எல்லைகளுக்கு ஏற்ப வரையறுப்பது கடினம் எனலாம். அட்டவணை1.7 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆறுகள் பெரும்பாலும் வடக்கு நோக்கிப் பாய்கின்றன. சில ஆறுகள், ஒரு மாகாணத்தில் உற்பத்தியாகி மற்றொரு மாகாணத்திற்குப் பாய்கின்றன.

### நிலப்பரப்பு நீர் வளங்களின் பங்கு

யாழ்ப்பாணக் குடாநாடு, சிறுதீவுகள், ஆறுகள் மற்றும் அவற்றுக்கிடையிலுள்ள பகுதிகள் நாட்டின் நிலப்பரப்பில் 24% ஆக உள்ளன. இருப்பினும், இப்பகுதிகளின் ஆண்டு நிலப்பரப்புநீர் வளம், மொத்த நீர்வளத்தில் 8% மட்டுமே ஆகும். யான் ஓயா, மல்வத்து ஓயா மற்றும் கலா ஓயா போன்ற பெரிய ஆறுகளைத் தவிர்த்தால், இந்தப் பங்கு வெறும் 4% ஆகக் குறைகிறது.

## கிராமக்குளங்களை உகந்த முறையில் பயன்படுத்துதல்

கிராமக்குளங்கள் இலங்கையின் பாரம்பரிய நீர்ப்பாசன நாகரிகத்தின் ஒரு தனித்துவமான அம்சமாகும். இலங்கையில், குறிப்பாக வறண்ட மண்டலத்தில், 10,000 இற்கும் மேற்பட்ட கிராமக்குளங்கள் இன்றும் செயற்பாட்டில் உள்ளன. இவை பொதுவாக விவசாயச் சமூகங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. கிராமக்குளங்களின் பலன்கள் பல்வகைப்பட்டவை:

- பாசனம் மற்றும் குடிநீர் விநியோகம்: இவை இவற்றின் முதன்மைப் பயன்பாடுகளாகும்.
- நிலத்தடி நீரை ஈடுசெய்தல்: கிராமக்குளங்களை மேம்படுத்துவது நீண்டகாலமாக நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கு உதவுகிறது என சமீபத்திய ஆய்வுகள் காட்டுகின்றன.

### காலநிலை மாற்றத்திற்கான தழுவல்

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரழிவுகளை நிர்வகிப்பதில் கிராமக்குளங்களை ஒருங்கிணைக்க, அவற்றின் பாரம்பரியப் பங்கு மற்றும் தற்போதைய சமூக, பொருளாதார நிலவரங்களைக் கவனத்தில் கொண்டு முழுமையான ஆய்வு செய்யப்பட வேண்டும்.

## நிர்வாகம் மற்றும் மேலாண்மை

இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மாகாண பாசனத் திட்டங்கள் அனைத்தும் மாகாண சபைகளின்கீழ் வரவேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. எனினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மட்டும், சிறுபாசனத் திட்டங்கள் கமநல சேவைத் திணைக்களத்தால் (மத்திய அரசின் நிறுவனம்) பராமரிக்கப்படுகின்றன. வடக்கு மாவட்டங்களின் கிராமக்குளங்கள் தொடர்பான புள்ளிவிவரங்கள் அட்டவணை 1.8 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

### நிலத்தடி நீர்வளங்கள்

ஆற்றுப்படுகை எல்லைகளுக்கு வெளியே உள்ள பகுதிகள் கணிசமான அளவு நிலத்தடி நீர் வளங்களைக் கொண்டுள்ளன. இப்பகுதியில் பல நிலத்தடி நீர்ப்படுகைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் முக்கியமானவை:

1. முருங்கன் படுகை - அருவி ஆறு மற்றும் நாயாற்றுக்கு இடையே அமைந்துள்ளது.
2. முழங்காவில் படுகை - பாலி ஆறு மற்றும் பல்லவராயன்கட்டு ஆற்றுக்கு இடையே அமைந்துள்ளது.
3. பரந்தன் மற்றும் முல்லைத்தீவு படுகைகள் - வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் உள்ளன.

2002 ஆம் ஆண்டில் இந்த கட்டுரையாளரால்/ ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட PhD ஆய்வு ஒன்று, வவுனியாப் பகுதியின் நிலத்தில் நீர் தாங்கும் திறன் குறைவாக உள்ளது என்பதைத் தெரிவித்துள்ளது. இப்பகுதியில் நீர் மட்டம் மழைப்பொழிவால் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

### வரலாற்றுப் பின்னணி மற்றும் தற்போதைய நிலை

1. பண்டைய காலம் முதல், துணை உணவுப் பயிர்களுக்கு நிலத்தடி நீர் பாசனமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.
2. 1970களின் நடுப்பகுதியில், துணை உணவுப் பயிர்களின் விலை உயர்வு மற்றும் வறட்சி காரணமாக நீர் கிடைப்பது குறைந்ததால், விவசாயக் கிணறுகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது.

அனுதர்சி கபிலன்



அனுதர்சி கபிலன் அவர்கள் தனது இளமாணிப் பட்டத்தைத் திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இதழியலில் "டிப்ளோமா" பட்டத்தைக் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் விரிவுரையாளராகப் பணிப்புரியும் அனுதர்சி முதுமாணிப் பட்டப்படிப்பைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி வளாகத்தில் வெகுஜன ஊடகவியலில் தொடர்கின்றார்.

'இலங்கை அரசியல் அரசியல்வாதிகள்' என்ற தலைப்பில் 2015 இல் அவரால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நேர்காணல்கள் 2017 இல் நூல்வடிவில் வெளியிடப்பட்டது.

# இலங்கையில் தமிழ்க்குயர் சமூகத்தால் எதிர்கொள்ளப்படும் மருத்துவ மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள்

இலங்கையைப் பொறுத்தமட்டில் குறிப்பாக வடமாகாணத்தில் குயர் மக்களுக்கான உரிமைக் குரல்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணமுடிகிறது. 'வடபுல பண்பாட்டுத் தளத்தில் குயர் அரசியல்' என்ற இத் தொடரானது, வடபுல மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியுள்ள பிற்போக்கான கருத்தியல்கள் பால்நிலைச் சமத்துவத்திற்கு அச்சுறுத்தலாக அமைதல், குயர் மக்கள் இந்தச் சமூகத்தின் மத்தியில் வன்முறைகளையும் பாரபட்சங்களையும் எதிர்கொள்வதில் கலாசாரம் – சமயம் அல்லது மதக் கட்டமைப்புகளின் பங்கு, வடபுலத்தில் குயர் அரசியல், குயர் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய குயர் செயற்பாட்டாளர்களின் சமத்துவம் நோக்கிய முன்னெடுப்புகள், கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட மையக்கருத்து வெளிப்பாட்டாளர்கள் குயர் அரசியல் அல்லது அது சார்ந்த விடயங்களில் பேணும் மௌனிப்பு என்பன பற்றிப் பேசவிழைகின்றது.

இலங்கையில் தமிழ்க்குயர் சமூகத்தினர் பல்வேறுபட்ட மருத்துவ மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இப்பிரச்சினைகளுக்கு அடிப்படையாகச் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டுக் காரணிகள் முக்கிய பங்குகளை வகிக்கின்றன. குயர்மக்கள் மருத்துவமனைகளை நாடும்போது பாலின அடையாளத்தைக் கேட்கும் மருத்துவர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் அவர்களை மரியாதையின்றி அணுகக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.

“குயர் மக்கள் வைத்தியசாலைகளை நாடும்போது வெளிநோயாளர் பிரிவில் இருந்து பல்வேறு தரப்பினராலும் பாரபட்சங்களை எதிர்கொள்கிறார்கள்” எனச் செயற்பாட்டாளரான வரதாஸ் தியாகராஜா குறிப்பிடுகிறார். குயர் மக்களைச் சரியாகப் புரிந்துகொள்ளாத மற்றும் அதை ஏற்றுக்கொள்ளாத மருத்துவமுறைகளே இலங்கையில் அதிகமாக உள்ளன. உளநலப் பராமரிப்புகள், பாலியல் சுகாதார சேவைகள் போன்ற அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதிலும், எச்.ஐ.வி மற்றும் பாலியல் குறித்த நோய்களுக்கான விழிப்புணர்வு போன்றவற்றினை வழங்குவதிலும், இன்றுவரையில் இலங்கை பின்நிற்கின்றமையும் இதற்கான பிரதான காரணமாக அமையலாம். இலங்கையில் குயர் சமூகத்திற்கான காப்பகங்கள், சுகாதார மையங்கள் போன்றவை மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன.

இலங்கையின் சட்டம் LGBTIQA+ சமூகத்திற்கு இன்னும் சமத்துவமான உரிமைகளை வழங்கவில்லை. இதனால், தமக்குத் தேவையான மருத்துவ உதவிகளைக் கோருவதில் குயர்மக்கள் பின்தங்கியுள்ள அதேவேளை, மருத்துவர்களும், மருத்துவமனைகளும் பால்மாற்று அறுவைச்சிகிச்சை செய்யத் தயங்குகிறார்கள். தமிழ்ச் சமூகத்தில் பாலின அடையாள மாற்றம் புறக்கணிக்கப்படும் விதமாகவே பார்க்கப்படுகிறது. இது பால்நிலைப் பன்மைத்துவத்தைக் கேள்விக்குட்படுத்துகின்றது.

இலங்கையில் சமூக, பண்பாட்டு, அரசியல் காரணிகளால் குயர்மக்கள் குடும்பத்தினரிடமிருந்து விலகும்நிலை ஏற்படுகின்றது. மேலும் உளவியல் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. இது உளநல மற்றும் உடல் நலத்தினைப் பாதிக்கின்ற ஒரு விடயமாக இருக்கின்றது. இவ்வகையான பிரச்சினைகளைச் சரிசெய்ய, கல்வியறிவு ஏற்படுத்துதல், மருத்துவர்களுக்கும் நிபுணர்களுக்கும் பயிற்சிகள் வழங்குதல், சமுதாய ஆதரவைக் கட்டமைத்தல் ஆகியவை அத்தியாவசியமாகும். தமிழ்மொழி பேசும் குயர் சமூகத்தினர் சுகாதார சேவைகளைப் பெறுவதில் மொழித்தடைகளை எதிர்கொள்கிறார்கள். இலங்கையில் குயர்மக்கள் தமக்கான சிகிச்சைகளுக்காகக் கொழும்பு போன்ற நகரங்களுக்குச் செல்லும்போது, மொழிப்பிரச்சினை காரணமாகச் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

தமிழ்மொழியில் மருத்துவ ஆலோசனைகள் மற்றும் தகவல்கள் இல்லை. இதனால், தமிழ்க்குயர் சமூகத்தினர் தங்கள் தேவைகளைச் சரியாக விளக்க முடியாமல் சிரமப்படுகிறார்கள். தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரியத்திற்கும், குயர் அடையாளங்களுக்கும் இடையிலான முரண்பாடு மருத்துவர்களின் அணுகுமுறையிலும் எதிரொலிக்கிறது. ஆனாலும், தமிழ்ச் சூழலில் குயர் மக்களைப் பால்நிலை உணர்திறனுடன் நடத்தக்கூடிய உட்சுரப்பியல் (Endocrinologists) நிபுணர்கள் மற்றும் உளநல மருத்துவர்கள் ஒரு சிலரைக் குயர்மக்கள் குறிப்பிடுகின்றார்கள்.

## பால்நிலையை அடையாளப்படுத்தும் சான்றிதழ் (GRC)

இலங்கையில் சுகாதார போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, 2016 ஆம் ஆண்டின் பொதுச்சுற்றறிக்கை அடிப்படையில் பதினாறு வயதிற்கு மேற்பட்ட திருநர்களுக்குப் பால்நிலையை அடையாளப்படுத்தும் சான்றிதழ் (GRC) வழங்குகின்றது. இலங்கைத் தமிழ்ச்சூழலில் பால்நிலையை அடையாளப்படுத்தும் சான்றிதழ் (GRC) பெறுவதில் திருநர்கள் ஏராளமான சவால்களை எதிர்கொள்கிறார்கள். நீண்ட போராட்டங்களிற்கு மத்தியிலேயே அவர்களால் பால்நிலையை அடையாளப்படுத்தும் சான்றிதழைப் (GRC) பெறமுடிகின்றது.

குயர் மக்களுடைய மருத்துவ மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் செயற்பாட்டாளரான வரதாஸ் தியாகராஜா குறிப்பிடுகையில், “இலங்கையில் பால்நிலையை அடையாளப்படுத்தும் சான்றிதழ் (GRC) வழங்குதல் ஒரு முன்னேற்றகரமான விடயமாகப்

பார்க்கப்படுகின்றது. இருந்தாலும் கருத்தியல் ரீதியில் நோக்கும்போது, ஆண் மற்றும் பெண் பால்நிலைகளை அரசாங்கத்திடம் உறுதிப்படுத்தவேண்டிய தேவை இல்லாதபோதும், திருநர்கள் தமது பால்நிலையை உறுதிப்படுத்தும்நிலை விவாதத்திற்குரியது. பால்நிலையை அடையாளப்படுத்தும் சான்றிதழ் (GRC) இல்லாமல் திருநர்களை அங்கிகரிக்கும்நிலை அவசியமானதாகும்" என்கிறார்.

திருநர்கள் தமக்குத் தேவையான கோமோன்களைப் பெறுவதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கோமோன் சிகிச்சைக்கான மருந்துகளின் விலை அதிகமாகவும், இதனை வழங்கும் மருத்துவர்கள் பற்றாக்குறையாகவும் காணப்படுகின்றமையைத் திருநர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இலங்கையில் திருநர்கள் மத்தியில் பால்மாற்று அறுவைச்சிகிச்சைக்குப் பின்னர் கோமோன் எடுப்பது குறைவாகக் காணப்படுகின்றது. இதற்குக் கோமோன்களினைப் பெற்றுக்கொள்ளமுடியாமல் இருக்கின்றமையும், விலையும் முக்கிய சிக்கல்களாகும்.

"இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளைப்போல் இலங்கையில் பொருத்தமான கோமோன்களைப் பெறமுடியாதுள்ளது. சரியான கோமோன்களைப் பயன்படுத்தாதபோது அவர்கள் ஏராளமான பின்விளைவுகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. அரசாங்கம் குயர் மக்களுடைய பிரச்சினைகளை உள்வாங்கி அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஒசுசல போன்ற அரச மருந்தாக்கல் நிறுவனங்களில் நியாயமான விலையில் பொருத்தமான கோமோன்களை இறக்குமதிசெய்து வழங்கவேண்டும்" என வரதாஸ் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், "இருமையற்றோர் (Nonbinary), பால்நிலையை அடையாளப்படுத்தும் சான்றிதழ் (GRC) பெறுவதில் பாதிக்கப்படுபவர்களாக இருக்கிறார்கள" என்றார்.

மேலும், "யாழ்ப்பாணத்தில் திருநர்கள் சிகிச்சைக்குச் செல்லும்போது பெற்றோர்களின் அனுமதி அவசியமானதாக இருக்கின்றது. தமிழ்ச்சூழலில் தமது பிள்ளைகளைத் திருநர்களாக ஏற்றுக்கொள்வது பெரும்பாலான பெற்றோருக்குச் சிரமமானதாக இருக்கின்றது. தமது சிகிச்சைகளுக்காகப் பெற்றோரின் அனுமதியைப் பெறுவதிலும் திருநர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர்" என்கிறார்.

இவர்கள் குறைந்தது 3 மாதங்கள் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றபின்னர் கோமோன் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. திருநர்கள் தமது பிறப்புச் சான்றிதழ், மற்றும் அடையாள அட்டை போன்ற ஆவணங்களில் தமது பால்நிலையை மாற்றுவதற்கு பால்நிலையை அடையாளப்படுத்தும் சான்றிதழ் (GRC), அவர்களை உறுதிப்படுத்தும் சத்தியக்கடதாசி மற்றும் பழைய பிறப்புச் சான்றிதழ் என்பன அவசியமாகும்.

### பால்மாற்று அறுவைச்சிகிச்சை (GenderAffirming Surgery)

இலங்கையில் தமிழ்க்குயர் சமூகத்தால் பால்மாற்று அறுவைச்சிகிச்சை (GenderAffirming Surgery) மேற்கொள்வதில் எதிர்கொள்ளப்படும் மருத்துவ மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் பல்வேறு நிலைகளில் நிகழ்கின்றன. சமூகப் புறக்கணிப்பு, சுகாதாரச் சேவைகளின் குறைபாடு மற்றும் சட்டரீதியான சிக்கல்கள் போன்றன இந்தப் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்குகின்றன.

பால்மாற்று அறுவைச்சிகிச்சை, இலங்கையின் பொதுமருத்துவச் சேவைகளின்கீழ் இடம்பெறுவதில்லை. இதனால் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படுகிறது. சிகிச்சைகளை வழங்கக்கூடிய முக்கிய மருத்துவமனைகள் பெரும்பாலும் கொழும்பு போன்ற நகரங்களில் மட்டுமே உள்ளன. இது கிராமப்புறங்களில் வசிக்கும் தமிழ்க்குயர் சமூகத்தினருக்கான சிகிச்சைகளுக்கான அணுகலை மேலும் சிக்கலாக்குகிறது.

இலங்கையில் பால்மாற்று அறுவைச்சிகிச்சை செய்யத் தகுதியான மற்றும் அனுபவமிக்க அறுவைச்சிகிச்சை நிபுணர்கள் மிகவும் குறைவாக உள்ளனர். இலங்கையில் பாதுகாப்பான முறையில் அறுவைச்சிகிச்சை செய்யத் தேவையான உபகரணங்கள் மற்றும் சிகிச்சை முறைமைகள் பின்தங்கியதாகக் காணப்படுகின்றமையை அவதானிக்கலாம். குயர் மக்களுக்குப் பால்மாற்று அறுவைச்சிகிச்சை முறையாக மேற்கொள்ளப்படாதபோது மரணங்கள் உட்பட்ட பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்படுகின்றது.

திருநர்கள் இலங்கையின் தனியார் மருத்துவமனைகளுக்கு மட்டுமல்லாது இந்தியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளுக்கும் சிகிச்சைக்காகச் செல்கின்றனர்.

வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் குறைந்தது ஒரு மாதகாலமாவது அங்கு தங்கியிருந்து சிகிச்சைபெற வேண்டும். பால்மாற்று அறுவைச்சிகிச்சையின் செலவு மிக அதிகமாக உள்ளது. தனியார் மருத்துவமனைகளில் இதற்கான செலவை மேற்கொள்ளுவதற்கு, தமிழ்க்குயர் சமூகத்தினர் பெரும்பாலும் பொருளாதார நிலையில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இலங்கையின் அரச கட்டமைப்பில் பால்மாற்று அறுவைச்சிகிச்சைக்கான ஆதரவோ அல்லது சலுகைகளோ பெரிய அளவில் இல்லாமை ஒரு குறையாகவே உள்ளது. குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு பால்மாற்று அறுவைச்சிகிச்சை ஒரு கனவாகவே இருக்கின்றது. மேலும் வெளிநாடுகளுக்குச் சிகிச்சைகளுக்காகச் செல்லவிரும்பும் குயர்மக்கள் மருத்துவ விசா பெறுவதிலும் சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள்.

தமிழ்ச் சமூகத்தில் பால்மாற்று அறுவைச்சிகிச்சையைப் பற்றி அதிக அறிவும், புரிதலும் இல்லாததால், இதனை குடும்பங்கள் எதிர்க்கும்நிலை காணப்படுகின்றது. சமூக ஆதரவின்மையால் மன அழுத்தம் மற்றும் தனிமை அதிகரிக்கிறது. குயர் சமூகத்தினரின் பாலின அடையாளங்களை எதிர்மறையாக அணுகும் செயல்முறைகள் காணப்படுகின்றன. அறுவைச்சிகிச்சைக்குப் பிறகு உடல் சுகாதாரத்தையும், உள ஆரோக்கியத்தையும் சரியாகக் கவனிக்கத்தேவையான, அடிப்படை அமைப்புகள் இல்லாமை மிகப்பெரும் குறைபாடாகவிருக்கின்றது.

## உளநலச் சிகிச்சை

இலங்கையில் LGBTIQA+ சமூகத்துக்கேற்ற உளநலச் சிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய அமைப்புகள் குறைவாக உள்ளன. இதனால் இலங்கையில் குயர் சமூகத்திற்கான உளநலச் சிகிச்சை புறக்கணிக்கப்பட்டுள்ளது எனலாம். பால்மாற்று அறுவைச்சிகிச்சைக்கு முன்பும், பின்னும் உளநல ஆலோசனைகள் மிக அவசியமானது. மேலும் பால்நிலையை அடையாளப்படுத்தும் சான்றிதழ் (GRC) பெறும்போதும், இலங்கையில் உளநல மருத்துவரை நாடவேண்டியது அவசியமாகும். ஆனால், தமிழ்க்குயர் சமூகத்திற்கேற்ற உளநல ஆலோசனைகள் மற்றும் பராமரிப்பு என்பன இலங்கையில் சரியான முறையில் கிடைப்பதில்லை.

“நான் உளநலச் சிகிச்சைக்குச் செல்லும்போது, மேலும் மன உளைச்சலுக்கு உள்ளானேன். தவறான முடிவுக்குக்கூடச் சென்று மீண்டு வந்தேன். திருநர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் உளநலச் சிகிச்சைகளை நான் ஆதரிக்கவில்லை” எனத் திருநங்கை ஒருவர் குறிப்பிட்டார்.

பால்மாற்று அறுவைச்சிகிச்சைக்கு முன் உளநலச் சான்றிதழ் கட்டாயமாகும். உளநலச் சான்றிதழ்பெறச் செல்லும்போது, “பாலியல் தொழிலுக்குச் செல்லப்போகிறீர்களா?, அதற்காகவா பால்மாற்று அறுவைச்சிகிச்சை செய்கிறீர்கள்?” போன்ற கேள்விகள்கூடத் தன்னை நோக்கி எழுப்பப்பட்டதாகத் திருநங்கை ஒருவர் குறிப்பிட்டார். இதுபோன்ற கேள்விகள் திருநர்களை மேலும் உளப்பாதிப்புக்கு உள்ளாக்குவதுடன், அவர்களது அடையாளப்படுத்தல்களைக் கேள்விக்கும் உள்ளாக்குகின்றன. எனவே, குயர் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளக்கூடிய உளநல மருத்துவர்கள் மற்றும் ஆலோசகர்களின் தேவை அவசியமானதாகும்.

### பாதுகாப்பான மருத்துவச் சூழல்

இலங்கையில் பால்மாற்று அறுவைச்சிகிச்சை செய்யும் நிபுணர்களை உருவாக்கும் பயிற்சிகளை வழங்கல், பால்மாற்று அறுவைச்சிகிச்சைக்கு அரசாங்க ஆதரவுடன் நிதி உதவிகள் வழங்குதல், தமிழ்க்குயர் சமூகத்திற்கேற்ற உளநல ஆலோசனை மற்றும் சிகிச்சை மையங்களை உருவாக்கல், குடும்பங்கள் மற்றும் சமூகத்தில் பாலின அடையாளங்களைப் பற்றிய புரிதலை அதிகரிக்க விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல், தமிழ்க்குயர் சமூகத்திற்கான உரிமைகளைச் சட்டரீதியாக உறுதிசெய்ய நடவடிக்கைகள் எடுத்தல் என்பன அவசியமாகும். இதன்மூலம் குயர் மக்களுக்கான பாதுகாப்பான, ஆரோக்கியமான மருத்துவ, சுகாதாரச் சூழல் உருவாகும். ஆனால் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாட்டில், குயர் மக்களுக்கான விடயங்களை அமுல்படுத்துவதில் பல்வேறு காரணிகள் தடையாக உள்ளன.

“குயர் மக்களுக்குச் சம உரிமைகொண்ட சுகாதார, மருத்துவ அணுகல் அவசியமானதாகும்.”

அமரசிங்கம் கேதீஸ்வரன்



பொருளியல் துறையில் சிரேஸ்ட வளவாளராகவும் பயிற்றுநராகவும் செயற்படும் அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களையும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் திட்டமிடலில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர். இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் II அதிகாரியாக, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றும் இவர், தேசிய பெண்கள் செயலகத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். 2012 இல் 'திட்டமிடல் மூலதத்துவங்கள்' என்ற நூலினையும் 2024 இல் 'மண்' என்ற கவிதை நூலினையும் வெளியீடு செய்துள்ளார். இவர் சிறந்த விமர்சகரும் ஆய்வாளருமாவார். வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் உப தலைவராகவும், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவராகவும், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவராகவும் செயற்பட்டு வரும் ஒரு மூத்த கூட்டுறவாளருமாவார்.

# வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பொதுவசதிச் சேவைகளில் குடிநீர் வழங்கல் சேவை

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளச் செழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பை வடக்கு – கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு – கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் 'வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற இந்தக் கட்டுரைத் தொடர் விளக்குகின்றது.

தெற்காசியாவில், சிறந்த சுகாதார வசதிகளை வழங்கும் நாடாக இலங்கை வகைப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகள், மருத்துவமனைகள், பொது இடங்கள், பெரிய தனிமைப்படுத்தப்பட்ட அலுவலக வளாகங்கள், பாதுகாப்பு நிறுவனங்களான காவல் நிலையங்கள், படை முகாம்கள், பெரிய தொழிற்சாலைகள் போன்ற அதிக மக்கள் கூடும் இடங்களிலும், நகர்ப்புறக் குடியிருப்புப் பகுதிகளிலும் முறையான நீர் வழங்கல் சேவையானது அவசியமும் அவசரமுமான விடயமாக உள்ளது. இந்தவகையில் நிலத்தடி நீரின் பாதுகாப்பும், முறையான மனிதக் கழிவகற்றல் பொறிமுறையும் அதீத கரிசனைக்குரிய விடயங்களாக உயர்ந்துள்ளன. மனிதக் கழிவுகளை பொறுப்பற்றமுறையில் கண்மூடித்தனமாகக் கொட்டுவதன்மூலம் நீரோட்டங்களும் நிலத்தடி நீரும் மாசுபடுத்தப்படுவதால், சுற்றாடல் சீர்கேடு ஏற்படுகிறது. இந்த மாசடைவினால் சுத்தமான குடிநீருக்கான தேவையைப் பூர்த்தி செய்யவும், அதன் பாதுகாப்பை உறுதி செய்யவும், அரச வருவாயிலிருந்து பெருந்தொகை நிதியைச் செலவிட வேண்டியநிலை உருவாகியுள்ளது.

இலங்கையில் சுகாதாரம், குடிநீர் மற்றும் கழிவுநீர்ச் சேவைகளை வழங்கும் பொறுப்பு உள்ளூராட்சி சபைகளான மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, கிராமிய நீர் வழங்கல் திணைக்களம், சுகாதார அமைச்சு மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தவகையில், இலங்கையில் 93.6% முன்னேற்றகரமான சுகாதார வசதிகள் வழங்கப்படுகின்றன; இதில் 1.4% ஓரளவு வசதியளிப்புடையதாகவும், 4% முன்னேற்றமற்றதாகவும், 1% திறந்த அணுகலற்றதாகவும் காணப்படுகிறது. 2020 ஆம் ஆண்டின் நிலவரப்படி மக்கள்தொகையில் 11% தங்கள் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றமுடியாதவர்களாக உள்ளனர்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, 2030 இல், குழாய்க் கழிவுநீர் வடிகால் வசதிகளை 2.1% இலிருந்து 4.4% ஆக உயர்த்த முடியும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. குறிப்பாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின்கீழ் அனைவருக்கும் அடிப்படைச் சுகாதாரம், திறந்தவெளியில் மலம் கழிப்பதை முடிவுக்கு கொண்டுவருதல், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வெளியீட்டின் விகிதத்தைப் பாதியாகக் குறைத்தல், மீள்சுழற்சி மற்றும் பாதுகாப்பான மறுபயன்பாட்டை மேம்படுத்தல் என்பவை 2030 இற்குள் அடையவேண்டிய இலக்குகளாக அமைந்துள்ளன. சுகாதாரமான குடிநீர் தொடர்பான சவால்கள் உலகளாவிய மட்டத்தில் காணப்படுகின்றன. மனிதகுலத்தின் வாழ்வில் நீர் ஒரு தவிர்க்க முடியாத வளமாகும். பூமியில் புதுப்பிக்கத்தக்க நன்னீர் வெறும் 0.3% மட்டுமே காணப்படுகிறது. மேற்பரப்பு நீர், நதியோட்டம், நிலத்தடி நீர் மற்றும் உறைந்த நீர் ஆகியவையே நீர் விநியோக ஆதாரங்களாக அமைகின்றன. நீர்ப்பற்றாக்குறை, நீர்மாசடைவு, நீருடன் தொடர்புடைய மோதல்கள், காலநிலை மாற்றம் ஆகியவை நீர் வளங்களை அச்சுறுத்தும் காரணிகளாக உள்ளன. புதுப்பிக்கத்தக்க நீர் வளங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பட்டியலில், இலங்கை 90 ஆவது இடத்தில் காணப்படுகிறது.

வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தின் நகர்ப்புறப் பகுதிகளும் பருத்தித்துறைப் பகுதியும் நீர் மாசடைவால் மிக அதிகமாகப் பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளன; ஏனைய மாவட்டங்களும், யாழ்ப்பாண மாவட்டத்தின் பிற பகுதிகளும் மிகக் குறைந்த பாதிப்புடைய பகுதிகளாகக் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களின் கரையோரப்பகுதிகள் உயர் மாசடைவால் பாதிக்கப்பட்டுள்ளன; ஏனைய பகுதிகள் மிகக் குறைவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 2030 இற்கான எதிர்வுகூறல் ஆய்வின் அடிப்படையில், இந்தப் பாதிப்புகள் இப்பகுதிகளில் மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகக் காட்டப்படுகிறது. பாதுகாப்பற்ற முறையில் நிர்வகிக்கப்படும் மனித மலக்கழிவுகள், பாதுகாப்பான சாக்கடைக்குழிகள் இல்லாமை, கழிவுகளை பொறுப்பற்றமுறையில் அகற்றுதல் போன்றவை, நீர் சுத்திகரிப்புக்காக எடுத்துக்கொள்ளப்படும் பகுதிகளில் அதிக ஈ. கோலை மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன. இதனைக் கட்டுப்படுத்த எந்தச் சரியான நடவடிக்கைகளும் எடுக்கப்படாதநிலையில் பேரழிவு ஏற்படும் சிக்கலும் உருவாகி வருகிறது. குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய்க் குளத்தில் பாசிகள் கண்டுபிடிக்கப்பட்டமை, இந்த நிலைமைகள்

அந்தப்பகுதிகளிலும் ஏற்பட்டதைக் காட்டுகிறது. இலங்கையின் பெரும்பான்மை மக்கள் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். மொத்தச் சனத்தொகையில் 77.4% மக்கள் கிராமப்புறங்களிலும், 18.2% மக்கள் நகர்ப்புறங்களிலும், 4.4% மக்கள் தோட்டப்புறங்களிலும் வசிக்கின்றனர். இதில் நகர்ப்புற மக்களிலிருந்து 80% மக்களும், கிராமப்புற மக்களிலிருந்து 20% மக்களும் மட்டுமே சுத்திகரிக்கப்பட்ட தூயநீரைப் பெறும் வசதியுடன் உள்ளனர்.



Image Source : www.redcross.lk

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் நீரைச் சுத்திகரித்து வழங்கும் பாரிய சுத்திகரிப்பு நிலையங்கள் காணப்படுகின்றன. திருகோணமலையில் 4 உம், மட்டக்களப்பில் 6 உம், அம்பாறையில் 14 உம் என மொத்தமாக கிழக்கு மாகாணத்தில் 24 சிறியளவிலானா நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களும், திருகோணமலையில் 12 உம், மட்டக்களப்பில் 13 உம், அம்பாறையில் 14 உம் என மொத்தமாக 39 கிராமிய நீர் வழங்கல் திட்டங்களும் காணப்படுகின்றன. கிராமிய நீர் வழங்கல் திட்டங்களில் 8 திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் செயற்படாமல் உள்ளன. ஆனால், கிழக்கு மாகாணம் பல்வேறு நீர் வழங்கல் மூலங்களின் மூலம் 9,903 மில்லியன் கன மீட்டர் சுத்தமான நீரை வழங்கக்கூடிய திறனைக் கொண்டுள்ளது. மேலும், இம்மாகாணத்தில் 10,110 நீர் இணைப்புகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் காண்பிக்கின்றன.

யாழ்நகர நீர் வழங்கல் திட்டம், மூதூர்நகர நீர் வழங்கல் திட்டம், ஒட்டமாவடிச்சோலை நீர் வழங்கல் திட்டம் என்பன 2021 - 2025 இற்குள் பூர்த்திசெய்யப்படுவதற்காகச் செயற்படுத்தப்படும் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத் திட்டங்களாக உள்ளன. 2020 - 2030 இற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள பருத்தித்துறை நீர் வழங்கல் திட்டம், திருகோணமலை நீர் வழங்கல் திட்டம், தாழங்குடா நீர் வழங்கல் திட்டம் ஆகியன முடிவுறுத்தப்படும்போது, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 11 பாரிய நீர் வழங்கல் திட்டங்கள் செயற்படக்கூடியதாக இருக்கும். இதனுடன் இணைந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி பாரிய நீர்வழங்கல் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள கடல்நீர்ச் சுத்திகரிப்புத் திட்டங்கள், நீர் வழங்கல் முறையில் பாரிய முன்னேற்றம் ஒன்றை எடுத்துவரவுள்ளது. இத்துடன் முன்னுரிமைப்படுத்தப்பட்ட, திட்டமிடப்பட்ட நகரச்சாக்கடைத் திட்டங்களாக இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள 20 திட்டங்களில் 4 திட்டங்கள், வடக்கு - கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தியுள்ளன. 13,300 மீற்றர் கியூப் நீரை நாள் ஒன்றுக்குச் சுத்திகரிக்கக்கூடிய யாழ்ப்பாணநகர கழிவுநீர்த் திட்டமானது 80,000 மக்களின் நலனை மேம்படுத்தும் திட்டமாகக் காணப்படுகிறது. காத்தான்குடி நகரத்தில்

அமைக்கப்படும் சாக்கடைக் கழிவுநீர்த் திட்டம், நாளொன்றுக்கு 10,500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்டதாகும்; இது 53,232 குடும்பங்களுக்கு நன்மைதரக்கூடிய திட்டமாகும். இத்திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்படுவதற்கான கொள்கைத் தீர்மானத்தைப் பெற்றுள்ளது. இத்தோடு, திருகோணமலை நகரம் மற்றும் மட்டக்களப்பு நகரம் ஆகிய இடங்களில் இரண்டு திட்டங்களும் தயார்ப்படுத்தப்பட்டு, நிதி பெறுவதற்காகக் காத்திருக்கின்றது.

கழிவுநீர்ச் சாக்கடைத் திட்டங்களின்மூலம் மீட்டெடுக்கப்படும் நீரை, தொழிற்சாலைச் செயன்முறை, சுற்றாடல் மறுசீரமைப்பு, விவசாயம் மற்றும் நீர்ப்பாசன மறுபயன்பாடு போன்ற பொருளாதார நன்மை பயக்கும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம். குடிக்க முடியாத நோக்கத்துக்காக மீட்டெடுக்கப்படும் நீரைப் பயன்படுத்துவது, தற்போதுள்ள குடிநீர் விநியாகத்திலுள்ள அழுத்தத்தைக் குறைக்கின்றது. நீர்ப்பாதுகாப்பு நிலைத்தன்மை மற்றும் 'மீள்சுழற்சிக்கு உள்ளாகக்கூடிய கழிவு ஒரு வளம்' என்ற கருத்தியலை அடிப்படையாகக்கொண்ட சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் மறுபயன்பாடு ஆகியவை, கழிவுநீர் முகாமைத்துவத்தின் முக்கிய நோக்கங்களாக உள்ளடக்கப்படுகின்றன.

### நீர் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்படும் பிரச்சினைகள்

அ) தொழில்நுட்ப நிபுணத்துவம் இல்லாததால், உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழுள்ள பெரும்பாலான சாக்கடைகள், பரிகரிப்பு நிலையங்களின், இயக்கமும் பராமரிப்பும் மோசமடைந்துள்ளன. இதனைத் தரமுயர்த்துவதற்கு நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை பழுதுபார்த்தல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க முன்வர வேண்டும்.

ஆ) இலங்கையிலுள்ள மருத்துவமனைகளின் பெரும்பாலான கழிவுநீர் பரிகரிப்பு அமைப்புகள் (Devats), அதன் மோசமான பராமரிப்புக் காரணமாக செவ்வனே செயற்படாதுள்ளது. குறிப்பாக தனியார் வைத்தியசாலைகளிலுள்ள கழிவுநீர் பரிகரிப்பு அமைப்புகளையும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை கண்காணிக்க வேண்டும்.



Image Source : www.waterboard.lk

இ) ஒவ்வொரு பாடசாலையிலும் போதுமான மற்றும் தரப்படுத்தப்பட்ட கழிவறைகள், சுகாதாரவசதிகள் இருக்க வேண்டும். குறிப்பாக, மகளிர் பாடசாலைகள் மாதவிடாய் தேவைக்கான வசதிகளுடன், அவற்றை அகற்றும் உகந்த வசதிகளையும் கொண்டிருக்க வேண்டும். இதில் சுகாதார வைத்திய அதிகாரியின் கண்காணிப்பும் இருக்க வேண்டும்.

ஈ) பொதுமக்களின் சாக்கடைத் தாங்கிகள் காலி செய்யப்படும்போது, அவை பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படல் வேண்டும். இதில் உள்ளூராட்சி சபைகள் மிகுந்த அக்கறையுடன் செயற்படுதல் வேண்டும்.

உ) மருத்துவமனைகள், பாடசாலை மற்றும் தனியார் கல்விநிலையங்கள், சிறைச்சாலைகள், வீட்டுத்திட்ட தொடர்மாடிக் குடியிருப்புகள், தொழில் பேட்டைகள், சாக்கடை அமைப்புகள், கழிவுநீர் நிலையங்கள் என்பனவற்றின் முகாமைத்துவத்தைத் திட்டமிடும்போது, கழிவுநீர் பரிகரிப்புப் பற்றிய தெளிவான திட்டமொன்றைத் தயார்ப்படுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மலக்குழிகள் இல்லாமை, பாதுகாப்பாக மலக்கழிவை அகற்ற

வசதியான மூடிய குழிகள் இல்லாமை என்பன பிரதான பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. வடமாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் 13,405 குடும்பங்களும், மன்னாரில் 3,879 குடும்பங்களும், வவுனியாவில் 6,226 குடும்பங்களும், முல்லைத்தீவில் 8,033 குடும்பங்களும், கிளிநொச்சியில் 8,756 குடும்பங்களும் பாதுகாப்பான மலசலகூட வசதியற்ற குடும்பங்களாகத் தற்போதும் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் 22,102 குடும்பங்களும், அம்பாறையில் 16,897 குடும்பங்களும், திருகோணமலையில் 10,648 குடும்பங்களும் பாதுகாப்பான மலசலகூட வசதியற்ற குடும்பங்களாகக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 61,855 குடும்பங்களும், மன்னாரில் 10,574 குடும்பங்களும், வவுனியாவில் 18,482 குடும்பங்களும், முல்லைத்தீவில் 10,980 குடும்பங்களும் கிளிநொச்சியில் 12,511 குடும்பங்களும் கழிவுத்தொட்டிகள் மேம்படுத்தப்பட வேண்டிய குடும்பங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இதேபோல, மட்டக்களப்பு மாவட்டத்தில் 59,523 குடும்பங்களும், அம்பாறை மாவட்டத்தில் 42,757 குடும்பங்களும் இந்த மேம்பாட்டின் அவசியமுடைய குடும்பங்களாக இனங்காணப்பட்டுள்ளன. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புசபை, இதற்குத் தேவையான நிதி மதிப்பீட்டை மேற்கொண்டு, 2021 - 2030 இற்கான அவர்களின் பாரிய சுகாதாரத் திட்டத்தினுள் அதனை உள்ளடக்கியிருந்தாலும், இதுவரை இதற்குரிய நிதியீட்டம் பெறப்படவில்லை.

நீர் வழங்கல் தொடர்பில் அதிக பிரச்சினை காணப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகளும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் இணைந்து 29 சிறியளவிலான நீர் வழங்கல் திட்டங்களைச் செயற்படுத்தி, நாளொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் மக்களுக்கு குடிநீர் வழங்கலை மேற்கொண்டு வருகின்றன. இது பெரும்பாலும் வீதியோரப் பொதுக்குழாய்கள் மூலமாகவே வழங்கப்படுகின்றது. இங்கு 7,000 வரையிலான வீட்டு நீரிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நெடுந்தீவிலும், நயினாதீவிலும் கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் 650 நீரிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

குழாய்வழி நீரிணைப்பை 4 சதவீதம் மட்டுமே பெற்றுக்கொண்டு, நீர் நெருக்கடியுடன் வாழும் யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு, நாள் ஒன்றுக்கு 50,000 கன மீற்றர் நீர் தேவைப்படுகிறது. 2028 இன் சனத்தொகைத் தேவைப்பாட்டின்படி, இது 88,500 கன மீற்றராக உயர்ந்துள்ளது. இந்நிலையில், தாழையடியில் அமைக்கப்பட்டுள்ள கடல்நீர்ச் சுத்திகரிப்புத் திட்டத்தினூடாக, நாள் ஒன்றுக்கு 24,000 கன மீற்றர் நீரை நன்னீராக்கி வழங்கும் திட்டமும், மன்னார் மாவட்டத்திலிருந்து பாலியாறு கருத்திட்டத்தின்மூலம், அருவியாற்றிலிருந்து நீர் சுத்திகரிக்கப்பட்டு, குழாய்வழி மன்னாருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வழங்கும் கருத்திட்டமும் முன்மொழியப்பட்டுள்ளன.

நாள் ஒன்றுக்கு 50,000 மீற்றர் கியூப் கொள்ளளவு கொண்ட இத்திட்டத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளின் குடிநீர்த் தேவைக்காக பாரிய குடிநீர்த் திட்டமொன்றும் முன்மொழியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு 23,257 மீற்றர் கியூப் நீர் சுத்திகரித்து வழங்கப்படவுள்ளது. இதனூடாக 35,000 குடும்பங்களுக்கு பாதுகாப்பான நீர்வசதி உறுதி செய்யப்படவுள்ளது.

இந்தவகையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் குடிநீர்ச் நலச்சேவைகளை ஆராயும்போது, தேசிய அளவில் 55 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான குடிநீரைப் பெறுகின்ற நிலையில், இம்மாகாணங்களில் 20 முதல் 25 சதவீதத்திற்கும் குறைவான மக்களே பாதுகாப்பான குடிநீரைப் பெறுகின்றனர். இது இவ்விரு மாகாணங்களினதும் குடிநீர் வசதிப்படுத்தலில் இன்னமும் பாரிய முதலீடுகள் செய்யப்பட வேண்டுமென்பதனையே காட்டுகிறது. உள்ளக வளங்களாக பல குடிநீர் மூலங்கள் காணப்படும்போதும், அவை அபிவிருத்தி செய்யப்படாதுள்ளன. இன்னமும் மக்கள் திறந்த கிணறுகளையே, ‘நல்ல தண்ணிக் கிணறுகள்’ என்று அழைத்து வருகின்றனர். அந்த நீரே ‘நல்ல தண்ணி’யாக மக்களால் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது.

# நிகழ்வுகள்

18.04.2025

## ‘நீதிக்கான நீண்ட காத்திருப்பு’ தந்தை செல்வா கலையரங்கில் திரையிடல்

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட ‘நீதிக்கான நீண்ட காத்திருப்பு’ என்ற தலைப்பிலான ஆவணப்படமானது வல்லமை இயக்கத்தின் ஒழுங்கமைப்பில் 18.04.2025 அன்று, யாழ்ப்பாணம், தந்தை செல்வா கலையரங்கில் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் வல்லமை இயக்கத்தின் பயணிகள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

ஆவணப்படத்தை பார்வையிட்ட பார்வையாளரான க.சத்தியசீலன் என்பவர் ”காணாமலாக்கப்பட்டவர்களது நீண்டகாலப் பிரச்சினையை சிந்திக்க இயலாதவாறு நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையில், இப்போராட்டத்தை இத்திரையிடலானது மீள நினைவுபடுத்தியுள்ளது. வந்திருக்கக்கூடிய புதிய அரசாங்கம் மக்களுக்குச் சார்பான நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்” எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இவ் ஆவணப்படம் இலங்கையில் மூன்று தசாப்த யுத்தத்தின் போதும், அதன் பின்னும் வலிந்து காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் கதைகளை ஆராய்வதோடு, அவர்களது உறவுகளது வலிமிகுந்த போராட்டங்களும் கண்ணீரும் கோபமும் ஏக்கமும் இதன் மூலம் உலகிற்கு எடுத்துரைக்கப்படுகின்றன. நடந்த அநீதிகளுக்கான பொறுப்புக்கூறலை இது வலியுறுத்துகின்றது, பொறுப்புக்கூற மறுக்கும் அதிகாரசக்திகளின் இயல்பாகிவிட்ட அலட்சியத்தை கேள்விக்குட்படுத்துகின்றமையும் குறிப்பிடத்தக்கது.






19.04.2025

## நூல் வெளியீட்டு விழா ‘காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்’

எழுநாவின் பதிப்பில் மரியநாயகம் நியூட்டனால் எழுதப்பட்ட’காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்’ எனும் தலைப்பிலான நூலானது 19.04.2025 அன்று, சனிக்கிழமை யாழ்ப்பாணத்தின் வாலிப கிறிஸ்தவ சங்கத்தில் (YMCA) வெளியிடப்பட்டது. கிராமிய உழைப்பாளர் சங்கம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இந்நூலானது இலங்கையின் வடக்குக் கடற்பகுதி மீனவ சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பரிமாணம் பற்றி ஆராய்கின்றது. இந்து சமுத்திரப் பிராந்திய கடல் அரசியலை விமர்சனப் பார்வையுடன் ஆராய்கின்ற இந்நூல், இலங்கையின் கடல் வளம் எவ்வாறு சர்வதேச சக்திகளால் கூறுபோடப்பட்டு சுரண்டப்படுகின்றது என்பதையும் அதன் பின்னணியிலுள்ள உள்ளூர் சக்திகளை ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது. மேலும், இலங்கைத் தமிழ் கடல்சார் மக்களின் கடல் தொடர்பான இறைமை, அதில் அவர்கள் சுதந்திரமாக மீன்பிடித்து தமது வாழ்வாதாரத்தை தேடும் உரித்து என்பவை தொடர்பிலும் இது பேசுகின்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன் குமார, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் நா.இன்பநாயகம் ஆகியோரும் யாழ்.மாவட்ட கடற்றொழில் இணையத்தின் ஊடக பேச்சாளர் அ.அன்னராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணிச் செயலாளர் தீபன் திலீசன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டன.



# நிகழ்வுகள்

25.04.2025

## தெல்லிப்பளையிலுள்ள OfERR Ceylon நிறுவனத்தில் 'நீர்த்த கடல்' திரையிடல்

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட 'நீர்த்த கடல்' என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, தெல்லிப்பளையிலுள்ள 'OfERR Ceylon' நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் 25.04.2025 அன்று, முற்பகல் 10.00 மணியளவில் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில் தெல்லிப்பளையிலுள்ள OfERR Ceylon நிறுவனத்தின் ஊழியர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்த சிவராசா மரியறோசரி, "கடல் வளங்கள் தற்போது பல்வேறு செயற்பாடுகளால் அழிக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வருகின்றன. இதனால் சிறுதொழில் மீன்பிடித்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. கடற்றொழில் அமைச்சர் இதனைக் கண்டுகொள்ள வேண்டும். முன்னைய காலங்களில் கடலில் அதிக வளங்கள் இருந்தன. தற்போது அவை அருகிக்கொண்டு செல்கின்றன. அவற்றை முறையாகப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டில் நாம் இன்று இருக்கின்றோம் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

வடக்கு – கிழக்கு தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணை மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலிற்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையை எவ்வாறு பாதிக்கின்றது? அது கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றமை குறிப்பிடத்தக்கது.



27.04.2025

## 'இரசவர்க்கம்' நூல் அறிமுக நிகழ்வு திருகோணமலை

எழுநா மற்றும் திருகோணமலை தளம் அமைப்பின் ஏற்பாட்டில் முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களின் 'யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம்' என்ற நூலின் அறிமுக நிகழ்வானது கடந்த 27.04.2025 அன்று, சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் தளம் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில், நூல் அறிமுக உரையினை பீடாதிபதி, சித்த மருத்துவ பீடம், திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவர், வல்லிபுரம் அநவரதன் நிகழ்த்தியிருந்தார். நூலின் மதிப்பீட்டுரையினை விசேட வைத்திய நிபுணர் (சித்த மருத்துவம்), தள ஆயுர்வேத வைத்தியசாலை மருத்துவர் சி. துஷிதா ஆற்றியிருந்தார். நிகழ்வில் உரையாற்றிய மருத்துவர் வல்லிபுரம் அநவரதன்,"முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களின் ஆழ்ந்த ஆய்வினால் உருவாகிய 'இரசவர்க்கம்' என்ற நூல் சாதாரணமான நூல் அல்ல; அது நம் மரபு சித்த மருத்துவ அறிவின் ஓர் அருமையான பொக்கிஷம் ஆகும். இன்றைய வேகமான உலகில், பலர் பாரம்பரியத்தை மறந்து, சுதந்திரமான அறிவியலை மட்டுமே போற்றிக்கொள்கிறார்கள். ஆனால் உண்மை அறிவு என்பது புதிய கண்டுபிடிப்புகளும், பழைய ஞானங்களும் ஒன்றிணையும் இடத்தில்தான் பிறக்கிறது. அத்தகைய ஒரு சிறந்த முயற்சியாக இந்நூலை நாம் பார்க்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். மேலும், அவர் 'எழுநா' குறித்துக் கூறுகையில், "எழுநா குழுமத்தினர் பழங்கால அறிவை நவீன உலகிற்கு உரிய வடிவத்தில் கொண்டு சேர்க்கும் ஓர் அரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் பதிப்புகள் எப்போதும் தரமானவை, ஆழமானவை மற்றும் சமூக நலனைக் குறிவைக்கும் தன்மையுடையவை என தனது உரையை ஆற்றியிருந்தார்.

இந்நிகழ்வில் அறிவார்ந்த நபர்கள், கல்வி ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். 'யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம்' நூலானது எளிமையான வடிவில் பாரம்பரிய மூலிகைகள் தொடர்பில் ஏட்டுச்சுவடியில் இருந்த விடயங்களைக் கொண்டு எழுதப்பட்டதாகும். இந்நூல், உடலுக்கு ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கும் மருந்துப் பொருட்களின் குணங்களை எடுத்துரைக்கும் வெண்பாக்களாலானது.





எழுநா
வெளியீடு
யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன்
இரசவர்க்கம்
முனைவர் பால. சிவகடாட்சம்
காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்
மரியநாயகம் நியூட்டன்
யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு
1621 - 1948
இ. மயூரநாதன்
மலையகம்:
சமூக - பொருளாதார - அரசியல் பரிமாணங்கள்
பேராசிரியர் எம். சின்னத்தம்பி
இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில்
தமிழர்
கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம்
இலங்கையின் வேளாண்முறைமையில் நவீன நுட்பங்கள்
கந்தையா பகீரதன்
சமஷ்டி அரசியல் முறைமைகள்: ஓர் அறிமுகம்
தொகுப்பும் தமிழாக்கமும் :
கந்தையா சண்முகலிங்கம்
முன்பதிவுகளுக்கு
+94 777 97 5029

SpotOn Money



SEND MONEY to
SRI LANKA

FIRST TRANSFER FEE FREE*

Immediate Payment to Any Account

*Partnership* with
CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount*
on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



Nimal Vinayagamoothy, CPA, CGA
Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

maanudam foundation
மானுடம் நிறுவனம்

# நூல்சார் செயற்பாடுகள்

**குறைந்த விலைப் பதிப்பு நூல்களை வெளியிட நிதி உதவி**

புழுதியும் பின்னரும் : கவிதைகள்
- நிலாந்தன்

நினைவுகளே எங்கள் கேடயம் :
நான்காவது அனைத்துலகத்
தமிழாராய்ச்சி மகா நாட்டுப் பதிவுகள்
- என். செல்வராஜா

பாலையும் சோலையும் : தன் வரலாறு
- சொக்கன்

ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும் :
ஆய்வகம் 2022 –
ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு,
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்
















**பாடசாலை நூலகங்களுக்கு விநியோகிப்பதன் மூலம் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் புத்தகங்களைப் பரவலாக்குதல்**

விம்பம் : ஓவியர் ஆசை இராசையா
காலவரை கார்ட்டூன் : ஓவியர் செல்வன்

***வாசிப்போம் வளமாவோம்***

# யாழ் மண்ணில்




**வீடு, காணி,**
**வியாபார ஸ்தாபனங்கள்**
**வாங்குவதற்கு,**
**விற்பதற்கு அல்லது**
**வாடகைக்கு**
**நம்பிக்கையுடன் நாடுங்கள்**

**RE/MAX ELITE**

**021 224 2855 | 0777 44 1113**

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
**(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)**

**BUY-SELL-RENT HOME AND LANDS**

**WWW.REMAXELITE.LK**



We work with
35 financial
institutions
Business & Personal Insurance
Free Financial Education for everyone
We work with 35 financial institutions
Long Term Care | Elder's Insurance
Children's Insurance
Best Services
1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments
416-731-2829




SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com



Helping you harness the power around you
NEW DAWN
ENERGY SOLUTIONS

SOLAR POWER சூரிய சக்தி
SAFE CLEAN FREE பாதுகாப்பானது இலவசமானது சுத்தமானது
AUTOMATIC OPERATION | NO REFUELLING | POWER DIRECTLY TO YOUR HOME

**GRID-TIED SOLAR**
With this solar system you can earn up to $3850 annually for 20 years.

**NANO GRID SOLAR**
With this solar system you can cut your electricity bill to zero and you are never without electricity.

**ENERGY CONSERVATION**
With this solutions you can reduce your energy bill.

**OFF-GRID SOLAR**
With this solar system you can have electricity wherever you want.

**SOLAR POOL HEATER**
With this solar system you can cut your pool heating bill to zero.

HomeStars
Read Our Reviews
www.homestars.com

A+ Rating BBB ACCREDITED BUSINESS

500 2015 TOP SOLAR CONTRACTORS

info@NewDawn-ES.Com | www.NewDawn-ES.Com | 416-855-9377

Netwyn.Place

# Unleash Your Potential

www.netwyn.place

10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4

**+1 416-906-1414**




**BOOK YOUR TOUR TODAY**





